மேடைத் தமிழ்

ஆக்கியோர் :

குலோத்தாரக, டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார்

எப். ஆர். எஸ். ஏ. (லண்டன்)

அகில இந்திய விசுவகர்ம கான்பிடரேஷன் தலைவர்,

தென் இந்திய விசுவகர்ம மத்திய சபை சீவிய ஆலோசகர்,

'விஸ்வகலாநிதி', 'இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தி',

'குலநலச்சுவடி' ஆகியவற்றின் ஆசிரியர்.

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை - சென்னை

1949

விலை ரூபா பத்து



நூலாசிரியர்

பதிப்புரை

மேடைத் தமிழ் எனும் இந்நூலின் முதற்பகுதியும், சேர்க்கைக் கொத்துக்களும் 1944-ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே எம்மால் எழுதப் பெற்றன. கனம் (குமார)ராஜா சர். எம். ஏ. முத்தையசெட்டியாரவர்கள் பணித்தவாறு மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாருக்கு அவற்றைக் காட்டினேன். அவர் தனித்திருந்து வால்மீகி இராமாயணத்தில் தோய்ந்திருந்த அமயம் அது. அவ்வரிய நேரத்தில் சுமார் ஐந்து மணியளவு இந்நூலுக்கென அக்கண்ணியர் செலவிட்டனர். இந்நூலில் எவ்வளவு ஆழ்ந்தனரென்பதை ஆங்காங்கு அவர் வாய்மொழிகொண்டே பற்பல பகுதிகளில் குறிப்பிட்டுள்ளேன். ஆங்கில மொழியில் சற்றேறக் குறைய 25 ஆயிரம் வார்த்தைகளை அவர் உபயோகிக்க வல்லாரென்பது அன்று அவரது வாயினின்றும் பிறந்தது. இவ்வுண்மையை உலகம் இன்றுதான் அறிவதாயிற்று. *இறுதியில், “ இது தமிழ் மேடைப் பேச்சை முற்றும் விளக்கும் ஒருநூல் ; மெச்சுதற்குரிய உபயோகமான புத்தகம் ” என ஆசி புகன்றார். இந்நாள் வதியும் மேடைத் தமிழ் நாவலர்களில் தலைசிறந்த உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களே இந்நூலுக்குத் தமிழ்த்தென்றல் மணக்கும் அணிந்துரை வழங்கத் தக்காரெனக் கூறி, அப்பெரியாரைப் பார்க்க எம்மை ஏவினர்.

இதனிடையே, இந்நூலின்கண் சில முக்கிய பகுதிகளில் எடுத்துக்காட்டாகக் குறித்துள்ள உயர்திரு. எம். கே. தியாகராஜ பாகவதராகிய என் கெழுதகை நண்பருக்கு நேரிட்ட துன்பம் நீங்கி, அவ்வழி நந்தமிழ்நாடு மீண்டும் களிப்பெய்தும் காலத்தை எதிர்நோக்கி இரண்டரை ஆண்டுகள் கழிந்தன. இதுவும், மகாகனம் சாஸ்திரியாரின் ஈடுபடுத்தொணாத மறைவும் எம்மைத் துயரில் ஆழ்த்தி வாளாவிருக்கச் செய்தன வென்பது மிகையன்று.

---

* “ This is a complete book on Elocution in Tamil. An admirable and useful work ” (Rt. Hon'ble, V. S. Srinivasa Sastriar, *November 1944.*)

இரண்டாம் பகுதியைப் பின்னரே எழுதினேன். இவற்றை ஒன்று சேர்த்து நந்தமிழ்ச் செல்வமாகிய உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கட்குச் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் வாசித்து வாசித்துக் காட்டினேன். மேடைத்தமிழ்க் களஞ்சியமும், குகனடி மறவாக் குணப் பெருந்தகையருமான அத்தமிழ்ப் பெரியார் கேட்டின்புற்று, மகாகனம் சாஸ்திரியாரின் எண்ணம்போல் இந்நூலுக்கு அணிந்துரை சூட்டி, விரைவில் அச்சியற்றப் பணித்தனர். உலகத்தொண்டே தமது தவமெனக்கொண்ட அப்பெரியாருக்கும், இப்புத்தகத்தை எழுத ஊக்கிய பல நண்பர்கட்கும், சிறப்பாக உயர்திரு. சண்முகானந்த அடிகட்கும், குறிப்பாகப் பிழைபரிசோதித்து உதவிய உயர்திரு. வித்வான் அன்பு கணபதியார் அவர்கட்கும், தமிழ்ச்சுவைமலிந்த சாது அச்சகத்துக்கும் எமது நன்றி உரித்தாகுக.

சென்னை
1 - 2 - '49

தி. மு. தெய்வசிகாமணி,
ஆக்கியோன்.

உள்ளுறை

முதற் பகுதி

இரண்டாம் பகுதி

சேர்க்கைகள்

சேர்க்கை 4

தமிழ்நாட்டு நாவலரின் தனித்தமிழ் விரிவுரைகள்

சேர்க்கை 5

பட அட்டவணை

அணிந்துரை

எழுவாய்

தோழர்களே !

உங்கள் முன்னிலையில் யான் நிற்கிறேன். ஏன் நிற்கிறேன்? தெரியுமா? 'மேடைத்தமிழ்' என்னும் நூலுக்கு 'அணிந்துரை' கூறப்போகிறேன். இக்கூற்று உங்கட்கு வியப்பூட்டலாம். "அணிந்துரைக்கா மேடை! 'தோழர்களே' என்ற விளிப்பு! நன்று! நன்று!" என்று உங்களிற் சிலர் நகைக்கலாம்; சிலர் எள்ளலாம்.

மேடைத்தமிழ்

இற்றை ஞான்று 'மேடைத்தமிழ்' என்றொரு நூல் உருக்கொண்டுள்ளது. இம்முடிபிலேந்த ஒரு நூலை இதுகாறும் நீங்கள் கண்டதுண்டா? கேட்டதுண்டா? இது புது முறையில் சமைந்த ஒரு நூல்; தனி நூல்; கன்னி நூல். இந்நூலுக்கு அணிந்துரை பகரும் பணி எனக்கு நல்கப்பட்டது. அப்பணி உங்கள் முன்னே என்னை நிறுத்தியிருக்கிறது.

பழமையும் புதுமையும்

எனது பணிமுறை உங்கட்குப் புதுமையதாகத் தோன்றலாம். ஒவ்வொரு பழமையும் ஒவ்வொருபோது ஒவ்வொரு புதுமையினின்றும் தோன்றியதே. புதுமை நாளடைவில் பழமையாதல் இயற்கை. யான் கொள்ளும் இம்முறையும் ஒருகால் பழமையதாகலாம். உலகில் உலவும் மரபுகள் பலவும் புதுமையில் தோன்றித் தோன்றிப் பழமை பெற்றனவே.

'மேடைத் தமிழ்' மேடைத்தமிழ் அணியைப்பெறவே விழையும் என்று யான் எண்ணுகிறேன். புதுமை புதுமையை வேட்டல் இயல்பு. ஆதலின், யான் தமிழ்மேடையில் நின்று உங்களைத் 'தோழர்களே' என்று விளிக்கலானேன்.

கன்னி நூல்

'மேடைத் தமிழ்' என்பது மேடைத்தமிழ்ப் பேச்சை உணர்த்துவது. தலைப்பு, பொற்புடையது; பொருளுடையது; பொருந்தியது; சாலப் பொருந்தியது. சாலப் பொருந்திய தலைப்பைத் தாங்கி, 'மேடைத் தமிழ்' என்றொரு நூல் இதுகாறும் தமிழ்நாட்டில் வெளிவந்ததில்லை.

இதுவே தமிழ்நாட்டிற்றோன்றிய முதல்நூல் ; கன்னிநூல். இக்கன்னி நூலைத் தந்த தந்தையார் தெய்வசிகாமணி ஆச்சாரியார்க்குத் தமிழ் நன்றி கூறுவதாக.

மேடைப்பேச்சு

பேச்சுக்கள் பலதிறத்தன. அவற்றுள் ஒன்று மேடைப்பேச்சு. அப்பேச்சு, செவ்விய முறையில் நிகழ்வதாயின், அது சிறந்ததொன்றாகும். மேடைப்பேச்சின் மாண்பை என்னென்று சொல்வேன் ! அது போராற்றல் வாய்ந்தது ; முத்தொழில் புரியும் வல்லமையும் வாய்ந்தது.

பேச்சு

பேச்சைப் பற்றிச் சிறிது சிந்திக்கலாம். பேச்சின் பிறப்பிடம் யாது ? பேச்சின் பிறப்பிடம் எண்ணம் என்று எவரும் சொல்வர் ; எண்ணம் பேச்சாய்ப் பேச்சு செயலாகிறது. ‘ மன மொழி மெய் ’ என்ற ஆட்சியை ஓர்க. உண்மை - வாய்மை - மெய்மை - என்ற வழக்கையும் உன்னுக. மனம் அல்லது உள்ளம் எண்ணுவதை (உள்மை) உண்மை என்றும், வாய் வழங்குவதை வாய்மை என்றும், மெய் நிகழ்த்துவதை மெய்மை என்றும் தமிழ் கண்டது. உண்மை எண்ணமாய், வாய்மை மொழியாய் அல்லது பேச்சாய், மெய்மை செயலாய் மருவுதல் வேண்டுமென்பது தமிழ் வழக்கின் உள்ளக்கிடக்கை.

பழந்தமிழர் வேட்கை

முக்கரணமும் தூய்மையாயிருத்தல் வேண்டுமென்பது பழந்தமிழர் வேட்கை. அவர்க்கு உலகம் கடமைப்படுவதாக. முக்கரணத்துள் மனம் எண்ணுவது நல்லதாயின், பேச்சும் செயலும் நல்லனவாகும். மனம் எண்ணுவது தீயதாயின், பேச்சும் செயலும் தீயனவாகும். ஆகவே, மனத்தை நல்லதாக்கும் பயிற்சி தேவையென்க. இதுபற்றிய விரிவுரை ஈண்டைக்கு வேண்டுவதில்லை.

மனக் கூறுகள்

மனம் இருவகை. அவை புறம் அகம் என்பன. புறத்தை மேல் என்று சொல்வதும், அகத்தை நடு - அடி என்று இரு கூறுபடுத்துவதும் ஒருவித மரபு. மனத்தைப் புறம் - அகம் என்றோ, மேல் - நடு - அடி என்றோ கொள்ளலாம். மனத்தைப் புறத்தளவில் செலுத்தும் பயிற்சியுடையாரும் இருக்கின்றனர் ; அதை நடுவரையும் அடிவரையும் செலுத்தும் பயிற்சியுடையாரும் இருக்கின்றனர். மனத்தை அடிவரை செலுத்தும் வல்லமையுடையார் உள்ளத்தில் உண்மை அரும்பும்.

அவர்பால் வாய்மை மலர்ந்து மெய்மை கனியும். ஆனல் உலகில் புறமன மென்னும் மேல் மனத்தளவில் உழல்வோர் தொகையே அதிகம். இவரது நெஞ்சம் என்னென்னவோ எண்ணும். அவற்றை அவ்வப் படியே வெளியிடுவது வாய்மை அதாவது பேச்சு ஆகாது. வாய்மை யற்ற ஒன்றினின்றும் மெய்மைச் செயல் எங்ஙனம் நிகழும்?

மேடைக்குரிய பேச்சு

நாவடக்கம் என்றொரு நன் மொழி வழங்கப்படுகிறது. இது பெரிதும் புறமனத்தளவில் உழல்வோர் பொருட்டு எழுந்ததுபோலும். புறமனம் உந்தும் வழியெல்லாம் உளறுவது வாய்மைப் பேச்சாகாது. அதனல் கேடே விளையும். தீய எண்ணங்களை அடக்கி, நல்ல எண்ணங் களை மட்டும் வெளியிடுவது வாயின் இயல்பாயிருத்தல் வேண்டும். இதற்கு அறிவு விளக்கந் தேவை. அறிவு விளக்கத்துக்கென்று ஏற் பட்டது கல்வி. கல்வியும் அறிவும் நல்லொழுக்கத்தையும், நன்னடக் கையையும், நற்செயலையும் ஓம்பும். 'கல்வி அறிவு ஒழுக்கம்' என்ற அடுக்கின் நுட்பத்தை ஆய்க. நற்செயலை ஓம்பத் தக்க மொழியே - பேச்சே - வாயினின்றும் பிறத்தல்வேண்டும். இதுவே வாய்மைப் பேச்சு என்பது. இப்பேச்சே மேடைக்கு உரியது. மற்றவை பேச்சு ஆகா; மேடைக்கும் உரியன ஆகா. வெறிப்பேச்சு - வெறும் பேச்சு - கரும்பேச்சு-செயலுக்கு ஒவ்வாத சிறுமைப்பேச்சு முதலியன மேடை ஏறத் தக்கன அல்ல.

பேச்சின் நோக்கம்

பேச்சு இயற்கையில் அமைந்தது எற்றுக்கு? வாழ்க்கையை அரிக்கவா? சமுகத்தை முறிக்கவா? நாட்டை எரிக்கவா? அன்று; அன்று. வாழ்க்கையையும் சமுகத்தையும் நாட்டையும் நல்வழியில் பண் படுத்தவே பேச்சு என்பது இயற்கையில் அமைந்தது. பேச்சு என்பது வெற்ருலியன்று; வெறுங் கூக்குரலன்று. அஃதொரு கலை. பேச்சைக் கலையாக்குவது அறிவுடைமை. அதை வெறுமையாக்குவது அறி வுடைமையாகாது. பேச்சுக்குள்ள பொறுப்புப் பெரிது; பெரிது; மிகப் பெரிது.

திருவள்ளுவரும் வாய்மையும்

எண்ணத்துக்கும் செயலுக்கும் இடையில் சிங்கநோக்காக நிற்பது பேச்சு. இப்பேச்சு எத்தகைய பொறுப்புடையதாயிருத்தல் வேண்டும்? இது பற்றியே தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'உண்மை' என்னுந்

தலைப்பையோ, 'மெய்மை' என்னுந் தலைப்பையோ அணியாது, 'வாய்மை' என்னுந் தலைப்பை அணிந்து, ஓர் அதிகாரம் அருளிப் போந்தனர். இது பேச்சின் பொறுப்பை உணர்த்துவதன்றோ? 'யாகாவா ராயினும் நாகாக்க.......' என்பது திருவள்ளுவர் வாய்மொழி.

நாதம்

பேச்சின் அடிப்படை எண்ணம். எண்ணத்தின் முதன்மை ஒலி. ஒலியின் வேர் நாதம். நாத ஒலி, மாயாநாத ஒலி என்றும் அருள்நாத ஒலி என்றும் இருவகைப்படும்.

நாதம் தத்துவங்கட்கெல்லாம் தாயகம். அதைக் கடந்து நிற்பது தற்பரம். நாதம் நுண்மையது. அஃது உடுக்கை போன்றதென்று ஆன்றோர் அதை உருவகித்தனர். உடுக்கைக்கு இரண்டு வட்டம் உண்டு. நாதத்துக்கும் இருகூறு உண்டு. ஒன்று மாயையை நோக்குவது; இன்னொன்று அருளிறையை நோக்குவது. அதினின்றும் எழுவது மாயாநாத ஒலி; இதினின்றும் எழுவது அருள்நாத ஒலி.

அருள்நாத ஒலியாலாவது அருள் எண்ணம். இவ்வெண்ணத் தாலாவது அருள்மொழி அல்லது அருட்பேச்சு. இம்மொழி தூயது; இறைமைத் தன்மையது; அழியாதது. இது மறைமொழி எனவும் படும். இதைப்பற்றிய மூச்சும் இங்கே வேண்டுவதில்லை. மாயாநாத ஒலியாலாகும் எண்ணத்தால் பரிணமிக்கும் மொழியே-பேச்சே-இங்குத் தேவை. இப்பேச்சை மேடைக்குரிய கலையாக்குவது அறிஞர் கடமை.

பேசா நிலை

மேடைப்பேச்சு ஒரு கலையாயின், அதற்கென ஒரு குறிக்கோள் இருத்தல்வேண்டும்; இருந்தே தீரல்வேண்டும். அஃது எதுவாயிருக்கலாம்? பேசா நிலையாயிருக்கலாம் என்று எனது அடைவு அறைகிறது. இதை இக்கால உலகம் ஏற்குமோ? ஏலாதோ? ஏற்கும் உலகம் மலரப் போவது ஒருதலை. 'சும்மா இரு சொல்லற என்றலுமே - அம்மா பொருளொன்றும் அறிந்திலனே' என்றும், 'பேசா அநுபூதி பிறந்ததுவே' என்றும் வரும் அருணகிரிநாதர் அருண்மொழிகளை நோக்குக. பேசா நிலை எப்படிக்கூடும்? இதற்குப் பல வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வணிந்துரைக்கேற்ப ஒன்றைக் குறிப்பது நலம்.

அஃறிணைப் பேச்சு

பேச்சு உயர்திணை உலகுக்கு மட்டும் உரியதா? அஃறிணை உலகுக்கும் உரியதா? இது பற்றி எழுந்த கருத்து வேற்றுமைகள் பலப்பல.

கல், மரம், புழு, புள், விலங்கு முதலியவற்றைக் கொண்ட அஃறிணை உலகுக்கும் பேச்சு உண்டு என்பதை நம் முன்னோர் கண்டனர். அவருள் சிறப்பாகக் குறிக்கத் தக்கவர் பதஞ்சலி முனிவர். அஃறிணை உலகின் பேச்சை எப்படி உணர்வது ?

ஓவியப் பேச்சு

அறிஞர் மேடையில் ஓவியமென நின்று பேசப்பேச, அப்பேச்சின் ஆவி, நாளடைவில் அடிமனம்வரை சென்று, மேலுஞ் சென்று சென்று திரும்பும் பயிற்சிபெறும். இப்பயிற்சி படிப்படியே காடுமுரடாயுள்ள கருவி கரணங்களைப் படியச்செய்யும். அப்படிவு, *பேசாமற் பேசும் கலையை அறிவுறுத்தும் மெய்ஞ்ஞானப் பள்ளியாகும். பேசாமற் பேசுவதே பேசாநிலை என்பது. அஃது, அறிவு - மனக்கூறுகளையும் பிறவற்றையுங் கடந்து கடந்து நாதத்தில் ஒன்றும் ஒரு நிலை. அந்நிலையில் கல், மரம், புழு, புள், விலங்கு முதலிய அஃறிணை உலகம் பேசுவது பொருளாகும். இப்பேச்சு நன்கு பொருளாயின், ஓவியப்பேச்சு இனிது புலனாகும். அப்பெருநிலை தக்க பேச்சைக் கேட்டுக் கேட்டுப் பழகியவர்க்கும் படிப்படியே கூடும். பேசாமற் பேசும் பேறு சிலர்க்கு இப் பிறவியில் கூடும் ; சிலர்க்குத் தொடரும் பிறவியில் கூடும். 'மேடைத் தமிழ்' என்னை எங்கெங்கேயோ ஈர்த்துச் செல்கிறது. தோழர்களே ! மன்னிக்க.

மேடை

இனி மேடைமீது சிறிது கருத்துச் செலுத்துவோம். மேடை என்பது கருத்தா ? பொருளா ? இவ்வினாவிற்கு முன்னைக் கருத்து மேடையே, பின்னைப் பொருள் மேடையாயிற்று என்று விடையிறுக்கலாம். முன்னையது நுண்மை ; பின்னையது பருமை.

மேடைக்குத் தாய் வீடு எது ? மன்று - மன்றம் - மரத்தடி. நமது நாட்டு மன்றிடைப் பிறந்த மேடை, பல வழியிற் பெருகிப் பெருகி உலகெங்கும் பரவியது. தொடக்கத்தில், வெண்திங்கள் நிலவு காலக்கால, உடுக்கள் ஒளிர்ந்து மின்ன மின்ன, நறுங்காற்று வீசவீச,

---

*கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிருந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச் [வெல்வாம்.
சோல்லாமற் சோன்னவரை நினையாமல் நினைந்துபவத் தொடக்கை

—திருவிளையாடற் புராணம்

மரச்சூழல் பசுமை பொழியப் பொழிய, மக்கள் கண்ணுங்கருத்துங் கவரக் கவரத் தரையே மேடையாய்த் திகழ்ந்தது. பின்னே அது மேடிட்டது. அம்மேடையில் இயலும் இசையும் நாடகமும் வளர்ந்தன. நாடகமேடையே விரைந்து விரைந்து வளர்ந்தது. மன்றில் எழுந்த மேடை, வெளியில் ஊர்ந்து, களனில் நகர்ந்து, திண்ணையில் தவழ்ந்து, கூடத்தில் நடந்து, இப்பொழுது மண்டபத்தில் இவர்ந்துள்ளது. அன்று இயற்கைத் தாய் ஈன்ற மேடை, இன்று செயறகைச் செவிலியினிடம் வளர்ந்து வருகிறது. இக்கால மேடை, ஒரு செம்மணிக்குன்று இளகி நீத்து உருகிப் பாய்ந்து படர்ந்து திணிந்து சிதள் சிதளாய் வெட்டுண்டா லென விளங்கும் ஓடுகள் வேய்ந்த முகட்டு நிழலில் நிலவி, நீலம் வைரம் கோமேதகம் முதலிய மணிகள் உறைந்து உறைந்து ஒழுக்கிட்டாலென இலங்கும் பலநிறப் பட்டைகளும் ஆங்காங்கே வட்டமிடும் பூக்களும் பிறங்குஞ் சுண்ணவண்ணச் சுவர்களை நோக்கி நோக்கி, மின்பிறையும் சூழலும் தொங்கலும் காலும் ஒளியில் மூழ்கி மூழ்கி, மின்விசிறி சுழன்று சுழன்று வீசி விடுங் காற்றில் திளைத்துத் திளைத்து, தீட்டித் தீட்டி, இழைத்து இழைத்து இணைத்த வெண்கல்லுங் கருங்கல்லும் உமிழும் பனிமையில் தோய்ந்து தோய்ந்து பொலிகிறது. இன்னும் மேடை மேலும் மேலும் வளர்ந்தோங்கும். அஃது இனிக் காற்றிலும் உலவும் பேறுபெறும்.

மேடை, கால்கொண்ட இடம் நமது நாடு ; வளர்ந்த இடம் மேல் நாடு. ஒழுங்குபட்ட நன்மேடையை முதலிற் கண்டது கிரீஸ். அங் கிருந்து நன்மேடை, ரோம், பிரான்ஸ், ஜெர்மெனி, இங்கிலாந்து, அமெரிக்கா' முதலிய இடங்களை நண்ணியது.

மேடைப் பேச்சைச் செம்மையில் வளர்த்துப் பல வழியிலும் பண்படுத்தியது இங்கிலாந்து. இங்கிலீஷ் பார்லிமெண்ட், மேடைக்கு ஓர் இலக்கியம். அஃது உலகுக்கு ஒரு கல்லூரியாய் நிற்கிறது. உலகிற் சிறந்து விளங்கும் மேடைகள் பல இங்கிலாந்தினின்றும் ஏற்றுமதி யாயினவே.

நாவன்மை

மேடைப் பேச்சுக்கு நாவன்மை வேண்டும் என்று சொல்லப்படு கிறது. நாவன்மையுடையவரே நாவலர் எனப்படுவர். நாவன்மை எது ? வெறுஞ் சொல்லடுக்குகளை விரைந்தும் இரைந்தும் கக்குவதா நாவன்மை ? அன்று. பின்னை நாவன்மை எது ? நாவில் தீயன உறாத வாறு காப்பது நாவன்மை ; நல்லன சுரக்குமாறு முயல்வது நாவன்மை ;

பொருள் பொதிந்த சொற்களை அளந்தளந்து பொழிவது நாவன்மை. நாவன்மைக்குக் கல்வி அறிவு ஒழுக்கம் பெருந்துணை புரியும்.

நாமகள்

திருமால் நெஞ்சத் தாமரையில் திருவையும், நான்முகன் நாவில் கலைமகளையும், சங்கரன் உடலின் ஒரு பாதியில் உமையையும் வைத்திருத்தல் நமது நாட்டு நூல்கள் பலவற்றிலும் பேசப்பட்டிருக்கிறது. உள்ளுறை என்ன? பல பகரலாம். ஈண்டைக்கேற்ப ஒன்றைப் பகர்கிறேன். மனம் மொழி மெய் அதாவது எண்ணம் சொல் செயல் ஆகிய மூன்றும் வன்மையுடையனவாய் - சக்தியுடையனவாய் - இருத்தல் வேண்டுமென்பது உள்ளுறை. சக்தியாவது அருள். 'அருளது சக்தியாகும்' என்றார் அருண்மொழிச் சிவனார். முத்திற அருள் முத்திறச் சக்தியாய்ப் பேசப்பட்டமை கருதத்தக்கது.

அருட் கூறுகள் பற்பல. அவற்றுள் உயர்ந்தது, பிறர் அறியாமையால் கேடு சூழுங்காலத்தும் அருளால் அதைப் பொறுப்பது. இதுவே வன்மை - வன்மையுள் வன்மை. 'இன்மையுள்....வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை' என்பது பொய்யாமொழி.

பிறர் எவ்வகைத் தீங்கிழைப்பினும் அதை நாவலர் என்பவர் பொறுத்தல்வேண்டும். இதுவே நாவன்மையாகும். ஆகவே, நாவில் கலைமகள் உறைதல் வேண்டுமென்று தெருட்டிக் கூறலாம். கலைமகள் உறையும் நாவே வன்மையுடையதாகும்.

கலைமகட்கு நாமகள் என்றொரு பெயர் வழங்கப்படுகிறது. நாவலர் நாவில் கலைமகள் வீற்றிருத்தலால், அவள் நாமகள் என்று போற்றப்படுகிறாள். நாவுக்குரியவள் நாமகளெனக.

கலையற்ற நா

கலை - கலைமகள் - அற்ற நாவை என்னென்று கூறுவது? அந்நா கொடியது; கொடியது. அது தேளாகும்; பாம்பாகும்; நாயாகும்; புலியாகும்; பேயாகும். அது நஞ்சை எரிக்கும் நஞ்சு; பீரங்கியைத் தகர்க்கும் பீரங்கி; அணுகுண்டை அடக்கும் அணுகுண்டு. கொடிய நாவால், வாழ்க்கை - சமுகம் - நாடு முதலிய எல்லாம் பாழ்படும். கொடிய நாவால் விளைந்த கேடுகளைச் சரித்திர உலகிற் காண்க. கேட்டை விளைக்கும் நா, எங்ஙனம் நன்மை பயக்கும் வன்மையுடையதாகும்? அது வெறுஞ் சொன்மை நா; புன்மை நா. நன்மை பயக்கும் வன்மையுடைய நாவே நாவாகும். தீய நாவினர் மேடையில் நின்று சொற்களைச் சரமாரியாகப் பொழியினும் அவர் நாவலராகார். உலகுக்கு நன்மை

பயக்கும் சொன்மாரியைப் பொழிவோரே நாவலராவர். இந் நாவலர் கூட்டம் பெருகுவதாக.

காங்கரஸ்

இந்நாளில் நமது நாட்டில் மேல்நாட்டு முறையில் ஆங்காங்கே மேடைகள் அமைந்து வருகின்றன. இதற்கு வழிகாட்டிய பெருமை காங்கரஸ் மகா சபைக்கு உண்டு. முன்னாளில் காங்கரஸ் மேடையில் நாவலர் கூட்டம் மலிந்து மிடைந்தது. அக்கூட்டத்தின் சொற்பொழிவுகள் சிந்துவாய், கங்கையாய், கோதாவரியாய், காவிரியாய் நாட்டைச் செழிக்கச் செய்தன. பின்னாளில் காங்கரஸ் மேடையில் நாவலர் தொகை அருகியது; மற்றவர் தொகை பெருகியது. விளைந்ததென்ன? நாட்டைப் பார்க்க. அந்தோ! எங்கணும் எங்கணும் வகுப்புப் பூசல்கள்! மதப் போர்கள்! இரத்த ஆறுகள்! பிணமலைகள்! கோரக் காட்சி! பொல்லாத கோரக் காட்சி! மேடை ஒன்றே. மாற்றம் எங்கே? நாவில் - நாவில் - மாற்றம் உற்றது. நிலைமை மாறியது.

விடுதலை

கோரக் காட்சியிடை விடுதலை பிரிட்டிஷாரால் வழங்கப்பட்டது. அதை முழு விடுதலையாக்க வேண்டுவது நாவலர் கடமை. முதலாவது கோரக் காட்சி தொலைதல் வேண்டும்; அமைதி நிலைபெறுதல் வேண்டும். இம்மாறுதலுக்கு நல்ல ஜனநாயக ஆட்சி தேவை. அவ்வாட்சியை அமைக்கும் பொறுப்பு வாக்காளரிடத்திலிருக்கிறது. வாக்காளர் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் முதலிய செல்வங்களைப் பெற்றவராதல் வேண்டும். வாக்காளரைத் தகுதியுடையவராக்குவன சில உள்ளன. அவற்றுள் சிறந்த ஒன்று மேடை - மேடைப் பேச்சு - நாவன்மை.

தெய்வசிகாமணி

மேடை சீர்பட்டால் எல்லாஞ் சீர்படும். மேடையைச் சீர் செய்யும் பலதிறத் தொண்டுகளை முறை முறையே கிளந்து கூறலாம். ஈண்டு விழுமிய ஒன்றைக் குறித்தல் சாலும். அது நல்லிலக்கியத் தொண்டு. அத்தொண்டில் நந்தமிழ் நாட்டில் ஒருவர் ஈடுபட்டனர். அவர் எவர்? அவர், விசுவகர்ம மணிவிளக்கு - கலைக்கூடம் - சிற்பச் செல்வம் - திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் என்பவர்.

திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் 1881-ம் ஆண்டில் மேடைத் தமிழ் செய்த தவப்பயனால் தோன்றியவர். அவர்தந் தந்தையார் தமிழ்க் கலைஞர் முக்கண்ணாச்சாரியார்; தாயார் பார்வதி அம்மையார். ஒரு

தமிழ்ச் சேயை ஈன்ற வயிற்றுக்கு எனது வாழ்த்தும் வணக்கமும் உரியனவாக.

அறிஞர் முக்கண்ணுச்சாரியார் சிறந்த தமிழ்ப் புலவர் ; நாவலர். காங்கரஸ் மேடையில் (1887) முதல் முதல் தமிழ் மழை பொழிந்தவர் அவரே. அந்நாவலர் வழித் தோன்றலாகிய தெய்வசிகாமணி ஆச்சாரியார் வழி, நாவலர் இலக்கியம் - மேடைத் தமிழ் - பிறந்ததில் வியப்பொன்றுமில்லை. 'நெல் கமுகாய் நீளுமோ ?' 'தந்தையறிவு மகனறிவு' 'தக்கார் தகவில ரென்பது தத்தம் - எச்சத்தால் காணப் பெறும்' 'தந்தைமகற் காற்றும் உதவி அவையத்து - முந்தி யிருப்பச் செயல்' என வரூஉம் பெரியோர் மொழிகள்-பொய்க்குமோ ?

திரு. தெய்வசிகாமணி ஆச்சாரியார் இளமையில் கற்பன கற்றார் ; கேட்பன கேட்டார். அவர்தங் கல்வி அறிவு ஒழுக்கத் திறங் கண்ட அரசாங்க ஊழியம் அவரை வலிந்து அணைந்தது.

அன்பர் ஆச்சாரியார் வாழ்க்கையை ஒரு செல்வக் களஞ்சியம் என்று சுருங்கச் சொல்லலாம். அவர்தம் வாழ்க்கையில் கல்விச் செல்வம், பொருட் செல்வம், மனைச் செல்வம், சேய்ச் செல்வம், வழி வழிச் செல்வம் முதலிய செல்வங்கள் பூத்துள்ளன. இச்செல்வங்கட் கெல்லாம் உயிர்ப்பளிக்கும் ஒரு பெருஞ் செல்வம் ஆச்சாரியாரிடம் பொருந்தியுள்ளது. அது தொண்டுச் செல்வம். அதுவே செல்வத்துட் செல்வம். அச்செல்வம், தெய்வசிகாமணி ஆச்சாரியாரைத் தமக்கென வாழாது, பிறர்க்கென வாழ்வோராக்கியது. விசுவகர்ம சமூகத்துக்கு ஆச்சாரியார் ஆற்றிய பணிகள் மலையென ஓங்கி நிற்கின்றன; கடலெனப் பரந்துகிடக்கின்றன. அவரது வாழ்க்கை பெரிதும் சமூகப் பணிக்குப் பயன்பட்டது. அதை நன்குணர்ந்த சமூகம் 'அவரைக் குலோத் தாரகர்' என்று போற்றித் தனது நன்றியைத் தெரிவித்தது. ஆச்சாரியாரின் சமூகப் பணிகளிடை, நாட்டுப்பணி, சமயப்பணி, கலைப்பணி, மொழிப்பணி முதலிய பணிகளும் விரவியே நிற்கின்றன.

மேடைத் தமிழ்க் கமலம்

தொண்டர் ஆச்சாரியாருடன் நெருங்கிப் பழகும் பேறு எனக்கு இளமையில் கிடைக்கவில்லை ; இந்நாளில் - முதுமையில் - கிடைத்தது. அவரிடம் உறவுகொள்ளக் கொள்ள - உரை ஆடஆட - அவர் ஓர் அறிவுத் தடமாய்ப் பொலிதல் நெஞ்சைக் கவரும். அறிவுத் தடத்தில் கலைக் கமலங்கள் முகிழ்த்தல் இயல்பன்றோ? தெய்வசிகாமணித் தடத்தில் பல கமலங்கள் முகிழ்த்துள்ளன. அவற்றுள் விழுமியது

தலையாயது ஒன்று. அது 'மேடைத் தமிழ்' என்னும் கமலம் - செங் கமலம்.

சிற்ப ஓவியர்

நண்பர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் சிற்ப ஓவியத்தில் கை போயவர். அவர்தம் மூளையில் கருக்கொண்டு உருவெடுத்த நிலையங் கள் பல. அவற்றுள் மணிகளென மிளிர்வன அண்ணுமலைப் பல்கலைக் கழகமும், அம்மலையின் அரண்மனையும், இம் மேடைத் தமிழுமாம். முன்னவை கல்லும் அறிவும் சேர்ந்தவை; பின்னது சொல்லும் அறிவும் ஒன்றியது. கல்லினுஞ் சொல்லே உறுதியுடையது; அழியாப் பேறுடையது.

தேன்


தோழர் ஆச்சாரியார் மேடைத் தமிழ் ஓர் அழகிய மலர். அது பலதிற இதழ்களால் ஆக்கப்பட்டது. ஒவ்வோர் இதழிலும் இன்பத் தேன் பிலிற்றுகிறது. அத்தேன் தமிழ் அன்னையின் கவலையைப் போக்கும்; சவலையை நீக்கும்; நாடி நரம்புகளை எஃகாக்கும்; அவளை மீண்டும் அரியாசனத்தில் அமர்த்தும்.

ஒழுங்கு

ஒருமலர், இதழ்களின் ஒழுங்கால் திரண்டு உருவாகிறது. ஒரு நூல் மலர்போன்றது. இந்நூலின் யாப்பை நோக்குழி, அஃது ஒழுங் கில் திரண்டு உருப்பெற்றிருத்தல் இனிது புலப்படும். இந்நூலாசிரியர் ஒரு சிற்ப ஓவியர். சிற்ப ஓவியம் ஒழுங்கில் மலர்வது. ஒழுங்கு ஓவி யத்தின் உயிர்நாடி. இந்நூல் ஒரு சிற்ப ஓவியரால் வடிக்கப்பெற்றது. இதன்கண் ஒழுங்கிருத்தல் இயற்கை. இந்நூலின் சொல்லில், சொற் ருெடரில், பொருளில், வைப்பில், நடையில், கருத்தில், இன்ன பிற வற்றில் ஒழுங்கிருத்தல் கண்கூடு.

தொட்டுவிடல்

இம்மேடைத் தமிழ் இரண்டு பகுதிகளாலும், ஐந்து சேர்க்கை களாலும் ஆக்கப்பட்டது. இரண்டு பகுதிகளில் முதலாவது பேச் சிலக்கியத்தையும் இரண்டாவது பேச்சுத் தத்துவத்தையும் தெளிவு செய்துள்ளன. பகுதிகளிலும் சேர்க்கைகளிலும் அவ்வவற்றின் இயல்களும், நுட்பங்களும், கூறுபாடுகளும், பண்புகளும், பிறவும் செம்மையில் அமைந்துள்ளன. நூலின் உள்ளுறையில் பலதிறச் செம்



அடையாறு செட்டிநாட்டு அரண்மனை

பொருள்கள் செறிந்து கிடக்கின்றன. அவற்றுள் மிகச் சிலவற்றை மட்டும் ஈண்டுத் தொட்டுவிடலாமென்று நினைக்கிறேன்.

இரு பெரும் நாவலர்

'மேடைத் தமிழ்' தனது உள்ளுறைக் கேற்பத் தோற்றுவாய் செய்திருக்கிறது. அதன்கண் இரு பெரும் நாவலர் காட்சி அளிக்கின்றனர். ஒருவர் மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார்; மற்றொருவர் ஞானியார் சுவாமிகள். அவர் ஆங்கிலத்தில் நாவலர்; இவர் தமிழில் நாவலர். இருவரும் தமிழ்நாட்டவர். இருவரையும் யான் நன்கு அறிவேன். இருவர் சொல்லமிழ்தை என் செவி பருகியுள்ளது. பல சாஸ்திரியார் பல ஞானியார் நாட்டில் தோன்றுதல் வேண்டுமென்பது மேடைத் தமிழாசிரியர் வேட்கை போலும். அவ்வேட்கை நிறைவேற ஆண்டவன் அருள் செய்வானாக.

நாவன்மை

நாவன்மையுடையார் நாவலர் எனப்படுவர். நாவன்மை எது? இவ் வினாவுக்கு விடையிறுப்பது இந்நூல். நாவன்மை விளக்கமே இந்நூலின் உள்ளுறை என்பது தேற்றம். நாவன்மை நூலில் யாண்டில்லை? யாண்டும் யாண்டும் நாவன்மையே. ஆசிரியர் இன்னுரைகள் சிலவற்றைக் காண்க.

'பேச்சுப் பெரு நாவன்மை வெறும் பழக்க மொன்றாலேயே ஒருவர் அடையக்கூடிய தன்றாம்'

* * * * *

'நாவன்மை மிகுதியும் பெற்றோரே நாவலரெனப்படுவர். வெறும் நூல் வன்மை பெற்றோர் நாவலராகார்'

* * * * *

'நன்னிலத்திட்ட வித்து ஓங்கித் தழைத்தல் போல், நூலறிவான் பண்பட்ட ஒருவர் மனத்தினின்றும் மூளைத்தெழும் சொற்களும், கருத்துக்களும், புனிதமும், வன்மையும் பெற்று நாவழி நல்லனவாகப் பொழிதலே நாவன்மையாகும்'

* * * * *

'கலையறிவு நிறைந்து, மனோசக்தி விசாலித்து, உள்ளக் கருத்துக்கள் பெருகி, அறிவனைத்தும் ஒருங்கு திரண்டு அலை மோதறும்போது நீர்த்தேக்கத்தின் வடிகால் வீழ்ச்சியைப் போல், ஒருவர் பேச்சு முயற்சியின்றிப் பெருந்தாரையாக வெளிப்படுவதே நாவன்மையாம்'

சுருக்கெழுத்து

நூலின் தோற்றுவாயில் காலத்துக்குரிய ஒரு குறிப்புக்குலவுகிறது. அது சுருக்கெழுத்தைப் பற்றியது. மேடைத்தமிழ்ப் பேச்சு, பெருகப் பெருகத் தமிழ்ச் சுருக்கெழுத்தர் தொகையும் பெருகுதல் வேண்டும். இல்லையேல், மேடைத் தமிழ்ப் பேச்சால் விளையத்தக்க பயன் விளையாது. மேடைத் தமிழ்ப் பேச்சுகள் சேமிக்கப் பெற்றிருந்தால், தமிழ் நாடு பல வழியிலுஞ் செழுமை பெற்றிருக்கும். எத்துணையோ பெரும் பெருந் தமிழ் முகில்கள் கனமழைகளைச் சொரிந்தன. அவை யாண்டுத் தேங்கியுள்ளன ? காற்றில் பறந்தன ; வானில் ஒன்றின. இன்னுமா தமிழ்ப் பேச்சுகள் காற்றிற் பறத்தல் வேண்டும் ? வானில் ஒன்றுதல் வேண்டும் ?

தமிழ்ச் சுருக்கெழுத்து, இன்று போலிஸார் உடைமையாயிருந்து வருகிறது. அஃது இன்னுந் தமிழ்ப் புலவோர் உடைமையாகவில்லை. தமிழ்ப் புலமை, தமிழ்ப்பள்ளிக்கு மட்டுமோ பயன்படல்வேண்டும்? சுருக்கெழுத்துக்கு ஏன் பயன்படலாகாது ? தமிழ்ப் பேச்சுக்கள் உள்ளவாறே பத்திரிகை உலகில் ஏறுகின்றனவா ? இல்லையே. தமிழ்ச் சுருக்கெழுத்துத் தெரியாத நிருபர் என்செய்வார் பாவம் ! அவர் தமது மொழியால் பத்திரிகையை அலங்கரிக்கிறார். இற்றைஞான்று 'மேடைத் தமிழ்' உருவெடுத்துவிட்டது. இனியாதல் புலவோர் கருத்துச் சுருக்கெழுத்துமீது நடப்பதாக ; தமிழ்ச் சுருக்கெழுத்துத் தொண்டு பெருகுவதாக. 'தமிழ்த் தென்றல்' என்னும் நூற்கண் தமிழ்ச் சுருக்கெழுத்தைப் பற்றிச் சிறிது செப்பியுள்ளேன்.

சுருக்கெழுத்துப் பயிற்சியை ஆசிரியர் நெஞ்சம் கட்டாயப் படுத்துகிறது - வலியுறுத்துகிறது. வலியுறுத்தல் அறத்தின் பாற்படுவதா என்று சிலர் மருளலாம். வலியுறுத்தல் இருவிதம். ஒன்று காதலினின்றும் திரள்வது ; மற்றொன்று மூர்க்கத்தினின்றும் தடிப்பது. முன்னையது அறத்தின் பாற்படுவது ; பின்னையது அறத்தின் பாற்படுவதன்று. மேடைத்தமிழ் வழிவழி ஓம்பப் பெறல் வேண்டும் என்னும் காதலே ஆசிரியர் நெஞ்சாய்ச் சுருக்கெழுத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

பேச்சாளர் தோற்றம்

மேடைப் பேச்சாளர் தோற்றம் இந்நூலாசிரியரால் விளக்கப்பட்டிருக்கிறது. சிலர் வடிவம் பருத்துக் கொழுத்திருக்கும் ; ஆனால் அவர் தம் பேச்சில் சுவை மலிவதில்லை. சிலர் வடிவம் பருத்துக் கொழுத்

திருப்பதில்லை. அவரது பேச்சில் சுவை ததும்பும். தோற்றம் பருமையிலோ சிறுமையிலோ அமைவதில்லை.

ஒழுக்கத்தால் அமையும் உடலே நல்ல தோற்றமுடையதாகும். ஒழுக்க உடலில் பொலிவு நிலவும். அவர்தம் மேனியில் ஒளிக் கதிர் விரியும். பொலிந்த ஒளிக்கதிர் படரும் உடலுடையார் தோற்றம் நல்ல அவைக்களத்துக்கு விருந்தாகும்.

உடை

ஆக்கியோர் உள்ளம் உடைமீதும் தவழ்கிறது. ஒருவனது இயல்பை அறிவிக்கும் கருவிகளுள் அவனது உடையும் ஒன்று. ஒருவனது உடைக் கோலத்தைக் கொண்டு, அவனது அக நிலையை அளக்கலாகும். 'நடைக்கேற்ற உடை' என்பது பழமொழி. 'நடை உடை பாவனை' என்பது வழக்காறு. தனது நடைக்கேற்ற உடையை ஒருவன் அணிய விரும்புவது இயல்பு. ஆனால் சிறந்த மேடைப் பேச்சாளன் எண்ணம் உடைமீது தனித்துச் செல்வது அரிது. ஏதோ ஒன்று அவனை அணையும். பேச்சுத் திறத்துக்கும் உடைக்கும் பெரிதும் தொடர்பில்லை என்று துணிந்து கூறலாம். உலகை மயக்கவேண்டுமென்று நினைந்து, வலிந்து வலிந்து தன்னை ஒப்பனைசெய்து, மேடை ஏறுவோன் பேச்சால் அவை நலமுறாது. அவன் 'என் பேச்சு எப்படி இருந்தது ?' என்று பிறரைக் கேட்பன். இவ்வாறு கேட்பவன் சிறந்த பேச்சாளனல்லன் என்று ஆக்கியோர் கருதுகிறார்.

ஊண்

நாவலனுக்கு மித ஊண் தேவை என்று ஆசிரியர் கூறுகிறார். இக்கூற்று ஏற்கத்தக்கது. ஊணுக்கேற்ற உள்ளமும் உடலும் அமையும். ஊண் மிதமாகவும் பொருந்தியதாகவும் இருத்தல் நல்லது. விலாப் புடைக்க அதையும் இதையும் தின்று கொழுத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டே மேடையில் குதித்துக் குதித்துக் கதறுவோன் பேச்சால் அவைக்களம் சாத்விகம் அடையாது.

நினைவுத் திறன்

நினைவுத்திறன், மூளைவளம், உடலூரம் முதலியன இந்நூலில் ஓதப்பட்டுள்ளன. நினைவுத்திறன் மேடை ஏறும் நாவலர்க்கு இன்றியமையாதது. அத்திறன் அற்றவர் மேடையை அணுகுதற்கும் அருகரல்லர். அவரை மேடைச்சுமை என்று கூறல் மிகையாகாது. நினைவுத் திறனுக்கு மூளைவளமும் உடலுரமும் அரண்செய்யும். 'ஒருவர் தமது

நினைவுத்திறனை விருத்தி செய்தற்கு அவர்தம் மனம், கண், செவி ஆகிய மூன்றும் ஒருமித்துப் பிறங்குதல் இன்றியமையாததாம்' என்று இந் நூலாசிரியர் இயம்புகிறார். இது கூர்ந்து கூர்ந்து உன்னற்பாலது. மூளைவளத்துக்கும் - உடலுரத்துக்கும் - தண்ணீரில் மூழ்கல், பூங்காவில் உலவல், கடற்காற்றைப் பருகல், இன்னிசையில் ஆழ்தல் முதலிய வழிகள் ஆசிரியரால் உணர்த்தப்படுகின்றன. இவை அநுபவத்தினின்றும் அரும்பிய மொழிகள்.

நினைவுத்திறனை வளர்த்தற்குச் சில கீரை வகைகள் நமது நாட்டு மருத்துவ நூற்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிறந்தது தூதுளங்கீரையாம். இக்கீரையை நாவலர் பெருமான் உண்டு கண்ணொளியும் நினைவுத்திறனும் செவ்விதிற் பெற்று வாழ்ந்தனர் என்பது ஒரு கர்ன பரம்பரைக் கதை.

பண்டைநாளில் அச்சகமில்லை. அதனால் நூல் நிலையங்கள் பெருகவில்லை. புலவோரே நூல் நிலையங்களாக - நடக்கும் நூல் நிலையங்களாக - விளங்கினர். நூல்களை மனப்பாடஞ் செய்து நிலையங்களாவது அவரது வழக்கம். அவர்தம் மனப்பயிற்சி நினைவுத்திறத்தை வளர்த்து வந்தது. மனப்பயிற்சிக்கும் நினைவுத்திறத்துக்கும் தொடர்பு உண்டு.

மனப்பயிற்சி என்று, ஒரு கட்டுரையை மனப்பாடஞ் செய்து, பொருளுணர்வேயின்றி, ஒப்புவிப்பது மேடைப் பேச்சாகாது. இது குறித்து அறிஞர் ஆச்சாரியார் எச்சரிக்கை 'வழங்கியுள்ளார். மேடையில் நிற்பவன் மனிதன்; புலனுடையவன். அவன் ஏன் புலனற்ற பொறியாதல் வேண்டும்?

மனத் தூய்மை

நினைவுத்திறனுக்கும் பேச்சு வளனுக்கும் மனத்தூய்மை தேவை. இதுகுறித்து இந்நூல் பொழிந்துள்ள மொழிகள் மனத்தைக் கவர்வனவாம். அம்மொழிகளில் அகத்திணைக் கூறுகள் மலிந்துள்ளன. அக்கூறுகளைத் தொடர்பு படுத்தி, அவை மனத்தூய்மையை எவ்வாறு வளர்க்கும் என்பதை நூல் நன்முறையில் விளக்கஞ் செய்திருக்கிறது. மனத் தூய்மையினின்றும் சுரக்கும் எண்ணப் பேச்சு விடுதலைப் பேற்றுக் குரிய வித்து என்று நூலாசிரியர் நெஞ்சம் நினைக்கிறது. 'பேச்சாளர் உள்ளமும் உரையும்' என்னுந் தலைப்பின்கீழ் தூய செம்பொருள்கள் துலங்குகின்றன; முடிவில் நல்லுரைகள் மின்னுகின்றன. அவை சிந்தனைச் செல்வங்கள்; நாவலரின் சேமநிதிகள்.

மலைப் பொழிவு

பேச்சை ஒழுங்கு செய்யும் முறைகள் ஆக்கியோரால் விளக்கப்பட்டுள்ளன. அவற்றை நேயர்கள் ஊன்றி ஊன்றி நோக்குவார்களாக. ஒரு விளக்கம் என் உள்ளத்தைக் குளிர்வித்தது. அது கிறிஸ்து பெருமான் நோன்பிருந்து மலைப்பொழிவை அருளியது. தோழர்களே! கிறிஸ்து பெருமான் மலைப்பொழிவுமீது ஆக்கியோர் ஆச்சாரியார் சித்தம் நடந்ததே. அது தமிழ்நாட்டின் தவம் என்று சொல்லாது வேறு என்ன சொல்வேன்! 'ஆச்சாரியார் வாழ்க; அவர்தம் நூல் வாழ்க' என்று அவர்மீது அன்புமலர் பொழிகிறேன் ; நீங்களும் பொழியுங்கள். மலைப் பொழிவு என்று தோன்றியது ? இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றியது. அஃது இன்னும் சக்திவாய்ந்து நிற்கிறது ; இனியும் சக்திவாய்ந்து நிற்கும். அதன் சக்தி குன்றாது ; என்றுங் குன்றாது. மலைப்பொழிவு வெறுஞ் சொல்லா ? சொல்லடுக்கா ? நோன்பு - நோன்பன்றோ மலைப்பொழிவாகியது ? அப்பொழிவு, பொழிவுகட்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு ; ஒரு கலங்கரை விளக்கு. சொற்பொழிவுப் பயிற்சிக்கு நோன்பு உயிர்நாடி என்பதை வலியுறுத்த, இந்நூலை ஆக்கியவர் கிறிஸ்து பெருமான் மலைப்பொழிவை எடுத்தாண்டனர் என்று யான் கருதுகிறேன்.

கிறிஸ்து பெருமான் மலைப்பொழிவை ஓதி ஓதி, உன்னி உன்னி, அதில் ஒன்ற ஒன்றப் பல நுட்பங்கள் எளிதில் விளங்கும். அவற்றுள் ' அப்பொழிவு பேசாமற் பேசும் பெருநிலையினின்றும் எழுந்த இறைமை மொழி - மறைமொழி ' என்னும் ஒன்று நனிவிளங்கும்.

மேடை ஏறுவோர் மலைப்பொழிவைப் பயிலுதல் - பல்கால் பயிலுதல் - நல்லது. அதைப் பயின்று தேர்ச்சிபெற்றவர் பேச்சு, மன அலையை அடக்கும் ; கருவி கரணங்கட்கு ஓய்வளிக்கும் ; உள்ளொளியைப் பெருக்கும் ; அன்பையும் அமைதியையும் ஓம்பும்; பேசாநிலை என்னும் பேசாமற் பேசும் அநுபூதியைக் கூட்டும். சாந்தி! சாந்தி! சாந்தி!

' பேச்சொளி ' என்றொரு தலைப்பு நூற்கண் திகழ்கிறது. அதனுள் மலைப்பொழிவின் மாண்பு ஒளிர்கிறது. அதில் ' அறிதுயில் ' ' தூங்காமல் தூங்கல் ' முதலிய ஞானக்கலைகள் பேசாமற் பேசுகின்றன. அறிதுயிலில் நல்ல பேச்சுக்குரிய கருத்துக்கள் ஊற்று நீர்போல் சுரந்து பொங்கும். இப்பொங்கல் ஆசிரியரின் எழுத்தாகியதைக் காண்க. இஃது, ஆசிரியர் வாழ்க்கையில் - அநுபவத்தில்-பெற்ற பேறு என்பது, இந்நூலைப் படித்துப் படித்து, அதில் படிந்து படிந்து, திளைப்

போர்க்கு விளங்காமற் போகாது. ஒளியினின்றும் ஒளிபாய்ப் பொங்கிய மலைப்பொழிவு இன்றுவரை வீழ்ந்து படாமல் வாழ்ந்து பெருகுதற்குரிய காரணத்தை இந்நூல் உணர்த்துகிறது.

சொற்சுரங்கம்

'சொற்போக்கு அல்லது சொற்சுவை' என்னும் தலைப்பின் அடியில் ஒருவிதச் சொற்சுரங்கம் காணப்படுகிறது. அதனுள் சில மணிகள் பொதுள்கின்றன. இங்கே இரண்டொன்றை எடுத்துக்காட்டும் அளவில் நின்று மேற்செல்வேன்.

'**** ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் இந்நாள் நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் மொழிகள் தொகுக்கப்பட்டு விரிவான உரைகள் கொடுக்கப் பெற்றுள்ளன. *** பிரபல கவியரசராகிய மில்டன் இவைகளில் எண்ணாயிரம் வார்த்தைகளைத் தாம் யாத்துள்ள நூல்களில் உபயோகித்துள்ளனர். நாடகக் கவீந்திரரான ஷேக்ஸ்பியர் பதினையாயிரம் ஆங்கிலப் பதங்களைக் கையாண்டுள்ளார். ஐக்கியபதி ரூஸ்வெல்டு முப்பத்தையாயிரம் ஆங்கிலப் பதங்களைப் பேதமறிந்து உபயோகிக்க வல்லவராம். இங்கிலாந்தின் பிரதம மந்திரியான வின்ஸ்டன் சர்ச்சில் துரைமகனார் இருபத்தையாயிரம் ஆங்கில மொழிகளைத் தாராளமாகக் கையாளும் ஆற்றல் பெற்றவர். இத்துணைப் பதங்களை, நமது தமிழ்நாட்டு நாவலரான காலஞ்சென்ற மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் உபயோகிக்க வல்லுநர்.'

'சென்னை சர்வகலாசங்கத்தார் வெளியிட்டிருக்கும் தமிழ் அகராதியில் சுமார் தொண்ணூற்றையாயிரம் வார்த்தைகளே தொகுக்கப் பெற்றுள்ளன.'

'இன்றுள்ள நிலையில் நம் தமிழ் நாவலர்கள் எத்துணைத் தமிழ்ப் பதங்களை மேடைப் பேச்சிலும் எழுத்திலும் கையாள வல்லரென அறுதியிட்டுக் கூறுவதற்கு இயலுங்கொல்!'

'ஆங்கிலேயப் பேச்சாளர்களுக்குச் சாதாரணமாக இரண்டாயிரம் வார்த்தைகளே போதுமென்பர். ஆகலின், தமிழ்ப் பேச்சாளர்கட்கும் அத்துணை வார்த்தைகளே போதியனவாம்'

* * * * *

பேச்சும் ஆயுளும்

பேச்சால் ஆயுள் குறையுமென்று சிலர் சொல்கிறார். இந்நூலை அறிவுடனும் அன்புடனும் யாத்த ஆச்சாரியார், 'பேச்சால் ஆயுள் வளரும்' என்று கருதுகிறார். அவர் விரித்துள்ள காரணங்களை நோக்குழி, அவரது கருத்து ஏற்கத் தக்கதாகும். 'மூச்சுப் பேச்சு' 'மூச்சு விடாது பேசுதல்' என்று வரும் வழக்குகட்கு ஆச்சாரியார் கண்ட

விளக்கம் பொருந்தியதென்றே தோன்றுகிறது. நாவலர் பிராணுயாமம் பயிலுதல் நலமென்பது இந்நூலாசிரியர் உட்கிடக்கை. இது மேடைத் தமிழ்க்குப் புத்துயிரளிக்க வல்லது. மேடைப் பேச்சையும் யோகத் திறத்தையும் ஆசிரியர் தொடர்புபடுத்தியுள்ள பெற்றி போற்றற் குரியது. இத் தொடர்பு நூற்கண் விளக்கம் பெற்றிருக்கிறது. அதில் ஒரு கூறு வருமாறு :

'பேசும் போது ஒரு நல்ல பேச்சாளரின் சிந்தை, மொழி, நோக்கு ஆகியவை தாமாகவே பேச்சுப் பொருளில் ஆழ்ந்து அன்னுர் மனம், அவ் வழி ஒரு முகப்படுதல் இயல்பென்பதும், அங்ஙனம் ஒருமுகம் கொண்ட மனம், ஆயுளைப் பெருக்குமாறு சுவாசப் போக்கை இயற்கையோடியைந்து தானே பிரயத்தனமின்றி அடிமனம் வரையிற் சென்று-நின்மலப் படுத்து மென்பதும் சந்தேகமின்றிப் பெறப்படுவனவாம்'

பெண் மொழி

மேடைக்குப் பண்மொழி வேண்டுமா? வேண்டாவா? 'வேண்டும்-வேண்டும்' என்று யான் முழங்குவேன். இயற்கைப் பண்மொழி யுடையார் யாவர்? பெண்மணிகளென்று சொல்லத் தேவையில்லை. மேடைத் தமிழாசிரியர் பெண்மணியின் பண்மொழியை மறந்தாரில்லை. எந்த நல்லாசிரியரும் அம்மொழியை மறவார். பெண்மொழியைப்பற்றிச் சில விழுமிய கருத்துக்கள் ஆசிரியரிடத்திருந்து பிறந்துள்ளன. அவை பொற்றகட்டில் செவ்விய மணிகளால் பொறிக்கத் தக்கவை. அவற்றுள் சிலவற்றை அகழ்ந்து ஈண்டுத் தருகிறேன்.

'* * * * இந்நாள் மேடைமீது பேய்மையாகப் பேசாது, பேச்சலங்காரத் துடன் பெண்ணீர்மையாகப் பேசுவதே சாலச் சிறப்புடைத்தாம். நாட்டின் நலங்கருதி இத்தகைய பெண் நாவலர் பலப்பலரின் தோற்றம் சுதந்தர ஒளி பரந்து வீசும் இந்நாள் மிக வேண்டப்படுவதொன்றும்'

* * * * *

'ஒரு மேடையின்கண் ஓராயிரம் ஆண் மக்கள் பேசுதலினும் பெண் மக் கள் ஒரிருவர் பேசுவாராயின் அன்னுர் பேச்சு சபையின் முழு கவனத்தைக் கவர்வதாகும்'

* * * * *

'இத்தமிழ் நாட்டில் இனிமைஅலங்காரம் ஈரம் வீரம் செறிந்த மேடைப் பேச்சுக்கு நமது பெண்மணிகட்குத் தலையாய இடந்தருதல் முற்றிலும் முறையேயாம்'

* * * * *

'பெண்மக்களைக் குறித்துப் பேசும் ஓர் ஆடவர் எழுத்தெண்ணிக் குற்ற மற்ற முறையில் நினைந்து பேசுதல்வேண்டும் * * * *'

பெண் மனம்

'சபையோர் மனப்பான்மை' என்னும் தலைப்பில் பெண்கள் கூட்டத்தைப் பற்றியும், சிறந்த பெண்களைப் பற்றியும் ஆசிரியர் சில நுட்பங்களை வெளியிட்டுள்ளனர். அவை அறிஞரால் சிந்திக்கத் தக்கன. 1938-ம் ஆண்டில் பெரியகுளத்தில் கூடிய ஒரு மாபெரும் பெண்கள் கூட்டத்தில் பெண் மக்களின் மனோநிடம் புலனாகியதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். அக்காட்சி நூலைப் படிப்போர் உளத்தில் படிந்தே தீரும்.

நகைச் சுவை

ஆசிரியர் உள்ளம் பலதிறச் சுவைகளை மாந்தி மாந்தி, நகைச்சுவையில் மயங்கி மூழ்கி எழுகிறது. எழுந்த உள்ளம், வாழ்க்கைக்கு நகைச்சுவை அவசியம் என்று உணர்கிறது; அச்சுவை தன் அளவைக்கடந்து சென்றால் அது வாழ்க்கைக்குக் கேட்டை விளைக்கும் என்றும் தெளிகிறது. நகைச்சுவை, தன் எல்லையில் நின்று ஆடல்புரியின், அது வாழ்க்கையை வளர்க்கும் மருந்தாகும். அச்சுவை தன் எல்லையை மீறிக் களிபாய் இழிந்து வழிந்தால், அது வாழ்க்கையை எரிக்கும் நஞ்சாகும்.

கலம்பகம்

பேச்சாளர் இயல், பேச்சைச் செப்பஞ்செய்தல், பேச்சை எடுத்தல் - தொடுத்தல் - முடித்தல், சொற்போர், பேச்சுக்கலை, தமிழ்ப் பேச்சு, முக்குணமக்கள், ஆயுள்பெருக்கம், யோகபூமி, பேச்சொளி, பேச்சுச்சுவை, ஒலிபெருக்கி, பொன்னாள் உதயம் முதலிய பொருள்கள் நூலில் பல்கி நிற்கின்றன. அவை மேடை வளர்ச்சிக்குரிய அமிர்த கலசங்கள் என்று கழறலாம்.

ஒன்று

ஆசிரியர் கருத்துக்களில், இங்கே ஒன்று நினைவுக்கு வருகிறது. அது நாவலர் மேடைக்கும் நாடக மேடைக்கும் உள்ள வேற்றுமை. நாவலர் மேடைப் பேச்சு இயற்கை உணர்வினின்றும் தானே ததும்பி வழிவதென்றும், நாடக மேடைப் பேச்சு செயற்கை நடிப்பின்பாற் பட்டதென்றும் ஆசிரியர் விளக்குகிறார். மேடைப் பேச்சை ஆசிரியர் எண்ண அலை எவ்வெவ் வழியிலோ தூய்மை செய்கிறது! ஆசிரியர் நுண்மதியே மதி!

கலைக்கோயில்

'மேடைத்தமிழ்' ஒரு கலைக்கோயில். அதில் பலதிற நாவலர் வீற்றிருக்கிறார். அவ்வந்நாவலரிடம் கலைஞர் தெய்வசிகாமணி ஆச்சாரியார் அணுகுகிறார்; உறவாடுகிறார்; அவரவராகிறார். ஒருவர் பலராகிறார்; பலர் ஒருவராகிறார். ஒரு தெய்வசிகாமணி உள்ளத்தில் எத்துணை எத்துணை நாவலர் உலவுகிறார்! உலவி உலவி அவரனைவரும் ஒரு தெய்வசிகாமணி ஆகிறார். இவ்வத்துவித நுட்பத்தை 'மேடைத் தமிழி'ல் பரக்கக் காணலாம்.

பொதுமை

'மேடைத்தமிழ்', வகுப்பு மதம் நிறம் மொழி நாடு முதலிய வேற்றுமைகளை நினைந்து எரிமூட்டவில்லை. அதன் நோக்கில் பொதுமை ஒளி நடம்புரிகிறது. நாவலருள் பல வகுப்பார், பல மதத்தார், பல நிறத்தார், பல மொழியார், பல நாட்டார் இருக்கின்றனர். அவரெல்லாரும் நாவலர் உலகில் ஓரினத்தவரே யாவர். அனைவரையும் ஆசிரியர் கண்ணுங் கருத்தும் ஓரினத்தவராகவே நோக்குகின்றன. பொது நோக்குடைய ஒருவரால் வடிக்கப்பெற்ற 'மேடைத்தமிழ்' நாட்டிலுள்ள வகுப்புவெறி மதவெறி முதலிய சிறுமைகளைக் களைந்து, பொதுமை வான்பயிரை ஓம்புங் கருவியாகும் என்பதில் ஐயமில்லை.

மொழிபெயர்ப்பு

இந்நூற்கண் தமிழரல்லாத நாவலர் உரைகள் சில காட்சியளிக்கின்றன. அவை மொழிபெயர்ப்பெனத் தோன்றவில்லை; மூலமெனவே தோன்றுகின்றன. இஃது ஆக்கியோரின் தமிழ்ப் பண்பையும் திறத்தையும் புலப்படுத்துகிறது. ஆண்டொனி, கிளாட்ஸ்டன், சாஸ்திரியார் முதலிய நாவலர் பேச்சுக்களைத் தமிழில் இறக்குதலின் அருமைப்பாடு, அத்துறையில் ஈடுபட்டவர்க்கே தெரியும். ஆக்கியோரது முயற்சியைப் பாராட்டுதற்குரிய சொற்கள் கிடைக்கவில்லையே என்று விழிக்கிறேன்; வருந்துகிறேன்.

உரை நடை

இந்நூலாசிரியர் உரைநடையில் மதர்ப்புமில்லை; இளகலுமில்லை. அஃது இரண்டுக்கும் நடுவில் நிற்கிறது. உரைநடை அவரவர் இயல்புக்கேற்றவாறு அமைவது. ஓரேவித விதைகளினின்றும் எழுந்து வளர்ந்த மரங்கள் வடிவில் ஓரேவிதக் காட்சி அளிப்பதில்லை. கவடு கோடுகளும் பிறவும் பலபட்டு விரிகின்றன. உரைநடையும் இத்தன்மையதே.

ஒருவரது உரைநடையை இன்னொருவர் குறைகூறுவது இயற்கையைக் குறைகூறுவதாகும். ஒருவர் உரைநடை கொண்டு அவரது உள்ள நிலையை அளத்தல்கூடும். உள்ள நிலைகள் ஒரேவிதமாக அமைவதில்லை. அவற்றை அறிவிக்கும் உரைநடை எங்ஙனம் ஒரேவிதமாக அமையும் ? உள்ள நிலைகளும் பலதிறத்தன ; உரைநடைகளும் பலதிறத்தன. ஒருவர் தமது இயற்கைக் கேற்றவாறு அமைந்த நடையை விடுத்து, இன்னொருவர் நடையை வலிந்து பற்றல் நடிப்பாகும்.

ஆசிரியரது இக்கால உள்ளத்துக்கும் உருவத்துக்கும் ஏற்ற முறையில் உரைநடை ஆர்ந்துள்ளது. அவர்தம் உரைநடையில் சொற்சாலமில்லை ; பொருட் பொதிவிருக்கிறது.

இறுவாய்

தோழர்களே,

நந்தமிழ் நாடு எத்தகையது ? நம் நாடு தொன்மை வாய்ந்தது ; உலகுக்கு நாகரிகத்தை வழங்கியது ; பலதிறக் காவிய ஓவியங்களைப் பெற்றது. அத்தகைய பெரு நாட்டில் எப்படியோ சாதிமதப் பிணக்குகள், கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் முதலிய புன்மைகள் புகுந்தன. அக்கொடுமைகளால் நாடு அடிமைக்குழியில் விழுந்தது ; இடர்ப்பட்டது ; தன் பண்பையும் மறந்தது.

இப்பொழுது நமது பழம் பெருநாடு ஒருவித விடுதலை அடைந்தது. இவ்விடுதலை முழுமை எய்தல்வேண்டும். முழு விடுதலைக்குரிய பொதுக்கருவிகள் சில ; சிறப்புக் கருவிகள் சில. சிறப்புக் கருவிகளுள் ஒன்று மேடைப்பேச்சு. தமிழ் நாட்டில் மேடைப்பேச்சுக்கென்று ஒரு தனி நூல் உருத்தாங்கி நிற்கிறது.

'மேடைத் தமிழ்' காலத்துக்குரிய ஓர் அறிவுக்கருவி. அதை நன்முறையில் பயன்படுத்த வேண்டுவது நமது கடமை. 'மேடைத் தமிழ்' நூலை நோக்குங்கள் ; பயிலுங்கள் ; ஆராயுங்கள். அது நாட்டுக்குப் புத்துணர்ச்சி நல்கும் என்பது நன்கு விளங்கும். அத்தகைய நூலைப் பரப்ப - மூலை முடுக்குகளிலும் நுழைக்க - உறுதிகொள்ளுங்கள் ; உறுதிகொண்டு உரிய தொண்டாற்ற எழுங்கள் ; எழுங்கள். 'மேடைத் தமிழ்' நாட்டை வளம்படுத்தும் ; வாக்காளரைப் பண்படுத்தும் ; சட்ட சபையைச் சீர்செய்யும் ; நல்லமைச்சை அமைக்கும்.

நாட்டையே செம்மை செய்யும் ஒருநூலைத் தந்த அறிஞர் தெய்வசிகாமணி ஆச்சாரியார்க்கு என்ன கைம்மாறு வழங்கவல்லோம் ? நாடு

முழுவதையும் மேடைத் தமிழாக்க முயல்வதே அவர்க்கு நாம் செலுத்தத் தக்க கைம்மாறுகும்.

'மேடைத் தமிழ்' ஆசிரியர்க்கு நன்றி தெரிப்போமாக ; அவரை வாழ்த்துவோமாக ; இத்தகைய நூல் பல அவர்வழித் தோன்ற அவர்க்கு நல்லுடலும், நீண்ட நாளும், பிறநலங்களும் ஓங்கி வளர்க வளர்க என்று எல்லாம் வல்ல இறைவனை வழுத்தியவண்ணம் இருப்போமாக.

தெய்வசிகாமணி வாழ்க ; அவர்தம் 'மேடைத் தமிழ்' வெல்க.

சென்னை,
7-11-47.

திரு. வி. கலியாணசுந்தரன்

முகவுரை

முத்தமிழை யொத்து மேடைத்தமிழ் வளர்ச்சிக்கான நூற்கள் இதுகாறும் தமிழ்நாட்டில் வெளிவந்ததில்லை. இது, நமது நாட்டின் பன்னெடுநாட் குறைகள் பலவற்றுள் தலையாயதாம். மேலைநாடுகளில் மேடைப்பேச்சு செம்மையில் வளர்ந்து அவ்வழி பல நூற்களும், பற்பல சாதனங்களும் அமைந்துள்ளன. அவ்வந்நாட்டு நாவலரின் நயமான பேச்சுக்களும், இங்கிலாந்து தேசப் பாராளுமன்ற நிகழ்ச்சிகளும், அப்பேரவை உறுப்பினரின் நிகரற்ற சொற்பொழிவுகளும், விவாதங்களும் பலதிறக் காவிய ஓவியங்களாக வேறு பல மொழிகளிலும் வடிக்கப்பெற்றுள்ளன. இத்தகைய வழிகாட்டும் தமிழ் நூற்கள் நமது நாட்டில் இன்றளவும் தோன்றவில்லை.

இக்குறையைப் போக்க நம்மறிஞர் எவரேனும் முற்படுவரென எதிர்நோக்கிப் பல ஆண்டுகள் வீணில் கழிந்தன. இதனிடையே சில தமிழ் முகில்கள் கனமழையெனச் சொரிந்த தமிழ்ப்பேச்சுக்களெல்லாம் இந்நாள் எங்கேயோ ஒடுங்கி மறைந்தன. இது நமது நாட்டின் தவக்குறையெனப் பகராது வேறு என்னென்பது? எனவே, மேடைத் தமிழில் - அப்பரந்த கடலில் - கடந்த முப்பது ஆண்டுகளாகச் சிறிது முயன்று பெற்ற எமது அனுபவத்தைத் திரட்டி இந்நூலைப் பெரிதாக்கத் துணிவுகொண்டேன். மாபெரும் மாநாடுகள் தொட்டுச் சிறிய சபைகளீறாக இற்றை ஞான்று எண்ணிறந்த சொற்பொழிவுகொண்டு தமிழன்னைக்குத் தொண்டாற்றியுள்ளேன்; ஆற்றியே வருகின்றேன். அச்சொற்பெருக்குகள் பல திறத்தன; பெரும்பகுதி சமூக உயர்வு, நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சி, சிற்ப ஓவியச்சிறப்புப் பற்றியவை.

இத்தகைய நூதன புத்தகம் ஒன்று இன்று தோன்றுவதாயின், இவ்வழி, பிற்றைஞான்று பற்பல புத்தகங்கள் காலவியல்பிற்கேற்பத் தாமே தோன்றி மேடைத் தமிழை சிறப்பித்தலும், சுதந்தர வாழ்வுபெற்ற நமது நாட்டுத் தமிழ்மக்களை மேலும் வளம்படுத்தலும் கூடும். அவை சிறந்தமைந்த நாவலரையும், பண்பட்ட வாக்காளரையும் உண்டாக்கி அரசியல் துறையில் பொதுமக்களின் ஆட்சிமுறையைச் செப்பஞ் செய்யுமென்பதும் ஒருதலை. இம்முதல் நூல் - கன்னி நூல் - மற்றைய முத்தமிழை ஒருபுடை தழுவி, தமிழ்நாட்டுக்குச் சிறிதளவாதல் பயன் தருமேல், அஃதொன்றே எமது உழைப்புக்குக் கைம்மாறாகும்.

தி. மு. தே.

அன்புரிமை

மேடைத் தமிழ் என்னும் இந்நூல், நந்தமிழ் அன்னையின்
சேவடிக்கும், முத்தமிழை அளித்த முனிவரர்கட்கும், அத்
தமிழைப் போற்றி வளர்த்துவரும் புலவர்கட்கும்,
பல்கலைக்கழகங்கட்கும், மன்றங்கட்கும், எங்கும்
மணம் கமழப் பரப்பும் பத்திரிகாசிரியர்
கட்கும், சிறப்பாகத் தமிழ்நாட்டு
மக்கள் அனைவர்க்கும்

ஆக்கியோனால்

பணிவுடன் பேரன்பளிப்பாக உரிமையாக்கப்பெற்றது.



மகன் தந்தைக் காற்று நன்றி

தென் இந்திய விசுவகர்ம "மகாநாட்டுத் தந்தைய"ரெனச் சிறப்புப் பெயர் வாய்ந்தவரும், அம்மத்திய சபையின் ஆயுள் காலத் தலைவரும், குடந்தை நகராண்மைக் கழகத்தின் நீடிய கால அங்கத்தினரும், அந்நகர் நிர்மாணத்தை முயன்று முடித்தவரும், ஓவிய வித்தகரும், நற்றமிழ்ப் புலவரும், சீரிய மேடைத்தமிழ் நாவலரும், மேடைத் தமிழ்ப்பேச்சின் அபி விர்த்திக்குத் தனிப் பாடசாலைகளைக் கண்டு அக்கலையை ஆர்வத்தோடு வளர்த்தவரும், 1887-ம் ஆண்டு சென்னையில் குழுமிய மூன்றாவது இந்திய காங்கரஸ் மகா சபையில் கைத்தொழில், தொழிற்கல்வி, சுதேசியம் ஆகியவை பற்றி முதல் முதல் தாய்மொழியில் சொன்மாரி பெய்து நாட்டுக்கு நல்வழி காட்டிய எமது நற்றந்தையருமான உயர்திரு - தி. மு. முக்கண்ணாச்சாரியாரின் இணையடிகளில் நித்தலும் சொரியும்

நினைவு மலர்

குறிப்பு :—சிறக்கக் கூறியுள்ள எம் தந்தையரின் சொற்பெருக்கை அவ் ஆண்டு காங்கரஸ் அறிக்கையிலும், அன்னிபெசண்டு அம்மையார் யாத்துள்ள "இந்திய சுயேச்சைப் போராட்டம்" என்னும் நூலிலும் காண்க.

[ஆ - ர்.]

முதற் பகுதி

மேடைத் தமிழ்

1. தோற்றுவாய்

பேச் சிலக்கியம்

நம் தமிழ்மொழி, இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் பிரிவாகத் தொன்றுதொட்டே அமைந்து விளங்குகிறது. பல்வேறு நாகரிகம் பொலிந்து விளங்கிய பண்டைய கிரேக்க, ரோம நாடுகளைப் போன்றும், இற்றைய மேலைநாடுகளை யொத்தும் மேடைப் பேச்சு என்றொரு தனி இலக்கியப்பிரிவு இந்நாட்டின்கண் இன்றளவும் இல்லை. மேலை நாடுகளில் அவ்வந் நாட்டு மொழிகளில் இயல், இசை, நாடகம் எனும் முப்பெரும் இலக்கியப் பயிற்சியோடு மேடைப் பேச்சுகளும், சொற்பொழிவுகளும், விவாதங்களும் மக்களால் விரிவாகப் பயிலப்பெற்றன. உலகம் போற்றும் பல நாவலர்கள் அங்கே அவ்வப்போது தோன்றலுற்றனர். நந் தமிழ்நாட்டில் அத்தகைய நாவலர் பண்டே உண்டெனின் அன்னோர் சீர்த்தி தமிழ் நாட்டுப் பழஞ் சரிதையில் இடம்பெற்றிருக்கும். இந்நாட்டில் முன்னாள் தொட்டு மக்கட்குப் பேச வசதியும், பேச்சுரிமையும் இல்லாது போனமையே இக் குறைபாட்டுக்குத் தலையாய காரணமாம். அரசியலில் எப்பங்கும் அளிக்கப்படாது நமது மக்கள் வாய்ப்பூட்டிடப்பட்டிருந்தன ரெனல் மிகையன்று. எனவே, நம் நாட்டில் மேடைப் பேச்சுக்கும் பேச்சாளருக்கும் தேவையில்லாது போயிற்று.

தமிழ்ப் பேச்சு

ஆங்கில ஆட்சியினூடே பொதுமேடைப் பேச்சுக்கள் முதற்கண் இந்நாட்டில் புகுந்தன. காங்கரஸ் சபையும், பலதிறப்பட்ட சங்கங்களும், சமூக இயக்கங்களும் தோன்ற அவைகளின் சார்பில் பலதிறப்பட்ட சொற்பெருக்குகள் பொது மேடைகளில் நடைபெறலாயின. இந்நாள் சட்டசபை - நகராண்மைக் கழகத் தேர்வுகள் பொதுமேடைகளில் நின்று பேசும் வாய்ப்புக்களை மக்களுக்குப் பெரிதும் அளித்

துள்ளன. நாடு மேம்பாடுற, அரசியல் துறையில் பொதுமக்கள் ஈடுபட்டுத் தமது எண்ணங்களையும், தேவைகளையும் பொதுமேடைகளில் வெளியிட்டு வருதல் கண்கூடு. மேலைநாட்டு நாகரீகங்கள், அந்நாட்டுக் கல்வி, அரசியல் வாழ்க்கைமுறை முதலியன இங்குப் புகுந்தமையால் இந்நாட்டில் ஆங்கில மொழியில் நாவன்மைகொண்ட பல பேச்சாளர் அவ்வப்போது தோன்றலுற்றனர். தமிழ்மொழியில் மேடைமீது நின்று பேசும் பழக்கமும் ஒரோவழி மேலோங்கி வளர்வதாயிற்று. இருந்தாலும் தமிழ்ப் பேச்சுமுறை எத்துணை வளர்ச்சிபெற வேண்டுமோ, அத்துணை வளர்ச்சி இன்னும் பெறவில்லை. ஆங்கிலப் பேச்சுமுறைக்கும் இன்றைய தமிழ்ப் பேச்சுமுறைக்கும் மிக்க வேறுபாடு இருத்தல் கண்கூடாம். ஆங்கில நாவலரும் தமிழில் பேச முயலுங்கால் இவ் வேற்றுமையைத் தெற்றெனக் காட்டுகின்றனர்.

அரசியல் மொழியாகிய ஆங்கிலத்தில் தோய்ந்த பல நாவலர்கள் நமது நாட்டிலும் உண்டு. அவர்களில் காலஞ்சென்ற சர். பாபு சுரேந்திரநாத் பனர்ஜியரும், மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரிகளும், இன்றுள்ள நாவலர்களில் சர். சி. இராமலிங்க ரெட்டியாரும் தலைசிறந்தவராவர். இம்மூவரும் பேச்சுத் தோரணையிலும், நாவன்மையிலும், சொற்போக்கு நயத்திலும், மொழித் தேர்ச்சியிலும் உலகப் புகழ்படைத்தவர்கள். நந் தமிழ்நாட்டின் தவப்பயனாய்த் திகழ்ந்த காலஞ்சென்ற மகாகனம் சாஸ்திரிகளுடைய ஆங்கிலப் பேச்சுப் பெருந்தோரணையை உரையாணியாகக்கொண்டு, அதனை மேடைத் தமிழ்ப்பேச்சில் ஓரளவாதல் புகுத்த முனைதலே இன்றைய மேடைத் தமிழ்ப் பேச்சாளர்களின் குறிக்கோளாதல் வேண்டும்.

அரசியல் மொழி

நமது நாடு இந்நாள் சுயஆட்சியை விரைந்து பெறுவதாயிற்று. இனி, தமிழ்மொழி ஈண்டு அரசாங்க மொழியாகும். நாட்டுச் சுதந்தரத்தை நன்முறையில் பயன்படுத்தற்குத் தமிழ்மக்கள் தமது அரசியல் கருத்துக்களையும், நோக்கங்களையும், தேவைகளையும் இதர பொதுக் காரியங்களையும் இனிய மேடைத் தமிழில் மக்களின் மனதைக் கவரும் வண்ணம் வெளியிடும் ஆற்றலை முயன்றுபெறல் மிக வேண்டப்படுவதாம். இவ்வழி பல பேச்சாளர் தோன்றுவரேல், பொது மேடைகளிலும் மன்றங்களிலும் பொதுத் தேர்வுகளிலும் அன்னார் வெற்றி பெறுதல் உறுதி. மேடைத் தமிழ் வளர்ச்சி ஓங்க ஓங்கப் பலவகையான கொள்கை பேதங்களினிடையும் நாட்டில் அமைதி நிலவும்,

எல்லாத் துறைகளிலும் நாட்டை, அது வளம்படுத்தும். அநீதியை யோட்டி நீதியை நிலைநாட்டும். பெரும்பாலான மக்களின் வறுமையை யும் மடமையையும் போக்கும். உணர்ச்சிமிக்க வாக்காளரை உண் டாக்கும். சட்டசபை, நகராண்மைக் கழகங்களை உறுதிப்படுத்தும். மிக்க ஆற்றல்பெற்ற நல்லமைச்சரும் தோன்றுவர். நேர்மையான திட் டங்களும், சட்டங்களும் உருக்கொள்ளும். அன்றே சுய ஆட்சியின் நலங்களனைத்தும் நமது கைவரப்பெற்ற நாளாம். இவை மட்டோ? தமிழ் மேடைகளில் 'தமிழ்மொழியில் பேச வராது' என ஆங்கிலத்தில் பேசப்புகும் நம் நாட்டுப் பேச்சாளரின் எண்ணிக்கையும் அருகி மறை வதாகும். பாடசாலைகளிலும் தமிழிலேயே போதிக்கவல்ல நல்லாசிரி யர்களும் தோன்றுவரென்பது ஒருதலை.

மொழித் துணை

தூய இயற்றமிழ்த் துணையே மேடைத்தமிழ் விருத்திக்கு அடிப் படையாம். இதுபோது இயற்றமிழ் வளர்ச்சிக்குப் பண்டைய நூற் களும், பலப்பல நூதன புத்தகங்களும் மலிந்துள்ளன. அவைகளி னூடே தினத் தாள்களும், வார திங்கள் மலர்களும் தமிழ் மொழியை மேலும் வளர்ப்பனவாம். அவற்றின் துணையால் தமிழ்நாட்டில் உல கியல் அறிவும், அரசியல் உணர்ச்சியும் மக்கள்மாட்டுப் பெருகிவருதல் வெள்ளிடைமலையாம். சில புதிய வார மலர்கள் பழைமையான தூய தமிழ்நடையைப் பரிகசிக்கும் முறையில் தமிழ்நாடெங்கும் பரப்பிவரு தல் கண்கூடு. அறியாமை மிகுதியால் அதனைத் தமிழ்மொழியென்றே மக்கள் கொள்கின்றனர். சாதிக்கேற்ற ஒருவகைத் தமிழ்நடை முற் காலத்தில் வழங்கியதில்லை. இந்நாட்டுப் பூர்வகுடிகளான குருவிக்காரர் பேச்சில் தனித்தமிழ்ப் பழஞ் சொற்கள் விரவிவருதலை இன்றும் காண் போம். தத்தம் வீட்டுத் தமிழ் எவ்வாறிருப்பினும் ஒவ்வொரு சாதியா ரும் பேச்சிலும், எழுத்திலும் தூய தமிழ்மொழியை உபயோகித்தல் முறையாம். ஆங்கிலத்தைப் பொதுமொழியாகக் கொண்ட இங்கி லாந்து, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, வேல்ஸ் நாடுகளில் வதியும் மக்க ளின் வீட்டுப் பேச்சுக்கள் மாறுபட்டிருப்பினும் அன்னோர் மேடைப் பேச்சுகளும், எழுத்துக்களும் குற்றமற்ற ஆங்கில இலக்கிய இலக்க ணங்களைத் தழுவிநிற்பனவாம். எனவே, ஒரு சாதிக்குரித்தெனக் கரு தப்படும் வீட்டுத் தமிழை எழுத்தின்வழிப் பரப்புதலும், மேடைக்குக் கொணர்தலும் அடாது. அவை தமிழ்த் தாய்க்குப் படுதீங் கிழைப் பனவாம்.

சீரிய பேச்சாளர்

தேனினுமினிய தமிழ்மொழியை நமது நாட்டில் சுவைசொட்ட முன்னைப் பழையமுறையில் பேசவல்லோர் பலருண்டு. இத்தகையோர் தங்கள் வன்மையைப் , புராணக்கூற்றுக்களாகவும், கதைகளாகவும் அமர்ந்திருந்தே பேசிக் காட்டுவர். ஒரு சபையில் நின்று பேச முற் படுவரேல் அன்னோர் நிலைமை பரிதாபத்திற் குரியதொன்றும். ஆங்கி லப் போக்கில், தமிழ்மொழியில் பேசவல்லோரை நமது கைவிரலில் எண்ணிவிடலாம். காலஞ்சென்ற மறைத்திரு. ஞானியார் சுவாமிகள் பொது மேடைகளில் அமர்ந்திருந்தே மிகத் தெளிவாகவும், சொற் சுவையோடும், கருத்துக்கோவையுடனும், பொருட்செறிவு பொங்கப் பேசி மக்கள் மகிழுமாறு தமிழ்மொழிக்குத் தனித் தேற்றத்தை அளித்தார். மும்மொழி வல்லுநரான உயர்திரு. மறைமலையடிகள் எனும் சுவாமி வேதாசலனுர் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், மேடைத் தமிழுக்கும் ஆற்றும் தொண்டு மிகப்பலவாம். தமிழ்நாட்டுத் தனிப் பெருந் தலைவர் ஈ. வே. இராமசாமிப் பெரியாரின் மேடைத் தமிழ்த் தொண்டை உண்மைத் தமிழ்மக்கள் மறத்தற் கியலுங்கொல்? மக்கள் மனத்தில் அரசியல் கொள்கைகளை மனவெழுச்சிதோன்ற விதைத்தவர் அவராவார். மேடைத் தமிழ்ப் பேச்சின் உயர்வுக்கு உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஒப்புயர்வற்ற எடுத்துக்காட்டாவார்.* இந்நாள் இவர் ஒருவர்மாட்டு ஆங்கிலப் பேச்சுமுறைகளனைத்தும் இயல் பாகவே கால்கொண் டுள்ளன. எடுத்ததைவிடுத்து வெற்றுரையாடாது மேற்கோள்களில் முனைந்துபுகாது, முரண்பாடின்றிப் பேசுவதில் இவர் இணையற்றவ ராவார். மொழித் துறையில் ஆற்றியுள்ள இவர் தொண்டு கள் எண்ணில. இன்னுர் பேச்சுநடையும், எழுத்துநடையும் இனிய தனி நடைகளாக இன்றும் மிளிர்வனவாம். அவை முன்னைப் பழைமைக்குப் பழமையாகவும், பின்னைப் புதுமைக்குப் புதுமையாகவும் இலங்குவன. அழகு, எழுச்சி, தெளிவு ஆகிய முப்பெரும் பொருள்

---

* இப்பகுதியை வாசிக்கக் கேட்டின்புற்ற காலஞ்சென்ற மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரிகள், தாமொருநாள் உயர்திரு. திரு. வி. க. அவர்கள் பேச்சை முதல் தடவையாகக் கேட்க விழைந்து சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிக்குக் கனத்தமழையையும் பாராட்டாது சென்றதாகவும், அம்மண்டபத்தே தாம் முன்பு கண்டும் கேட்டுமறியாத் தமிழ்மழை - தனித் தமிழ்மழை - புறத்தே முழங்கிய மழையினும் இனிய பெருந் தாரையாகப் பொழிந்ததெனவும் வியந்து கூறினர்.

களும் இப்பெரியார் பேச்சிலும் எழுத்திலும் மலிந்து ஒளிரும். சொற் போக்கின் நயமோ செப்பத் தரமன்று. இவரது பேச்சுத் தோரணை எப்பெருங் கூட்டத்தையும் ஈர்க்கும் இயல்புடைத்து. இன்றைய மேடைத் தமிழுக்கு மிக வேண்டப்படும், 'எடுத்தல்', 'தொடுத்தல்', 'முடித்தல்' எனும் முப்பெருங் கூறுகளில் தமிழ்ப் பேச்சாளருக்கு இவரே வழிவகுத்தற் குரியார். சுவைசொட்டும் தமது மேடைத் தமிழ்ப் பேச்சுக்கு இவர் இவ்வழி மேலும் ஆக்கம் அளிப்பரேல் அது நாட்டுக்கும், மொழிக்கும் நன்மை பயப்பதாகும். ஆங்கில மொழியில் அரும் பேச்சுவன்மை கொண்ட சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் இந்நாள் ஆராய்ச்சியில் தோய்ந்து, தமிழ்மணம் வீச ஆர்வத்தோடு பேசும் மேடைத் தமிழ்ப்போக்கு இதர ஆங்கில வித்தகர்களும் பின் பற்றத் தக்க தொன்றும்.

நாடகப் பேச்சு

நமது நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும், உயர்தரக் கல்லூரிகளி லும், பொதுச் சபைகளிலும் இளைஞர்கட்கு மேடைத் தமிழ்த் தேர்வு களும், பரிசில்களும் நிகழ்கின்றன. ஆங்கிலம் கற்ற இம்மாணவரின் தமிழ்ப் பேச்சுமுறையில் ஆங்கிலத் தோரணை சிறிதள வாதல் அமைந்த பாடில்லை. மேடைத் தமிழுக்கு ஆதாரமான தனி நூல்களும், தக்க பேச்சாளரும் இல்லாக் குறையே இதற்குத் தலையாய காரணமாம். ஓரளவு விவகாரத் தேர்ச்சியும், தர்க்க வன்மையும், மெய் விதிர்ப் பின்றிப் பேசுதலும் பெறுவதே இவர்கள் கொண்டுள்ள நோக்காகும். நாடக மேடைகளில் தமிழ்ப் பேச்சுக்களும், தர்க்கங்களும், ஊடே ஊடே விரவிவரக் காண்போம். ஆயினும், அத்தகைய பேச்சுக்கும் மேடைப் பேச்சுக்கும் அடிப்படைத் தத்துவத்தில் பெரும் வேற்றுமை உண்டு. இயல், இசைத் தமிழைப் போன்று நாடகத் தமிழுக்குப் பண் டைய இலக்கியமும், இலக்கணமும் இன்றளவும் காண்பதற்கில்லை. இவற்றைமட்டும் கடல்கொண்டதெனக் கழறுவதற் கில்லை. சிலப்பதி கார ஆராய்ச்சியினின்றும் போதருவனவற்றால் நாடகத் தமிழின் தொன்மை ஒரோவழி நாட்டுதற் கியலும். சிதைந்துபட்ட பழம் பெரு நாடகத் தமிழ், இடைக்காலத்தே ஒளி மங்கிப் பிற்காலத்தே புத் துயிர் பெற்றுவரும் ஒரு கலையெனக் கோடல் தவறன்று. ஆங்கில நாட கங்களுக்கு ஆதாரமாகப் பண்டைய நூற்கள் பலப்பல உள்ளன. அவை களினிடையே பல மேடைப் பேச்சுக்கள் செறிந்து மிடைந்துள்ளன. எனவே, நாடகத் தமிழுக்கான பழைய இலக்கிய இலக்கணம் கிடைக்

கப்பெறவில்லை யென்பதும், அவை இல்லாதபோது மேடைக்கான தமிழ்ப் பேச்சுக்கள் இல்லையென்பதும் வலியுறுத்திப்பெறப்படுவனவாம்.

வளர்ச்சிக்கு வழி

தமிழ்நாட்டில் மேடைத் தமிழ் வளர்ச்சியினாலேயே முத்தமிழும் இனி நன்கு பரிமளித்தற் கியலும். இதற்கு ஆர்வமிக்க பேச்சாளரின் எண்ணிக்கை பல்கல்வேண்டும். இனிய தமிழ்ப் பேச்சு வெள்ளம் எங்ஙனும் கரைபுரண் டோடல்வேண்டும். அதன் சாரத்தை நாட்டின் பல்வேறு பாங்கரில்வதியும் மக்கள் படித் தின்புறுதற்கும் சேமித்தற்கும் தமிழ்ப் பேச்சுக்களைச் சுருக்கெழுத்து எடுக்கும் முறையும் எழுத்தாளர் தொகையும் மிக விரைவில் விரிவடைதலும் வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் செஞ்சொற் செல்வரு மான உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்களின் இது குறித்த கருத்து ஆழ்ந்து நோக்கற் குரித்து: "குடியரசாட்சியில் பேச்சுக் கும் எழுத்துக்கும் பெருஞ் சிறப்புண்டு. தமிழ் மேடையிலே நிகழும் பேச்சுக்களைச் சுருக்கெழுத்திலே எடுக்கும் கலையைத் தமிழாசிரியர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். இன்று பத்திரிகையுலகம் பெரும்பாலும் தமிழ்ப்பேச்சுக்களை மதிப்பதில்லை; பிரசுரம் செய்வதில்லை. திரு வள்ளுவர் முதலிய புலவருடைய நினைவுநாட்கள் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றன. அவ்விழாக்களிலே பெரும் புலவர்கள் பேசு கின்றார்கள்; பல்லாயிரக்கணக்கான மக்கள் கேட்கின்றார்கள்; கிளர்ச்சி பெறுகின்றார்கள்; பயனடைகின்றார்கள். ஆனால் அந்நிகழ்ச்சிகளைப் பற்றித் தமிழ்நாட்டு ஆங்கிலப்பத்திரிகைகளில் விவரமாக ஒன்றும் காண முடியாது. தமிழ்ப் பத்திரிகைகளிலும் சிலவற்றைத் தவிர மற்றவை ஏனோதானோ என்றுதான் அந்நிகழ்ச்சியை வெளியிட்டிருக்கும். இந்த நிலை மாறியே தீரவேண்டும். அதனை மாற்றும் ஆற்றல் தமிழறிஞ ரிடம் இருக்கின்றது. நாடெங்கும் தமிழ்மய மாக்கிவிட்டால் பத்தி ரிகைகள் தாமே தமிழிற் கவிந்துவரும். தமிழ்ப் பேச்சுக்களைப் பிர சுரம் செய்கின்ற பத்திரிகைகளைப் பெருவாரியாகத் தமிழ்மக்கள் ஆத ரிக்கத் தலைப்பட்டால் இன்றுள்ள நிலை நாளையே மாறிவிடும்."

தமிழ்நாட்டின்கண் ணுள்ள உயர்தரப் பாடசாலைகளிலும், கல்லூரி களிலும், பல்கலைக்கழகங்களிலும் மேடைத்தமிழ்ப்பேச்சையும் சொற் போர் அல்லது விவாதங்களையும் சுருக்கெழுத்து எடுப்பதைப் பாடப் பகுதியாக்குதல் அரசியலாரின் இன்றியமையாத கடனும்.











1. பெரியார் ஈ. வே. ரா. 2. ஞானியார் சுவாமிகள், 3. S. சத்தியமூர்த்தியார், 4. பேராசிரியர். R. P. சேதுப்பிள்ளை, 5. C. N. அண்ணாத்துரையார்.

இல்லையேல், இதர பாடங்களைத் தமிழிலேயே கற்பிக்கவல்ல ஆசிரியர்களைப் பிற்காலத்தே உண்டாக்குதல் கடினமாம். ஒருவர் கற்றதனாலாய பயனை, மேடைப்பேச்சின் மணத்தால் மட்டுமே பிறர் எளிதில் நுகர்தல்கூடும். ஒரு அறையின் கதவுகளும், சாளரங்களும் அடையுண்டிருப்பினும் அதனுள் தோற்றுவிக்கப்படும் அகிற்புகை வெளியிலும் நறுமணங் கமழப் பரிமளித்தல் இதற்கொரு சான்றும். இது போழ்து இசைத்தமிழ் மணம் எங்ஙனும் விரைந்து வீசுவதைக் காண்கிறோம். இதுவே புகழுடம்புபெற்ற கனம் செட்டிநாட்டரசரால் தோற்றுவிக்கப்பட்ட தமிழிசை இயக்கமாகும். இதன் அளவுகடந்த வெற்றி, மேடைத் தமிழின் உதவியால் காட்டுத்தீப்போல் கனன்று நாவிட் டெழுதல் கண்கூடு. எனவே, தமிழ்மக்கள் நாடும்பொருள் கைகூடுதற்கு மேடைத்தமிழை மேலும் வளர்த்தலும் மேடைப்பேச்சுக்களைப் பொன்னேபோல் போற்றிச் சேமித்தலும் மிகமிக வேண்டப்படுவனவாம்.

---

2. மேடைத் தைரியமும் பேச்சு வன்மையும்

அருஞ் சிருட்டிகள்

பொது மேடைகளில் போரேறென இடித்து முழங்கிய காலஞ்சென்ற சர். பாபு சுரேந்திரநாத் பனர்ஜியார் "மேடைப் பேச்சாளர் என்போர் கடவுளர் அருளிய உயர்வடிவங்களெனப்படுவர்; ஆயினும் என்னை அவ்வாறு நான் கருதுவதில்லை" எனத் தன்னடக்கமாக ஒருபோது கூறியுள்ளார். பழகினால் எவரும் பேசும் வன்மையைப் பெறலா மென்பது அக்கூற்றின் விரிந்த கருத்தாம். பொதுவகையில் இக்கருத்து ஒப்பத் தக்கதொன்று. ஆயினும் சர். பனர்ஜியரைப் போன்றும் மகாகனம் சீனிவாச சாஸ்திரிகளைப் போன்றும் மேடைப்பேச்சு வன்மைபெற்ற நாவலர்கள் நமது நாட்டில் இதுகாறும் ஏன் மலிந்து தோன்றவில்லை? காளிதாசன், கம்பன், பாரதி போன்றும், மேற்றிசைக் கவி மில்டனைப் போன்றும், நாடகப் புலவரான ஷேக்ஸ்பியரைப் போன்றும் அரும்பிறவிகள் இன்றளவும் உலகில் தோன்றியதுண்டோ? சங்கீதக் கலையில் விழுமியராய்த் திகழ்ந்த தியாகய்யரையும், மகா வைத்தியநாத அய்யரையும், பட்டினம் சுப்பிரமணிய அய்யரையும் ஒத்துப் புகழ்கொண்ட இசைவாணரை இதுபோழ்து ஏன் காண்பதற்கில்லை? உண்மைப்பெண்ணேஎனக் கூறுமாறு வேடந்தாங்கி நடித்த பிரபல

தோடி சுந்தர ராவ், அரிச்சந்திர விலாச நடிகரான சுப்பராய ஆச்சாரியார் போன்ற மேதாவியர் நம் நாட்டில் இதுகாறும் தோன்றாது போனதேன்? இன்றைய தமிழ்நாடக சினிமாக் கலைகளில் தமக்குத் தாமே நிகரென ஒளிரும் உயர்திரு. எம். கே. தியாகராஜ பாகவதரை யொத்து சங்கீத வன்மையும், நடிப்புத் திறனும் கொண்டு பொதுமக்களின் பேராதரவைப்பெற்ற வித்தகர் எத்துணைப்பேர் தமிழ்நாட்டில் இன்றுண்டு? இன்னனைய பெருமை வாய்ந்தோர் முன்னர் எக்காலத்தே வதிந்தனர்? இவ்வுண்மைகளைக் கூர்ந்து ஆய்ந்தோர், அத்தகைய பெரும் பிறவிகள், கலையறிவு முதிர்ந்து அருள்சுரந்து ஒருங்குதிரண்ட ஒவ்வொருபோது ஒவ்வோர் உருவாய்த் திகழ்வன வென்ப.

இவ்வகை அரும்பிறவிகளைத் தவிர்த்து மேற்குறித்த துறைகளில் முனைந்துநிற்போர் வெறும் பழக்கத்தால் தங்கள் வன்மையை ஓரோவழி அடையப் பெற்றவராவர். பேசுந்திறனை ஓரளவு எல்லோரும் பழக்கத்தால் பெறலாமென்பது ஒப்பத்தக்கதாம். அவ்வன்மை சிலர் மாட்டு இயல்பாகவே மிகுந்து காணப்படும். பலகால் முனைந்து முயன்றும் அதனைச் சிலர் சிறிதளவே கைவரப்பெறுவர். ஆயினும், ஒருவர் தொடர்ந்தும், முனைந்தும், மனதில் இடையறாது சிந்தித்தும் சமயம் வாய்ப்புழிப் பொதுமேடைகளில் பேசப்பேசக் காலக்கிரமத்தே ஒழுங்குமுறையில் பேசும் ஆற்றலை அடைவர் என்பது ஒருதலை.

வேற்றுமை எதில்?

நண்பர்கள்மாட்டு நாம் பேசும் சாதாரண வீட்டுப் பேச்சுக்கும் மேடைப் பேச்சுக்கும் கருத்தில் வேற்றுமை உண்டோ? ஆயினும் அவ்விரு பேச்சுப் போக்கில்மட்டும் சிறிது வித்தியாசம் காண்போம். நமது மக்களிடம் வீட்டில் பேசும்போது "நீங்கள் காலையில் எழுந்திருக்க வேண்டும்; பல் துலக்கி முகங் கழுவிக்கொண்டபின் உங்கள் பாடங்களைப் படிக்கவேண்டும்" எனச் சொல்வது சாதாரண வழக்கு. இதனை ஒருவர் மேடைப் பேச்சாகக் குழந்தைகள் கூட்டத்தில் கொணருங்கால் "குழந்தைகாள்! நீங்கள் நாள்தோறும் வைகறைத் துயிலெழுந்து, கைகால், முகம், பல் முதலியவைகளைச் சுத்திசெய்துகொண்டு கடவுளைத் தொழுதபின் உங்கள் பாடங்களைச் செவ்வனே படித்தல்வேண்டும்" என்று சிறிது மாறுபட்ட பேச்சுப்போக்கில் கூறுவர். பலநாள் பாராத நண்பர்களை நாம் காணில் "என்னே! தங்களைப் பார்த்து வெகுநாளாச்சுதே; இப்போதுதான் பார்க்கக் கொடுத்துவைத்தேன்" எனச் சாதாரணமாகக் கூறுவதுண்டு. அதுவே மேடைப்பேச்சாக வருங்கால்,

"நண்பர்களே! பலநாட்கள் கடந்து இந்நாள் தங்களை ஈங்குக் காணும் பெருவாய்ப்புப்பெற்றேன்" எனத் திரிபடையக் காண்போம். இவைக ளிரண்டிலும் கருத்தில் வேறுபாடுண்டோ? ஆயினும் நயமான இவ் வகைப் பேச்சின் வார்த்தைப் போக்கில் சிறிது வேற்றுமை வரக் காண்கிறோம்.

மேடைப்பேச்சை ஒரு நயம்பெற்ற வீட்டுப்பேச்செனமனத் தில் கொண்டால் சபையில் பேசுதற்கு ஒருவர் உடல் நடுக்கங்கொள் ளத் தேவையில்லை. கைநடுக்கமும், வியர்வைப்பெருக்கமும், முழங் கால்கள் மோதிக்கொள்ளலும் எற்றுக்கு? வீட்டிலும், நண்பர்கள்மாட் டும் பேசும்போது இக் குணக்கேடுகளை நாம் காட்டுவதில்லை. கடை களில் பண்டங்கள் கொள்ளுங்கால் எத்துணை வாசாலகம் காட்டுகிறோம்? பிறர் மாட்டுச் சினந் துரையாடுங்கால் இவ்வித நடுக்கம் தோன்றுவ துண்டோ? அவ்வேளை நம் மனதில் எழுவனவற்றைச் சரமாரியாகவும், அழுத்தந் திருத்தமாகவும் தயக்கம் ஏதுமின்றியும் பேச்சாகக் கொட்டு கிறோமன்றோ? அதுபோழ்து அவர்கள் மனதில் உறுத்துமாறு நமது மனவெழுச்சியைக் காட்டவில்லையா? அதுபோல, மேடைப்பேச்சிற்கும் மனோதைரியமும், நிதான உணர்ச்சியும், சொற்சுவையும் இன்றியமை யாதவை யென்பது பெறப்படும்.

பேச்சுக்கு அடிப்படை

பேச்சுப் பெரு நாவன்மை வெறும் பழக்கமொன்றாலேயே ஒருவர் அடையக்கூடிய தன்றாம். அதனை மிகுதியாகப் பெறுதற்குப் பன்னூல் ஆராய்ச்சியும், நூற்பொருளறிவும், நுண்ணியர் கேண்மையும் வேண் டற்பாலதாம். பன்னூல் ஆராய்ச்சி கிட்டாவிடத்துக் கேள்வி, பத்தி ரிகை வாசித்தல், வாசிக்கக் கேட்டல் ஆகிய குறுக்குப் பாட்டைகளைப் பின்பற்றல் ஓரளவு பயன் தருவதாம். ஆங்கில நாவலர்கள் மிக்க இலக்கியத் தேர்ச்சியுடன், ஆங்கில அகராதியைத் தம் வாழ்நாளில் பன் முறை படித்து மொழிகளின் பொருள்பேத முணர்ந்து மனதில் தரித் தவராவர். ஆதலின், தமிழ்ப் பேச்சாளரும் தமிழ் இலக்கியத் தேர்ச்சி யுடன் தமிழ் அகராதியில் செவ்வனே ஆழ்ந்து மொழிபேதமுணர்தல் சாலச்சிறப்புடைத்தாம். வழக்கில் வாராத தமிழ்ச் சொற்களையும், பண்டைப் பாட்டுக்களிலுள்ள பதங்களையும் தேடிப்பிடித்துப் பேச முயல்தல் புல்லறிவாண்மையாம். காங்கரஸ் மகாசபையில் பல்லாண்டு கட்குமுன் பேசிய ஒரு கல்லூரித் தலைவர் பேச்சுத் தொடர்ச்சியை விடுத்துத் தமது ஆங்கிலமொழித் தேர்ச்சியைக் காட்ட, வழக்கில்

வராத பல சொற்களையும், அவற்றின் பிரதிப் பதங்களையும் அடுக்கி அடுக்கிப் பேசிப் பெரும் பொழுதுபோக்கினர். சபையோர் கைகொட்டி, நகையாடி அவரை மேடைவிட் டிறக்கினர். மீண்டும் அவர் பாட சாலைக்கே போகலாமென் ஆரவாரித்து அவர் பேச்சை இடைமறித்த னர். ஆதலின், நாம் பேசும் சபை பலதிற மக்களைக் கொண்டதென் றும் பேசப்புகுந்த காரியம் இன்னதென்றும் பகுத்துணர்ந்து கூறலே முறையெனக் கொள்க.

பேச்சுக்குத் துணை

நாம் பலதிறப்பட்ட பேச்சுக்களைக் கேட்டிருப்போம். நம்மில் பலர் சில பெரும் நாவலர்களின் பேச்சைப் பொது மேடைகளில் கேட் டிருக்கலாம். அவற்றின் துணைகொண்டு நன்ருய்ப் பேசவல்லோரை யும், பேச்சுநயம் கொண்டவர்களையும், உணர்ச்சி பாவத்துடன் பேசு வோரையும் நாம் எளிதிற் கண்டறிதல்கூடும். எஸ். டி. கோல்ரிட்ஜ் எனும் கலைஞர் கூறுகிருர்: "நமக்கு முதற்கண் உடனே மனதில் தோன்றுவதென்னை? பல படித்த மனிதர்களுள், உயர்ந்த மனப்பான்மை யும் சிறந்த நாவன்மையுமுடைய ஒரு பேச்சாளரை உடனே கண் டறிந்துகொள்வதுதான். அன்னர் கல்வித்திறனும், மனமும், கருத் துக்களும் நல்லமுறையில் அல்லது ஒழுங்குப்பாட்டில் படிந்திருப்பதுவே நமது மனக்கண்ணுக்கு உடனே புலனுவதற்குக் காரணமாம்." ஆக வின், தொடக்கத்தே அன்னோர் ஒருவரை எடுத்துக்காட்டாகக் கொண்டு அவர் பேசும் வழியைப் பின்பற்றல் மரபேயாம். இஃது ஒரு நூதன வழியன்று. இலக்கியப் பற்றுடையோர் தமது வசன நடையையும், கவிதைகளையும் பண்டைய ஆசிரியர்களைப் பின்பற்றி எழுதியிருப்பதையும், எழுதுவதையும் இன்றும் காண்போம். எனவே, ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கற்கு ஒரு நல்ல சொற் பொழிவையோ, சீரிய பேச்சாளரின் முறையையோ பின்பற்ற உறுதி கொள்ளல் நல்லியல்பாம்.

போக்குவது எப்படி?

சபை நடுக்கமும், மெய் விதிர்ப்பும், கோழைமையும் பன்னெடு நாள் பழக்கத்தாலேயே ஒருவர் கழிக்கக்கூடியனவாம். இதற்கு அடிப் படையான மேடைத் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் தம்முள் பெருக்கிக்கொள்ளல் மிக வேண்டற்பாலதாம். ஒரு பேச்சாளர் சபை யில் கோழைத்தனம் காட்டலும், பேசப் பயந்து தலைமறைதலும் நகைப்

பிற்கிடமாகும். ஒரு சபையில் பேசி சமாளித்தற்கியலும், அல்லது பேசிச் சமாளிக்கவல்லோம் எனும் மனோதைரியத்தை ஒரு பேச்சாளர் பெற முயலுதல் மிக வேண்டப்படுவதாம். எப்பேச்சாளருக்கும் தொடக்கத்தே இதயத்துடிப்பும், சிறிது மனத்தளர்ச்சியும் தோன்றுவதியற்கை. நாடிப் படபடப்பும், சுரவேகமும், தாபமும்கூடச் சிலருக்கு ஏற்படுவதுண்டு. பெரும் நாவலரான மகாகனம் கிளாட்ஸனுக்குப் பேசுமுன் சிறிது தளர்ச்சி தோன்றலும், உள்ளங்கால்கள் குளிர்தலும் உண்டாமெனச் சரித்திரம் கூறும். பிற்காலத்தே உலகப் புகழ்பெற்று விளங்கிய மகாத்மாகாந்தியடிகள், பம்பாய் நகரிலுள்ள நீதிமன்றத்தில் ஒரு பெண் மணியின் சிறு வழக்கில் தோன்றினர். முதல் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எழுந்தார். ஆனல், அவர் கண்கள் இருண்டன. தலை சுழல ஆரம்பித்தது. எதிரிலிருந்த எல்லா உருவங்களும், பொருள்களும் சுழன்றன. ஒரு கேள்வியும் கேட்காமலே ஆசனத்தில் அமர்ந்துவிட்டார். இம்மாதிரி தயக்கத்திற்கும் திகைப்புக்கும் சபைக் கோழைத்தனமே காரணமாம். இக்குறைபாடுகளைப் பழக்கத்தாலும், மனோவலி கொண்டுமே ஒரு பேச்சாளர் போக்குதல்வேண்டும். அமெரிக்க நாட்டதிபதியான ரூஸ்வெல்ட் என்பார், "பேசப்புகுவோருக்குத் தன்னம்பிக்கையும், தொடர்ந்த பழக்கமும் இன்றியமையாதவையாம். தயக்கமின்றிப் பேசுதல் பழக்கத்தின்கீழ் வருமேல், இதயத் துடிப்புக்கும், மனத்தளர்ச்சிக்கும் இடமில்லை. அதிகவிலை கூறும் வியாபாரிகளிடம் சரக்கு, நிறைந்தும் உயர்வாகவும் இருத்தல்போல், ஒரு நாவலர்பால் நல்ல பேச்சுச் சரக்கு நிரம்பியிருத்தல்வேண்டும். இவ்வரிய சக்தி எக்காலத்தும் துணைநிற்கும்" என அறிவுறுத்தியுள்ளார். நமது நாட்டு நாவலர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் ஓரமயம் சென்னையில் பேசினர். தமது பேச்சை முற்கூட்டி எவ்வளவு நன்கு தயாரித்திருப்பினும் பேசுமுன் மனத்தளர்ச்சி தோன்றுவதுண்டென்றும், பேசி முடியும்வரை தமது மனம் வேதனையில் ஆழ்ந்திருக்குமென்றும், அதனை மகவைப்பெறும் தாயின் பிள்ளைப்பேற்றுக்கு உவமிக்கலாமென்றும், பிரசவித்தபின் தாய் ஆனந்தம்கொள்வதுபோல் தமது பேச்சு முடிந்தபின் ஆனந்தப்படுதல் தமது வழக்கென்றும் கூறினர்.

சில நிகழ்ச்சிகள்!

தமிழ் மேடைகளில் கண்டு கேட்ட சில நிகழ்ச்சிகளையும் ஈண்டு நோக்குவோம். காஞ்சியில் நடைபெற்ற ஒரு பேரவையில் கல்விகேள்விகளில் சிறந்த ஒருவர் பேசவேண்டப்பட்டார். அவர் எழுந்து இரண்டொரு

வார்த்தைகள் பேசுமுன் வியர்வைப் பெருக்கெடுத்து, மயிர்சிலிர்த்து இரு கால்களும் நடுக்கத்தால் உதறின ; ஓயாது உதறின. அவர் அருகே தரையில் வீற்றிருந்த நண்பர் ஒருவர் அவரது இரு கால்களையும் இறுகப் பற்றிக்கொண்டார்! பல சுவடிகளை எழுதியவரும், தமிழ்ப் பத்திரிகாசிரியருமான ஓர் அன்பர் சென்னைப் பச்சையப்பன்கலாசாலை மண்டபத்தில் பலவாண்டுகளுக்குமுன் பேசினார். பேச்சைத் துவக்கிய ஐந்து நிமிடங்களில் அவர் தரித்திருந்த நீண்ட பட்டுஅங்கி வியர்வைப்பெருக்கால் நனைந்தேபோயிற்று! ஒரு சங்கத்தின் அறிக்கையைச் சபைமுன் வாசிக்க முற்பட்ட அச்சங்கச் செயலாளர் மெய்விதிர்த்துக் கைநடுக்க மிகுதியால் அவ்வறிக்கையைக் கீழே நழுவவிட்டு நெடுமரமென நின்றார். அருகிருந்த ஒருவர் அதனை எடுத்து அவர் கைகளில் திணித்தார். சபையில் ஒரே சிரிப்பு! சென்னை, வண்ணையம்பதி சர். பி. தியாகராயச் செட்டியார் உயர்தரப்பாடசாலை வெள்ளி விழாவில், சர். சர்வேபள்ளி இராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். மாபெரும் கூட்டம் ஈண்டியது. விழாப் பிரசங்கத்திற்கு முற்கூட்டிக் குறித்திருந்த கனவானும் மேடைமீதிருந்தார். ஆனால் பேச அழைக்கப்பட்டபோது, அவர் எங்கும் காட்சியளிக்கவில்லை. வெளியில் ஓடோடியும் தேடினர். அவரோ தலைமறைந்துவிட்டார்! அவருக்குப் பதிலாக இந்நூலாசிரியர் பேசினார். சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற ஒருமாநாட்டில் ஒரு தீர்மானத்தை ஆதரிக்கவேண்டுமாய் ஒரு நண்பர் முற்கூட்டியே எச்சரிக்கப்பெற்றார். மேடைமீதிருந்த அவர் எவர் கண்ணிலும் விழாது மெல்ல வெளிக்கிளம்பிவிட்டார். தீர்மானம் நிறைவேறிக் கைதட்டல் முடிந்தபின் அவர் மீண்டுவந்து மேடையை அலங்கரித்திருந்தார்! தஞ்சை மாநகரில் நடைபெற்ற ஒரு மாநாட்டில், புதுவை அரசியல் கல்லூரித் தமிழ்ப் பண்டிதரும், இலக்கியக் கடலில் தேங்கித் திளைத்தவரும், செந்தமிழ்ப் பத்திரிகாசிரியருமான ஒரு பெரியார் பேச அழைக்கப்பட்டார். அவர் எவ்வளவோ தயங்கியும், பின்வாங்கியும் சபையோர் அவரைப் பேசுமாறு கட்டாயப்படுத்தினர். சபைமுன் நின்ற அவர் வாய்திறக்கவுமாட்டாது நாணினர் ; கோணினர் ; இறுதியில் நாற்காலியில் செயலற்றுச் சாய்ந்தார்! ஆதலின் விடாமுயற்சியைக் கைவிடாது, பன்னூல் ஆராய்ச்சியை அடிப்படையாக்கி, தன்னம்பிக்கையைத் துணைகொண்டு, மேடைத் தைரியத்தையும், பேச்சுவன்மையையும் படிப்படியே பெருக்கிக்கொள்ளல் ஒரு மேடைப் பேச்

சாளரின் தலைசிறந்த கடனும். இதனை இன்னும் சில சிறந்த எடுத்துக் காட்டுக்களுடன் முடிப்போம்.

வீரர்கள்

நாத்திகரான காலஞ்சென்ற சார்லஸ் பிராட்லா என்பார் பாராளு மன்ற அங்கத்தினராகத் தேர்வுபெற்றார். புது அங்கத்தினர்கள் பிரமாணம் செய்தபின் சபையில் சேர்த்துக்கொள்ளப்படுதல் வழக்கு. அவர் அவ்வாறு செய்ய மறுத்துத் தமது சுதந்தர உரிமையை நிலை நாட்ட எண்ணினர். அவைத்தலைவரும், சபையோரும் அவரைப் பேசவொட்டாது தடுத்தனர். தடுக்கப்பட்டும் அவர் பேசவே முயன்றார். முன்னணியில் நின்று அவர் தமது பேச்சைத் துவக்கினர். சபையில் ஒரே கலவரம்! அவைத்தலைவர், அவரை ஓர் இராணுவ அதிகாரியின் உதவிகொண்டு பலாத்காரமாகத் தூக்கிச்செல்ல உத்தரவிட்டார். ஆண்டு உண்மையிலேயே ஒரு பெரும் போராட்டம் நிகழ்ந்தது. இவ்வித எதிர்ப்புக்களினிடையே தமது உரிமையை நிலைநாட்ட முயன்ற இப்பெரியார் முடிவில் முழு வெற்றி கண்டார். பிரமாணச் சட்டமும் பின்னர் மாற்றம்பெற்றதென்பது சரித்திரம்.

இன்றுள்ள ஆங்கில மேடை நாவலர்கட்கெல்லாம் முடியா யிலங்கும் சர். சி. இராமலிங்க ரெட்டியார், பேச்சுநயமும் மனோ திடமும், நகைச்சுவையும் நிறைந்த பெரும் பேச்சாளர் ஆவார். அவர் ஓரிடத்தே பேசியகாலை, சில எதிரிடையான மக்கள் கல்வீசிக் கலாம் எழுப்பினர். அவ்வமயம் சர். ரெட்டியார் இடம்விட்டுப் பெயராது துணிந்துநின்று, "நண்பர்களே! உலகந்தோன்றியகாலந்தொட்டு இன்றுவரை மக்கள் பலப் பல நாகரிகங்களைப் படிப்படியே கைக்கொண்டு அறிவுவளர்ச்சி அடைந்துள்ளனர். ஒருகாலத்தே மனிதனுக்கு மரம், கல், உலோகம் முதலியன தற்காப்புக்கும், எதிர்ப்புக்குமான ஆயுதங்களாயிருந்தன. ஆயினும் அவை இன்று கண்ணீர்ப்புகை, அணுகுண்டுவரை உயர்ந்துள்ளன. அங்ஙனமிருந்தும், இவ்வூர் மக்கள் இன்னும் கற்கால மக்களாகவே வதியக் கண்டு வருந்துகிறேன்" என்று அஞ்சாது இடித்து அறிவுச் சுடர்கொளுத்திய மேடைத் தைரியம் மிகப் போற்றிப் பின்பற்றத்தக்க தொன்றும். எனவே, ஒரு பேச்சாளர்மாட்டு மேடைத் தைரியமும் நிதான உணர்ச்சியும் பேச்சு வன்மையும் ஒன்றுசேருமேல், அவர் ஒரு சிறந்த நாவலராவா ரென்பதில் ஐயமில்லை.

---

3. பேச்சாளரின் இலக்கணம்

பேச்சாளர் செயல்

கிள்ளைபோல் சொல்லிக் கொடுத்ததைத் திருப்பி மொழிதலும், ஒலிப்பதிவுக் கருவிபோல் உணர்ச்சியற்று ஓரளவு ஒலிப்பதும், பள்ளிப்பிள்ளை போல் கற்றதைச் கூறிக் கூறிக் களித்தலும் ஒரு பேச்சாளரின் இலக்கணமன்றாம். நல்ல பேச்சாளர் ஒருவரை எடுத்துக் காட்டாகக் கொண்டு, ஓர் ஆரம்பப் பேச்சாளர் அவர் வழியைப் பின் பற்றல் முறையாம். பின்பற்றல் எனின் பேச்சிலும், செயலிலும் அவரைப்போல் நடித்தலன்று. ஒருவரைப்போல் நடித்தல் எளிதாகும். இவ்வன்மை வானரங்கள் மாட்டும் மிகுந்திருப்பதைக் காண்போம். உண்மையில், அந்நல்ல பேச்சாளரைப் போலாதலே ஒருவர் குறிக்கோளாதல் வேண்டும். அவ்வரிய வன்மையைப் பெறுதற்கு ஒல்லும்வகை அப் பேச்சாளரின் வார்த்தை நயத்தையும் கருத்துப் பொலிவையும் பேச்சுத் தோரணையையும் அடைய முயல்தலே பின்பற்றல் என்க.

அடிப்படைத் தத்துவம்

பொது மேடைப்பேச்சில் மூன்று அடிப்படைத் தத்துவங்கள் உள்ளன. அவை : ஏதேனும் பொருள் பற்றிப் பேச முன்வரும் பேச்சாளர், பேச்சாளர் பேசுவ தின்னதெனக் கேட்கப்போதரும் தனிப் பட்ட மக்கள், அவ்வாறு கேட்க எண்ணிக்கூடும் பல மக்களின் கூட்டுறவு என்பனவாம். இம்மூன்றையும் மேலும் துருவி ஆய்வது ஈங்குப் பொருந்தும். பேசுதற்குப் பேச்சுப்பொருள் அல்லது காரியம் ஒன்றில்லாவிடில் ஒரு பேச்சாளர் சபையில் பேச முனையார். ஒருவர் பேசுவதைக் கேட்க விரும்பாவிடினும் அக்கூட்டத்திற்கு மக்கள் போதரக் காரணமில்லை. அத்தகைய ஆவலால் தூண்டப்பெற்ற பல மக்களின் அபிமானமும் கூட்டுறவுமே சபையெனப்படுவதாம். அங்ஙனம் கூட்டுறவு கொண்டு ஈண்டிய மக்கள் ஒரு பேச்சாளர் பேசுவதை மட்டும் கேட்க வந்தவ ராகார். பேச்சாளர் பேசும் ஊக்கத்திலாழ்ந்தும் பேச்சுப் பொருளைச் சுவைத்துத் தமது சொந்த அபிப்பிராயங்களை, அவசியமானல் விட்டுக்கொடுத்தும் அவர் கருத்தோ டிணங்குவதற்கேயாம்.

பேச்சின் குறிக்கோள்

ஒரு மேடைப்பேச்சாளரின் குறிக்கோள் என்ன? சபையின் கண்ணுள்ள மக்கள் ஒவ்வொருவரையும் - எல்லா மக்களையும் பேச்சுப் பொருளில் ஆழ்த்தி, ஒத்த கருத்துடைய ராக்குதலேயாம். எனவே, ஒரு பேச்சாளர் வானவில் போன்ற வெறும் வார்த்தைச் சித்திரத்தில் இறங்காது, கருத்தமிழ்து கொண்டு திறம்படப் பேசுதலைச் சபையோர் எதிர்பார்த்தல் இயற்கையாம். ஒரு பேச்சாளர் பேச்சைக் கேட்கத் தமது இதர அலுவல்களை விடுத்து ஓர் அவையில் மக்கள் குழுமுதல் கண்கூடு. இவ்வண்ணம் ஒருமித்த மனப்பான்மை கொண்டுள்ள சபையோர் அப்பேச்சாளர் நன்றாய்ப் பேசுதற்குப் பெரிதும் உதவியவராவர். ஒரு பேச்சாளர் பேச்சை முழுதும் கேட்க உறுதி கொண்ட ஒருவர், இடமில்லாவிடினும், நின்றபடியே கேட்டு இன்புறுவர். உட்காரும் இடவசதியைப் பணம் கொடுத்து முற்கூட்டிப் பதிவு செய்து கொள்வோர் இந்நாட்டிலும் உண்டு. இவ்வாறு பேரன்பு காட்டும் பொதுமக்கள்மாட்டு ஒரு பேச்சாளர் தமது முழு வன்மையையும் அன்பையும் காட்டிப் பேசுதல் முறையன்றோ?

நந்தமிழ்நாட்டில் உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தரனர் பேச்சுக்கும், ஈ. வே. ரா. பெரியார் பேச்சுக்கும் மக்கள் திரண்டு வருதல் எற்றுக்கு? மன வாக்குக் கருத்துக்கு எட்டாத அவர்கள் பேச்சைச் சிறிதளவாதல் சுவைத்தற்கு மட்டும் அல்ல; அப்பெரியோரின் கருத்துக்களில் நல்லும்வகை படிந்து, பேசுவோர், கேட்போர் மனமிரண்டும் ஒன்றுபட்டு இழைவதற்கேயாம். ஒரு சபையில் பேசக் குறிப்பிட்ட ஒரு பிரபல பேச்சாளர் அன்று சபைக்கு வராவிடில், வேறொரு பேச்சாளரை அவருக்குப் பதிலாகப் பேச விடுப்பதுண்டு. சபையோர் பெரும் ஏமாற்றம் பெற்றிருக்கும் சமயம் அதுவாம். பலர் சபையினின்றும் வெளிக்கிளம்பும் காலமும் அதுவாம். இதனல் ஒரு நல்ல பேச்சாளர் மக்களின் மனத்தில் எத்துணையளவு வேரூன்றி இடம்பெற்றுள்ளாரென்பது நன்கு புலனாகும். இக்காலங்களில் பதிலாகப் பேசவந்த பேச்சாளர், அன்று தோன்றாத அப்பெரிய பேச்சாளரைப்போல் நடித்துப் பேச முனைதல் நகைப்பிற் கிடமாம். அப்பேச்சு வெறுக்கப்படுதலும் ஒருதலை. செயற்கை வைரங்கள் இயற்கை வைரங்களையொத்து ஓரளவு ஒளிரினும் அவை போலிகளென நிபுணர்கள் ஒரு நொடிப்போழ்தில் காண்பர். பிரதியாகத் தோன்றிய ஒரு பேச்சாளர் அதுபோழ்து

தமது 'பொல்லாச்சிறகை விரித்து'க் காட்டாது, இயற்கையாகவே பேசிச் சபையோரைக் களிப்பித்தல் கடனும்.

கருத்து ஒற்றுமை

பேசுவோரின் கருத்தும், சபையோர் கொண்டுள்ள கருத்தும் ஒன்றியிருப்பின், சபையோருக்கு உண்டாகும் மனமகிழ்ச்சி எல்லையற்ற தாக மிளிரும். ஆரம்பப் பேச்சாளர் பலர், ஒரு நல்ல பேச்சாளர் பேசும் வழிகளை ஊன்றி நோக்கற்கென ஒரு கூட்டத்திற்குத் திரண்டு வருவர். எவ்வாறு ஒரு பேச்சாளர் தமது கருத்தைச் சபையில் நிரலே விளக்கு கின்றாரென்பதைக் கண்ணிமையாது கவனிப்பவரும் போதராலுண்டு. இவர்களை ஒரு பேச்சாளரின் உண்மைத் தோழர்களெனல் மிகையன்று. பேச்சுப் பொருளில் முழு நாட்டமுடைய இந்நண்பர்கள் பேச் சாளரின் தோற்றம், குரல் முதலியவற்றில் தமது கவனத்தைப் பெரிதும் செலுத்தார். அவர் பேச்சிலும் பேச்சுப் பொருளிலும் படிந்து கிடப்ப ரென்பது ஒருதலை.

சில குறைகள்

உலகில் பல பெரிய நாவலர்கட்கும் வாய்க்குழறலும், திக்குதலும், நாவிடர்ப்படுதலும் உண்டெனச் சரித்திரம் கூறும். சிலருக்கு இடை யிடையே குரல் பேதமுண்டாகுமென்றும், சிலர் பேசுங்கால் கனைத் தலும் உச்சக்குரலில் கரைதலும் இயல்பென்றும் காண்போம். இன் றுள்ள பேச்சாளர்களில் சிலர் கீச்சுக்குரலில் பேசக் காண்கிறோம். அவ்வாறு பேசும் உயர்திரு மறைமலையடிகளின் பேச்சையும், பேச் சுப் பொருளையும் - ஏன் - ஒவ்வொரு மொழிச்சுவையையும் பருகாத அவையும் உண்டோ? சபையோர் ஒரு நல்ல பேச்சாளரிடமிருந்து எதிர்பார்ப்பது அப்பேச்சாளரின் உண்மை உள்ளமேயாம். அவ்வுள் ளத்தை நூலறிவு கொண்டு பெருக்கி மெருகிட்டுத் திறந்துகாட்டிப் பேசும் பேச்சாளரே ஒரு பெரும் பேச்சாளர் அல்லது பெரும் நாவல ராவார்.

மேற்கூறிய வன்மைபெற்ற ஒரு பேச்சாளரின் பேச்சு, உச்சரிப்பு நயமற்றுச் சிறிது இலக்கணத் தவறு கொண்டதாக இருப்பினும் சபை யோர் அவரை மன்னித்தல் இயல்பாம். ஆரம்பப் பேச்சாளர் மற்றொரு வரை நல்ல பேச்சாளராகத் தமது மனத்திடை மிக மதித்திருத்தல் கூடும். அவரது பேச்சுப் போக்கையடைய ஆசித்தலும் கூடும்.

ஆயினும், ஒரு பேச்சாளர் தமது இயற்கைப் பேச்சுப் போக்கை விடுத்து, அவரைப்போல் எல்லாவகையிலும் நடித்துப் பேச முயலுதல் அடாத செயலாம். அங்ஙனம் பேச முற்படுவோர், தமது சொந்த வன்மையையும் இழந்து, ஆசித்த பிறர் சக்தியையும் அடையாது 'திரிசங்கு நிலை' போலாவர்.

நல்ல பேச்சின் இலக்கணம்

ஒரு நல்ல பேச்சாளர் பேசும்போது சபையோர் 'பாம்பின் கண்ணொளியிற் பட்ட புள்'ளெனத் தம்மையும் மறந்து நிற்பர். ஒவ்வொருவரும் தம்மை அப்பேச்சாளராகவே கருதுவர். காற்று எங்ஙனும் வியாபித்திருத்தல் கண்கூடு. அதுபோலவே காற்று மயமான ஒரு பேச்சும் மக்கள் மனத்தில் ஊடுருவிப் பாய்தலில் ஆச்சரியமுண்டோ? சாதாரண உலக வழக்கிலும் காற்று எத்தகைய மணத்தையும் உடன் கொண்டு சென்று பரப்புவதாம். அஃதேபோல் ஒரு பேச்சாளர் பேச்சு நன்றாய் இருந்தால் நறுமணத்தையும், அதற்கு மாறாக இருந்தால் வேறான மணத்தையும் சபையில் வீசிப் பரப்பும் இயல்புடைத்தாம். சுருங்கச் சொன்னால், ஒரு நல்ல பேச்சாளர் அள்ள அள்ளக் குறையாத கல்வியுடன், அறிவு திரண்ட அநுபவப் பேழையாயிருத்தல் வேண்டுமென்பது கண்கூடாம். அவரே ஓர் ஓவியக் கலைஞராவார். அவர் பேச்சு ஓவியக்கலையாம்; பலபட்ட கருத்துச்சாயந் தீட்டிய ஓவியச் சித்திரமுமாம். எனவே, இந்நாள் இத்தகையோரின் தமிழ்த்தென்றல் மணக்கும் பேச்சுக்களும், தமிழ்த் தேனருவி பொழியவல்ல இனிய பேச்சாளர்களும் நாட்டின் பல நலங்களும் வளர்ந்தோங்கற்கு மிக மிக விரும்பப்படும் செல்வங்களாம்.

---

4. பேச்சைத் தயாரித்தல்

பேச்சு முயற்சி

போருக்கு முனைவோர் தக்க படைகளையும், ஆயுதங்களையும் முற்கூட்டியே தயாரிப்பர். பிரயாணத்திற்கு ஆயத்தப்படுவோர் தங்கட்குத் தேவையானவற்றைப் பேழைகளில் நினைவோடு அடுக்கி வைத்துக்கொள்வர். பாடங்களை வாசித்துணர்ந்து மனப்பாடம் செய்த மாணவன் எப்போதும் வகுப்பில் முதல் இடம் பெறுவான். பாடங்களை

வுக்கிரங்கி டிஸ்ரவி எனும் மாபெரும் நாவலர் பார்லிமெண்டு மகாசபையில் ஈமக்கடன் பேச்சாற்றினர். தாம் ஒரு மாபெரும் கலைஞரும் நாவலருமாயிருந்தும், லூயி அடால்பி தேர்ஸ் என்பார் யாத்துள கருத்துக்களின் ஒரு பெரும்பகுதியைக் கடன் கொண்டு, வார்த்தை மாறுதல் ஏதுமின்றி அங்ஙனமே ஒப்புவித்தார். அவ்வுண்மையை உணர்ந்த சபையோர் அப்பேச்சை ஏற்காது அருவருப்புக் காட்டினர் என்பது சரித்திரம்.

பின்னை, ஒருவர் தமது பேச்சை முற்கூட்டி ஒழுங்குமுறை வைப்பில் எழுதிப் பார்த்தலும், மனப்பயிற்சி செய்தலும் எற்றுக்கு? பேசுவனவற்றை மனதில் ஊன்றித் தரிக்கவும், தமது கருத்தைப் பிறர் மனத்தில் பதிபச் செய்பவும், பிறர் கருத்தைப் பிணைத்துக் கூறவும், பொருத்தமான வார்த்தைகளை ஆய்ந்து அளவோடு பேசவும் அது பெரிதும் துணைசெய்வதாகும். அவ்வாறு எழுதிப் பார்த்த பின் அதே வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் சபையில் உபயோகித்தல் கட்டாய விதியல்ல. கருத்தும் வரிசைக் கிரமமும் மாறாது சிற்சில வார்த்தை வேறுபாட்டுடன் ஒருவர் தமது பேச்சைப் பூரித்து விளக்கமாகப் பேசுதல் மரபேயாம்.

சில பெரியார்

இங்கிலாந்து தேசத்து நாவலர்களான டிஸ்ரவி, கிளாட்ஸ்டன், பிரைட் முதலியோரும் அமெரிக்கநாட்டு நாவலர்களான ஆபிரகாம் லின்கன், ரூஸ்வெல்டு, உட்ரோ வில்சன் ஆகியோரும் தமது பேச்சுக்களை எழுதி சபையில் பார்த்துப் படித்தவர்களல்லர். ஆயினும் அவற்றை முற்கூட்டி எழுதிப்பாார்த்தல் வழக்கெனை அன்னோர் சரிதைகள் கூறும். ஆனால் மனப்பாடம்செய்து அவர்கள் அவற்றைச் சபைமுன் ஒப்புவித்தவர்களல்லர். இங்கிலாந்தின் பிரதமராயிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் உலகப்பெரும் பேச்சாளர்களில் ஒருவராவார். இந்த உலக யுத்தகாலத்தில் அவர் பேசிய பேச்சுக்களனைத்தும் முற்கூட்டி மிக்க கவனத்துடன் தயாரிக்கப் பெற்றவையாம். ஆங்காங்கு அழகிய வார்த்தைச் சித்திரங்களால் அவை மெருகிடப்பட்டவைகள். குறிப்புக்களின் உதவி கொண்டு பேசுமுன் அவர் பேச்சுக்கள் மறுமுறையும் மெருகிடப்படுதல் வழக்கு. சில மேதாவியர் வீடுகளில் உலாவிக்கொண்டும் நாற்காலிகளில் சாய்ந்து அமர்ந்திருந்தும் தமது பேச்சுக்களைத் தனித்திருந்து மனதிலேயும் வாய்விட்டுப் பேசியும் தயாரித்துக்கொள்வதுண்டு. காலஞ்

சென்ற திவான்பகதூர் - எம். ஆதிநாராயண அய்யா சென்னைச் சட்டசபை அங்கத்தினராவர்; பேச்சுத்திறமை பெரிதும் வாய்ந்தவர். அவர் தமது வீட்டு முற்றத்தைச் சூழ்ந்துள்ள தாழ்வாரத்தைச் சுற்றிச் சுற்றியே வாய்விட்டுப் பேசிப்பேசிப் தமது பேச்சைத் தயாரிப்பது வழக்கு. அவர் முழுமனம் அதிலேயே படிந்திருக்கும். அதனால் அவருடைய பேச்சுக்கள் சட்டசபையிலும் இதர பொதுமேடைகளி லும் மிக் இனிமையாகவும் பொருள்செறிந்தும் விளங்கின. வேறுசில பேச்சாளர் தனி இடங்களில் நிலைக்கண்ணாடிமுன் உணர்ச்சி பாவங் களுடன் பேசி முற்கூட்டித் தமது பேச்சைத் தயாரித்துக்கொள்வ தியல்பு. இன்னோரன்னோர் பேச்சுக்கள் மிகக் கோவையோடு, சொல் லமைதியும் கருத்துப் பொலிவும் கொண்டு விளங்கக் கேட்பானேன்? பலப்பல எண்ணங்கள் மனதின்கண் உதிப்பதும் கருத்துக்கள் மிகப் பல எழுவதும் பெரியோர்மாட்டு மட்டுமல்ல, அவை ஏதுமறியா மக்களிடத்தும் காணப்படும் குணங்களாம். ஒன்றைப்பற்றி முற்கூட்டி எண்ணமிடுதல் மனிதவர்க்கத்திற்கு இயற்கையில் பொருந்தியதொன் றாம். அஃதின்றி மக்கள் உலகில் உயிர் வாழ்தல் அரிது.

பல எண்ணங்கள் நிறைந்த ஒருவர் தமது மனதின்கண்ணுள்ள வற்றை வார்த்தையில் அமைத்துப் பேசும்போது அவற்றின் உயர்வும் நோக்கமும் நன்கு புலனாவதாம். வெளியிடாது பலநாள் முழுவதும் ஓயாமல் சிந்தித்தவிடத்தும் அவை ஒழுங்காக உருக்கொள்வதில்லை. அரை விநாடியாதல் அவற்றை உரைக்கப்புகுந்தால் அறிவு தெளிவாக விளக்கமடையும். கல்லில் தீட்டிய கத்தி கறுக்கடைவதுபோல் ஒருவர் தம்மியல்பில் கூர்மதியிலராயினும் வேறொருவர்மாட்டு உணர்த்தலால் அவ்வெண்ணங்களை ஒழுங்காக உருச்செய்தற்கியலும். வெளியிடாத எண்ணங்களும் பேச்சில் வெளிவராத கருத்துக்களும் சிப்பமாகக் கட்டிவைத்த சித்திரப்பூம் பட்டாடைகளை ஒக்குமென்பர்.

நந்தமிழ்நாட்டில் காலஞ்சென்ற உயர்திரு - எஸ். சத்தியமூர்த்தி யார் ஆங்கிலம் வடமொழி தமிழ் ஆகிய முப்பெரும் மொழிகளில் வாக்குவன்மைபெற்ற நாவலராகத் திகழ்ந்தார். அவர் தமது பேச்சுக் களை முற்கூட்டி எழுதி மனப்பாடம்செய்து பேசுதல் வழக்கெனத் தவறுபடக் கூறுவாருமுண்டு. அஃது எங்ஙனமாயினும் ஆகுக. அவர் விரைந்தும், தயக்கமின்றியும் நிகழ்த்திய எண்ணிறந்த சொன்மாரி களில் வார்த்தைகட்கோ, கருத்துகட்கோ எக்காலத்தும் இடர்ப்பட்டா ரில்லை. அன்னார் சரமாரியான சட்டசபைக் கேள்விகளும், விவாதப்

போர்களும் எவரையும் வியப்பில் ஆழ்த்துவனவாம். அயர்லாந்து தேசத்தில் அவர் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசினர். கைதேர்ந்த சுருக்கெழுத்தாளரின் விரைவையும் கடந்து பேசியதால் சற்று நிதானமாகப் பேச அவர் வேண்டப்பட்டாராம்! சட்டசபைகளில் ஆணித்தரமாக செவ்வனிறை யிறுத்தலிலும், இடைமறித்தலிலும் அவருக்கு இணையானவர் இன்று தென்னாட்டில் இல்லை. எனவே, அவர் அகாலமறைவால் குறைவுபட்ட சொற்போரிடம் இன்றளவும் பூர்த்தியாகாது வெற்றிடமாயிருத்தல் கண்கூடு. அத்தகைய அரிய ஆற்றலை மேடைத் தமிழ்ப் பேச்சாளர் எவ்வாற்றானும் முயன்றுபெறுதல் இந்நாள் மிக வேண்டப்படுவதாம்.

நல்ல பேச்சாளர் நன்கு எழுதுவதில்லையென்றும் நல்ல எழுத்தாளர் நன்றாகப் பேசமாட்டார்களெனவும் சாதாரணமாக உலகில் கருதப்படுகிறது. நமது நாட்டு மாபெரும் நாவலர்களான சர். பாபு சுரேந்திரநாத் பனர்ஜியரும், டாக்டர் சி. இராமலிங்க ரெட்டியாரும் இதற்கு முற்றிலும் விலக்கானவராவர். சர். பனர்ஜியார் மேடைப் பேச்சில் இணையற்ற நாவலரெனத் திகழ்ந்தார். அவரது ஆயுள்காலத்தில் "ஓராயிரம் மேடைவீரர்" எனப் புகழப்பெற்றார். அவர் பேச்சை மக்கள் மெய்மறந்து சுவைப்பர்; அவற்றில் ஆழ்வர்; அவ்வின்பத் தேனைப் பருகிப் பருகி ஆனந்திப்பர். எழுதுவதிலும் ஆணித்தரமாய்த் தமது முழுச் சக்தியையும், விவகாரத் தேர்ச்சியையும் புகுத்தவல்லவர். அரசியலாரைத் தாக்கிக் கடுஞ் சிறைவாசமும் புகுந்தார். இவர் தமது முழுப்பேச்சின் கருத்துக்களனைத்தையும் மனதிலேயே ஒழுங்குபடுத்திப் பேசிவந்தார். எழுதிப்பார்த்துப் படித்தவரல்லர்; மனப்பாடம் செய்தவருமல்லர். உலகுக்கு இவர் ஓர் எடுத்துக்காட்டான மாபெரும் நாவலராயினும், உயர்திரு சத்தியமூர்த்தியாரைப்போன்றும், டாக்டர் சர். சி. ஆர். ரெட்டியாரைப் போன்றும் விவாதப் போரில் அத்துணைத் தலைசிறந்து விளங்கினரெனக் கூறுவதற்கில்லை.

இயேசுகிறிஸ்து பெருமான் உலகம் போற்றும் தமது மாமலைப் பொழிவைத் தயாரித்த இரகசியம் பைபிள் எனும் விவிலிய நூலில் குறிப்பாய் உணர்த்தப்பட்டுள்ளது. அம்மகான் மனிதக் கூட்டத்தை விட்டகன்று நாற்பது இரவும் பகலும் மலைமீது தவங்கிடந்து பிறருக்குப் போதிக்கும் வன்மையைப் பெற்றாரென அந்நூல் பகரும். இவர் சென்ற பாட்டை மிகக் கடினமாயினும், நாவன்மை பெற விரும்புவோர் ஒல்லும்வகை இவ்வழி சிறிதளவாதல் முயலுதல் நலம்

தருவதாகும். மூளைபலத்தைப் பெருக்கற்கும், கருத்துக்களைத் திரட்டற்கும், சிந்தையை ஒருமுகப்படுத்தற்கும் நோன்புகொண்டு ஒருவர் தனித்திருப்பதும் மிதவூண் கொள்வதும் மிக்க பயன் தருமென்பதில் ஐயமில்லை.

எண்ணலும் எழுதலும்

மேற்றிசை நாவலர் சிலர் பற்றியமுறையை நோக்குதலும் ஈண்டைக் கேற்புடைத்தாம். இங்கிலாந்தின் பிரதம மந்திரியான லாய்டு ஜியார்ஜ் எனும் நாவலர் கூறுவதிதுவாம் : " சமயோசிதமாகப் பேசிவிடலாமென நினைப்பது, முன்னுக்கு வரக்கூடிய எத்தனையோ பேச்சாளரைக் கரைதட்டிய அழிவுப் பாறையாம். முற்கூட்டித் தமது பேச்சைத் தயாரித்துக்கொள்வதே உணர்ச்சியோடு பேசுதற்கான அரசபாட்டை. அவ்வாறு உழைப்புக் காட்டாது வெறும் அசட்டுத் தைரியமும், சாமர்த்தியமும் உள்ள பல மனிதர்கள் படுதோல்வியடைந்திருப்பதைக் கண்டிருக்கிறேன். ஒருவர் தாம் பேசும் பேச்சில் கொண்டிருக்கும் துல்லியமான அறிவும் கருத்து நிறைவும் அவரைப் பெரும் நாவலராகச் செய்யும். இவ்வழி முயலாதவர் எந்நாளும் ஒரு நல்ல மேடைப் பேச்சாள ராகார்." அமெரிக்காவின் ஐக்கியபதிகளான இரு பெரும் நாவலர்களின் கூற்றுக்களையும் நோக்குவோம். உட்ரோ வில்சன் எனும் பிரசித்திபெற்ற நாவலர் கூறுவதிதுவாம் : " நான் பேச விரும்புவனவற்றை ஆராய்ந்து அகழ்ந்தெடுத்து வரிசைக் கிரமத்தில் என் மனதில் மிகப் பொருத்தமாவும், பிறர் குற்றங் காணாதவாறும், தர்க்கரீதியாகவும் ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்வது வழக்கு. அஃது அந்தச் செய்தியின் முக்கியமாகிய எலும்புக்கூண்டைச் செம்மைப்படுத்தி வைத்துக்கொள்வது போலாம். பின்னர் அதனைச் சுருக்கெழுத்தில் எழுதுவேன். காலத்தை விருதாவிற் செலவிடாதிருப்பதற்கும், கருத்துக்களின் வேகத்திற்கேற்றவாறு கை வேகத்தை ஒழுங்குபடுத்திக்கொள்ளற்கும் சுருக்கெழுத்து மிக்க பயன்படுவதால் அதுவே எனது பழக்கமாயிற்று. எழுதி முடிந்தபின் வார்த்தை, சொற்றொடர் முதலியவைகளின் குற்றங் களைந்து, புதிய சங்கதிகளையும் புகுத்தி, கை அச்சியந்திரத்தில் (டைப் ரயிட்டர்) பொறித்து என் பேச்சை விரைவிலும் சுலபத்திலும் ஒழுங்குப்பாட்டிலும் தயாரிப்பேன். அப்படித் தயாரித்த என் பேச்சுக்கள் என் மனதை விட்டகல்வதில்லை." எனவே, இப்பெரியார் சுருக்கெழுத்திலும், அச்சடிப்பதிலும் மிகப் பழகியிருந்தன ரென்பது நனிவிளங்கும்.

இனி ரூஸ்வெல்டு நாவலரின் பேச்சுமுறையில் ஆழ்வோம்: "நான் பேசவேண்டிய எல்லாவற்றையும் விடாமல் தோண்டியெடுத்து, சரிபார்த்துத் தரமறிந்து அதற்குமேல் சொல்லவேண்டியதொன்று மில்லையென்றும், அவை அசைக்கமுடியாதவையென்றும் நிச்சயப் படுத்துவேன். பின்னர் அவைகளினுதவிகொண்டு பேச்சை வெகு விரைவில் சுருக்கெழுத்துக்காரருக்குப் பேச்சுமுறையில் சொல்லு வேன். பிறகு அது கை அச்சியந்திரத்தில் பொறித்துவந்ததும் அதைத் திருத்தியும், சேர்த்தும், குறைத்தும் என் பேச்சைத் தயாரிப்பேன். முற்கூட்டி யோசியாமலும், ஆழ்ந்து நோக்காமலும், கடின உழைப்பு எடுத்துக்கொள்ளாமலும் என் பொதுமேடைப் பேச்சுக்களில் எந் நாளும் நான் வெற்றிகண்டதில்லை." ஆபிரகாம் லின்கன் பேச்சுக்கள் மனஊற்றினின்றும் நேரே வெளிவந்த உயர் பேச்சுக்களாம். சீசர் வெள்ளிமணியோசைபோல் கணீர் எனப் பேசவல்ல நாவலர். அவர் முயற்சி, தயாரிப்பு இன்றி மணிக்கணக்கில் பேசவல்லவர். இதர ரோமாபுரி நாவலர்களைப்போல் முற்கூட்டித் தமது பேச்சைத் தயாரிப்ப தில்லை. சீசர் பேசுவதுபோலவே எழுத்திலும் வல்லவர். காஸியஸ் இவரை வெறுத்ததற்கு இவையே முதற்காரணங்களாம். வேறொரு பெரியார் கூற்றிதுவாம்: "ஏழு தினங்களுக்குமுன் தமது பேச்சுச் செய்தி குறித்து ஒரு பேச்சாளர் எண்ணமிடுதலும், அச் சிந்தனையிற் பட்டுக் கனவுகாண்டலும் வேண்டும்." மற்றொருவர், "படுக்கையிற் சிறிது நேரமாதல் ஒரு பேச்சாளர் தமது பேச்சுப்பொருள் குறித்து யோசித்தலும், காலையில் எழுமுன் அதனைச் சற்றுத் தொடர்ந்து நினைத்தலும் வேண்டு"மென்பர். அன்னார் நீராடும்போதும், உண்டி கொள்ளும்போதும், வண்டியிற் செல்லும்போதும் அச்சிந்தனையில் இடையறாது உன்னிநிற்றலும் வேண்டுமென்பர். "ஒரு சபையில் ஒரு பேச்சாளர் தமது பேச்சை முற்கூட்டித் தயாரிக்காது பேசப் புகுதல், எல்லா விருந்தினர்களும் ஊண்கொள்ள அமர்ந்தபின் உண வைத் தயாரிக்கப்புகும் பேதமையை யொக்கு"மென மற்றுமொரு பெரியார் அறிவுகொளுத்துகிறார். இன்னொரு பெரியார், "ஒருவர் தமது பேச்சின் கருத்துகளைத் தாமே முடிவுகட்டுவதிலும், தமது நண் பர்கள்மாட்டு வெளியிட்டு அவர்களுடைய கருத்துக்களையும் கண்டறி தல் பயன்படத்தக்க"தென்பர். மேலே கூறிய அனைத்தும் சீரிய அனுபவத்தினின்றும் பிறந்தவையாம். ஒரு பேச்சாளருக்குப் பேசு முன் ஒரு நூறு கருத்துக்கள் உதிப்ப தியல்பாம். அவற்றில் தொண்

ஊற்றை ஆய்ந் தகற்றிப் பத்து முக்கியமானவற்றைக் கருத்தில் கொண்டு ஒருமுறை எழுதிப்பார்த்தல் அப்பேச்சுக்கு அரண்கோலியதா மென்பது மேலே கூறியுள்ளவற்றால் வெள்ளிடைமலையென விளங்கும்.

பயிற்சி வேண்டும்

ஒரு சபையில் அல்லது ஒரு கூட்டத்தில் பேச ஆசைகொள்ளாதவர் உலகின்கண் இல்லையெனலாம். தமது வார்த்தைகட்குப் பிறர் கட்டுப்படல்வேண்டு மென்ற நினைவுகொள்ளாதாரும் இல்லை. இந்நாள் அரசியலாரைச் சட்டசபைகளிலும், பேச்சுமேடைகளிலும் ஆட்டிப்படைக்க ஆசைகொள்ளார்தாரும் இல்லை. இவை மிகைபடு கூற்றல்ல. இன்னோரன்னோர் தமது மனத்தில் அவ்வப்போது எழும் கருத்துக்களையும், கற்பனைகளையும், பொருத்தமான மேற்கோள்களையும், வாசித்துணர்ந்த இலக்கிய நுணுக்கங்களையும் குறித்துவைத்திருத்தல் நன்றும். பிறர் பேச்சின் சத்தான பாகங்களையும், கருத்துக்களையும், புள்ளிவிவரங்களையும் திரட்டிவைத்திருத்தலும் நல்லது. அவற்றைப் பல தலைப்பிட்டுத் தனித்தனிக் காகித உறைகளில் பத்திரப் படுத்திவைத்தல் பின்னர் மிக்க பயனளிப்பதாம். மேடைப்பேச்சுக்குக் கருத்துக்களே உயிர்நாடி போல்வனவாம். அவைகள் மணம் பெற்ற மலர்களை யொக்கும். நிறம், மணம், கூட்டுறவு அறிந்து அவற்றைத் தொடுத்தலே நல்ல மேடைப் பேச்சாகும். கடினமான - எவரும் கேட்டறியாத - வார்த்தைகளைத் தேடிப் பிடித்து அவற்றை ஊற்றுப்பெருக்கெனச் சொரிதல் சிறந்த பேச்சுமுறையல்ல. அத்தகைய பேச்சை வெறும் வார்த்தைக் கதம்பமெனக் கூறுதல் தவறன்று. மேடையில் ரசிக்கப்படுவதும், மிக வேண்டப்படுவதும் முற்கூட்டி அழகுபடத் தொடுத்த கருத்துக் கதம்பச் சித்திரமேயாம். திரட்டிய அருங் கருத்துக்களைச் சமயத்திற் கேற்றவாறு அழகுறக் கிளந்து கூறப் பழகலும்வேண்டும். வாரத்திற்கொருநாள் மிதஊண் கொண்டு தனித்திருந்து ஒருவர் சிலமணிநேரமாதல் ஒரு முக்கிய செய்திபற்றிக் குறிப்புவைத்துக்கொண்டு ஏன் பேசிப் பழகலாகாது? உடல்வலியைப் பெருக்கற்குப் பல பயிற்சிகளிலும் ஆகாராதிகளிலும் கவலைகொள்ளும் ஒருவர் தமது மனோவலியை மிகுதியும் பெறுவதற்கான பயிற்சிகளை மேற்கொள்ளலும், தமது மனதை ஒருமுகப்படுத்திப் பேச்சுப்பொருளில் ஆழ்த்தலும்வேண்டுமென்பன ஊன்றிப் பெறப்படும் உண்மைகளாம்.

மகாத்மாகாந்தியடிகள் ஆசிய மக்கள் கூட்டுறவு மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசியகாலை, "உங்கள்முன் எதைப் பேசுவதெனத் திகைப்புற் றிருந்தேன். என் சிந்தையைக் குவித்து உருவாக்க அவகாசமில்லாதுபோயிற்று. நான் வாக்களித்தவாறு ஏதோ சில வார்த்தை புகல்வேன். பேசவேண்டியவற்றை முற்கூட்டி ஒரு தாளில் குறித்து வைத்திருந்தேன். அது என் கைதவறிப் போயிற்று. அது இப்பொழுது என்னிடமில்லை. ஆயினும் அவை என் மனதில் இருப்பதால் பேசுகிறேன்" என்று தொடங்கினர். பேச்சை ஒருவர் முற்கூட்டி எழுதிப் பார்ப்பதன் அவசியத்தை வற்புறுத்தற்கு இஃதொன்றே சாலும்.

---

5. நினைவுத் திறன்

எழுதிப் படித்தல்

தேர்வுகட்குப் படிக்கும் மாணவர்மாட்டு நினைவுத்திறன் எத்துணை அதிகம் வேண்டுமோ அத்துணை மேடைப் பேச்சாளர்கட்கும் வேண்டப் படுவதாம். பல பேச்சாளரின் கருத்துக்களை ஆய்ந்து முடிவுரை கூறும் அவைத் தலைவருக்கும் நினைவுத் திறன் மிக மிக வேண்டும். அவைத்தலைவர் ஒவ்வொருவர் பேச்சின் முக்கிய கருத்துக்களைக் குறித்துக் கொண்டு அவ்வேடுகளைப் பார்த்துத் தம் கருத்தைக் கூறுவது அத்துணைச் சிறப்பைத் தருவதில்லை. விரிவுரையாளரும் பேச வேண்டியவற்றைக் குறித்துக்கொண்டு அவ்வேடுகளைச் சபைமுன் புரட்டிப் பார்த்துப் பேசுவரேல், சபையோர் கவனம் அப்பேச்சில் அழுந்தாது அன்னோர் படும் பாட்டில் நின்றுழலும். எனவே, சபையோரைத் தம் வயப் படுத்தற்கு மாறாக அப்பேச்சாளர், சபையோர் அவமதிப்பைப் பெறுவர். சில குறும்பர்கள் சபையிலிருந்தால், சாவதானமாகப் படித்துணர அவ்வேடுகளைத் தங்களிடமே கொடுக்கக் கேட்பர்! சபை முன் எழுதிப் படிக்கும் பேச்சுக்கள் தினத் தாள்களில் வெளிவருமென்றெண்ணிச் சபையை விட்டுப் பலர் வெளிக்கிளம்பி விடுவர். சிலர் குறிப்புக்களை வைத்துக்கொண்டு பேசிய பின்னரும் எழுந்து, "ஒரு முக்கிய சங்கதியைச் சொல்ல மறந்தேன்" என மீளவும் பேச முனைவதைப் பல மேடைகளில் காண்போம். இப் பான்மையர் பொது மேடைகளில் பேச முற்படுவதிலும் பேசாதிருத்தல் நலமாம்.

மூளைப் பயிற்சி

ஒருவர் நினைவின் பெருக்கம் அவரது மூளை பலத்தைப் பெரிதும் பொறுத்திருக்கும். சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் திடப்படுத் தற்குப் பலப் பல பயிற்சிகளும், துணைக்கருவிகளும் உள்ளனபோல் மூளை பலத்தை விருத்தி செய்வதற்கான பயிற்சிகளில் ஒரு பேச்சாளர் முயல்தல் மிக வேண்டப்படுவதாம். எப்பொருளையும் உய்த்து நோக்கு மியல்பும், தொடர்ந்து ஒன்றைச் சிந்தித்தலும் ஒருவர் மூளையை உரங் கொள்ளச் செய்ய வல்ல சுலப வழிகளாம். ஷேக்ஸ்பியர் அறிவுறுத்து வது போல் " கற்களில் சற்போதனைகளும், ஓடும் அருவியில் புத்தகங் களும், மரங்களில் நாவும், ஒவ்வொன்றிலும் நன்மையும் உள்ளன" வென் பதை, உய்த்து நோக்கும் தன்மையர் உணர்வர் என்பது ஒருதலை.

பிரெஞ்சு சக்கரவர்த்தி நெப்போலியன் போனபார்ட் என்பார் மூளை பலம் மிகப்படைத்தவ ராவார். தமது மூளையைத் தம் மனம் போல் மூடவும் திறக்கவும் இயல்புடையார். மூளையின் ஒரு பகுதியை ஒரு காரியத்திற் புகுத்தியும், மற்றொரு பகுதியை வேறு காரியத்திற் செலுத்தியும் ஒரே காலத்தில் தமது மூளைக்குப் பல வேலைகளைக் கொடுக்க வல்லரென அவரது சரிதை கூறும். ஒரு செருகறைப் பெட்டி போன்ற தமது மூளையின் அறைகளை வேண்டுங்கால் திறந்து வேண்டுவனவற்றைக் கொள்ளல் கூடுமெனக் கூறுவர். மூளையின் அறைகளையெல்லாம் மனோவலியால் மூடியே பின்னர் நித்திரை கொள் வது இவரது அநுபவமாம். யுத்த களத்தே எதிரிகளின் குண்டு மாரிக்குமுன் தமது குதிரை மீதிருந்தவாறே நித்திரை புரிதல் இவர் வழக்கு. மூளையைக் குறித்து மற்றொரு பெரியார் அஃது ஒரு ஏவலாளி யென்றும் எசமானன் வேண்டும்போது வேண்டு வன வற்றை உதவக் கடமைப் பட்டதென்றும் கழறுவர். அதிகம் கூறுவது எற்றிற்கு? இத் தமிழ் நாட்டில் ஒரு நூறு அவதானங்களை இயற்றவல்ல பெரியார் இன்றும் உள்ளன ரன்றோ? மூளை பலத்தை விருத்தி செய்துகொள் ளற்கு அம் மாபெரும் பாட்டையை நம் முன்னோர் நமக்கெனப் பண்டே கண்டிருத்தல் கண்கூடு. எனவே, ஒருவர் நினைவுப் பெருக்கை அடைதற்கு முதற்கண் மூளையைத் தம் வயப்படுத்தல் வேண்டும். வேலை கொடுக்கும் அளவுக்கேற்ப மூளை மிக உரங்கொள்ளும்; அதன் வேலை யில் தானே முனைந்து நிற்கும். இல்லையேல், முக்கிய அமயங்களில் அது சிறிதும் இயங்காது திடீரென நின்று விடுதல் உறுதியாம்.

நினைவுத்திறனைப் பெருக்க

மக்கள் இயற்கையில் பெற்றுள்ள நினைவுச் சக்தியை நூற்றுக்குப் பத்துப் பாகத்திற்குமேல் சாதாரண வழக்கில் உபயோகிப்ப தில்லை. எஞ்சிய தொண்ணூறும் வீணில் கழிவதாம். நினைவுத் திறனை ஊன்றிப் பெறுதற்கு ஒரு காரியத்தை மனதில் பதித்து வைத்தல், திருப்பித் திருப்பி அதை மனதில் சொல்லிக் கொள்ளல், அதனைக் கூட்டுறவுப் படுத்தல் ஆகிய மூன்று முக்கிய காரியங்களில் கவனம் செலுத்தல் வேண்டும். ஒருவர் அழுத்தமாக மனதில் பதித்துக் கொள்ள வேண்டிய ஒன்றை மேலெழுந்தவாரியாக நோக்காது, முழுமனதைச் செலுத்தி, படம் பிடித்தவாறு, மனதில் பதித்துக் கொள்ளல் முறையாம். ஒருவர் தமது மனதைச் சிறுகச் சிறுக ஒருமுகப் படுத்தப் பழகுதல் அதற்கான தனி வழியாம். அவ்வண்ணம் பதிக்கப்பட்டவற்றை மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொணர்தலும், திருப்பித் திருப்பி மனதில் அல்லது வாய்விட்டுச் சொல்லிக் கொள்ளலும் நினைவுத் திறனை மேலும் பெருக்கும் துணை வழிகளாம். அவ்வாறு மனதின்கண் பொருந்தியவற்றை வேறு கருத்துக்களோடு - தக்க கற்பனையுடன் எவ்வாறு கூட்டுறவு செய்விக்கலாமென ஆழ்ந்து சிந்தித்தல் சாலவும் வேண்டப்படுவதாம்.


நம் மக்கள் பலருக்குக் கண்ணிருந்தும் பார்வையற்றவர்களாயிருத்தல் கண்கூடு. தமது வீட்டுக்குச் செல்லும் பாட்டையில் எத்தனை மரங்கள் அல்லது வீடுகள் உண்டென இவர்கட்குப் புலனாவதில்லை. மேல்வீட்டுக்குச் செல்ல எத்துணைப் படிக்கட்டுகளைக் கடத்தல் வேண்டுமெனப் பலர் அறியார். ஆதலின், சூழ்ந்துள்ள பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் உய்த்துணர்வதால் ஒருவர் நினைவு மிகப் பெருக்கமடையும். வாசிக்கும் புத்தகங்களையும் தினத்தாள்களையும் உரக்கப் படித்தலால் நினைவுச் சக்தியை மேலும் விருத்திசெய்து கொள்ளுதற்கியலும். அதுபோழ்து படிக்கும் பகுதிகளைக் கண்கொண்டு நன்றாகப் பார்ப்பர் ; அவற்றைக் காதினாலும் கேட்பர். எனவே, படிப்பனவற்றை இவ்விரு வழியும் மனதில் பதித்து வைத்தலால், வேண்டுங்கால் அவற்றை நினைவுக்குக் கொணர்தல் சுலபமாம். அமெரிக்க ஐக்கியபதி ஆபிரகாம் லின்கன் இவ்வழியைப் பெரிதும் பின்பற்றியவரெனச் சரித்திரம் கூறும். குறிப்பின் துணையின்றி நூற்றுக் கணக்கான நண்பர்களின் பெயர், முகவரி ஆகியவற்றை நினைவில் வைத்தெழுதும் ஆற்றலுடையாரும் நம்முள் சிலர் உண்டு. ஒருமுறை பார்த்த முகத்தை

எத்தனை ஆண்டுகள் கடப்பினும் கருத்தில் வைத்திருப்போர் பலருண்டு. "தங்களை எங்கேயோ பார்த்த நினைவு வருகிறது" என எளனமுறையிற் சொல்லும் மக்களையும் உதாரணமாகக் காண்போம். காலஞ்சென்ற டாக்டர். வில்லியம் மில்லர் துரை, பார்வை யிழந்தும் தமது மாணவர்களைத் தொட்டுப் பார்த்துக் கண்டுகொண்ட நினைவாற்றல் வியக்கத் தக்க தன்றோ? சேதுபதி அரசவையில் பிறங்கிய மாம்பழக் கவிச்சிங்க நாவலர் கண்ணிலாதவரா யிருந்தும், நினைவுத் திறன் மிகுந்த ஒரு தெய்வீகப் புலவராய் விளங்கினரன்றோ? எப்பெரிய நூலையும் தம் செவிபடக் கேட்டபின், கேட்டது கேட்டபடியே ஒலி பதிப்புக் கருவிபோல் கவர்ந்து, கவர்ந்தவாறே இம்மியும் பிறழாது திருப்பிச் சொல்லக்கூடிய வியக்கத்தக்க சக்திபெற்ற நாவலர் அவர் ஆவார். இராமநாதபுரம் அரசவையில் அரங்கேற்றற்கு விசுவநாத பாரதி எனும் புலவர் ஒருமுறை வாசித்த பிரபந்தத்தைத் தாம் இயற்றிய நூலென்று, அந்நூற் பாடல்களை வரிசைக் கிரமம் தவறாது கூறியும், இரண்டு புதிய செய்யுள்களைச் சேர்த்தும், அது தம்மால் முன்பே யாக்கப்பெற்றநூல் என யாவரும் வியப்புறப் புகன்று தமதுஅரிய நினைவுத்திறனை அரசவையில் நிரூபித்தார். அண்மையில் பச்சையப்பன் கல்லூரியில் பிறவி அந்தகரான சஞ்சீவராயனு என்ற ஒரு வாலிபர்க்குக் கடினமான பல தமிழ், ஆங்கிலக் கணக்குகளைக் கொடுத்து அவரது நினைவுத் திறனைச் சோதித் தறிந்தனர். வினுக்களை மனதில் தரித்து நினைவின் பயனுய் அவர் ஒவ்வொன்றிற்கும் சரியான விடை யிறுத்தார். சென்னை சௌக்கார் பேட்டையில் பத்திரிகை விற்கும் அந்தகனொருவன் பிறர் உதவியின்றிப் பல வீதிகளைக் கடந்து சென்று குறிப்பிட்ட வீடுகளில் பலப்பல பத்திரிகைகளைப் பேதமறிந்து கொடுக்கவும், சரியான மனக்கணக்கு வைக்கவும், சில்லரை எண்ணிக் கொடுக்கவும் செய்கிறான். எனவே, கண்ணிழந்தவர்கள் கருத்தினல் முயன்று பெறும் இப்பேறு, இருகண்ணுடையார் முயன்ருல் பெறுதல் கடினமாமோ ?

சில உபாயங்கள்

ஒருவர் தமது நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ளற்குச் சிற்சில பழக்கங்களை நடைமுறைக்குக் கொணர்தல் வேண்டப்படுவதாம். குழந்தைமையில் நிகழ்ந்தவற்றை நினைத்துப் பார்த்து ஒருவர் குறித்து வைத்தல் நன்று. தமது பாடசாலை அநுபவங்களை ஒருவர் எழுதி வைத்தலும் முறையாம். நெருங்கிய நண்பர்களின் குணுதிசயங்களைக்

குறித்து வைத்தல் சாலச் சிறப்புடைத்தாம். தாம் மேற்கொள்ளும் பல காரியங்களையும், நண்பர், மனைவி, மக்கள், சுற்றத்தாரிடம் அளவளாவுதலையும், குடும்பக் காரியங்களையும் ஒருவர் அன்றாடம் எழுதி வருதலும் நினைவைப் பெருக்கும் வழிகளாம். நாட்டின்கண் நிகழும் பல அரிய காரியங்களைச் சுருக்கமாகக் குறித்து அவைபற்றிய தமது கருத்தை ஒருவர் எழுதி வருதலும் நலம் தருவதாம். பலவேறு காலங்களில் கிட்டிய உணவுப் பொருள்களின் விலைவாசியைக் குறித்து வைத்தலும் நலமாம். இங்கிலாந்து தேசத்தின் பிரதம மந்திரியான மகா கனம் கிளாட்ஸ்டன் இறக்கும்வரை தமது வாழ்க்கையிலும் அரசியல் துறையிலும் நிகழ்ந்த பலவற்றைக் குறித்தெழுதித் தமது நினைவுத் திறனையும் நிலைநாட்டினா ரன்றோ? இருநூற்றுமுப்பத்தாறு ஆண்டுகட்கு முன்னர் புதுவை நகரில் பிரெஞ்சு அரசியல் ஆலோசகராயிருந்த ஆனந்தரங்கம் பிள்ளை என்பவரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் அக்காலத்திய நாட்டின் நிகழ்ச்சிகளை எத்துணை வியக்கத் தக்கவாறு இந்நாள் உணர்த்துகின்றன! சென்னை அரசியலார் அவைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பல புத்தகங்களாக அச்சியற்றியுள்ளனர். ஆங்கிலேய மக்களின் சூழ்ச்சிகளும், பிரெஞ்சு மக்களின் வீரச் செயல்களும் அப் புத்தகங்களில் தெள்ளிதிற் காணலாம். கிறிஸ்து, புத்தர், வள்ளுவர் ஆகிய மூவரும் ஒருருவாய்த் திரண்டு இந்நாள் திகழ்ந்த மகாத்மா காந்தி யடிகளின் நினைவுத்திறம் அதி ஆச்சரியகரமானது. 'நவசக்தி' ஆசிரியர் உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார், அடிகளைப் பார்க்கச் சென்றபோது "முதன்முதல் சென்னையில் என்னுடைய பிரசங்கங்களை மொழிபெயர்த்தவர் நீங்கள்தானே? ஒருமுறை ஒரு சொற்றொடரை நீங்கள் விட்டுவிட்டீர்கள்; நான் திருத்தினேன். நினைவிருக்கிறதா?" என்றார். ஆறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு சிறிய காரியத்தையும் மொழிபெயர்த்தவரையும் ஒரு சொற்றொடர் விடுபட்டுத் திருத்தப்பட்டதையும் நினைவு வைத்திருந்தாரெனில் அஃது எத்தகைய அதிசயமான நினைவுசக்தியாதல் வேண்டும்! மேலும் பல உதாரணம் எதற்கு? 27 எனும் எண்ணினை மனதில் தரித்து பேச்சில் நினைவுக்குக் கொணர்தல் கடினமாகலாம். ஆயினும் நினைவுக்கு வரவேண்டிய அவ்வெண் முப்பதிலும் மூன்று குறைந்ததென ஒருதரம் மனதில் பதித்துக் கொள்ளினும், அல்லது எழுதிப் பார்க்கினும் அதனைச் சுலபத்தில் மறப்பார் உளர்கொல்? ஆதலின், ஒருவர் தமது நினைவுத்



1. உடற்கலையரசு. சாண்டோ லெ. சோமசுந்திரம் செட்டியார், 2. கனம். வி. கிருஷ்ணசாமி அய்யர், 3. பண்டிட் கா. நமச்சிவாய முதலியார், 4. T. R. வெங்கட்ராம சாஸ்திரியார், 5. டாக்டர் சர். சி. இராமலிங்க ரெட்டியார், 6. சர். பி. எஸ். சிவசுவாமி அய்யர், 7. மகோமகோபாத்தியாய. உ. வே. சாமிநாத அய்யர், 8. ஜெனரல் ஸ்மட்ஸ், 9. K. A. P. விஸ்வநாதம்.

திறனை விருத்தி செய்தற்கு அவர் தம் மனம், கண், செவி ஆகிய மூன்றும் ஒருமித்துப் பிறங்குதல் இன்றியமையாததாம். இது குறித்த பல உபாயங்களை அடுத்த பகுதியில் விரிப்போம்.

---

6. நினைவுத் திறனும் உடல்வலியும்

மூன்று

முந்திய பகுதியில் நினைவுத்திறனைப் பெருக்கற்கு ஒரு பேச்சாளர் தமது மூளை பலத்தை விருத்திசெய்வதற்கான பல பயிற்சிகளில் முயல்தல் வேண்டுமென வலியுறுத்தப்பெற்றது. மூளை பலத்தைப் பெருக்குதற்குத் தேக பலமும், அதனைப் பெறுதற்கான பல சாதனங்களும் இன்றியமையாதவைகளாம். தேகபலம் இல்லையேல் மூளை பலமும், அதனைச் சார்ந்து நிற்கும் நினைவுத்திறனும் ஊறுகொண்டவையாகும். எனவே, தேகபலம், மூளைபலம், நினைவுத்திறன் ஆகிய மூன்றும் எவ்வண்ணம் பிணைந்து நிற்கின்றனவென்பதை ஈங்குத்துருவி ஆய்வோம்.

காலங்கண்ட ஒரு லத்தீன் பழமொழி "விசாலித்த மனதிற்கு மாசற்ற உடலே நிலைக்களன்" எனக் கூறும். மாசற்ற உடல் வலியாலும் வளம்பெற்ற மூளைபலத்தாலும் மட்டுமே உண்மைப் பொருளைக் காண்டற் கியலுமென்பது கௌதமர் கண்ட நெறியாம். ஈண்டு விசால மனம் என்பது மனம் எவ்வழியில் செலுத்தினும் எண்ணம், கருத்து, வாக்கு ஆகியவை அவ்வழியெல்லாம் நடந்து தங்கு தடையின்றி இயங்கும் இயல்புடைத்தாயிருத்தல் எனப் பொருள் படும். அன்றியும் ஒருவருடைய மூளை, நினைவாற்றல் கொண்டு செலுத்து மிடங்கட்குச் சோர்வின்றிச் செல்லும் வலிமையும் பெற்றிருத்தல் வேண்டுமெனவும் விரியும்.

இனி இதைக் குறித்து உடற்கூற்று நூல்களில் கூறியுள்ளவற்றை வடித்து ஈங்கு நோக்குதல் முறையாம். ஒருவர் உடலின் கண்ணுள்ள நரம்புகளின் ஐக்கிய மண்டலத்தால் மூளை அலைக்கப்பட்டு அதனால் மூளை, மனத்தை இயக்குகின்ற தென்ப. மூளையில் படிந்து கிடக்கும் எண்ணங்கள் அவ்வியக்கத்தின் வழியே மனதில் பதிந்து, பேச்சு அல்லது பல்வேறு செயல்கள் மூலம் வெளிப்படுவனவாம். நரம்புகளின்

ஐக்கிய மண்டலம் சரீரத்தில் மலிந்துள்ள வலிந்துதவும் தசைகளை யும், அசைவற்ற தசைகளையும் இயக்குவிப்பதாகும். எனவே தசை களும், நரம்புகளும் மனித உடலில் பிரிக்கப்படாதவாறு பிணைந்திருப் பனவாம். ஆகலின், ஒரு மேடைப்பேச்சாளருக்குத் தசை, நரம்பு, மூளை, மனம் ஆகிய நான்கு உறுப்புக்களும் ஒருமித்துப் பிறங்கல் வேண்டுமென்பது ஊன்றிப் பெறப்படும். இந்நான்கு உறுப்புக்களில் கண்ணுக்குப் புலனாகாத, உருவற்ற ஒரே உறுப்பு மனம் ஆகும். ஆகலின் உருவமும் தோற்றமும் கொண்ட இதர மூன்று உறுப்புக் களின் உதவிகொண்டு மனத்திறனை - நினைவுத்திறனை ஒரு பேச்சாளர் பெருக்கிக்கொள்ளல் முறையென்பது வெள்ளிடைமலையாம்.

தசை இயக்கம்

ஒரு பேச்சாளர் மேடையினின்று பேசுங்கால், குறைந்தது நாற்பது தசைகள் ஒரே காலத்தில் இயக்குவிக்கப்படுகின்றனவென அமெரிக்கா தேச நிபுணரான லீடர்மான் என்பார் ஆராய்ச்சி முறையால் அறுதி யிட்டுள்ளார். உணர்ச்சி வேகங்காட்டி விரைந்து பேசும் பேச்சாளர் மாட்டு சற்றேறக் குறைய எழுபத்தைந்து தசைகள் முனைகின்றன வென்றும், இங்கிலாந்து தேசத்துப் பிரதம மந்திரியான மகாகனம் வில்லியம் கிளாட்ஸ்டன் பேசுங்கால் ஒரு நூற்று இருபத்தைந்து தசை கள் மாறி மாறிப் பிறங்கினவென்றும் உடற்கூற்று நிபுணர்கள் கண்டுள் ளனர். நமது நாட்டு நாவலர்கட்கெல்லாம் முடியா யிலங்கிய சர். பாபு சுரேந்திரநாத் பனர்ஜியார் விரைந்து இரைந்தும், உணர்ச்சி பாவ மிகுந்தும் பேசிய பெரும் நாவலர் ஆவார். நமது நாட்டு ஆராய்ச்சி வல்லோர் இவர் பேசிய காலை எத்துணைத் தசைகள் இயங்கினவெனக் கணக்கிட் டறிந்தா ரில்லை. ஆயினும் பேச்சு வன்மையில் மகாகனம் கிளாட்ஸ்டனை யொத்து இவர் பேசியதால், அத்துணைத் தசைகளும் இவர் மாட்டும் இயங்கினதெனக் கோடல் தவறன்று.

மானிட தேகத்தில் எலும்பைக் கவர்ந்திருக்கும் நீண்ட, குறுக்கு வட்டமான தசை நார்களே நரம்பு மண்டலத்திற்கும், எண்ணிறந்த தனிப்பட்ட நரம்புகட்கும் உறுதி பயப்பனவாம். தசைகள் உரம் பெற் றுத் திடங்கொள்ளாவிடில் நரம்புகள் உறுதிபெறுவதில்லை. உறுதி பெறாத நரம்புகளால் இரத்தவோட்டத்தைப் பெருக்கவியலாது. இரத்த வோட்டம் குன்றிய நரம்புகள் அவற்றின் மத்திய ஐக்கிய மண்டலத்தை யும், அவ்வழி மூளையையும் நன்கு வளர்ச்சிபெறச் செய்தலும் இயக்கு வித்தலும் கடின காரியங்களாம். ஆகலின், தசைகள் ஒவ்வொன்றும்

உரமடைந்து வளர்ச்சி பெற்றாலன்றி ஒரு பேச்சாளர் பேசுங்கால் இயங்கவேண்டிய தசைகளனைத்தும் மனம்போல் திறம்பட இயங்கா வென்பது ஊன்றிப் பெறப்படும் உண்மையாம்.

உடற் பயிற்சி

மேலைநாடுகளில் ஈஜூனி சாண்டோ போன்ற மிகப்பல பலவான்கள் அவ்வப்போது தோன்றி, மக்கள் தங்கள் தசைகளையும், தேகக் கட்டையும் எவ்வாறு உறுதிப்படுத்த இயலுமென்பதற்குப் பல பயிற்சிகள் மூலம் வழிகண்டுள்ளனர். அவைகட்கான பல கருவிகளையும் சாதனங்களையும் அமைத்துமுள்ளனர். அதனுடன் அமையாது பலப்பல புத்தகங்களை ஓவியப் படங்களுடன் விளக்கி யாத்துமுள்ளனர். அவ்வழியைப் பெரிதும் பின்பற்றி நமது தென்னாட்டில் உடற்கலை யரசு சாண்டோ லெ. சோமசுந்தரம் செட்டியார், யானையை மார்மீது தாங்கல், மோட்டாரை இழுத்து நிறுத்தல், தசைகளை மனம்போல் இயக்குவித்தல் ஆகிய அரிய பெரிய காரியங்களைச் செய்கையில் காட்டியும், பல பயிற்சிக்கூடங்களை நிறுவியும், பலப்பல புத்தகங்களை இயற்றியும் உள்ளார். மறந்துபட்ட இத்துறையில் தமிழ்நாட்டுக்கு உயர்வழி நல்கிய முழுப் பெருமையும் இப்பெரியாரைச் சார்ந்ததேயாம்.

மாசற்ற உடலே மனஉரத்திற்கு அடிப்படை யென்பதை உணர்ந்து, நமது நாட்டுமக்க ளனைவரும் - குறிப்பாக நல்ல மேடைப் பேச்சாளராக விரும்புவோரும் - உடல்வலியைப் பெருக்கும் தேகப் பயிற்சிகளை மேற்கொள்ளல் முறையாம். தத்தம் தொழில்கட்கும் வசதிகட்கும் ஏற்றவாறு, மேற்குறித்த பழக்கங்களில் ஈடுபடுதல் ஏற்புடைத்தாம். அன்றிச் சரீரத்தின் எல்லா உறுப்புக்களும் ஒருங்கே இயங்கும் வலிய காரியங்களைச் செய்யப் பழகலும் முறையாம். காலஞ்சென்ற மகாகனம் கிளாட்ஸ்டன் தமது மாளிகையைச் சூழ்ந்த பெருவனத் திருந்த பருமரங்களில் ஒன்றை அன்றாடம் கோடரி கொண்டு வெட்டி வீழ்த்தி, கொப்புக் களைந்து அடுக்கிய பின்னரே காலை ஊண் கொண்டாரென்பது சரித்திரம். இதனால் அவரது தேகபலம், இறுதிக் காலம்வரை குன்றாதிருந்தது. அதன் பலங்கொண்டே தம்மிலும் உடல் மெலிந்து நோயால் நலிந்த லார்டு பீக்கன்ஸ் பீல்டு என்ற தம்மிலும் மிகுந்த நாவலரைப் பாராளுமன்றப் பெருஞ் சபையில் தாக்கித் தாக்கியே வெற்றிகொண்டா ரெனச் சரித்திரம் கூறும். சார்லஸ் பிராட்லா எனும் நாத்திகரைப் பார்லிமெண்ட் மகாசபையின் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்வதைக் குறித்து விவாதம் எழுந்த காலை,

மகாகனம் கிளாட்ஸ்டன் அப்போதைய முதிர்ந்த வயதிலும் நீண்ட பேச்சொன்றை நேர்மையில் நிகழ்த்தினர். அப்பேச்சை உலகமக்களனை வரும் போற்றினர். பேராசிரியர் பிளாக்கி எனும் நாவலர் அப்பேச் சைப் பாராட்டுங்கால், "ஒருவர் பேச்சுத் திறனுக்கும் வயதுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. மனித உறுப்புக்களில் எது மிக உரங் கொண்டதோ அது நீடித்திருப்பது இயல்பு. தசைகள் பலங்கொண்ட வையானல் அவைதான் நீடித்திருக்கும்; மூளை பலங்கொண்டதானல் அதுவே மிக நீடித்திருக்கும். நான் முப்பது ஆண்டுகளுக்குமுன் 'பென்நெவிஸ்' மீது ஏறிய வேகத்தில் இப்போது ஏறமுடியுமோ? ஆயினும் என் மூளை இன்னும் துல்லியமாகவே உள்ளது. ஒன்றரை மணியளவு யாதொரு களைப்பும் சளைப்புமின்றி இன்றும் பேசவல்லேன்" என்றார். எனவே மகாகனம். கிளாட்ஸ்டன் தேக பலமும், மூளை பலமும் ஒருங்கே கொண்ட நாவலரென்பது நனி விளங்கும். இங்கி லாந்து தேசத்தின் மற்றொரு பிரதமரான லாய்டு ஜியார்ஜ் எனும் பெரியார் ஒவ்வொருநாளும் பத்துக்கல் தூரம் நடந்தாராம். இவரும் மூளை பலங்கொண்ட ஒரு பெரும் நாவலரேயாவார். இங்கிலாந்தின் வேறொரு பிரதம மந்திரியான சர். ராபர்ட் பீல் என்பார் தமது மூளையின் இயக்கத்தைத் துரிதப்படுத்த, குதிரைமீது வெகுதூரம் சவாரி செய்தல் வழக்காம். ஆபிரகாம் லின்கன் தமது பத்தொன்பதாம் ஆண்டிலே ஆறடி நான்கு அங்குல உயரமும், மற்போரில் திண்மையும் பெற்று, மூளை பலமும் மனோதிடமும் கொண்டு விளங்கிய பெரும் நாவலராவார்.

மிருகபலம் கூடாது

நமது நாட்டிலும் தேகபலத்தைப் பெருக்கும் வழிகளில் ஈடுபடு வோரும் அதனை மிகுதியாகப் பெற்றவர்களும் மிகப் பலர் உண்டு. தென்னாட்டில் அரசியல் பெரும்பதவி வகித்த உயர்திரு. ஆர். வி. சீனிவாச அய்யரும் மகாகனம் கிளாட்ஸ்டனை யொத்துத் தமது வாழ் நாளில் பெருமரங்களை வெட்டி வீழ்த்தியே வந்தார். முன்னவரை யொத்து மேடைப்பேச்சில் அவர் மிளிராவிடினும், தமது உடல் வலியைப் பெருக்கிப் பல்லாண்டு வாழ்ந்தார். ஒருவரின் தேகபலம் முரட்டுப் பயிற்சிகட்கும், மல்யுத்தத்திற்கும், பிறரைத் தாக்குதற்கும், தற்காத்துக்கொள்ளுதற்குமே பயன்தருவதாமென நினைந்து அவ்வழி நடத்தல் தவறாம். அன்னார் தசைகட்கும், நரம்புகட்கும் வேலை கொடுத் தல்போல் மூளைக்கும் ஒருங்கே வேலை கொடுப்பரேல், அவரது மூளை பலமும் நினைவுத்திறனும் ஒப்புயர்வற்று மிளிரும். உண்மையிலேயே

தேகபலமும், மூளைபலமும் மிகுதியாகப் பெற்றுளோர்மாட்டு நற்குணனும் சாந்தமும் மலிந்திருக்கக் காண்போம். தேகபலம் ஒன்றிலேயே நாட்டங்கொண்டவர்பால் வெறும் மிருகபலத்தை மட்டும் காண்டல் இயல்பாம்.

இனி, ஒன்றை கூறி முடிப்போம். ஒரு நல்ல பேச்சாளர் பிராண வாயுவை மிகுதியாக உள்ளிழுத்தல் வேண்டுமென்றும், கரியமல வாயுவை இதயத்தினின்றும் கழிக்கப்பழகல் வேண்டுமென்றும் இந்நூலின் மற்றொரு பகுதியில் கூறியுள்ளோம். இதற்கு ஒரு பேச்சாளர் அதிகாலை கடற்கரைக்கு விரைந்து நடந்துசென்று, கரையருகே நின்று அங்கிருந்து னின்றெழும் ' ஓசோன் ' எனும் பரிசுத்தமான பிராணவாயுவை உட்கொள்ளலும், அலையினூடே உரக்க மேடையினின்று பேசுதல்போல் யாதேனும் ஒரு செய்திபற்றிப் பேசிப் பழகலும் மிக வேண்டப்படுவதாம். மேலே கூறியவாற்றால், நினைவாற்றலையும் பேசும் பெரும் செல்வத்தையும் இயற்கையில் அடையப்பெறாதாரும், அவற்றைச் செயற்கைப் பழக்கங்களால் ஒல்லும்வகை பெறலாமென்பது நன்கு விளங்கும்.

---

7. கவனத்தைக் கவர்தல்

கவர்தல் எப்படி ?

ஒரு சபையை ஒருவர் கூட்டுதலும், அதில் பலரைப் பேசச்செய்தலும் கேட்போரைத் தமது கருத்திற் கிணக்குவித்தற்கேயாம். பொதுமக்கள் அறியாத நூதன நிகழ்ச்சிகளையும், உலகப் போக்கின் மர்மங்களையும் தெளிவுறுத்தற்கும் சபைகளைக் கூட்டுவதுண்டு. இச் சபைகளில் பேசப்போதரும் பேச்சாளர் வெறும் நூலறிவாலும், வாய்ச்சொற்கள் கொண்டும் ஈண்டியுள்ள மக்களின் மனதைக் கவர்தற்கியலாது. முரண்பட்ட கருத்துடையோரையும், பலதிறக் கருத்துக்களிடையே ஊசலாடுவோரையும் பேசுவோர் கருத்துக்குச் சுலபத்தில் இணக்குவித்தல் இயலாது. சபையில் பேசப்படும் ஒவ்வொரு மொழியும், வெளியிடப்படும் கருத்துக்களும் கேட்போர் செவிவழிப் புகுந்து மனக் கண்ணுக்கு நன்கு புலனாதல்வேண்டும். அதுவே ஒரு நல்ல சொற்பொழிவின் நோக்காம். பேசும் வார்த்தைத்தொடர்கள் உண்மை நெறிபற்றிப் பேசுவோர் உள்ளத்தினின்றும் எழுதல் வேண்டப்படுவ

தாம். அன்னோர் வார்த்தைகளும் வார்த்தைத் தொடர்களும் உயிர் நாடி பெற்றும், மின்சாரவிசையெனக் கேட்போர் செவிவழிச் சென்று உள்ளத்தே ஊடுறுவி, அவர் கருத்துக்களை அலைப்பனவாயும், நூதன எண்ணங்களை எழுப்புவனவாயும் இருத்தல் மிக வேண்டப்படுவதாம். ஓவியர் பல சாயந் தீட்டி இயற்கை வனப்பைச் சித்தரித்துக்காட்டல் போல் தமது உள்ளக் கருத்தைப் படம்பிடித்தவாறு காட்டிப் பேசுதலே ஒரு பேச்சாளரின் முழு இலக்காதல்வேண்டும். மனச்சான்றின்றி ஒன்றைப் புனைந்துகூறுதலும், பொதுஅறிவுக்கு முரண்படுமாறு ஒரு சபையில் பேசத் துணிதலும் கூடா. பேச்சாளர் சபையோர்மாட்டு அன்பலர்ந்த உள்ளக் கிளர்ச்சியோடு பேசாவிடில், அப்பேச்சு பயனற்ற வெற்றுரையேயா மென்ப. ஒரு சபையில் பேசுவோர் இன்சொல் கொண்டும், அரும்பிய முகத்தோடும் பேசாராயின், நிலைக்கண்ணாடியை நிகர்த்த சபையோர், பேசுவோர்பால் எங்ஙனம் தமது அன்பையோ முகமலர்ச்சியையோ திருப்பிக்காட்டுவர்? சொல்வனவற்றை நயமொழி கொண்டு அழுத்தந் திருத்தமாகச் சபையோர் மனதில் ஓாளவாதல் பதியுமாறு பேசப் பழகாதார் பொதுமேடைகட்கு அருகராகார். பேச்சாளருக்கு இயற்கையாக இனிய குரல் அமைந்திராவிடில் அத் தகையோரும் சபையோர் கவனத்தைக் கவர்தல் கடினமாம்.

சிறந்த பேச்சு

நாவன்மைகொண்ட சில பேச்சாளர் இரண்டொரு ஆரம்ப வாக்கியத் தொடர்களாலும், சொல்லமைதியாலும் சபையோரின் முழுக் கவனத்தையும் அங்ஙனே கவர்வர். 'அன்பர்களே', 'சகோதரர்களே', 'நண்பர்களே' என அன்புகலந்த குரலில் விளிப்பதினாலேயே சபையோரை அங்ஙனே வயப்படுத்துவதுண்டு. சபையில் கூட்டம் எத்துணை அதிகமோ அத்துணை, பேசுவோரின் திறமையும் ஊக்கமும் தாமே அதிகரிக்கும் இயல்புடைத்தாம். சபையின் கவனமும் அத்தகைய பேச்சினூடே தொடர்ந்து பிறங்குவதாம். குழுமிய கூட்டத்திற் கேற்ப பேச்சாளர் தமது குரலை உயர்த்தவும், தாழ்த்தவும், சம நிலையில் நிறுத்திப் பேசவும் பழகியிருத்தல் இன்றியமையாததாம். நிதானமான குரலில் தமது பேச்சை எடுத்தும் தொடுத்தும், படிப் படியே உயர்த்தியும் தாழ்த்தியும் உணர்ச்சிதோன்றப் பேசுதல் பொது மேடைக்குரிய நல்லியல்பாம். ஒரு சொற்பெருக்கின் துவக்கத்தில் "உரக்கப் பேசுங்கள்" எனும் கூச்சல் சபையினின்றும் எழுமேல் அதற்கெனத் தனிவிடை யிறுத்தலும், பேச்சை நிறுத்தலும் முறை

யன்று. பேச்சினிடையே சில முக்கிய வார்த்தைகளை ஊன்றிப் பேசுதலும் சிற்சிலபோது உணர்ச்சிபாவம் தோன்றப் பேசுதலும் சபையோர் கவனத்தை இலகுவில் கவரும் வழிகளாம். மற்றுமோர் சிறந்த வழி உண்டு. அது பேச்சாளரின் நாவன்மையையும், இலக்கியத் தேர்ச்சியையும் பொறுத்திருக்கும். சில சொற்களின் இடபேதத்தால், அதாவது பின்னால்வரும் வார்த்தைகளை முன்வைத்து அவற்றிற்கு முக்கியம் தருதலால் சபையோரின் கவனத்தைச் சடுதியில் கவர்தற்கியலும். "கண்டேன் சீதையை", "கண்டனன் வணங்கினன்", "முகந்தனர் கொடுத்தார்" எனப்படுபவை இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும். சீரிய நாவலர்களான உயர்திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, சி. என். அண்ணாத்துரையார் பேச்சுக்களில் அளவோடுகூடிய இத்தகைய சொற்சுவையைக் காணலாம். இது அளவுகடந்துவிடுமாயின் ஒருவர் பேச்சு நாடகமேடைப் பேச்சாகிவிடும். ஒரு பேச்சாளர் சபையின் முன்புறத்திலும் நடுவண் உள்ளோரையுமே பார்த்துப் பேசுதலைப் பின்னணியிலுள்ளோர் விரும்பார். ஆகலின், தொலைவிலும், பக்கத்திலும் வீற்றிருப்போர்மீது பேசுவோரின் நோக்கு ஒவ்வொருபோது செல்லுதல்வேண்டும். ஒரு மூலையில் சிலர் பேசி ஏதேனும் சந்தடி செய்வரேல், பேச்சாளர் பேசிபபடியே அன்னோரைச் சில விநாடிநேரம் குறிப்பாக நோக்குதல் மரபாம். அதுபோழ்து பேசுவதையும் சந்தடி செய்வதையும் அவர்கள் விடுப்பர். பேசுவோர்மீதும், பேச்சிலும் மீண்டும் தங்கள் கவனத்தைச் செலுத்துவர். "அங்கு இரைந்தால் நான் பேசப்போவதில்லை" எனக் கூறும் பேச்சாளர் சபையோர் அநுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதில்லை. சொற்போக்கும் கருத்துக்களும் உருசிகரமாயிருந்தால், சபையோர் செயலற்று, அசைவுமற்றுத் "தேனில் வீழ்ந்த ஈ" எனவும், "ஆனுயர் குழல்கேட்ட ஆனிரை" எனவும் திகழ்வரன்றோ? ஒரு நல்ல பேச்சாளர் பேசுங்கால் "சபையில் குண்டூசி வீழும் ஓசையைக் கேட்கலா"மென அப்பேச்சைச் சாதாரணமாகச் சிறப்பித்துக் கூறல் வழக்காம். கைதட்டுதலையும், ஆரவாரத்தையும், விடாநகைப்பையும் எழுப்பும் பேச்சை எப்பொழுதும் சிறந்ததெனக் கோடல் தவறும். ஒருவர் பேச்சை முடிக்குமுன் சபையில் கைதட்டல் எழுமேல் அப்பேச்சை அங்ஙனே முடித்துவிடுதல் நல்லது. ஒரு பேச்சைக் கேட்டிருந்த அவையோர் அப்பேச்சாளர் ஆசனத்தில் அமர்ந்தபின் இமைப்போழ்து தாழ்த்துச் சுய

நினைவுபெற்றுக் கைதட்ட புகுவரேல் அப்பேச்சு ஒரு சிறந்த மேடைப் பேச்செனக் கூறுப.

குரல் இனிமை

ஒரு சபையின் கவனத்தைக் கவர்தற்கு ஒருவர் பேசுங் குரலில் இனிமையும், வன்மையும் ஓரளவாதல் கலந்திருத்தல் சாலச் சிறப்புடைத்தாம். ஒரு பாடகருக்கு இனிமையான உச்சக் குரல் எத்துணை அவசியமோ அத்துணை ஒரு பேச்சாளருக்கும் இன்றியமையாததென்ப. சிலர் ஐந்து நிமிடம் பேசி அமருமுன் வியர்வை பெருகி அன்னோர் குரல் பலவாறு மாறி அருவருப்பைத் தருவதாகும். அன்னோர் எத்தகைய உயர்படிப்பாளிகளாயினும் பிரமுகர்களாயினும் அவர் பேச்சைச் சபையோர் அமைதியுடன் கேளார். இக்காலங்களில் "உட்காரலாம்", "போதும், நிறுத்தலாம்" எனும் கூச்சல்கள் சபையினின்றும் எழுவதைப் பலப்பல இடங்களில் கேட்டிருப்போம். இனிய குரலில் பேச்சுத்தோரணையுடனும், அர்த்தப்பொலிவுடனும் பெரும்பொழுது பேசவல்ல காலஞ்சென்ற மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் போன்ற மேதாவியரின் பேச்சைக் கேட்க மறுத்தவரும், இடைமறித்தவரும் உண்டோ? இனிய குரலற்ற பாடகர்கள் இன்னிசைத் துணைக்கருவிகளாலும், தாளத்தாலும் அக்குறைபாட்டைச் சபையில் ஓரோவழி மறைத்தற்கியலும். ஆயினும் ஒரு பேச்சாளர் சபையில் பேசுங்கால், தமது கடூரமான குரலை மறைப்பதற்கியலாது. எனவே, இனிய குரலை இயற்கையோடியைந்துபெறாத பேச்சாளர் தங்கள் குரலை உயர்த்தியும், தாழ்த்தியும் தனித்திருந்து பேசிப் பழகியபின் அதனைத் தக்க சுருதியில் நிறுத்தி, சபையோர் கைக்காதவாறு பேசுதலே முறையென்ப.

தீய பழக்கம்

ஒருவர் சபையில் பேசுங்கால், தமது தலையை நிமிர்த்தி காற்றுக் குழல்களும், குரல்வளையும் தாராளமாக வேலைசெய்யும்படி வைத்திருத்தல் வேண்டப்படுவதாம். தலைகுனிந்தும் உடல் வளைந்தும் பேசுவரேல் அக்குழல்கள் அருகி அவரது வார்த்தைகளின் ஓசைப்பொலிவு குன்றும். அதுபோழ்து சபையில் சற்று விலக்கமாயிருப்போர் அப் பேச்சைக் கேட்ப தியலாது. மேசைமீதுள்ளவற்றையும், முன் நாற்காலிகளிலுள்ள பிரமுகர்களையும்மட்டும் பார்த்துப் பேசிக்கொண்டிருத்தல் பேச்சுமுறையன்று. சிலர் ஊன்றிப் பேசுவதால் சபையின் கவனத்தைக் கவர்வதற்கியலும் என்பதை மறந்து, மேசைமீது அறைதலும்,

கைகளை முன்னும் பின்னுமாக ஓட்டுதலும் உண்டு. இவை முறை தவறானவைகளாம். பெரும் நாவலராக விளங்கிய *மகாகனம் கிளாட்ஸ்டன் மேசைமீது அறைந்தறைந்து பேசுதலைப் பிரதமமந்திரி யான டிஸ்ரலி என்பார் ஒருபோது இடித்துப் பரிகசித்தா ரென்பது சரித்திரம். ஆகலின் ஒரு பேச்சாளர் ஏதேனும் ஒரு தீய பழக்கத்தை ஆரம்பத்தே கைக்கொண்டால், அதனைச் சுலபத்தில் விட்டொழித்தற் கில்லை.

ஒரு சொற்பொழிவாளர் பேசுங்கால் சபையோர் கவனமிழந்து உறக்கங்கொண்டால், அது பேச்சாளரின் முழுக்குற்றமேயாம். மகா கனம் கிளாட்ஸ்டன் பார்லிமெண்டு மகாசபையில் பேரிரைச்சலிட்டு, மின்னி இடித்து வசைமாரியால் தாக்கியகாலை, பிரதமரான டிஸ்ரலி எனும் பீக்கன்ஸ் பீல்டு பிரபு உறக்கங்கொண்டார். 'இவண் உறங்கல் முறையோ'வென கிளாட்ஸ்டன் அவைத்தலைவரைக் கடாவினர். டிஸ்ரலி கண்விழித்து, 'தூக்கத்திற்கும் ஒருவர் கண்மூடி ஆழ்ந்து சிந் தனை செய்தற்கும் மிக்க வேற்றுமை யுண்'டெனச் சட்டென விடை யிறுத்தார். இங்கிலாந்துப் பாராளுமன்ற மேற்சபையைத் திறந்து வைத்த மூன்றாவது ஜியார்ஜ் மன்னர், தமது பேச்சு எப்படியிருந்த தென அருகிருந்த நிதிமந்திரியைக் கேட்டார். அப்பேச்சில் ஆழ்ந் திருந்த அவர், 'வெகு அழகாக இருந்த'தென உற்சாகமாக விடை யிறுத்தார். 'நான் அதைக் குறித்துக் களிப்படைகிறேன், ஏனெனில் நான் பேசியதில் ஒன்றுமில்லை' என்றார் அரசர். விளக்கமாகவும் இயற்கையாகவும் உண்மையாகவும் பேசும் ஒரு பேச்சாளர் தமது பேச்சு எவ்வாறிருந்ததென இழிந்தமுறையில் பிறரைக் கேட்டறிந்து கொள்ளத் தேவையில்லை. ஓரிடத்தே, தமிழ்மேடையொன்றில் இரண் டரைமணியளவு ஒரு சொற்பொழிவாளர் பேசிச் சபையோரை அலுக் கச்செய்து உறக்கத்திலாழ்த்தினர். வெயிலின் கொடுமையும், அவரது உணர்ச்சியற்ற பேச்சும் ஒன்றுசேர்ந்தது. சபை முடிந்தபின் தமது பேச்சு எவ்வாறிருந்ததெனத் தமது நண்பர் ஒருவரைக் கேட்டார். நீண்ட தாலாட்டுப் பேச்சினிடையே தாம் கண்ணயர்ந்துபோனதாக அந்நண்பர் பதிலிறுத்தார்! வேறொரு பேச்சாளர் சபையில் கம்பீர மாகப் பேச நினைந்து, "ஆகா, இது என்ன விந்தை!" எனக் குயில் போல் இசைத்தார். சபையோர் கைகொட்டி நகையாடி அது நாடக மேடையல்லவென அறிவுறுத்தினர். இஃதொன்றால், நாடக மேடைப்

---

* இப்பேச்சை 2-வது மலர்ச்சேர்க்கையில் காண்க.

பேச்சுக்கும், பொதுமேடைப் பேச்சுக்குமுள்ள அடிப்படைத் தத்துவத்தின் வேற்றுமை தெற்றென விளங்கும். அவ்வேற்றுமையை வார்த்தைகளால் அமைத்துக் கூறுதல் கடினமாம். நாடகம், ஒருவரைப் போல் நடிப்பதும் பேசுவது மாகும். மேடைப்பேச்சு அவ்வாறு பேசுவதல்ல ; இயற்கையோடியைந்து உணர்ந்து பேசுவதாகும். பொது மேடைகளில் ஒல்லும்வகை காலம், இடம், நோக்கம், மக்களியல்பு முதலியவற்றைக் கவனத்திலிறுத்திப் பேசுவோர், சபையோரை இமையாது விழித்திருக்கச்செய்து அன்னோர் முழு கவனத்தையும் கவர்தற் கியலும்.

---

8. பேசுமுபாயம்

சக்தியும் செயலும்

தேர்வுபெறும் மாணவர்கள் உயர்வகுப்புகட்கு ஒவ்வோர் ஆண்டும் மாற்றப்படுவர். மேடைப்பேச்சாளர் சில காலவரைக்குப் பின் அதுபோல் படிப்படியே உயர்த்தப்படுவதில்லை. அன்னோர் ஆரம்பந்தொட்டு இறுதிவரை ஒரோவழி சமநிலைச் சக்தி உடையராவர். பேசும் சக்தியை ஒரு பெரிய நீர்த் தேக்கத்திற்கு ஒப்பிடலாம். நீரைத் தேக்குதற்கு இன்றியமையாத பூமி திருத்தல், அணை கோலுதல், வடிகால் முதலியன அமைத்தலையொத்துப் பேச்சாளர் முதற்கண் திரண்ட நூலறிவையும் நல்ல பேச்சாளர், எழுத்தாளரின் நட்பையும் பெற்று, உலகப் பொது அறிவைத் தம்முள் நிரப்பி அந் நீர்த்தேக்கம்போல், நிலையாக நிற்றல்வேண்டும். கலையறிவு நிறைந்து, மனோசக்தி விசாலித்து, உள்ளக்கருத்துக்கள் பெருகி, அறிவனைத்தும் ஒருங்குதிரண்டு அலைமோதுறும்போது, நீர்த்தேக்கத்தின் வடிகால் வீழ்ச்சியைப்போல் ஒருவர் பேச்சு முயற்சியின்றிப் பெருந்தாரையாக வெளிப்படும். மனத்திடை அடைபட்டுத் தேங்கிக்கிடந்த நூலறிவும், கருத்துக்களும் பொதுமேடைப் பேச்சாக முதல்முதல் வெளிப்படுமேல் அவ்வாற்றல் மென்மேலும் பெரும் வீழ்ச்சியாகப் பிறங்குதல் இயல்பாம். வாய்ப்புக் கிட்டாவிடத்து இச்சக்தி சில மக்களிடையே சற்றுத் தேங்கிக்கிடப்பினும் அன்னோர் வாய்திறக்குங்கால் அது வீறுகொண்டு கரைபுரண்டோடத் தலைப்படும். சக்தியின் காரியம் செயலாகும். சக்தியின்றி எச்செயலும் உருக்கொள்வதில்லை. சபையில் சில நிமிட நேரமாதல்

ஒருவர் தமது முழுச் சக்தியைப் புகுத்தி வாய்திறந்து ஒருமுறை பேசி விடின், பின்னர் அவருக்குப் பேசுவதில் பேராவல் கனன்றெழும் என்பது மிகையன்று. நல்ல பேச்சாளராக விளங்க விரும்புவோர் முன்னர்க் கூறிய அறிவுத் தேக்கத்தோடு, சக்தி என்னும் பிறிதொரு அருந்துணைப் பொருளையும் தமது மனம் எனும் கரைக்குள் நிரப்பிவைத்திருத்தல் இன்றியமையாத கடனும்.

முற்கூறிய அறிவுத் தேக்கத்தில் திளைத்துப் பருகிய பெஞ்சமின் டிஸ்ரலி என்பார் தமது கன்னிப்பேச்சு, பார்லிமெண்டு மகாசபையில் படுதோல்வியுற்றதைக் குறித்து மனமாழ்கினர். அவர்து நண்பர்கள்-குறிப்பாக ஷீல் என்பார் அச்பேச்சின் சிறப்பை வியந்து மறுமுறை முழுச்சக்தியோடு முயற்சிசெய்யுமாறு அவரை வற்புறுத்தினர். அது போலவே இரண்டாம்முறை ஒரு விவாதத்திற்குப் பதிலிறுக்கையில், முதல்தடவை இடைமறித்தோரும் அஃது ஒரு சிறந்த பேச்செனப் பாராட்டினர். அப்பேச்சைக் கேட்டிருந்த ஓர் அங்கத்தினரான தளகர்த்தர் டிஸ்ரலியாருடன் கைகுலுக்கி, "சேணத்தில் ஊன்றி அமர்ந்தாயிற்று; இனி நீவிர் குதிரையைத் தட்டிவிடலாம்" எனப் புகழ்ந்தாராம். பின்னர் டிஸ்ரலியாரின் அறிவுத் தேக்கத்தினின்றும் பேச்சுப் பெருந்தாரைகள், நீர்வீழ்ச்சிகளைபொத்துப் பாய்ந்து, மக்கள் மனதைச் செழிப்பித்துப் பாராளுமன்ற மேடைப்பேச்சுக்கும் ஒரு தனிச்சிறப்பை உண்டாக்கினவென்பது சரித்திரம். சென்னையில் தமிழ்ப் பண்டிதர்கள் பேசக் குழுமிய ஒரு கூட்டத்தில் எதிர்பாராதபடி ஒரு நண்பர் அவைத்தலைமைக்குப் புகுத்தப்பெற்றார். அஃது ஒரு மாபெரும் பண்டிதர்கள் கூட்டம்! அந்நண்பர் பொது மேடைகளில் பேசியவரே அன்று. எனினும், அவர் முகவுரையாகப் பேசிய முதலிரு வாக்கியங்கள் பண்டிதர்களின் கைதட்டலைப் பெற்றது. முடிவுரையில் பேச்சுக் கருத்துக்கள் திரண்டு பெரும் வார்த்தைமழை யெனப் பொழிந்தன. பண்டிதர்களின் பேச்சுக்கள் எங்கேயோ மறைந்தன. இதன் இரகசியம் யாதெனக் கேட்டபோது அவர் கூறியது இதுவாம்: "என்னிடம் இத்துணைப் பேச்சுச் சரக்கு நிறைந்திருந்ததை இச்சபையில் நான் வாய்திறந்த பின்னரே அறிந்தேன்." இன்று அவர் ஒரு சீரிய மேடைத்தமிழ்ப் பேச்சாளராகத் திகழ்வதில் ஆச்சரியமில்லை.

பிழையற்ற பேச்சு

தமிழ் மொழியோ மிகப் படர்ந்தும் ஆழ்ந்தும் கிடக்கும் கடல். அம் மொழியின்கண்ணுள்ள இலக்கியங்களோ எண்ணிறந்தவை.

அவைகளனைத்தையும் ஒருவர் தமது ஆயுள்காலத்தில் ஐயந் திரிபறக் கற்றுக் கரைகாண்டற் கியலுங்கொல்? எனவே, தங்கள்மனத்திற்கியைந்த சில முக்கிய நூற்களையாதல் ஒல்லும்வகை கருத்தறிந்து வாசித்துணர் தல் வேண்டும். தமது ஆயுட்காலம்வரை ஒரே புத்தகத்தைப் பல்லாயிரந் தடவை படித்தின்புற்ற பெரியார்கள் யாண்டும் உளர். பிரபல நீதிபதியான காலஞ்சென்ற சர். டி. முத்துசுவாமி அய்யர், 'கோல்டுசிமித்' எனும் ஆங்கில நாவலரின் "விக்கார் ஆப் வேக்பீல்டு" என்னும் புத்தகமொன்றையே தமது ஆயுள்கால முழுதும் படித்தனரென அவரது சரிதை கூறும். கம்பராமாயணத்தில் தோய்ந்து நின்றோர் எத்துணையோ பேர் இந்நாட்டில் உளர். சுவாமி தாயுமானூர், இராமலிங்க வள்ளலார் போன்ற பெரியார் நூற்களில் படிந்துகிடப்போர் இந்நாட்டில் எண்ணிறந்து வதிகின்றனரன்றோ? ஒருவர் ஓர் இலக்கியத்தின் துணை வலியால் இலக்கணப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பழகுதலை நித்தலும் கைக்கொள்ளல் வேண்டப்படுவ தொன்றும். ஒரு சிறந்த சொற்பொழிவின் வாக்கியங்களைத் தனித்தனியே நோக்கின், அவை இலக்கண நெறியும் சொற்பொலிவும் பெற்று எழுதும் நடைபோல் திகழ்தல் முறையாம். உயர்திரு திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் பேச்சுநடை இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். ஆங்கில மொழியில் ஒருவர் ஓர் இலக்கணத்தவறு இழைத்தாலும் அவர் அரசியல் அவைவலுக்கு அருகரல்லரெனத் தள்ளப்படுவார். அங்ஙனமாக, ஒருவர் பேசுந்தமிழிலும் எழுதுந்தமிழிலும் இலக்கணப்பிழைகள் பல இருப்பின் அன்னோரைப் பேச்சாளர், எழுத்தாளரெனக் கோடல் தவறும்.

இயற்கையான பேச்சு.

ஒருவர் பேச்சில் எதுகை, மோனைபோன்ற அலங்காரங்கள் வருவிக்கப்படாமலும், முயன்று உண்டாக்கப்படாமலும், இயற்கையாக அமைந்திருத்தல் சாலச் சிறப்புடைத்தாம். அப்படிக்கின்றி "அவனி புகழ் ஆடுதுறையில் அண்டர்கோனும் அவதரித்த சண்டப் பிரசண்ட புகழ் கண்ட கோதண்டராமன்" எனும் சொற்றொடர் போல்வன மிக இகழத் தக்கவைகளேயாம். இயற்கையோடு எதுகை, மோனைகளிழையும் பேச்சுக்கு, கம்பரை மறவா உம்பர் உயர்திரு ஆர்.பி. சேதுப்பிள்ளையவர்களும் நாவலர் சி. என். அண்ணாதுரையாரும் இத்தமிழ் நாட்டில் மேதக்க எடுத்துக்காட்டாவர். முன்னவரின் அத்தகைய சிறந்த பேச்சொன்றில் ஆழ்வோம். அது நாவுக்கும் செவிக்கும் ஒருங்கே

இனிமையளிப்பதாம். "ஆங்கிலமாதுகளிடம் புரிந்த கல்விச்சாலைகளில் தமிழ்த்தாய் நிலையிழந்து, தலைகவிழ்ந்து, ஒடுங்கி ஒதுங்கி நிற்பாளாயினள். தமிழ் ஆசிரியர்களின் உள்ளம் இடிந்தது; ஊக்கம் மடிந்தது; புகைபடிந்த ஓவியம்போல் புலவர் மணிகள் பொலிவிழந்தார்கள். தமிழ் மாணவர்களும் தமிழை எள்ளி நகையாடத் தொடங்கினர். அல்லும் பகலும் ஆங்கிலத்தைக் கற்று, ஆங்கிலேயரது நடையுடைகளில் மோகமுற்றுத் தாய்மொழியைப் பழித்தும் இழித்தும் பேசுவாராயினர்" என்றும், "தமிழ்நாடு தன்னரசு பெறும் - தமிழரசு பெறும் என்று எண்ணும்பொழுது தமிழர் உள்ளம் தழைக்கின்றது; தொண்டர் உள்ளம் துடிக்கின்றது. தமிழ்த்தாய் முன்னாளில் எய்தியிருந்த ஏற்றமும் தேற்றமும் அலை அலையாக மனத்திலே எழுகின்றன" என்றும் தமிழாசிரியர் இரண்டாவது மாகாண மாநாட்டில் எதுகை மோனைகளிழையக் கருத்துக் கோவை மிளிரப் பேசி மேடைத்தமிழ்ப் பேச்சாளருக்கு வழி வகுத்திருத்தல் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஒரு பேச்சாளர் பேசும் வாக்கியங்கள் சிறியவைகளாக விருப்பின் அவை நன்கு விளங்குவனவாம். அவை சபையோர் மனதில் பதியக்கூடியவைகளாகவும் இருக்கும். பேசும் வாக்கியங்களும் வாக்கியத் தொடர்களும் இனிய சொல்லணி பெற்றவைகளாகவும் அமையும். அநாவசியமாக வாக்கியங்களை அளவுகடந்து, குறியீடின்றி நீட்டிப் பேசுதல் நாவன்மை எனக் கோடல் தவறும். ஆயினும் ஆரம்பப் பேச்சாளரின் பேச்சு நீண்ட வாக்கியத் தொடர்களாகச் சின்னாள் இருப்பதியல்பாம். ஒருவர் கருத்துக்களைச் சிறு வாக்கியங்களால் சுருங்கச் சொல்லி விளக்குமுறை மேடைத்தமிழ்ப்பேச்சுக்கு சாலப்பொருந்தும். நாவலர்கோன் மகாகனம் கிளாட்ஸ்டனின் வார்த்தைகள் கடினமாகவும், வாக்கியத்தொடர்கள் மிக மிக நீண்டவைகளாகவும் பிணைந்துகொண்டு இருப்பனவாம். மேலும், அவர் இரைந்தும் விரைந்தும் பேசுங்கால் அது கேட்போர் மனத்தையும் மூளையையும் குழப்பிவிடும். அவரது இணையற்ற வாக்குத் தோரணையாலும், கல்வியறிவாலும், இனிய சொற்போக்காலும் இக்குறைபாடுகளை ஓரோவழி மறைத்துவிட்டன ரென்ப. ஆரம்பப் பேச்சாளர் இச்சுழல்களில் சிக்காது ஒல்லும்வகை வாக்கியங்களைச் சின்னஞ் சிறியவையாகவும் கருத்து நிறைந்தவையாகவும் அமைத்துப் பேசுதல் மிக வேண்டப்படுவதாம். பேசு முறையும் இயற்கையோடியைந் திருத்தல் மிக அவசியமாம். சைக்கிள், மோட்டார் வண்டி உருளைகட்குக் காற்றடித்து அக்குழல்களைப் பெருக்கச் செய்தல் இயல்பு. அது

போல் ஒருவர் பேச்சு, வெகு முயற்சியோடு காற்றடித்து உயர்த்தியது போல் சபையோருக்குத் தோன்றலாகா தென்க.

ஆளும் சொற்கள்

ஆரம்பப் பேச்சாளர் பேசுங்கால் தனித் தமிழ்ப் பதங்களைக் காண மாட்டாது சிலவேளை தத்தளிப்பர். சிற்சில ஆங்கில மொழிகட்குத் தமிழ்ப்பதங்கள் கிடைப்ப தருமை. ஓர் அறையின் வெளிப்புறத்தே "பிரைவேட்" எனும் ஓரே ஆங்கிலமொழி வரைந்த சீட்டு நாட்டியிருந்தால் அதன்கருத்துக்க ளனைத்தும் கொண்ட தமிழ்ப் பிரதி மொழியொன்றை ஆண்டே நாட்டமுடியுங்கொல்? ஆரம்பப் பேச்சாளர் தமது பேச்சினிடைப் புகுத்தும் தனித்தமிழ்ப் பதங்களைப் பேசுமுன் முற்கூட்டி யோசித்து மும்முறை எழுதிப்பார்த்தல் நலமாகும். சில * ஆங்கிலப் பதங்கட்குத் தமிழ்ப் பிரதி மொழிகள் சமயத்திற் குதவா விடில் பிறமொழிகளில் பாயாது ஆங்கிலப் பதத்தையே உபயோகித்தல் குற்றமல்ல. திசைச் சொற்கள் இவ்வாறு விரவி வருவதற்குத் தமிழ் இலக்கணம் இடம் தருவதாம். இந்நாள் நமது நாட்டு வழக்கிலுள்ள அரசியல்மொழிக்குத் தலையாய இடந்தருதல் மரபேயாம். சில ஆங்கிலப் பதங்கட்கு ஒரு சொற்கொண்ட பிரதி மொழிகளைக் காணமாட்டாது புத்தம் புதிய மொழிகளைச் சிலர் உண்டாக்கித் தமது பேச்சிலும் எழுத்திலும் துணிந்து நுழைப்பர். 'இரயில்' வண்டிக்குப் பதிலாக விளங் கற்கரிய 'இரும்பு நெடு வண்டித்தொடர்' என்பர். 'டிக்கட்' என்றே சுலபமாகக் கூறாது, 'பிரயாணச்சீட்டு', 'வழிப்பயணச்சீட்டு', 'தலைச் சீட்டு' எனத் தாறுமாறாகக் கூறுவர். சிலர் 'டம்ளர்' என்றே எளிதிற் சொல்வதை விடுத்து, 'குடிநீர்க் குவளை', 'தாக பாத்திரம்' எனச் சந்தேக விபரீதமெழக் கூறித் தமது பேச்சின் உருசியைக் குலைப்பர். தமிழ்மொழிக்கு, இல்லாத ஒரு குற்றத்தையும் பலர் இவ்வழி கற்பித்தல் கண்கூடாம்.

எளிய நடை

தமிழ் இலக்கிய இலக்கண வல்லோர் சிலர் பிறர் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் குற்றங் காண்பதைத் தமது வேலையாகக்கொள்வர். ஒரு பேச்சாளர் ஒல்லும்வகை வழுவின்றிப் பேசுதலை வரவேற்றல் பெருந்தகையா மென்ப. பேச்சாளர் தமிழ்மொழியின் இனி

* மலர்ச்சேர்க்கை. 5. பார்க்க.

மையை மறந்து அதற்கு அழகு செய்தலை விடுத்துக் கடுமையும் நெருடு மான மொழிகொண்டு சபையோர் அறிவுக்கு மீறிப் பேசுதல் பெருங் குற்றமாம். பல்லாண்டுகட்குமுன், பன்மொழி வல்லுநரான ஒரு பேராசிரியர் அவைத் தலைமையில் யாழ்ப்பாண நாவலர் ஒருவர் பெரு நேரம் தங்கு தடையின்றிப் பல்லுடையும் கொடுந்தமிழில் ஓரிடத்தே பேசினார். தலைவர் முடிவுரையில் நாவலர் பேச்சுத் தமக்குப் புலனாகாத தால் தம் கருத்தைக் கிளந்துகூறக் கூடவில்லையெனக் கூறிச் சபையை முடித்தார். அதனால் அந்நாவலரின் கருத்து, பாவம்! நிறைவேறாது அக்கூட்டம் பயனற்ற தாயிற்று.

தமிழ்மொழி ஒன்றிலேயே தோய்ந்த சிலர், வசனத்திற்கும் பாட் டுக்கும் நடுத்தரமாகப் பேசப் பழகி, அதனைப் பொதுமேடைகளில் உபயோகிப்பர். சிலர் இரு கண்களையும் இறுக மூடி ஒரே மூச்சாகப் பெரும்பொழுது பேசித் தமது பேச்சுக்கு முற்றுப்புள்ளியிட்டுக் கண் திறப்பர். அது போழ்து சபை வெற்றிடமாகவும், உறக்கங்கொண்டு மிருக்கும். சில பேச்சாளர் திருவாசகம், திருக்குறள், திருவாய்மொழி ஆகிய ஆன்றோர் நூல்களினின்றும் மேற்கோள்களைக் கொட்டுவர். சிலர் புராண இதிகாசங்களினின்றும் பலப்பல கதைகளைக் கிளந்து கூறுவர். மற்றும் சிலர் வசன நடையின்றிப் பாடிப்பாடியே தமது பேச்சை முடிவு கட்டுவர். மேற்கோள்களைச் சபையில் ஒப்புவிக்காது, கருத்துக்களை வசனமாகச் சொல்லக் கேட்கப்படின், பேசமுடியாது சிலர் அமர்ந்து விடுவர்; அன்றிச் சபையோரைச் சினந்து வெளிக்கிளம்பியும் விடுவர். ஆகலின், ஒரு ஆரம்பப் பேச்சாளர் இப்படுகுழிகளில் இறங்கி இடர்ப் படாது தற்காத்துக்கொள்ளலே மிக்க ஏற்புடைத்தாம்.

ஆரம்பப் பேச்சாளர், நாம் செய்வதென்னை?; நமது தோற்றம் யாது?; நாம் பேசுவதென்னை?; நாம் எவ்வழிப் பேசுகிறோம்? எனும் நான்கு முக்கிய கூறுகளில், பேசுமுன் தமது கவனத்தைச் செலுத்தல் இன்றியமையாததாம். தினசரி உலகவாழ்க்கையிலும் அவரவர் வாய்ச் சொற்களினால் மக்கள் அளவிட் டறியப்படுதல் கண்கூடு. அன்னோர் படிப்பினளவும், குடும்பப்பழக்க வழக்கங்களும், சமூக நிலையும் அவை களினின்றும் தெற்றெனப் புலப்படும். ஒருவர் பிறப்புக்கும், பேச்சின் உயர்வு தாழ்வுக்கும் எவ்வித இணைப்பு மில்லையென்பதை நினைவிற் கொண்டு குலத்திற்கேற்ற பேச்செனக் குற்றமான தமிழைக் கைக் கொள்ளல் கூடாதென்ப.

மிகைபடு பேச்சு

நல்ல ஆங்கிலப்பேச்சு முறையைப் பின்பற்றி மேடைத் தமிழை உபயோகிப்பரேல் ஒருவர் மேற்கூறிய குற்றங்களில் படுவதற்கில்லை. சுருங்கச் சொல்லல்,விளங்கவைத்தல் என்பன ஆங்கிலப்பேச்சின் முழுப் போக்காகும். வார்த்தைகளை வீணில் கொட்டாது சுருக்கியும் எளிதில் விளங்கும் சொற்களைத்தேர்ந்தும் பேசுதல் அம்மொழியின் தனிச் சிறப்பாம். மிகைபடக் கூறல், அளவுகடந்து புகழல் ஆகிய கைக்கும் கூற்றுக்கள் ஆங்கிலமொழியில் இல்லை. இத்தகைய கூற்றுக்களை மேலைநாட்டார் இலக்கியங்களிலும் பேச்சுக்களிலும் காண்டல் அருமையாம். இனிமையான நந்தமிழ் கற்பனை, அலங்காரம், விசித்திரம் ஆகியவற்றிற்கு எண்ணியவாறு இடந்தருதலால், வேண்டுமாயின், ஒருவரை வானளாவப் போற்றல் கூடும். இந்திரன், சந்திரன், இமையோன், வள்ளல் என உவமித்துக் கூறலாம். அதுவேயன்றி ஒருவரைத் தூற்றவும் தூற்றலாம். கற்பனைகளிலும் இறங்கி முழங்கலாம். ஓர் உதாரணம் ஈங்குச் சாலும். ஒரு தமிழ்ப் பேச்சாளர் ‘நட்பின் மாண்பு’ எனும் பொருள் பற்றிப் பேசுங்கால், “அடுப்பேற்றிய பால், நீராகிய நண்பன் பிரிதற்கு ஆற்றாது கொதியுண்டு பொங்கி வழியுங்கால், சிறிது நீர் தெளித்தவுடன், பிரிந்த தோழன் மீண்டும் வந்தானென மகிழ்ந்து கொதிப்பு அடங்கல்போல்” என்ற கற்பனையைப் பல கிளைக் கதைகளோடு விரித்தார். புராண இதிகாசத் தேர்ச்சியாலுறும் இம் மிகைபடு கூற்றுக்களை மேடைத் தமிழில் புகுத்தாது அறவே நீக்குதல் வேண்டப்படுவதொன்றும். சில வழக்கறிஞர், வைத்திய நிபுணர், யாந்திரிகர், பாடசாலை ஆசிரியர் ஆகியோர் பொதுமேடைகளில் மிதமிஞ்சிய தொழிற் சங்கேதப் பதங்களோடு பேசுதல் முறையெனக் கோடல் தவறும்.

காலவரை கடத்தல்

பொதுக் கூட்டங்களில் மக்கட்கு அலுப்பும், வெறுப்பும், உறக்கமும் ஏற்படும் அளவு பேச்சாளர் மணிக்கணக்கில் பேசுதலும், “இதோ முடித்துவிடுகிறேன்”, “இன்னும் இரண்டே வார்த்தைகள்” என்று கூறிக்கொண்டே கால வரையின்றிப் பேசிக்கொண்டிருத்தலும் மிக்க அருவருக்கத்தக்க செயலெனக. “காலமோ மதிப்புக் கடந்தது ; மீண்டும் வாராதது” எனும் உண்மையை ஒரு பேச்சாளர் கருத்தில் வைத்துக் குறித்த காலவரையில் தமது பேச்சை முடித்தல் வேண்டும். அவைத் தலைவர் கட்டளை யிட்டாலும், மணியோசை காட்டினும்

உடனே தமது பேச்சை முடித்துத் தமதிடத்தில் ஒரு பேச்சாளர் அமர்தலே நல்லியல்பாம். தலைவர் மணியடிக்கும் வரைப் பேசுவது சிறந்த பேச்சாளர் இலக்கணமன்று. பேச்சாளர், சபையோர் முகக் குறிப்பால் தமது பேச்சு சுவைக்கப்படுவதறிந்தே மேலும்மேலும் பேசுதல்வேண்டும். அன்றி வெறுப்புக் குறிகண்டால் தமது பேச்சை வேறு வழி புகுத்திப் பார்த்தல் வேண்டும். இன்றேல், பேச்சைச் சுருக்கி முடித்து விடுதலே நல்லது. நாவன்மையாளர் சமயத்திற் கேற்றவாறு தமது சொற்பொழிவை நீட்டவும் குறுக்கவும் சபையை மகிழ்விக்கவும் ஆற்றல் பெற்றவராவர். சென்னை சௌக்கார் பேட்டையிலுள்ள ஒரு பொது மண்டபத்தே மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் ஒருபோது சுமார் ஒன்றரை மணியளவு பேசினர். வெளியில் மின்னி இடித்துக் கன மழை சொரிந்தது. சபையோர் கலையவில்லை. மகாகனம் சாஸ்திரிகள் அம்மழை யடங்கும்வரைத் தமது பேச்சின் தொடர்ச்சியாக மேலும் ஒன்றரை மணி நேரம் பேசினர். சபையோர் வெறுப்பின்றி அதனை நன்கு வரவேற்றனர். சில நாவலரின் ஆரம்பச் சொற்களின் அளவு கொண்டு பேசுங் காலவரையை முற்கூட்டி அறுதியிடலாம். குரல் பேதத்தால் அவர் பேச்சு எப்பொழுது முடியுமென்பதையும் கண்டறியலாம். ஆகலின் நயம்படப் பேசிச் சபையை மகிழ்விப்பதற்கு இன்றியமையாத சீரிய உபாயங்களில் சிலவாதல் மேடைப்பேச்சாளர் கைக்கொண்டு நற்பயனெய்தல் வேண்டும். இக்கருத்தை மேலும் விளக்கு முகத்தான், ஒரு நற்குறிப்புத் தருதல் ஈண்டைக்கு மிகை பட்டதாகாது. மேற்றிசை நாவலரான ஆர்தர் எட்வர்ட் பிலிப்ஸ் என்பார், "பேச வேண்டுமானல் ஏதேனும் ஒன்றைச் சொல்லித் தொலைத்தால் போகிறது என்ற தப்பிதமான மனப்பான்மை மிக இழிந்த தாம். அப்படிப் பேசுதல் மனிதவர்க்கத்தின் அறிவு ஏற்றுக்கொள்ளத் தகாததாயின் அது காற்றோடு பறக்கும் இலவம் பஞ்சுக்குச் சமான மாகும். தற்கால நாகரிக வாழ்வில், ஏதேனும் ஒன்றைச் சொல்லு வதில் ஒரு பேச்சாளர் அதை எப்படிச் சொன்னல் உருசிகரமாக விருக்குமென்பதைக் கற்றுக் கொள்ளலே அறிவுடைமையாகும். உலகின்கண்ணுள்ள நல்ல பேச்சாளர் ஏதேனும் ஒன்றைச் சொல்லக் கற்றதுடன், எத்துணை அழகு படுத்தி நயம்படச் சொல்ல வேண்டுமென் பதையும் உணர்ந்தே பேசியுள்ளார் என்பதற்கு, சாத்தாம், வெப்ஸ்டர், பீச்சர் முதலியோரினும் வேறு சான்று வேண்டுங்கொல்?" என அறிவுறுத்துகின்றார்.

9. சொற்போக்கு அல்லது சொற்சுவை

உயிர்நாடி

தந்தி, தபால் ஆகியவற்றைச் சேவகர்கள் முகவரியாளருக்கு நேர் முகமாகக் கொடுத்தல் போல் தமது பேச்சை ஒரு பேச்சாளர் சபையோருக்கு அவ்வாறே கொடுத்தல் முறையாம். ஒரு நண்பர்மாட்டு நாம் உரையாடுங்கால் அவர் முகம் நோக்கிப் பேசுதலையொத்து ஒரு சபையிலும் அங்ஙனமே பேசுதல் வேண்டுமென்பது அதன் கருத்தாம். யாதேனும் ஒரு விடையை எதிர்நோக்கி நண்பர்களிடம் நாம் பேசுதல் போல், சபையினின்றும் விடையை எதிர்பார்த்தவாறு ஒரு பேச்சாளர் பேசுதல் வேண்டும் என்பதும் இதிலடங்கும். ஒரு சபை எனப்படுவது பல நண்பர்கள் குழுமியுள்ள இடமேயாம். அங்ஙனமாயின், அக் கூட்டத்தில் ஒருவர் தமது கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லத் தயக்கம் எற்றுக்கு? சொற்பொழிவாங்கிய ஒரு பேச்சில் வரும் வார்த்தைகளும் கருத்துக்களும் சிறந்து விளங்குதல் போதிய தன்றும். அப் பேச்சு, சொற்போக்கு அல்லது சொற்சுவை எனும் மணத்தைச் சிறிதளவாதல் பெற்று உயிர் நாடியுடன் விளங்கல் வேண்டும். அவ்வுயிர் நாடியை ஒருவர் பேச்சில் புகுத்தற்கு என்செய்தல் வேண்டுமெனச் சற்று ஆராய்தல் ஈண்டைக் கேற்புடைத்தாம்.

சுவை வேண்டும்

நமது உண்டிகளும், பானங்களும் சுவை மணம் பெருகலால் உயர்வாகவும், அருகலால் தாழ்வாகவும் கருதப்படுவனவாம். உணவுப் பொருள்களினிடத்து எவ்வித வேறுபாடும் இல்லை. எனினும் அவற்றைப் பலப்பலக் கூட்டுறவுடன் சமைத் தளித்தலால் அவற்றின் சுவையும் மணமும் உயர்ந்து நன்கு சுவைக்கப் பெறும். அவ்வாறே சொற்சுவையும் மணமும் விரவிய பேச்சுக்கள் மக்களால் விரைந்தேற்கப்படுமென்ப. சுவையும் மணமும் கலந்த உணவைக் குளிர்ந்த முகத்துடன் பறிமாறுங்கால், மலர்ந்தமுகங் காட்டி மக்கள் உண்டுகளிப்பர். அஃதே போன்று சுவையும் மணமும்பெற்ற பேச்சைச் சொற்போக்கு நயத்துடன் ஒருவர் அளிப்பரேல், சபையோர் அதனை மகிழ்ந்தேற்பதில் ஐயமுண்டோ? ஒருவர் பேச்சு எத்துணைச் சிறக்க விருப்பினும் சொற்சுவையில்லையெனின் அது, சுவையும் மணமுமற்ற உணவை நிகர்ப்ப தொன்றும்.

பல உதாரணங்கள் எற்றுக்கு? ஒரே மரத்துதித்த மாங்காயைப் புளிப்பென எள்ளும் மக்கள் அதன் தீஞ்சுவைக் கனியை உண்டு களிக்

கின்றனரன்றோ? அதுபோலவே ஒரே பேச்சாளரிடமிருந்து வெளிப்படும் வார்த்தைகள் கைக்காது சபையோர் மகிழ்ந்து ஏற்குமாறு சுவையோடிருத்தல் வேண்டு மென்க.

பல சுவை

இசைக்குப் பலசுவை யுணர்வுகள் உள்ளனபோல் பொதுமேடைப் பேச்சுக்கும் பலதிறப்பட்ட சுவையுணர்வுகள் உண்டு. நாவன்மை கொண்ட பெரியார்கள் சிலவேளை ஒரு சபையைப் பெருநகைப்பிற்குள்ளாக்குவர். வங்கப் பஞ்சம்போன்ற நிகழ்ச்சிகளைச் சித்தரித்துச் சபையோரைக் கண்ணீரில் ஆழ்த்துவர். லார்டு கர்ஸன் காலத்திய வங்க நாட்டுப் பிரிவினைக் கொடுமையால், பாபு, விபினசந்திரபாலர் போன்ற நாவலர்கள் தோன்றி மக்கட்கு எத்துணை வீராவேச முண்டாக்கினர்! ஷேக்ஸ்பியர் எழுதிய ஜூலியஸ் சீஸர் நாடகத்தில் கண்ட மார்க் ஆண்டனியின் சோகச் சொற்பொழிவு ரோமாபுரியைச் சீர்குலைத்ததன்றோ? காலஞ்சென்ற பண்டித மதன்மோகன மாளவியாவின் இனிய சொற்போக்கு, காசி இந்து சர்வகலாசாலையை இந்நாள் கண்டதன்றோ? எனவே, சுவையுணர்வுகொண்ட மேடைப்பேச்சால் வெற்றிகாணுததொன்று இவ்வுலகில் இல்லையென்பது ஊன்றிப் பெறப்படும் உண்மையாம்.

பொதுவாக, ஒரு புத்தகத்தை வாசிக்குங்கால் அதில் செறிந்துள்ள கருத்துக்களின் உயர்வு தாழ்வு, யோசிக்கும் அளவிற்கேற்ப, சாவதானமாக ஒருவருக்குப் புலனுவதாம். ஆயினும், ஒரு பேச்சின் கருத்துக்கள் அங்ஙனே நன்கு விளங்கும் இயல்பு கொண்டனவாம். ஒருவர் குதூகலமாகப் பேசினுல் அப்பேச்சு சபைக்கும் அதே உணர்வைத் தரும். துக்கத்துடனும் வெறுப்புடனும் பேசினுல், அப்பேச்சு சபையோருக்கும் அதே உணர்ச்சிகளைக் கொடுக்கவல்லதாம். புத்தகங்கட்கும் மேடைப் பேச்சுக்குமுள்ள பெரும் வேற்றுமை இவையாமென்ப. ஒரு குதிரைக்குடையோன் அதனை அன்புடன் தடவிப் பேசும்போது அது தனது மனக் கிளர்ச்சியைக் கனைத்துக் காட்டும். கடிந்து பேசின் செவிகளை நிமிர்த்தித் தலையை ஆட்டித் தனது கோப உணர்ச்சியைக் காட்டும். மிருக வர்க்கத்தினிடையே காணப்படும் இக்குண வேற்றுமையை ஆறறிவு படைத்த மக்கள்மாட்டுக் காண்டலில் ஆச்சரியமுண்டோ?

வசையிலும் சுவை

வசைமொழி வழங்கலிலும் சொற்சுவையை ஓரளவு புகுத்தற்கியலும் என்பது உலகாநுபவமாம். மேடையில் சொற்சுவையோடு

இனியமுகங் காட்டிப் பேசப்படும் வசைமொழிகளும் சபையோரால் நகைமுகங் காட்டி இனிது ஏற்கப்படுவதைப் பல மேடைகளில் காண்போம். ஆயினும் அவை அளவுக்கு மீறுமாயின் நஞ்சாகும். ஈங்கு வைணவ சம்பிரதாயத்தையொட்டிய கதையொன்று நினைவுக்கு வருகின்றது. அஃது ஈண்டைக்குச் சாலப்பொருந்தியது. இரு வைண வர்கள் சந்தித்தபோது மனவேற்றுமைப் பட்டார்கள். அவர்களில் ஒரு வர் மற்றவரை "அயோக்கியத் திருமேனி" என்றழைத்தார். மற்றவர் அவரைச் சாந்தமாக நோக்கி, "தேவரீர் என்னிலும் எண்மடங்கு அதி கம்" எனப் புன்முறுவலோடு கூறினர்! மற்றுமொரு பெரியார், ஒருவ ரைக் குரங்கு என்றழைப்பதற்குப் பதிலாக, "இராமபிரானின் பிரதம பக்தர்" என்று மரியாதை மொழி தந்து பேசினர்! இவற்றால் வசை மொழியில் இறங்குவதாயினும் அதை ஒருவர் பிறர்மனம் நோகாமல் மரியாதையாகப் புகல்வதற் கியலுமென்பது நனிவிளங்கும். பொதுவாக வசைபாடுதல் பொதுமேடைக்கு உகந்ததன்று. அவ்விதம் பேசும் கட்டாயம் ஏற்படுமானல், ஒரு பேச்சாளர் மரியாதை வரம்பினின்று சொற்சுவை ததும்பப் பேசுதலே முறையாம்.

இனிய பேச்சை அடைய

இனிய சொற்போக்கை அடைய ஆசிப்போர் மாறு குரலில் பேசாது இயற்கைக் குரலில் பேசுதல் வேண்டப்படுவதாம். மேடையில் குரலை அநாவசியமாகக் குறைத்தும் மிகைப்படுத்தியும் ஒருவர் பேசினல், இயற்கைக் குரலைக் கேட்ட அவர் நண்பர்கட்கும், பேச்சில் கவனம் செல்லாதவாறு திகைப்பை உண்டாக்கும். எனவே, இயற்கைக் குரலோசையால் ஒருவர் சொற்போக்கின் நயம் நன்கு ரசிக்கப்படுவதாம். ஆரம்பந்தொட்டு இறுதிவரை ஒரே படித்தரமான குரலில் சபைகளில் பேசுதல் சோபிப்பதில்லை. முக்கிய சொற்களைச் சற்று ஊன்றிப் பேசு தலும் சிற்சில வாக்கியங்களையும், வாக்கியத் தொடர்களையும் படிப் படியே உயர்த்திப் பேசுதலும் இனிய சொற்போக்கின் அங்கங்களாம். ஒரு பேச்சில் அங்ஙனம் ஊன்றிப் பேசப்படுவனவற்றை வரிசைக்கிரமத் தில் எழுதிப்பார்த்தால் அவை அம்முழுப்பேச்சின் கருத்துக்களை நன்கு விளக்கும் ஒரு சிறு பேச்சாக அமையினும் அமையும். இதற்கு ஓர் உதாரணம் ஈங்கே தருதல் சாலும். சென்னையில் நிகழ்ந்த முதல் தமிழிசை மாநாட்டைத் திறந்து வைத்த பேருரையில் பல இடங் களில் காலஞ்சென்ற கனம் டாக்டர் ராஜா சர். அண்ணமலைச் செட்டி



கனம் டாக்டர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்

யார் சிற்சில வாக்கியங்களை ஊன்றிப் பேசினார். *அவற்றை ஒழுங்கு முறைவைப்பில் நோக்கின் கீழ்க்கண்ட ஒரு சிறு பேச்சு அமைவதாகும்: "தமிழிசை புதிதல்ல. தமிழிசை இயக்கம் படையெடுப்புமல்ல. தமிழிசைச் செல்வமே இந்திய சங்கீதத்திற்குத் தாயூற்றாக இருந்ததென்று தக்க புலவர் ஆராய்ந்து சொல்லுகின்றனர். இனித் தமிழிசையைப் போற்றுவோம். அதிவிரைவில் தமிழிசைக்கலை உச்சநிலையில் ஓங்கி விளங்கப்போகின்றது. தமிழிசை இயக்கம் தூய கலை இயக்கமே. தமிழிசை இயக்கம் அரசியல் சூழ்ச்சியல்ல வென்பதை அழுத்தமாகச் சொல்லுகிறேன். இசை எவர் பிராசுமல்ல. தமிழிசை தமிழரின் பொதுச்செல்வம். அதைப் பயிலவும், பாடவும் வல்லவருக்கெல்லாம் அது பொதுவாகும். இசைக்கலையால் நமது நாடு முழுதும் ஒன்றுபட இடமுண்டு. தமிழர் அனைவரும் கலைக்கோயிலில் அன்புமயமாக விளங்கும் நாளே தமிழர் நன்னாள். அந்நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். நம் தாய்மொழியாகிய தமிழில் இசைக்கலையை ஆதரித்துப் போற்றுவோமாக!" கனம் செட்டிநாட்டரசர் கண்ட இவ்வழி தமிழுலகிற்கும், தமிழுக்கும், தமிழ்ப்பேச்சுக்குமான ஒரு நூதன முறையாம். இவ்வழியை மேலும் வளர்த்தல் தமிழ்ப்பேச்சாளரின் தலைசிறந்த கடனும்.

ஒரு சபையில் நன்றாகப் பேச நினைந்து தமது பேச்சை ஒருவர் உச்சக்குரலில் துவக்கினால், அச்சொற்போக்கு வரவரக் குன்றிச் சபைக்கு விளங்குதல் கடினமாகும். அக்காலை அப்பேச்சாளர் தமது வார்த்தைகளைத் திருத்தமாக உச்சரிக்க இயலாது. ஊன்றிப் பேச வேண்டிய கருத்துக்களை அழுத்தமாகப் பேசாது ஈனக்குரலில் பேச நேரிடும். பேச்சு மேடைகளில் இந்நாள் ஒலிபரப்புக் கருவிகளும் ஒலிபெருக்கிகளும் நாட்டப்பெறுவதால் ஒருவர் இயற்கைக் குரலில் பேசுவதே சாலும். ஏறுதல், இறங்குதல், சமனிசை ஆகிய சங்கீத எடுப்புக்களைப் போன்ற மூன்று நிலைகள் நல்ல சொற்போக்குக்கும் உண்டு. இனிய சொற்போக்கென்பது இலக்கியத் தேர்ச்சி மிகுதியாலும், சொற்பொலிவாலும், பழக்க முதிர்ச்சியாலும் ஒரு பேச்சாளர் மனவூற்றினின்றும் பீறிட்டுப் பெருந்தாரையாக வெளிப்படும் பேச்சாம்.

எச்சரிக்கை

ஒரு முக்கியக் கருத்தைச் சபையோர் மனதில் உறுத்த விரும்பின், அக்கருத்தை வெளியிட்டுக்கொண்டே சபையோரைச் சற்றுக் குறிப்

---

*அவை அவரது திறப்புரையில் தடித்த எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளன.

பாக நோக்குதல் முறையாம். ஆபிரகாம் லின்கன் இம்முறையைத் தாராளமாகக் கையாண்டாராம். ஒரு முக்கியக் கருத்தை ஒரு பேச்சாளர் வெளியிட்டு, “இக்கருத்துடன் சபையோர் இணங்குவரென நம்புகிறேன்” எனக்கூறி ஆங்குச் சற்று நிதானித்தால், கைதட்டலும் ‘ஆம்’ எனும் முழக்கமும் நிலவும். சில பேச்சாளர் சபையோரின் கைதட்டலை அடிக்கடி விரும்பித் தங்கள் பேச்சைப் பலப்பல இடங்களில் அவசியமின்றி நிறுத்துவர். சில பேச்சாளர் சபையோரை விளித்துக் ‘கைதட்ட லாகாதோ?’ எனக் கேட்பர். இவை முறையெனக் கோடல் தவறும். பாடசாலைகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் மாணவர்களைத் தேகப்பயிற்சி அணியில் அழுத்தமான சொற்கொண்டு இயக்குவித்தல்போல், நல்ல சொற்போக்காளர் தங்கள் நாவன்மையாலும் இனிய சொற்போக்காலும் சபையோரை இயக்குவிக்கும் ஆற்றல் பெற்றவராவர். சில பேச்சாளர் ஊழிக்காற்றென மிக விரைந்து பேசுவர். சிலர் மழைக்கு அஞ்சி ஒண்ட ஓடுவதுபோல் தங்கள் பேச்சு வன்மையை ஓட்டி ஓட்டிக் காட்ட முயல்வர். இத்தகைய பேச்சைச் சுருக்கெழுத்தாளரும் சுலபத்தில் எழுதிக்கொள்ள இயலாது. ஆதலின் இவ்விதக் குணக்கேடுகளில், நல்ல சொற்போக்கை அடைய ஆசிப்போர் சிக்கா திருத்தல் மிக வேண்டற்பாலதாம். இரும்பைக் காந்தம் வலிந்து ஈர்த்தல்போல் சபையோரை ஓர் இனிய பேச்சாளர் தம்பால் கவர்தல் வேண்டும். சொற்சுவையும், பேச்சுமணமும் விரவிப் பரிமளிக்காத சொற்போக்கு உப்பில்லாத உணவையொக்கும். இதைக் குறித்து *செயின்ட்பால் எனும் மகான் எச்சரிக்கையே வழங்கியுள்ளார்.

அடை மொழி

‘வெறுங்கை முழமிடாது’ என்பது காலங்கண்ட முதுரையாம். இனிய வார்த்தைகளை ஆயந்தெடுத்துச் சேகரித்துக் கருவில் வைத்து அவற்றை இடமறிந்து உபயோகிக்க வல்லோர் இனிய சொற்போக்கைப் பெற்றவராவர். வார்த்தைகளின் வலிமையையும் பொருள் பேதங்களையும் தமிழ் இலக்கியங்களின் உதவியால் நன்குணர்தல்வேண்டும். தமிழ் அகராதி, திவாகரம், நிகண்டு ஆகியவற்றின் துணைகொண்டு சொற்களைக்குறித் தெழும் ஐயப்பாடுகளைப் போக்கிக்கொள்ளுதல் மிக்க பயன் தருவதாம். சொற்களின் பொருள் பேதங்களை நன்குணர்ந்த பேச்சாளர் ஓரே பொது அடைமொழியைப் பல பொருள்கட்கும் உப

* மலர்ச்சேர்க்கை 1ல் காண்க.

யோகியார். உதாரணமாக, 'அழகிய' என்னும் ஒரு சிறு பதத்தைப் பொதுவாக ஒரு மரத்திற்கும், பழத்திற்கும், நாய்க்கும், சொற்பொழிவிற்கும், சங்கீதத்திற்கும், மங்கைக்கும், கொடையாளிக்கும் பேதமின்றி அடைமொழியாக்கிப் பேசினால் விளையும் ஆபாசம் ஊன்றி நோக்குதற்குரிய தொன்றும். மேலே கூறிய ஒவ்வொன்றிற்கும் ஏற்ற தனி அடைமொழிகளைத் தந்து, அடர்ந்த மரம், உருசியான பழம், பார்வையான நாய், உருக்கமான சொற்பொழிவு, எழிலுருவான மங்கை, பெருங் கொடையாளி யென ஒரு பேச்சாளர் பேசுவதால் உண்டாகும் சொற்பொலிவும், சுவையும் வியக்கத்தக்க தொன்றும். இன்னும் ஓர் உதாரணம். தமிழ்மொழியில் 'ஆகிய', 'முதலிய' என்னும் சிறு பதங்கள் மலிந்துவரக் காண்போம். மொழிபேதம் உணராத சில பேச்சாளர் தங்கள் பேச்சில் எல்லா இடங்களிலும் பேதமின்றி இச்சொற்களை உபயோகிப்பர். 'ஆகிய' என்பது குறிப்பிட்ட பொருள்களை அல்லது நபர்களை மட்டுமே குறித்தற்காகும். 'முதலிய' எனும் பதம் குறிப்பிட்ட பொருள்களையும் நபர்களையும் குறித்தலோடு, இதர பொருள்களையும் நபர்களையும் குறிப்பிடும். ஆகலின் சிற்றுருவம் கண்டு வார்த்தைகளை எள்ளுதல் ஏற்புடையதன்றும்.

சொற்பேதம் உணர்தல்

ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் இந்நாள் நான்குலட்சத்து ஐம்பதினாயிரம் மொழிகள் தொகுக்கப்பட்டு விரிவான உரைகள் கொடுக்கப் பெற்றுள்ளன. அதன் சேர்க்கைக்கொத்தில் மேலும் பல்லாயிரம் வார்த்தைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மேலைநாடுகளில் இத்தகைய ஆங்கில அகராதிகளைப் பன்முறை படித்துணர்ந்த நாவலர்கள் பலருண்டு. பிரபல கவியரசராகிய மில்டன் இவைகளில் எண்ணாயிரம் வார்த்தைகளைத் தாம் யாத்துள்ள நூல்களில் உபயோகித்துள்ளார். நாடகக் கவீந்திரரான ஷேக்ஸ்பியர் பதினையாயிரம் ஆங்கிலப் பதங்களைக் கையாண்டுள்ளார். ஐக்கியபதி ரூஸ்வெல்டு முப்பத்தையாயிரம் ஆங்கிலப்பதங்களை பேதமறிந்து உபயோகிக்க வல்லவராம். இங்கிலாந்தின் பிரதம மந்திரியான வின்ஸ்டன் சர்ச்சில் துரை மகனார் இருபத்தையாயிரம் ஆங்கில மொழிகளைத் தாராளமாகக் கையாளும் ஆற்றல்பெற்றவர். இத்துணைப் பதங்களை நமது தமிழ்நாட்டு நாவலரான காலஞ்சென்ற மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் உபயோகிக்க வல்லவர்.* பார்லிமெண்டு

---

* அப்பெரியார் இந்நூலாசிரியர் மாட்டுக் கூறியவாறு குறிக்கப்பெற்றது இது

மகா சபையில் சர்ச்சில் துரை ஒருபோது கூறிய Triphbian என்னும் ஒரு சொல் தவறென்றும் அதனை Tribian எனச் சொல்ல வேண்டுமென்றும் சாஸ்திரிகள் திருத்தியுள்ளார். இந்நூலாசிரியர் இதே பகுதியை மகாகனம் சாஸ்திரிகளுக்கு வாசித்துக்கொண்டிருந்த சமயம் பிரபல வழக்கறிஞர் உயர்திரு டி. ஆர். வெங்கடராம சாஸ்திரிகள் தம்முடன் கொணர்ந்த அச்சுத்திருத்தத் தாளில் கண்ட Conation என்ற பதம் சரியோவெனக் கேட்டார். அந்த இடத்திற்கு ஏற்ற பதம் அதுவேயாகும் எனக்கூறி ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியை மகாகனம் சாஸ்திரிகள் ஆதாரம் காட்டினார். எனவே, இப்பெரியாருக்கு அம்மொழியிலும் அவ்வார்த்தை பேதங்களிலும் இருந்த அறிவாற்றல் என்னே ! இத்தகையோர் நாவன்மையும், சொற்போக்கும் சிறந்து விளங்கக் கேட்பானேன் ?

வார்த்தை உச்சரிப்பு

நிற்க வார்த்தைகளைச் சரியானபடி பேச்சாளர் உருட்சி திரட்சியாக உச்சரிப்பதில் மிக்க நாட்டம் செலுத்தல் மிக வேண்டற்பாலதாம். சென்னை கவர்னராயிருந்த பெண்ட்லாண்டு பிரபுவை அன்னைபெசண்டு அம்மையார் எக்காலத்தும் போற்றியதில்லை. ஒரு சமயம் அவர் பேச்சைக் கேட்ட அம்மையார் "ஏது இவர் ஆங்கில வார்த்தைகளை உருட்சி திரட்சியாக உச்சரிக்கக் கற்றுக்கொண்டாரே !" எனக் கூறி அதிசயித்தார். வார்த்தைகளின் நீட்டல், குறுக்கல் விகாரங்களால் நமது ஆந்திர, கேரள சகோதரர்கள் தமது பிறந்த நாட்டை முறையே காட்டிவிடுவர் ! எனவே ஒரு பேச்சாளர் வார்த்தைகளை அழுத்தமாகவும், அவைகட்குரிய ஒலிப்பொலிவுடனும், ஓசை குன்றாமலும் பேசப் பழகுதல்வேண்டும். தனித்திருந்து நிலைக்கண்ணாடிமுன் உரக்கப் படித்தும், பேசவும் பழகலே அதற்கேற்ற சாதனங்களாம். வார்த்தைகளை ஊன்றி உச்சரிக்கும்போது நிகழும் மாறுதல்களை உணர்ந்து ஒரு பேச்சாளர் தமது கண், வாய், மூக்கு முதலிய அவயவங்களைச் சரியான நிலையில் வைத்திருக்கப் பழகல் மிக வேண்டப்படுவதொன்றாம்.

குறைவை நீக்குக

சென்னைச் சர்வகலா சங்கத்தார் வெளியிட்டிருக்கும் தமிழ் அகராதியில் சுமார் தொண்ணூற்றையாயிரம் வார்த்தைகளை தொகுக்கப் பெற்றுள்ளன. இது முடிவான எண்ணிக்கையல்லவாயினும், ஆங்கிலத்திலும்,

தமிழ்ப்பதங்கள் மிகக் குறைந்திருத்தல் கண்கூடு. புதைந்து கிடக்கும் தமிழ் வார்த்தைகளைத் தேடிப் பிடித்தலும், நூதன வார்த்தைகளையும் தொடர் மொழிகளையும் உண்டுபண்ணுதலும், தமிழ்மொழியை மேலும் இவ்வழி பெருக்கலும் தமிழ் வல்லோரின் தலையாய கடனும். தமிழ் மொழி இன்றுள்ள நிலையில், நம் தமிழ் நாவலர்கள் எத்துணைத் தமிழ்ப் பதங்களை மேடைப்பேச்சிலும் எழுத்திலும் கையாள வல்லரென அறுதியிட்டுக் கூறுதற்கியலுங்கொல்? இப்பகுதியை வாசிக்கக் கேட்ட உயர். திரு. வி. கலியாண சுந்தரனூர் தாம் பல நூதன தமிழ்ச் சொற்களைக் கண்டிருந்தும், தமது மேடைப்பேச்சிலும் எழுத்திலும் எத்துணைத் தமிழ்ப்பதங்களை உபயோகிக்கக் கூடுமென அறுதி கூறுவதற்கில்லையென்றும், இனி அவ்வழி நோக்குதல் வேண்டுமென்றும் சொற்றனர். ஆங்கிலப் பேச்சாளர்கட்குச் சாதாரணமாக இரண்டாயிரம் வார்த்தைகளே போதுமென்பர். ஆகலின் தமிழ்ப்பேச்சாளர்கட்கும் அத்துணை வார்த்தைகளே போதியனவாம். மேலே கூறியுள்ள வழிநின்று தமிழ்ப் பேச்சாளர் வார்த்தைகட்குத் தயங்காமலும், உச்சரிப்புக்கெடாமலும் சபையின் நோக்கமறிந்து பேச முயன்றுழைத்தால் காலக்கிரமத்தே சொற்சுவை மலிந்த நாவலராவரென்பது ஒருதலை.

---

10. மேடைத் தோற்றம்

மேடை இரகசியம்

"சரக்கு மிடுக்கோ, செட்டியார் மிடுக்கோ" எனும் பழஞ்சொற்றொடர் வியாபார வட்டங்களில் இன்றும் விரிந்து வழங்குவதொன்றும். சரக்கு மட்டரகமாயினும், விலைப்படுத்தும் செட்டியார் சற்று மிடுக்கானுல் அச்சரக்கு எவ்வாற்றானும் விலைப்படுமென்பது அச்சொற்றொடரின் கருத்தாம். அஃதேபோல் ஒரு மேடைப் பேச்சாளரின் தோற்றம் சற்று மிடுக்கு வாய்ந்திருக்குமேல், அன்னார் பேச்சு மட்ட ரகமாயினும், சபையோர் அதனை அங்கீகரிப்பதை நமது அநுபவத்தில் காண்போம். இத்தகைய பேச்சாளர் பேசுவதில் உள்ள குற்றங்களைப் பாராட்டாது சபையோர் பொறுமை காட்டல் இயல்பாம். ஆகலின், ஒரு மேடையில் தோன்றும் பேச்சாளரின் பொதுத்தோற்றம் சற்று வசீகரமாக இருப்பின் அன்னோர் பேச்சு வெற்றிபெறுதல் நிச்சயம். அதனோடு வாக்கு வன்மையும், சீரிய கருத்துக்களும் உடைய

ராயின் அத்தகைய பேச்சாளரைச் சபையோர் தலைமீது தாங்குவர். இது வெளிப்படையான ஒரு பொதுமேடை இரகசியமாகும்.

இயற்கைத் தோற்றம்

ஒருவரின் வெளித்தோற்றத்திற்கு இன்றியமையாத நிறம், அழகு, ஆகிருதி முதலியன பிறப்பினுலே பெறப்படுவனவாம். அவை வெறும் செயற்கையால் வருவனவல்ல. எல்லாப் பேச்சாளரும் நல்ல தோற்றம் பெற்றவ ராகார். நல்ல தோற்றமுடையோ ரெல்லாம் இனிய பேச்சாள ராய் இருப்ப ரென்பதற்கில்லை. குள்ளர்களும், குரூபிகளும், அங்கப் பழுதுடையோரும் தத்தம் தோற்றத்தால் சபையில் சிறிது வெறுப்பை யும் குறுநகைப்பையும் ஆரம்பத்தே உண்டாக்கினும், தமது பேச்சு வன்மையால் சபையோரை வசீகரப்படுத்துவர். சபையோர் அநுதாப மும் அவர்களை வலியச்சென்றடையும். 'அழகிய மணவாளன்' எனும் பெயருக்குரிய தோற்றமும், 'சபாரத்தினம்' எனும் பெயருக்கேற்ற பேச்சு வன்மையும் இல்லாவிடினும், 'விநாயகம்' என்ற பெயருக்கேற்ற பருத்த உடலும், 'கருப்பய்யா' எனும் பெயருக்குப் பொருந்திய இருண்ட நிறமும் ஒரு பேச்சாளருக்கு இருந்துவிடின் சபையில் பெரு நகைப்பும், அமைதியின்மையும் உண்டாதல் ஒருதலை. ஆகலின் ஒரு பேச்சாளரின் தோற்றத்தால் சபையில் விருப்பும் வெறுப்பும் காணப் படுவதியல்பாம். ஈண்டைக்கோர் உதாரணம் பொருந்தும்; சாலப் பொருந்தும். இன்றும் புகழுடம்பு கொண்டு விளங்கும் ஆபிரகாம் லின் கன் ஓரமயம் நியூயார்க் நகரிலுள்ள கூப்பர் ஹாலில் பேச அழைக்கப் பட்டார். அவர் மிக மனத் தயக்கத்துடன் பேச ஒருப்பட்டார். மாபெருந் தலைவர்கள் அவர் பேச்சைக்கேட்க ஆண்டுக் குழுமினர். அங்ஙனம் குழுமியவரில் ஒருவர் கூறுவதிதுவாம்: "ஆபிரகாம் லின்கன் பேச எழுந்தபோது எனக்குப் பெரும் வியப்பும், வெறுப்பும் உண் டாயது. அவர் ஒரு நெடிய பனைமரமாகத் தோன்றினர். அம்மரத்தின் உச்சியில் ஒருதலை. படர்ந்து அடர்ந்து பின்னல்படிந்த கருங்கூந்தல். உடம்போ வளைந்தும் நெளிந்தும், ஒட்டகமெனக் கோணல் மிகுந்தும் இருந்தது. அவர் தரித்திருந்த உடை அவருடைய உடலுக்குச் சிறி தாகவும், எட்டியும் எட்டாமலும், அழுக்குப்படிந்தும், அடுக்குப்பானை யில் திணித்துவைத்து எடுத்ததுபோல நசுங்குண்டு இருந்தது. மூக்கோ முப்பது கோணல்; வாய் நீண்டும் உதடுகள் தடித்தும் இருந்தன. அவரைப் பார்க்கப் பார்க்க எனக்கு மிகப் பரிதாபமாயிற்று. அவர்

பேச ஆரம்பித்தபோது தமது பருத்த அகங்கைகளையும், முரட்டுக் கரங்களையும் உயர்த்தினர். மெல்லிய குரலில் தமது பேச்சை ஆரம்பித்தார். உரக்கப் பேசப் பயந்தவர்போல் காணப்பட்டார். 'ஐயா, நீவிர் நியூயார்க் மேடைக்கு உதவமாட்டீர்; மேடையைவிட்டு இறங்கி விடுதலே மரியாதை' என்று என் மனதிலே சொல்லிக்கொண்டேன். அவ்வளவுதான் அச்சமயம் நான் எண்ணியது. அவர் தாம் பேசப் புகுந்த செய்தியில் பளிச்சென்று இறங்கினர். சம்மட்டி அடியென அறைந்தார்; மேலும் அறைந் தறைந்து பேசினர். வார்த்தைப் பொறிகள், கருத்துப் பொறிகள் சிதறின. உடல்கோணல்கள் நிமிர்ந்தன. சைகை பாவங்கள் மிளிர்ந்தன. வார்த்தை அலைகள் உயர்ந்தன; தாழ்ந்தன. உள்ளொளி பரிணமித்து அவர் முகம் சோதிமயமாக ஒளி வீசிற்று. அவர் வேறு அலாதி மனித உருவில் தோற்றமளித்தார். அவர் உருவை மறந்தேன்; உடையை மறந்தேன்; என்னையே மறந்து குதித்து எழுந்தேன்; மற்றவருடன் கூடியாடிக் கைதட்டி ஆர்ப்பரித்தேன். அவர் முடிவுரைக்கு வந்தபோது ஆண்டு எரிந்த விளக்குத்திரிகளின் மெல்லிய அரவமும் செவிக்குப் புலனாயிற்று. அவர் பேச்சு உச்ச நிலையை முட்டியபோது இடிமுழக்கமெனக் கைதட்டலும் ஆரவாரமும் மண்டபத்திலும் வெளியிலும் கிளம்பின. நான் அகமலர்ந்து மெய்சிலிர்க்கச் சபையைவிட்டு வெளிவந்தபோது, அதே உணர்ச்சியுடனிருந்த எனது நண்பர் 'ரயில் தண்டவாளங்களைப் பிளந்து வயிறு வளர்க்கும் ஆபிரகாம் லின்கன் பேச்சு எவ்வாறிருந்தது?' எனக் கேட்டார். 'செயிண்டுபாலுக்கு அடுத்தபடியான பெரியார், ஆபிரகாம் லின்கன்' என என் நா அவரை வழுத்திற்று. இப்பொழுதும் நான் அவ்வாறே அவரைக் கருதுகிறேன். அப்பேச்சு, ஒரு காட்டுக்கட்டை வெட்டியின் தனயனை அமெரிக்காவின் ஐக்கியபதியாக்கிற்று! ஆகலின் ஒரு பேச்சாளர்மாட்டு சபையின் விருப்பும் வெறுப்பும் முற்கூட்டியே உண்டாவ தியல்பேயாம். அவை பேச்சாளரின் தோற்றத்தாலும் உடையாலும் பெறப்படுவனவாம். ஆயினும், பேச்சுச் சரக்கு நிறைந்த ஒரு பேச்சாளரின் தோற்றம் எவ்வாறிருப்பினும் அவர் சபையின் நன்மதிப்பைப் பெறுவர் என்பது உறுதி.

செயற்கை விளைவு

நல்ல தோற்றத்தை இயற்கையில் பெறாத பேச்சாளர் சுத்தமான உடையை இடம், காலம், சமயம், வயது முதலியவைகட்கிணங்க நன்கு

தரித்துக்கொள்வதால் வசீகரத் தோற்றத்தை ஒரோவழி உண்டாக்கிக் கொள்ள இயலும். நன்கு உடுத்துவதெனின், ஒரு பேச்சாளர் பச்சை நிறப்பாகையும், சிவப்பு மேலங்கியும், நீல உட்சட்டையும், வெள்ளிய ஆடையும், மஞ்சள்நிற மேலாடையும் தரித்து ஐவர்ணக்கொடிபோல் விளங்குவதன்று. அமைதியும் பொருத்தமும் சுத்தமுமான உடைகளைத் தரிப்பதால், பிறப்பினாலாய குறைபாடுகளைப் பேச்சாளர் ஒருவாறு போக்கிச் சுயமதிப்பை நிச்சயமாகப் பெருக்கிக்கொள்வர்.

ஈண்டைக்கோர் விளக்கம் தருவோம். இங்கிலாந்தின் பிரதமரும் மாபெரும் நாவலருமான டிஸ்ரலியாரின் கன்னிப்பேச்சு பாராளுமன்றத்தில் வெற்றி காணாது போனதேன்? எதிரிடையான ஐரிஷ் அங்கத்தினர்களின் வெறுப்பு ஒருபுறமிருக்க, அவரது தோற்றமும், விபரீத உடையும், பேச்சில் மலிந்து காணப்பட்ட வார்த்தைச் சொலிப்புமே காரணமாம். அவரது தோற்றமும் அணிந்திருந்த உடையும் நாடகமேடைக்கு உரியனவாயிருந்தன. இலைப்பச்சை மேலங்கி, வெள்ளைக்கீற்றிட்ட உட்சட்டை, அதன்மேற்புறத்தில் தங்கச் சங்கிலிகளாலான ஆரங்கள், தளர்த்தியான கால்சட்டைகள், கழுத்தைக் கோலிய கருப்புப்பட்டை ஆகியவற்றைத் தரித்திருந்தார். தமக்கு நிகரானவர் எவரும் இல்லையெனும் அகம்பாவத்தை உணர்த்தும் உடல் நிலை. நீண்டுச் சுருண்டு இடக்கன்னத்தே ஊசலாடிக்கொண்டிருந்த கருங்கூந்தல். இத்தகைய உருவம் பேசும்போது அங்குமிங்கும் கைகள் அலைந்தன. அளவுக்குமிஞ்சிய சைகைகளையும் காட்டித் தமது பேச்சை அது ஆரம்பித்தது. அப்பேச்சு அப்பேச்சாளரைப்போலவே வனப்பு மிக்கதாயிருந்தும், அப்பேச்சாளர்மாட்டு அடக்கம் காணப்படாமையால் அது ரசிக்கப்படாது படுதோல்வியடைந்தது. அவர் புனைந்திருந்த உடைகளைப்போலவே அவர் பேச்சும் மிகைப்பட்டிருந்தது. அவர் உள்ளங்கிமீது அளவுகடந்து தரித்திருந்த சங்கிலிப் பிணையல்களில் பதித்திருந்த மணிகளைப்போன்று அவர் பேச்சும் இடையிடையே வார்த்தை மணிகளால் இழைக்கப் பெற்றிருந்தது. இருந்தும் என்? இக்காரணங்களால் அவர் கன்னிப்பேச்சு பாராளுமன்றத்தில் வெற்றி காணவில்லை. ஆயினும் ஏழு தினங்களுக்குப்பின் அச்சபையில் அவர் மீண்டும் தைரியமிழவாது, பேசிய பேச்சை அங்கத்தினர் யாவரும் வரவேற்றனர். இதனால் ஒருவர் பேச்சு, பொதுமேடைகளில் ரசிக்கப் படுவதற்கு, அவர் உடையும் தோற்றமும், கருத்துக்களையும் வார்த்தைகளையும் அளவோடு உபயோகித்தலும் பெரிதும் பயன்தருவனவாமென்பது பெறப்படும்.

கெட்ட பழக்கம்

பேச்சாளர் குறித்த காலத்தில் மேடைமீது தங்கள் இருப்பிடங்களில் இருத்தல்வேண்டும். காலந்தாழ்த்தும் ஓடோடியும் போந்து மேடையில் பேசப் புகுதலும், நடை பசி தூக்கமின்மையாலான சீரக் களைப்புடன் பேசுதலும் வெறுக்கத்தக்கவையாம். பேச்சாளர் பேசுவதற்குமுன் மித ஆகாரம் உட்கொண்டிருத்தல் வேண்டும். விலாப் புடைக்க உண்டுவந்தால் மூளைக்குச் செல்லவேண்டிய இரத்தவோட்டம் இரைப்பைக்குள் செல்லும். 'உண்டிக்கேற்ற புத்தி', 'உணவுக்கேற்ற மதி' என்பன உலகில் வழங்கப்பெறும் சாதாரணச் சொற்றொடர்கள்; கருத்துப்பொலிவு மிகப்பெற்றவை. கொழுத்த உணவால் தடித்த மதியும், சாத்விக உணவால் அறிவு விளக்கமும் மாந்தர் மாட்டுக் காணப்படுதல் கண்கூடு. சுறு சுறுப்பையும் பேச்சின் விறு விறுப்பையும் தடை செய்யும் ஆகாராதிகளையும், பானங்களையும், மாத்திரைகளையும் அறவே தவிர்த்து மேடைமீது ஒரு பேச்சாளர் தோன்றலே முறையாம்.

தமது இறுதிக்காலத்தே டிஸ்ரவியார் கொடிய இருமல் நோய் வாய்ப்பட்டார். பாராளுமன்றச் சபையில் அவர் பேசுவது கடினமாயிற்று. ஒரு முக்கிய விவாதத்தில் பதிலளிக்கவேண்டிய அவர் சற்றுப் பொறுமை இழந்து பலதடவை பேச முற்பட்டார். இது அவைத் தலைவருக்கும் அவரது நண்பர்கள் பலருக்கும் ஆச்சரியமூட்டியது. டிஸ்ரவியாரின் அந்தரங்கக் காரியதரிசி சபைத்தலைவரை யணுகி கனம் டிஸ்ரவியார் இருமலால் பேச்சுத் தடைப்படாதிருக்க ஊசியால் ஒரு மருந்து செலுத்தப்பெற்றிருக்கிறார். அம்மருந்தின் வேகம் தணிந்துவிடுமாயின் தாம் விடையிறுக்க முடியாதென்று அஞ்சுவதே அவர் அவசரப்பட்டதன் காரணமெனப் புகன்றார். நோயால் நலிந்த பேச்சாளர் மாட்டுக் காணப்படும் இன்னோரன்ன பழக்கங்களைக் குற்றமெனக் கடிவதற்கில்லை.

தோன்றும் விதம்

ஓரவையில் தோன்றும்போதே ஒரு நல்ல பேச்சாளர் தமது வரவைச் சபையோர் அறியச் செய்வார். அவரைப் பொதுமக்கள் ஆரவாரங் காட்டிக் கைகொட்டி அன்புடன் வரவேற்பர். இத்தகைய வரவேற்பை உயர். சி. என். அண்ணாதுரையாரும், டாக்டர் பி. வரதராசலு நாயுடு அவர்களும் தோன்றும் மேடைகளில் காணலாம். பொதுமேடைகளில் பண்பட்ட சில பேச்சாளர் தமது கொள்கைகட்கு எதிரிடையான

கூட்டங்களிலும், நல்ல வரவேற்பைப் பெறுவதுண்டு. ஒருபோது சென்னைப் பச்சையப்பன் கலாசாலை மண்டபத்தே ஒரு சாராரின் கூட்டம் நடைபெற்றது. பிறிதொரு சாராரின் தலைவர் அக்கூட்டத்திற்குப் போதரலானார். அவ்வமயம் ஆரவாரமும் கைதட்டலும் மிக எழுந்தன. அப்பெரியார் மேடைக்குச் செல்லாது இதர மக்களுடன் கீழே அமர்ந்தபோது மேடைக்குச் செல்லுமாறு மக்களால் வேண்டப்பட்டார். அதற்கு இணங்கிய அவர் "அப்படியே செய்கிறேன்; இதுபோலவே எம்மை இங்குப் பேசவும் கட்டாயப்படுத்துவீர்களோ?" எனக் கேட்டுக் கொண்டே புன்முறுவலுடன் மேடைமீதிவர்ந்தார். "நீங்கள் இங்குப் பேசாதிருத்தல் கூடுமோ?" எனச் சபையோர் உரக்கக் கூவினர். இவ் வழியே தாம் பேசுதற்குச் சபையின் அநுமதியையும் முற்கூட்டியே பெற்றார். முடிவில் அவர் பேசியே வென்றார். எனவே, மேடைமீது நடந்துகொண்ட விதத்தால் தமது எண்ணத்தை அத்தலைவர் நிறைவேற்றிய முறை, குறித்துக்கொள்ளத் தக்கதொன்றாம்.

ஆடம்பரம்!

பேச்சாளர் கடுக்கன், மோதிரம், கடியாரச்சங்கிலி, கைக்கடியாரம் முதலியவற்றைத் தரித்திருத்தல் குற்றமன்று. ஆயினும் பேசும் பொழுது மெருகிடுவதுபோல் அவற்றைத் தடவிக்கொள்ளலும், விரல் கொண்டு விளையாடுதலும் குற்றமாம். மேலாடையை இருகரங்களால் இறுகப் பற்றிக்கொண்டே பேசுதலும் சட்டைப்பைக்குள் கைகளை நுழைத்துக்கொள்ளலும் இடுப்புப்பட்டையில் விரல்களைச் செருகிக் கொள்ளலும் ஆகாவாம். பொடி உறிஞ்சுதல், புகையிலை அடக்குதல், மீசையை முறுக்குதல், கண்களையும் கன்னங்களையும் அடிக்கடித் துடைத்துக்கொள்ளல் முதலியன குற்றமேயாம். ஏப்பமிடுதலும், கோட்டுவாய் கொள்ளலும் மன்னிக்கத் தகாதவையாம். மூக்குக் கண்ணாடியை அடிக்கடி எடுத்தலும், மாட்டலும், கையால் சுழற்றிக் கொண்டே பேசலும் விரும்பத்தக்க பொதுமேடைப் பழக்கங்கள் அல்ல. மேலங்கிப் பொத்தான்களைத் திருகிக்கொண்டே பேசிப் பேசி முடிவில் அவைகளை அறுத்துவிடும் பேச்சாளர்களுமுண்டு. கைக் குட்டைகளை விசிறிமடிப்பிட்டுச் சட்டைப்பைக்கு வெளியில் தெரியக் காட்டலும், மையூற்றுப் பேனாக்களையும் எழுதுகோல்களையும் தினசரித் தாள்களையும் சட்டைப்பைகளில் செருகிவைத்திருத்தலும் பார்ப் போர்க்கு அருவருப்பைத் தருவனவாம். சென்னையில் வதிந்த ஒரு தனவான் எல்லாப் பொதுமேடைகளிலும் அரதனவடங்கள், முத்தாரம்,

கண்டிகள், விரல்நிறைய மோதிரங்கள், சிங்கமுகத் தோடாக்கள், சரிகைஅங்கி, பாகை முதலியவற்றை மிகைபடப் புனைந்து, கூர்முனை மீசைகளுடன் தோன்றுதல் வழக்கு. சென்னையில் முற்றும் துறந்த ஒரு அடியார் வெறுங்கோவணத்துடன் தோன்றிப் பெரும்பொழுது பெண் மக்கள் கூட்டங்களிலும் பேசுவார். முரண்பாடுடைய இவ்விருகோலங் களும் மக்களால் விரும்பப்படவில்லை என்பது மிகையன்று.

தவிர்க்க வேண்டுவன

பேச்சாளரின் முழு உருவமும் சபைக்குத் தெரியும் வண்ணம் அவைத் தலைவருக்கு இடப்புறத்தில் நின்று பேசுதல் முறையாம். இரு கால்களையும் சமமாக ஊன்றி, கரங்களைத் தொங்கவிட்டுச் சுபாவிக நிலையில் நிற்றல்வேண்டும். ஒரு பேச்சாளர் மேடைமீது நிற்கு நிலை மிக இலேசாகத் தோன்றுதல்வேண்டும். இதற்கு கனம் மந்திரியார் உயர்திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியாரைத் தக்க எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். ஒற்றைக்காலில் நின்று, மற்றொரு காலை மேசை நாற்காலிச் சட்டங்களின் மீதிருத்தி ஒரு பேச்சாளர் பேசுதல் முறை தவறும். பகைவரின் அம்பு, குண்டு முதலியவைகட்கு அஞ்சி ஒளிவதுபோல் நாற்காலி, மேசைகளுக்குப் பின்னால் கழுத்தளவு, மார் பளவு மறைந்து நின்று பேசுதலை மேடைப் பேச்சாளர் தவிர்த்தல் வேண்டும். சபையோர் பேச்சாளரின் முழு உருவத்தையும் பார்க்க விரும்புதல் இயற்கை. ஓதுக்குப்புறங்களில் உள்ளவர்கட்குப் பேச் சாளரின் முழு உருவம் தென்படாவிடில், அன்னோர் தங்களிருப்பிடங் களிலிருந்து எழுவதையும், தலைகளை ஒருபுறமாக நீட்டிப் பார்த்தலையும் காண்போம். அவ்வேளை அவைத் தலைவரும் சபையோரும் அப் பேச்சாளரைச் சற்று முன்னுக்கு வரக் கேட்டுக்கொள்வதுண்டு. அங் ஙனமே சில பேச்சாளர் வருவர். சில பேச்சாளர் சபையின் உணர்ச் சியை அறியாமலே, 'பரவாயில்லை', 'இங்கிருந்தே பேசுகிறேன்' என்று கூறி இடம்பெயராது நின்று பேசிச் சபையின் அவமதிப்பைப் பெறுவர். இவ்வித நிகழ்ச்சிகள் நேராவண்ணம் ஒரு பேச்சாளர் சபை யில் நடந்துகொள்ளல் முறையென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும்.

பேசிக்கொண்டிருக்கும்போது நாவுலர்ந்து சில பேச்சாளர் குடி நீர்வேண்டுமென இருகரங்களையும் நீட்டிக் கேட்பர். அன்னார் வேட்கை தீர நீரும் மோரும் சோடா முதலிய பானங்களும் கொடுக்கப்படும். இத

னிடையே சபையில் ஏற்படும் கலவரத்தையும் அமைதியின்மையையும் அப்பேச்சாளர் பின்னர் சுலபத்தில் போக்கிக்கொள்ள வியலாது. பார்லிமெண்டு, காங்கரஸ் போன்ற மாபெரும் சபைகளில் பெரும்பொழுது பேசும் நாவலர்கள் நீருக்கு அலேந்தாரில்லே. இத்தகைய நாவரட்சி ஏற்படாதிருக்க, சில உபாயங்களாதல் இயற்கையில் இருத்தல்வேண்டுமன்றோ? நீடிய பழக்கமே இவ்வுபாயங்களில் தலேசிறந்ததாகும். மூச்சுக் குழல்களேச் சரியான நிலேயில் வைத்து, அடித்தொண்டையினின்றும் ஒலியை வெளிப்படுத்தா திருப்பின் நாவுலரக் காரணமில்லே. சிலர் ஒரு உப்புக் கல்லேயும், கற்கண்டுத் துண்டையும், வால்மிளகு, லவங்கம் முதலியவற்றையும் பேச்சினிடையே உபயோகிப்பதுண்டு. சூடான காபி, தேயிலே, பால் முதலிய பானங்களே மேலாடைகளால் முகத்தை மூடிக்கொண்டு பருகலும் சில பேச்சாளர் வழக்கம். இவையனைத்தும் விரும்பத்தக்க மேடைப் பழக்கங்கள் அல்ல.

மேடை ஏற்பாடு

மேடைமீது பேச்சாளருக்கருகில் நண்பர்களேயும், பிரமுகர்களேயும் வீற்றிருக்கச் செய்தல் சரியன்று. ஏனெனில், பேசுவோர் நாட்டம் நண்பர்கள் மாட்டும் பிரமுகர்கள்மீதும் அடிக்கடிப் படிந்து பேச்சின் கோவை தடைப்படும். ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது கதவுகளேயும், சாளரங்களேயும் படீரெனத் திறத்தலேயும் மூடுதலேயும் தவிர்த்தல்வேண்டும். காலந்தாழ்த்து வருவோர், முன்னுல் வீற்றிருப்போர் கவனத்தைக் கலேத்துவிடாத முறையில் வந் தமருமாறு வழிகளேயும் நாற்காலிகளேயும் வகுத்திருத்தல் முறையாம். மின்சார விளக்குகளே மாலேப்போழ்திலேயே எரியவிடுதல் நலமாம். ஒருவர் பேசிக்கொண் டிருக்கும்பொழுது அவற்றைப் போட முயல்வதால் சபையோர் கவனம் பேச்சில் அழுந்தாதவாறு கைகூப்புதலிலும், பல்லிபோல் கீச்சிடுவதிலும் செல்லும். பேச்சின் கோவையும் இற்றுவிடும். மின்சார வசதி இல்லா இடங்களில் நல்ல (காஸ்லேட்) வெளிச்சத்தில் தமது முகம் சபையோருக்குத் தெரியும்படி நின்று ஒரு பேச்சாளர் பேசுதல் வேண்டும். மேசைமீது (பெட்ரோமாக்ஸ்) ஆவி விளக்கைப் பேசுவோருக்கருகில் வைப்பதும், கட்டு ஊதுவர்த்திகளேப் புகைப்பதும் பேச்சாளரை மூச்சுத் திணறச்செய்யும். முக்கியமாகப் பேச்சாளர்கட்கருகில் சுத்தமான காற்று வீசுதற்கான ஏற்பாடுகளே அமைத்தல் நன்றும். மின்சார மேசை விசிறிகள் பேசுவோரின் ஒலியைச் சபைக்குச் செலுத்துமாறு

நிறுவுதல்வேண்டும். எவ்வளவிற் கெவ்வளவு பிராணவாயுவைப் பேச்சாளர் உட்கொள்கின்றாரோ அவ்வளவு, பேச்சின் போக்கும் அதிகரிக்கும்.

மேடை வரவேற்பு

ஒரு பேச்சாளர் தாம் பேசுமுன் மேடைமீது அடிக்கடித் தென்படாதிருத்தல் நல்லது. பேச்சாளர் தோன்றுவதை எதிர்பார்க்கச் செய்வதால் அன்னார் பேச்சு சபையோர் கவனத்தை உடனே கவர்வதாகும். புன்முறுவல் தவழும் முகத்துடன் போதரும் பேச்சாளர் நன்கு வரவேற்கப்படுவர். ஏனெனில், பேச்சாளருக்குள்ள கிளர்ச்சி சபையோருக்கு உண்டாவது இயல்பாம். ஒரு சபை, பெரிய நிலைக் கண்ணாடியை நிகர்க்கும். ஒரு பேச்சாளர் கடுகடுத்த முகத்துடன் ஒரு சபைமுன் தோன்றுவரேல், அத்தோற்றமே அக்கண்ணாடியில் பிரதிபலிப்பதாம். ஒரு பேச்சாளரின் தோற்றத்தால் அவரைச் சபையோர் ஒரு கணத்தில் அங்கிகரித்தலும் நிராகரித்தலும் உண்டு. தோற்றம் உடை முதலியவற்றில் முழுக்கமின்றி, நிறைதம்பல மருந்தி, பொது மேடைகளில் சிறிது காலந் தாழ்ந்தே தோன்றும் உயர்திரு. சி. என். அண்ணாதுரையார் எத்துணை ஆரவாரங் கொண்ட வரவேற்பைப் பெறுகின்றார்! அவர் ஆசனத்தில் அமர்ந்த பின்னரும் பல விநாடி நேரம் கை தட்டல் நீடிப்பதைப் பொது மேடைகளில் காணுகிறோம். நாடக மேடைகளிலும், இசை அரங்குகளிலும் உயர்திரு. எம். கே. தியாகராஜ பாகவதரின் வரவை அல்லது தோற்றத்தை எத்துணை ஆவலுடன் மக்கள் எதிர்பார்க்கின்றனர்! எத்தகைய வரவேற்பைப் பொது மக்கள் அவருக்கு ஆரவாரத்துடன் அளிக்கின்றனர்! இதன் இரகசியம் என்ன? அன்னார் இனிய சங்கீதம் ஒருபுறமிருக்க, அவரது வசீகரத் தோற்றமும், வதனப் பொலிவும், அதில் மின்னனைய ஒளிரும் புன்முறுவலும், வணக்க இன்சொல்லுமே காரணம் என்க. காலஞ்சென்ற கனம் செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜா சர். அண்ணாமலை வள்ளலாரின் மேதக்க தோற்றத்தையும், முக விலாசத்தையும், ஆங்கு நிலவிய புன்முறுவலையும் கண்டார் எளிதில் மறத்தல் கூடுமோ? மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரிகளின் கம்பீரத் தோற்றத்தையும், முக வசீகரத்தையும் வியக்காத மேடைகளுண்டோ? இவ்வுதாரணங்களால், உயர்தர மேடைப் பேச்சாளர்கட்கும், சங்கீத விற்பன்னர்கட்கும் மேற்குறித்த குணங் குறிகளில் சிலவாதல் இன்றியமையாதவை என்பது பெறப்படுவதாம்.

சபை நிறைவு

சாதாரணமாகப் பேச்சாளர் பேசும் உற்சாகம் சபையிலுள்ள கூட்டத்தைப் பெரிதும் சார்ந்திருக்கும். பொதுவாகக் கூட்டம் மிகுந்தும் ரசிகர்கள், அறிவாளிகள், கல்விமான்கள், பிரமுகர்கள், பெண்மணிகள் நிறைந்துமுள்ள சபையில் ஒருவர் பேசும் பேச்சுச் சுவையும் மிக உயர்வுடையனவாக மிளிரும். அப்போது சபையில் கை தட்டலும், 'கேளுங்கள்', 'கேளுங்கள்' என்ற ஒலியும் எழுவதுண்டு. அவ்வேளை பேச்சாளர் சிறிது புன்னகை காட்டுதல் முறையென்ப. சில பேச்சாளர் தலைவணக்கம் காட்டுவதுண்டு. பின்முறை நாடக மேடைகட்கு மிகப் பொருந்திய தொன்றும். கரமுழக்கம் எழுமேல் பேச்சைச் சற்று நிதானமாகவும், 'கேளுங்கள்' எனப்படும் போது பேச்சைத் தொடர்ந்தும் ஒருவர் பேசுதல் மரபாம். சில குறும்பர்கள் இடைவிடாது 'கேளுங்கள்', 'கேளுங்கள்' என்று சபையில் கூறிக் கொண்டிருப்பர். காலஞ்சென்ற ஷெரிடன் எனும் நாவலர் பார்லிமெண்டு மகாசபையில் ஒரு சமயம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு அங்கத்தினர், கணந்தோறும் 'கேளுங்கள்', 'கேளுங்கள்' எனக்கூறி இடைமறித்துக் கொண்டிருந்தார். இஃது அந் நாவலருக்கு மிக்க எரி மூட்டியது. வேறொரு அரசியல் வாதியைக் கண்டித்து அவர் மேலும் பேசியபோது, "இத்துணை யோக்கியமற்ற அறிவிலியை நீங்கள் வேறு எங்கே கண்டிருத்தல் கூடும்?" எனக் கடாவினர். இடைமறித்துக் கொண்டிருந்த அந்த அங்கத்தினர் அவ்வினா எழுந்தபோதும் வழக்கம் போல் 'கேளுங்கள்', 'கேளுங்கள்' என முழங்கினர். ஷெரிடன் உடனே அவர் பக்கம் திரும்பி "இத்துணைச் சடுதியில் விடையிறுத்ததற்கு எனது நன்றி" எனக் கூறித் தமதிடத்தில் அமர்ந்தார். சபையெங்கும் ஓரே சிரிப்பு! அந்தக் குறும்பரும் வெட்கித் தலை குனிந்தார். எனவே, 'கேளுங்கள்' என்பதை மிதமாகவும், அவசியமறிந்தும், உணர்ச்சியோடும் சபையோர் உபயோகித்தல் நல்லது. நிற்க, பேச்சாளரைக் குறிக்காது, பேசப்படுவனவற்றின் உணர்ச்சி வேகத்தால் 'வெட்கம்', 'வெட்கம்' எனும் கூச்சல் எழுமாயின், பேச்சாளர் தமது உணர்ச்சியை மேலும் பெருக்கிக் கொண்டு தமது கருத்தைக் கிளந்து கூறுதல் முறையாம்.

ஒரு பேச்சாளர் பேச ஆரம்பிக்குமுன் சபை நிறைந்திருத்தல் மிக விரும்பப் படுவதாம். கேட்போர் திரளாக வந்து கொண்டிருந்தால், சிறிது காலதாமதம் ஏற்படினும், எல்லோரும் அமர்ந்து அமைதி

நிலையின் அவைத்தலைவர் பேச்சாளரைப் பேசச் செய்தல் முறையாம். ஒரு கூட்டத்தின் நோக்கம் பலதிறப்பட்ட மக்களை ரசிக்கச் செய்து அவர்கள் ஆதரவைப் பெறுதற்கன்றோ ? ஆகலின், ஒரு அவையில் திரளான மக்கள் குழுமியிருத்தல் மிகமிக விரும்பத் தக்கதாம்.

பேச்சாளர் கடமை

வெறும் நாற்காலிகளுக்கு முன் - பெரும் பாகம் வெற்றிடமாக விருக்கும் சபைகளில் ஒரு பேச்சாளர் பேசுவதிலும் பேசாதிருத்தல் நன்று. ஒரு கூட்டத்தின் முக்கியத்திற்கும் எதிர்பார்க்கும் கூட்டத்திற்கும் தக்கவாறு, கூடும் இடம் அல்லது மண்டபங்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். சிறிய கூட்டத்தில் பேச நேரிடுமேல், விலகி உட்கார்ந்திருப்பவர்களை அண்மையில் ஒருங்கு திரட்டி மேடையினின்றும் பேச்சாளர் கீழ்ப்போந்து சாதாரணப் பேச்சு முறையில் பேசி முடித்தல் நல்லது. அமெரிக்க நாவலரான ஹென்றி வார்ட் பீச்சர், “ நான் ஒரு பெரிய சபையில் பேசும் உற்சாகத்துடனே பன்னிருவர் கொண்ட ஒரு சிறு கூட்டத்திலும் பேசுவேன். ஆனால் அப் பன்னிருவரும் மூலைக்கொருவராய் உட்கார்ந்திராமல், என்னருகில் ஒருவரை யொருவர் தொட்டுக்கொண்டு நெருங்கியிருத்தல் வேண்டும் ” எனக் கூறியுள்ளார். பொதுவாக, மேடையில் பேசும்போது ஒல்லும்வகை உடல் அசைவின்றி நின்று பேசுதல் முறையாம். மேடைமீது பேசிக்கொண்டு உலாவுதல் சரியன்று. தமது எல்லா அவயவங்களையும் ஒரு பேச்சாளர் இயற்கை நிலையில் வைத்துப் பேசுதல் வேண்டும். ஊன்றிப் பேச நினைக்கும் சில பேச்சாளர் தமது கை விரல்களை இறுக மூடிக் குத்துவது போல் அடிக்கடிச் சைகை காட்டுவர். ஒருவருக்கு, உண்மையான மன வெழுச்சிக்கும் பேச்சின் முக்கியத்திற்கும் ஏற்றவாறு உணர்ச்சி பாவங்கள் தமக்குத் தாமே உதிப்பதாயின், அவைகள் இயற்கையோடியைந்தவையாகும். அங்ஙனமில்லாதவை வேடதாரிகளின் மேடைக்கூத்துக்குச் சமானமேயாம். மேலே கூறியவற்றில் ஆழ்ந்து பொது மேடைகளில் நடந்து கொள்ளல் ஒரு பேச்சாளரின் தலைசிறந்த கடனும்.

---

11. பேச்சை எடுத்தல்

முக் கூறுகள்

மேடைப் பேச்சு முக்கூறுகள் கொண்டதென முற்பகுதி யொன்றில் கூறப்பட்டுள்ளது. அவை பேச்சை எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என்பனவாம். ஒரு பேச்சாளர் மேடை மீதிவர்ந்து தமது பேச்சை ஆரம்பித்தலே ஈங்குப் பேச்சை எடுத்தல் எனப்படும். பேச்சாளர் மேடைத் தோற்றத்தில் கவனம் செலுத்தக் கடமைப்பட்ட அளவு, பேச்சை எடுத்தலிலும் கருத்தூன்றுதல் வேண்டும். தமது பேச்சை முற்கூட்டித் தயாரித்து ஒரு பேச்சாளர் மேடைமீது தோன்றினும், சபையை விளிக்குமுன் சிறிது மனத் தயக்கம் எழுவ தியல்பாம். இது மெய்விதிர்ப்பின்பால் பட்டதல்ல. தமது பேச்சைச் சபையோர் நன்கு சுவைத்தல் வேண்டுமெனப் பேச்சாளர் சிந்தையில் எழும் எண்ணமே இம்மனத் தயக்கத்திற்குக் காரணமாம். இங்கிலாந்து தேசத்தின் பிரதம மந்திரியாயிருந்த லாய்டு ஜியாஜ் எனும் நாவல ருக்கும் தமது பேச்சை எடுக்குமுன் இவ்விதத் தயக்கம் ஏற்படுவ துண்டாம். அது தீரும்வரை அவர் நா அசைவதில்லை. அயர்லாந்து தேசத்து நாவலரான சார்லஸ் ஸ்டூவார்ட் பார்னல் என்பார் பேச ஆரம்பிக்குமுன் கைகளை இறுக மூடிக் கொள்ளல் வழக்கம். அதனால் நகங்கள் சதைக்குட் பாய்ந்து சிலவேளை குருதி காண்டலும் உண்டாம். எனவே, பேசுமுன் ஒரு பேச்சாளருக்குச் சிறிது தளர்ச்சி தோன்றல் வழுவின்பால் பட்டதல்ல என்க.

மேலைநாட்டு நாவலர்

உலகத் தாய்ச்சபை யெனப்படும் ஆங்கிலப் பாராளு மன்றம் மாபெரும் நாவலர்களை ஈன்றெடுத்த அகமாம். ஆண்டு நாவலர்கள் தமது பேச்சை ஆரம்பிக்கும் முறை பலதிறப் பட்டவையாம். சிலர் மிக விரிவாகப் பலவகைப்பட்ட பீடிகைகளுடன் தமது பேச்சை எடுப்ப துண்டு. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வதிந்த நாவலர்கள் தமது பேச்சை மிக வித்தாரமாக எடுத்தல் (Pre - oration) வழக் காம். அத்தகைய பெருமை வாய்ந்த பேச்சுக்களை இந்நாள் ஆண்டும், இதர ஆங்கிலப் பொது மேடைகளிலும் காண்டல் அருமை. இன்றும் புகழுடம்புடன் விளங்கும் ஆபிரகாம் லின்கன் பேச்சுமுறை ஓர் ஒப் புயர்வற்ற தனி முறையாம். அவர் தமது பேச்சை எடுத்தலில் மிக்க

நாட்டங் கொண்டவரென-அறிகிறோம். அவர் தமது முதல் தேர்வுப் பேச்சை ஆரம்பித்து முடித்தமுறை சாலச் சிறப்புடைத்தாம். "நகர நண்பர்களே! நான் யாரென்பதை நீவிர் எல்லீரும் அறிவீர்களெனக் கருதுகிறேன். நான் தான் மிகத் தாழ்மையான ஆபிரகாம் லின்கன். பெருவாரியான எனது நண்பர்களால் இந்த அரசியல் தேர்வுக்கு நிற்கு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டேன். எனது அரசியல் கொள்கைகள் ஒரு கிழமாதின் நடனம்போல் மிகச் சுருக்கமும் இனிமையும் வாய்ந் தவை. நமது சமுதாயத்திற்குப் பொதுவான ஒரு கருவூலத்தை நிறுவுவதில் எனக்கு விருப்புண்டு. எல்லா உள்நாட்டு அபிவிருத்தித் திட்டங்களிலும் எனக்கு மிக்க அக்கரையுண்டு. தாய்நாட்டு வர்த்தக முறைகளின் பாதுகாப்பிலும் என் கடமையைச் செலுத்துவேன். இவை களே என் மனதில் குடிகொண்டுள்ள கருத்துக்களும், அரசியல் கொள்கைகளுமாம். நான் தேர்ந்தெடுக்கப் பட்டால் நன்றி பாராட்டு வேன்; இல்லையாயினும் என்றும் நன்றியோடிருப்பேன். என் கொள் கைகள் இன்றுள்ளனபோல் என்றும் இருக்கும்." இப்பேச்சே வேறொரு நாவலரால் கையாளப்பட்டிருந்தால், அது மணிக்கணக்கில் நீண்டிருக்கு மென்பது மிகையன்று.

காங்கரஸ் நாவலர்கள்

நமது நாட்டுக் காங்கரஸ் மேடைகளிலும் ஆங்கிலப் பேச்சரங்கு களிலும் பீடிகைப் பேச்சில் பெரும்பொழுது செலவழிக்கப் படுகிறது. எல்லாக் காங்கரஸ் தலைவர்களின் முகவுரைகளும் மிக நீண்டும் ஒரே கருவில் வார்த்து அமைத்தவை போலும் விளங்கும். ஆயினும் 1891ம் ஆண்டு நாகபுரியில் கூடிய ஏழாவது காங்கரஸில் தலைமை தாங்கிய **உயர். பி. அனந்தாச்சார்லு** அவர்களின் ஆரம்ப மொழிகள் மிகச் சுருக்கமும் அழகும் பொருந்தியவை. "நண்பர்களே! என் தாய் நாட்டு மக்களே! இவ்வேளை என்னை இவ்வுயரிய தலைமைப் பீடத் தில் அமர்த்தியதற்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். என்னைத் தாங்குவதினும் வேறிரு தக்காரை இப்பீடம் தாங்கியிருந்தால் ஒரு மாபெரும் கௌரவத்தை அஃது இழந்திருக்க மாட்டாது. **பண்டித அயோத்தியநாத்** என்னும் தன்னலமற்ற பெருந்தகையர், தாமடைய வேண்டிய பெருமையைச் சென்னை மாகாணத்திற்கு விட்டுக் கொடுத்தது முதலில் குறிப்பிடத் தக்கது. அக்கண்ணியர் இப்பதவியை ஏற்றுக்கொண்டிருப்பினும், **திவான்பகதூர் எஸ். சுப்பிரமணிய அய்யர்**

அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதியாக உயர்த்தப்படா திருப்பினும் பொருத்தம் குறைந்த நான் இதில் அமர்தற்கில்லை. குறை பாடுகள் நிறைந்த இந்நிலவுலகில் தகுதியுள்ளவர்கட்குப் பொதுக்கடமை களை நிர்வகிக்கும் பொறுப்பு எப்பொழுதும் ஏற்படுவதில்லை. எனவே, நமது நாடு எம்போல்வாரையும் அறைகூவி அழைத்ததற்குத் தலை வணங்கித் தேசக் கடனாற்ற முனைகின்றேன் " எனத் தமது பேச்சை எடுத்திருத்தல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டென்க.

பண்டைய முறை

இந்நாட்டில் தெருக்களிலும் திண்ணைகளிலும் அமர்ந்து புராணம் சொல்லுவோரும், தமிழ் மேடைகளில் இந்நாள் பேச முனைவோரும், காலத்திற் கொவ்வாத பழமையான முறையில் தமது பேச்சுக்களை எடுப்பதாக ஆங்கில மேடைப் பேச்சாளர் பழித்துரைப்பர். கடவுள் வாழ்த்து, குருவணக்கம், அவையடக்கம் ஆகிய பிறவும் அன்னோர் பேச்சின் எடுப்பில் மலியும். இன்றைய மேடைப் பேச்சில் அவை விரும்பப்படாத பழைய கூற்றுக்க ளாயின. ஆயினும், தமிழ்ப் பேச் சாளர் கடவுள் வழிபாடு, குரு வணக்கம், அவையடக்கம் கூறுதற்குச் சில முகாந்திரங்கள் கூறாமலில்லை. பேசுதற்குமுன் அவற்றால் ஒருவர் மனம் ஒருமுகப்பட்டுச் சபை நடுக்கமும், மெய்விதிர்ப்பும் ஒரோவழித் தீருமெனக் கழறுவர். இதில் சிறிதளவு உண்மை இருக்கலாம். ஆயி னும் அதைக் குறித்த விவாதம் ஈண்டு மிகையாம். தற்கால ஆங்கிலச் சொற்பெருக்குகளை யொத்து. வீண் செய்திகளை விடுத்துப் பேச முற் பட்ட ஒன்றிலேயே முனைந்து ஒரு பேச்சாளர் உடனே இறங்குதல் முறையாம். இன்றைய மேடைத் தமிழ்ப் பேச்சில் இது சாலவும் வேண்டப் படுவதாம். பண்டைநாள் முறையில் பேசும் இன்றைய மேடைத் தமிழ்ப் பேச்சாளர், தமது பேச்சில் உடனே இறங்குவதை விடுத்து அவையடக்கங்களை அடுக்கி யடுக்கியே பெரும் பொழுதைப் போக்கிப் பேச்சைச் சுருக்கி விடுவர். தமிழ் மேடைகளில் இந்நாளுள்ள குறைகளில் இது தலையாயதாம். சில உதாரணங்களில் ஆழ்வோம். சபையில் பேசத்தக்கவரென அழைக்கப்பட்டிருந்தும், " கல்வி, அறிவு, ஆற்றல் ஆகியவற்றில் கடைப்பட்ட நான் " என ஒருசிலர் அவை யடக்கம் கூற முற்படுவர். மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு பேச் சாளர், " கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேன் " என்று தம் மைத் தாமே வேறு வர்க்கத்தில் சேர்த்துக் கொள்வர்!. பேரறிவு

படைத்தவரெனக் கொண்டுள்ள சபையில், "புல்லறிவு கொண்ட புன்மையேன்" என்று சுயமதிப்பிழந்து, அனுவசியமாகத் தம்மைத் தாழ்த்திச் சிலர் தம் பேச்சை,ஆரம்பித்தலை எல்லாத் தமிழ் மேடைகளிலும் காணலாம். சில பேச்சாளர், "அறிஞர் குழுமியுள்ள இப்பேரவையில் யான் பேசுதற்கு என்ன இருக்கிறது?" என்ற பீடிகையோடு தமது பேச்சைத் துவக்குவர். வேறு சிலர் பாட்டுக்கள் மூலமாக, "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என்றும், "நீரினின்று பாலைப் பிரித்துண்ணும் அன்னம் போல்" என்றும், "அறையு மாடரங்கும் மடப் பிள்ளைகள் தரையிற் கீறிடில் தச்சரும் காய்வரோ?" என்றும் இன்னோரன்ன பலபல அவையடக்கங்களைக் கூறுவர். அதனோடு அமையாது அவற்றின் விரிவுரைகளிலும், பல மேற்கோள்களிலும் இறங்கி முழங்குவர். அவையடக்கத்தின் மூலம் தன்னடக்கத்தைக் காட்டச் சிலர் உபமான உபமேயங்கள் பல காட்டா நிற்பர். "இமாசலத்தினின்றும் பெருகிவரும் பனி நீரை ஏற்றுக் கொள்ளல் போல் வழியிற் கூடும் சலதாரை நீரையும் கங்காநதி ஏற்றுப் புனிதமாக்கலையொத்துக் கல்விமான்கள் நிறைந்துள்ள இச்சபை எமது பேச்சையும் ஏற்குமென வெண்ணி யான் பேசத் துணிகின்றேன்" எனச் சிலர் தமது பேச்சை எடுப்பதுண்டு. இதில் பொருள் செறிந்த கற்பனை இருத்தல் கண்கூடு. ஆயினும், இஃது உயரிய மேடைத் தமிழ்ப் பேச்சுக்கு ஏற்றதல்ல. சிலர் அவையடக்கம் கூறுமற் கூற நினைந்து, "இதர பேச்சாளர்களைப் போல் யான் அவையடக்கம் கூறப் போவதில்லை; அதைச் சபையோர் குற்றமாகக் கொள்ளற்க" என்று தமது பேச்சை ஆரம்பிப்பது உண்டு. சில விதண்டாவாதிகள், "எல்லாம் அறிந்தவரும் ஏதுமறியாதவரும் இல்லை இவ்வுலகில்" என்ற பாடலைக்கூறி எதிர்ப்பவரைத் தாக்க ஆயத்தமாயிருப்பதை அவையடக்கத்தின் மூலம் காட்டி அச்சுறுத்துவது உண்டு. கடவுள் வணக்கத்திற்கும், ஆசிரியர் வணக்கத்திற்கும், பரிகசித்தற்குரிய அவையடக்கங்களுக்கும் மேடைத் தமிழ்ப் பேச்சில் இன்று இடங் கொடாதிருத்தல் மிக மிக வேண்டப் படுவதாம். கடவுளரையும், எழுத்தறிவித்தோரையும் மறப்போர் உலகின்கண் இல்லை. அங்ஙனம் மறத்தலும் நன்றன்று. எனினும் அத்தகைய அன்பைச் சபையில் வெளிக் காட்டுவதினும் உள்ளூர மனதில் தரித்திருத்தல் மேலாம். ஆகலின், பேசப்புகும் பேச்சில் ஒரு பேச்சாளர் உடனே இறங்குதலே இன்றைய மேடைத் தமிழின் முக்கிய நோக்காதல் வேண்டும்.

சில சீரியர் எடுப்புமுறை

நமது நாட்டில் சீரிய முறையில் தமது சொற்பொழிவுகளை எடுக்க வல்ல தனித்தமிழ் நாவலர்கள் மிகச் சிலரே. ஒரு பேரவையில் மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் தமது பேருரையில், " இம் மாநாகரில் தோன்றிய இச் சைவ சித்தாந்த சபையே தமிழ்நாட்டில் சமய சம்பந்தமாக நிறுவப்பட்ட கழகங்களுள் காலத்தால் முற்பட்டது. இதனைத் தோற்றுவித்தவர்களின் தூய வுள்ளமே இத்துணையாண்டு இச்சபை செழித்து வளர்ந்ததற்குக் காரண மாகும். நன்னிலத்திட்ட வித்தாக இச் சைவப்பைங்கூழ் தோன்றிய பின்னர் இதனைப் பாதுகாக்கும் அன்பர்களுடைய பொருண்மாரியாலும், அறிவுரத்தாலும் இஃது ஆக்கம் பெற்று நற்பயன் விளைவித்து வருகின்றது " என அச்சபையின் எல்லாச் சிறப்புகளும் தோன்ற அவற்றை அழகுபடச் சுருக்கியும் விளக்கியும் காட்டிய ' எடுத்தல் முறை ' ஒரு சிறந்த எடுத்துக்காட் டாவதாம். வேறு சில மேடைத் தமிழ்ப் பேச்சாளரின் பேச்சுப்போக்கையும் நோக்குதல் நன்று. ஆர்வத்தோடு பேச முனையும் சில பேச்சாளர் 'அவைத் தலைவரின் ஆணையை மறுக்கமாட்டாது அதனைச் சிரமேற் றூங்கி' எனத் தமது பேச்சை ஆரம்பிப்பர். ஒருவருக்குப் பிரியமில்லாத ஒன்றைச் செய்ய ஏவுதற்கு அவைத்தலைவருக்கு அதிகாரம் உண்டோ ? அதனைச் சிரமேற் றூங்குதல் ஒரு பேச்சாளரின் கடமையாமோ ? சிலர் தமக்கு முன்னால் பேசியவர்களை உயர்த்த எண்ணி, 'எனக்கு முன்னால் பேசிய அறிஞர் களினும் யான் என்ன அதிகம் பேசப்போகிறேன்!' என்று தமது பேச்சை எடுப்பர். 'முன்னே பேசியவர்கள் யான் பேசுதற்கு இடம் வையாது எல்லாவற்றையும் பேசிவிட்டனர் ' என்று குற்றமான முறை யில் தமது பேச்சைச் சிலர் ஆரம்பிப்பர். காங்கரஸ் மகாசபையில் பல ஆண்டுகளுக்கு முன் தமது பேச்சை எடுத்த ஒருவர், 'நான் சைதாப் பேட்டை விவசாயக் கல்லூரி மாணவன்' எனச் சபைக்குத் தம்மை அறிமுகப்படுத்திப் பின் பேச எத்தனித்தார். சபையோர் அவர் பேச் சைக் கேளாது, 'உமது பாடசாலைக்கே திரும்பிப்போகலாம்' என ஆர வாரித்தனர். தமிழ்ப் பேச்சாளர்களுள் பேசும்முறை தெரிந்தசிலர், முன்னால் பேசியவர்களின் கருத்தைத் தழுவிச் சாமர்த்தியமாக யாவரும் வியக்குமாறு தமது பேச்சை ஆரம்பிப்பர். உதாரணமாக, ஒருமா நாட்டின் தலைவர்தேர்தலை ஆமோதித்த ஒரு பேச்சாளர் 'எனக்கு முன் பேசிய நண்பர் இம்மாசபை பண்டிதமணிகளால் நிறையப் பெற்றிருப்ப

தாக உவமித்துக் கூறினர். அம் மணித்திரள்களினிடையே நடுநாயகமாக ஒளிரும் ஓர் உயரிய மாணிக்கத்தை ஆய்ந்து பொருத்துவதே நாம் இதுபோழ்து மேற்கொண்டுள்ள வேலை' என்று நயமாகவும் உணர்ச்சியோடும் பேசிய முறை சாலச் சிறந்ததாம். வேறொரு பேச்சாளர், "தமையுணர்ந்தோ ராயினும், அவருக்குத் தாம் பிறந்த ஊரில் மதிப்பில்லை என்பது உலகறிந்த ஒரு பழமொழியாம். பழமொழிகள் எக்காலத்தும் பொய்ப்பதில்லை. ஆயினும் நீவிர் அளித்த அன்புமயமான வரவேற்பால் அப்பழமொழியைப் பொய் மொழியாக்கி விட்டீர்கள்" என்று மிக நயம்படத் தமது பேச்சை ஆரம்பித்த வழியுமன்றி நோக்கற் குரியதாம். வேறொரு பேச்சாளர் நேசப்பான்மையுடன், 'நண்பர்களே! தங்கள் முன்னிலையில் நான் தோன்றிப் பத்தாண்டுகள் ஆகின்றன. ஈங்குள்ள நண்பர்களில் பலர் மூப்படைந்துள்ளனர். வாலிபர்களில் பலர் வயது வந்தவர்களாக மாறியுள்ளனர். சில பழைய நண்பர்களைக் காணக்கூடவில்லை. பல புதிய நண்பர்கள் இங்குக் கலந்து கொண்டிருக்கக் காண்கிறேன். ஆயினும் உங்களிடையே எவ்வித மாறுதலும் அடையாதிருக்கக் காண்பது உங்களுடைய பேரபிமானம் ஒன்றுதான்' என்று அவர் பேச்சை ஆரம்பித்த பின் சபையோர் உள்ளம் எவ்வண்ணம் மகிழ்ந்திருத்தல் வேண்டும்? யுவர்களை வரவேற்ற ஒரு பேச்சாளர், 'இந்திய சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்ற இம் மாநகருக்கு உங்களைவரையும் வரவேற்றல் எனக்குத் தந்ததோர் தனி உரிமையாகும்' எனப் பேச்சை எடுத்த முறை ஆமோதித்தற் குரியதாம். மற்றுமோர் இளைஞர் கூட்டத்தில் தேசாபிமானத்தை வலியுறுத்திய ஒரு பேச்சாளர், 'இந்தியா தேசம் இனிப் புத்துயிர் பெறுதல் நாட்டின் யுவர்களைப் பெரிதும் பொறுத்ததாகும். கிரீஸ், ரோம் முதலியவற்றின் நாகரிகங்கள் தேசச் சரிதைகளில் வரையப்படு முன்னரே பண்டைய இந்தியநாடு பலப்பல நாகரிகம் பொலிந்தும், அறிவிற் சிறந்தும் விளங்கிற்று. நம் தேச வாலிபர்களின் தியாகம், உழைப்பு, உறுதி, வீரம் ஆகியவற்றால் மட்டுமே நமது நாட்டை உலக நாகரிக முன்னணியில் மீளவும் நிறுத்துதல் கூடும். இந்தியா தற்போது ஒரு மரித்த உலகிற்கும் புத்துயிர் கொள்ளச் சக்தியற்ற உலகிற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது' என்று பொருள்நயம் ததும்பத் தமது தேசாபிமானத்தை வெளியிட்டுத் தமது பேச்சில் உடனே இறங்கி யிருத்தல் கவனத்திற்குரிய தொன்றும். கைத்தொழிலாளர் கூட்டத்தில் பேசிய ஒரு பேச்சாளரின் ஆரம்பம் இதுவாம்: 'கைத் தொழிலைத் தொன்றுதொட்டுப் பிழைப்புக்கு ஆதாரமாகக் கொண்டு

பொதுமக்களின் ஆதரவை நாடும் நமது நாட்டுத் தொழிலாளர்களில் பெரும்பாலோர் மிக்க நெருக்கடியான இக்காலத்தில் வருமானமின்றி, ஒருவேளை முழு உணவுக்கும் வழியற்று, வருந்தித் தவிக்கின்றன ரென்பது நாமனைவரும் கண்கூடாக் கண்ட உண்மை.' இப்பேச்சாளர் தமது பேச்சை எத்துணைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் உணர்ச்சி யுடனும் எடுத்துள்ளா ரென்பது நன்கு புலப்படும். ஒரு சங்கத் தலைவர்மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவந்த ஓர் அங்கத்தினர், 'நமது சங்கத்தின் தலைவர் எனது கெழுதகை நண்பரென்பதைத் தாங்கள் அறிவீர்கள். எனவே நமது சங்கத்தைக் குறித்துள்ள அவரது நோக்கங்களையும் மனப்பான்மையையும் நான் செவ்வனே அறிந்திருத்தல் கூடுமன்றோ?' எனச் சபையோர் அங்கீகரிக்கும் முறையிலும் தலைவர் மனம் நோகாவண்ணமும் நேரிடப்பேசி, அக் கண்டனத்தின் அவசியத்தையும், அதைக் குறித்துப் பேசத் தமக்குள்ள உரிமையையும் சபையோர் மனதில் பதியுமாறு இரண்டே வாக்கியங் களால் விளக்கிவிட்டார்!

பொறுமைத் துணை

கொந்தளிப்பும் மனக்கசப்பும் கொண்ட ஒரு கூட்டத்தில் ஒருவர் பேசமுனைதல் எளிய காரியமன்று. அதற்கு இன்றியமையாத நிதான உணர்ச்சியும் பொறுமைத் துணையும் அப்பேச்சாளருக்கு மிக மிக வேண்டும். கோபாவேசம் கொண்ட தொழிலாளர்களை நல்ல முறையில் வசப்படுத்திய தென் ஆபிரிக்காப் பிரதமர் ஜெனரல் ஸ்மட்ஸ் என்பாரின் பேச்சு இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். வெறி கொண்ட மக்களைப்போல் கற்களையும் முட்டைகளையும் கொண்டு தாக்கிய சுரங்கத் தொழிலாளர் கூட்டத்தில், "நண்பர்களே! ஜோஹான்ஸ் பர்க்கிலுள்ள சுரங்கத் தொழிலாளர்கள் உலகப் பிரசித்தி பெற்ற பாடகர்களெனப் பெயர் பெற்றுள்ளார்கள். ஆகையால் நீங்கள் நன்றாகப் பாடக்கூடியவர்கள். எனக்காகத் தயைபுரிந்து ஒரு பாட்டுப் பாடுவீர்களா?" எனக் கேட்டுக்கொண்டு அவர்களுடன் தாமும் கூடிப் பாடி அவர்கள் மனக்கசப்பையும் எதிர்ப்பையும் போக்கித் தமது பேச்சை ஆரம்பித்த முறை குறித்துக் கொள்ளத் தக்கதாம். ஆலைத் தொழிலாளர் கூட்டமொன்றில் ஒரு பேச்சாளரை இடை மறித்துத் தடைசெய்யச் சிலர் முனைந்தனர். அதை அறிந்த அவர் பேசியது இதுவாம்: "சகோதரர்களே! நானும் ஒரு தொழிலாளி யென்பதை நீங்களறிவீர்கள், நமது சுக துக்கங்களில் பேதமில்லை.

உங்கள் மனைவி மக்களோடு நீங்கள் பட்டினி கிடக்க நேரிடுமேல் நானும் அதே துன்பத்தை அனுபவிப்பேன். நம்மில் ஒருவர் தமது இரத்தத்தைச் சிந்த நேரிடின், நானும் என் இரத்தத்தைச் சிந்தத் தயாராக விருப்பேன். இவ்வேலை நிறுத்தத்தின் முடிவைக் குறித்துத்தான் நம்மில் கருத்து பேத மிருக்கிறது. என் கருத்தை விளக்கிய பின் அதைக் கொள்ளவோ தள்ளவோ உங்களுக்கு முழு உரிமை யுண்டு என்பதை உணர்வீர்களானால், என்னைப் பகைக்கவும் வெறுக்கவும் பேச்சை இடைமறிக்கவும் காரணமில்லை. நான் தொழிலாளர்களின் நண்பன்மட்டு மல்ல. உங்களைப் போலவே முதலாளிகளின் நலனிலும் கருத்துடையவன். இனி உங்கள் பொறுமையின் துணைகொண்டு என் கருத்துக்களை விளக்குவேன்." இவ்வாறு அவர் தமது பேச்சைத் துவக்கினார். இப்பேச்சைக் கேட்டபின் எத்தொழிலாளி இவர் பேச்சை இடைமறிப்பார் ?

எடுத்தல் முறைகள்

சில பேச்சாளர் பல கேள்விகளோடும் கதைகளோடும் தமது பேச்சை எடுப்பதுண்டு. சில உதாரணங்களைக் காண்போம். ஒரு பேச்சாளர், 'முப்பத்தைந்து கோடி மக்களைக் கொண்ட நமது நாட்டில் படித்தவர்களின் எண்ணிக்கை யாது? நம்முள் நூற்றுக்கு எத்துணைப் பேர் கற்றவர்கள்? இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் படித்தவர்களின் எண்ணிக்கை யாது? இவற்றிற்கும் நமது நாட்டிற்கும் பெரும் வித்தியாசம் இருக்குமேல், அதற்கு உத்திரவாதி யாவர்?' எனப் பல கேள்விகளைக் கொண்டு தமது பேச்சை ஆரம்பித்தார். ஒரு மது விலக்கு மாநாட்டில் காலஞ்சென்ற திவான் பகதூர். எம். ஆதிநாராயண அய்யா கீழ்க்கண்டவாறு தமது பேச்சைத் துவக்கினார் :

"ஒரு நாள் அதிகாலையில் சர். பிட்டி. தியாகராயச் செட்டியாரைப் பார்க்க அவர் தோட்டத்திற்குச் சென்றேன். அணித்தே யிருந்த ஒரு தென்னந் தோப்பில் சிலர் கள்ளிறக்கிக் கொண்டும் பாளை தட்டிக் கொண்டு மிருந்ததை நோக்கினேன். சர். செட்டியார் அது போழ்து கூறியது இது போழ்து என் நினைவிற்கு வருகின்றது. 'அதிகாலையில் புத்தம் புதிய கள்ளை இறக்கியவுடன் அருந்தினால் அது தொழிலாளிகட்கு சுறு சுறுப்பைக் கொடுக்கும் நல்ல பானமெனச் சட்ட சபையில் நான் கூறியபோது நகையாடினர். அதன் உண்மையை இங்கு நீங்களே சோதித்தறியலாம்'. அப்பேறு இன்றுவரை எனக்குக் கிட்டவில்லை". இவ்வாறு தம் உண்மை அநுபவத்தை நளினமாகக் கூறி, சபையோர்

கவனத்தை ஒரு நொடியில் ஈர்த்தார். புராண, இதிகாசங்களிலுள்ள கதைகளைச் சில பேச்சாளர் சுருக்கிச் சொல்லித் தமது பேச்சை ஆரம்பித்தல் குற்றமல்ல. ஆனால் கிளைக் கதைகளைக் கூறிக் கூறிக் காலம் போக்குதல் சரியன்று. சிறைச்சாலைச் சீர்திருத்தத்தில் தமது ஆயுள்வரை ஈடுபட்டிருந்த திவான்பகதூர். பி. கேசவப்பிள்ளை எனும் பெரியார் தமது அநுபவத்தைக் கூறுமுகத்தான், " நான் ஒரு சிறைச் சாலையைப் பார்வையிட்ட போது தோட்டவேலை செய்து கொண்டிருந்த ஒரு குற்றவாளி பாடிக் கொண்டிருக்கக் கண்டேன். அக் கைதி மட்டும் உல்லாசமாக விருப்பதின் காரணம் யாதென வினவினேன். அதற்கு அக்கைதி பகர்ந்த விடை யாது? 'ஐயா! என்னுடன் என் கொட்டடியில் குறைந்தது இரண்டு நாளாகிலும் வதிந்தால் அதன் இரகசியத்தை அறிவீர்க'ளெனப் பதிலிறுத்தான்!" என உண்மை அநுபவத்தை நளினமாகக் கூறிச் சபையை நகைப்புக்குட்படுத்தித் தமது பேச்சைச் துவக்கினரென்ப. எனவே, கதைகளைக் கூறி தமது பேச்சை ஒருவர் ஆரம்பித்தல் காலங் கண்ட முறையாம். பாட்டுக் களோடும் ஒருவர் தமது பேச்சை ஆரம்பித்தல் குற்றமன்று. பெருங் கொடையாளரும், தமிழ்ப் பேராசிரியரும், சிறந்த நாவலருமான காலஞ் சென்ற உயர்திரு கா. நமச்சிவாய முதலியார் இனிய குரலும் சொற் போக்கு நயமும் வாய்ந்தவர். அவரது வெளித்தோற்றம் மிக வனப் புடையது. பொது மேடைகளில் செவிக்கினிய தமது பேச்சுடன் சில பொருத்தமான பாடல்களை இசையோடு பாடிச் சபையைப் பரவசப் படுத்தல் அவரது தனிச் சிறப்பாம். காலஞ்சென்ற மகா மகோபாத்தி யாய டாக்டர். உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் பேச்சில் இன் னிசைப் பாடல்கள் பல மிளிரும். இவ்வழி எவரும் குற்றம் கண்டா ரில்லை. எனவே, நல்ல வாக்கியத் தொடர்களானாலும், கதைகளானா லும், பாட்டுக்களானாலும் அவற்றைச் சபையின் நோக்கமும் அவசிய மும் உணர்ந்து, ஐந்து அல்லது ஆறு சுவைமலிந்த வாக்கியங்களைக் கொண்டு தமது பேச்சை எடுத்தல் நல்லபேச்சாளரின் இலக்கணமாம்.

கற்பனைக் கதைகள்

கிறிஸ்து மதாச்சாரியாரான இயேசுநாதர் தமது கருத்துக்களைக் கற்பனைக்கதைகளின் உவமைகொண்டு மக்களுக்குக் கூறி அறிவுச்சுடர் கொளுத்தினரென விவிலிய நூல் கூறும். சுலபத்தில் விளங்கக்கூடிய உவ மானங்களைக் கூறி ஒருவர் கருத்தை விளக்குதல் மிகத் தொன்மையான பேச்சு முறையாம். நமது மாகாண முன்னாள் முதன் மந்திரி கனம் சக்கர

வர்த்தி இராஜகோபாலாச்சாரியார் (இந்நாள் கவர்னர்-ஜெனரல்) இவ் வழியைப் பெரிதும் பின்பற்றுபவர். அவர் தமது ஆங்கிலப் பேச்சிலும், தமிழ்ச் சொற்பெருக்குகளிலும் மக்கள் மனதில் பதியக்கூடிய பொருத் தமான கற்பனைக் கதைகளையும், உவமானங்களையும் சுருங்கச் சொல்லும் இயல்புடையார். அவர் ஒரு சமயம் சட்டசபை விவாதத்தில் தமது பேச்சை ஆரம்பிக்கையில் தாம் கண்ணாடிச் சாமான்களைக் கோணிப் பையில் கட்டி முதுகில் சுமந்து செல்லும் ஒரு தெரு வியாபாரி யென் றும், மற்றோர் இடத்தில் ஒரு சமூகத்தைக் குறித்துப் பேசியபோது, அவர்கள் ஜனக்கட்டாகிய மாவும் பணக் கட்டாகிய சர்க்கரையும் இருந் தும் ஒற்றுமையாகிய நெய் இல்லாமையால் லட்டுப் பிடிப்பதற்கில்லை யென்றும் பேச்சைத் துவக்கினார். இம் முறையும் சபையோரால் ரசிக்கப்படுவதாம். ஆயினும் எல்லாப் பேச்சாளரும் இம் முறையைக் கையாளற்கியலாது. அதற்கு நிரம்பிய நூலறிவும், உலகானுபவமும், நினை வுத் திறனும், சொல்வளமும் மிக மிக வேண்டப்படுவதாம். உபமான உபமேயங்களை ஆய்ந்தெடுத்து இடமறிந்தும் அளவோடும் உபயோகித் தல் அம் முறையின் தனிச்சிறப்பாம். அவை மிகினும் குறையினும் பொருத்த மற்றவைகளாகும். ஆகலின், சபையை வசீகரிப்பதற்குப் பேச்சாளரின் எடுத்தல் அல்லது ஆரம்பம் எத்துணை உதவுகின்ற தென்பதை மேலே காட்டிய உதாரணங்களே நனி விளக்குவனவாம்.

பேச்சின் இணைப்பு

ஒரு நல்ல சொற்பொழிவின் எடுத்தலுக்கும் அதனை அடுத்து வரும் இதர இரண்டு கூறுகளுக்குமுள்ள இணைப்பைச் சிறிதளவு ஆராய்தல் ஈண்டைக் கேற்புடைத்தாம். ஒரு பேச்சின் எடுத்தலும், முடித்தலும் நன்கமைந்திருந்தால் இடைப் பேச்சிலுள்ள சில குறை பாடுகளில் சபையோர் கவனம் செல்லாது. இதனால் ஒரு பேச்சாளர் தமது பேச்சின் மத்திய அல்லது இடைப்பாகத்தை அசட்டை செய் யலாமெனக் கருதல் கூடாது. இடைப்பாகத்தில் தாம் பேச எடுத்துக் கொண்ட செய்தியின் நுட்பங்களையும் தமது கருத்துக்களையும் பல தலைப்பின் கீழ் வரிசைப் படுத்திப் பேச்சை அலசியும் பூரித்தும் பேசுதல் முறையாம். பேச்சைத் தொடங்கியதிலிருந்து முடிபு கூறும் வரை கூறப்படும் பொருள்கள் சங்கிலித் தொடர்போல் பின்னி நிற்றல் வேண்டும். ஒரு பேச்சில்வரும் பல பிரிவுகளில் ஒரு பிரிவிற்கும் மற்றொரு பிரிவிற்கும் இணைப்பு அல்லது பிணைப்பு இல்லாத ஒரு பேச்சு பேச்சே யல்ல. சொற்பொழிவின் பேச்சுத் தலைப்பிற்கேற்ப அதன் முழுக்கருத்

துக்களும் அமைந்திருத்தல் இன்றியமையாததாம். ஒவ்வொரு பேச்சுக்கும் - ஏன் - வாக்கியத் தொடர்கட்கும் குறிக்கோள் இருத்தல் மிக வேண்டப்படுவதாம். இதனை ஒரு பதத்தால் 'தொடுத்தல்' எனக் கூறலாம். ஆகலின், ஒரு நல்ல மேடைப்பேச்சுக்கு 'எடுத்தல்', 'தொடுத்தல்', 'முடித்தல்' ஆகிய மூன்று பாகங்களும் மிக்க கவனத்திற் குரியனவாம்.

பேச்சாளர் தமது பேச்சின் இடைப்பாகத்தை அசட்டை செய்வாராயின், அவர் பேச்சின் 'எடுத்தலும்', 'முடித்தலும்' எத்துணை நயமாக விருப்பினும் அவைகள் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கப் பட்டவைகளாகவும், பேச்சாளரிடம் சொந்தச் சரக்கு அதிகம் இல்லையெனவும் முடிவுகட்ட இடந்தரும். ஒரு பேச்சின் இடைப்பாகத்தைப் பல பிரிவுகளாக்கிப் பேசும்போது ஆரம்ப வார்த்தைகளை நன்கமைத்துப் பேசுதல் முறையாம். 'தொடுத்த'லின் உட்கருத்துக்களை அடுத்த பகுதியில் மேலும் விளக்குவாம்.

சபையைக் களிப்பித்தல்

ஒரு பேச்சாளர் பேசுமிடத்தில் நின்று தமது பேச்சை எடுக்குமுன் சுற்றிலும் உள்ளவர்களை ஒருமுறை புன்முறுவலோடு நோக்குதல் நன்று. நமது நாட்டு மந்திரக் கலைகளில், 'சபையோரை உற்றுநோக்கல் ஒரு சிறந்த வசியமுறை' யெனக் கூறப்பட்டுள்ளது. சபையில் தமது கருத்து அல்லது கொள்கைகளுடன் இணங்கத்தக்கவரின் பெருக்கத்தையோ அல்லது குறைவையோ அதுபோழ்து கண்டறிய வியலும். மாறுபாடான கொள்கையுடைய கூட்டம் மிகுந்திருப்பினும், அன்னோர் தமது கொள்கைகளை இரகசியமாக ஆண்டுப் பரப்பிக்கொண்டிருப்பினும் அவற்றைப் பேசுமுன்னரே அறிந்துகொண்டு அதற்கேற்பத் தமது பேச்சை ஆரம்பித்தல் முறையென்ப. பொதுமேடைகளில் நிகரற்று ஒளிவீசிய மறைத்திரு ஞானியார் சுவாமிகளும், சங்கீத கதாப்பிரசங்கத்தின் தந்தையரான காலஞ்சென்ற உயர்திரு தஞ்சை கிருஷ்ண பாகவதரும் இம்முறையைக் கையாண்டே வந்தனர். சில வேளை பாமரமக்கள் அவர்களிருவரும் மந்திர சக்தியால் சபையோரைப் பிணிப்பதாகத் தவறுபடக் கருதினர். இன்றும் சில பேச்சாளரைக் குறித்து மக்கள் அவ்வாறே கருதிவருகின்றனர். இது கிடக்க.

பெண்மக்களைப் போற்றல்

சபையில் பெண்மக்கள் குழுமியிருந்தால், ஆரம்பத்திலேயே இரண்டொரு மொழிகொண்டு அவர்களைத் தக்கவாறு குறிப்பிடுதல் பேச்சாளர்

அன்னோர் ஆதரவைத் தவறாமல் பெறுதற்கு ஒரு சிறந்த உபாயமாம். இதற்கோர் உதாரணம் காட்டுதும். ஒரு சங்கத்தின் ஆண்டு விழாவில் உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் தலைமை உரை நிகழ்ந்த வேளை, பெண்கள் பகுதியில் ஒரு குழந்தை வீறிட் டழுதது. சபையோர் கண்கள் அப்பக்கம் திரும்பி வெறுத்து நோக்கின. தலைவர் தம் முன்னுரையை நிறுத்தித் தாமும் அப்பக்கம் நோக்கி, " தாய்மார் களுக்கு ஒரு விண்ணப்பம். குழந்தையை வளர்ப்பதுதான் பெரிய திறமை ; அரிய தொண்டு ; அதைவிட உலகில் உயர்ந்த பேறு வேறில்லை. குழந்தையைக் கைவிட்ட ஒரு சமயம் சமயமல்ல ; எச்சங்கமும் விழாக் கொண்டாட வேண்டியதில்லை. என் முன்னுரையைவிட அக்குழந்தை யின் வாழ்வே எனக்குச் சிறந்தது. ஒரு குழந்தையின் அழுகையைப் பொறுப்பதே தாயின் கடமை. அதனைச் சகித்திருப்பதே சபையின் கடமை. அதனைச் சகியாதவர்கட்குக் கடவுள் ஏன் ? அறம் எற்றிற்கு ? சங்கம் ஏன் ? விழா எற்றிற்கு ? இக்குழந்தையின் தாயை நான் மன மாரப் போற்றுகிறேன். அந்த அம்மையாருக்கு என் மனமார்ந்த நன்றி. சங்கக் கூட்டத்திற்கு வரும்போதும் குழந்தையைக் கைவிடா மல் எடுத்துக்கொண்டு வந்த அம்மையாரைப் பாராட்டுகிறேன். குழந்தை களைத் தனிமையில் வீட்டில் விட்டுச் சினிமாக்களுக்குச் செல்லுதல் தாய்மையல்ல ; அது பேய்மையாகும் " எனத் தமது குழந்தை உள்ளத் தைத் திறந்துகாட்டிப் பெண்களை உற்சாகப்படுத்தினர். அக்குழந்தை யின் அழுகையும் ஓய்ந்தது ! இவ்வழி மேடைப்பேச்சாளரின் முழுக் கவனத்திற் குரித்தாம்.

விளிக்கு முறை

மேலைநாடுகளிலும், இந்நாட்டு ஆங்கில அரங்குகளிலும் ஒரு பேச் சாளர், " சீமாட்டிகளே ! சீமான்களே !" என விளித்துப் பேச்சை ஆரம்பித்தல் வழக்காம். ஏனெனில், அந்நாடுகளில் பெண்டிர் நிலைமை நமது நாட்டிலும் பன்மடங்கு உயர்வானது. பண்மொழி பெற்ற பெண் மணிகளை ஆண்டு நிறையக் காண்போம். அது பற்றியே பெண்மக்களை முன்னும், ஆண்மக்களைப் பின்னும் வைத்து மரியாதையாக விளிக்கப்படு கிறது. ஒரு பேச்சாளர் பொதுப்பட " அன்பர்களே ! நண்பர்களே !" என இனிமையாகக் கூறுதல் இந்நாள் வழக்காயிற்று. சபையோரை விளிக்குமுன் அவைத் தலைவரை முன்வைத்து விளித்தல் மரபாம். சில மேடைகளில் " தலைவர் அவர்களுக்கு என் தாழ்மையான வணக்கம் " என்று கரங்குவித்துச் சில பேச்சாளர் தமது பேச்சை எடுப்பதுண்டு,

விளிக்கும் முறையிலேயே தலைவரை முன்னிறுத்திக் கூறுவதன்மூலம் பேச்சாளர் அவருக்கு முன்மரியாதை காட்டலால், வேறு தனி வணக்கமும் அஞ்சலியும் மிகையாம்.

கேள்வியும் விடையும்

பேச்சாளர் பேச்சை ஆரம்பிக்குமுன் அல்லது பேசிக்கொண்டிருக்கும்போது சபையினின்று பல சீட்டுகளும், கேள்விகளும் கிளம்புவ தியல்பு. கேள்விகள் நேர்மையாக விளக்கப்படுதற் குரியவையாக இருப்பின் அவைட்குத் தனித்தனியே பதிலிறுக்காது பேச்சின் தொடர்ச்சியாகவே தக்க விடை பகர்தல் மேலாம். அதை விடுத்து 'இதற்குப் பதில் பின்னர் சொல்லுவேன்' எனச் சில பேச்சாளர் கூறித் தமது போக்கிலேயே பேசிக்கொண்டிருப்பர். இதனைச் சபையோர், அறியாமை அல்லது கோழைத்தனம் என மதித்தல் இயல்பாம். ஒரு பேச்சாளர் அளிக்கும் பதில் சபையோருக்கு ஒரு வினவிடையாகத் தோன்றுதவாறு அமைத்துப் பேசுதல்வேண்டும். எழுதிவரும் சீட்டுக்களையோ, முக்கியக் கேள்விகளையோ கோபக்குறியுடன் நோக்குதல் ஆகாது. ஒரு பேச்சாளர் நேர்மையற்ற சீட்டை நோக்கியபின் புன்னகையுடன் தமது பேச்சைத் தொடர்ந்து பேசுவாராயின் அச்சீட்டு அனுப்பியவர் தமது குற்றத்தை உணர்ந்து பதிலை எதிர்பாரார். பொது மேடைகளில் ஓராயிரம் சீட்டுக்கள் கைக்கு வந்தாலும், மேடைத் தமிழ்க் காளமேகம் உயர்திரு. ஈ. வே. ரா. பெரியார், அவைகளுக்கு விடையிறுக்காது விடுப்பதில்லை. சீட்டுக்கள் ஒவ்வொன்றையும் தனித் தனியே எடுத்து அவைகட்குப் பொருத்தமான விடை பகர்வார். அவ்வேளை கைதட்டல் எழும்; நகைப்பு மிகும்; 'வெட்கம், வெட்கம்' எனும் கூச்சல் சபையினின்றும் எழும். எனவே சபையை வசீகரப் படுத்துவதே தமது பேச்சின் நோக்கம் - தமது கடமை என்பதை உணரும் எப்பேச்சாளரும், ஆரம்பப் பேச்சாளராயினும் - பண்பட்ட பேச்சாளராயினும் அதற்கேற்ற முறையில் பேசிச் சபையோர் களிக்குமாறு தமது உள்ளம், உரை, செயல் ஆகியவற்றில் முழுக்கவனம் செலுத்திப் பேச்சை ஆரம்பித்தலும் பேசி முடித்தலும் மிக வேண்டப் படுவனவாம்.

12. பேச்சைத் தொடுத்தல்

நல்ல மேடைத்தமிழ்ப் பேச்சுக்கு, 'எடுத்தல்', 'தொடுத்தல்', 'முடித்தல்' எனும் மூன்று பாங்கரும் கவனத்திற்குரித்தென முந்திய பகுதியில் வலியுறுத்தப்பட்டது. அம்மூன்று பாகங்களின் இணைப்பைக் குறித்தும் ஆண்டுத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. ஈண்டுத் தொடுத்தலின் இலக்கணத்தைத் தனியே சிறிது விளந்து கூறல் முறையாம். அன்றலர்ந்த மலரை அழகுபட மாலையாகத் தொடுத்தல் இதற்கோர் தக்க எடுத்துக்காட்டாம். மலர்களின் மணபேதம் நிறபேத முணர்ந்து அவற்றை இடையிடையே அமைத்து மாலைகள் தொடுக்கப் படுவதியல்பு. அதுபோலவே இடையிடையே மணமிக்க வார்த்தைகளும் குணமிக்க கருத்துக்களும் பிணைந்து வெளிவருதலே ஈங்குத் தொடுத்தல் எனப்படுவதாம். அவ்வகைத் தொடுத்தல் நான்கு பெரும் பிரிவினைக் குள் அடங்கும். அவை 'தெளிவு', 'தொடர்பு', 'மேற்கோள்', 'புள்ளி விவரங்கள்' எனப்படுவனவாம்.

விளக்கப் பேச்சு

ஒரு பேச்சில் எடுத்தல் தொட்டு, முடித்தல் ஈறாக எல்லாப் பாகங்களும் தெளிவாகவும் விளக்கமாகவும் இருத்தல்வேண்டும். பேச்சு ஒரு குறித்த தலைப்பினையும், அத்தலைப்பிற்கேற்ற பல பாகுபாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு தலைப்பின் வரம்பினின்றும் வேறு பேச்சுக்கோ அல்லது வேறு தலைப்புக்கோ எக்காரணத்தை முன்னிட்டும் பாயலாகாது. 'கல்வி' எனும் பொருள் பற்றி ஒருவர் பேசவேண்டு மானால் அதனைக் 'கல்வி', 'கல்வியின் பல பாகுபாடுகள்', 'அதனால் உறும் பயன்', முற்காலக் கல்வி', 'தற்காலக் கல்வி', 'நாட்டுக்கு அவசியமான கல்வி', 'அதற்கான வழிவகைகள்' எனப் பல பிரிவினை களாக்கி அவைகளை வரிசைக்கிரமத்தில் தெளிவாகப் பேசுதல்வேண்டும். அவைகட்கு முன்னால் 'எடுத்தலும்', பின்னால் 'முடித்தலும்' பொருத்தமாகக் கூறுதல் மரபென்ப.

மொழி நடை

பேசும் மொழிநடை, ஒத்து நயம்பட இருத்தல் நல்ல பேச்சின் இலக்கணமாம். பேச்சின் பல பாகங்களும் ஒல்லும் வகை ஒத்த அள வினதாக அமைந்திருத்தல் நன்றாம். சில பகுதிகள் பெருகியும், சில பகுதிகள் அருகியும் இருந்தால் அவைகளைச் சபையோர் சுவைத்தல்

அரிது. பேசும் நடை மிகத் தெளிவாகவும், சிக்கலற்றும், கேட்போருக்கு விளங்கும்படியாகவும், மனதில் நன்கு பதியும்படியாகவும் இருத்தல்வேண்டும். சில பேச்சாளர் தமது பெருமையையும் நூலறிவையும் வெளிப்படுத்தும் நோக்கத்தோடு பெருநேரம் பேசுவர். சிக்கலும் நீளமுமான வாக்கியத் தொடர்களை, கேட்போர் அறிந்தால் என்ன, அறியாவிட்டால் என்ன, தமது பேச்சு வன்மை புகழப்பட்டால் போதுமென்றெண்ணிப் பேசுவோர் பலருண்டு. அறியாத பொருளை - கேட்போர்க்கு விளங்காத நடையில் - பேசின் அது விழலுக்கு இறைத்த நீராகு மன்றோ ?

தெளிவான பேச்சுக்களும் பல திறத்தனவாம். கல்விமான்களுள்ள சபையில் பேசப்படும் நடை இளைஞர் கூட்டத்தில் தவிர்க்கப்படல்வேண்டும். நகரங்களில் நடைபெறும் கற்றோர் சபைகளில் பேசப்படும் மொழிநடை கிராம சபைகளுக்குப் பொருந்தியதன்றாம். சபையோரின் அறிவுக்கு மீறி, நகர சபைகளிலாயினும் கிராம சபைகளிலாயினும் பேசுதல் முறை தவறாம். ஒல்லும் வகை தூயதமிழில் பிழையின்றிப் பேசுதலே நல்ல பேச்சாளரின் குறிக்கோ ளாதல்வேண்டும். தவிர்த்தற்கரிய கட்டாயம் ஏற்பட்டாலன்றிப் பிறமொழிகளை மணிப்பிரவாளமாகக் கலந்து பேசுதல் பெரும் பிழையாம். பேசும்போது பல புத்தகங்களிலுள்ள சில பகுதிகளை வாசித்துக்காட்டலும், பிற மொழியிலுள்ள பகுதிகளை மொழிபெயர்த்துக் கூறலும் மிகத் தாழ்ந்த முறைகளெனக் கூறுப.

பேச்சுத் தொடர்பு

'தொடர்பு' என்பது ஒன்றைத் தழுவி மற்றொன்று இருத்தல் எனப் பொருள்படும். சில தனித்த எழுத்துக்களின் தொடர்பு 'மொழி' அல்லது 'வார்த்தை' எனவும், பல வார்த்தைகளின் தொடர்பு 'வாக்கியம்' எனவும், பல வாக்கியங்களின் தொடர்பு 'பேச்சு' எனவும் கொள்ளப்பெறும். ஆதலின் ஒரு முழுப் பேச்சும் அவ்வாறே தொடர்பு கொண்டும், பின்னல்போல் பிணைந்தும் இருத்தல்வேண்டும். ஒரு வாக்கியத் தொடரில் ஏதேனும் ஒரு மொழி அல்லது வார்த்தையை அகற்றிவிடின் அவ்வாக்கியத்தொடர் பொருளற்றதாகவும், வேறு வார்த்தைகட்குப் பொருந்தாதிருத்தலும் நல்ல மொழிநடை யெனப்படும். ஒரு வாக்கியத் தொடரிலுள்ள சில வார்த்தைகளை நீக்கி ஒருவர் பேசிவிடக் கூடுமாயின், அது நல்ல பேச்சுமுறை யெனவும் தொடர்புடையதெனவும் கருதுவதற்கில்லை. விளங்கச் சொல்லில், தொடர்

புடைய ஒரு சொற்றொடரில் வரும் வார்த்தைகள் ஆய்ந்தெடுக்கப்பட்டு தக்க இடங்களில் தக்கவாறு பொருளின் அளவறிந்து உபயோகித்தல் வேண்டுமென்பதாம். ஒரு பெரிய நிகழ்ச்சிக்குரிய ஒரு பதத்தைச் சிறிய காரியத்தை விளக்குதற்கு உபயோகித்தல் தவறும். ஒருவரின் ஆழ்ந்த மனத்துயரை 'அழுதல்' எனும் சொற்கொண்டு விளக்கப் புகுதல் பொருந்துமோ ?

கருத்துத் தொடர்பு

இனி, கருத்துத் தொடர்பும் பிணைத்து வருதல் முறையாம். ஒரு கருத்தினின்றும் வேறு கருத்துக்குப் பொருத்தமின்றிப் பாய்தல் குற்றமான பேச்சாகும். வெளியிடும் கருத்துக்களும் வரிசைக்கிரமத்தில் வெளிவரல் வேண்டும். முன்னே கூறவேண்டியவற்றைப் பின்னும், பின்னே கூறவேண்டியவற்றை முன்னும் கூறுதல் குற்றமாம். பேச்சின் முற்பகுதியில் கூறிய ஒரு கருத்தைப் பிற்பகுதிகளில் திருப்பிக் கூறுதல் 'கூறியது கூறல்' எனும் வழூஉவின்பாற்படும். ஒரு கருத்தைப் பன்னிக் கூறவேண்டுமாயின், அதனை வேறு வாக்கியத் தொடர்கொண்டு நளினமாகக் கூறுதல்வேண்டும். ஒரு செய்தியின் முக்கியத்திற்கேற்ப, கேட்போர் மனதில் அதனை முற்றும் பதியுமாறு செய்தலே ஒரு நாவலரின் கடனும். சிசரோ எனும் நாவலர் இதில் ஒப்புயர்வற்றவர். ஒன்றைக் கூறும் முறையில் கூறலும், பல நோக்கினின்றும் வார்த்தை வேறுபாட்டால் அச்செய்தியை முற்றிலும் ஊன்றிப்பேசி முடித்தலும் அவரது தனிச் சிறப்புக்களாம். மேற்குறித்த வழூஉவின்பாற் படாது, ஒரு செய்தியை அலசியும் பூரித்தும் சபையோர் கைக்காதவாறும் குற்றங் காணாதவாறும் பேசுதல் வழக்கென அவர் சரித்திரம் பகரும். எனவே, ஒரு செய்தியைத் தொட்டு, அங்ஙனே விட்டுவிடாது பல்வேறு வாக்கியத் தொடர்களாலும் கருத்துக்களாலும் மக்கட்கு நன்கு விளங்கும்வரை பேசுதல் மரபேயாம். ஒரு மரத்தின் உபயோகத்தை ஒரு பேச்சில் விளக்குங்கால், அதன் வித்தினின்றும் படிப்படியே அதன் கனிக்குச் செல்லுதல்போல் ஒரு பேச்சின் கருத்தும் அதன் அடிப்படைத் தத்துவத்தினின்றும் படிப்படியே அதன் உச்ச நிலையைச் சென்றடைதல் முறையாம். இங்ஙனமாகக் கிரமமறிந்தும், அளவறிந்தும் பேசுதலே சிறந்த பேச்சு முறையாம்.

ஒரு வீடு அல்லது கட்டிடத்திற்கு அழகும் பார்வையும் தருவன எவை ? நெடுஞ்சுவர் மயமான கட்டிடங்கள் வெறுக்கப் படுவனவாம். இடையிடையே அழகிய மாடங்கள், சாளரங்கள், வளைவுகள், தூண்கள்


போன்றவை ஒரு மாளிகையை மேலும் அழகு செய்வனவாம். அது போல் ஒரு பேச்சுக்கு வாக்கியங்களின் நீளமும் கருத்துப் பொலிவும் குரலோசையும் மட்டுமே போதியன அல்ல. இடையிடையே சபையோர் சுவைக்கத்தக்க எடுத்துக்காட்டுகள், உவமைகள், சிறுகதைகள், ஆன்றோர் மொழிகள் மிடைந்த பேச்சே அழகிற் சிறந்த பேச்சாம்.

மேற்கோள் கூறல்

ஆன்றோர் மொழிகளினின்றும் சில ஆதாரங்களையும் மேற்கோள்களையும் கூறும் அவசியம் ஒரு பேச்சில் ஏற்படுவதுண்டு. அஃது எக்காலும் இன்றியமையாத தல்ல. அவ்வித மேற்கோள்கள் பாடல்களாகவும், வாசகங்களாகவும், கதைகளாகவும் இருப்பது இயல்பாம். வாசகங்களாகவும் கதைகளாகவும் இருந்தால் அவை கேட்போருக்கு எளிதில் விளங்குவனவாம். ஆயினும் பாடல்களாயின், சில வேளை அன்வயத்திற்கும், பதவுரைக்கும், விரிவுரைக்கும் அவசியம் ஏற்படும். அவற்றை மேலும் விளக்குதற்குச் சில கதைகளும் பல கிளைக்கதைகளும் வளர்வனவாம். பேச்சின் இணைப்பு அவற்றால் இற்று விடுதல் ஒருதலை. பேச்சுக் கருத்துக்கள் இலவம் பஞ்செனக் காற்றில் பறந்தோடும். மேற்கோள்கள் கம்பராமாயணக் கவிகளாயின் இன்னிசை, தாளம் முதலிய துணைக்கருவிகளும் தலைகாட்டும். திருக்குறள் மேற்கோளாயின் தொடர்ந்த பல செய்யுட்களால் பேச்சுப் பொருளை விளக்கும் அவசியம் ஏற்படும். அளவுக்கு மிஞ்சிய செய்யுள்களை ஒப்புவிப்பதும் பாடுவதும் நல்ல மேடைப்பேச்சுக்கு அடுத்ததல்ல. ஒரு செய்யுளைக் கூறிப் பொருளை நன்கு விளக்கும் அவசியம் ஏற்படுமேல், அச்செய்யுளின் கருத்தைத் தமது சொந்த மொழியில் விளக்கிப் பின்னர் அச்செய்யுளைக் கூறுதலே சிறந்த முறையென்க. கருத்துப் பொலிந்த ஆன்றோர் வாசகங்களை ஆதாரமாகக் கூறினால், அவற்றைத் தெளிவுடன் கூறி, முக்கிய பாகங்களைத் தனிப்பட விளக்கிப் பொருள் உரைத்தல் ரசிக்கப்படுவ தொன்றும். மேலும், அக்கருத்துக்களைத் தமது சொந்த நடையில் விளக்கமுயலாது, ஆன்றோர் வாக்கியங்கட்குப் பெருமை தந்து, அங்ஙனமே அறைதல் சாலச் சிறப்புடைத்தாம்.

புள்ளிகள்

ஒரு பேச்சினிடையில் புள்ளி விவரங்கள் வருவதுண்டு. சிறிய புள்ளிகளையும், கணக்குகளையும் நினைவுகொண்டு கூறுதற் கியலும். ஆயினும் ஒரு சபையின் வரவு செலவுக் கணக்குகளையும், அரசியலார்



1. பண்டித மதன்மோகன மாளவியா, 2. சுபாஷ் சந்திரபோஸ், 3. டாக்டர் P. சுப்பராயன், 4. தாதாபாய் நௌரோஜி, 5. S. சீனிவாச அய்யங்கார், 6. T. பிரகாசம், 7. சேலம் - C. விஜயராகவாச்சாரியார்.

பொருளாதாரத் திட்டங்களையும் எழுதிப் படித்தலே முறையாம். முற்கூட்டியே அறிக்கைகளும் புள்ளி விவரங்களும் அச்சியற்றப்பெற்று, அங்கத்தினர்கட்குச் சற்று விளம்பரம் செய்த பின்னர் அவைகளை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளல் வழக்கம். சாதாரணப் பேச்சு முறையில் கணக்குகளையும், புள்ளிகளையும் புகுத்துவதைத் தவிர்த்தல் நன்று. பல தேயங்களை ஒத்திட்டுப் பேசும்போதும் பல திறப்பட்ட மக்களின் எண்ணிக்கை, பொருளாதாரம், கல்வி நிலைமை போன்றவற்றின் விகிதாசாரம், ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை விளக்கிப் பேசும் போதும் புள்ளி விவரங்களோடு பேசுதல் இன்றியமையாததாம். அவ்வாறு பேசும் பேச்சு சபையோரால் ரசிக்கப்படும் ; பேசுவோரின் மதிப்பும் உயர்வதாகும். இதற்குக் காலஞ்சென்ற கனம் கோபால கிருஷ்ண கோகலே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவார். கனம் தாதாபாய் நௌரோஜியாரும் அவ்வாறேயாம். அவர்கள் இருவர் பேச்சிலும் எழுத்திலும் விவாதங்களிலும் மக்கள் மனதில் ஊன்றிப் பதியுமாறு புள்ளி விவரங்கள் மலியக் காணலாம். ஆகலின் அவர்கள் பேச்சு சிறந்ததாகவும், ஆதாரமானதாகவும் எங்காட்டிலும் கொண்டாடப்பட்டன என்ப. தென்னாட்டில் தலைசிறந்த அரசியல் அறிஞரெனக் கருதப்பட்டவரும், முதல் வட்டமேசை மாநாட்டுக்கு மகாத்மா காந்தியடிகளுக்கு உதவியாக லண்டன் சென்றவருமான உயர்திரு. ஏ. அரங்கசாமி ஐயங்கார் மற்றுமொரு சிறந்த எடுத்துக்காட்டாவார். பலதிறப்பட்ட புள்ளிவிவரங்களைப் பிழையேதுமின்றி நொடிப்போழ்தில் விளக்கமாகத் தெரிக்கவல்லவர் அவராவார். வேறு சில உதாரணங்களும் ஈண்டைக்கேற்புடைத்தாம். ஒரு நகரின் பரப்பை இருநூறு சதுரமைல் எனக் குறிப்பிட்டு, அது சென்னைநகரிலும் மும்மடங்கு பெரிதாகும் எனக் கூறுவதால், கேட்போர் அந்நிலப்பரப்பைத் தங்கள் மனக்கண் கொண்டு காண்பதற்கியலும். ஒருபேச்சில் ஒருவர் செல்வத்தைக் குறித்துக்காட்ட விரும்பினால், பத்துக்கோடி சொத்துக்குடையவர் எனச் சுருக்கிச் சொல்வதிலும், அத்தொகையின் பெருக்கத்தைக் கேட்போர் மனதில் நன்கு புலப்பட ஓர் உதாரணமூலம் விளக்கலாம். இமயம் தொட்டுக் குமரிவரை ஒவ்வொரு ரூபாயும் தொட்டுக்கொண்டிருக்குமாறு வைத்தால், அவ்வாறு நான்கு வரிசைகொண்டதாகும் அத்தொகைஎனக் கூறினால் அச்செல்வத்தின் பரிமாணம் கேட்போர் மனக்கண்ணிற்குத் தெள்ளிதில் விளங்கும். தொகைகளையும், புள்ளிவிவரங்களையும் ஒரு பேச்சாளர் கையாளவிரும்பினால், அவற்றை எவ்வாறு மக்கள் மனதில் பதியச் செய்யலாமென்பதை முற்கூட்டி யோசித்தலும், எழுதிப்பார்த்தலும் மிக்க நன்மை பயப்பன

வாம். ஆயினும் எக்காரணம்பற்றியும் பொய்யான புள்ளிகளைச் சபையில் கூறுதல் ஆகாது. ஏனெனில், அவைகள் தப்பிதமானவைகளென அவைத் தலைவராலும் பிந்திய பேச்சாளர்களாலும் எடுத்துக்காட்டப்பட்டால் அப்பேச்சாளர் பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரராகார்.

பேச்சுச் சத்து

மேலே கூறியவற்றால் ஒரு பேச்சின் இடைப்பாகத்திலும் ஒரு பேச்சாளர் மிக்க கவனம் செலுத்தல் வேண்டுமென்பது ஊன்றிப் பெறப்படுவதாம். ஒரு பேச்சின் இடைப்பாகத்தை உருசிகரமும் சத்தும் நிறைந்த பல மொழிகளைக்கொண்ட ஒரு கருப்பங்கழிக்கு ஒப்பிடலாம். இரசம் நிறைந்த கன்னல் கழிகள் இடையிடையே கணுக்களால் பிரிக்கப்பட்டிருப்பதுபோல், ஒரு பேச்சின் இடைப்பாகத்தைப் பலபாகங்களாகப் பிரித்து அவைகளுக்கேற்ற தலைப்புகளுடனும் இணைப்புகளுடனும் பேசுதல் முறையாம். ஒவ்வொரு பாகமும் கருத்தில் முற்றுப்பெற்றதாகவும் இரசமுள்ளதாகவும் இருத்தல் வேண்டப்படுவதாம். முந்திப் பேசிய பாகத்திற்கும் அடுத்துவரும் பாகத்திற்கும் கரும்புக்கணுக் களைப்போன்று பிணைப்பு அல்லது தொடர்பு இருத்தல் மிக இன்றியமையாததாம். ஒரு பேச்சில் ஏதேனும் ஒருபாகம் இற்று விடினும், அப்பாகத்தில் அமையவேண்டிய ஒரு வாசகம் - ஏன் ஒரு சொல் - தவறுபடினும் அம்முழுப்பேச்சும் குற்றம் கொண்டதாகக் கருதப்படும். பொதுப்பட மேடைப்பேச்சுகளுக்கு முற்கூட்டியே கால வரை குறிக்கப்படுவதாம். ஒரு பேச்சாளர் தமது பேச்சையும், அதன் பல பிரிவுகளையும் அதற்கேற்றவாறு பேசுதற்கு முனைதல்வேண்டும். சில ஆரம்ப வாக்கியங்கள்கொண்டு சபையைக் களிப்பித்தபின் ஒரு பேச்சாளர் தமது பேச்சாகிய கிணறு தோண்டலில் ஊக்கத்தோடு இறங்கல் முறையாம். சாதாரணமாகக் கிணறு அகழ்வோர் ஒரு பத்து அடி ஆழம் தோண்டிய பின்னரே நீரூற்றைக் காண்பர். ஆயினும், பேச்சுக்கிணறு அகழ்வோர் மூன்று நிமிடங்களில் சபையோர் கவனம் எனும் நீரூற்றைக் காணுவிடில் அவ்வேலையைக் கைவிடுதலே நல்லது. பெரிய மாநாடுகளில் தீர்மானங்களைப் பிரரேபிக்கும் பேச்சாளர்கட்குச் சில நிமிட நேரமே கிடைப்பதற்கியலுமாதலால், அப்பேச்சாளர் தமது பேச்சிலும் கருத்திலும் ஒழுங்குப்பாடான பிரிவினைகளிலும் முற்கூட்டியே மிக்க கவனம் செலுத்தக் கடமைப்பட்டவராவார். ஒரு தீர்மானத்தில் பல கிளைத் தீர்மானங்கள் பிணைக்கப்பட்டிருந்தால் அது பேச்சாளருக்கு மிக்க அல்லல் கொடுப்பதொன்றும். முதலாவதாக, அத்தீர்மானத்தையும்

அதன் அவசியத்தையும் சுருக்கி விளக்குதல் வேண்டும். பின்னர் அத் தீர்மானத்திற்கும் கிளைத் தீர்மானங்களுக்குமுள்ள இணைப்பையும் சம்பந்தத்தையும் விளக்குதல் வேண்டும். தீர்மானங்களின் முக்கிய பாகங்கள் அனைத்தையும் திறம்பட்ட பேச்சாளர் குறித்த காலவரைக்குள் பேசி முடிப்பர். ஆதலின், பல கிளைத் தீர்மானங்களைக்கொண்ட ஒரு தீர்மானத்தை (Omnibus - Resolution) மாநாடுகளில் பிரரேபணை செய்தற்குத் தகுதியுள்ள வாசாலகர்களைத் தேர்ந்தெடுத்தலே ஏற்புடையதாம். இத்தகைய தீர்மானம் ஒன்றை ஒரு மாநாட்டில் இந்நூலாசிரியர் பேசிப் பிரரேபித்தது - இப்புத்தகத்தின் மூன்றாவது மலர்ச்சேர்க்கையில் தந்திருப்பது - இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகலாம்.

---

13. பேச்சை முடித்தல்

முடித்தல் வகை

முன் இருபகுதிகளில் 'எடுத்தல்', 'தொடுத்தல்' ஆகிய பேச்சின் இரு ஒழுங்கு முறைகள் விரிக்கப்பெற்றுள்ளன. ஈங்குப் பேச்சை 'முடித்த'லில் கூர்ந்து ஆழ்வோம். ஒரு பேச்சை எடுத்தலில் பேச்சாளர் கவனம் செலுத்தி ஐந்தாறு சுவை மிகுந்த வாக்கியங்களையாதல் முற்கூட்டித் தயாரித்து உபயோகித்தலைப் போன்று, சில இனிய வாக்கியங்களைக்கொண்டு பேச்சை முடித்தலும்வேண்டும். ஆங்கில நாவலர்கள் தங்கள் முடிவுரைகளை முற்கூட்டிச் சிலநாள் யோசித்தும் பல புத்தகங்களைப் புரட்டிப்பார்த்துக் குறிப்பெழுதிக்கொண்டும் இனிய முறையில் பேச்சை முடித்தல் வழக்காம். **டிஸ்ரவி, கிளாட்ஸ்டன், ஆபிரகாம் லிங்கன், ஜான் பிரைட்** முதலிய பிரபல பேச்சாளர்களின் முடிவுரைகள் இன்றும் உலகில் போற்றப் பெறுவனவாம். கிளாஸ்கோ நகரத்துப் பேருரையின் முடிவுரையைத் தயாரித்துக்கொண்டிருந்த கிளாட்ஸ்டன், தமது காரியதரிசியான ஜான்மார்லியிடம், **காஸ்டர், போலக்ஸ்** ஆகிய இரு லாஸ்டிமோனிய சுத்த வீரர்களைப் பற்றிய சரிதையை ஹோமரில் தேடித்தரும்படிக் கேட்டனர் என்பது சரித்திரம். அக்கதையைத் தமது முடிவுரையில் புகுத்திச் சுவை ததும்பத் தமது பேச்சை முடித்தார். நமது நாட்டு நாவலர்களில் தமது முடிவுரையை முற்கூட்டி அமைப்பதில் காலஞ்சென்ற **கனம் கோபாலகிருஷ்ண கோகலே** மிக்க நாட்டம் கொண்டவராவார். அத்தகைய முடிவுரைகளை

மாதிரியாகக் கொண்டு அவற்றைப் பின்பற்றுவோர் நல்ல பேச்சாளராவ ரென்பதில் சிறிதும் ஐயமில்லை. பேச்சை முடிக்கும்போதுதான் ஒரு பேச்சாளர் தமது கருத்தை வற்புறுத்தவும் சபையோர் மனதில் அழுந்துமாறு சுருக்கிக் கூறவும் கூடும். பேச்சாளர் கருத்துக்குச் சபை யோர் இணங்குவதும் மாறுபடுவதும் அவர் பேச்சின் முடிவுரையைப் பெரிதும் பொறுத்திருக்கும். ஒரு பேச்சாளரின் கடைசி வார்த்தை களே முடிவுரையாதலின், அவை சபையோர் செவிகளில் நீண்டு நின் றொலிப்பனவாம். அவை கேட்போர் உள்ளத்தினின்றும் விரைவில் நீங்குவதில்லை. ஒருவர் அவற்றைச் சுலபத்தில் மறத்தற் கியலாதென்ப. அம்முடிவுரையின் நயத்தைச் சுவைத்த பலர் தம்மையும் மறந்து அதனை ஒரு இனிய பாட்டாகப் பன்முறை மனதிலும் வாய்விட்டுச் சொல்லி யும் நண்பர்கள் மாட்டுக் கூறியும் இன்புறுவர். ஆகலின் ஒரு பேச் சாளர் தமது முடிவுரையில் மிக்க கவனம் செலுத்தியும், எழுதிப் பார்த்தும், தனிமையில் உரக்கப்படித்துப் பழகியும் பேசுதல் மரபென்ப. தங்கள் மனக்கண்முன் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாய் நிறுத்தித் தயாராக வைத்திருத்தலும் வேண்டும். பேச்சின் கடைசி பாகமாகிய முடித்தலுக்கேற்ற வாக்கியங்களை ஒருவர் எழுதி மேசைமீ திருத்தி அவற்றைப் பார்த்துச் சபையில் பேசுதல் சுவையற்றதாகும். ஒரு பேச்சை ஆரம்பித்தலையும் முடித்தலையும் முற்கூட்டி முடிவு கட்டி விட்டால், அப்பேச்சாளர் மனஊற்றினின்றும் முழுப்பேச்சு மிக்க வேகமும் ஆர்வமும் கொண்டு பீறிட்டு வெளிவரும் சக்தியைப் பெறுவ தாகும்.

சீரிய முடிவுரை

நல்ல மேடைப்பேச்சின் இலக்கணத்தைக் குறித்து ஒரு பேராசிரி யர் பொதுப்படக் கூறியிருத்தல் ஈண்டு கவனித்தற்குரித்தாம். முதலாவ தாக ஒரு பேச்சாளர் பேசுவ தின்னதெனவும், இரண்டாவதாக அதைக் குறித்துப் பேசியும், மூன்றாவதாக அதைப் பேசிவிட்டதாகவும் பேச்சை முடித்தல்வேண்டுமென அவர் அறிவுறுத்துகின்றார். ஒரு பேச்சின் கருத்துக்கள் முடிவுரையில் சுருக்கிச் சொல்லப்படுவதால், பேச்சுத் தொடர்ச்சியில் கவனமிழந்தோரும், காலந்தாழ்த்து வந்தோரும் அம் முழுப்பேச்சின் போக்கையும் கருத்துக்களையும் அறிதற்கெளிதாகு மென்ப. இதற்கு ஓர் உதாரணமே சாலும். தமிழிசை முதல் மா நாட்டைத் திறந்துவைத்துப் பேசிய கனம் டாக்டர் ராஜா. சர். அண்ணா மலைச் செட்டியார் தமது பேச்சை முடித்தமுறை போற்றற் குரித்தாம்:

" அன்பர்களே ! தமிழிசைச் சங்கத்தின் நோக்கம் இன்னதென்பதைத் தெளிவாகச் சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் நடக்கும் இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெறவேண்டும். கச்சேரியின் ஆரம்பமும் மங்களமும் தமிழ்ப்பாட்டு களாக இருக்கவேண்டும். இடையிடையே இதர மொழிப்பாடல்களை யும் பாடலாம். அதற்குத் தடையில்லை. பிறமொழிப் பாடல்களை நாம் வெறுக்கவில்லை. தமிழ்நாட்டில் நடக்கும் கச்சேரியைக் கேட்கும் தமிழருள்ளம், இன்று தமிழிசை அரங்கு நடந்தது ; நம் உள்ளம் தமிழிசையால் பூரித்தது என்று உணரவேண்டும். தமிழ்நாட்டில் நடக்கும் பாட்டுக்கச்சேரிகள் தமிழருக்கு இன்பமளிக்கவேண்டும். இது தான் நமது நோக்கம். " செட்டிநாட்டரசர் தமது பேச்சின் கருத்தை யும் சாரத்யையும் வடித்துக் கூறியுள்ள சீரிய முறை, தமிழ்ப்பேச்சாளர் பின்பற்றத் தக்கதொன்றும்.

நல்ல பேச்சு யாது ?

சில பேச்சாளர் இலகுவிலும் சடுதியிலும் தமது முடிவுரைக்கு வருவதில்லை. வருவதாகச் சொல்லிக்கொண்டே பெருநேரம் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பர். காலஞ்சென்ற கனம் கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள் எல்லாப் பொதுமேடைப் பேச்சுக்களிலும் " இன் னும் ஒரே வார்த்தையோடு முடித்துவிடுகிறேன் " எனக் கூறிய பின்னரும் பதினைந்து நிமிடநேரம் தொடர்ந்து பேசிக்கொண்டிருத்தல் வழக்காம். ஓர் உண்மை நிகழ்ச்சியை ஈங்குத் தெரிவித்தல் மிகையல்ல. ஒரு பேச்சாளர் மணிக்கணக்கில் பேசிய பின் சபையோரை நோக்கி "என் பேச்சு மிக நீண்டுவிட்டதைக் குறித்து வருந்துகிறேன். ஆயினும் என்னிடம் கைக்கடிகாரம் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள் " என்று கூறித் தமது பேச்சை முடித்தார். அவையில் பொறுமை இழந் திருந்த ஒருவர், " அதனால் என்ன ? பின்புறத்தில் தொங்கும் தேதித் தாள் போதாதோ !" என உரக்கக் கடாவினர். இதனால் இவ்வண்ணம் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருத்தலும் ஆபாசமாகப் பேச்சை முடித்தலும் முறையல்லவென்பது நனிவிளங்கும். தமது பேச்சு நீண்டும் பல மணிநேரங்கொண்டும் இருத்தல் வேண்டுமென்பதே மேற்கூறிய இனத்தவரின் கருத்தாம். ஒரு பேச்சின் கருத்தும் உருசியும் அதன் நீளத்தாலும், பேசும் மணிநேரத்தாலும் அளக்கப் படுவனவல்ல. ஒருபேச்சாளர் இன்னும் பேசுவரெனச் சபையோர் எதிர் பார்த்திருக்கையில் முடிக்கப்படும் பேச்சு உருசியான பேச்சாகும்.

ஒருவர் பேச்சு ஒன்றரைமணிநேரம் நிகழ்வதாக வைத்துக்கொள்வோம். அதனிறுதியிலும் அப்பேச்சை இன்னும் சற்றுநேரம் கேட்கவேண்டு மெனும் ஆவல் சபையோருக்கு உண்டாகுமேல், அப்பேச்சு சிறந்த தாகும். ஒரு பேச்சின்சுவை பேசும் மணிக்கணக்கால் மட்டுமே அள விடக் கூடியதல்ல. ஒரு பேச்சாளர் பேசிக்கொண்டிருக்கும் போது சபையோர் தங்கள் கைக்கடிகாரங்களையோ, சபையிலுள்ள கடிகாரத் தையோ நோக்குவாராயின், தமது பேச்சைச் சபையோர் சுவைக்க வில்லை யென்பதைப் பேச்சாளர் உணர்ந்து முடிவுரைக்கு விரைதல் வேண்டும். எனவே, கடிகார இயந்திரம் நல்ல பேச்சைக் கேட்கும் போது மணிப் போக்கை மறக்கவும், உருசியற்ற பேச்சைக் கேட்கும் போது நிமிடங்களையும் நினைவு கூட்டவும் செய்ய வல்லதாம்!

ஆபாச முடிவுரை

ஒரு பேச்சாளர் "நான் சொல்ல வேண்டியவற்றை யெல்லாம் சொல்லிவிட்டேன்; இதைப் பற்றி நான் இன்னும் அதிகம் சொல்லு வதற்கில்லை; எனக்குத் தெரிந்தது இவ்வளவே" என்று கூறித் தமது பேச்சை முடித்தல் முடிவுரையன்று. இந்நாள் தமிழ்மேடைகளில் பேசும் பலர், "வேண்டுமாயின், இன்னும் இரண்டு அல்லது மூன்று மணிநேரம் பேசலாம்; ஆயினும் இன்னும் பேசவேண்டியவர்கள் பலரிருப்பதால், தலைவரின் அனுமதியுடன் என்பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்" எனக் கூறித் தமது பேச்சை முடிப்பர். சில பேச்சாளர், "என் பேச்சை மறுப்பவர் எவரேனும் இச்சபையில் இருந் தால், மீளவும் பேசுவதற்குத் தயார்" என அறைகூவி முடிப்பர். வேறுசிலர் "இச்சிறியேன் பேச்சில் குற்றங்குறை ஏதேனுமிருந்தால் மன்னித்து குணத்தை மட்டும் கொள்ளவேண்டுமாய் மிக வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்" எனக் கூறிப் பேச்சுக்கு முடிவு கட்டுவர். "இச்சபை முடிந்துவிட்டதால், என்னைப் பலர் கேட்ட கேள்விகளுக்கு வெளியிலாகிலும், வேறு மேடைகளிலாயினும் விடையளிப்பேன்" என ஆபாசமாகப் பேசித் தமது பேச்சை முடிக்கும் பேச்சாளர் இந்நாளும் உளர். இவை மிக நேர்மையற்ற முறைகளாகும். நாவன்மைகொண்ட பெரியார்கள் தமது பேச்சுக்களைச் சாதாரணமாக, முக்கால் அல்லது ஒருமணி நேரத்திற்குள் முடித்துவிடுவர். பேச்சினிறுதியில் முக்கிய பாகங்களைத் தொகுத்துக் கூறியபின், சபையோர் பொறுமையோடு கேட்டிருந்ததைச் சிறிது பாராட்டித் தமது பேச்சை முடிப்பர். ஒரு பெரிய செய்தியைத் தொடர்ச்சியாக இரண்டொரு நாள் பேச நேரிட்

டால், முந்தியநாள் தாம்பேசிய முடிவுரையைப் பிந்தியநாள் பேச்சின் முகவுரையாக ஆரம்பித்து, முன்னாள் வாராதவர்களும் அறிந்து கொள்ளும் முறையில் பேசுதல் மரபாம்.

பின்பற்றுக

பொதுவாக மேடைத்தமிழ்ப்பேச்சாளர் தமதுபேச்சை முடிக்கும் முறையில் மிக்க கவனம் செலுத்தக் கடமைப்பட்டவராவர். இதற்கு ஆங்கிலப்பேச்சு முறையைப் பின்பற்றுதல் சாலச் சிறப்புடைத்தாம். ஒரு ஆங்கிலப்பேச்சின் முடிவுரை (Per-oration) எப்போதும் அழகாக அமைந்திருத்தல் இயல்பாம். புகழ்கொண்ட பர்க் எனும் மாபெரும் நாவலர் இந்தியாவை ஆண்டிருந்த உவாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபுமீது பாராளுமன்றப் பெருமக்கள் சபையில் குற்றஞ்சாட்டிப் பல நாள் பேசிய பேச்சின் முடிவுரையை நோக்குவோம். அப்பெரியார் அதுபோழ்து தமது குரலை நீதிமன்றமே எதிரொலிக்குமாறு உயர்த்தி "உவாரன் ஹேஸ்டிங்ஸ் இந்திய ஆட்சியில் இழைத்த பலபெருங் குற்றங்களையும், முறைபிறழ்ந்த நடத்தைகளையும் எடுத்துக்காட்டி அவர் மீது குற்றஞ்சாட்ட வேண்டுமாய்ப் பார்லிமெண்டு மகாசபையார் முழு நம்பிக்கையுடன் எம்மை ஏவினர். நான் கடந்த மூன்று நாட்களாகக் கூறிவரும் பல பெருங் குற்றங்களைச் சந்தேகமற இவர் புரிந்தவரே யாவார். பார்லிமெண்டு மகாசபையார் இவரிடம் வைத்த பெரும் நம்பிக்கைக்கு மாறாக அச்சபையாரை மிகக் காட்டிக்கொடுத்துத் துரோகம் இழைத்திருக்கின்றார். ஆகலின், பார்லிமெண்டு மகாசபையாரின் பேரால் இவர் மீது நம்பிக்கைத் துரோகப் பழியைச் சுமத்துகிறேன். எந்த ஆங்கில சமுதாயத்தின் கீர்த்தியை இவர் கறைப்படுத்திவிட்டாரோ அச் சமுதாயத்தின் பேரால் இவர்மீது ஊன்றிக் குற்றஞ் சாட்டுகிறேன். எந்த இந்தியரின் உரிமைகளைப் பறித்து அவரது பூர்வீக நாகரிகத்தின் மதிப்பைப் பாழ்படுத்தி, அம்மக்களைத் தம் காலின் கீழ் மிதித்துத் துவைத்து அழித்தாரோ அந்தப் பரிதாபத்திற்குரிய நாட்டின் பேரால் இவர்மீது வன்மையாகக் குற்றஞ் சாட்டுகிறேன். இறுதியில், பொதுவாக மனித வர்க்கத்திற்குப் பெரும் பகைவரான இவரை, கொடுங்கோலோச்சிய இத் தீயரை, சீவகாருண்யத்தின் பேராலும், ஆண், பெண் எனும் இரு வர்க்கத்தின் நீதி வாழ்வின்பேராலும், நிகழ்காலம், இறந்தகாலம், வருங்காலம் ஆகிய முக்காலத்தின் நெறிமுறைகளை முன்னிறுத்தியும், செல்வந்தர், வறியோர், முதியோர், சிறியோர் ஆகிய எல்லா மனிதப் பகுதியின் பேராலும் என் முழுப் பலங்கொண்டு இவர் பெருங்குற்றவாளியே

என நான் இவர் மீது குற்றஞ்சாட்டுகிறேன்" என்று சொல்லி அமர்ந்த போது சபையோர் கண்ணீர் விட்டதாயும், பெண்மக்கள் மூர்ச்சித்ததாயும் சரித்திரம் கூறும். *மகாகனம் கிளாட்ஸ்டன் கிளாஸ்கோ நகரில் நிகழ்த்திய பிரபலப்பேச்சின் முடிவுரையும், *ஆபிரகாம் லின்கன் கெட்டிஸ்பர்க் என்னும் நகரில் செய்த சொற்பொழிவின் சாரமான முடிவுரையும் இன்றும் ஒப்புயவர்வற்றவையாகக் கருதப்படுவனவாம். பார்லிமெண்டு மகாசபையின் அங்கத்தினராகிப் பின்னர்ப் பிரதம மந்திரியான டிஸ்ரலி என்பார், தமது கன்னிப்பேச்சை இடைமறித்துக் குழப்பம்செய்த சபையோரைத் தமது முடிவுரையில், "நான் பலதடவை பலகாரியங்களை முயன்றிருக்கின்றேன். எப்பொழுதும் நான் அவைகளில் இறுதியில்தான் வெற்றிபெறுவது வழக்கு. நீங்கள் இன்று என் பேச்சைக் கேட்க மறுக்கிறீர்கள். ஆயினும் நீங்கள் என் பேச்சைப் பொறுமையோடும் ஆவலோடும் கேட்குங்காலம் ஒன்றுவரும்" என்று அறிவு கொளுத்தினர். அவ்வாறே பிற்காலத்தில் நிகழ்ந்ததாகச் சரித்திரம் கூறும்.

நமது நாவலர் முடிவுரை

நமது நாட்டு நாவலர்களின் அருந்தன்மை கொண்ட முடிவுரைகளும் நமது கவனத்திற்குரியனவாம். 1895-ம் ஆண்டு புனு நகரில் கூடிய 11 வது காங்கரஸ் மாசபையில் தலைமை தாங்கிய கனம் பாபு சுரேந்திரநாத் பனர்ஜியரின் முடிவுரையை நோக்குவோம். "கனவான்களே! காங்கரஸ் இயக்கத்தின் முயற்சிகளைக் குறித்துச் சிலவற்றை விளக்கிக் கூறி என்பேச்சை முடிப்பேன். நாட்டுச் சுதந்திரம் எனும் பெரும் போராட்டத்தில் நமது இயக்கத்திற்கு உதவி புரிந்து நம்மை முன்னே தள்ளிச் செல்வதும், போர்ச் சந்தடியில் இரைச்சலின்றி முன்னணிக்குச் செலுத்துவதுமான ஸ்பரிசத்திற்கும், கண்ணுக்கும் புலப்படாத அரிய உயிரியக்கம் ஒன்றுண்டு. அதுதான் 'காலம்' எனப்படுவதாம். அக்காலமோ நமது பங்கில் இன்றிருக்கிறது. நிகழ்காலமும் வருங்காலமும் நமது சகாக்களாகும். லத்தீன்பழமொழிப்படி 'உண்மையெனப்படுவது காலத்தின் குமரி'யாம். நமது புறக்கண்ணுக்குப் புலனாகாத காலவரையின் மகத்தான சக்தியை நாம் மிக நம்பியுள்ளோம். சென்ற காலத்தில் பொன்னுலாயநாள் ஒன்றிருந்ததாக நானறியேன். அப்படியாயின், அஃது ஒரு அழகிய தேச சம்பவமாகும். அது மக்களின் தற்கால அதிருப்தி உணர்ச்சியைப் போக்கும்

* * இவ்விரு முடிவுரைகளையும் 2 வது மலர்ச் சேர்க்கையில் காண்க.

அமிழ்தம் போல்வதாம். அதிருப்தியே எல்லா முன்னேற்றங்களையும் ஈன்றெடுத்த அன்னையாகும். அதிருப்தி இல்லையேல், முன்னேற்றமில்லை. நமது வாழ்நாளைச் செப்பனிட அது நம்மைச் சலியாது தூண்டி வருவதாம். நமது வருங்காலத்தில் உண்மையிலேயே ஒரு பொன்னாள் நமது கண் முன் நிற்கின்றது. அந்நாள் நமக்கும் நமது சந்ததியாருக்கும் ஒரு அளவிடற்கரிய செல்வமாகும். இந்த மகத்தான நம்பிக்கை ஒன்றே இன்றுள்ள நமது இழிநிலைமையிலும் நம்மைப் பொறுமை கொள்ளச் செய்கின்றது. இதர பிரிட்டிஷ் குடிமக்கள் அனுபவிக்கிற அரசியல் சுதந்திரங்களை நாம் பெறக் கொடுத்துவைக்காவிடில், நமக்குப்பின் தோன்றி நமது வேலைகளைத் தொடர்ந்து நடத்தும் நமது சந்ததியாரின் உரிமையான சொத்துக்கள் அவையாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அந்த நன்னம்பிக்கையைத் துணைகொண்டு நாம் இன்னும் பாடுபட்டுப் பார்க்கிறோம். பிறரை அவ்வாறே உழைக்க ஊக்குகிறோம். இதுவே காங்கரஸ் இயக்கத்தின் மூலதத்துவமான பசைப் பொருளாகும். பிரிட்டிஷ் அரசியலாரின் முற்போக்குக் குணுதிசயத்தை அப்பொருள் குறித்துக் காட்டுவதாகும். மிகுந்த நம்பிக்கையை நம்முள் வளர்க்கும் அரிய சக்தியும் அதுவாம். இவ்வித ஆழ்ந்த பக்தியை பிரிட்டிஷாரிடம் நாம் தவறுதலாக வைத்துள்ளோம் எனப் பிறநாட்டார் ஏளனமான மதிக்கக்கூடா தென்பதொன்றே நமது கவலையாகும். காங்கரஸ் முயற்சிகள் இன்று தளர்ந்து தேய்ந்துவிட்டதாகக் கருதப் படலாகாதென்பதும் நமது மற்றொரு கவலையாகும். சென்றகாலச் சரித்திர நிகழ்ச்சிகள் நம்மை மேலும் ஊக்குவித்தல் வேண்டும். வருங்கால நிகழ்ச்சிகளை, வருவன வரட்டும் என உற்சாகத்துடன் ஏற்கத் தயாராக விருத்தல் வேண்டும். நமது புத்திர, பெயரர்கட்கு நாம் வைத்துச் செல்லும் அளவிடற்கரிய கருவூலம் என்னை ? அது நாம் விடுதலை பெற்ற மக்களாய் இருந்து உயிர் வாழ்வதேயாகும். எனவே, அண்மையில், அளவிடக்கூடிய சொற்ப காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியிலேயே நின்று நமது மகத்தான இவ்வெண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு நாமனைவரும் கூடி உழைப்போமாக ! அப்போதுதான் இங்கிலாந்து தனது மகத்தான அரசியல் கடமைகளை உணர்ந்து கீழ் நாட்டாருக்கு மேலைநாட்டார் வழங்கக் கடமைப்பட்டுள்ள நியாயங்களை, நேர்மையான சுதந்திரங்களை வழங்கியதாகக் கருதப்பட்டு, என்றுமழியாப் புகழையும், மாபெருங் கீர்த்தியையும், நிலைநாட்டி உலகில் ஒளிர்வதாகும்." என்னே, இவ்வரிய முடிவுரை! இம்முடிவுரை சற்றுவிரிவாக இருப்பினும், இஃது அந்நாவலரின் சொன்மாரி சொரியும் போாற்றலை

யும், கற்பனை சிறந்த விற்பனம் விளையும் உள்ளத்தையும், மனவாக்குக் கெட்டாத நிலையினின்று பேசும் வாக்குத் தோரணையையும், ஆங்கில அருங்கலா விற்பத்தியையும், உள்ளத்தே ஊன்றிப் பதிந்த தேசாபிமானத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளிதில் விளக்குவதாம்.

முடிவுரைகளில் மிக்க நாட்டஞ் செலுத்தி, கருத்தும், அழகும், அமைதியும், ஒளியும் நிலவ முயன்றமைத்துப் பேசிவந்த கனம். கோபாலகிருஷ்ண கோகலே காசிமா நகரில் 1905ம் ஆண்டு கூடிய இருபத்தோராவது காங்கரஸ் மாசபையில் தலைமை தாங்கி நிகழ்த்திய பேருரையின் முடிவுரை ஈண்டு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதில் தமது ஆசிரியர் கனம் இரானடே அவர்களின் உயரிய மனப்பான்மையையும், இலட்சியத்தையும் மிகப்பொருந்தக் கூறி அவர் பெருமையை உலகறிய நிறுத்தியிருத்தல் மெச்சத்தக்க தொன்றும். இந்நூலாசிரியர்க்கு இதனைக் குறிப்பாக உணர்த்தியவர் *காலஞ்சென்ற மகாகனம். சீனிவாச சாஸ்திரிகளாவர். அம்முடிவுரை மற்றெல்லா நாவலர்களின் முடிவுரைகளிலும் சிறந்த தென்பது இவரது கருத்து. எனவே, தத்தம் ஆசிரியரைப் போற்றும் பிறவிப் பெருங்குணம் இவர்கள் இருவர்பால் அமைந்திருந்தமை கண்கூடாம். இனி அம் முடிவுரையை நோக்குவோம். "கனவான்களே! இன்னும் சில வார்த்தைகளுடன் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். நமது முன்னேற்ற மார்க்கத்தில் தடையாகப் படர்ந்து கிடக்கும் இடையூறுகளைக் குறைத்துக்காட்டவோ மனமில்லை. ஆயினும் அவைகள் களையக்கூடாதவைகள் அல்ல என்பதை நான் நன்குணர்வேன். நமது போராட்டத்தின் உண்மைத் தத்துவம் கைகூடுதற்கு நமது தற்கால அமைப்புகளைச் சரிப்படுத்திக் கொள்வதே போதியதல்ல. ஒரு சமுதாயத்தின் உயிர்நிலை மிகப்படர்ந்தும், ஆழ்ந்தும் இருக்கும் கடலாம். அதை வெறும் அரசியல் அமைப்புகளைக்கொண்டு தொட்டும். அளவிட்டும் பார்க்க வியலாது. எத்துணையோ தோல்விகள் அதற்குண்டு. நமது முயற்சிகள் யாவும் நேரிய நீதிவழியிற் செல்லுமாயின், அவ்விதத் தோல்விகளனைத்தும் அளவிடற்கரிய நமது செல்வமே யாகும். *கனம் இரானடே அவர்கள் ஒன்பது ஆண்டுகளுக்கு முன் கூறியுள்ள

* மகாகனம் சாஸ்திரியார் தமது முடிவுரைகளை அத்துணைக் கவனம் செலுத்தி முற்கூட்டி அமைத்துப் பேசியதில்லை யென்றும், சமயத்திற் கேற்றவாறு பேச்சை முடித்தல் தமது வழக்கென்றும், அக்காரணத்தால் தமது முடிவுரைகளில் சிறந்த ஒன்றைக் குறிப்பிடக் கூடவில்லை யென்றும், இந்நூலாசிரியரிடம் கூறினர்.

தென்ன ? நமது உழைப்பின் உண்மை நோக்கம் யாது ? அது மனித வர்க்கத்தின் முழுச்சக்தியையும் பெருக்கி, பிறவிக்கடமைகளை உணர்த்தி பகுத்தறிவைத் தளைகளினின்றும் விடுவித்து அதற்குப் புத்துயிர் அளிப்பதன்றோ ? அங்ஙனம் புத்துயிர் அளித்துப் புனிதமாக்கிக் குறைபாடுகளாகிய களைகளை அகற்றுவிடில் நம்முன்னோர்களை யொத்து மகத்தான காரியங்களை நாம் சாதிக்கவோ, அரியசேவைகளில் ஈடுபடவோ இயலாது. இவ்விதத் தூய எண்ணங்களால் தூண்டப் பெற்ற உழைப்பாளர் தங்கள் முயற்சிகளை எவ்வழிச் செலுத்தினும், எம் முக்கியப் பணியில் ஊன்றி நிற்பினும் அதைக்குறித்து நாம் சிந்திக்க வேண்டுவ தில்லை. விடுதலை பெற்ற தூயமனிதத் தன்மையுடனும், மேலோங்கி எழும் நன்னம்பிக்கையுடனும், கடமைகளினின்றும் வழுவாத உயர் விரதம் பற்றியும், எல்லோரிடத்தும் அறநெறியுடன் நடந்துகொள்ளும் மனப்பான்மையுடனும், முற்றிலும் அபிவிருத்தி பெற்று, அறியாமை எனும் கருமுகிலால் சூழப்படாது பிரகாசிக்கும் பேரறிவுடனும், இவை யனைத்தையும் விட, மன்னுயிரைத் தன்னுயிரெனக் கருதி, சாதி சமயக் கட்டுப்பாடுகளைக் கடந்த பேரன்புடனும், புத்துயிர் கொண்ட இந்தியா தேசம் உலகின் கண்ணுள்ள இதர சமுதாயங்களுடன் தானும் ஒரு முக்கிய சமுதாயமென முன்னணியில் நிற்க வல்லதாயின் அஃது அதன் வினைப்பயனைப் போராடி வென்று, புனிதம் பெற்ற உயர் உலகமாக விளங்கும். இதுவே இன்று இந்தியா சென்றடைய வேண்டிய, பெறுதற்கரிய குறிக்கோளாகும். அது போழ்து இந்தியா பூலோக கயிலாய மென் ஒளிரும். இவ்வித முடிவைத் தங்கள் அகக்கண் கொண்டு தொலைவில் தொடர்ந்துவரப்பார்ப்பவர்கள் தூய இன்ப நிலையைக் காண்பவராவர். அந்நிலையை அடைதற்குரிய மார்க்கங்களை வகுக்கவும் இடையூறுகளைக் களையவும் பணிசெய்யக் கொடுத்து வைத்த தூயர்கள் அதனினும் அதிக இன்பநிலையை எய்தியவராவர். அந்நிலையைத் தமது வாழ்நாளிலேயே கண்ணாரக்கண்டு, கைவரப்பெற்று, அதில் தேங்கித் திளைத்து அப்பரிசுத்த பூமியில் உலவுவோர் அவ்வின்ப நிலையின் சிகரத்தைச் சென்றடைந்தவராவர். அந்நிலையில் பஞ்சம், கொள்ளை நோய், ஒடுக்கப்படுதல், தீண்டாமை, துயரம் எனப்படுவன வெல்லாம் பழைய கற்பனைக் கதைகளாக முடியும். ஒவ்வோர் காலத்தே இமையோர் இம்மண்ணுலகில் பிறந்து, மனிதவர்க்கத்தினுட் புகுந்து உலகுக்கு ஆக்கம் அளித்ததாகச் சொல்லப்படுவதுபோல், தேவர்கள் விண்ணுலகத்தினின்றும் மண்ணுலகிற் கிறங்கி மக்களை அறநெறி புகுத்தி உயர் நிலை அடைய உதவி புரிவார்களென்பதில் சிறிதும் ஐயமில்லை. ”

" கனவான்களே ! மேலே கூறிய தெய்வீக வாக்குக்கு இணையாகப் புகல்தற்கு என்பால் ஏற்ற வார்த்தைகள் ஏதுமில்லை. ஆதலின், சீவ கர்ருண்யம் நிறைந்து, அன்பு ததும்பும் அப்பெரியார் வாக்கியங்களை இலட்சியமாகக் கொண்டு நடந்து உலகில் நலம் பெறுவோமாக !" இம் மாபெரும் நாவலர்களின் வழியைப் பின்பற்றி ஒரு பேச்சாளர் தமது முடிவுரையை அலங்காரத்துடனும், கற்பனை சாமர்த்தியத்துடனும், கருத்துப் பொலிவுடனும், உண்மைநெறி நின்று பேசிமுடித்தல் மிக்க மாண்புடையதாம்.

காங்கரஸில் முதல் தமிழ்ப் பேச்சாளர்

சில நல்ல தமிழ் மேடைப் பேச்சாளரின் முடிவுரைகளையும் ஈங்கு நோக்குதல் முறையாம். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் காங்கரஸ் மாசபையில் தமிழில் பேசி வழிகாட்டிய இந் நூலாசிரியரின் தந்தையார், இந்தியக் கைத்தொழில், தொழிற்கல்வி, சுதேசியம் பற்றிய தீர்மானத்தை யொட்டிப் பேசிய சொற்பொழிவில், " கனவான்களே ! முப்பத்தைந்துகோடி மக்களைக் கொண்ட நமது நாடு இன்று வறுமையிலாழ்ந்திருக்கின்றது. பெரும்பாலான நம்மக்கள் உண்ண ஒருவேளை முழு உணவின்றித் தங்கள் உடலையும் உயிரையும் ஒருங்கே வைத்து வாழ்வதற்கியலாது பரிதவிக்கின்றனர். அரசியலார் கணக்குப் புள்ளி விவரங்களாலும், வெற்றறிக்கைகளாலும் செப்பிடுவித்தை காட்டுகின்றனர். ஆயினும், வெறும் எலும்புக்கூடுகளான, ஒட்டியவயிறும், குழிந்த கண்களுமுடைய மக்களின் எண்ணிக்கை நமதுநாட்டில் தினே தினே வளர்ந்து வருகின்றது. இம் மாசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் இத் தீர்மானம் நிறைவேறி, அரசியலாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டால் இந்தியா தேசம் நாகரிக ஆட்சியின்கீழ் இருந்து வருவதை அது வெளிப்படுத்துவதாகும். அத்தகைய நன்னாள் விரைவில் தோன்றுமாயின், அத் தினத்தை நம் நாட்டார் இரு கரங்கொண்டு வரவேற்பார்களென நான் இயம்பவும் வேண்டுமோ ?" என்று கம்பீரமாகவும், உணர்ச்சி வெள்ளம் பெருகியோடவும், தேசாபிமானம் ததும்பவும் முடிவுரை கூறியிருக்கின்றனர்.

வேறுபல சீரியர்

பொது மேடைப்பேச்சில் பண்பட்ட ஒரு பேச்சாளர், "நேயர்காள் ! மேற்றிசை நாட்டு மக்கள் விலங்கினங்களை யொத்து நிர்வாணிக



(ஆசிரியர்) பேச்சை முடிக்கும் தோற்றம்

ளாய், காட்டு மிராண்டிகளாய் வதிந்திருந்த காலத்திலேயே நமது நாடு நாகரிகம் பொலிந்து, செல்வம் செழித்து, கைத்தொழில்களில் சிறந்து விளங்கியதன்றோ? அந்நாடு இந்நாள் அவற்றில் எவ்வாறு தாழ்ந்து, முறை பிறழ்ந்து நிற்கின்றதென்பதும் கண்கூடன்றோ? அந்நிலையினின்றும் வெளிப்போந்து நாம் இழந்த உச்ச நிலையை மீளவும் அடைவதற்கான வழிகளை எடுத்துக் காட்டியுள்ளேன். ஆகலின் இந்நாட்டு வாலிபர்கள் இதுபோழ்தாதல் தங்கள் கடமைகளை உணர்ந்து, தேசாபிமானம் பூண்டு, தேச முன்னேற்றச் சுடரொளியைத் தாங்கி, மனிதவர்க்கத்தினுட் புகுந்து, அவர்களை அறியாமை எனும் காரிருளினின்றும் மீட்பிக்க இன்றே முயல்தல் வேண்டும். அன்பர்காள்! நமது அசட்டையால், தேசாபிமானக் குறைவால் நமது நாடு மாள்வதாயின், நம்மில் எவர் உயிர் வாழ்ந்தவராவர்? நம்மால் இயன்ற தியாகங்களைப் புரிந்து, சுய நலத்தை மறந்து, நாமெல்லோரும் - நம்மில் ஒவ்வொருவரும் முதியோர், இளைஞர் எனும் வேற்றுமையின்றி தேச நலத்திற்குப் பாடுபடுவோமாயின் நம்மில் இறந்தார் எவர்கொல்? உலகில் பூதவுடல் அழிந்துபடினும், எவர் புகழுடம்பு எந்நாளும் அழியாதென்பது நீங்கள் அறியாததல்லவே! நேயர்காள்! சிந்தியுங்கள்! தேசப்பணிக்கு இன்றே முனையுங்கள்! முந்துங்கள்!" என்று தமது பேச்சை முடிவுகட்டியமர்ந்தபோது சபையோர் மனவெழுச்சி எவ்வாறிருந்திருத்தல் வேண்டும்? இளைஞர் சங்க ஆண்டுவிழா வொன்றில் பேசிய ஒரு நாவலரின் முடிவுரையை நோக்குவோம். "இளைஞர்காள்! உங்கள் நோக்கங்கள்தாம் யாவை? உலகமெங்கும் வீர வாலிபர்களின் முயற்சி வளர்ந்தோங்கும் இந்நாள் நீங்கள் செய்வது யாது? நீங்கள் இதுகாறும் தேசத்திற்கு எத்தகைய தியாகம் புரிந்திருக்கிறீர்களென உங்கட்குப் புலனாகின்றதா? நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்களென்பதைக் குறித்து உங்களுக்குத் தெளிவான அபிப்பிராயங்கள் உண்டோ? சாத்தியமான திட்டங்களை வரையறுத்தல் வேண்டாவா? நமது தேசமெங்கும் பரவி நிற்கும் தீமைகளும், அநீதங்களும் பறந்தோட நமது இளைஞர்களும், இளைஞர் சங்கங்களும் சிந்தைகொண்டு ஆக்கவேலைகளைச் செய்துகாட்டல் தமது பிறவிக் கடனன்றோ? நமது இளைஞர் சங்கங்கள் - என் நமது தேச நிலையங்களெல்லாம், நிலையாயிருத்தல் வேண்டுமென கரைபுரண்டோடும் பெரு வெள்ளத்திற்கெதிரே மணல் மேடு போட முயன்றுவருவதை நாம் பார்க்கவில்லையா? காலச்சக்கர சுழற்சிவேகத்தில் நீங்கள் அனைவரும் அமிழ்ந்து மூழ்கி, சுயேச்சை உணர்ச்சி பெற்று, மிக்க ஆத்திரத்துடன் தீவிரப்பட்டு, நம்மை ஆழ்த்தி

யுள்ள அடிமைத் தனத்தின் கொடுமைகளை ஒழிப்பதற்கு கர்ச்சித்து விரைந்தெழுதல் வேண்டாவா ?" என்று பல கேள்விகளுடன் தமது பேச்சை முடித்தது, உணர்ச்சியை எழுப்பும் ஒரு சிறந்த முறையாம். மற்றுமோர் நாவலர், இந்திய மக்களை இடித்துப் பேசிய முடிவுரை இதுவாம். "கனவான்களே ! நாம் வாய்செத்த கால்நடைகளைப்போல் இன்னும் நடந்துகொண்டு, அந்நியர்களால் மேய்க்கப்பட இடங் கொடுப்போமாயின், நமது முன்னேற்ற முயற்சிகளுக்கு இப்பொழுதே முற்றுப்புள்ளி யிட்டு வீணே உயிர்வாழ்பவராவோம். நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு முழுத்தியாகத்துடன், அவசியமானால், மும்முறை முயற்சித்தல் வேண்டும். உலகில் மானிட முயற்சிகளனைத்தும் வெற்றி பெறுவதில்லை என்பது உண்மை. நமது குறைகள் தெய்வத்தால் நீக்கப்பட வேண்டியவைகளாக விருப்பினும், மக்கள்முயற்சி - விடாமுயற்சி மூலமாகவே முடியவேண்டியவைகளென்பதை மறவாதீர்கள்". இம் முறையும் ஒரு நல்ல முடிவுரைக் கேற்றதாம்.

மேலே கூறிய உதாரணங்களால் ஒரு பேச்சாளரின் முடிவுரை நல்ல கருத்துக்களைக் கொண்டும், அர்த்தப்பொலிவுடனும், சொல்நயம் பெற்றும், வசீகரிக்கும் பேச்சுத் தோரணையுடனும் இனிது அமையப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது நன்கு புலனாகும். சங்கீதமேடைகளில் பாட்டுக்களும், வாத்திய ஒலியும் கச்சேரிகள் முடிவடைந்த பின்னரும் கேட்போர் செவிப்புலனிலும், மண்டபமெங்கும் சில நிமிட நேரம் ரீங்காரம்கொண்டு ஒலித்தல் போல், ஒரு நல்ல பேச்சாளரின் முடிவுரையும் அவ்வாறே ரீங்காரம் செய்யும் இயல்புடைய தாயிருத்தல் அப்பேச்சின் இன்றியமையாத இலக்கணமாம்.

முடிவுரையின் இலக்கணம்

ஒரு நாவலாரின் முடிவுரை எவ்வாறு இருத்தல்வேண்டு மென்பதும், மேடைத் தமிழ் இந்நாள் எவ்வண்ணம் திருத்தம் பெற வேண்டுமென்பதும் நமது நாவலர்கள் ஊன்றிக் கருத்திலிருத்தத் தக்கவையாம். இன்று தமிழ் மேடைகளில் கையாளப்படும் முறையில் ஒரு தமிழ்ப் பேச்சாளரின் முடிவுரை (Per - oration) ஒன்றல்ல- பலவற்றைப் பேச்சின் பலபாகங்களில் காணலாம். ஆயினும் ஆங்கிலப் பேச்சு முறையில் முடிவுரை (Per - oration) ஒன்றேயாம். அஃது ஒரு நாவலரின் இலக்கியத்தேர்ச்சிக்கும், பேச்சு வன்மைக்கும், உணர்ச்சி வேகத்திற்கும் ஏற்ப மிக்க தோரணைவாய்ந்தும், நயம் பெற்றும் ஒளிரும். அதுபோழ்து நாவலரின் மனவெழுச்சி உயர உயர அவர்

உடல் தானே உயரும் ; நாசித்துவாரங்கள் விரியும் ; நாதசுரக்காரர் களை யொத்துக் கழுத்து நரம்புகள் வீங்கிப் புடைத்தெழும். தொண்டையிலும், காதினுட்புறத்திலும் வெம்மையான ஆவியெழும். வார்த்தைகள் ஊற்றெனப் பெருகி மிக மெருகோடும் கம்பீர உணர்ச்சி யோடும் சாவதானமாக ஒன்றன் பின் ஒன்ருக உயர்ந்தும் தாழ்ந்தும் பீறிட்டும் வெளிப்படும். இனிய நாதம் எங்ஙனும் வியாபிக்கும். அங்ஙனம் வெளிவரும் வார்த்தைகள் மணியோசைக்குப்பின் தோன் றும் அதிர்ச்சி யலைகளை யொத்து இனிய அதிர்ச்சியுடனும், வருவிக்கப் படாத சந்தத்துடனும் திரைபொலியெனத் தொடர்ந்து படபடப் பின்றி உயர்ந்து எழும். சிலவேளை பேசுவோரின் நாடி சுழுமுனையில் ஒத்து ஓடும். அவ்வேளை மனங் குவிந்து குண்டலி சக்தி பிறங்குத லால், ஒரு பேச்சாளரின் மூலக்கனல் மேலெழுவதும் உண்டு. சில ஆன்றோரின் முடிவுரைகள் தெய்வீகத் தன்மை கொண்டும் வருங் காலத்தை எட்டித் தொட்டுக் கொண்டும் இருத்தலின் இரகசியம் இவையே யாம். இத்தகைய அரிய சக்தியை அடையப் பெற்றோர் மேடைத்தமிழின் உச்சநிலையை நிச்சயம் கண்டவராவர்.

---

14. சொற்போர்

சொற்போரின் தத்துவம்

சிறந்த நாவன்மையை முயன்று பெறுதற்குச் சிறிய தர்க்க சபை களிலும், சங்கங்களிலும் முதற்கண் சேர்ந்து ஒருவர் பேசுத லும், விவாதிக்கப்பழகுதலும் நன்மை பயப்பதாம். அதனுல் விவகாரங் களில் தம் கோள் நாட்டவும் ஒரு செய்தி பற்றி இதர அங்கத்தினர் கருத்துக்களை அறிந்துகொள்ளவும் இயலும். ஆரம்பப் பேச்சாளர் சபை நடுக்கமின்றிப் பேசவும், சமயத்திற் கேற்றவாறு தர்க்கிக்கவும் ஆண்டு நன்கு பழகிக் கொள்ளக் கூடும். ஒரு பேரவையில் பேசுதற்கு ஒரு பேச்சாளர் முற்கூட்டித் தயாரித்துக் கொள்வன பல உண்டு. ஆயினும், இச் சிறு சபைகளில் ஒரு பேச்சாளர் தமது பேச்சை விரி வாகத் தயாரித்துக் கொள்ளாமலே தர்க்கப் போக்கை அங்ஙனே உணர்ந்து அதற்கேற்றவாறு தமது கருத்துக்களை வெளியிடக் கூடும். சொற்போரில், ஒரு பேச்சாளரை மற்ெருருவர் தர்க்கவாயிலாகக்

கண்டிக்கவும் தாம் கண்டிக்கப்படவும் தயாராக இருத்தல் வேண்டும். பிறர் கண்டனத்தைப் பொறுமையுடன் ஏற்றலும் பிறரைச் சாந்தமாகத் தாக்கலும் சொற்போரின் அடிப்படையான கொள்கைகளாம்.

சில நியதிகள்

ஒரு சொற் போரின் பிறிதொரு நியதி என்ன ? முன்னால் பேசியவர்களின் கருத்துக்களைத் தர்க்க வாயிலாகவும், நேர்மையாகவும், மரியாதை வரம்பினின்று தமது கருத்தைப் பிரயத்தனமின்றியும், குறிப்புகளின்றியும் பேசுவதேயாம். ஒரு கண்டனத்திற்கு அளிக்கப்படும் விடை திருப்தியற்றதாகவிருப்பினும் அதைத் தொடர்ந்து ஒருவர் விவாதிப்பது முறையாம். மற்போரில் மல்லனொருவன் மற்றொரு மல்லனை விதிக்கிரமம் வழுவாது வீழ்த்த முயல்தல் போல், ஒரு சொற்போரில் ஈடுபடுவோரும் நடந்து கொள்ளல் மிக வேண்டப்படுவதாம். நமது நாட்டின் அரசியல் நிலைமை விரைந்து மாறும் இந்நாள் மேடை நாவலர்களினும், சொற்போர் வல்லுநர்களின் எண்ணிக்கை மிகப் பெருகல் வேண்டும். நாட்டின் நன்மையைக் கோரி அக்காலம் மிக வரவேற்றற்குரிய தாம்.

சொற்போர் நடைபெறும் அவைகளில் சாதாரணமாக அச்சங்கத் தலைவர்களே தலைமை வகித்தல் வழக்கு. ஏனைய பிரமுகர் களையும் தலைமை வகிக்கச் செய்வது முண்டு. முந்திய கூட்டநிகழ்ச்சிகளைப் படித்துக் கையெழுத்திட்ட பின் சபையின் இதர காரியங்களைத் தலைவர் கவனித்தல் முறை யென்க. விவாதத்திற் குரிய பேச்சைத் துவக்க அப்பேச்சாளரைத் தலைவர் அழைப்பர். சாதாரணமாக இவ்வித பேச்சுக்கள் இருபது நிமிடங்களுக்கு மேல் பேசுதற்கு அனுமதிக்கப் படுவதில்லை. அது போழ்து ஒரு பேச்சாளர் தமது பேச்சை எழுதிப் படித்தலும் பார்த்துப் பேசுதலும். குற்றமன்று. ஆயினும், எழுத்தினுதவியின்றிப் பேசு வோருக்குத் தர்க்க சபைகளிலும் தனி மதிப்புண்டு. அப்பேச்சாளரைத் தொடர்ந்து பேசுவோருக்குப் பத்து நிமிடங்களே போதியதாம். முடிவில் அந்த விவாதங்களை எதிர்ப்பவருக்குச் சற்று நீண்ட நேரம் அளிப்பதுண்டு. ஏனெனில் விவாதத்தைத் துவக்கியவரின் கருத்துக்களை வரிசைக் கிரமத்தில் பேசி முறையே விவாதிப்பது அவர் கடமையாகும். ஒரு விவாதத்தைத் தொடங்குதல் எளிது. ஆயினும், அதை எதிர்ப்பதற்கு மிகுந்த ஆற்றலும் வாக்குவன்மையும் வேண்டப் படுவனவாம். விவாதத்தின் ஒவ்வொரு பகுதியையும் தனியாகவும் ஒன்று சேர்த்தும் முரண்பாடின்றிப் பேசுதலே முறையாகும்.

தொடங்கினவரின் பேச்சிலுள்ள பல குற்றங்களைப் பிரித்து அலசிப் பேசுவதும் எதிர்ப்பவரின் கடமையேயாம். விவாதத்திற்கு ஒரு பேச்சாளர் தாமே முடிவு கட்டாது, அதைச் சபையோருக்கு விடுப்பது நல்ல தர்க்க வாதிகளின் முறையாம். உதாரணமாக, நீதிமன்றங்களில் இரு வழக்கறிஞர் தமது கட்சிகளை நீதிபதிக்கு அல்லது நடுவர்கட்கு எடுத்துக்காட்டி, முடிவு கூறுதலை அவர்கள்பால் விடுப்பது போல் தர்க்க வாதிகளும் அவ்வாறே நடந்து கொள்ளல் முறையெனக் கொள்க. அங்ஙனம் ஒரு விவாதம் விடப்படுமாயின், பெரும்பாலும் எதிர்ப்பவரே வெற்றி பெறுதல் உறுதி. எதிர்ப்பவர் வெற்றிபெறுவரேல், ஆரம்பித்தவரை அவமதிப்புக்குட்படுத்தல் விலங்கியல்பாம். ஒரு காலத்தே எதிர்ப்பவரும் தோல்வி பெறுவ ரென்பதைக் கருவில் வைத்து நடந்து கொள்ளுதல் நெறி முறையென்ப. நீதி மன்றங்களில் வாதி, பிரதிவாதிகளின் வழக்கறிஞர்கள் தாக்கிக் கொள்ளினும், விவாதம் முடிந்தவுடன் நேசப்பான்மை கொண்டாடுதலே சொற்போர் நிகழ்த்தும் பேச்சாளருக்குத் தக்கதோர் எடுத்துக் காட்டாகும்.

விவாதப் போக்கு

ஒரு விவாதத்தை ஆரம்பித்தவருக்கு எதிர்த்தவரின் பேச்சைக் குறித்துப் பதிலுரைக்க உரிமையுண்டு. அவர் அங்ஙனம் பேச முற்பட்டால், அவருக்குத் தக்க வாய்ப்பளித்தல் தலைவரின் கடமையாம். விவாதத்தை ஆரம்பித்தவரின் முழு ஆற்றலும், பேச்சு வன்மையும், சொற்போக்கு நயமும், மன வெழுச்சியும், உணர்ச்சி வேகமும் வெளிப்படும் காலம் இதுவே யாகும். இச் சமயங்களில் விவாதத்தின் ஆரம்பம், எதிர்ப்பின் போக்கு, அவற்றிற்கு ஆதரவு அல்லது எதிர்ப்பு என்னும் மூன்று சங்கதிகளும் விரிவாகப் பேசப்படுமாதலால், சபையோரின் முழு கவனத்தையும் அப்பேச்சால் கவர்தற்கியலுமென்ப. எந்நாட்டிலும், எக்காலத்திலும் அரசியலில் பெரும்பங்கும் உன்னதப்பதவியும் பெற்றவர்கள் நியாயவாதிகளென தேச சரித்திரங்கள் நினைவூட்டுவனவாம். ஆகலின் ஒரு பேச்சாளருக்கு விவாதிக்கும் தேர்ச்சி ஏற்பட்டால், அவர் மேடைப் பேச்சில் சிறந்து விளங்குதலும், அரசியல் உயர் பதவிகளைப் பெறுதலும் ஒருதலை.

இரு கலைஞர்கள்

பொது மேடைகளில் ஒரு பேச்சாளரை ஊக்குவித்து நன்றாகப் பேசச் செய்தற்குப் பல உபாயங்கள் உண்டு. நீதி மன்றங்களில் அவ்வாறே வழக்கறிஞர்களைத் திறம்பட வாதாடச் செய்யலாம். ஒரு நல்ல

பேச்சாளரின் முழுத்திறமையையும் சொற்போக்கு நயத்தையும் வெளிக் கொணர்தற்கு, முதலில் பேசும் ஒரு பேச்சாளர் அப்பேச்சாளரின் பொதுப்பட்ட கொள்கைகளை மரியாதையாகச் சிறிது தாக்கிப்பேசலாம். அன்னவர் பின்னர்ப் பேசுங்கால் அப்பேச்சும் விவாதமும் சொற்போக் கும் பெரும் வெள்ளமாக வெளிப்படும். ஈங்கு ஓர் உதாரணம் சாலும். சென்னை உயர் நீதி மன்றத்தே நீதிபதிகளாகத் திகழ்ந்த காலஞ்சென்ற கனம் வி. கிருஷ்ணசுவாமி அய்யர், பி. ஆர். சுந்தரம் அய்யர் ஆகிய இருவரையும் அறியாதார் இல்லை. அவர்கள் வழக்கறிஞர்களாக விருந்த காலை எதிர்க் கட்சிகளில் தோன்றிக் காட்சியளிப்பர். கனம் வி. கிருஷ்ணசுவாமி அய்யர் மனவாக்குக் கெட்டா விரைவிலும் கிண் கிணி போன்ற நாத வொலியுடனும் அழகாகப் பேசவல்லவர். மற்ற வர் நிதானமாகவும் ஊன்றியும் தமது திரண்ட சட்டப்பயிற்சி முழுதுந் தோன்றப் பேசவல்லவர். இவ்விருவரும் அழகுக் கழகு செய்யும் தோற்றமும் வதனப் பொலிவும் உடையோர். கனம் வி. கிருஷ்ண சுவாமி அய்யர் விவாதித்துக் கொண்டிருக்குங்கால் கனம். பி. ஆர். சுந்த ரம் அய்யர் வேண்டுமென்றே குறுக்கிட்டு "கலை யறிஞரான எனது நண்பர் தள்ளுபடியான பழஞ் சட்டத்தைக் குறிப்பிடுகிறார்" எனக்குத்தி விட்டு தமது ஆசனத்தில் அமர்ந்து விடுவார். அவ்வளவுதான். விவாதித்துக் கொண்டிருக்கும் கனம் வி. கிருஷ்ணசுவாமி அய்யர் அதே நொடியில் போர்ச்சன்னதம்கொள்வார்; காளமேகமாவார்; அவர் சொன்மாரிமுன் விண்மாரி நாணுற்று மறையும்; சட்டவெள்ளம் கரை புரண்டோடும்; தர்க்கவன்மை பளிச்சுப் பளிச்சென மின்னும்; நீதி மன்றமே இடிமுழக்கால் திடுக்கிடும். அவர் விவாதப் போக்கு சம்மட்டி கொண்டு அறைந்த இரும்பென சிதள்களையும் பொறிகளையும் பறக்கச் சிதறடிக்கும். அஃது உண்மையிலேயே எவரும் எங்கும் கேட்டறியாத சட்டப் பேச்சு விருந்தாக மிளிரும். எனவே, இம்முறையும் நல்ல பயனளிக்கத்தக்க தொன்றும். ஆயினும், எல்லாப் பேச்சாளர்களும் கனம் பி. ஆர். சுந்தரம் அய்யரைப்போல் அளவறிந்தும் கம்பீரமாகவும் பிற பேச்சாளரை ஊக்குவித்தற் கியலுங்கொல்?

சொற்போர் மற்போர் அல்ல

ஒரு சபையில் விவாதத்திற்கு வரும் செய்திகள் பல திறப்பட்ட வைகளாம். அவைகள் ஒவ்வொன்றையும் புத்தகங்களில் படித்தறிவ தற்கில்லை. எனவே, பாராளுமன்றத்தின் விவாதங்களையும், இந்திய சட்டசபை, நகராண்மைக்கழகம் ஆகியவற்றில் நடைபெறும் விவாதங்

களையும் உன்னி வாசித்துணர்தல் மிக வேண்டப்படுவதாம். இவ்விதச் சொற்போர் அல்லது விவாதங்களில் முன்னிலே, சுட்டு ஆகியவற்றை ஒரு பேச்சாளர் அறவே ஒழித்தல் முறையாம். இது பழக்கத்தாலும் மனேவலியாலும் பெறக்கூடியதொன்றும். இல்லேயேல், ஒரு விவாதத்தில் சொற்போரினின்னும் ஒரு பேச்சாளர் மற்போருக்கு வரும் நிலைமை ஏற்படும். இந்நாட்டில் சொற்போரின் விளேவால் ஆயுள்காலம் வரை கற்பிளவெனப் பிரிவுபட்ட நண்பர்கள் பலர் உண்டு. அவைத் தலைவர், இத்தகைய காலங்களில் விழித்திருந்து பேச்சாளர்களை அவ்வப்போது எச்சரித்தல்வேண்டும். மீறிப் பேசுவோரை மேலும் பேசவொட்டாது தடுத்தற்கு அவைத்தலைவருக்கு அதிகாரமுண்டு. ஒரு பேச்சாளரை நேரிடத் தாக்குதலேயும், பிறரை இடித்துரைத்தலேயும், பழிசுமத்துதலே யும் தலைவர் இடைமறித்தல் முறையேயாம்.

சீரிய தர்க்க விரிவுரை

தென்னுட்டில் உயர்முறையில், தமக்குத் தாமே நிகரெனச் சொற்போர் நிகழ்த்தி எவர் மனமும் புண்படாது நடந்துகொண்ட உயர்திரு. எஸ். சத்தியமூர்த்தியார் இதற்குத் தலைசிறந்த எடுத்துக் காட்டாவர். உயர் திரு. எஸ். சத்தியமூர்த்தியாரின் சொற்போர்த் திறனைக் குறித்துக் "கலைமகள்" பத்திரிகையில் கூறியிருப்பதை அகழ்ந்து ஈங்கு தருதல் முறையேயாம்: "வீரம் நிறைந்த வார்த்தைகளைக் கம்பீரமான தொனியில் அழுத்தந் திருத்தமாகப் பேசிப்பேசிக் கேட்ட காதுக்கள் சத்தியமூர்த்தியை மறக்கமுடியுமா? சென்னைக் கடற்கரை மணலுக்கு வாயிருந்தால் சத்தியமூர்த்தியின் கர்ஜனையைப் பற்றிச் சொல்லும். தமிழ்நாட்டின் மூலே முடுக்கெல்லாம் அவருடைய சட்டசபைப் பிரசாரத்தைக் கேட்டுக் கிளர்ந்தெழுந்தது. சட்டசபைச் சுவர்களைக்கூட அவருடைய ஆணித்தரமான வாதப் பேச்சுக்கள் மயக்கியிருக்கும். சத்தியமூர்த்தி எந்த நாட்டுக்கும் பெருமை வாங்கித் தருபவர். தமிழ் நாட்டில் பிறந்ததனுல் அவர் இந்த நாட்டுக்குப் பெருமை உண்டாக்கினுர்; ஆனுல் தமக்குக் காணியாகத் துன்பத்தையும் வறுமையையும் நோயையும் கடைசியில் மரணத்தையுமே பெற்றுர். 'இன்று அவர் இருந்தால்' என்று ஏங்கும் உள்ளங்கள் தமிழ்நாட்டில் எத்தனை எத்தனையோ!" பார்லிமெண்டு மகாசபையின் பெண் அங்கத்தினரான லேடி ஆஸ்டர் என்பார் சொற்போரில் களினமாகத் தாக்குவதில் கீர்த்தி வாய்ந்தவர். ஓரமயம் கடற்படையைக் குறித்த விவாதத்தில் இவர் கலந்துகொண்டார். மதுமயக்கால், மற்றொரு அங்கத்தினர் அவரை

நேரிடத்தாக்கி, கடற்படை விவாதத்தில் கலந்து பேசுவதிலும், குழந்தைகட்குப் பாலூட்டி, அச்சிசு பரிபாலனத்தில் லேடி ஆஸ்டர் கவனஞ்செலுத்தலே பொருந்துமென்றார். பேசிக்கொண்டிருந்த லேடி ஆஸ்டர் அவர் பக்கம் நோக்கி, "கண்ணியமிக்க அங்கத்தினர் 'லெமநேட்' அருந்துவதைக் குறைத்துக் குழந்தைகளைப் போல் பால் அருந்துவாராயின் மரியாதைக்கிரமத்தைக் கற்றவராகி, இம்மாபெருஞ் சபையிலுள்ள ஒற்றைப் பெண் அங்கத்தினரிடம் அன்புடனும் மரியாதையுடனும் நடந்துகொள்வார்" என இடித்தாரென்ப.

ஒரு விவாதத்தில் ஒரு பேச்சாளர் ஒன்றை உண்மை போற்கூறின், அஃது உண்மையல்லவெனச் சபைக்கு எடுத்துக்காட்ட அவைத் தலைவருக்கு உரிமையுண்டு. பல ஆண்டுகட்குமுன் சென்னையில் ஒரு மேற்றிசைப் பாதிரியார் பேசியபோது, பேராசிரியரும் பன்மொழி நாவலருமான காலஞ்சென்ற இராவ்பகதூர் பூண்டி, அரங்கநாத முதலியார் தலைமை வகித்தார். பாதிரியார், தமது பேச்சின் முடிவுரையில் மேல்நாட்டாரிலும் சன்மார்க்க நெறிபற்றியொழுகும் மக்கள் எந்நாட்டிலும் இல்லையென முடிவுகட்டி அமர்ந்தார். அவைத் தலைவர் தமது முடிவுரையில் ஆங்குக் குழுமியிருந்த ஆங்கில - இந்தியக் கலப்பு மக்களைத் தமது விரலால் சுட்டி, "இதுகாறும் நமது முன்னிலையில் பேசிய பேச்சாளர் நிலைநாட்டிய ஐரோப்பிய நல்லொழுக்கத்திற்குச் சான்றாக இதோ உயிருடன் வீற்றிருக்கும் இம்மானிடச் சின்னங்களே சாலும்" என்று ஓரே வாக்கியத்தால் தமது முழுக் கருத்தையும் கூறி பாதிரியார் பேச்சின் ஆபாசத்தையும் தகர்த்தெறிந்தார். இம்முறை, சொற்போரில் புகுவோரும் முயல்வோரும் குறித்துக்கொள்ளத் தக்கதொன்றாம். இதனால் அறிவு விளக்கமும், பேசும் ஆற்றலும் நிறம், சாதி, சமயம் முதலிய பல வேற்றுமைகளைக் கடந்து நிற்பதென்பது தெள்ளிதில் விளங்கும். அவற்றைப் பெறுதற்கு எவருக்கும் உரிமையுண்டு. அவை எவர் தனி பிராசுமல்ல. இவ்வாற்றலைப் பெறுதற்கு மிக்க மனோவலிகொண்ட சுயமுயற்சியே சிறந்த வழியாம். சர் ஐசாக் நியூட்டன் கூறுவதைக் கேண்மின். "எல்லையற்ற அறிவுக் கடலோ எவராலும் கண்டு பிடிக்க முடியாத தொலைவில் பரந்து நிற்கின்றது. நானோ ஒரு விளையாட்டுக் குழந்தையைப்போல், அக்கடற்கரையில் அங்குமிங்கும் தென்படுகிற விநோதமான கிளிஞ்சல்களையும், அழகிய கூழாங்கற்களையும் இன்னும் பொறுக்கிக்கொண்டிருப்பதாகவே என் நெஞ்சம் உணர்த்துகின்றது என்றார். அரிஸ்டாட்டில் எனும் மற்றொரு பெரியார், உலகப் பிரசித்தி பெற்ற அலெக்சாந்தர் எனும் தமது மாணவருக்கு அறிவுறுத்

தியது இதுவாம். " இளவரசே! நீவிர் உலக அறிவு அனைத்தையும் ஒருங்கே சடுதியில் பெற்று நாவலராக விரும்புகிறீர். ஆனால், மூதறிவைப் பெறுவதற்கு உழைப்பினும் - சலியாக் கடின உழைப்பினும் - சிறந்த நேர் அரசபாட்டை வேறில்லை ". இஃதொன்றால் உழைப்புக் கேற்ற பலனை மேடைப் பேச்சில் மட்டுமல்ல, இதர உலக காரியங்களிலும் ஒருவர் அடைவரென்பது வெள்ளிடை மலையாம்.

---

15. வாழ்த்துரை

வாழ்த்துமுறை

ஆங்கில வழக்கையொத்து நமது நாட்டிலும் தக்கார் சிலருக்கு வாழ்த்துரை கூறுதலும் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தலும் இந்நாள் நிகழ்வனவாம். இவை, அவைகட்கெனக் குறிக்கப்படும் கூட்டங்களில் தேநீர் உபசரிப்பு அல்லது விருந்துகளுடன் நடைபெறும். குறிப்பிட்ட ஒரு நண்பரைப் பாராட்டுதற்கு அவருடைய நண்பர் ஒருவர் அல்லது பலர் சேர்ந்து இவ்வித உபசரிப்பை மேற்கொள்வர். விருந்தோம்பிய நண்பர்கள் விருந்துண்டபின் விருந்தினருக்கு உபசாரமொழி புகல்வர். நினைவூட்டும் பரிசில்களும், பண முடிப்பும் அவருக்கு வழங்கப் பெறுவதுண்டு. உபசார மொழி நிரம்பிய முகமன் பத்திரங்களையும், வாழ்த்துப்பாக்களையும், சித்திரச் சீட்டுக் கவிதைகளையும் வாசித்துக் கொடுப்பதும் வழக்காம். இப் பத்திரங்கள் வேலைப்பாடான வெள்ளி, தந்தப் பேழைகளிலும், கண்ணுடிச் சட்டமிட்டும் வழங்கப் பெறுவனவாம். ஒருவர் பிறந்த நன்னளிலும், அறுபதாண்டு நிறைவுற்ற போதும், உயர்பதவி அல்லது கௌரவப் பட்டங்கள் பெற்றபோதும் அன்னாரின் நண்பர்கள் இத் தகைய விழாக்களைக் கொண்டாட முனைவர். தலைவர்களையும், பெரியாரையும், நண்பர்களையும் பேச்சு, எழுத்து, உண்டி ஆகிய மூவழியும் உபசரித்தல் நமது நாட்டில் இந்நாள் தாராளமாகக் கையாளப்பெறுதல் கண்கூடு.

மேடைப் பேச்சையொத்து இவ்வித நிகழ்ச்சிகட்கும் ஒரு அவைத் தலைவரை ஏற்படுத்திக் கொள்ளல் முறையாம். அவர் தலைமையில் உபசரிப்புகள் நடைபெறும். தலைவருக்கு வலப்புறத்தில் முக்கிய

விருந்தினரும், இடப்புறத்தில் விருந்தளிப்பவரில் முக்கியமானவரும் வீற்றிருந்து இதர நண்பர்கள் புடைசூழ உண்டியருந்துவர். உண்ட பின் பேசுதற்கென அமைத்துள்ள இடத்தில் நண்பர்களனைவரும் குழுமுவர். சாப்பாட்டுக்கு முன்னும் இடையிலும் மங்கலவாத்தியங்களும், இன்னிசைவிருந்தும் நிகழ்வதுண்டு. கண்கட்டு வித்தைகளும், கழைக் கூத்தும், கத்தி விளையாட்டும், மற்போரும், நாட்டியக் கச்சேரிகளும், நாடகங்களும், விகடங்களும், இன்னோரன்ன களியாட்டங்களும், வாண வேடிக்கைகளும் நடைபெறுவதைப் பெரிய விருந்துபசரிப்புகளில் காண லாம். மேலை நாடுகளில் சாப்பாடு முடியுமுன், தலைவர் எழுந்து நின்று திராட்சை ரசம் நிறைந்த கோப்பையைக் கையில் தாங்கி, முக்கிய விருந்தினரின் உடல் நலனைக் கோரி அப்பானத்தை முதலில் அருந்துவர். மற்றவர்களும் உடன் அருந்துவர். விருந்தாளியின் உடல் நலனைக் கோரி பல நெருங்கிய நண்பர்கள் இவ்வாறு பருகுவதில் அளவு கடந்து விடுதலுமுண்டு.

மேலை நாட்டு அனுபவம்

ஸ்காத்லாந்தில் நடைபெற்ற பெருமக்கள் விருந்தொன்றில் லார்ட் இன்வர்கிளைட் எனும் நாவலர், "ஒரு உபசரிப்பு விருந்தில் முக்கிய விருந்தாளியைப் பாராட்டிப் பேச எழுந்த ஒரு நண்பர் போதை மிகுதியால், மற்றொரு விருந்தின் அனுபவத்தைக் குறித்துப் பேசினார். இங்கிலாந்து தேசத்தின் ஒரு பெரிய மதாச்சாரியர் தமது இரு கெழுதகை நண்பர்களின் மணக் கூட்டத்திற்குச் சென்றிருந்தார். ஆங்கு அளவோடு மது அருந்தல் வேண்டுமென முன்னெச்சரிக்கையோடு சென்றிருந்தும், நண்பர்கள் பலரின் உபசரிப்பால் மதுவெறி அவர் தலைக்கேறிவிட்டது. திறந்த வெளிக்குச் சென்றால் மயக்கம் தெளியுமென்றெண்ணிச் சென்று பார்த்தார். அதற்கு மாறாக அவர் நிலைமை மிக மோசமாயிற்று. அவருடைய இளம் மனைவியின் முகத்தில் அன்றிரவு எவ்வாறு விழிப்பதென அவர் நெஞ்சம் நடுக்குற்றது. இரண்டு மூன்றுமணிநேரம் எங்கெங்கோ சுற்றி அலைந்தார். மயக்கந் தெளிந்தபாடில்லை. பின்னர் வீட்டை நோக்கினார். கதவின் சாவித் துளையில் சாவியைச் சரியாக நுழைப்பதே அவருக்குக் கடினமாயிற்று. கைகள் உதறின. அதனை ஒருவாறு சமாளித்துக் கொண்டு மெத்தைக்குத் தட்டித் தள்ளாடிச் சென்றார். படுக்கை அறையில் விளக்கொளி தென்பட்டது. தம் வரவை நோக்கித் தமது மனைவியார் படித்துக் கொண்டிருத்தல் வேண்டுமென அவர் எண்ணினார். ஆயினும் அவ்

வம்மையார் உறங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. உடைகளைக் களைந்து விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கைக்குச் செல்ல எத்தனித்தார். 'என்ன, தலையில் வைத்துள்ள தொப்பியுடன் தூங்கப்போகிறீர்களா ?' எனும் கேள்வி பிறந்தது. அவ்வளவுதான் ! அவர் போதை பறந்தோடிற்றும். அது முதல் பொது விருந்துகளில் மதுவைத் தொடுவதில்லையென விரதம் கொண்டாராம். இன்றளவும் அவ்வாறே நடக்கின்றார்," என்று ஓர் உண்மை அனுபவத்தை நகைச்சுவை மலியப் புகன்று சபையோருக்கு அறிவு கொளுத்தினர்.

நம் நாட்டு அனுபவம்

நமது நாட்டில் நிகழும் இத்தகைய உபசரிப்பு விருந்துகளில் மதுப் பழக்கம் இன்னும் வெளிப்படையாகப் புகவில்லை. ஏனெனில் நமது நாட்டில் மது அருந்தல் என்பது கட்டாய விதியல்ல. பெரும்பான்மையான நமது மக்கட்குக் குடிப்பழக்கமில்லை. எண்ணிறந்த அரசியல் விருந்துகளில் இங்கும், மேலை நாடுகளிலும் கலந்துகொண்ட காலஞ்சென்ற சர். பி. எஸ். சிவசுவாமி அய்யர் ஆண்டு மதுபானத்திற்குப் பதிலாக வெறும் நீரை அல்லது சோடாபானத்தை அருந்தியே வழிகாட்டியுள்ளார். மது விலக்கில் நமது அரசியலார் முனைந்துள்ள இந்நாள் மது அருந்தும் பழக்கத்தை நமது நாட்டினர் இவ்வித விருந்துகளில் விரும்பார் என்பது ஒருதலை.

மேடைமீது நண்பர்களனைவரும் அமர்ந்தபின் தலைவர் தமது ஆசனத்தை விட்டெழுந்து, "கனவான்களே ! மன்னர் பிரான்" என்று சுருங்கச் சொல்வார். அஃதாவது மன்னருக்கு முன் வாழ்த்துரை கூறுதலாம். சாதாரணமாக, அத் தருணம் மன்னரைக் குறித்து விரிவாகப் புகழ்ந்துரையாடுதல் வழக்கன்று. மன்னர் வாழ்த்துப் பாடலும், மங்கலவாத்தியமும் அவ்வமயம் முழங்கும். சபையோர் வணக்கத்துடன் நின்று ஆடியும் பாடியும், ஆரவாரித்தும் தமது மனக்கிளர்ச்சியையும், மன்னர் மாட்டுள்ள அன்பையும் காட்டுவர். இதற்கு அடுத்தபடியாக முக்கிய விருந்தினருக்கு வாழ்த்துரை கூறப் பெறும். இதற்கெனக் குறிக்கப் பெற்ற பேச்சாளர் விருந்தளிப்பவர்களின் சார்பிலும், சபையோர் சார்பிலும் முக்கிய விருந்தினரின் குணாதிசயங்களைக் குறித்தும், அன்னார் சேவைகளைப் பாராட்டியும் பேசுவர். அவ்விதப் பேச்சுக்கள் மன வெழுச்சியையும், நகைப்பையும், வியப்பையும் உண்டாக்குதல் இயல்பாம். இப்பேச்சுக்களில் விருந்தினரின் தலையும், இதயமும், (Head and Heart) தவருமல் அர்த்தமின்றி அடிக்கடிக் குறிப்பிடப் படு

வதை எம் மேடைகளிலும் காணலாம். சில பொருத்தமான கதைகளும், ஆன்ருேர் பாடல்களும் கூறப்படுவதுண்டு. பேச்சாளரின் பேச்சு, உண்டகளிப்பிலும் பன்மடங்கு மேலான மகிழ்ச்சியூட்டு முறையில் முற்கூட்டி அமைந்திருத்தல் நலமாம். சபையிலுள்ள ஒவ்வொருவர் முகமும் நகைமுகமாவதே இப்பேச்சின் குறிக்கோளாதல் வேண்டும். பேச்சினிறுதியில் உபசாரப்பத்திரம் வாசித்து வழங்கப் பெறும். அதனையும், இதரபரிசில்களையும் தலைவர் மூலம் விருந்தாளிக்கு அளித்தல் மரபாம். நறுமலர் மாலை புனைதலும், பூச்செண்டு, பழ வர்க்கங்களைக் கொடுத்து உபசரித்தலும் அவ்விருந்துக்கு மேலும் சிறப்பைத் தருவனவா மென்ப.

முக்கியப் பேச்சாளரைத் தொடர்ந்து, தலைவர் அனுமதி பெற்றுப் பலநண்பர்கள் புகழுரையும் வாழ்த்துரையும் கூறமுன்வருவர். தனித் தனியே மலர்மாலை புனையப் பல நண்பர் விரும்புதல் இயற்கையாம். இவைகளை ஏற்றுக் கொண்டபின், உபசரிக்கப் பெற்றவர் தமது நன்றியைச் சுருக்கியோ பெருக்கியோ, இன் சொலும் புன்முறுவலும் கொண்டு மகிழ்ச்சி தோன்றப் புகல்தல் முறையாம். ஒருவர் மற்ருெருவருக்கு வழங்கும் மரியாதைகளுள் இதனிலும் உயர்ந்தது உலகில் இல்லையென்பதை நன்குணர்ந்து அவ்வரிய வாய்ப்பைத் தாம் பதில் கூறுமுகத்தான் உபசரிக்கப் பெறுவோர் நன்கு பயன் படுத்திக் கொள்ளல் மிக வேண்டப் படுவதாம். ஏனெனில், ஒருவர் வாழ்நாளில் இவ்வித வாய்ப்புக்கள் பலப்பல நிகழ்வது துர்லபமாம்.

இதற்குப்பின் இதர நண்பர்கட்கும் வாழ்த்துரை கூறப்படுவதுண்டு. விருந்தினரில் ஒருவர் அதற்குப் பிரதியாகத் தாம் உண்டு களித்ததையும், விருந்தின் சிறப்பையும் பாராட்டி நன்றி கூறுவார். தலைவர் தமது முடிவுரையில் விருந்தாளிக்கும் விருந்தளித்த வர்க்கும், இன்னிசை யமுதூட்டியவர்க்கும், ஏனையோர்க்கும் உபசாரமொழிபுகன்று, விருந்தாளியின் பெயரை மும்முறை உரக்கக் கூவிச் சபையோர் கை தட்டலோடும், இன்னிசை முழக்கத் தோடும், "வாழ்க, வாழ்க" எனும் ஆரவாரத்தினிடையில் சபையின் நடவடிக்கைகளை இனிது முடிப்பார். வழக்கம் போல் தலைவருக்கு நன்றி கூறலுடன், மலர்மாலையும் வழங்கப் பெறும். முடிவில் புகைப்பட மெடுத்தலும், மங்கல வாத்தியம் முழங்கலும், வாணவேடிக்கை காட்டலும் பெரிய விருந்துகளின் இன்றியமையாத இலக்கணங்களாகும்.

16. அவைத் தலைமை

அவைத் தலைவரின் கடமைகள் மிக மிகப் பொறுப்பு வாய்ந்தவை. ஒரு சபையில் தலைமை வகித்து, அதனை ஆரம்பித்து ஒழுங்கு முறையில் நடத்தி முடித்தல் அவைத் தலைவரின் தலைசிறந்த கடனும். சபையை அமைதியாக நடத்தலும், சபையின் காரியங்களை இனிது கொண்டுசெலுத்தலும் சபைத்தலைவரின் முழுக்கவனத்திற்குரியனவாம். எனவே, அவைத்தலைமை ஏற்பவருக்குக் கல்வி, நாவன்மை, உலகியல் அறிவு, செல்வாக்கு, சமூக உயர்வு, சுயமதிப்பு முதலியன மிக இன்றி யாமையாதவையாம். அவருக்குத் திடச்சித்தமும், சமயத்திற்கேற்ற சாமர்த்தியமும் மிக வேண்டப்படுவனவாம். இவை இரண்டும் இருக்கு மேல், அத்தலைவர் அச்சூத்திரங்களின் உதவிகொண்டு பேச்சாளர்களை யும், சபையோரையும் தம் மனம் போல் இயக்குவிக்கும் ஆற்றல் பெற்ற வராவார்.

நடைமுறை

முறைப்படிப் பிரரேபிக்குமுன் அவைத் தலைவர் அவரது இடத்தில் அமர்தல் சரியன்று. தலைவரை ஒருவர் பிரரேபித்தபின் அதை மற்றொருவர் ஆமோதித்தல் முறையாம். ஒருவர் அல்லது பலர் அதனை ஆதரிப்பது வழக்கு. சபையோர் கைதட்டி அங்கீகரித்த பின் தலைவர் தமக்குரிய ஆசனத்தில் அமர்தல் வேண்டும். சில நெருக் கடியான சமயங்களில், வேறு அபிப்பிராயங் கொண்ட ஒரு சாரார் வேறொரு அவைத்தலைவரைப் போட்டியாகப் பிரரேபிப்பதுண்டு. அக் கூட்டத்தாரின் செயல் இகழத்தக்கதாயினும், பொது மேடைச்சட்டத் திற்குப் புறம்பானதாயினும் கட்சி பலத்தால் சில வேளை அன்னார் வெற்றி பெறுவதுண்டு. ஆயினும் உயர்தரக் கூட்டத்தில் இவ்விதத் தகாத முறைகளைத் தவிர்த்தல் நன்று. ஏனெனின், இம்முறை பிளவையும், மனக் கசப்பையும் உண்டாக்கும்; சபைகளையும், சபை களின் நோக்கங்களையும் பாழ்படுத்தும். இதற்கு 1907 - ம் ஆண்டு சூரத்தில் நடந்த காங்கரஸ் மாசபையின் முடிவு ஓரளவு சான் ருகும்.

ஒவ்வொரு சபையிலும், அவைத் தலைவரின் மேசைமீது கூட்டத் தின் பிரகடனம், நிகழ்ச்சி நிரல், சில விடுதித் தாள்கள், பேனு மைக் கூடு, கடிகாரம், மணி முதலியன வைக்கப்படுதல் வழக்கு. அவைத்

தலைவர் ஆசனத்தில் அமர்ந்து ஒரு முறை பிரகடனத்தையும், நிகழ்ச்சிக்குறிப்பையும் நோக்கியபின் ஆசனத்தினின்றும் எழுந்து சபையோரை விளித்துத் தமது பேச்சை ஆரம்பித்தல்வேண்டும். அப்போது கை தட்டலும் எழும். இதுவே தலைவர் முன்னுரை எனப்படுவதாம். அவைத் தலைமைக்குத் தம்மைத் தேர்ந்ததற்கு வந்தனம் கூறுதல் ஒரு கட்டாய விதியல்ல. சில பொருத்தமான வார்த்தைகளால் சுருக்கமாக வந்தனம் கூறுதலும் தவறல்ல. பேச்சாளர்களைப் போலவே, தலைவர்களும் குறிப்பிட்ட பேச்சில் உடனே இறங்கித் தங்கள் முன்னுரையைக் கூறல் முறையாம். பேச்சாளர் பேசவேண்டியவற்றை யெல்லாம் தலைவர் பேசிவிடாது, கூட்டத்தின் நோக்கத்தைக் கூறியபின் நிகழ்ச்சிக் குறிப்பில் கண்ட முதல் பேச்சாளரைப் பெயர்கொண்டு பேச அழைத்தல் வேண்டும். இரண்டொரு வாக்கியங்களால் பேச்சாளரின் சேவை, சம்பந்தம், அனுபவம் முதலியவற்றை எடுத்துக் கூறுமுகத்தான் அவரைச் சபையோருக்கு அறிமுகப்படுத்தல் தலைவரின் முக்கிய கடமைகளில் ஒன்றும். பிறநாட்டுப் பிரமுகர்களையும், முக்கிய ஆதிக்கங்களின் தலைவர்களையும், அரசியல் அதிகாரிகளையும் நல்லமுறையில் சபைக்கு அறிமுகப்படுத்துதல் தலைவரின் கடமையாம். பேச அழைக்கப்படும் பல பேச்சாளர்களையும் சமயம்போல் நல்ல முறையில் சிலாகித்துச் சபைக்கு அறிமுகப்படுத்தலாம். மாநாடுகளில் ஒவ்வொருவரையும் சபையோருக்குச் சுருக்கியாதல் அறிமுகம் செய்தற்கியலாது. சாமர்த்திய மிகுந்த தலைவர், வேண்டுமானுல், அவ்வாறு செய்தற்கியலும். உவில்யம் ஜென்னிங்ஸ் பைரன் என்பார் ஒரு அமெரிக்க தளகர்த்தரும் நாவலரும் ஆவார். அவரை ஒரு மாநாட்டில் அறிமுகப்படுத்துமுகத்தான் அவைத் தலைவர் அவரைச் சிறப்பித்து ஒழுங்கற்ற சிலேடையில் பேசினுர். பைரன் அதற்கு எவ்வாறு பதிலிறுப்பாரெனச் சபையோர் தியக்கமுற்றிருந்தனர். பைரன் எழுந்து, " அவைத் தலைவர் எம்மைக் குறித்து அன்பாகக் கூறியது, ஒரு விருந்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை நினைவு கூட்டுகின்றது. சுடச்சுட ஆவி பறக்கும் ஒரு முழு உருளைக்கிழங்கை ஒரு விருந்தினர் தமது வாயிலிட்டார். சுடுவதறிந்து, உடனே அதனை உமிழ்ந்துவிட்டார். அருகில் வீற்றிருப்பவர்களை நோக்கி, 'சில பரமமுட்டாள்கள் அதை அப்படியே விழுங்கியிருப்பர்" என்றுர். சபை யெங்கும் ஒரே சிரிப்பு ! இம் முக்கிய காரியத்தில் அவைத் தலைவர் தமது பகுத்தறிவைப் புகுத்தித் தக்கவாறு நடந்து கொள்ளல் நெறிமுறையாம்.

ஓர் உபாயம்

சில புதிய பேச்சாளர் மேடையில் பேசுமுன் தலைவரைத் தனிமையில் கண்டு தமது வரலாற்றைக் கூறி, அது கொண்டு தம்மைச் சபைக்கு அறிமுகப்படுத்தக் கேட்டுக்கொள்ளலாம். இது மேலை நாடுகளில் இன்றும் வழங்கும் முறையாம். தலைவர் அதைக் குறித்துவைத்துக்கொண்டு அப்பேச்சாளரை நன்முறையில் சபைக்கு அறிமுகப்படுத்தல் பெருந் தகைமையாமென்ப. அவைத் தலைவருக்கு இன்னும் பல கடமைகள் உள்ளன. சபையின் அமைதிக்கும் ஒழுங்குப்பாட்டுக்கும் அவரே பொறுப்பாளராவார். சபையில் சந்தடி உண்டாகுமேல், தலைவர் மேசைமீது ஓங்கி அறைதலும், 'அமைதி,' 'அமைதி' எனப் பன்முறை உச்சக் குரலில் அலறுதலும் சரியன்று. அக்காலங்களில் சாந்தமாக மணியோசை காட்டலாம். அன்றி, புன்முறுவலோடு எழுந்து நின்று இரண்டொரு அன்பு கலந்த வாக்கியங்களால் சபையில் அமைதி நிலவச் செய்யலாம்.

பொறுமையும் கடமையும்

அவைத் தலைவருக்கு ஓரளவு பொறுமையும் சமயத்திற்கேற்றவாறு நடந்து கொள்ளும் திறமையும் மிக இன்றியமையாதனவாம். சென்னையில் கூடிய ஒரு மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேறும் தருணத்தில் அதைக் குறித்த சில சந்தேகங்களை அறிந்து கொள்ளும் நோக்கமாய் ஒருவர் பேச முன்வந்தார். அவைத் தலைவர் அலறி எழுந்து மேசையை அறைந்து, தமது உச்சக் குரலில் 'அமைதி', 'ஒழுங்கு' எனப் பெருங்கூச்சலிட்டு அவரைப் பேச வொட்டாது தடுத்தார். சபையோர் திடுக்கிட்டுப் போயினர். மற்றொரு பெருஞ் சபையில் அவைத் தலைவருடன் சொந்த முறையில் பிணக்குக் கொண்ட ஒரு பேச்சாளர் பேச முற்பட்ட போதும், பேசிக்கொண்டிருக்கும் போதும் தலைவர் வாயினின்றும் பல ஆபாச மொழிகள் ஓயாது பிறந்தன. அருகிருந்தோர் கண்கள் அவரை வெறுத்து நோக்கின. உதக மண்டலத்தில் கூடிய பிற்போக்கு வகுப்பினர் மாநாட்டில் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர் ஒரு முக்கிய தீர்மானத்தைத் தாங்கிப் பேசினர். தமது முடிவுரைக்குக் காலம் போதாதென் றெண்ணி, அவைத் தலைவர் அவர் பேச்சைச் சுருக்கி முடிக்கப் பல தடவை கூறினர். தமக்கு வழங்கிய காலவரையைக் கடக்காத அப்பேச்சாளர் பேச்சை முடிக்காமல் அங்ஙனே தமது ஆசனத்தில் அமர்ந்து விட்டார். சபையோர் பேரிரைச்சலிட்டு அவர் பேச்சை மீளவும் பேசிமுடிக்கச் செய்யு

அவைத் தலைவரை வற்புறுத்தினர். அவைத் தலைவர் இத்தகைய சுழல்களில் சிக்காதிருத்தல் மேலாம். இவை கிடக்க.

சபையின் நோக்கமறிந்து பேச்சாளரின் வரிசைக் கிரமத்தை மாற்றுதற்குத் தலைவருக்குரிமையுண்டு. சாதாரணப் பேச்சாளரை முன்னுடிப் பேச விடுத்தல் நல்லது. திறம்பட்ட பேச்சாளர் பேசிய பின் அவர்களைப் பேசவிடுத்தால், அன்னுர் பேச்சு சோபிப்பதில்லை. சபையும் வெற்றிடமாதல் உறுதி. ஆதலின், நல்ல பேச்சாளர்களை வரிசைக் கிரமத்தில் பின்னுல் பேசச் செய்தல் ஒரு சிறந்த பொது மேடை உபாயமாம். அவையில் பேசிக்கொண்டிருக்கும் ஒரு பேச்சாளரைக் குறித்த நேரத்தில் தமது பேச்சை முடிக்கச் செய்தல் தலைவரின் முக்கிய கடமையாகும். சில வார்த்தைகளுக்காவது, புள்ளி விவரங்கட்காவது சற்றுத் தயக்கம் ஏற்பட்டால், அப்பேச்சாளருக்குத் தலைவர் மெல்லிய குரலில் உதவி புரிதல் குற்றமன்று. பேச வந்ததை விடுத்து, இதர செய்திகளில் சஞ்சரிப்போரையும், விவாதத்திற் கிடமானவற்றைப் பேசப்புகும் பேச்சாளரையும் அவ்வாறு செய்யாது தடுத்தலும் தலைவரின் வேலையாகும். குறிப்பிட்ட கால வரையைக் கடப்பாராயின், தலைவர் மணியோசை காட்டி அப் பேச்சாளரின் பேச்சை முடிக்கச் செய்தல் முறையாம். சபையோர் அனுமதியைக் கோரிக்கொண்டு 'இன்னும் ஐந்து நிமிடங்களில் என்பேச்சை முடிக்கிறேன்' என்று கூறித் தலைவர் கட்டளைக்கு மீறிப் பேசுவோர் பலருண்டு. சபையோரால் தேர்வு பெற்ற தலைவரை இஃது அவமதிப்பதாகும். தலைவரைத் தேர்ந்த பின், சபையோர் தமது சுதந்திரங்களனைத்தையும் அவருக்கு விட்டுக் கொடுத்திருப்பதால், ஒரு பேச்சாளர் தலைவர் ஆணையை மீறிச் சபையின் அனுமதி பெற்றுப் பேச முயல்தல் முறையெனக் கோடல் தவறும். ஒரு பேச்சாளர் பேசுவது உருசிகரமாகவும் முக்கியம் வாய்ந்து மிருந்தால், அவருக்குச் சற்று அதிக அவகாசம் கொடுத்தற்குத் தலைவருக் கதிகாரமுண்டு. அதைத் தடை செய்ய எவருக்கும் உரிமை இல்லை.

வழி வகைகள்

ஒரு சபையில், அக்கூட்டத்தின் நோக்கங்கட்கு முரண்பட்ட பிரரேபணைகளை ஒருவர் கொண்டு வருதலும், அதற்குத் தலைவர் இடந் தருதலும் முறையன்று. இருமனப்பட்ட கொள்கைகட்கும், அபிப்பிராயங்கட்கும் ஒரே மேடையையும், வாய்ப்பையும் உபயோகிக்க எவரேனும் முயற்சித்தால், தலைவர் தமது முழுப் பலங்கொண்டு அதனைத்

தடை செய்தல்வேண்டும். இயன்ற அளவு தந்திரோபாயங்களால் அதனைத் தடுத்தல் தலைவரின் தனிச் சுதந்தரமாம். ஆயினும், சபைமுன் ஒரு தீர்மானம் பிரரேபிக்கப்பெற்றபின் அதனையொட்டி ஒன்று அல்லது பல திருத்தங்களைக் கொண்டு வர சபையோருக்கு முழுச் சுதந்தரமுண்டு. எனினும், அவை பிரரேபிக்கப்பெற்றபின் மற்றொருவரால் அவசியம் ஆமோதிக்கப்படல் வேண்டும். இல்லையேல், திருத்தப் பிரரேபணைகள் பயனற்றவையாகும். ஒரு திருத்தப் பிரரேபணை ஆமோதிக்கப்பட்டால், அதனைத் தலைவர் முதற்கண் சபையோர் ஆலோசனைக்கு விட்டு அங்கீகாரம் பெறுதல் முறையாம். இவ்வழி பார்லிமெண்டு மகாசபையின் நடைமுறைக்குச் சற்று முரண்பட்டதாம். திருத்தப் பிரரேபணையைச் சபையோர் அங்கீகரிக்காவிடில், முதல் பிரரேபணையைச் சபையின் அங்கீகாரம் பெற்று நிறைவேற்றுதல் நியதியாம். இம்முறையை ஏற்காத சிலர் " கைதூக்கச் சொல்லல்வேண்டும் " என்றும், " வாக்கு எடுத்தல்வேண்டும் " என்றும் தலைவரை வற்புறுத்துவதுண்டு. இது சபையின் ஒழுங்கு முறையாதல் பற்றித் தலைவர் இதற்கு இசைதல்வேண்டும். கைதூக்கும் முறையை மேற்கொண்டால், " இத்தீர்மானத்தை ஏற்பவர் தமது வலக்கரத்தை உயர்த்தலாம் " எனக் கூறி உயர்த்தப்பெற்ற கரங்களை எண்ணிக் குறித்துக்கொள்ளல்வேண்டும். பின்னர் அத்தீர்மானத்தை எதிர்ப்பவர்களின் கைகளை அவ்வாறே எண்ணி எழுதிக்கொள்ளல்வேண்டும். இதுபோலவே, வாக்குரிமைத்தாள் கொண்டும் சபையோரின் அபிப்பிராயத்தைப் பெறலாம். இவ்விரு முறைகளில் ஏதேனும் ஒன்றில் எண்ணிக்கை அதிகமிருந்தால், அக்கட்சியின் அபிப்பிராயமே வெற்றி பெற்றதாகும். இக்காலங்களில் தலைவர் நடுவு நிலைமையோடிருத்தல் இன்றியமையாததாம். இரண்டு கட்சிகளின் எண்ணிக்கைச் சமமாக விருந்தால், தலைவருக்குரிய ஓர் அதிகப்படி வாக்கைத் தந்து தமக்குப் பிடித்த தீர்மானத்தை நிறைவேற்றல் முறையென்க. ஒரு தீர்மானம் எதிர்க்கப் படுமாயின் மேற்குறித்த முறையிலேயே அதனை நிர்ணயிப்பது வழக்காம்.

தலைவரின் முடிவு

சபையின் நடவடிக்கைகளைக் குறித்தும், பேச்சாளரைப் பற்றியும், இதர ஒழுங்குபாட்டைக் குறித்தும் பிரச்சினை அல்லது ஏதேனும் ஆட்சேபங்கள் கிளப்பப்படுமானால் அவற்றிற்கு முடிவான அபிப்பிராயம் கூறத் தலைவருக்கு அதிகாரமுண்டு. இவை பற்றித் தலைவர் வெளியிடும்

கட்டளையே முடிவானதாகும். அதனை நிராகரிக்க எவருக்கும் உரிமை இல்லை. சபையோர் இதனை மறுக்காது அங்கீகரித்தல் வேண்டுமென்பது கட்டாய விதிகளில் ஒன்றும். ஒரு கூட்டத்தை ஒத்திப்போடவோ, நடவடிக்கைகளைச் சற்றுத் தள்ளிவைக்கவோ தீர்மானங்கள் கொண்டு வரப்படலாம். நியாயமானவைகட்கு இணங்குதலும், முறையற்றவைகட்குத் தடை உத்தர விடுதலும் தலைவரின் தனி உரிமைகளாம். ஒருவர் மறைவைக் குறித்து 'இரங்கல்' தீர்மானம் வருமேல், சபையோரைக் கரங்கொட்டாது நிற்கச்செய்து நிறைவேற்றுதல் மிக வேண்டப்படுவதாம். தலைவரால் ஏற்கப்பட்ட தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் சரியான நேரத்தை முற்கூட்டிச் சபைக்கு அறிவித்தலும், அது போழ்து அப்பேச்சாளரை அழைத்துப் பேசச் செய்தலும் தலைவரின் கடமைகளாம். அப்பிரரேபணைக்கு எதிர்ப்பும், விவாதத்திற்கு வாய்ப்புமிருந்தால், இருதரப்புப் பேச்சாளர்களையும் ஒருவருக்குப் பின் ஒருவாராய்ப் பேச அனுமதித்தல் முறையாம். அத்தகைய தீர்மானங்களில் சில நிறைவேறுவது உண்டு. பலப்பல தீர்மானங்கள் முடிவுக்கு வாரமலே இருதரத்தாரின் பேச்சளவிலே நின்றுவிடுவதும் உண்டு. அப்படிப் பேச்சளவில் நின்றுவிடும் தீர்மானம் நிறைவேறியதாகக் கோடல் தவறும். தலைவர் அதுபற்றிய தமது முடிவைச் சொல்லக் கடமைப்பட்டவ ரல்லர். எனினும் அத்தகைய தீர்மானங்கள் சபையில் நிறைவேறு விடினும், சபையோரின் பொதுவான உணர்ச்சியைப் பிறமக்களும் அறிதற்குதவுவனவாம்.

தலைவர் முடிவுரை

எல்லாப் பேச்சாளர்களும் பேசி முடிந்தபின், தலைவர் சபையின் நடவடிக்கைகளை முடித்தல் கடனும். தாம் அமர்ந்துள்ள பீடம் தெய்வத் தன்மையுடையதென்பதையும், நடுவு நிலைமைக்கிருப்பிடமானதென்பதையும் நினைவில் வைத்து அவைத்தலைவர் நீதியுடன் தமது முடிவுரையை நிகழ்த்தல்வேண்டும். நாடகத் தமிழாசிரியரான இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாரைத் தமிழுலகிலும், நீதிமன்றங்களிலும் அறியாதவர் இல்லையெனலாம். அவர் நீதிபதியாக இருந்தபோது, தமது பீடத்தில் அமர்வதற்குமுன் அதற்கு வணக்கம் செலுத்துவது வழக்கு. ஆதலின் வழக்குகளில் அவர் கூறிய தீர்ப்புக்கள் மிக்க நீதி வாய்ந்தவைகளாக மிளிர்ந்தன. எனவே, அவைத்தலைவர் முடிவுரை கூறுங்கால், பேசியவரின் கருத்துக்களை நீதியோடு விளக்குதல் முறையாம். திருத்துதற்குரிய கருத்துக்களை மனச்சான்றுடன் திருத்திப் பேசுதலும்

எடுத்துக்காட்டலும் தலைவர் கடமையேயாம். தலைவர்தமது முடிவுரையைக் குறிப்பின் உதவிகொண்டு பேசுவதிலும், நினைவுகொண்டு பேசுதல் சபையின் நன்மதிப்பை அதிகப்படுத்தும். சில தலைவர்கள் ஒருவர் கூறியதை மற்றொருவர் கூறியதாக மறந்து கூறுவதுண்டு. ஒரு பேச்சாளர் பெயரை மறந்து வேறொருவர் பெயரைச் சொல்வதுமுண்டு. இத்தகைய சமயங்களில் பேச்சாளர் இடைமறித்தல் இயல்பாம். சில தலைவர்கள் பேச்சாளரின் பெயரைக் கூறுவதை விடுத்து, 'அவர்—இவர் - நமது நண்பர் - பிள்ளை - முதலியார்' என இழுத்திழுத்துப் பிதற்றுவதுண்டு. இந்நிலைமை ஏற்படுமேல், அருகிலுள்ள பேச்சாளரைச் சுட்டிக்காட்டி "இதோ வீற்றிருக்கும் நமது நண்பர் பேசிய இக்கருத்து" என்று தயக்கமின்றிக் கூறுவதால் தலைவர் தமது முடிவுரையின் நயத்தையும், பேச்சாளரின் நன்றியையும் மிகவும் பெருக்க இயலும். தமது முடிவுரையின் இறுதியில் தலைவர் சபையைக் களிப்பிக்கும் முறையில் இரண்டொரு வாக்கியங்களைக் கூறுதலும், சபையின் நடவடிக்கைகளை இனிது முடிக்க உதவிய சபையோரின் பொறுமைத்துணைக்கும், சபையைக் கூட்ட முனைந்தவர்கட்கும் அளவோடு நன்றி கூறுதலும் பொது மேடைக் கிரமங்களாகும்.

---

17. நன்றி கூறல்

நன்றியும் நினைவாற்றலும்

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறல் முறையாம். இக்கடமையைக் கூட்டம் கூட்டியவராயினும், சபையின் அமைச்சராயினும் செலுத்த முற்படுவர். அன்பலர்ந்த முகத்துடன், இரண்டொரு வாக்கியங்களால் சபையின் காரியங்கள் இனிது நிறைவேறியதற்கு, நன்றி கூறுவோர் தமது மகிழ்ச்சியை ஓரளவு சபைக்குத் தெரிவித்தல் தவறன்று. சபையைச் சிறப்பாக நடாத்திய அவைத்தலைவருக்கு முதற்கண் நன்றி கூறுதல் முறையாம். தலைவரைத் தலைமைக்கு இசையச்செய்த தமது முயற்சியைக் குறித்துச் சிறிது சுருக்கிக் கூறலாம். அது போழ்து தலைவர் தெரிவித்த சிலவற்றைப் பொருத்தமாக வெளியிடுதல் குற்றமன்று. தமது பல அலுவல்களை விடுத்துத் தலைமைவகிக்க இசைந்திருப்பரேல், அதற்காகவும், சபையை நன்கு நடத்திக் கொடுத்ததற்காகவும் தலைவருக்கு நயம்பட நன்றி கூறுதல் முறையாம். பின்னர் கைதட்டுதலுக்கிடையே பூமாலை புனைதல் வழக்கு. இதுபோல் பேச்சாளருக்கும் பேசிய

வரிசைக்கிரமத்தில் நன்றி செலுத்தலும், மாலை புனைதலும் ஒழுங்கு முறையாம். சொற்பெருக்காளரின் பெயர்களைக் கருவில் வைத்துப் பேசுதல் நன்றி கூறுவோரின் கடமையாகும். சபை நடுக்கத்தால் அல்லது தடுமாற்றத்தால் கோழிமங்கலம் நாராயண சாஸ்திரிகள் எனப் பெயரிய ஒரு பேச்சாளர் நாராயணமங்கலம் கோழி சாஸ்திரி களாகப் பெரும் நகைப்பிற்கிடையே மாற்றமடைவதுண்டு. சென்னை நகராண்மைக்கழக முன்னாள் மேயரும் திவான்பகதூர் பட்டம் வகித்த வருமானபெரியார், ஓரிடத்தே வந்தனம் கூறுமுகத்தான், "என் இதய பூர்வமான வந்தனம்" என்பதற்குப் பதிலாக, "என் வந்தன பூர்வமான இதயம்" என ஆங்கிலத்தில் கூறவே சபையெங்கும் ஒரே சிரிப்பு எழுந்தது! ஆகலின், நன்றி கூறுதற்கும், ஒரு பேச்சாளர் நன்கு பழகி யிருத்தலும் கவனத்தோடு பேசுதலும் வேண்டுமென்பது நன்கு புலனாகும்.

இன்சொல்

நன்றி கூறுதற்கு முன்வரும் ஒரு சிலர் கடுகடுத்த முகத்துடன் வெடித்த குரலில் "தலைவருக்கும், பேசியவர்கட்கும் நன்றி கூறி எமது கடமையை முடித்துக்கொள்கிறேன்" எனக் கூறுவதைப் பல இடங் களில் கேட்டிருப்போம். "நன்றி கூறுவது என் கடமையாக இருக் கிறது" என்று சிலர் ஆயாசத்துடன் ஆரம்பிப்பதுண்டு. இங்ஙனமாக உயிரற்ற சொற்களால் ஒருவர் நன்றி கூறுவதை எவரும் விரும்பார். சில நல்ல பேச்சாளர் வந்தனம் செலுத்துங்கால் இன்சொற்றொடர்களை மேற்கொள்வர். உதாரணமாக, "இச்சபையின் செயலாளர் எனும் முறையில் எமது மனதிற்கிசைந்த இன்பப்பணியான வந்தனம் கூறுதலை ஆற்றமுற்படுகிறேன்" என்று ஆரம்பித்தல் நலமன்றோ? பேச் சாளருக்கு இன்சொல்லும் புன்னகையும் எத்துணை அவசியமோ அத் துணை, நன்றி வழங்குவோருக்கும் இருத்தல் மிக அவசியமாம். பொது வகையில் ஒரு பேச்சாளரைச் சிறப்பித்துப் பேசுதல் முறையாயினும், அன்னோர் பேச்சுத்திறனையோ, அவர் பேச்சின் கருத்துக்களையோ விரிக்கப்புகுதல் நன்றி கூறுவோரின் கடமையல்ல. தலைவரால் நிறை வேற்றப்பெறும் அக்கடமையில் நன்றி கூறுவோர் தலையிடுதல் புல்லறி வாண்மையென்ப. ஆயினும் சிலர் சாமர்த்தியமாகச் சில பாடல்களையோ அவைகளின் சாரங்களையோ வடித்துக்கூறி, அவைத்தலைவருக்கும் பேச்சாளர்கட்கும் உபசாரமொழி கூறுவதுண்டு. அவைகள் பொருத்த மற்றவைகளாகவும், மிகைப்பட்ட கூற்றுக்களாகவும் இருத்தல் கூடா

வாம். ஒரு கூட்டத்தில், இராமாயணக் கவிஞர் ஒருவர் நன்றி கூறு முகத்தான், அவைத்தலைவரின் ஆற்றலைச் சிறப்பிக்கக் கம்பர் கவிச்சித்திரமான "மழைவண்ணத் தண்ணலேயுன் கைவண்ணமங்குக் கண்டேன், கால்வண்ண மிங்குகண்டேன்" என்பதை உவமையாக்கி விநயம் தோன்ற, "தலைவரின் எழுதும் கை வன்மையை அவர் பத்திரிகையில் - புத்தகங்களில் கண்டோம்; மகிழ்ந்தோம். அவர் இங்கு எழுந்தருளி நம்முன் நின்று பேசிய மழை வண்ணமான செந்தமிழ்ப் பேச்சு வன்மையை இன்று கண்டோம்; மிகக் களிக்கின்றோம். இதற்குக் கம்பர் கவியைவிட ஏற்ற உவமை வேறில்லை" எனப் போற்றிப் புகழ்ந்து பூமாலை சூட்டினர். அவ்வமயம் எழுந்த ஆரவாரமும் கரமுழக்கமும் அம்மண்டபமெங்கும் நிறைந்து ஒலித்தன. எனவே, இம்முறையும் சபையோரால் நன்கு ரசிக்கப்படுவதாம்.

தகாத முறைகள்

சிலர் தமக்குப் பிடிக்காத பேச்சாளரைத் தாக்குதற்கு நன்றி கூற முற்படுவர். சிலர் வஞ்சம் தீர்ப்பதற்காக நன்றி வழங்க முன்வருவதுண்டு. உயர்திரு. டி. எப். காரகா எனும் தலைசிறந்த பார்ஸி எழுத்தாளரை உலகம் நன்கறியும். பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசுதற்கு சர். கொவாஸ்ஜி ஜெகாங்கீர் எனும் பெரியார் சென்றுகொண்டிருந்தார். அதே கூட்டத்திற்குச் சென்ற உயர்திரு. காரகா அவருக்கு வணக்கம் செலுத்தினர். சர். ஜெகாங்கீர் எக்காரணம் பற்றியோ பிரதிவந்தனம் கூறத் தவறினர். அது தமது சிநேகிதையுடன் சென்றுகொண்டிருந்த இளம் காரகாவின் மனதைப் புண்படுத்தியது. சர். ஜெகாங்கீர் பேச்சு முடிந்தவுடன் அவைத்தலைவர் உயர்திரு. காரகாவை நன்றிகூற அழைத்தார். அவர் வந்தனம் அளிக்கையில், "என்றும், எங்கும், கேட்டறியாத ஒளிசிறந்த ஒரு பேச்சை இங்குக் கேட்டோம்," என வழக்கம் போல் கூறுது, தமது புண்பட்ட உள்ளத்தைத் திறந்துகாட்டி, 'சர். ஜெகாங்கீர் போன்ற மக்கிமடிந்த பழஞ்சிப்பிகள் இன்றைய இளம் இந்தியாவிற்குப் புத்தி புகட்டப் புகுமுன், ஒருவருக்குப் பிரதி மரியாதை வழங்கும் சிறு முறையை முதலில் கற்றுத் தேர்தல் நன்'றெனக் கூறி வந்தனமளித்தார். சர். ஜெகாங்கீர் துடி துடித்துப் போயினர். அவர் சமவயதுடைய ஓர் இளைஞராயிருப்பரேல், சபையில் மற்போர் விளைந்திருக்குமன்றோ? உயர்திரு. காரகா சென்ற பாட்டை அத்துணைச் சிறந்ததன்று. பேரவைகளிலுள்ள பெரியார்களைச் சில பேச்சாளர் பெருமையாகவும் உயர்வாகவும் குறிப்பிட்டுப் பேசுதல் உண்டு. மேலை

நாடுகளில் அவ்வாறு புகழப்பெற்றவர் சிறிதளவு நன்றி கூறுதல் வழக்கு. நமது நாட்டில் பெரும்பான்மையான சபைகளில் அவ்வாறு புகழப் பெற்றவர் வாளாவிருந்துவிடுவர். அவ்வாறு புகழ்ந்து பேசுதல் பேசிய வரின் 'தலைவிதி' என எண்ணுவாரும் உண்டு. அதைக் குறித்து அவருக்கு நன்றி மொழிதல் தமது பெருமைக்கு இழுக்கெனக் கருதும் பெரியோர்களும் நம்மிடையே இன்றுமுள்ளனர். இதனை அறியாமை அல்லது அகங்காரம் என்றழைத்தல் தவறன்று. இது கிடக்க, வேறொரு மேடைத்தமிழ்ப் பேச்சாளர் ஒரு பெரியாருக்கு நன்றி கூறு கையில், "இன்று தலைமை தாங்கிய நாவலர் பரந்த தமிழ்க் கடலின் எல்லையைக் கண்டவர். நூறு அவதானங்களைச் செய்து 'சதாவதானி' எனப் பெயர் பெற்றவர். சைவ சித்தாந்த நூற்களை ஐயந் திரிபறக் கற்று 'அரிமா' எனச் சிறப்புப் பெயர் கொண்டவர். இவர் பலப்பல தமிழ் நூற்களை யாத்துள்ளார். இவருடைய சிறப்புக் கவிகளைத் தாங் காது எப்புதிய நூற்களும் வெளி வருவதில்லை. ஆயினும் இவரது எழுத்து நடைக்கும் பேச்சு நடைக்கும் மாபெரும் வேற்றுமையுண்டு. பேசும்நடை மிக எளியநடை; எல்லோருக்கும் விளங்கும் நடை. அதனை ஒரு சிறப்புப் பெயர்கொண்டு 'வண்டிக்கார நடை' என்று தயக்கமின்றிக் கூறலாம்," என்று பேசியபின் பெரிய பூமாலையொன்றை அணிந்தார்! இவ்வினிய பேச்சுக்கப்பால் தலைவருக்கு வேறு உபசார மொழிகளும் மாலை மரியாதையும் வேண்டுங்கொல்? இந்நிகழ்ச்சிக்குப் பின் அப்பெரியார் பன்முறை வருந்தி யழைக்கப்பட்டும், அச்சங்கக் கூட்டங்களுக்கு வர மறுத்துவிட்டது ஆச்சரியமன்று. ஆயினும், மேற் குறித்த குற்றமான பேச்சினின்றும் ஒரு படிப்பினையைக் காண்போம். அதாவது, ஒரு பேச்சாளருக்குப் படிப்பிற்கேற்ற பேச்சு வன்மையும், பேச்சுக்கேற்ற படிப்பும் ஏற்றத் தாழ்ச்சியின்றி இருத்தல் மிக அவசிய மென்பதும், பொதுமக்கள் அவற்றைப் பேச்சாளரிடமிருந்து மிக மிக எதிர்பார்க்கின்றன ரென்பதும் நனிவிளங்கும்.

நன்முறைகள்

நன்றி கூறுவோர் தமது முழுஉருவம் தோன்ற சபைமுன் வந்து நிற்றல் முறையாம். பூமாலைகளை இடக்கரத்தில் தாங்கலாம். அன்றி அவைகளை அருகில் வேறொருவர் வசம் வைத்திருத்தலும் நன்று. மாலை களைச் சிறிது வணக்கத்துடன் சூட்டலும், ஏற்றலும் முறையாம். மாலை புனைவதை ஒருவர் தடுப்பதும், மாலையை உடனே அகற்றுவதும் வெறுக்கத்தக்கனவாம். கோவில் மாலைகளைப்போல் கனத்த நீண்ட

மாலைகள் சபைக்கு ஏற்றவைகளல்ல. சரிகை, ரேக்குகள் நிறைந்த மாலைகள், புனையும்போதும் கழற்றும்போதும் மிகத் தொல்லை கொடுப்பனவாம். ஒல்லும்வகை, மணங்கமழும் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் சபைக்கு ஏற்றவைகளாம். இன்றைய மேடைப் பழக்கத்தில் மாலையிடுதல் ஒரு அவசியமான சடங்காகக் கருதப்படுவதில்லை. இஃது ஒரு சிக்கன முறையெனச் சொல்லப்படினும், தலைவருக்கும், பேச்சாளர்கட்கும் வெறும் வாய்ச்சொல்லால் தொடுத்த நன்றி மாலை அத்துணை மகிழ்ச்சியை உண்டாக்கமாட்டாது. ஒரு பூமாலையின் மணம், சிறு குழந்தைகளையும் மகிழ்விக்கும் ; ஒரு சிறந்த படிப்பினையையும் அம்மக்கட்குப் போதிப்பதாகும். எனவே, ஒரு சபையில் சுவை மலர்ந்த தமிழ்ப் பேச்சு மணத்தோடு, தேன் துளிக்கும் மலர் மணமும் ஒருங்கு சேரின் அச்சபையின் சோபிதம் கூறவொணாத தோன்றும்.

---

18. எழுவகைச் செயல்

முந்திய பகுதிகளில் மேடைத்தமிழ்ப் பேச்சுக்கான சாதனங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றை ஒருவர் எவ்வாறு செயலுக்குக் கொணர்தல் கூடுமென்பதையும் அதற்கான வழிகளையும் ஈண்டு விவரிப்போம். தாம் இயற்கையில் பெற்றுள்ள சக்தியைப் பன்மடங்கு பெருக்கிக்கொள்ள விரும்பாத பேச்சாளர் உலகில் இல்லையென்பது கண்கூடாம். அதனால் விளையும் நன்மைகளையும் செல்வாக்கையும் வெறுப்பார் யாண்டும் இலர். எனவே, அவ்வித ஆற்றலை ஒருவர் பெறுதற்குத் தமது சுயமுயற்சியையும், பொது அறிவையும், உலக விவகாரப் போக்கையும் தம்முள் மிகுதியாகப் பெருக்கிக்கொள்ளல் வேண்டும். இவ்வரிய சக்தி, பொதுமேடைகட்கு மட்டுமன்றி, மக்கள் நலமடைய விரும்பும் இதர தொழில் துறைகட்கும் உதவும் இயல்புடைத்தாம்.

பொருத்தம்

முதலாவதாக, ஒரு பேச்சுக்கும், பேச்சாளருக்கும் ஒல்லும்வகை பொருத்தம் இருத்தல்வேண்டும். அதாவது, பேச எடுத்துக்கொண்ட சொற்பெருக்குக்கு ஒத்தகுணனும் தகுதியும் உடையராக அவர் இருத்தல் அவசியமாம். ஒருவர் பேச்சிலும், வெளியிடும் கருத்துக்களிலும் ஊக்கமும் கவலையும் உண்மையில் தமக்கு இருப்பதாகச் சபை

யோரை அறியச் செய்தல் இன்றியமையாததாம். இல்லையேல், அப்பேச்சாளர் கடமை தீர்க்கவும் கைக்கூலிக்காகவும் பேசுவதாகச் சபையோர் எண்ணுவதியல்பு. ஊக்கமிழந்த ஒரு பேச்சு சபையோரை எக்காலத்தும் ஊக்குவிக்காதென்க. அத்தகையோர் பேச்சில் சபையோர் கவனம் செல்லாதென்பதும் திண்ணம்.

நன்னம்பிக்கை

இரண்டாவதாக, சபையோரின் முழு நம்பிக்கையையும் தமது பேச்சின்வழி பெறுதற்குப் பேச்சாளர் முயல்தல் முறையாம். ஒருவர் பேச்சில் இம்முயற்சி வெளிப்படையாகக் காட்டப்படாவிடில், சபையோர் அவர் கூற்றில் நம்பிக்கை கொள்ளார். எல்லாப் பேச்சாளர்களும் இம்முக்கிய காரியத்தில் வெற்றியடைவதில்லை. உலக விவகாரங்களிலும், வியாபார வட்டங்களிலும் இவ்வரிய குணத்தைப் பெறுதார் தமது வாழ்நாளில் தோல்விபெற்றுப் பின்னிடுவதைக் காண்போம்.

பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுதற்கு ஒருவரின் சீரிய ஒழுக்கமே அடிப்படையாம். ஒரு பேச்சாளரின் நற்குண நற்செய்கைகளும் அதற்குப் பெரிதும் உதவுவனவாம். ஒருவர் பெயரைச் சொல்லக் கேட்டபோதே, அவர் யோக்கியப் பொறுப்புடையாரென்றும், உண்மை நெறி பற்றியவரென்றும் நமது மனம் ஒரு நொடிப்போழ்தில் கூறும் இயல்புடைத்தாம். அக்குணப் பெருந்தகையர் பேச்சில் அல்லது கூற்றுக்களில் பொதுமக்கள் சந்தேகம் கொள்ளார். எனவே, இச்சீரிய குணங்களைச் சிறிதளவாதல் அடையப்பெறுதார், எத்துணைப்படிப்பாளிகளாயினும் வாக்கு வல்லுநராயினும் அன்னோர் பேச்சுப் பொதுமேடைகளில் ஏற்கப்படுவதில்லை. நல்ல வெளித்தோற்றமும், கல்வியும், பேச்சு நயமும் பெற்ற அரசாங்க மந்திரி யொருவர் சென்னை நகரிலுள்ள ஒரு சபையில் ஊக்கமற்றுப் பேசினர். அவரது வாக்கியத் தொடர்கள் உணர்ச்சியற்றும் மிகச் சிக்கலாகவும் இருந்தன. சபையோர் அவர் பேச்சைக் கேளாது இடைமறித்தனர். அவர் பேசி யமர்ந்தபின் ஒரு தொழிலாளர் அதே செய்தி குறித்துப் பேசினர். அப்பேச்சில் ஊக்கமும் உண்மையும் தவழ்ந்தன. அவர் கூறியது முற்றிலும் உண்மையெனச் சபையோர் பாராட்டினர். மந்திரியார் பேச்சு எங்கேயோ மறைந்துவிட்டது! பின்னவர் பேச்சு முன்னதைவிட உயர்ந்ததாகச் சபையோரால் வரவேற்கப்பட்டது.

உலகமே ஆவலுறும் நாவன்மை கொண்ட சில ஆங்கிலப் பேச்சாளர் நமது நாட்டிலும் உண்டு. அவர்கள் பேச்சில் பொதுமக்கள்

எப்பொழுதும் நம்பிக்கை கொள்வதில்லை. அதில் ஏதேனும் சூழ்ச்சியும் சுயநலமும் இருக்குமெனமக்கள் சந்தேகிப்பதுண்டு. அதிகப்பொருள் தரும் கட்சியாரைத் தாங்கிப் பேசுவது அன்னோர் வழக்கு. எனவே, தமது உண்மை உள்ளத்தை அவர்கள் உள்ளவாறு திறந்து காட்டிப் பேசுவதெங்ஙனம்? அவர்கள் இறுதிக்காலம்வரை மக்களால் சந்தேகிக்கப்பட்டு, அவர்கள் அறிவிற்கும், பேச்சு வன்மைக்கும் ஏற்ற பலனை அடையாமலே மறைவுற்றனர். இவ்வழியைப் பெரிதும் பின்பற்றும் பிரபல வழக்கறிஞர் ஒருவர் மனவாக்குக் கெட்டாதவாறு பேசவல்லராயினும் அவர் வாதங்களை நீதிபதிகள் எப்போதும் ஏற்பதில்லை. ஆகலின், ஒரு பேச்சாளர் உண்மையான கருத்துக்களைக் கரவின்றி உண்மையாகவே வெளிப்படுத்தல் வேண்டும். அஃதொன்றே ஒரு பேச்சாளருக்குப் பொதுமக்களின் நன்மதிப்பையும் விருப்பையும் உண்டாக்குமென்ப.

சத்திய மொழி

மூன்றாவதாக, ஒரு பேச்சாளர் தெய்வசிந்தனையும், சத்திய நெறியும் பற்றியவராகக் கருதப்படுவரேல், பொதுமேடைகளில் அவருக்குத் தனி மதிப்பு ஏற்படுவதியல்பாம். அவ்வொழுக்கங்கள் எத்தகைய மனப்பான்மைகொண்ட சபையையும் வசீகரப்படுத்துவனவாம். ஏனெனில், தமிழ்நாட்டின்கண்ணுள்ள பெரும்பான்மையான மக்கள் தெய்வப் பற்றுடையார். சில பேச்சாளர் அப்பற்றைப் பொதுமேடைகளில் தமது உடையாலும், சமயக்குறியாகிய புறச்சான்றுகளாலும் காட்டமுற்படுவர். சில பேச்சாளர் குமிழ்கொண்ட பாதக்குறடுகளையும், அக்கமணிவடங்களையும், சடைமுடிகளையும் தரித்து மேடைமீது தோன்றுவதுண்டு. இத்தவவேடங்கட்கு நமது நாட்டில் பெரும் மதிப்புண்டென்பதை எவரும் மறுத்துரையார். பொதுவாக ஒரு பேச்சாளர் கடவுளுக்குப் பயந்து நடப்பவர், அல்லது சத்திய நெறியினின்றும் வழுவாதவரெனப் பொதுமக்கள் அறிந்துகொள்ளலும்,அவ்வாறு பேச்சாளர் சபையோரை அறியச் செய்தலும் மிக வேண்டப்படுவதாம். சில உதாரணங்களை உன்னுவோம். காலஞ்சென்ற மறைத்திரு ஞானியார் சுவாமிகளின் பேச்சு எல்லாவகையிலும் சிறந்து மிளிர்ந்ததற்கும் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றதற்கும் அப்பெரியாரின் சீரியவொழுக்கமன்றோ காரணம்! உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் பேச்சில் நம்பிக்கை கொள்ளாதவர்களும், வெறுப்புக்காட்டுகிறவர்களும் உண்டோ? சமீபத்தில் நிகழ்ந்த சென்னை பின்னி - கர்னடிக்

மில் கதவடைப்பில் கலாம் விளைவித்ததாகக் கருதப்பட்ட தொழிலாளர் தலைவரை, அரசியலார் நாடு கடத்தியும், சிறையிலடைத்தும் குழப்பத்தைத் தீர்க்க முயன்றனர். அப்போது தொழிலாளர் நண்பரான உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் அப்பதவியை ஏற்றுத் தொழிலாளரின் தலைவரானார். ஆயினும், அவர் சத்தியநெறி நிற்கும் உண்மைக் காங்கரஸ் தொண்டரென்பதை அரசியலார் நன்குணர்ந்து, அக்கலாம் தீரும்வரை அவரை அவர் வீட்டிலேயே சிறைஇருக்கச்செய்தனர். நமது நாட்டின்கண் பிரபல நீதிபதியாக மிளிர்ந்த சர். எஸ். வரதாச்சாரியார் ஒரு வழக்கறிஞரா யிருந்தபோதும் நீதிபதியாக அமர்ந்தபோதும் அவர் பற்றிய உயர் சன்மார்க்க நெறி உலகிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டன்றோ ? இவற்றால் சத்தியநெறி பற்றிய தூயருக்குத் தனிச் சிறப்புண்டென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல்வதாம். உலகில் இயேசுநாதரையும், அம்மதக் குருமார்களையும் நம்பிப் பின்பற்றாதவர்க ளுண்டோ ? முகம்மது நபியிடத்தும், அவர் உபதேசங்களிலும் நம்பிக்கை கொள்ளாத மகம்மதியரை உலகில் காண்கிலோமில்லை. அமெரிக்க ஐக்கியபதியான ஆபிரகாம் லின்கன் பேச்சுக்கள் சத்திய வசனங்களெனவும், தெய்வத்தன்மை வாய்ந்தன வெனவும் கருதப்படுகின்றன. நம்நாட்டுப் பேராசிரியரும் நாவலருமான காலஞ்சென்ற கனம் கோபாலகிருஷ்ண கோகலே எனும் பெரியார் நமது நாட்டு மக்களின் அறியாமையை அறவே அகற்ற கைக்கொண்ட உழைப்பும், ஊக்கமும், மேடைப் பேச்சுக்களும் சத்தியநெறி பிறழாதனவாம்.

சொந்த அனுபவம் யாது ?

நான்காவதாக, பொதுமேடைகளில் ஒரு பேச்சாளர் பிறர் அனுபவங்களைப் பெருக்கிக் கூறுவதிலும், தமது சொந்த அனுபவத்தைச் சுருக்கிச் சொல்வதால் சபையோரின் நம்பிக்கையை எளிதிற் பெறலாகும். ஒருவர் அபிப்பிராயங்களை எல்லாம் சபையோர் அப்படியே ஏற்கவேண்டுமென்பது கட்டாய மல்ல. சிலவேளை, சபையோரின் பல சந்தேக விபரீதங்கட்கு ஒரு பேச்சாளர் விடையிறுக்க நேரிடும். கேள்வியுற்றவற்றை ஒரு சபையில் சொல்லினும், கற்றவற்றைக் கொட்டி அளக்கினும் அவற்றில் சிற்சிலவேனும் பேச்சாளரின் சொந்த அனுபவமாக இராவிடில், அவற்றைச் சபையோர் ஏற்றல் கடினமாம். யோகத்தின் நுட்பத்தைக் கூறவந்த ஒருவர் பல புத்தகங்களிலுள்ள மேற்கோள்களை மட்டும் காட்டிக் காட்டியே பேசினால் அவர் பேச்சு சுவைக்கப்படுவ

தில்லை. அவை குறித்துச் சொந்த அனுபவமான சில நுட்பங்களை எடுத்துக்கூறினால் - கைவந்த சில சாதனங்களைச் செய்துகாட்டினால் - அவர் பேச்சு எத்துணைச் சிறப்புடன் மிளிரும் ? அதுபோலவே, ஒரு பேச்சாளர் தமது அனுபவத்தை - சுகதுக்கங்களை - உவமைப்படுத்திக் கூறுவரேல், அவர் பேச்சில் நம்பிக்கை வைத்துச் சபையோர் அனுதாபம் காட்டுவர். பேச்சில் ஒரு நிபுணரெனவும் அவர் கருதப்படுவார்.

அறிமுகப்படுத்தல்

ஐந்தாவதாக, அவைத்தலைவர் ஒரு பேச்சாளரைத் தக்க விதமாகச் சபைக்கு அறிமுகப்படுத்தத் தவறினால், அப்பேச்சாளர் சபையோர் கவனத்தைக் கவர்வதற்கில்லை. ஒரு பேச்சாளரை அறிமுகம் செய்விப்பதென்பது, அவரது உண்மை யோக்கியதையையும், பேச்சுப் பொருளைப் பற்றிய அவரது அனுபவத்தையும் சபையோர் அறிந்து கொள்ளுமாறு முற்கூட்டிக் குறிப்பிடுதலாம். ஒரு பொருளின் விற்பனையைப் பெருக்க அதைக் குறித்து விளம்பரம் செய்தல்போல், ஒரு பேச்சாளரைத் தக்கவாறு சபைக்கு அறிமுகப்படுத்தல் மிக வேண்டப்படுவதாம். ஆயினும் அவைத்தலைவர்கள் எப்பொழுதும் அவ்வாறு செய்வதில்லை. ஏட்டில் எழுதப்படாத இப் பொதுவிதி அவைத்தலைவர்களின் முழுக்கவனத்திற் குரியதொன்றும். இது குறித்துப் பேச்சாளர் செய்யவேண்டுவதென்னை ? ஒரு புதிய பேச்சாளர் சபையில் பேசுமுன், அவைத்தலைவரைச் சந்தித்து தம்மைச் சபைக்கு அறிமுகம் செய்விக்கையில் தம்மைப் பற்றிய இரண்டொரு விவரங்களைச் சபைக்குத் தெரிவிக்கக்கூடுமோவெனப் பணிவுடன் கேட்கலாம். அவற்றை அவருக்குக் குறித்துக் கொடுப்பதும் நலமாம். அவைத்தலைவர் அதனை ஏற்றுக் கொண்டு அக்கடமையை இனிது செலுத்துவரென்பது ஒருதலை. இம்முறை ஒரு பேச்சாளரின் சுயமதிப்பைத் தாழ்த்துவதல்ல. மேலைநாடுகளில் இன்றும் இவ்வழி பின்பற்றப் பெறுவதால், இதைக் குறித்து ஒருவர் சங்கை கொள்வது எற்றுக்கு ?

மூலம் யாது?

ஆறுவதாக, பூமி சூரியனைச் சுற்றுதற்கும், சாகரங்கள் கரையின்றி நிலவுதற்கும் மூலகாரணங்கள் உண்டன்றோ ? அதுபோன்று ஏதேனும் ஒரு காரியம் நிகழுமானால், அதற்கு ஒரு மூலகாரணம் இருத்தல் வேண்டுமென்பது கண்கூடு. அம்மூலகாரணத்தை உணர்ந்தும், தொட்டும் ஒரு பேச்சாளர் பேசுவரேல், அப்பேச்சு மிக உன்னதம்

பெற்றதாகும். ஒரு மாணவன் புகையிலையடக்கலை மிதமிஞ்சிக் கைக்கொள்வதாக வைத்துப் பேசுவோம். அவன் தந்தை அவன் மீது சீற்றங்கொள்ளல் இயல்பன்றோ ? அப்பழக்கத்தைக் கைவிடுமாறு கூறும் புத்திமதிகள் அவன் காதில் நுழைவதில்லை. அக்கொடிய பழக்கத்தின் மூலதத்துவத்தையும், அதனால் விளையும் தீமைகளையும் தக்க உதாரணங்களால் விளக்கினால் அம்முயற்சி ஓரோவழிப் பயனளித்தல் உறுதியாம். பள்ளிச்சிறுவர்கள் பந்தய விளையாட்டுக்களில் சிந்தை மிகக் கொண்டவர்கள். புகையிலைப் பழக்கம் அப்பந்தயங்களில் வெற்றியைத் தடைசெய்யுமென்பதை எடுத்துக்காட்டலாம். 'ஒரு சிட்டிகை புகையிலைப் பொடி, கடுநஞ்சுடைய ஒரு பையரவத்தை ஒரு நொடியில் கொல்லுமானால், அது மனிதருக்கு எத்துணைத் தீமையைக் கொடுக்க வல்லது ? செடிகளிலும், பழவர்க்கங்களிலும் உண்டாகும் பூச்சி, புழுக்கள் புகையிலை ஊறிய நீரைத் தெளித்துக்கொல்லப்படுகின்றனவன்றோ ? புகையிலையினின்றும் உண்டாகும் 'நிக்கோடைன்' என்னும் திரவத்தின் ஒரு துளி ஒரு நாயையும், எட்டுத்துளிகள் ஒரு குதிரையையும் கொல்ல வல்லதா'மெனப் புகையிலையின் மூலதத்துவத்தை அத்தந்தையார் எடுத்துச்சொன்னால் அக்கொடிய பழக்கத்தைத் தனயன் கனவிலும் கருதுவனோ ? ஆகலின், ஒரு பேச்சாளர் தாம் பேசும் செய்தியின் மூல தத்துவத்தைக் கருத்திலிருத்திச் சபையோர் நோக்க முணர்ந்து பேசுதலே முறையென்க.

சபையில் உற்சாகம்

ஏழாவதாக, சபையோரை உற்சாகப்படுத்திப் பேசுதற்கு ஒரு பேச்சாளர் பழகியிருத்தல்வேண்டும். சில பெரியாரின் குணாதிசயங்களைப் பெருமைப்படுத்திப் பேசுவதாலும், சபை கூட்டியிருக்கும் நோக்கத்தைச் சற்று வியந்து கூறுவதாலும் சபையில் உற்சாகம் ஏற்படும். ஒரு நகரில் பாடசாலை யொன்றைத் திறந்து வைக்கையில் ஒரு பெரியார், "மக்களின் அறியாமை என்னும் பள்ளத்தாக்கிற்கும், அறிவு எனும் மலையின் உச்சிக்கும் இடையே எவரொருவர் கல்வி என்னும் வாராவதியை அமைத்துக்கொடுக்கிறாரோ அவரே நாட்டுக்குப் பேருபகாரியாவார்' என ஓர் உண்மைத் தத்துவத்தை உருவகப்படுத்திப் பேசியது அப் பாடசாலையை நிறுவிய பெரியாருக்கு எத்துணை உற்சாகத்தைக் கொடுப்பதாகும்? ஒரு சிறிய பாடசாலையை ஆரம்பித்துவைத்த ஒரு பெரியார் அப்பாடசாலை படிப்படியே வளர்ந்து உயர்தரப்பாடசாலையான பின் அதன் பொன்விழாவில் தலைமை வகித்துப் பேசியது இதுவாம்:

"சகோதரர்களே! ஐம்பது ஆண்டுகட்குமுன் இந்த இடம் மாக்கள் கூட்டம் நிறைந்த புற்றடமாக இருந்தது. அங்கோர் மூலையில் கூரைக் கட்டிடமாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதன் அடிப்படைக்கல் எம்மால் நாட்டப்பட்டது. பின்னர் அஃது ஒரு மத்தியதரப் பாடசாலையாகவும், உயர்தரப்பாடசாலையாகவும் அன்பர்களின் பொருள் மாரியால் உயர்ந்து நற்பயனளித்து வருகின்றது. அவைகளைத் திறந்து வைக்கும் பெருமை எமக்குக் கிட்டியது. இன்று அதன் பொன் விழாவில் தலைமை வகிக்க அன்பர்கள் எம்மைப் பணித்துள்ளனர். இவ்விழாவில் தலைமை தாங்கும் பேறு பெற்றதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்." இவ்வாறு அப்பெரியார் உண்மையான நிகழ்ச்சிகளைக் கூறி அப்பாடசாலைக்கு ஒருவிதத் தேற்றத்தையும், தமக்கு நற்கீர்த்தியையும் உண்டாக்கிய வழி மற்றையோரும் பின்பற்றத் தக்க தொன்றாம். எனவே, எழுத்திலுள்ளவற்றைச் செயலளவுக்குக் கொண்டுவர மேற்காட்டிய ஏழு முக்கிய காரியங்களில் ஒரு பேச்சாளர் கவனம் செலுத்தக் கடமைப்பட்டவரென்பது சொல்லாமலே விளங்கும்.

---

19. வேண்டுவ வேண்டாதன சில

பொது மேடைகளில் பல திறப்பட்ட பேச்சாளரும், பொது மக்களும் ஈண்டுதல் இயல்பாதல் பற்றி அவற்றில் பேசத் தக்கன தகாதன பலவற்றுள் ஈங்குச் சிலவற்றையாதல் தொகுத்துக் குறிப்பிடுதல் முறையாம்.

1. ஒரு பேச்சாளர், முழுச்சபையையும் நோக்கிப் பேசுதல் வேண்டும். ஒரு பாங்கரிலும், நடுவணுள்ளோரையும் மட்டும் பார்த்துப் பேசுதல் கூடாது. வலப்புறம், இடப்புறம் திரும்பிப் பார்த்துப் பேச நேரிடில், எல்லோரும் பேச்சை நன்கு கேட்குமாறு குரலைச் சற்று உயர்த்திப் பேசுதல்வேண்டும். சபைக்கு முதுகைக்காட்டல் சரியல்ல.

2. பேச்சின் தொடர்ச்சியல்லாத ஒன்றை ஒரு பேச்சாளர், சபையோர் கேட்டும் கேளாதவாறும் தமக்குள்ளே பேச நேரிடுவதுண்டு. உதாரணமாக, சர். சி. ஆர். ரெட்டியார் ஓரமயம் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் பேசியபோது, மின்சாரவிளக்குகள் ஒளியிழந்தன. அவ்விருளில் சர். ரெட்டியார் தமது பேச்சை நிறுத்தாது, " இச்சம்பவம் எனக்கும் இம்மண்டபத்தில் புதிதல்ல " என்று தமக்குள் பேசிக்கொள்

வதுபோல் சொன்னார். அருகிலிருந்தவர்கள் அதைக் கேட்டு நகைத்தனர். அது பின்புறம் இருந்தவர்கட்குக் கேளாமையால், அச்சிரிப்பு எற்றுக்கென அவர்கள் திகைப்புற்றனர். எனவே, ஒரு பேச்சாளரின் இதுபோன்ற தனிப்பட்ட குறிப்புரையும் சபையோரனைவரும் கேட்டின்புறுமாறு இருத்தல்வேண்டும்.

3. பேசும் காரியத்தின் முக்கியத்திற்கேற்ப மனவெழுச்சியை உண்டாக்கிக்கொள்ளல் முறையாம். பெருங் கூச்சலிட்டுப் பேசுவது மேடைப்பேச்சுக்கு அடுத்ததல்ல. உணர்ச்சி பாவம் தோன்றக் குரலை உயர்த்தியும், சமநிலை நிறுத்தியும், தாழ்த்தியும் ஒரு பேச்சாளர் பேசுதல்வேண்டும்.

4. ஒரு பேச்சாளர், தேகப்பயிற்சி (கவாத்) காலத்தில் நிற்றல்போல் அசைவற்று நின்று பேசினால், அது சபையோர் கண்களை மிக உறுத்துவதாம். ஆதலின், பேச்சாளர் கைகளையும் கால்களையும் ஒல்லும்வகைத் தம் வசத்தில் வைத்து, சற்று உடல், தலை யசைவுடன் பேசுதல் வேண்டும். தாமே கைதட்டிக்கொள்ளுதலையும் மேசைமீது அறைந்தறைந்து பேசுதலையும் விடுத்தல்வேண்டும்.

5. பேச்சின் உணர்ச்சி வேகத்தால், ஒரு பேச்சாளருக்கெழும் சினத்தையும், அதனால் விளையும் சுடு சொற்களையும் அறவே அகற்றுதல் முறையாம். அன்றி அங்ஙனம் பேச நேரிடுமேல், அது சபையோரை அவமதித்ததாகக் கருதப்படாதவாறு இருத்தல்வேண்டும்.

6. பாமர மக்கள்கொண்ட கூட்டத்தில் அவர்கள் அறியாமையை ஊன்றுகோலாகக்கொண்டு ஒரு பேச்சாளர் அவர்கள் அறிவுக்கு மீறி, உயரத்தாண்டிப் பேசாதிருத்தல் மிக வேண்டப்படுவதாம். மக்கள் அறிவுக்கும் அறியாமைக்கும் ஓர் அளவுண்டு; சபையின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை ஒரு பேச்சாளர் மனதில் தரித்தல்வேண்டும்.

7. சபையோர் கரங்கொட்டாவிடில், ஒரு பேச்சாளர் மனமிடிதல் ஆகாது. சபையோர் அசைவற்று, அமைதியுடன் கேட்கும் பேச்சே சிறந்த பேச்சாம். நாடகமேடைகளில் நடிகர்கள் விரும்புவதுபோல், பொதுமேடைகளில் கைதட்டலையும் நகைப்பையும் பேச்சாளர் விரும்பலாகாது.

8. ஒரு பேச்சாளரின் பேச்சும், பேச்சு முறையும் சபையோர் மனத்தை உறுத்துவதாகக் காணப்பட்டால், அப்பேச்சையும், பேச்சு முறையையும் சுவைக்கும் வண்ணம் மாற்றாது, தொடர்ந்து பேசிக் கொண்டிருத்தலாகாது.

9. பேச்சுப் பொருளில் தமக்குத் தனி உற்சாகமிருப்பதைச் சபையோர் அறியுமாறு செய்தல் பேச்சாளரின் கடமையாம். அரசியல் பேச்சில் உற்சாகம் கனன்றெழும். இடையிடையே தீப்பொறி பறத்தல் இயல்பாம். அவ்வாறு இல்லாத பேச்சைத் தீயிலிடுதல் தவறாகா தென்றார் ஒரு பெரியார்.

10. ஒரு சிற்பி தாம் செய்யும் உருவச்சிலையை வேலை முழுதும் முடிந்தபின்பே வெளிக்காட்டுவதியல்பு. ஆயினும் சாதாரண கல்தச்சன் உளிகொண்டு கல்லைக் கொத்தி உருவாக்கும்போதே, அவ்வேலையின் வளர்ச்சியைப் படிப்படியே யாவரும் பார்க்கலாம். அதுபோலவே ஒரு பேச்சாளர் தமது பேச்சின் கருத்தைப் படிப்படியே உருவாக்கி உயர்த்திக் காட்டாவிடில் அது ஒரு நல்ல பேச்சாகாது.

11. ஒரு நாவலர் தெளிவாகவும், விளக்கமாகவும், சுருக்கமாகவும் பேசுவார். அங்ஙனம் பேசுபவர் சுபாவ நிலையினின்று, உண்மை உள்ளந்திறந்து பேசுதலே சிறப்புடைத்தாம். சபையில் ஒரு பேச்சாளர் இரட்டுறமொழிதலும், சந்தேக விபரீதங்களை உண்டாக்குதலும் ஆகா.

12. பேச்சாளர் ஒல்லும் வகை சிறிய வார்த்தைகளை உபயோகிக்கப் பழகல்வேண்டும். சிறிய வாக்கியத் தொடர்களே நல்ல பேச்சின் இலக்கணமாம். இன்றும் உலகம்போற்றும் ஆபிரகாம் லின்கனின் கெட்டிஸ்பர்க் பேச்சில் 267 சிறு வார்த்தைகளே உபயோகிக்கப்பெற்றுள்ளன. அவைகளில் 200 வார்த்தைகள் மிகச் சின்னஞ் சிறியவையாம். நமது நாட்டில் டாக்டர் சர். சி. ஆர். ரெட்டியார் சிறு வார்த்தைகளையும் வாக்கியங்களையும் எப்போதும் உபயோகிக்கும் இயல்புடையார். எம்மொழியாயினும் வார்த்தைகளின் உருக்கண்டு அவற்றைக் கொள்ளுதலும் தள்ளுதலும் ஆகா.

13. மேடைத்தமிழ்ப் பேச்சாளர், கற்றதைக் கொட்டிக் கொட்டிக் கொடுந்தமிழில் அளத்தலும், வழக்கில் வராத நெருடான சொற்களைத் தேடிப்பிடித்தலும், மணிக்கணக்கில் மேல்மூச்சு வாங்கப் பேசுதலும், கணக்கற்ற மேற்கோள்களில் மூழ்கலும், கதைகளை விரித்தலும் விடுக்கத் தக்கவையேயன்றி, விரும்பத் தக்கவையாகா.

14. முடிவுரை எப்போதும் அழகிய முறையில் பேச்சாளர் மனதினின்று பேச்சுத் தாரையாகவும், அலைகள் போன்றும் முயற்சியின்றி உணர்ச்சியுடனும் வெளிவருதல்வேண்டும். ஓர் ஆணித்தலையைச் சுத்தி கொண்டு அடித்தல்போல், முடிவுரையின் ஒவ்வொரு சொல்லும் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு செய்தல்வேண்டும். முடிவுரையை வரம்பின்றி நீட்டிச் செல்லலும் ஆங்காங்கு நிறுத்தலும் ஆகா.

15. பேச்சாளர் யாவராயினும் சிறிது வணக்கமும் புன்முறுவலும் காட்டிப் பேசுதல் நன்று. அகம்பாவமான பேச்சை மக்கள் அருவருப்பது இயல்பாம். அப்பேச்சைச் சபையோர் இடைமறிப்பர்; கேட்கவும் இசையார். சபையின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற விரும்பும் பேச்சாளர் கடுகடுத்த முகத்துடனும், தடித்த பேச்சுடனும் மேடைமீது தோன்றுதல் ஆகாது.

மேலே காட்டியுள்ளவற்றை மனதிலிருத்தி மேடைமீது தோன்றும் ஒரு பேச்சாளர், நல்ல வரவேற்பைப் பெறுவதோடு, நாவலரெனத் திகழ்வாரென்பது ஒருதலை.

---

20. ஒன்பது நன்மணிகளும் பத்து நயமொழிகளும்

கீழே சுருக்கிக் கூறியுள்ள முக்கியமான கருத்துக்களை ஒரு பேச்சாளர் கவனத்திலிருத்தி மேடைமீது பேசுதல் முறையாம்.

நன்மணிகள்

1. பேசும் செய்திகுறித்து ஐயந் திரிபற யோசித்துப் பேசத்தக்கன இவையென்பதை முற்கூட்டியே தீர்மானித்தலும் எழுதிப் பார்த்தலும் முறை.

2. தாம் பேச வேண்டுவனவற்றைத் திட்டப்படுத்திக்கொண்டு பல தலைப்புகளின்கீழ் எழுதிப்பார்த்து, காலவரைக் கேற்றவளவில் பேச்சாளர் தமது பேச்சை நீட்டவும் குறுக்கவும் வேண்டும். பேச்சில் பலவற்றை மேலெழுந்தவாரியாகப் பேசுவதிலும், குறித்த ஒரே பேச்சைத் தெளிவாகவும் விமரிசையாகவும் பேசுதல் வேண்டப்படுவதாம்.

3. சபையோர் கவனத்தைக் கவரும் வண்ணம் பேச்சை எடுத்தலையும் முடித்தலையும் ஒரு பேச்சாளர் முற்கூட்டி யோசித்து மனதில் பதித்திருத்தல் வேண்டும். பேச்சை யாண்டு, எவ்வாறு முடித்தல் வேண்டுமென்பதில் சபையின் நோக்கமறிந்து ஒருவர் நடந்துகொள்ளல் நன்றும்.

4. மேடைமீது தோன்றும் பேச்சாளர் தமது முழு உருவம் தோன்ற அவைத்தலைவருக்கு இடப்புறத்தில் நின்று சபையோரை விளித்துப் பேசுதல் முறையாம்.

5. சபாமண்டபத்தின் பின்பக்கத்திலுள்ளவர்களும், தமது பேச்சைக் கேட்கும் வண்ணம் பேச்சாளர் தமது தலையை நிமிர்த்தி,

குரலைத் தக்க சுருதியில் வைத்துப் பேசுதல்வேண்டும். முரண்பட்ட நோக்கங்கொண்டோர் சபையிலிருப்பரேல், அவர்களைக் குறிப்பாக நோக்கிப் பேச்சாளர் தம் பேச்சைத் தெளிவுறுத்திப் பேசுதல் நலந் தருவதாம். ஒரு பேச்சாளர், அத்தகையோரை வயப்படுத்திவிடின், மற்றைச் சபையோரை இணங்கச் செய்தலும், மகிழ்வித்தலும் சுலபமாம். அங்ஙனமே சபையோர் இணங்குவ ரென்பது உறுதி.

6. ஒரு பேச்சாளர் விரைந்தும், இரைந்தும் பேசுதல் ஆகாது. மிகச் சாவதானமாக வார்த்தைகளின் அர்த்தப் பொலிவு தோன்ற அழுத்தந்திருத்தமாக உச்சரித்துப் பேசுதலே நல்ல பேச்சின் இலக்கணமாம்.

7. ஒருவர் தமது குரலைத் தொடக்கத்திலேயே உயர்த்திப் பேசாது இயற்கைக் குரலில் சிறிது தாழ்த்தியும், படிப்படியே உயர்த்தியும், அவ்வாறே படிப்படியே இறக்கியும் பேசுதல் நன்கு சுவைக்கப் படுவதாம்.

8. ஒரு பேச்சாளர் குறிப்பெழுதிக்கொண்டு பார்த்துப் பார்த்துப் பேசுவது சரியன்று. அவ்வாறு பேசும் அவசியம் ஏற்பட்டால் அவ்வேடுகளை மறைத்துவைத்துச் சாடையாகப் பார்த்துப் பேச முயல்வதிலும், வெளிப்படையாகவே அவற்றைக் கரத்தில் தாங்கிச் சபைமுன் பார்த்துப் படித்து விடுதலே யோக்கியமாம்.

9. ஒரு பேச்சாளர் பேசுங்கால், மேடைமீது உலாவுதலும், முதுகைச் சபைக்குக் காட்டலும், குதிரைபோல் தலையை மேலுங்கீழுமாக ஆட்டுதலும், தமது முழுச்சரீரத்தை அலைத்தலும், கரங்களைச் சுழற்றலும், பற்களைத் திறந்து காட்டலும் மேடைப்பேச்சுக்கு உகந்தவையல்ல.

நயமொழிகள்

1. அவசரமாகப் பேச நினைந்தால் நிறுத்துமிடங்களைத் தவிர இதர இடங்களில் ஆற்றோட்டமென விரைந்து செல்க.

2. பேச்சு, நீர்த்தாரைபோல் தொடர்ந்தும், பீறிட்டும் வெளிவரட்டும். காற்றடித்து உயர்த்தியதாக இருத்தலாகாது.

3. தக்க – பொருத்தமான உதாரணங்களே பேச்சுப் போக்கின் இனிய வெளிச்சந்தரும் சாளரங்களாம்.

4. சுருங்கச் சொல் ; விளங்கவை ; ஆய்ந்து பேசு ; நயம்பட முடி.

5. ஊக்குவி ; ஊட்டுவி ; உணர்வி ; விவகரி.

6. நின்றுபேசு ; நிமிர்ந்துபேசு ; உரக்கப்பேசு ; ஊன்றிப்பேசு.

7. பேசுதற்கு மாறாக எவராவது கேள்வி கேட்டுவிட்டால், தவறாகவாகிலும் பேச முயல் ; தயங்காதே ; தலைமறைபாதே.

8. இருபது நிமிடங்களே சபையோர் பொறுமைக்கு அளவு கோலாம்.

9. மூன்று நிமிடங்களில் 'தண்ணீர்' காணுவிடில், 'பேச்சுக் கிணறு' தோண்டுவதைக் கைவிடு.

10. பேச்சை மெல்லிய குரலில் ஆரம்பி ; சாவதானமாக மேற் செல்லு ; பின்னர் படிப்படியே உயர்த்து ; உணர்ச்சி வேகம் காட்டு ; உள்ளக்கிளர்ச்சியோடு பேசிமுடி. அதுபோழ்து எழும் கரமுழக்கப் புயலிடையே நீ அமருவாய் என்பது உறுதி.

---

21. பேச்சுக் கலை

ஆன்றமைந்த சான்றோர் மொழிகட்கு உயர்வுதந்து, யாதொரு மாற்றமும் சேர்க்கையுமின்றி அவற்றை அவ்வாறே அறைதல் நெறியாம். ஆனதுபற்றி, இலக்கியத் தேர்ச்சியும், கருத்துப் பொலிவும், எழுத்து நடையும், நாவன்மையும் ஓர் உருவாய்த் திரண்டு டாக்டர் சாமுவெல் ஜான்ஸன் காலத்தே விளங்கிய **செஸ்டர் பீல்டு பிரபு**, 1749 ம் ஆண்டில் 'பேச்சுக்கலை' பற்றித் தமது தனயனுக்கு எழுதிய கடிதம் தமிழாக்கி ஈங்குத் தரப்பட்டுள்ளது. அதில் புதைந்துள்ள கருத்துக்கள் எப்பேச்சாளருக்கும் பயனளிப்பனவாம்.

ஆராய்தல்

"அருமைக் குழந்தாய்! கடந்த நாற்பது ஆண்டுகளில் ஒரு கணப் போதாதல் யோசியாது ஒரு வார்த்தையேனும் யான் எழுதியதில்லை ; பேசியதும் இல்லை. அது நல்லதா கெட்டதா என்றும், அதனிலும் சிறந்ததொன்று உண்டாவென்றும் ஆராயாது விடுத்ததுமில்லை. செவிப் புலனுக்கு இனிமையூட்டாத இந் நாளைய தாறுமாறான பேச்சுக்கள் என் செவிகளை உண்மையிலேயே துளைக்கின்றன. உலகின் இதர மக்களைப் போல், வெறுப்பைப் பெறாத இனிய பேச்சொன்றைக் கேட்க இது போழ்தும் ஆசிக்கிறேன். நான் ஒரு பெரும் நாவலனெனப் புகழப்படு தற்கு, சாதாரண மக்களை விட சொற்போக்கு நயத்திலும், இனிமையிலும் நான் அதிகக் கவனம் செலுத்தியதே காரணமெனக் கரவாது கூறுவன். நீ பாராளுமன்றத்து அங்கத்தினனாகுங்கால் உன் பேச்சுவன்மை, கீர்த்தி ஆகிய இவை, பேசப்படும் பெரும் செய்திகளை விட, வார்த்தை

நயத்தையும் பேச்சுப் பொருளின் பாகுபாட்டையும் பெரிதும் பொறுத்திருக்கும். ஒரு காரியத்தைக் குறித்து ஒரேவிதமான எண்ணங்கள் பலருக்கு உதிப்ப தியற்கை. ஆனால் அவற்றிற்கு அலங்காரமான உடையுடுத்திச் சமத்காரமாகப் பேசும் ஒரு சிலரே சபையோர் கவனத்தைக் கொள்ளை கொள்வர் ; நாவலரெனவும் மெச்சப் பெறுவர்.

என் ஆவல்

பாராளுமன்றத்தில் என் தனயன் புகழ்ப்பெறல் வேண்டுமென்பது என் இதயத்துறையும் பேராவல். ஆண்டு அங்ஙனம் ஒளிர்வதால் உனக்குத் தனி மதிப்பும், எனக்குப் பெருமையும் சித்திக்கும். அம் மாபெரும் சபையில் என் மைந்தன் ஒரு பெரிய நாவலனாகக் கருதப் படவேண்டுமென்பதே என் முழு உள்ளக் கிடக்கையாம். முயன் றுழைத்தால் அவ்வண்ணமே ஆவாய் என்பதில் சிறிதும் ஐயமில்லை. சாதாரண மக்கள், பேச்சாளரையும் வானத்தே தோன்றும் எரி மீன்களையும் உலகில் சமநோக்குடன் அதிசயப் பொருள்களாகவும் தெய்வத்தன்மை யுடையனவாகவும் கருதுவர். இத் தவறான எண்ணம் பல இளைஞர்களை நல்ல பேச்சாளராக வொட்டாது இடர்ப்படுத்துவதாகும். தமது பேச்சுவன்மை கடவுளர் தமக்கென அருளிய வரமென எந்த நல்ல பேச்சாளரும் கருதார். ஆனால் அஃது ஓர் அசாதாரண சக்தியாகக் கருதப்படல் வேண்டுமென்று நினைவுகொள்ளாத பேச்சாளர் இல்லை. ஆதலின் ஒரு நல்ல பேச்சாளர் யாரென ஆராய்வோம். அவரைச் சேதித்துப் பல கூறுக்கி அலசிப் பார்ப்போம். தமது அகம்பாவமும், பிறர் அறியாமையின் விளைவும் ஒருங்கு சேர்ந்து சூழ்ந்துள்ள அவர் கவசமாகிய இரவல் இறகுகளைக் களைந்து பார்ப்போம். அவர் பொது அறிவு மிகப்பெற்றவரென்றும், நீதிநெறி நிற்பவரென்றும், சொற்போக்குடையவரென்றும் அதுபோழ்து நன்கு காண்போம். இதில் ஏதேனும் அரிய மந்திர சக்தி யுண்டோ ? அசாதாரண அறிவு பெற்றிலரேனும், பகுத்தறிவுடைய ஒருவர் எக்காரியத்தைக் குறித்தும் அறிவு விளக்கமின்றிப் பேசத் துணியார். மொழி உணர்ச்சி சிறிதளவே இருப்பினும் அன்னர் அழகுச் செப்பமின்றிப் பேச முயலார். எனவே, பாராளுமன்றத்தில் பேசும் உபாயம்தான் என்ன? வீட்டில் விருந்துண்ணும்போதும் குளிர்காயும்போதும் நம்முடன் இருக்கும் பதினன்கு நண்பர்களைவிட, நானூறு அங்கத்தினர்களைக் கொண்ட அப்பேரவையில் நாம் பேசுவதன் சத்தான பாகத்தைச் சுவைக்கவல்ல பதினன்கு பேர்களைக் காண்பதருமை.

என் அனுபவம்

பார்லிமெண்டு மகாசபையில் நான் எண்ணிறந்த தடவை கை தட்டுதலையும் ஆரவாரத்தையும் பெற்றுப் பெற்றே பேசியுள்ளேன். எனவே, என் அனுபவத்திலிருந்து ஆண்டுப் பேசுதல் ஒரு பிரமாத மான காரியமல்லவென உறுதி கூறுவேன். பேச்சுத் தோரணையும் பாகுபாடுமே அச்சபையை வசீகரப்படுத்துவனவாம். ஒரு சொற் போக்கின் இடையிடையே இரண்டொரு சுவைமலர்ந்த சொற்களையும், சொற்றொடர்களையும் புகுத்திப் பேசுதல் சாலச் சிறப்புடைத்து. கேட்போர் அவற்றைக் கருவில் பதித்துவைத்துத் தங்கள் மனத்திற் குள் திருப்பிக் கூறிக் களிப்பர். ஒரு நாடகசாலையினின்றும் வீட்டுக் குத் திரும்புங்காலையில் உண்டாகும் ஆனந்தத்தை அவர்களும் அடைவ தியற்கை. தாங்கள் செவிமடுத்த சில பாடல்களையும், இராகங்களையும் மனதிலேயே வழிநெடுக இசைத்துச் செல்வதுபோல், சுவை மலிந்த சொற்றொடர்களையும் சொல்லிச் சொல்லியே மக்கள் இன்புறுவர்.

பண்டையர் கூற்று

மேடைப்பேச்சு ஒரு பிழைக்கும் வழியாக மிளிர்ந்த காலத்தே வதிந்த சிசரோ எனும் பெருநாவலர், மேடைப்பேச்சைக் குறித்து யாத்துள பண்டைய நூலில், 'பேச்சாளர் கலையறிவும் சாத்திரப் பயிற்சியும் பெற்றிலரேல் அவர் நாவலராக மாட்டா'ரெனக் கூறியுள்ளார். அப்பெரியார் கூற்றுக்குத் தலைவணங்குவேன். ஆயினும், அதுபற்றி அவர் கொண்ட அபிப்பிராயத்திற்கும், எனது கருத்துக்கும் பெரும் வேற்றுமையுண்டு. என்னுடைய அபிப்பிராயமே உண்மை செறிந்த தென்பது எனது நம்பிக்கை. அலங்காரமாகப் பேசுதலும், விளக்க மாகச் சொல்லுதலும், நீதிநெறி நின்று மனச்சான்றுடன் விவாதித் தலுமே ஒரு நாவலரின் இலக்கணமாக நான் மதிப்பேன். சாத்திரப் பயிற்சியாலடையும் கணித நுட்பத்தையும், வானூராய்ச்சியையும், இரசா யன முறைகளையும், உடற்கூறு சோதனைகளையும் குறித்து ஒருவர் நாவன்மை காட்டிப் பேசியதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆயினும், பாராளுமன்ற மகாசபையில் நிகழும் விவாதங்கள் பகுத்தறிவைப் பற்றியனவாகவே அன்றும், இன்றும், என்றும் உள்ளனவாம்.

என் மனத்தின்கண் உதிப்பனவற்றை இவ்வாறே இனி எழுதி வருவன். அவைகள் உனக்கு அறிவுச் சுடர்கொளுத்தி, உன் சொந்தக் கருத்துக்களை மிகுதிப்படுத்தும். எனவே, என் முயற்சி பலன் பெறுவதாக! நான் கொள்வது போன்ற கவலை உனக்கும் உண் டாகுமேல் நீ ஒரு பெரும் நாவலனாகத் திகழ்வாய் என்பது ஒருதலை."

22. மகாகனம் வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்டன்

அவர் பெருமை

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்து தேசத்தின் பிரதம மந்திரியாயிருந்த மகாகனம் வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்டன் எனும் நாவலரை மேடைப்பேச்சு வன்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக இந்நூலின்கண் பல பகுதிகளில், கூறப்பெற்றுள்ளது. அன்னாரைக் குறித்து மேலும் சிறிது விளக்கம் ஈண்டைக்கு உரியதாம். இல்லையேல் மேடைப்பேச்சைக் குறித்த இந்நூல் பூர்த்தி பெற்றதாகமாட்டாது. மேடைப்பேச்சு ஒரு தனிக் கலையாக மிளிர்ந்த கிரேக்க ரோமநாட்டின் நாவலர்களான சாக்ரடீஸ், டெமாஸ்தனீஸ், சிசரோ போன்ற பெரும் நாவலர்கள் கிறிஸ்து பிறப்பதற்குச் சற்றேறக் குறைய 500 ஆண்டுகளுக்குமுன் வதிந்தவராவர். அந்நாட்டுக் கலைகள் நாகரிகங்கள் மறைந்துபட்ட பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் மேற் குறித்த நாவலர்களுக்கு இணையாகக் குறிப்பிடத்தக்க நாவலர் வேறு எந் நாட்டிலும் தோன்றவில்லை. இங்கிலாந்தின் நல்வினை வசத்தால் பண்டைய நாவலர்களெல்லோரும் ஒருருவாய்த் திரண்டதுபோல் கிளாட்ஸ்டன் நாவலர் பிற்றைஞான்று தோன்றலுற்றார். அத்தகைய அரும் பிறவியால் இங்கிலாந்து தேசத்திற்கும் ஆங்கில மக்களுக்கும் பெருங் கீர்த்தி உண்டாயிற்று. அறுநூறு ஆண்டுகளுக்குமேல் வயது நிறைந்துள்ள பாராளுமன்றப் பெருஞ்சபை சிறந்து விளங்கிற்று. அச்சபையில் கிளாட்ஸ்டன் தோன்றுவதற்கு முன்னும் சமகாலத்தும் பல சிறந்த பேச்சாளர்கள் இராமலில்லை. அவர்கள் அரசியல் விவகாரத்தில் தேர்ந்து தர்க்கவாதத்திலும் சிறந்து விளங்கினரென்பது சரித்திரத்தால் பெறப்படுவதாகும். மெக்காலே, பர்க், கானிங், ஷெரிடன்போன்ற மேதாவியர் பேச்சுவன்மையில் சிறந்து விளங்கினும், கிளாட்ஸ்டனைப்போல் திரண்ட நாவன்மைகொண்டு விளங்கினவரல்லர். ஈண்டு பேச்சுக்கும் நாவன்மைக்கும் இடையே வரையறை ஒன்று இருக்கக்காண்போம். வெறும் பேச்சு வன்மை மட்டும் கொண்டோர் நாவலர் அல்லர். எல்லாப் பேச்சும் நாவன்மை பெற்றன என்று கூற முடியாது. மகாகனம் கிளாட்ஸ்டன் கைக்கொண்ட பேச்சுமுறை சிறந்த ஒரு தனிமுறையாம். இதர பேச்சாளரின் பேச்சும் விவாதமும் சொற்சுவையும் கிளாட்ஸ்டன் பேச்சுப் போக்குக்கு இணையானவையல்ல. நமது இந்திய காங்கரஸ் மாசபையில் நன்முறையில் பேசிய பண்டைய நாவலர்களின் தொகை அருகியதுபோல், இந்நாள் பாராளுமன்றத்திலும் நாவலர்களின் எண்

ணிக்கை மிக அருகியிருத்தல் கண்கூடு. இன்று ஆண்டுள்ள பேச்சாளர்களில் ஓரோவழி சிறந்து நிற்பவர், போர்க்காலப் பிரதம மந்திரியாயிருந்த வின்ஸ்டன் சர்ச்சில் துரைமகனார் ஆவார். ஆயினும் அவர் பேச்சு எக்காலும் பெருந்தாரையாக வீழ்ச்சி பெறுவதில்லை. மொழித் தேர்ச்சி ஒன்றொழிய சொன்னயம், வாக்குத் தோரணை, கம்பீரமான எண்ணங்கள் அவரிடம் ஓரணுவும் காண்பதற்கில்லை. உண்மை நெறியைக் கடைப்பிடித்து அவர் பேச்சு வெளிப்படுவதுமில்லை. மகாகனம் கிளாட்ஸ்டனிடம் காணப்படாத சூழ்ச்சி மிகுந்த பேச்சையும், நாசகாரியமான விவாதங்களையும் தமக்கே உரிய அணிகலன்களாகப் பூண்டவர் சர்ச்சில் ஆவார். ஆதலின் அவர் உண்மையான நாவலர் அணிவகுப்பில் வைத்து எண்ணத்தக்கவர் அல்லர்.

அவர் கருத்து

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேர்ந்தபின் நேரடியாக கிளாட்ஸ்டன் பாராளுமன்றச் சபைக்குத் தேர்வுபெற்று அங்கத்தினராக அமர்ந்தார். தமது முப்பதாம் ஆண்டில், "நான் பிறர் மெச்சுதலை விரும்பலினும், பிறர் மனப்பான்மைக்குக் கட்டுப்படுதலினும் கருத்தூன்றுபவன் அல்லன். மேடைமீதிவர்ந்து நான் பேசுவதின்றும் எதிரொலிக்கும் என் பேச்சுக் கருத்துக்கள், மனவெழுச்சி ஆகியவற்றின் ஓசையே என் மனதிற்கு இனியவையாகும்" என்று கூறிக் களித்தார் என்ப. இக்கருத்து ஒரு தலைசிறந்த நாவலருக்குப் பொருத்தமா என்பதைக் குறித்து ஈங்குச் சிந்தித்தல் நமது கடனாகும். பெருந்தகைமை, மரியாதை ஆகியவையோடு மேற்குறித்தக் கருத்து ஒன்று சேருமேல் மகாகனம் கிளாட்ஸ்டன் பேச்சு சிறந்து விளங்கக் கேட்பானேன் ? அதிலேயே அரைநூற்றாண்டளவு தொடர்ந்து சலியா உழைப்பில் முனைந்து பாடுபட்ட இந்நாவலர் உலகப் பெரும்புகழ் பெற்றதில் ஆச்சரியமுண்டோ ? நாவன்மையில் உச்சநிலை பெற்ற இப்பெரியாரை உலகம் ஒரு சிறந்த நாவலரெனவும் அரும் பிறவியெனவும் போற்றிக்கொண்டாடிற்று. பேச்சு வன்மையைப் பெறுதற்குப் பழக்கம் - நீடிய பழக்கம் ஒருவருக்கு மிக வேண்டற்பாலது என்பது அவர் கருத்து. ஒரு நாவலரின் பேச்சு உருக்கி ஊற்றிய தங்கத்தை ஒக்கும் என்பார். அதைச் சபையோர் மனம் எனும் கருவில் அழகிய உருவம் அமைய வார்த்தலே நல்ல பேச்சென்பார். மேலும் விளக்குமுகத்தான் பேச்சுத் தோரணையும் சொல் நயமும்பெற்ற ஒரு பேச்சுப் பெருமழை, சபையோர் ஊக்கமெனப்படும் நீராவியினின்றும் பரிணமித்துப் பொழிவதாகும் என்பது


அவர் கருத்தாம். சபையோர் கவனத்தை ஈர்க்காத பொது மேடைப் பேச்சு விழலுக்குப் பாய்ச்சிய நீராகுமன்றோ ?

நாவலர் கோன்

புகழுடம்பு கொண்ட மகாகனம் கிளாட்ஸ்டன் உலகுக்கே ஒரு நாவலர் கோனாக விளங்கினார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாவன்மைக்கென ஒரு மணிமுடியும் செங்கோலும் இதர அரச சின்னங்களும் இருக்குமேல் அவைகளனைத்தையும் தமக்கே உரிமை யாகக் கொண்டு அவர் பாராளுமன்றத்தில் தனிபரசு செலுத்தினாரென் பது மிகையன்று. நாவன்மைக்கு இன்றியமையாத உடல் வன்மை, திடம்பெற்ற இனிய குரல், மணியோசை போன்று உயர்ந்தும் தாழ்ந்தும் எழும் ஒலிமுழக்கம், பல்வேறு மனப்பான்மைகளை உணர்த்தும் குரல் பேதம், கருத்துக்களை நன்கு விளக்கும் கை மெய் காட்டல் ஆகியன அவரிடம் இயற்கையிலேயே கால்கொண்டிருந்தன. உயர்ந்து பருத்த உருவமும், கருங்கூந்தலும், சிங்கநோக்குடைய கூரிய ஒளிவீசும் கண் களும், களிப்போடு பேசும் முகவிலாசமும், ஒரு பெரிய நடிகரையொத்த சைகைபாவங்களும் அவரிடம் மலிந்து ஒளிர்ந்தன. டிஸ்ரவியார் அவரது திடம்பெற்ற உடல்வலியைக் குறித்துப் பெருமூச்செறிவார். இத்தகைய அழகிய வெளித்தோற்றங்களுடன் மணற்கேணியின் ஊற்றெனச்சுரக்கும் கம்பீரமான வார்த்தைக் கோவைகளும் சிறந்த கருத்துக்களும் ஒருங்கு சேர்ந்து தங்கு தடையின்றிப் பெரும் வீழ்ச்சியாக அவர்பால் பிறங்கின. கிளாட்ஸ்டன் காரணங்காட்டிக் காட்டிப் பேசுவதிலும் தர்க்க வாதத் திலும் ஆணித்தரமான பேச்சுத் தோரணையிலும் தமது முழு மனமும் திறந்துகாட்டி வன்மையோடு பேசுவதிலும் வல்லவர். சம்மட்டிகொண்டு அறைந்ததுபோல் விடையிறுப்பார். அடித்த பந்து குதித்துக் குதித்து உயர்ந்து உயர்ந்து எழுவதுபோல் அவர் பேச்சு உயர்ந்துகொண்டே போவது இயல்பாம். பிறர் மனத்திற்கு ஒவ்வாத ஒரு கருத்தை வற் புறுத்தவேண்டுமாயின் மூர்க்கமாகப் பேசலாகாதென்பது அவர் எண் ணம். அங்ஙனம் பேசுவதால் அக்கருத்து ஏற்கப்படாது போவதோடு பேசுவோரை மேலும் மக்களுக்குப் பிடிக்காதவாறு அது செய்வதாகு மென அறிவுறுத்தியுள்ளார். ஒரு மேடைப்பேச்சாளரைக் கருத்துச் சரக்குக் குறைந்தவராகச் சபையோர் மதிக்கலாகாதென்பது இவரது உள்ளக்கிடக்கையாம். இயற்கையிலேயே இவர் ஓயாது, இடைவிடாது, சலியாது உழைக்கும் வன்மையைப் பெற்றிருந்தது மிகப் பாராட்டத் தக்கதாம்.

பொன்மொழிகள்

நாவன்மையைக் குறித்து நண்பர் ஒருவருக்கு ஓர்மயம் கிளாட்ஸ்டன் எழுதிய ஆறு பொன்மொழிகள் நமது கவனத்திற்கு உரியன. "1. சிறிய வார்த்தைகள் அமைந்த எளிய நடையில் கருத்தை விளக்குக. 2. வாக்கியங்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் இருக்கட்டும். 3. தெளிவாக உச்சரி. 4. எதிரிகள் காண்பதற்குமுன் உன் வாதத்தின் பலத்தையும் உண்மையையும் முற்கூட்டிச் சோதித்தறிக. 5. நீ பேசப்புகும் காரியத்தில் நன்கு ஆழ்ந்து அலசிப்பார்த்து அப்பேச்சில் ஒரு நிபுணனெனத் தோன்றுமாறு பேசுக. 6. உன் பேச்சுடனும் கருத்துக்களுடனும் சபையோரை ஈர்த்துச் செல்லவேண்டுமாயின் உனது பேச்சுப் பொருளில் மட்டும் கவனம் செலுத்தாது அவர்களைக் கூர்ந்து நோக்கிப் பேசுக." சொல்வது எவர்க்கும் எளிதுதான். ஆயினும் சொல்லவற்றைச் செயலுக்குக் கொணர்தல் கடினமாம். கிளாட்ஸ்டன் அறிவுறுத்தும் முதல் இருகருத்துக்கள் அவர் பேச்சில் காணப்படாது போனமை பெருவியப்பேயாம். ஒரு சபையில் அவர் பேச்சைக் கேட்டிருந்த ஓர் அங்கத்தினர் பெருமூச்செறிந்து அப்பேச்சு வெளித் தோற்றத்தில் ஆக்ஸ்போர்டையும், உள்ளூற லிவர்ப்பூலையும் போன்ற தென்றுபுகன்றார். அக்கருத்தை விளக்கின், கிளாட்ஸ்டன் பேசிய மொழி நடை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் பயனெனவும், கணக்குப் புள்ளி விவரங்கள் லிவர்பூல் வணிகர்களின் திறமையைக் குறிக்கும் எனவும் பொருள்படும். பல நூற்றாண்டுகட்குமுன் சிசரோ எனும் நாவலர் யாத்துள்ள "மேடை நாவன்மை" என்ற புத்தகத்தைக் கிளாட்ஸ்டன் இடைவிடாது வாசிப்பார். அதில் காட்டுலஸ் கூறுமாறு உற்சாகமும் உழைப்பும் அறிவு விளக்கமும் இல்லாத ஒருவர், மேடைப்பேச்சின் உச்சநிலையைக் காண்டல் அருமையெனக் கூறிக் கூறிச் சிந்தனையில் ஆழ்வது இவரது வழக்கு. ஒரு பேச்சாளருக்கு நாவின் உதவிமட்டும் போதியதல்ல; பணையில் அடித்துச் சாணைபிடித்த போர்வாள்போன்ற பழுதற்ற கூரிய வார்த்தைகளும் போதியனவல்ல; நூலறிவு, உலகப் பொது அறிவு, பல்வேறுபட்ட மக்களின் மனவியல்பு, சித்தவிகாரம் ஆகியவற்றில் நன்கு பழகி அவற்றுள் தோய்ந்து படிந்திருத்தலே சிறந்த நாவன்மைபெற்ற நாவலரின் பண்பெனக் கூற அவர் எப்பொழுதும் தயங்கியதில்லை. பிரதம மந்திரியான சர் ராபர்ட் பீல் என்பார் ஒரு சமயத்தில் பேசும் முறையைக் குறித்து கிளாட்ஸ்டனுக்கு அறிவுறுத்தினர். அவரைச் சுருக்கமாகப் பேசாது விளக்கமாகவும் மிக விரிவாக



மகாகனம் வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்டன்

வும் பேசச் செப்பினர். பாராளுமன்றச் சபை பல்வேறு கருத்துக்களும், கட்சி பேதமும் கொண்ட அங்கத்தினர்கள் நிறைந்த இடமாதலால் அவர்களையெல்லாம் பேசுவோர் கருத்தோடு இணங்கச்செய்தற்குப் பேச்சுப் பொருளைப் பல நோக்குகளின்று பல வழிகளிலும் செலுத்தல் வேண்டுமென்பது சர். ராபர்ட் பீல் எனும் பெரியாரின் கருத்தாம். அவர் ஆயுளோடிருந்தவரை கிளாட்ஸ்டன் அவரோடு நட்புரிமை பூண்டு அவருக்கு உற்றவோர் கைப்படையாகவேயிருந்து உதவினர் என்பது சரித்திரம். மற்றோரமயம் லார்டு கோல்ரிட்ஜ் எனும் பெரியார் கிளாட்ஸ்டனைப் பரீட்சித்தறியும் நோக்கமாய் அவர் பேசுங்கால் மனத் தளர்ச்சி தோன்றுவதுண்டா வெனக் கடாவினர். பேச்சைத் துவக்கு முன் சிறிது மனத்தளர்ச்சி தோன்றுவதுண்டென்றும் விடையிறுக்கையிலோ விவாதத்திலோ தமக்குத் தளர்ச்சி எக்காலத்தும் உண்டாவதில்லையென்றும் கிளாட்ஸ்டன் விடையிறுத்தார்.

ஒப்புயர்வு அற்றவர்

கிளாட்ஸ்டன் வதிந்த காலத்திலிருந்த மெக்காலே என்பார் ஒரு சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் கருதப்பட்டார். அவர் பேச்சு முறை சிறந்ததென ஒப்பாத சர். பிரான்சிஸ் பாரிங் எனும் பெரியார், “ கிளாட்ஸ்டன் ஒருவரே எனது மனதுக்குப் பிடித்த சிறந்த நாவலர் ; அவரே மேடைப்பேச்சுக்குத் தக்க எடுத்துக்காட்டு ; அவர் ஒருவர்பால் வார்த்தைச் சித்திரம், சொன்மாரி, பெரும் பேச்சுத் தோரணை, சைகை பாவங்கள் நிரம்பியுள்ளன ” எனக்கரவாது புகழ்ந்து கூறியுள்ளார். இத்தகைய அரிய சக்திகளின் துணைகொண்டு, பாராளுமன்றத்தையும் ஆங்கில மக்களையும் - ஏன் ? உலக மக்களனைவரையும் நாற்பது ஆண்டுகள் இவர் களிப்பித்தாரென்பது மறுக்கமுடியாத உண்மையாம். பாராளுமன்றம் உலகின் தாய்ச்சபையெனப்படுவதில் நிரம்பிய பொருள் உண்டு. அருங்கலா விற்பன்னர்கள், உலகானுபவம் பெற்றவர்கள், அறிவுச் செல்வம் படைத்தவர்கள், பெரும் குபேரசம்பத்துடையவர்கள், பிரபல வர்த்தகர்கள், போர்முனை வீரர்கள், நியாயவாதிகள், பொது சேவையிற் சிறந்த ஊழியர்கள், குற்றங் காண்பதிலேயே நாட்டங்கொண்ட எதிரிகள் ஆகியோரை ஒருங்கே கொண்டுள்ளதும் மாசபையாகும். மகாகனம் கிளாட்ஸ்டன் அத்தகைய பெருமை வாய்ந்த சபையில் ஒன்றிரண்டு ஆண்டுகளல்ல, நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து பொதுமக்களின் முழுநம்பிக்கைக்குப் பாத்திரராய் ஒப்புயர்

வற்ற நாவலர் கோனாய் விளங்கினார் என்பது உலகம் ஒப்பமுடிந்த உண்மையாம்.

பேச்சுமுறை விளக்கம்

கிளாட்ஸ்டன் பேச்சுமுறையை ஈங்குக் கூர்ந்துநோக்கல் முறையேயாம். அவர் பேச எழுங்கால் சபையில் அமைதி தானாகவே நிலவும். சிலவேளை கைதட்டலும் நிகழும். அவர் பேசும்போது அவரது திடகாத்திர உருவமும், அழகிய பக்கப்பார்வையும், குற்றமற்ற உடையும் எவர் மனதையும் கவரும் இயல்புடையன. அவர் தமது இருகரங்களையும் பேச்சின் ஆரம்பத்தில் பின்புறமாகப் பிணைத்துக்கொள்ளல் வழக்கு. பேசப் பேசக் கரங்கள் முன்புறமாகி இயற்கை நிலையில் நிற்கும். சைகை பாவங்களை உணர்த்த அவர் தமது வலக்கரத்தையே பெரிதும் உபயோகிப்பார். சிலவேளை மேசைமீது அறைந்து பேசுவதுமுண்டு. அவ்வாறு அவர் ஒரு சமயம் பேசியதைக் குறித்து டிஸ்ரலி பரிகசித்துள்ளார். பெரிய பெரிய வார்த்தைகளைக்கொண்டு மிகச் சிக்கலாகவும், மிக மிக நீண்ட வாக்கியத் தொடர்களாகவும் பெருக்கிப் பெருக்கிக் கேட்போர்க்கு எளிதில் விளங்காதவாறு பேசுவார். சாதாரண மக்களுக்கு அவர் பேச்சு விளங்குவது கடினம். அவர் பேச்சுக் கருத்தைச் சுலபத்தில் புரிந்துகொள்ள வியலாது. விரைந்தும் இரைந்தும் பேசுதல் பழக்கத்தின்கீழ் வந்துவிட்டதால் அவர் ஆயுள்வரை அக்குறைபாடுகளைப் போக்கிக்கொண்டாரில்லை. ஓரிடத்தில் திரளான மக்கள் முன்பு சிலமணி நேரம் அவர் பேச நேர்ந்தது. பேச்சு முடிந்தபின் அவையிலிருந்த ஒருவர் மகாகனம் கிளாட்ஸ்டன் எம்மொழியில் பேசினாரெனவும் என்ன பேசினாரெனவும் தமக்கு விளங்கவில்லையென்றார்! மற்றொருவர் கிளாட்ஸ்டன் பேசிய லத்தீன் மொழி என்ன அழகு என்றாராம்! நமது நாட்டில் "தலையைச் சுற்றி மூக்கைப் பிடித்தல்" எனும் சொற்றொடர் பண்டு தொட்டே வழக்கில் உள்ளது. அது கிளாட்ஸ்டன் பேச்சு முறைக்கு மிகப் பொருந்திய கூற்றாம். ஒரே நாளில் இரயில் பயணத்தில் ஆங்காங்குப் பற்பல இடங்களில் தங்கிப் பலவேறு கூட்டங்களில் மணிக்கணக்கில் பேசியுள்ளார். காலஞ்சென்ற நமது தமிழ்நாட்டு நாவலர் உயர்திரு சத்தியமூர்த்தியார் உடல்நிலை குன்றியிருந்தும் ஒரு முக்கிய சமயத்தில் அவ்வாறே பேச்சு மழை பொழிந்துள்ளார். இக்காரியத்தில் மகாகனம் கிளாட்ஸ்டனை சத்தியமூர்த்தியார் பின்பற்றினார்போலும்! கிளாட்ஸ்டன் அரசியல் வரவு-செலவு மந்திரியாயிருந்தபோது, குறிப்பின் உதவியின்றிப் புள்ளி

விவரங்களை அள்ளி அள்ளிக்கொட்டி மிக விரிவாகப் பேசித் தம் மூளைபலத்தையும் நினைவுத்திறனையும் நிலைநாட்டியுள்ளார்.

எழுத்து வழி

இனி, கிளாட்ஸ்டனின் எழுத்து முறையை நோக்குவோம். அவர் எழுதும் கடிதங்கள் சாதாரணமாக மிகநீண்டும் பிணைந்தும் சுலபத்தில் பொருள் விளங்காமலும் இருக்கும். அவ்வெழுத்தில் குறியீடுகள் இல்லையேல், அவர் எழுதுங் கடிதங்களின் கருத்தைச் சரியாக உணர்தற்கியலாது. அவர் பிரதமர் எனும் முறையில் விக்டோரியா மகாராணியாருக்கு எழுதும் கடிதங்கள் மிகத் தோரணை வாய்ந்தவைகளாகவும் நெருடாகவும் இருக்கும். சில சமயம் மகாராணியார் குழப்பமுற்று, அவரை நேரில் அழைத்து அக்கடிதங்களின் கருத்தை விளக்கக் கேட்பதுண்டு. சில சமயம் அவர் விளக்கம் மகாராணியார் மூளையை மேலும் குழப்பிவிடும். "மகாகனம் கிளாட்ஸ்டன் எம்மைப் பாராளுமன்றச் சபையென எண்ணிப் பேசுகிறார் போலும்!" என்று பல சமயங்களில் மகாராணியார் இடித்துக் கூறியுள்ளார் என்பது சரித்திரம். விக்டோரியா மகாராணியார் பொதுப்பட அவர் நாவன்மையைப் பாராட்டினாலும், அவரிடம் மரியாதை காட்டி நடந்துகொண்டாலும், அன்பு கலந்து உள்ளந்திறந்து டிஸ்ரலியாரிடம் பேசியதுபோல் அவரிடம் பேசியதில்லை. ஏன்? ஆண்டு மேடைப்பேச்சு எங்கு ஆரம்பமாகிவிடுமோ என்ற எண்ணம் மகாராணியாரை அச்சுறுத்துமாம். உலகின் பொதுநலத்துக்கு மேடைப்பேச்சுக்களும் நாவன்மையும் ஓரளவு முக்கியமானவை என்பதில் ஐயமில்லை. ஆயினும் மேடைப்பேச்சு முறையை ஒருவர் சமய பேதமின்றி எங்ஙனும் உபயோகித்தல் தவறென்பது மேலே காட்டியுள்ளவற்றால் நனிவிளங்கும். மகாகனம் கிளாட்ஸ்டன் சத்தியநெறி பற்றிய - மதநெறிநின்ற ஒரு மேடைப்பேச்சு நாவலர் மட்டுமல்ல, அவரே மேடைப்பேச்சின் உருவாய் ஒளிர்ந்தார்; மேடை அவராயிற்று. அவர் பேச்சு வன்மை, உயிராயிற்று; அவர் வெறும் உடலானார். ஆயினும் சாக்ரடீஸ், டெமாஸ்தனீஸ், சிசரோ போன்று அவரது பேச்சுக்கள் சாதாரண மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் உலகியல் போக்குக்கும் ஏற்றனவல்ல; உலகியல் உண்மைத் தத்துவங்களை உணர்த்துவனவுமல்ல. மகாகனம் கிளாட்ஸ்டன், தாரை தாரையாகப் பேச்சு மழை பொழியவல்ல காளமுகிலாக விளங்கித் தாம் பிறந்த நாட்டுக்குப் பல்வழியிலும் பெரும்புகழைப் பெற்றுத்தந்து நாவலர்களுக்கு ஒரு சிறந்து எடுத்துக்காட்டாக இன்றும் புகழுடம்புகொண்டு விளங்குகின்றார்.

23. பாராளு மன்றத்தின் விதி வாய்பாடுகள்

பிரிட்டிஷ் பார்லிமெண்டு எனப்படும் பாராளு மன்றத்தின் ஒழுங்கு முறைகளும் சட்ட திட்டங்களும் மிகச் சிக்கலானவை. அவற்றை ஈங்குச் சுருக்கிக் கூறுதல் முறையாம். பலப்பல நூற்றாண்டுகளாக — பல தலைமுறைகளாக அச்சபையின் நடைமுறைக் கிரமங்கள் படிப்படியே வளர்ந்து மேலும் விருத்தியடைந்து, நாட்டின் நலனனைத்தும் அவற்றால் பாதுகாக்கப் படுகின்றன.

அம் மகாசபையின் நடைமுறைக் கிரமங்கள் பல்வேறு மந்திரிகளின் ஆட்சியில் பல மாறுதலடைந்து எண்ணிறந்த நிரந்தர உத்தரவுகளாலும், சட்டங்களாலும், உபவிதிகளாலும் வரையறுக்கப் பெற்றுள்ளன. அவை அவ்வக் காலங்களில் அம்மன்றத்தே விவாதிக்கப்பெற்று அச்சபையின் அங்கீகாரம் பெற்றவைகளாம். ஆயினும் அம் மகாசபையின் மரியாதைக் கிரமங்களும், ஒழுங்குப்பாடுகளும் நீடிய வழக்கத்தின்வழியே வந்தவை யென்ப. சட்டமாக அவை வரையப் படாவிடினும், இன்றும் அவ்வொழுங்கு முறைகள் கண்டிப்பாகக் கண்காணிக்கப் படுவனவாம். அவற்றைச் சபையோர் மனதில் தரித்து, ஒழுங்கு தவறிப் பேசும் அங்கத்தினரை நேர் வழியில் திருப்புதற்கு 'ஒழுங்கு, ஒழுங்கு' என்று கூவுவர். அவ்வாறு எச்சரிக்கப்பட்ட அங்கத்தினர் தமது பேச்சை ஒழுங்கான வழியில் திருப்புவார். சபையில் உபயோகிக்கத் தகாத வார்த்தைகள் கூறப்படுமானால் அவற்றைக் குறித்துச் சபையினின்று பலமான கண்டனம் எழும். அவற்றைத் தப்பென்று ஒப்பித் திருப்பிப் பெற்றுக்கொள்ள அவ்வங்கத்தினர் கட்டாயப் படுத்தப் படுவதுண்டு. உபயோகிக்கப் பட்ட வார்த்தைகள் சரி அல்லது தப்பு என நிர்ணயிப்பது அவைத் தலைவரின் (ஸ்பீக்கர்) கடமையாம். அவைத் தலைவர் அவைபற்றிய தமது முடிவைக் கூறுமுன், அவ்வார்த்தைகள் சபையின் கௌரவத்திற்குப் புறம்பானவையல்லவென எடுத்துக் காட்டும் உரிமை பேசிய அங்கத்தினருக்குண்டு.

காமன்ஸ் எனப்படும் பார்லிமெண்டுக் கீழ் சபையில் சாதாரணமாக நிகழும் மேற்காட்டிய வாதங்கள் சிலவேளை பார்வையாளர்கட்கும்-ஏன் - அங்கத்தினர்கட்கும் திகைப்பையும் மனக் குழப்பத்தையும் உண்டாக்குவனவாம். இவற்றால் இடர்ப்படாது தம்மைக் காப்பாற்றிக் கொள்ள ஓர் அங்கத்தினருக்கு நீண்ட அனுபவம் வேண்டும். பார்லிமெண்டு மகா சபையாகிற விசித்திரமான இயந்திரம் தடைப்படாது

திறம்பட வேலை செய்தற்குச் சாதகமான எல்லா ஒழுங்குமுறைக் கிரமங்களும் விரிவாகவும் விளக்கமாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. அங்கத்தினர்கள் இவற்றைப் பாட புத்தகம்போல் பன்முறை படித்துணர்தல் மிக வேண்டப் படுவதாம்.

முதலாவதாக, மரியாதைக் கிரமப்படி ஓர் அங்கத்தினர் யாரிடம் பேச விரும்பினாலும் தலைவரை விளித்துப் பேசுதல் மரபாம். எந்த அங்கத்தினரையும் பெயர் குறித்துப் பேசுதல் முறையல்ல. "கண்ணியமிக்க கனவான்", "கண்ணியமிக்க—இம் மாவட்டப் பிரதிநிதி" எனக் கூறுதல் முறையாம். பிரபுக்கள் (லார்ட்ஸ்) சபையைக் குறித்து ஏதேனும் பேச வேண்டின், "பிரபுக்கள் சபை" யெனக் கூறாது, "வேறோர் இடத்தில்" என்று கூறுதல் வேண்டும். வேறு அங்கத்தினரைத் தாக்கு முறையிலாவது, இழிவுபடுத்தியாவது அல்லது தனிப்பட்ட கௌரவத்தைக் குறைக்கும் பழிச் சொற்களை அவர்மீது சுமத்தியாவது பேசலாகாது. தேசத்தின் ஆட்சி முறையாலும் நன்மை தீமைகட்கு மந்திரி சபையே உத்தரவாதமாதல்பற்றி மன்னரை நிந்தித்துப் பேசுதல் மன்னிக்க முடியாத குற்றமாம். தலைவரின் ஒழுங்குமுறை அல்லது தடையுத்தரவிற்கு எல்லா அங்கத்தினரும் பணிதல் வேண்டும். அரசாங்க அங்கத்தினர்களும் அவ்வாறே நடந்து கொள்வர். ஒழுங்குக் கிரமங்களை மீறும் அங்கத்தினர் எவராயினும் அவரைச் சபையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாதவாறு வெளியேற்றும் அதிகாரம் தலைவருக் குண்டு.

மேலே காட்டியுள்ள நடைமுறைச் சட்டங்களின் உதவிகொண்டு அம்மகா சபையின் கௌரவமும், விவாதங்களின் உயர்வும் பரிபாலிக்கப் படுவனவாம். ஓர் அங்கத்தினர் மற்றோர் அங்கத்தினரிடமும், மந்திரிகளிடமும், மேல் சபையாரிடமும், மன்னர் பிரான் மாட்டும் நடந்துகொள்ளும் மரியாதைக் கிரமங்கள் வழுவாது கண்காணிப்பான அவைகளேயாம். கட்சி பேதத்தால் விவாதங்களில் கொந்தளிப்பு எழுமேல், தனிப்பட்ட முறையில் எவரையும் தாக்காது விவகாரத்தை யொட்டியே பேசுதல் முறையென்ப. நடைமுறை விதிகளால் விளையும் நன்மைகள் இன்னும் மிகப் பலவாம்.

மேலே கூறிய நடைமுறைக் கிரமங்கள் பிரபுக்கள் அல்லது மேல் சபைக்கும் உரியனவாயினும், ஒரு பிரபு மற்றொரு பிரபுவையோ இதர பிரபுக்களையோ நேராகப் பெயர்கொண்டு விளித்துப் பேசலாம். அச்சபை நடவடிக்கைகளின் ஒழுங்குப் பாட்டுக்கும் அமைதிக்கும் பிரபுக்களே பொறுப்பாளிகளாவர்.

பொதுமக்கள் (காமன்ஸ்) சபையின் நடவடிக்கைகள் கீழ்க் கண்டவாறு நிகழ்வனவாம். தாமதம் ஏதுமின்றிக் குறித்த நேரத்தில் சபை கூடுவது வழக்கு. பாதிரியார் பிரார்த்தனை முடிந்தவுடன் சபையின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். அவற்றை நாள் முழுதும் ஆண்டிருந்து கவனித்திருக்கத் தனிவசதி பெற விரும்புவோர் பிரார்த்தனைக் காலத்திலேயே ஆங்கு இருத்தல்வேண்டும். அச் சபையில் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகள் வரிசைக்கிரமத்தில் குறிக்கப்பெற்று, அச்சிடப்பட்டு, முற்கூட்டி வெளியிடுதல் வழக்காம். அரசியலாரின் உத்தியோக அலுவல்களையும், மசோதாக்களையும் சபையின் கவனத்திற்குக் கொண்டுவருதற்கெனத் தனிநேரம் ஒதுக்கி வைக்கப்படும். சீட்டுக் குலுக்கி எடுக்கப்பட்ட மசோதாக்கள்மட்டும் வரிசைக்கிரமத்தில் சபையின் கவனத்திற்கு முறையே ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

அங்கத்தினர் தத்தம் மசோதாவைக் குறித்துச் சபையில் பேச விரும்பும் காலத்தை முற்கூட்டி யறிவித்தல் கட்டாய விதியாம். அப்படிப் பேசுதலே அம் மசோதா முதற்றடவை சபையில் படிக்கப்பட்டதாகும். பிறகு அம் மசோதா அச்சிடப்பட்டு எல்லா அங்கத்தினர்கட்கும் வழங்கப்பெறும். பின்னர் அதனை மறுமுறை படிக்கும் நாள் குறிப்பிடப்படும். முதல் தடவையில் சாதாரணமாக, ஒரு மசோதா எதிர்க்கப்படுவதில்லை. ஆனால், அஃது இரண்டாம் முறை சபைமுன் வரும்போது மிகத்துருவி ஆராயப்படும். அவ்வாறு ஆராயப்பெற்ற மசோதா அங்கீகரிக்கப்பெற்றால், அதன் அவசியம் சபையோரால் ஒப்புக்கொள்ளப்பட்டதென்ப. பின்னர் ஒவ்வோர் வார்த்தைகளையும், வாக்கியங்களையும், வாக்கியத் தொடர்களையும் அலசிப் பரிசீலனை செய்தல் அதற்கெனச் சபையோரால் தெரிந்தெடுக்கப்படும் 'கமிட்டி' அல்லது குழுவினரின் கடமையாம்.

'கமிட்டி' அல்லது குழுவெனப் படுவது முழுச் சபையையும் குறிப்பதாம். அக் குழுவில் கையாளப் பெறுமுறை வேறு வகைத்தாம். தலைவர் (ஸ்பீக்கர்) அதுபோழ்து தமது ஆசனத்தை விட்டெழுந்து விடுவார். அவர் பதவிக்குரிய சின்னங்கள், எடுபிடிச் சாமான்கள் மேசையினின்றும் அகற்றப்படும். சபை உதவித் தலைவர் (டிப்டி ஸ்பீக்கர்) அப்போது தலைமை வகிப்பார். பார்லிமெண்டு சபையில் ஓர் அங்கத்தினர் ஒரே முறைதான் பேசலாம். ஆயினும் கமிட்டியாகிய கழகத்தில் ஓர் அங்கத்தினர் விவாத முறையைத் தழுவிப் பல முறை பேசலாம்; சொற் போர் நிகழ்த்தலாம். அதன் பிறகே அம்

மசோதா திருத்த மடைந்து உபயோகமான உருவைப் பெற்றதாகும். இக் குழுவில் அம் மசோதாவில் அநுபவம் பெற்ற நிபுணர்களில் சிலர் தற்காலிக அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப் படுவர். இங்ஙனமாக ஒரு மசோதா கமிட்டியாரால் அங்கீகரிக்கப் பட்டால், அது பார்லிமெண்டு சபையாருக்குத் தலைவர் மூலம் அறிவிக்கப்படும். அதைக் குறித்த விவாதம் அச் சபையில் மேலும் நிகழும். ஒரு மசோதா இவைகளால் உருத்தெரியாது குலைத்துவிடப் பட்டால், அசல் மசோதாவைக் கொணர்ந்த அங்கத்தினருக்கு அதைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளும் உரிமையுண்டு. ஒரு மசோதாவைத் தள்ளுபடி செய்யக் கமிட்டியாருக்கு அதிகாரமில்லை.

பின்னர் மூன்றும் முறை அந்த மசோதா மகா சபையில் எடுத்துக் கொள்ளப்படும். அதுபோழ்து அதைக் குறித்து முடிவான விவாதம் நடைபெறும். அம் மசோதா அக் காலத்தும் உருவோடு இருந்தால், அது பிரபுக்கள் அல்லது மேல் சபைக்கு அனுப்பப் பெறும். அங்கும் மேற்குறித்த நடைமுறைகட்குப் பின் அங்கீகரிக்கப் பட்டால், அது மன்னர்பிரான் முன்னிலையில் வைக்கப்பெறும். மன்னரின் அங்கீகாரத்துடனும், கைச்சாத்துடனும் அம்மசோதா பின்னர்ச் சட்டமாகிவிடும். இதுபோலவே, மேல் சபையினின்றும் ஒரு மசோதா உண்டாக்கப்படலாம். முதற்கண் அம்மசோதா பிரபுக்கள் சபையில் விவாதிக்கப்பட்டுப் பிறகு பொதுமக்கள் அல்லது காமன்ஸ் சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுவது வழக்கு.


இவ்வித ஒழுங்குப்பாட்டை அநுசரிப்பினும், எல்லா மசோதாக்களும் இறுதிவரை வெற்றி பெறுமெனக் கூறுவதற்கில்லை. அவை இடையில் வீழ்ச்சிபெறுவதற்குப் பல காரணங்கள் உண்டென்பது வெளிப்படையாம். வீழ்ச்சிபெற்ற மசோதாக்கள் மறுமுறை சபைகூடும் போதுதான் மீளவும் கொண்டுவரப்படலாம். எல்லா மசோதாக்களுக்கும், தீர்மானங்களுக்கும் தலைவர் கேள்வி மூலமாகச் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவார். அவர் வினவிற்கு 'ஆம்' அல்லது 'இல்லை' எனும் விடைகொடுத்தல் அங்கத்தினரின் கடமையாம். சில அங்கத்தினர் நடுநிலைமை வகிப்பதிலும் குற்றமில்லை. ஒரு மசோதாவை ரத்து செய்ய அல்லது தடைப்படுத்த விரும்பினால், தலைவர் கேள்வி பிறக்கு முன், ஒரு திருத்தப் பிரரேபணையைத் தந்திரமாக ஓர் அங்கத்தினர் கொண்டுவரலாம். உதாரணமாக, ஓர் அங்கத்தினர் "இம் மசோதா இன்றுதொட்டு ஆறுமாதங்களின்பின் வாசிக்கப்படலாம்" என்று

ஓர் ஒத்திவைப்பைப் பிரரேபிக்கலாம். அது நிறைவேறிவிட்டால் அத்துடன் அம்மசோதா அம்முறை நிறுத்தப்பட்டதாகுமென்ப.

தலைவர் (ஸ்பீக்கர்) பிரரேபணையை முதற்கண் கூறி, அதற்கு 'ஆம்', 'இல்லை' உண்டா வெனக் கேட்பார். 'ஆம்' எனும் சப்தம் அதிகமாக இருந்தால் அது நிறைவேறியதாகும். 'இல்லை' என்ற சப்தம் அதிகமாக இருந்தால் அது நிறைவேறவில்லை யெனத் தலைவர் முடிவு கூறுவார். ஓர் அங்கத்தினர் தலைவரின் முடிவை ஏற்காது 'வாக்கு' எடுக்க வற்புறுத்தலாம். கட்சிக்கு இரு அங்கத்தினராக நான்கு நடுவர் நியமிக்கப்படுவர். அச்சமயம் சபையில் மணியோசை கேட்கும். இரண்டு நிமிடங்களில் 'ஆம்' கட்சிக்காரர் வலப்புறத்திலுள்ள அறையிலும், 'இல்லை'க் கட்சிக்காரர் இடப்புறத்தேயுள்ளே அறையிலும் புகுவர். வேறு கதவைத் திறந்து ஒவ்வோர் அங்கத்தினராக வெளிப்படும்போது மேற்சொல்லிய நடுவர்கள் அவர்களை எண்ணிக் கணக்கிடுவர். இவ்வாறு கணக்கிடப்பட்ட எண்ணிக்கையைத் தலைவர் சபைக்கு அறிவிப்பார். முதல் பிரரேபணை தோற்றுவிட்டால், திருத்தப் பிரரேபணை முன்னர்க் கூறியுள்ளவாறு சபையின் ஆலோசனைக்குக் கொண்டு வரப்படும். (இதர சபைகளின் நடைமுறையில் திருத்தப் பிரரேபணை முதலில் எடுத்துக் கொள்ளப்படுதல் வழக்காம்.) அத்திருத்தப் பிரரேபணை தோல்வியடைந்தால், முதல் பிரரேபணை கவனிக்கப்படும். இதில் பார்லிமெண்டு மகா சபையின் முறை குற்றமற்றதெனத் தெள்ளிதில் விளங்கும். இத்தகைய நடைமுறை பேதம் நம் நாட்டார் குறித்துக் கொள்ளத் தக்கதாம்.

ஒரு மசோதாவை அல்லது தீர்மானத்தை எதிர்க்காமலே தந்திரமாக ஒழித்தலும் உண்டு. பேசிப் பேசி ஒரு முடிவுக்கு வராமலே அதனை நிறுத்தி விடுவது ஒரு தலைசிறந்த உபாயமாம். அன்றிச் சபையில் அதுபோழ்து அவசியம் இருக்கவேண்டிய நாற்பது அங்கத்தினர்கள் – 'கோரம்' – இல்லையென்று தலைவருக்கு எடுத்துக்காட்டி விவாதத்தைப் பேச்சளவிலே அம்மட்டோடு நிறுத்திவிடுவது மற்றோருபாயமாம்.

எனவே, உலகின் கண்ணுள்ள எல்லாச் சபைகட்கும் தாய்ச் சபையான பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் அங்கீகரிக்கப்படு முன்னும், ஒரு மசோதா சட்டமாக மாறுவதற்கு முன்னும் எத்துணை ஆழ்ந்த பரிசீலனை செய்யப் படுகின்றதென்பது மேற்காட்டிய நடைமுறைக் கிரமங்களால் செவ்வனே புலப்படும்.



ஆசிரியர் இந்நூலை எழுதிய நிலை

இரண்டாம் பகுதி

1. தமிழ்ப் பேச்சின் உயர்வு

மொழிப் பெருமை

ஈண்டுத் தமிழ்ப் பேச்சின் உயர்வு எனப்படுவதை, தமிழ்ப் பேச்சின் இயற்கை உயர்வு எனவும் அதன் எதிர்கால உயர்வு எனவும் இரு பெருங் கூறுக்கலாம். பண்டைய தமிழ் நாட்டின்கண் இற்றை நாளுள்ள மேடைப் பேச்சுக்கள் இல்லையென்பது உறுதி. தமிழ் நாட்டில் புராணக் கூற்றுக்களும், நூல் விரிவுரைகளும், கதைகளும் ஓரோவழி நிகழ்ந்து வந்தன வென்பதே ஒப்ப முடிந்த உண்மை. அவற்றின் வழித் தமிழ்ப் பேச்சின் உயர்வு படிப்படியே வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். இல்லையேல், 'இனிய தமிழ்', 'செந் தமிழ்', 'இன்பத் தமிழ்' எனும் சிறப்புப் பெயர்கள் பூர்வந் தொட்டுத் தமிழுக்கு வழங்கக் காரணமில்லை.

தமிழ்நாடு

தமிழ்மொழியின் பெருமையை மேலும் ஆராயப்புகுமுன், பண்டைத் தமிழ் நாட்டைக் குறித்தும் ஆண்டு வதிந்த தமிழ் மக்களைக் குறித்தும் இவண் ஆராய்தல் முறையாம். நினைவு கடந்த பல ஆயிர ஆண்டுகட்கு முன் இன்றுள்ள இந்துமாசமுத்திரம் எனும் பெரு நீர்ப்பரப்பு, நிலப் பரப்பா யிருந்த தென்றும், ஆண்டு மக்கள் தோற்றமும் பிறவுயிர்த் தோற்றமும் முதல் முதல் உற்றன வென்றும், அந்நிலப் பரப்பின் பெரும்பாகம் கடலால் பின்னை அழிக்கப்பட்ட தென்றும் ஆராய்ச்சி வல்லோர் பலர் அறிந்து உணர்த்தி யுள்ளனர். இத் தொன்னிலப் பரப் பின் அழிவு போக எஞ்சி நிற்பதே இதுபோழ்து நாம் வாழும் தமிழ்த் தாயகமாம். இப் பேரழிவைக் குறிப்பாய் உணர்த்தற்கே, சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தமிழ்நாட்டு வரம்பு குறித்துத் தொல்காப்பியப் பாயிரத்தில் 'வடவேங்கடந் தென்குமரி'யென அக்காலத்திருந்தவாறு தமிழ்த் தாயகத்தின் பரப்பைச் சுருக்கிக் கூறினர் போலும்! இந்நாள் காணப்பெறும் தென் நிலமுனை பண்டைக் குமரியல்ல வென்பதும், குமரி யென்ற ஓர் ஆறு தெற்கே வெகுதூரம் பரந்து ஓடி ஒரு பெரிய நிலப்பரப்பைச் செழுமையாக்கிற் றென்பதும், அந்நாடு கடலால் விழுங் கப்பட்ட தென்பதும், அக் குமரியின் நினைவு கூட்டவே பிற்றை ஞான்று இம்முனைக்குக் குமரியெனப் பெயர் புனையப்பட்ட தென்பதும்

ஆராய்ச்சியாளர் ஒருங்கு கண்ட உண்மைகளாம்.* எனவே, இப் பண்டைய தமிழ்நாட்டில் முதற்கண் மக்கள் பிறப்பும், நாகரிகமும் உற்றனவெனப் படுவ தாலேயே, சரித்திரகாலத்திற்கு முன்னரே தமிழ் நாட்டு மக்கள் நாகரிக வாழ்வு, கலையறிவு, அரசியல் நிலை முதலியன வற்றில் மற்றவரினும் உயர்ந்திருத்தல் வேண்டு மென்பது ஊகத்தால் அறியக் கிடப்பதாம். இன்றுள்ள சிற்றரசுகள் முன்னர் இத் தமிழ்நாட்டின்கண் பலதிறப்பட்ட மன்னர் ஆண்டிருந்த நாடுகளின் எஞ்சிய சின்னங்களாம். தமிழர் அரசியல் பெருமையை உணர்த்தற்குச் சேர, சோழ, பாண்டிய, பல்லவர் ஆகியோர் ஆட்சிகளே சாலும். கடல் கொள்ளாத முழுப் பழந்தமிழ் நாட்டில் இவர்களைப் போன்ற எத்துணை அரசர்கள் ஆண்டிருத்தல் வேண்டும்? அங்ஙனமாக மிளிர்ந்த இத்தமிழ் நாட்டில் தனித் தமிழ்ப் பேச்சு தலையெடுக்காது போனதென்? இதற்குத் தலையாய காரணம் கோனாட்சி அல்லது முடியாட்சியேயாம். கோனாட்சியில் மன்னர், அமைச்சர் ஆகியோரின் நேரான பார்வையில் மக்கள் ஆளப்பட்டு வந்தனர். ஆட்சி முறையில் யோசனை கூறவும் குறைகளை யெடுத்துக் காட்டவும் முன்னேற்றத்தை விரும்பிக்கோரவும் செய்தற்கான வசதிகளும், வாக்குச் சுதந்திரமும் கூட்டுமுறையில் குடிமக்கள் பெற்றவரல்லர். மக்களின் தனிப்பட்ட குறைகளைத் தீர்த்தற்கும், நியாயம் வழங்கற்கும் ஆராய்ச்சி மணி கள் ஆசார வாயிலில் அந்நாள் அரசருக்குத் துணை நின்றன. பழந் தமிழ்நாட்டில் மிளிர்ந்த அரசியல் பெரிதும் அறத்தையும், அன்பையும், அருட்டன்மையையும், மக்கள் முழுநலத்தையும் அடிப்படையாகக் கொண்டு நிலவியதால், குடிமக்கள் குறையெழுப்புதற்கோ கூடிப் பேசு தற்கோ அவசியம் ஏற்பட்டதில்லை யென்பது நன்கு புலப்படும். ஆக லின், தமிழின் இனிமை, மணம் ஆகியன பண்டைய நூற்களா லும் ஆசிரியர்களின் அறிவு விளக்கத்தாலுமே இந்நாட்டில் நுகரப் பெற்றன வெனக் கோடல் குற்றமற்ற முடிவாம்.

---

*பேராசிரியர் எச். ஜி. வெல்ஸ் என்பார் யாத்துள்ள உலக சரித்திரத்தில், உல கின்கண் முப்பதாயிரம் ஆண்டுகட்கு முன் ஏதோ ஒருவகை மக்கட் பிறப்பு ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய இருதேசங்களில் உற்றதென யூகிப்பதற்கான சின்னங் கள் காணப்படுகின்றன வென்றும், பெரும் பாகம் கடல்கொண்டு இன்று எஞ்சி யுள்ள ஆசியா கண்டத்தில் நாற்பதாயிர வருடங்களுக்கு முன் வதிந்த உண்மை மனிதப் பிறவிகளின் சின்னங்கள் அமிழ்ந்து வெளிப்படாது கிடக்கின்றன என் றும், மேற்கு ஐரோப்பாவில்தான் முதல் உண்மை மனிதப் பிறப்பு உற்றதென அறுதியிடுதல் தவறென்றும் ஆராய்ந்து கூறுகின்றார்.

அன்றும் இன்றும்

சுமார் மூவாயிரம் ஆண்டுகட்கு முன் பூர்வீக நாகரிகங்களை ஒருங்கே கொண்டிருந்த கிரீஸ், ரோமாபுரி ஆகியவை குடிக்கோனாட்சி பெற்றிருந்த தேயங்களாம். இங்கிலாந்து தேசமும் அவ்வாறேயாம். பிரான்ஸ் தேசம் சில நூற்றாண்டுகட்கு முன் முடியாட்சியினின்றும் குடியாட்சியாக மாற்றம் பெற்றதாகும். ருஷியா தேசம் முடியாட்சியை வீழ்த்திக் குடியாட்சியைச் சமீப காலத்தில் நாட்டியதாகும். முன்னர்க் கூறிய முதல் மூன்று நாடுகளில் மக்கள் சுதந்தர வாழ்வு பெற்று நாட்டுத் தேவைகளையும் குறைகளையும் மேடைப் பேச்சின் மூலம் வெளியிடும் சுத்ந்தரம் கொண்டவராவர். பிரான்ஸும் ருஷியாவும் இத்தகைய சுதந்திரத்தில் குறைந்திருப்பதற்கும், மேடைப் பேச்சு முறையில் குன்றியிருப்பதற்கும், நாவலர்கள் பெருக்கமற்றிருப்பதற்கும் முந்திய முடியாட்சியால் விளைந்த பிற்பயனே காரணமாம். அமெரிக்கர்களின் சுதந்திர உணர்ச்சியும், சுய நம்பிக்கையும், சுய மரியாதையும் உலகறிந்த அச் சமுதாயப் பெருங் குணங்களாம். எந் நாடாயினும், அந்நாட்டு மக்கள் சுயமரியாதையையும், சுயமதிப்பையும், சுயநம்பிக்கையையும் எக்காரணங் கொண்டும் இழப்பரேல், பிறர் மரியாதையையும், நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெறுவ தெங்ஙனம்? எனவே, இன்றுள்ள நம் நாட்டு மக்களேபோல் அன்றிருந்த தமிழ் மக்களும் தாழ்ந்து வாழ்ந்திருந்தன ரென்பது உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்கும்.

உலகத் தாய்ச்சபை

இங்கிலாந்து தேசத்திய பாராளு மன்றத்தினும் மிக்கதோர் தாய்ச் சபையை வேறெங்கும் காண்டலரிது. அம் மன்றம் காலத்தால் முற்பட்டது. பேச்சாளருக்கு அம் மன்றம் அளிக்கும் வாய்ப்புகளையொத்துப் பிறநாடுகளில் காண்பதற்கில்லை. இந்நாள் உலகுக்கு எடுத்துக் காட்டாக அம்மன்றம் ஈந்துள்ள அருங்கலா நாவலர்களை அறுதியிடல் சுலபமன்று. ஆங்கில எழுத்தும், பேச்சும் ஒரேவகைத் தெனினும், அவை இலக்கிய இலக்கணங்களோடு இயைந்தவை யெனினும், மேடைப் பேச்சு, குறிப்பாகப் பாராளு மன்றப் பேச்சுக்களும் விவாதங்களும் ஒரு தனி இலக்கியமாகவும், அழகிய கலையாகவும் இற்றைஞான்றும் மிளிர்வனவாம். சென்ற நூற்றாண்டில் வதிந்த மெக்காலே, பர்க், ஷெரிடன், பிட், பிரைட், காப்டென், கானிங், செஸ்டர் பீல்ட், பிராட்லா, டிஸ்ரலி, கிளாட்ஸ்டன் ஆகிய மாபெரும் நாவலர்கள் பாராளு மன்றத்தில் பேச எழுந்த காலை ஆண்டுக் கிளம்பிய ஆரவார

மும், மணிக் கணக்கில் அன்னார் பேசிய பேச்சுப் பெருந்தாரையும், பேச்சுப் பொருளில் விரவிக் கிடந்த இலக்கிய மொழித் தேர்ச்சியும், மக்கள் மனதை அவை ஈர்த்த சக்தியும், அத்தேச சரித்திரத்தில் பொன்னாலாய எழுத்துக்களால் பொறிக்கப் பெற்று இதர நாட்டாருக் கும் எடுத்துக் காட்டாக இந்நாளும் துலங்குவனவாம். ஆயினும் இன்றைய பாராளுமன்றப் பேச்சுக்கள் முன்னைய வெறும் இலக்கியச் சொற்பெருக்குகளினின்றும் சிறிது மாறுபட்டிருப்பனவாம். காலத் தின் அருமை நோக்கி, நீண்ட பேச்சுக்களில் மக்கள் மனம் நாட்டம் பெறுவதில்லை; அப்பேச்சுக்களை சுவைப்பதுமில்லை. இந்நாள் பாராளு மன்ற நிகழ்ச்சிகள் வெறும் பேச்சையும், வார்த்தை யூற்றையும் விரும்பாது, காரியத்திலே கருத்தைச் செலுத்தத் தூண்டுவனவா யுள்ளன. ஆண்டு விரும்பப்படுவது ஊன்றிப் பேசப்படும் துணுக்குப் பேச்சுக்களும், திடுக்கிடச் செய்யும் விவாத முறைகளுமேயாம். அண்மையில், பெரும் நாவலரான வின்ஸ்டன் சர்ச்சில் இந்திய ஆட்சி முறையைத் தாக்கிப் பேசிய ஆணித்தரமான பேச்சும், தொடர்ந்து பேசிய இதர நாவலர்களின் விவாதப் போரும் பாராளு மன்றப் பேச் சின் உச்சநிலை கண்டவையாகும். நமது நாட்டுத் தமிழ்ப் பேச்சாளர் இத்தகைய உச்ச நிலை எய்தற்குப் பெருமுயற்சி செய்தல் வேண்டும். தமிழ்மக்கள் முதலில் குற்றமற்ற பேச்சுப் பெருந் தோரணையைப் பெற வேண்டிய நிலையில் இன்றுள்ளனர். பாராளு மன்றத்தில் நிகழும் இன்றைய முறையைப் பின்பற்றித் தமிழ் மேடைகளில் நயம்படப் பேசுதற்குச் சில ஆண்டாதல் நம் மக்கள் நன்கு பயில்தல் வேண்டும்.

அரசியல் மொழி

சமீபத்தில், சென்னைக் காங்கரஸ் மந்திரி சபை கலைக்கப்பட்ட காரணங்களை விளக்கு முகத்தான், விலகிக் கொண்ட பிரதமர் உயர். டி. பிரகாசம் நான்கரை மணிநேரம் தொடர்ந்த பேச்சுக்கதை யொன் றைச் சட்ட சபையில் நிகழ்த்தினர். அதனால் அவர் காலத்தின் மதிப் பையும் இந்திய மக்களின் பேச்சு வன்மைச் சிறப்பையும் குலைத்தா ரென்பது மிகையல்ல. இனித் தமிழ், அரசாங்க மொழியாகுங்கால், அரசியல் வாதிகள் சட்ட சபைகளை வெறும் பேச்சு மடங்களாகவும், கதைக் கோட்டங்களாகவும் செய்யாதிருத்தல் நாட்டுக்கு உயர்வு தேடிய தாகும். தாய்மொழி வேறுபாடு பலகொண்ட இந்நாட்டில் தமிழ்மொழி யின் தொன்மைக் கேற்றவாறு இம் மாகாணத்தைப் பிரிவுபடுத்தித் தாய் மொழியை அரசியல் மொழியாக்குதல், அப்பிரிவினையில் வதியும் மக்

களைப் பலவேறு துறைகளில் வளர்ச்சி பெறச் செய்வதாகும். ஆயினும் இவ்வாறு செய்தற்குச் சுதந்தர இந்தியாவில் இன்று பல எதிர்ப்புக்கள் உள்ளன. இந்தியப் பிரதம மந்திரியாரும் இதற்கு எதிரிடையான கருத்தை அண்மையில் வெளியிட்டுள்ளார். மொழிப் பிரிவினைக்கும் மக்கள் இனத் தொகுதிக்கும் ஏற்றவாறு நமது நாட்டைப் பிரிவினைப் படுத்தி ஆண்டு வழக்கிலுள்ள தாய்மொழியை அரசாங்க மொழியாக்குதலே நாட்டின் நலனைக் கோரும் நல்வழியாகும். இவ் வுண்மை அநுபவத்தினாலேயே பின்னர் உணரத் தக்கதாம். இவ்வித அரசியல் மாறுபாட்டாலும், தமிழ், அரசாங்க மொழியாவதாலும் தமிழ் நாட்டில் மேடைத் தமிழ்ப் பேச்சு, பல்வழி உயர்வெய்தலும் மேன்மையுறுதலும் கூடும். தமிழ் மக்கள் சுதந்தர மக்களாய் வாழ்தலும் உறுதியாம்.

---

2. சோர்வின்றிச் சொல்லுதல்

சோர்வுகள்

நந்தமிழ் நாட்டில், பதினெண் கீழ்க்கணக்கினுளொன்றான " இனியவை நாற்பது " எனும் நூலைப் படியாதவரில்லை யெனலாம். அதன்கண் " சொல்லுங்காற் சோர்வின்றிச் சொல்லுதன் மாண்பு இனிது " என வரும் தொடர் பலப்பல உண்மைகளை விளக்குவதாய் அமைந் துள்ளது. அம்முழு வாசகத்தின் கருத்து ஒரு மேடைப்பேச்சாளருக்கு எத்துணை அறிவுச்சுடர் கொளுத்துகின்றதென்பது ஊன்றி நோக்கு வோர்க்கு நன்கு புலனாகும். சோர்வு எனப்படும் சொல், ' தளர்ச்சி ' யென்றும், ' தவறு ' என்றும் பொருள் தருவதாம். மேடைப்பேச்சைப் பொறுத்தவரை சோர்வு எனப்படுவதை உடற்சோர்வு, மனச்சோர்வு, சொற்சோர்வு, கருத்துச்சோர்வு எனும் நான்கு பெரும் பிரிவினைக்குள் அடக்கலாம். அவற்றை முறையே சிறிது விரித்துரைத்தல் ஈண்டைக் கேற்புடைத்தாம்.

உடற்சோர்வு

ஒரு மேடைப்பேச்சாளருக்கு உடற்சோர்வு காண்டல் ஆகாதாம். உடல் நலியாலும் தேகபலம் குன்றியிருத்தலாலும் ஒரு பேச்சாளர் உரக்கப்பேசவும் தொடர்ந்து பேசவும் இயலாது. அங்கப்பழுதற்ற பேச்சாளரும் உடற்சோர்வின்றிப் பேசுதல் கடினமாம். மிதமிஞ்சிய

ஊண்கொண்டவரும், நடை, பசி, தாகம் முதலியவற்றால் மெலிந்தவரும் சோர்வின்றிப் பேசுதல் அருமையாம். விரும்பத்தகாத விறுவிறுப்பான பானங்களை உட்கொள்வோரும் அபின் முதலிய லாகிரிப் பண்டங்களில் அமிழ்வோரும் மேடைமீது உடற்சோர்வு காண்டல் இயல்பாம். உடற் சோர்வு ஏற்படாதிருப்பதற்கு ஒரு பேச்சாளர் நல்ல தேகபலத்தைப் பெற்றிருத்தல் இன்றியமையாததொன்றும். தேகபலம் இல்லையேல், நல்ல பேச்சுக் கடுத்த உரங்கொண்ட இனிய குரல் அமைதல் கடினம். தேகபலம், உடல்வலி என்பன ஒரு பொருள் கொண்ட இரு வேறு சொற்கள். அவை ஒருவரின் தசை, நரம்பு முதலியவற்றின் உறுதிப் பாட்டைக் குறிப்பாய் உணர்த்துவனவாம். உடல் பருத்தும் தசைகள் கொழுத்தும் மிதஅளவைக் கடந்திருப்பின் அத்தகையோரும் மேடை மீது நின்று நன்கு பேசுதல் அரிதாம். உடற்சோர்வு காண்டலும், வியர்வைப் பெருக்கெடுத்தலும், பெருமூச்செறிதலும் இன்னவர்பால் மிகுந்து காணப்படும். உடற்சோர்வுடன் பேசுங்குரலில், விறு விறுப்பும் உயிர்நாடியும் இருத்தலரிதென்பது ஒருபுறமிருக்க, அப்பேச் சாளர் பேசுவதின்னதெனச் சபையோர் நன்கறிதல் துர்லபமாம். உடல் வலியற்ற, சோர்வுகொண்ட ஒரு நோயாளியை மேடைமீது ஏற்றிப் பேசச் செய்தால் அவர் நன்கு பேசவோ, சபையின் கவனத்தைக் கவரவோ இயலாதென்பது உறுதி. எனவே, ஒரு பேச்சாளரின் உடல் நிலை திடம்பெற்றதாயும் அவர் பேச்சு உடற்சோர்வின்பால் படாமலும் இருத்தல் நனிவேண்டப்படும்.

அநுபவங்கள்

மேலே கூறியவற்றால், மேடைமீது நின்று பேசும் ஒரு பேச் சாளருக்கு உடல்நிலையும் உள்ளமும் தளர்ச்சியின்றி இருத்தல் அவசிய மென்பது பெறப்படும். ஈண்டைக்கு மேலும் சிறிது விளக்கம் மிகை யல்ல. சில பேச்சாளர்களைப் பல தெருக்களைச் சுற்றிக்கொண்டு, பேசு மிடத்திற்கு ஊர்வலமாக இரதங்களில் அழைத்துச் செல்வது வழக்கு. தெருமக்கள் பார்ப்பதற்கென அவ்விரதங்களின் மேல்மூடிகள் திறந் திருக்கும். அவர் மலர் மாலைகளால் மூடப்பெற்றிருப்பார். அப்பேச் சாளர் பேச்சு மேடைக்கு வருவதற்குள், நாடி தளர்ந்து மிக்க சரீரக் களைப்புக் குள்ளாகியிருப்பார். இராக்காலங்களில் மேளதாளங்களுடனும், வாண வேடிக்கை நிகழ்த்தியும் ஒரு பேச்சாளரை ஊர்வலமாகப் பேசு மிடத்துக்கு அழைத்துச் செல்வதைப் பல இடங்களில் காண்போம். இவை இந்நாள் தவிர்க்கமுடியாத சடங்குகளாகக் கருதப்படுகின்றன.

மக்கள் திரண்டு ஈண்டியுள்ள அக்கூட்டங்களில் அப்பேச்சாளர்களின் பேச்சு இடர்ப்படுதலும் தோல்வியுறுதலும் நிச்சயம். லீட்ஸ் நகரத்தில் ஒரு பெரிய ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்பட்ட மகாகனம் கிளாட்ஸ்டன் இது குறித்து எச்சரிக்கையே வழங்கியுள்ளார். அவர் பேச்சைக் கேட்க மக்கள் இலட்சக்கணக்கில் கூடியிருந்தனர். பகலில் பல ஊர்வலங்கள்; இரவில் வாண வேடிக்கைகளோடு கூடிய பவனிகள்; இடையிடையே பலவிருந்துகள் நிகழ்ந்தன. எழுபத்திரண்டு வயதுடைய அம்முதியார் என் செய்வார்! தமக்குமுன் சிலரைப் பேசச் செய்து, சிறிது களைப்பும் அலுப்பும் நீங்கின பின்னரே அவர் பேசினார். முதலில் அவர் குரலோசை குன்றியிருந்தது. பேசப் பேச அவர் குரல் வழக்கம்போல் கணீரென ஒலித்தது. இந்நூலாசிரியர் செல்லுமிடங்களில் இவ்வித வரவேற்பு வழங்கப்படுதல் வழக்கு. கும்பகோணத்தில் நடைபெற்ற ஒரு மாபெரும் கூட்டத்திற்கு இவ்வாறு ஆடம்பரமாக அவர் அழைத்துச் செல்லப்பட்டார். பற்பல இடங்களிலிருந்து திரளான மக்கள் வந்து குழுமியிருந்தனர். வரவேற்புத்தாளுக்குப் பதிலிறுக்க அவர் எத்தனித்தார். தொண்டை கட்டிவிட்டது. ஒரு வார்த்தையேனும் வாய்விட்டு வெளிவரவில்லை. தமது முழுச்சக்தியையும் புகுத்திப் பேச ஆரம்பித்தார். தொண்டைக்கட்டு பத்து நிமிடங்களுள் படிப்படியே நீங்கிற்று. பிறகு தமது வழக்கம்போல் பேசி சபையைக் களிப்பித்தார். இத்தகைய உபசரிப்புகளையும், உலாக்களையும் ஒருவர் பேச்சு முடிந்தபின் ஏன் நிகழ்த்தலாகாதென்பது ஊன்றி நோக்கற்குரித்தாம்.

மனச் சோர்வு

ஒரு பேச்சாளருக்கு மனச்சோர்வு உண்டாவதற்குப் பல காரணங்கள் உள்ளனவாம். ஒருவர் உடல்நிலை திடம்பெற்றதாயின் மனச்சோர்வு நிகழக் காரணமில்லை. உடற்சோர்வே மனச்சோர்வுக்கு முக்கிய காரணம். சபை விதிர்ப்பும், பேச்சுச் சரக்குக் குறைவும், படிப்பின்மையும், சொற்றிறக் குறைவும், குடும்பத் துக்கங்களும் இன்னோரன்ன பல காரணங்களும் ஒருவருக்கு மனச்சோர்வை உண்டாக்குவனவாம். மனச்சோர்வு கண்டால் சபை நடுக்கம் தோன்றும்; கோழைத்தனமும் உடன் கூடும். மறதி, சொற்சோர்வு ஆகிய பிறவும் அவற்றின் விளைவாகத் தலைகாட்டும். சோர்வுகொண்ட மனதில் அரிய கருத்துக்கள், 'சேற்றில் நட்ட கம்பம்' எனக் கால் கொள்ளமாட்டா. "சத்தியம் குடிகொண்ட ஒருவர் மனதில் தளர்ச்சியுண்டாவதில்லை. மனம் தளர்ச்சி பெறுவிடில்

அதினின்றும் வாய்மையே பிறக்கும். வாய்மை எங்ஙனும் பரவுமேல் அமைதி நிலவும். அமைதி பெருகுமாயின் உலகம் சமாதான வாழ்வைப் பெறும் " என்பன சீன நாட்டு வழக்கிலுள்ள சிறந்த அறமொழிகளாம்.

அன்றியும், மனம் இருவகைப் பண்புடையதாகும். தூரக்கண்ணாடிக்குழல் செய்மையில் உள்ளவற்றை அண்மையில் அழகுறக் காட்டும் கருவியாம். அது கொண்டு சந்திரமண்டலத்தின் பேரழகையும், உடுக்களின் நிலையையும், இயற்கை வனப்பையும் ஒருவர் நன்கு ரசித்தல் கூடும். பூதக்கண்ணாடிபோன்ற மற்றொரு நிலையை மனம் அடையுமேல், சாதாரணச் சிறு புழுவும் மலைப்பாம்பெனக் காட்சியளிக்கும். சிற்றெறும்புகளைப் பெரும் வண்டுகளெனத் தோற்றுவிக்கும். அந்நிலையில் மிகச் சுலபமான காரியங்களும் மலைகளெனப் பெருக மனச் சோர்வு உண்டாதல் ஒருதலை.

சொற் சோர்வு

ஒரு மேடையில் சொற்சோர்வு இன்றிப் பேசுதற்கு, ஒரு பேச்சாளருக்கு விசாலித்த நூலறிவும் சொற்சுவையும் இன்றியமையாதவைகளாம். ஒரு பேச்சாளர் தமது பேச்சில் சொற்குற்றமும், மொழிச் சோர்வும் தோன்றுதவாறு பேசுதல் கடனும். உச்சரிப்புக் குறைவாலும் வல்லின மெல்லின எழுத்துக்களைத் தவறுகப் பொலிவு குன்ற ஒலித்தலாலும் பல பேச்சாளர் சொற்சோர்வு எனும் வழுவின்பாற் படுவதைக் காண்போம். வார்த்தைகளின் நீட்டல், குறுக்கல் விகாரங்களின் மிகுதியாலும் ஒரு பேச்சாளர்மாட்டு சொற்சோர்வு காண்டல் இயல்பாம். சிற்சில வார்த்தைகள் குரலின் உதவிகொண்டும், நாவின் இயக்க பேதத்தாலும், மூக்கின் துணையாலும் வெளிப்படுவனவாம். ஒரு பேச்சாளர் தமது உச்சரிப்பில் அவைகளில் சரியான ஒன்றின் உதவியைச் சோரவிட்டு, மற்றொன்றின் உதவிகொண்டு பேசுவாராயின் அப்பேச்சு சொற்சோர்வு கொண்ட குற்றமான பேச்சாம். மனத்தூய்மையும் வாய்மையுமின்றிப் பேசப் புகுவோர்க்குச் சொற்கள் இடர்ப்படுதலும், அச்சத்தால் சோர்வு காண்டலும் இயல்பாம். ஒரு பேச்சாளர் பேசுங்கால் ஏற்படும் குரல் பேதத்தால் வார்த்தைகளின் உச்சரிப்புப் பெருகியும் அருகியும் அருவருக்கத் தக்கதாக முடியும். பொதுவாக, வார்த்தைகளின் சரியான உச்சரிப்பை இலக்கியங்களின் உதவிகொண்டும், அவைகளின் ஒலி மாத்திரை அளவை நல்ல பேச்சாளர்களிடமிடருந்து அறிந்துகொண்டும் பேச முனைதலே குற்றமற்ற பேச்சாளரின் இலக்கணமாம்.

கருத்துச் சோர்வு

இனி, கருத்துச்சோர்வில் நாட்டஞ் செலுத்துவோம். நினைவாற்றலே கருத்துச்சோர்வின்றிப் பேசுதற்கு அடிப்படை. கருத்துச்சோர்வின்பாற்பட்ட பேச்சாளருக்குப் பொதுமேடைகள் இடங்கொடுத்தல் அருமை. சிலவேளை தவறாக அத்தகையோர் பேச அழைக்கப்படுவரேல் அன்னார் பேச முற்படாதிருத்தல் மேலாம். நல்ல கருத்துக்களை-தமக்குத் தோன்றாக் கருத்துக்களைக் கேட்டறியவே சபையில் மக்கள் ஈண்டுதல் இயல்பாம். நல்ல கருத்துக்களைத் தக்க மொழிகளாகிய நல்லுடையால் அலங்கரித்து இனிமையாகப் பேசப் பழகிய ஒரு பேச்சாளர் சபையின் கவனத்தைக் காந்தமென ஈர்ப்பரென்பது ஒருதலை. கருத்துக் குறைந்து முரண்படப் பேசும் பேச்சை மக்கள் சுவைத்தல் அரிதாம். ஒரு கருத்தினின்றும் வேறொரு கருத்துக்குத் திடீரெனப் பாய்தலும், தொடர்பும் வரன்முறையுமின்றிப் பேசுதலும் வெறுக்கத் தக்கவைகளாம். கருத்துப் பொலிவு ஒருவர்மாட்டு அதிக மில்லாவிடினும், உள்ள சில கருத்துக்களை ஊக்கமுடன் விளக்குமுகத்தான் ஒரு பேச்சாளர் சபையின் கவனத்தை ஓரோவழிக் கவர்தலுமுண்டு. எனவே, மேற்காட்டிய நான்கு சோர்வுகளாலும் ஒரு பேச்சாளர் ஒல்லும்வகை அலைக்கப்படாதிருத்தல் வேண்டுமென்பது வலியுறுத்திப் பெறப்படுவதாம்.

ஆவல் வேண்டும்

ஒரு பேச்சாளரிடம் பொதுவாக இவ்விதச் சோர்வுகள் அணுகாதிருத்தற்குத் தாம் கற்றுத் தேரவேண்டுமெனும் ஆவலும், கற்றதை நன்கு வெளிப்படுத்தல் வேண்டுமெனும் கவலையும் இருத்தல் கனிவேண்டப்படுவதாம். இவ்விரண்டு ஆவல்களாலும் தூண்டப்பெற்றவர் காலக்கிரமத்தில் நல்ல பேச்சாளர் ஆவார் என்பதில் ஐயமில்லை. இவைகளுடன் நினைவாற்றலும் உண்மை நெறியும் சிறிது பக்தியும் ஒருங்கு சேரின் ஒரு பேச்சாளரின் சிறப்பு மிகும். இதற்கு உயர்ந்த பக்தியோடு பேசிய ஆபிரகாம் லின்கனின் சத்திய மொழிகளும், நாவலர் கிளாட்ஸ்டன் பேச்சும், நமது நாட்டு நாவலர்களான கனம் இரானடே அவர்கள் பேச்சும், மகாத்மா காந்தியடிகளின் போதனைகளுமே போதிய சான்றுகளாம்.

3. விபரீதப் பேச்சுப் போக்குகள்

மேடை அதிசயங்கள்

ஈண்டு விபரீதப் பேச்சுப் போக்குகள் எனப்படுவன மேடைப் பேச்சிலுறும் பல அதிசயங்கள் அல்லது மாறுபாடான முறைகளெனப் பொருள் தருவனவாம். முந்திய பகுதியினிறுதியில் ஒரு மேடைப் பேச்சாளரின் உடல்நிலை, அங்க சேட்டைகள் ஆகியவை குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளன. அவற்றைக் குறித்தும், ஒரு பேச்சாளர் பேசுங்கால் நிகழும் பல குணக்கேடுகளைக் குறித்தும் ஈங்கு விரித்துரைத்தல் மிகையன்று.

சேட்டைகள்

ஒரு பேச்சாளரின் அங்க சேட்டைகள் பலவற்றுள், பேச்சு மண்டபத்தின் கூரையைப் பார்த்தவாறு தலையை உயர்த்திப் பேசுதல், பின் அல்லது பக்கவசமாகத் தலையை இழுத்தல், மேலுங் கீழுமாகத் தலையை ஆட்டுதல், உடலின் ஒரு பாகத்தைச் சொரிந்துகொண்டும் ஆபாசமாக முன்னுடையை நெருடிக்கொண்டும் பேசுதல் ஆகியவை பேச்சு மேடைகளில் சாதாரணமாகக் காணப்படும் குற்றங்கள். பின்னர்க் கூறிய இரண்டும் மிகத் தகாதவைகளாம். காலஞ்சென்ற சர். முகமது ஹபிபுல்லா எல்லா இடங்களிலும் மேலே நோக்கிய வண்ணமாகவே பேசுதல் வழக்கு. சில அங்க சேட்டைகள் தொட்டில் பழக்கமாக ஒருவர் வாழ்க்கையில் நுழைந்து இடுகாடு செல்லும்வரைத் தொடர்வனவாம். மாபெரும் நாவலரான டிஸ்ரலி என்பார் பாராளுமன்றச் சபையில் பேச்சைத் துவக்குமுன் தமது தலையைச் சற்றுப் பின்னிழுத்து நிமிர்த்தல் வழக்காம். இவர் உயிர் பிரியும் வேளையிலும் இவ்வாறே நிகழ்ந்ததென்பது சரித்திரம். சென்னையில் ஒரு பிரபல வழக்கறிஞர் மனவாக்குக்கெட்டா விரைவில் நீதிமன்றத்தில் விவாதிக்குங்கால், சொரிந்துகொள்ளும் வேலையைத் தமது இடக்கரத்துக்கு அளித்துவந்தார். சொரியச் சொரிய அவ்வேகம் மேலும் மேலும் அதிகரிக்கும். சில பேச்சாளர் பேச்சுப் பொருள் நயத்தால் உணர்ச்சி பெறாது ஆள்காட்டி விரலை அடிக்கடி உயர்த்தி அச்சுறுத்துவது போல் சைகை காட்டிக்காட்டியே பேசுவர். இன்னும் சிலர் எதிரிலுள்ள ஒருவரைக் கடிந்துகொள்வதுபோல், தலையை ஒருபுறம் சாய்த்துத் தமது மார்பை நோக்கியே பேசுவர். சிலர் இரு கண்ணிமைகளையும் அடிக்

கடி மூடியும் திறந்தும் உள்ளொளி கண்டு பேசுபவர்போல் பேசா நிற்பர். வேறுசிலர் மற்றவர்களிலும் திறம்படப் பேசுவதாகப் பாவித்து இடுப்பில் கைகொடுத்து நின்று பேசுவர். சென்னை செயிண்டு மேரி மண்டபத்தில் கவர்னர் தலைமையில் ஒரு சட்டசபை அங்கத்தினர் அண்மையில் பேசினர். அவர் உயரிய உருவமும் மெலிந்த உடலும் உடையவர். ஒலிபெருக்கியின்முன் பேசிய அவர் அடிக்கடித் தமது தலையைப் பின்புறமாக இழுத்தும் முதுகை வில்என வளைத்து வளைத்தும் பேசினர். அவர் பூமியின் மத்திய கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு எங்கு நிலையிழந்து மேடையில் வீழ்ச்சிபெறுவரோவெனச் சபையோர் ஐயுற்றனர்! சிலர் பேசுங்கால், சிறுமிகள் கும்மிகொட்டல்போல் அளவு கடந்து இரு அகங்கைகளையும் ஓசையெழ அறைந்துகொள்ளலும், பிணைத்துக்கொள்ளலும் உண்டு. சிலர் குதித்துக்கொண்டும் ஆடிக்கொண்டும் பேசுவதுண்டு. மாபெரும் நாவலரான காலஞ்சென்ற அன்னைபெசண்டு அம்மையார் பேசுங்கால், அவரது இனிமையான பேச்சுத்தோரணையோ டியைந்து அன்னர் வெள்ளைக் கலையும் பணியும் அணிந்த உடல், ஊசலாடுவதுபோன்ற ஒரு தனி அழகுடன் மிளிரும். 1891-ம் ஆண்டு நாகபுரி காங்கரஸில் தலைமைதாங்கிய இராய்பகதூர் பி. அனந்தாச்சார்லு எனும் பெரியார் இருகை மாறிச் செவிகளைப் பற்றுமலே தோப்புக்கரண மிடுதல்போல், உணர்ச்சிவேகத்திற்கேற்ப உட்கார்ந்துஎழும் பாவனைதோன்றப் பேசுதல் வழக்கு. ஆங்கிரமொழியில் அருங்கலா விற்பன்னரும் மேடை நாவலருமான காலஞ்சென்ற இராவ்சாகிப்-பண்டித கானலா இராமமூர்த்தி யென்பார், மொழிநயமும் பேச்சுவன்மையும் மிகப் பெற்றவர். தமது இடக்கரத்தில் ஒரு பிரம்பைப்பிடித்து ஊன்றிநின்றுபேசுதல் அவர்வழக்கு. எவரேனும் குறும்புக்காக அவர் பிரம்பை இடறினும், தட்டிவிடினும் அவர் பேச்சு அபாயச்சங்கிலி ஈர்க்கப்பட்ட இரயில் வண்டித்தொடரென நின்றுவிடும். இம்மாதிரி இரண்டொரு தடவை நிகழுமேல் அவர் பேசாது அமர்ந்துவிடுவார். இப்பகுதியை வாசிக்கக்கேட்ட, உயர்திரு - திரு. வி. கலியாணசுந்தர முதலியார், "சில காலத்திற்குமுன் நான் பேசுங்கால் வெட்டுதல்போல் இடக்கரத்தை அடிக்கடி உயர்த்துவது வழக்கு. ஒரு பேரவையில் பேசிக்கொண்டிருந்தபோது அவ்வாறு உயர எழுந்த என் கரத்தை அருகிருந்த ஒரு நண்பர் வேண்டுமெனப் பலமாகப் பற்றினர். என் பேச்சு உடனே நின்றுவிட்டது. பெருமுயற்சிசெய்து தொடர்ந்து பேசினேன். அத்தீய பழக்கத்தைக் காலந்தாழ்க்காது விட்டொழித்தேன்" என்றார். பொய்ப்பற்களுடன் பேசும் சில பேச்சாளர் தமது

தலையை உயர்த்தி, வாயை முழுதுந் திறந்து, தம்மையும் மறந்து பேச முனையுங்கால், அன்னார் மேற் பல்வரிசை கீழே நழுவுதலையும், ஒழுங்கு நிலையில் அதனை மீளவும்வைத்துப் பேசுதற்கு அவர் படும்பாட்டையும் பல மேடைகளில் காண்போம். சில பேச்சாளர் 'கிரிக்கட் 'பந்தை வீசி எறிவதுபோல் இரு கரங்களைச் சேர்த்தலும் பின்னர் வலக்கரத்தைச் சுழற்றலு முண்டு. வேறுசில பேச்சாளர் சின்முத்திரையை அலுப்பும் சலிப்புமின்றிக் காட்டிக்காட்டியே தமது பேச்சை முடிப்பர். தாம் எங்குப் பேசுகிறோம், எவ்வாறு பேசுகிறோம் எனக் கருவில் நன்கு பதித்துப் பேசுகிற பேச்சாளர்மாட்டு இவ்விதக் குறைபாடுகள் தலை காட்டா. முக்கியமாக, ஒரு பேச்சாளர் மேடைமீது ஏறுங்கால் தமது உடல்நிலையைக் குறித்தும், கைமெய் காட்டலைக் குறித்தும் மிக்க கவனம் செலுத்தக் கடமைப்பட்டவ ராவார்.

மொழிச் சேட்டை

மேற்குறித்த அங்க சேட்டைகளை விடுத்து இனி ஒரு பேச்சாளரின் வார்த்தைச் சேட்டைகளை நோக்குவோம். மாபெரும் நாவலர்களும் சிறிது வார்த்தைப் பழுதுடையராவர். மிகச்சீரிய நாவலரான கனம் கோபாலகிருஷ்ண கோகலே அவர்களுடைய பேச்சுக்கள் பலவற்றுள்ளும் "எதற்கும் ஒரு முடிவு உண்டு" என்னும் ஒரு சொற்றொடர் அடிக்கடி வருவதைக் காண்போம். 1914-ம் ஆண்டு சென்னையில் குழுமிய காங்கரஸ் மகாசபையில் தலைமைவகித்த பாபு - பூபேந்திரநாத் பாசு என்னும் கீர்த்திவாய்ந்த நாவலர் 'Country' எனும் ஆங்கில மொழியை 'கந்திரி' என எக்காரணம் பற்றியோ சொல்லிச் சொல்லி இளைஞர்மாட்டுக் குறுநகை யுண்டாக்கினார். தமிழை விருப்ப பாடமாகக் கொண்டு சென்னைப் பல்கலைக்கழக இருகலைப் பட்டமும், இராவ்பகதூர் பட்டமும் பெற்ற நண்பரொருவர் 'விசனம்', 'வியனம்' என மொழிவதை விடுத்து 'விஜனம்', 'விஜனம்' என்றே பொதுமேடைகளில் நகைப்பெழப் புகன்றுவந்தார். மற்றொரு நண்பர்—ஏன்—பல பேச்சாளர் பேச்சின் இடையிடையே "ஓர்-ர்.ர்.ர். எனும் மொழியொலியை அளவுகடந்து ஒலித்தல் வழக்காம். 'ஆகவே', 'எனவே', 'அந்த முறையில்', 'ஏதோ', 'ஆகட்டும்', 'மகத்தான', 'உண்மையில்', 'ஆனபடியினலே' என்னும் மொழிகளும் இன்னோரன்ன பிறமொழிகளும் சிலர் பேச்சில் மிகுந்து காணப்படும். 'கருவி காரணங்கள்', 'கண்மூடி மௌனி' என்பனவற்றின் பொருள் அறிந்து கையாளுவதை விடுத்துப் பொருத்தமும் அர்த்தமுமற்று உபயோகிக்கும்

பேச்சாளர் பலருண்டு. 'நான் கேட்கிறேன்', 'அப்படிக் கேட்கிறேன்', 'அதைத் தான் கேட்கிறேன்', 'நன்று நன்று', 'ஆம் ஆம்' எனத் தம் பேச்சினிடையே ஒரு நூறுதரம் சலியாது கூறும் பேச்சாளர் பலரைத் தமிழ் மேடைகளில் இந்நாளும் காண்போம். இவைகளனைத்தும் குற்றங்கொண்ட வார்த்தைச் சேட்டைகளெனவும், இனிய மேடைத் தமிழ்ப் பேச்சுக்கு உகந்தவையல்ல எனவும் நல்ல பேச்சாளராக விரும்புவோர் உணர்தல் கடனும்.


குற்றமான முறைகள்

சில நல்ல பேச்சாளர்களும், பொதுமேடை நாவலர்களும் ஒரே கருத்தை, அதே வாசகத் தொடரால் அல்லது வாக்கியங்களால் பல ஊர்களில், பலப்பல மேடைகளிலும் புகன்றுவருகின்றன ரெனும் முறையீடு நந் தமிழ்நாட்டில் செவிபட முழங்குகின்றது. சில பெரியார்களும் இதற்கு விலக்கல்லர். அறிந்தோ அறியாமலோ நமது பேச்சாளர் இவ்வழுவின்பால் படுகின்றனர். இத்தகைய பேச்சாளர் ஒருவர் பேசும்போது சபையோர், 'எடுத்துவிட்டார் இவர் கையிருப்பை' என முழக்கமிடுவதைப் பல இடங்களில் பார்த்தும் கேட்டு மிருக்கிறோம். ஆகவின், ஒரு பேச்சாளரின் மனதிற்குக் குற்றமாகத் தோன்றாத ஒரு செயலேயோ, அன்றி அவர் கருத்தைவிளக்கும் வாக்கியத்தொடரையோ பல தடவைகளில் பார்த்தலாலும், கேட்டலாலும் சபையோருக்கு அவை மிகப் பழைமையாகத் தோன்றல் இயல்பாம். சில பேச்சாளர் பேசிக்கொண்டே பிறமொழிகள் பலவற்றுக்குப் பாய்வர். சில கதைகளையும் கூற முற்படுவர். உதாரணமாக, சென்னையிலுள்ள வழக்கறிஞர் ஒருவர் ஒரு மாநாட்டில் பேசுங்கால் பேச்சுப்பொருளை அறவே விடுத்து வடமொழியிலிறங்கி "நரிக்கதை", "காகாசுரன் கதை" சொல்லத் தொடங்கினர். சபையோர் கரங்கொட்டி நகைத்து, 'யாங்கள் இக்கதைகளைப் பல மேடைகளில் தங்களிடமே கேட்டுக்கேட்டு அலுத்திருக்கிறோம், போதும், நிறுத்து'மென அவரைப் பேசவொட்டாது இடைமறித்தனர். மற்றும் ஒரு பேச்சாளர் இந்தியக் கைத்தொழில் உன்னதங்களை விரிக்கப் புகுமுகத்தான், டெக்கா மஸ்லினையும், டில்லி மாநகரத்தில் நாட்டியுள்ள பூர்வீக இரும்புத் தூணையும் எடுத்துக்காட்டுக்களாகப் பல இடங்களிலும் பல மேடைகளிலும் சலிப்பின்றிப் பேசுவது வழக்கு. ஒரு பேச்சுக்கோ அல்லது விவாதத்துக்கோ பொருத்தமான உதாரணம் கூறுவிடில் அப்பேச்சுப் பொருளின் சுவையை நயத்தலரிது. நமது மாகாணப் பிரதம மந்திரியாயிருந்த

கனம் - டி. பிரகாசம் அவர்கள் அண்மையில் கதர்பற்றிய விவாதத்திற்குப் பதிலளிக்கையில், டெக்காமஸ்லின் உற்பத்திபற்றிய பூர்வ சரித்திர வரலாற்றை உணராமலே கதர் உற்பத்திக்கு அதனை உவமித்து அதற்கு ஆக்கம் தேட முயன்றார். சென்னை மூர்மார்க்கட்டில் திறந்த வெளியில் பேசிய காங்கரஸ்வாதி யொருவர் எங்கு எவ்வாறு பேசுகிறோம் என்பதைக் கருதாமலே, "உண்ணப் போதிய உணவும், நல்லுடையும், உறையுளும் மக்களுக்குப் பேதமின்றி அளிப்பதே இன்றுள்ள காங்கரஸ் ஆட்சியின் விரதம்" எனப் புகன்றார். கூட்டத்திலிருந்த ஒரு முதியார் 'காங்கிரஸ் ஆட்சியில் மக்கட்கு உண்ணச் சிறங்கை யரிசியும், உடுத்தப் பத்துமுழத் துணியும், உறங்கத் திண்ணையும், கிடைத்தற்கு என்சொல்வீர்?' என உரக்கக் கூவி இடைமறித்தார்.

முன்னுளைய காங்கரஸ்

முன்னுளில் காங்கரஸ் மேடை ஒரு சிறந்த கலைக்கோயிலாக விளங்கிற்று. அக்கோயிலில் நாவலர் கூட்டம் மலிந்து, பாராளுமன்றத்திய பண்டைய நாவலர்க் கிணையான பல பேச்சாளர் உண்டாயினர். அவர்களே நமது நாட்டுக்குப் பெருமை வாங்கித் தந்தவராவர். இந்நாள் அத்தகைய நாவலர் தொகை மிகமிக அருகியது. ஆயினும் சத்தியாக்கிரகம், சட்டமறுப் பியக்கம் தலைகாட்டியகாலத்தே தமிழ் நாட்டுக் காங்கரஸ் மேடைகளில் நூற்றுக்கணக்கான கேள்வியறிவு மட்டுங்கொண்ட தமிழ்ப் பேச்சாளர் தோன்றலுற்றனர். ஆங்கில ஆட்சியை எள்ளுதல், தலைவர்களைப் போற்றுதல் அல்லது தூற்றுதல், மஞ்சள் பெட்டியை ஆதரிக்க வாக்காளரைத் தூண்டுதல், 'ஆனையைப் பானையில் அடைக்கவல்லோம்' என வானளாவ ஏதேதோ பேசுதல் ஆகியவற்றைக் காலம், இடம், மக்களின் மனப்பான்மை அறியாது முழக்கமிடுதலையே இந்நாள் காங்கரஸ்வாதிகளில் மிகப்பலர் தமது வேலையாகக் கொண்டுள்ளனர். இவர்களுள் மிகச்சிலரே காங்கரஸ் மூல தத்துவத்தை உணர்ந்தவர்கள். அவர்களுள் மிகச் சிலரே மேடைமீது கௌரவ முறையில் பேசவல்லவர். இனி மேடைத் தமிழ்ப் பேச்சு உச்சநிலை யடையுங்கால், நூலறிவும் உலகாநுபவமும் பெற்ற பேச்சாளர் கூட்டம் நாட்டின் நலங்கருதி மிகமிகப் பெருகுதல் வேண்டும். மேடைமீது பேசப்புகுதல் எளிய காரியமன்று. உலகில் சாதாரண வழக்கில், பேசப் புகுதலையும் சாக்காட்டையும் மக்கள் ஒன்றென இன்றும் கூறுவதைக் கேட்போம். இக்கூற்றில் பொருள் நிறைந்த பல உண்மைகள் செறிந்திருத்தல் ஆழ்ந்து நோக்குவோர்க்குத்



1. சர் ஹென்றி காட்டன், 2. ஏ. ஓ. ஹ்யூம், 3 பிரதமர் லாய்டு ஜியார்ஜ், 4. சர் வில்லியம் வெட்டர்பர்ன், 5. டாக்டர் வில்லியம் மில்லர்.

தெள்ளிதில் விளங்கும். ஆதலின், ஒரு மேடைப் பேச்சாளர் ஆரம்பப் பேச்சாளராயினும் பண்பட்ட பேச்சாளராயினும் மேலே கூறிய பல விபரீதப் பேச்சுப் போக்குகளில் சிக்குறாது தம் பேச்சை ஒல்லும் வகை குற்றங் களைந்து தீயன மறைந்து நல்லன வருமாறு இன்பம் கமழப் பேசிமுடித்தல் முறையாம்.

---

4. ஆராய்ந்துரைத்தல்

கல்வி கேள்வி

மிகச் சிறந்த நாவன்மை உடையராயினும் மேடைமீதிவர்ந்து பேசுங் கால், தகுவது இதுவெனக் கல்வி கேள்விகொண்டு ஆராய்ந் துரைத்தலே சாலச் சிறப்புடைத்தாம். இதனால் அத்தகைய மேம்பட் டார்மாட்டும் ஓரோவழி அறியாமை உண்டென்பது பெறப்படும். கல்வி கேள்விகளால் நூலறிவும் பொது உலகியல் அறிவும் ஒருவர் மாட்டுத் துலக்கம் பெறுகின்றனவென்பது கண்கூடு. ஆயினும் அவ் வாறு பெற்ற அறிவைத் தகுதியறிந்து பயன்படுமுறையில் உபயோ கிக்காவிடில் அதனால் எவ்வித நன்மையும் ஒருவர் அடைவதற்கில்லை.

நூலறிவு

இன்றைய தமிழ்மேடைகளில் தோன்றும் பேச்சாளர் பெரிதும் நூலறிவின் துணைகொண்டே பேசுபவர் ஆவர். குற்றமற்ற மேடைத் தமிழ்ப் பேச்சாளரின் எண்ணிக்கை மிக அருகியுள்ள இந்நாளில் ஒரு பேச்சாளர் கேள்வியறிவை மிகுதியும் பெருக்கிக்கொள்ளற்கு வாய்ப்பு அதிகமில்லை. ஆயினும் நூலறிவு சிறக்கப்பெறுதற்குப் பல வாய்ப்புக் களும் சாதனங்களும் உள்ளனவாம். பற்பல நூற்களும் அவைகளைப் போதிக்கும் வசதிகளும் நமது நாட்டில் மிகவும் உண்டு. நூலறிவு ஒன்றையே பெருக்கிப் பெருக்கித் தம்முள் மிகுதியாக அடக்கிவைத் துள்ள ஒருவரை, நீர்நிறைந்து வடிகாலற்ற ஓர் ஏரிக்கு உவமித்துக் கூறலாம். ஏரிநீர் வடிகால் வழியே வெளிப்போந்து ஒழுங்குமுறையிற் சென்று, பாய்ச்சுமுறையால் பலப்பல பயிர்த் தடங்களைப் பயன்பெறச் செய்தல்போல், ஒருவர் நூலறிவும் அவ்வாறே வெளிப்போந்து மக்கட் குப் பயன்தருதல் முறையாம். அவ்வாறு ஒழுங்குப்பாட்டில் மேடை யில் வெளிவரும் நூலறிவே ஈங்குத் தகுதியறிந்துரைத்தல் எனப்படும்.

இந்நாள் தமிழ்மேடைமீது இவரும் பேச்சாளர், தமது நூலறி வைக் காட்டுதற்குப் பெரிதும் முயல்பவராவார். இன்னோர் மேற்கோள் களை மிதமிஞ்சிக் கொட்டிக் கொட்டி முழக்குவர். இவர்கள் பேச்சில் ஆன்

றோர் பாடல்கள் பலப்பல மிளிரும். எண்ணுவோர்க்கு எண்ணியவாறு இடந்தரும் திருக்குறள் பாட்டுக்கள் பல தலைகாட்டாத தமிழ் மேடைகளை இந்நாள் இல்லையென உறுதிகூறலாம். இதனால் திருக்குறள் செய்யுட்களை ஆதாரமாகக் கூறப்படாதென்பது கருத்தல்ல. அப்பாடல்களின் கருத்துக்களை வசனமாகக் கிளந்து கூறலும் சொந்த அனுபவத்திலுற்ற எடுத்துக்காட்டுக்களால் மேலும் விளக்கலும் குற்றமற்ற முறைகளாம். எனவே, நூலறிவால் பெற்ற நுட்பமான கருத்துக்களைத் தமது நுண்ணறிவால் தகுவன அறிந்து சபையோர் பயன்பெறுமாறும் சுவைக்குமாறும் பேச்சாளர் உபயோகித்தல் வேண்டுமென்பது நன்கு புலனாகும்.

கருத்தில் வைத்தல்

தாம்பெற்ற நூலறிவைக் கருவில் பதித்துவைத்திருத்தலும், அவற்றைச் சமயமறிந்து கையாளுதலும் நல்ல பேச்சாளரின் இலக்கணமாம். தாம் படிக்கும் நூற்களிலுள்ள சத்தான பாகங்களைக் குறித்துவைத்துக் கொள்ளலும், பல தலைப்பின்கீழ் எழுதிவைத்துக்கொள்ளலும், சில வேளை அவற்றைக் கருத்தூன்றி வாய்விட்டுப் படித்துப்பார்த்தலும் அவைகளைக் கருவில் பதித்துவைப்பதற்கேற்ற சுலபமான மார்க்கங்களாம். தாம் படிக்கும் புத்தகங்களின் ஓரங்களில் தமது கருத்தைக் குறித்துவைத்திருப்பது மற்றொரு சிறந்த மார்க்கமாம். அப்புத்தகத்தைப் படிக்கும் இதர வாசகர்களும் அவைபற்றிய முந்திய வாசகரின் கருத்தை எளிதில் உணர்ந்துகொண்டு மேலும் தமது கருத்தை அவ்வழி பெருக்கிக்கொள்ள வியலும். சில மாணவர்கள் நூலாசிரியர் கருத்தோடிணங்காவிடினும், அக்கருத்து தமக்கு விளங்காவிடினும் அவ்வாசிரியரைத் தூற்றி இரண்டொரு குறிப்புகளைக் குறும்பாக அவ்வேடுகளின் ஓரங்களில் எழுதிவைப்பதுண்டு. அவை மிகத் தகாத - இகழ்தற்குரிய செயல்களாம். அவ்வாறு தூற்றுவதிலும் எளிதில் விளங்காத அக்கருத்துக்களை ஒல்லும்வகை அறிந்துகொள்ள ஒருவர் முயலுதலே அறிவுடைமை யாகுமென்ப.

பொது அறிவு

உலகப் பொதுஅறிவின் கூட்டுறவற்ற வெறும் நூலறிவு குடத்திலிட்ட விளக்குப் போலாம். நூல்வழிப் பெற்ற அறிவை உலகத்தோடும், உலக மக்களோடும், இதர இயக்கங்களோடும் ஒத்திட்டுப்பார்த்துப் பார்த்து உண்மையை உணர்ந்து உணர்ந்து அவ்வறிவை மேலும் பெருக்கலே நுண்ணறிவு பெறுவதற்கான சீரிய வழியாம்.

ஒருவர் தாம் கல்விகேள்வியால் பெற்ற அறிவை, அறிஞர் கூட்டுறவால் மேலும் மேலும் பெருக்கலே நுண்ணறிவு பெறுதற்குச் சிறந்த மார்க்கமாம். அவ்வாறு பெறப்பட்ட நுண்ணறிவு அங்ஙனே அடைபட்டுத் தேங்கிக் கிடப்பதல்ல; அவ்வாறு அதனை ஒருவர் தேக்கிவைத்தற்கும் இயலாது. அஃது ஒருகாலத்தே எவ்வழியானும் வெளிப்பட்டாதல்வேண்டும். ஒரு பேச்சுமேடையே அதற்குப் பெரிதும் இடங்கொடுப்பதாம். அதுவே சாலப் பொருந்தியதாம். அன்றியும் சில சிறந்த மேடைப் பேச்சாளர் பேசும் வழியையும், உபாயத்தையும் கவனித்திருந்து அவற்றைப் பின்பற்றல் மிகச்சிறப்புடைத்தாம். தினசரித் தாள்களையும், உயர்கலை மலர்களையும் குறிப்பு வைத்துக்கொண்டு வாசித்து ஐயந்திரிபற உணர்தல், மேடைமீது ஒருவர் ஆராய்ந்துரைத்தற்கேற்ற அடிப்படையாம். தினே தினே தோன்றும் பல தேச முன்னேற்ற நிகழ்ச்சிகள் கொண்ட இந்நாளைய பத்திரிகைகளைப் படித்துணர்தல் மிக வேண்டப்படுவதொன்றும். இந்நாட்டில் பத்திரிகைகள் இல்லாக்காலத்தும், அருகியிருந்த இடைக்காலத்தும், அவை மலிந்துள்ள இக்காலத்தும் நமது நாட்டுமக்களிடையே காணப்படும் அறிவு வளர்ச்சியின் ஏற்றத்தாழ்ச்சி ஊன்றி நோக்கின் தெற்றென விளங்கும். இந்நாள் நகரங்களினின்றும் வெகு தொலைவு பிரிவுபட்ட கிராமவாசிகள் மாட்டும் அறிவு வளர்ச்சியும் உலக அறிவும் நூலறிவினும் மிகுந்து விளங்குவதைக் காண்போம். காங்கரஸ் இயக்கம் தோன்றிய பல ஆண்டுகளுக்குமுன், பெருந் தேசாபிமானியான காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணிய அய்யரால் தோற்றுவிக்கப்பெற்று இந்நாளும் தமிழ்நாட்டுக்கு நலம்புரியும் "சுதேசமித்திரன்" பத்திரிகை, அரசியல் எண்ணங்களை மக்களிடையே மிகவும் பரவச் செய்வதெனக் கூறுதல் மிகையன்று. இன்று "தினசரி" தினத்தாள் தமிழ்நாட்டுக்குச் செய்யும் தொண்டு மிகப் பாராட்டற்குரித்தாம். அது மக்களின் அறியாமையை ஓட்டிவருதலும், அரசியலாருக்கு அவ்வப்போது அஞ்சாது அறிவுகொளுத்தி வருதலும் கண்கூடு.

காங்கரஸ் போன்ற பல அரசியல் இயக்கங்கள் இந்நாட்டில் தோன்றிப் புத்தகப் புழுக்கள் அல்லாத ஆயிரக்கணக்கான மக்களை ஓரோ வழி மேடைப் பேச்சாளராகச் செய்திருத்தல் கண்கூடு. எனவே, கேள்வியாலும் ஒருவர் அறிவு விளக்கம் பெறுதல் கூடுமென்பதும், அவ்வழியே உலகத்தாருக்கு அறிவுச்சுடர் கொளுத்த வியலுமென்பதும் நன்கு பெறப்படும். கேள்வியறிவு மிகுதியும் பெற்ற ஒருவர் கல்வியிற் சிறந்தவராகவும் இருப்பரேல், அவர் உலகுக்கு எத்துணை நன்மை பயக்க வல்லரென்பது அகங்கைக்கனியென விளங்கும்.

காங்கிரஸ் ஒரு கலைக்கோயிலாக மிளிர்ந்த முன்னாளில் கல்வி கேள்வி உலகானுபவம் செல்வாக்கு மிக்க தலைவர்கள் பலர் நாட்டின் நலனுக்காக உழைத்தார்கள். உயர்திரு. தாதாபாய் நௌரோஜி, சர். பிரோசிஷா மேத்தா, சர். சுரேந்திர நாதர், கோபாலகிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர், பண்டித மதன் மோகன மாளவியா, டாக்டர் எஸ். சுப்பிரமணிய அய்யர் போன்ற பல பெரியார்கள் தங்கள் உடல் பொருள் ஆவியைத் தாம் பிறந்த நாட்டுக்குத் தியாகம் செய்துள்ளனர் எனல் மிகையல்ல. அவர்கள் மேடைப்பேச்சைக் கேட்கப் பல ஊர்களினின்றும் - ஏன் ? பிற மகாணங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வருவர். இந்நாள் அத்தகைய மாபெரும் நாவலர்களின் எண்ணிக்கை காங்கரஸ் வட்டத்தில் மிக அருகியுள்ளது. காட்டாளிகளின் எண்ணிக்கை மிகப் பெருகியுள்ள தென்பது வெளிப்படை. காங்கரஸ் வானில் இடையே தோன்றிய மகாத்மா காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற சோதி மயமான மிகத்தூய உண்மை ஒளி உயர்ந்து வளர வளர மற்றவர்களை அது மின்மினியாக்கிற்று.

தகுதி கண்டுரைத்தல்

கல்வி கேள்வி நிறைந்து ஆராய்ந்துரைக்கப்புகும் ஒரு பேச்சாளர் தமது ஆராய்ச்சியில் போதருவனவற்றைச் சபையோரின் தகுதிக்கும் அறிவுக்கும் ஏற்றவாறு பேசுதல் முறையாம். சபையோரின் அறிவுக்கு மீறிய ஒன்றைப் பேசுதல் குற்றமாம். சபையோர் சுவைக்காத வொன்றை ஆராயாது கூறுதலும் குற்றமேயாம். எனவே, ஒரு பேச்சாளர் சமன்துக்கும் கோலென, பேச்சுப் பொருளையும் சபையோர் அறிவு விளக்கத்தையும் முன்னுணர்ந்து, தமது பேச்சுப் பொருளைத் தக்கவாறு ஆராய்ந்துரைத்தல் வேண்டுமென்பது ஈங்கு வலியுறுத்தப் படுவதாம். பெண்மக்கள் கூட்டத்தில் பேசப்புகும் பேச்சாளர் கல்வி கேள்வியினும் உலகானுபவம் மிகப்பெற்றவரா யிருத்தல் வேண்டப் படுவதாம். கூட்டத்திலுள்ள முக்கியமானவர்களைப் பற்றியும் பெரும் பான்மையானவர்களைக் குறித்தும் சில விவரங்களையாதல் முற்கூட்டி அறிந்திருத்தலும், அவற்றைப் பல நோக்கினின்றும் ஆராய்ந்து பொருத்தமாகக் கூறுதலும் நன்மை பயப்பனவாம்.

நாட்டுக்கேற்ற கல்வி

நமது அரசியலார் பலப்பல ஆண்டுகளாகச் சிறியோர் கல்வியில் மிக்க நாட்டஞ் செலுத்தி வருவது உண்மை. ஆயினும் நாட்டுக்கேற்ற கல்வியும், கல்வி முறைகளும் இன்னும் கைக்கொள்ளப்படவில்லை

யென்பது மறுக்கமுடியாத மற்றொரு உண்மையாம். இக்குறைபாடுகளை விரைவில் செப்பஞ் செய்தல் அரசியலாரின் இன்றியமையாத கடனும். அன்றியும் முதியோர் கல்வியிலும் அரசியலார் இவ்வேளை கவனம் செலுத்தக் கடமைப்பட்டவராவர். ஆங்காங்கு இலவச வாசகசாலைகள் அமைத்தலும், வண்டியிற் கொண்டு செல்லும் புத்தகச்சாலைகளைக் கிராமங் கள்தோறும் பரப்புதலும், வானொலி உதவியால் உலகப் பொது அறிவைச் சிறிய கிராமங்களிலும் பரவச்செய்தலும் இந்நாள் மிக வேண்டப் படுவனவாம். இவ்வழிகளின் துணைகொண்டு கல்வி கேள்வி மிகுந்து ஆராய்ந்துரைக்கும் அறிவுபெற்ற எண்ணிறந்த பேச்சாளர் சில ஆண்டு கட்குள் நமது தமிழ்நாட்டில் தோன்றுவரென்பது ஒருதலை. அக்கால் நமது பொதுமேடைகள், நகராண்மைக்கழகங்கள், அரசியல் சட்டசபை கள் ஆகியவற்றில் புல்லறிவாண்மை மறைந்து மரியாதை மிகும். அச்சபைகள் புத்துயிர்கொண்டு பரிமளிப்பதில் ஐயமில்லை. மேடைத் தமிழ்ப் பேச்சின் உயர்வால் அவை கலைக்கோயில்களாக விளங்கல் வேண்டுமென்பதே தமிழ்மக்களின் குறிக்கோளாதல் வேண்டும்.

---

5. பேச்சுப் பொருத்தம்

பேச்சாளர் உடை

சமயமறிந்து பேசுதலும், பொருளுக்கேற்பப் பேச்சாளர் தகுதி வாய்ந்திருத்தலும் ஈங்குப்பேச்சுப் பொருத்தம் எனப்படுவதாம். இவ்விரு பொருத்தங்களை ஒருங்கே பெறாத பேச்சாளர் மேடைப்பேச் சுக்கு முற்றிலும் அருகராகார். 'ஒரு மகாசபையில் பொருத்தமாகப் பேசுவதிலும், ஒரு குதிரைப்படையை நடத்துவது சுலபமான காரிய' மென பீக்கன்ஸ்பீல்டு பிரபு ஒரு சமயம் இயம்பியுள்ளார். மற்றொரு பெரும் நாவலரான செஸ்டர்பீல்டு பிரபு, ' ஒரு பேச்சாளர் தரிக்கும் உடையினின்றே அவர் பொருத்தமாகப் பேச வல்லவரென முற் கூட்டியே மதிக்கலா 'மெனக் கூறுகின்றார். ' ஒருவர் தரிக்கும் உடையே அவருடைய குணாதிசயங்களைப் பறைசாற்றுவதாகு'மென உவில்லியம் ஷேக்ஸ்பியர் புகன்றுளார். விக்டர் மர்டாக் எனும் பெரியார், ' ஒரு பேச்சாளர் தமது பேச்சுப் பொருளுக்குப் பொருத்தமற் றிருப்பரேல், அஃது ஆழியிற் செல்லும் ஓர் மரக்கலத்தைத் தரைமீது நடத்த ஒருவர் முயல்வதை யொக்குமெ 'னப் புகல்கின்றார். ஆகலின் ஒல்லும்வகை மேற்காட்டிய இரு பொருத்தங்களில் ஒரு பேச்சாளர் நாட்டஞ்செலுத் தல் இன்றியமையாத கடனும்.

உணர்ந்து பேசல்

ஒரு பேச்சாளர் வாய்ப்பு அல்லது சமயத்திற்கேற்றவாறு உணர்ச்சியோடு பேசுதல் மிக வேண்டப்படுவதாம். தேர்வுப் பேச்சுக்கள் விறுவிறுப்பாகவும் புள்ளிவிவரங்களுடனும் வாக்காளர் நம்பிக்கைகொள்ளும் முறையிலும் இருத்தல்வேண்டும். ஈமக்கடனுற்றும் பேச்சுக்களில் துக்க உணர்ச்சியைப் பெருக்குமாறு வார்த்தைகளை ஆய்ந்தெடுத்துப் பேசுதல் முறையாம். வாழ்த்துக் கூறும் பேச்சுக்கள் இனிய உணர்ச்சியோடும் மலர்ந்த முகத்தோடும் புன்னகையோடும் வெளிவருதல் வேண்டும். விவாத சபைகளிலும் சட்டசபைகளிலும் நிகழ்த்தப்பெறும் பேச்சுக்கள் சுருக்கமாகவும், ஓர் உடையின் பல பாகங்கள் ஒன்றேடொன்று மூட்டப்படுவதுபோல் இணைக்கப்பட்டும் சபையோர் கவனத்தை அங்஗னே ஈர்க்கும் வண்ணம் அமைந்திருத்தல்வேண்டும். இவற்றால் ஒரு பேச்சாளர் இடம் காலம் சமயமறிந்து தமது பேச்சுப் பொருளில் ஆழ்தல் முறையென்பது பெறப்படுவதாம்.

தேர்வுப் பேச்சுக்கள்

பொதுவாகத் தேர்வுப் பேச்சுக்கள் வாக்குத்தோரணை பெற்று, உண்மையாகவும் சிக்கலற்றும் பொதுமக்கள் நம்பிக்கைகொள்ளும் முறையிலும் இருத்தல் மிகவும் பயனளிப்பதாம். இத்தகைய கூட்டங்களில் ஒரு பேச்சாளர் வாக்காளருக்குத் தம்மால் சாதிக்க வியலாத பல நன்மைகளைத் தாம் சாதிக்கப் போவதாகக் கூறுதல் புல்லறிவாண்மையாம். அப்படிக் கூறுவது வெறுங் கூற்றெனவும், அவ்வித ஆற்றல் அப்பேச்சாளருக்கு இல்லையெனவும் மக்கள் மதிப்பரேல், அப்பேச்சாளர் வெற்றி பெறுவதில்லையென்பது உறுதியாம். சென்னை நகரில் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்களில் தமது கவனம் முதற்கண் செலுத்தப்படுமென, காலஞ்சென்ற மேயர் எஸ். சத்தியமூர்த்தியார் நகர மக்களுக்கு உறுதி கூறினர். அவர் அப்பதவி வகித்த ஓராண்டுக்குள் அவ்வாறே பிரமாண்டமான *பூண்டி நீர்த்தேக்கத்திற்கான ஆக்கந்தேடி அழியாப் புகழுடம்பு பெற்றார். எனவே, சாதிக்கமுடிந்த ஒன்றை ஒருவர் புகல்தலும், உறுதிகூறிய ஒன்றைச் சாதித்தலும், அவைகட்கான ஆற்றல் ஊக்கம்பெற முயல்தலும் இன்றியமையாதன என்பது பெறப்படும்.

அனுதாபப் பேச்சு

இந்நாள் ஈமக்கடனுற்றும் பேச்சுக்களும் மறைந்தோர்க்கிரங்கும் அனுதாபப் பேச்சுக்களும் நமது நாட்டில் யாண்டும் கைக்கொள்ளப்படு

* இன்று சத்தியமூர்த்தி சாகரம் என அழைக்கப்படுகிறது.

வணவாம். பண்டைய தமிழ்நாட்டின்கண் இத்தகைய தனிச் சொற்பெருக்குகள் நிகழாவிடினும் மறைந்தோர்க்கெனக் கையறுநிலைக் கவிகள் மிக விரிவாக இயற்றப்பட்டும் விரிவுரைகள் செய்யப்பட்டும் வந்தன. இந்நாளும் இன்னோரன்ன இரங்கற்பாக்கள் வழக்கில் உண்டு. இப்பாக்களில் மறைந்தோரை மிதமிஞ்சிப் புகழ்தலும், அன்னார் குணநிசயங்களை மிகைபடப் பொருத்தமின்றிக் கூறலும் மலிந்து காணப்படும்.

எனினும் அவ்விதப் பேச்சுக்களில் ஒருவர் மனநெகிழ்ச்சி இயற்கையாகவும் வெளிப்படையாகவும் உண்மையாகவும் இருத்தல் மிக வேண்டப்படுவதாம். ஈண்டைக்கு ஓர் உதாரணம் மிகப் பொருந்தும். சென்னையில் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் வதிந்த காலஞ்சென்ற திருவெவ்வளூர் இராமசுவாமிச் செட்டியார் அந்நாளில் ஒரு நூறு தமிழ்க் கலம்பகங்கள் கண்ட பெரியார். அவரது தனயர் காலஞ்சென்ற சலசலோசனம் என்பார் தமிழ்ப்புலமை வாய்ந்த ஆங்கில விற்பன்னர். அவருடைய அண்ணியார் மறைவுற்றகாலை ஈமக்கடனாற்றும் பேச்சொன்றை நிகழ்த்தினார். அப்பேச்சின் உருக்கமான முடிவுரை இதுவாம்: "என்பால் பேரன்பு கொண்ட அம்மையே! உம்மை அண்ணியென்று எண்ணுவதா? அன்றி அன்னை யென்று எண்ணுவதா? அல்லது முற்பிறவிகளில் எம்மை ஈன்றெடுத்த அன்னையர்களையெல்லாம் வடித்தோன்றுனவரென உம்மைப் போற்றுவதா? பெண்ணார் அமுதமே! பெரும் புகழ்கொண்ட எங்கள் பாக்கியமே! நீவிர் இந்நாள் விண்ணவர் புடைசூழ அவ்வுலகுக்கு விருந்தாகச் சென்றீரோ? அன்றி ஆங்கே வதிய எண்ணம்தான் கொண்டீரோ? அஃதிருக்கட்டும். அக்கூற்றுவன் தங்களை எவ்வாறு மனந்துணிந்து எங்களைப் பிரித்து அழைத்துச் சென்றனன்? தங்கள் பிரிவை நினைந்து நினைந்துருகும் என் கனவிலாகிலும் வந்து அதை உணர்த்துவீர்களா?" இந்நூலாசிரியரின் சொந்த அனுபவம் ஒன்றை ஈண்டுக் கூறுதும். காலஞ்சென்ற திரு. என். அய்யாக்கண்ணு ஆச்சாரியார் என்பார் அரசியல் கைத்தொழில்இலாகாவில் உயர் பதவி வகித்த யாந்திரீகர் (இஞ்சினீயர்). அவர் இந்நூலாசிரியரின் இன்னுயிர்த் தோழர். அவர் மறைவுற்ற காலை இவ்வாசிரியர் அனுதாபப் பேச்சொன்றை இடுகாட்டில் கண்ணீர் கம்பலையுடன் நிகழ்த்தினர். அப்பேச்சின் முடிவுரை இதுவாம். "எனது இணைபிரியா நண்பரே! இன்று என்னைப் பிரிந்து விண்ணுலகுக்கு ஏகினீர். உமது பிரிவை என்னால் சகிப்பதற்கில்லை. எனக்கு இவ்வுலகம் இருள்மயமாக இருக்கிறது. இந்த இடம் இனி எனக்குப் பொருந்தாது. உங்கள் வழக்கம்போல் எனது வரவை எதிர்நோக்கிச் சுவர்க்கவாயிலினும்

காத்துக்கொண்டிரும்." இத்தகைய உருக்கமான பேச்சு உயர்தரப் பேச்சாகும் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற ஈமச் சொற்பெருக்குகள் மேலைநாடுகளில் உண்மையைத் தழுவித் திறம்பட நிகழ்த்தப் பெறுவனவாம். ஆயினும் அவைகளில் தமிழ் மொழியின் இனிமையைக் காண்டல் அரிது. அவை கேட்போர் உள்ளத்தை உருக்குவனவும் அல்ல. ஆயினும் பாராளுமன்ற மகாசபையில் பண்டே நிகழ்ந்த இத்தகைய சொற்பெருக்குகள் நம் மக்கட்குத் தக்க எடுத்துக் காட்டுக்களாதல் வேண்டும். அதிகம் கூறுவானேன் ? இப்புத்தகத்தின் மற்றொரு பகுதியில் காட்டியுள்ள மார்க் ஆண்டனி எனும் நாவலரின் ஜூலியஸ் சீஸர் பற்றிய கையறு நிலைச் சொற்பெருக்கு உலகுக்கே ஒரு மேதக்க எடுத்துக்காட்டாக இந்நாளும் விளங்குவதன் காரணம் ஊன்றி நோக்கற்குரித்தாம். சீஸரைக் கொலை செய்த புரூட்டஸ் எனும் நாவலர் அதன் காரணத்தை விளக்கி முதலில் பேசினர். ஆண்டனியை அவருக்குப்பின் பேச அனுமதித்தார். புரூட்டஸ் ஆண்டு நாவன்மையுடன் பேசினர். ஆயினும் அரசியல் மேடைகட்கே அப்பேச்சு உகந்ததாகும். பொதுமக்களின் மனோபாவத்தையும் உணர்ச்சியையும் அவர் உணர்ந்து பேசவில்லை. இதனல் அவருடைய சொற்போக்கு நயமும் கல்வித்திறனும் பயன்பெறவில்லை. தர்க்கரீதி மிகுந்திருப்பினும், எவ்வித உள்ளக் கிளர்ச்சியும் அப்பேச்சில் காணப்படவில்லை. வெறும் வாசகத் தொடர்கள் மிகுந்து, சிக்கல்கொண்டு இனிமையற்று அவர் பேச்சு வெளிவருவதாயிற்று. ஆயினும் அவர் பேச்சில் கண்ணியம் பெருந்தகைமை கலந்திருந்தன. அது சுருக்கமும், விளக்கமும், நிதானமும் நிறைந்தது. மார்க் ஆண்டனியோ ஒரு சுவை மலிந்த நாவலராவார். அவர் பேச்சு இனிய பாடல்போல் நயம்பட வெளிவந்தது ; உணர்ச்சி வேகத்தை யுண்டாக்கியது ; கனன்று நாவிட்டெழுந்தது ; கேட்போரைப் பலபட்ட சுவைகளினுச்சியில் கொண்டு சேர்த்தது. ஆண்டனி எல்லா மக்களையும் தமது பேச்சால் ஆட்டி வைக்கும் இயல்புடையரானர். அவர் பேச்சு வார்த்தைச் சித்திரங்களாகும். பொருத்தமானதாகவும் மிளிர்ந்தது. அது கேட்போரைச் சோகப் பெரும் புயலில் ஆழ்த்தி, மக்களின் மனதைக் காந்தமென ஈர்க்கும் மந்திர சக்தியாயிற்று. ஆகலின் ஆண்டனியின் பேச்சுக்குமுன் புரூட்டஸ் பேச்சு எங்கேயோ மறைந்து விட்டது. ஆண்டனியின் பேச்சைக் கேட்டபின், புரூட்டஸ் வஞ்சகமாக சீஸரைக் கொலைபுரிந்தாரென மக்கள் முடிவுகட்டினர். ஆண்டனி தமது பேச்சின் இடையிடையே புரூட்டஸையும், காசியஸையும்

கண்ணியவான்களெனச் சிலேடையாகக் கூறியது மக்கள் மனதில் விபரீதமாக நன்கு பதிந்தது. எனவே, அவர் பேச்சு மக்களைச்சோகத்திலாழ்த்தி, எதிரிகளைத் தாக்காது தாக்கி, வீராவேசத்தைப் புகுத்தி, கலகமெழுப்பி, பழிக்குப்பழி வாங்கி, நாட்டுக்கு நாசத்தையும் விளைவித்தது எனச் சரித்திரம் கூறும். ஆகலின் ஈழக்கடலுற்றும் பேச்சுக்கள், உண்மையைத் தழுவிப் பொருத்தமாகவும் திறம்படவும் இருத்தல் நன்று.

காலப் பெருமை

பொதுமேடைகளிலும் சங்கங்களிலும் சட்டசபைகளிலும் பேசப்படும் பேச்சுக்கள் பல திறத்தனவாம். காலம் மதிப்புக் கடந்ததென்பதைக் கருவில் தரித்து ஆங்குப் பேசுதலே ஒரு நல்ல பேச்சாளரின் இலக்கணமாம். இந்நாள் அரசியல் சட்டசபைகளிலும் நீண்ட பேச்சும் விதண்டாவாதங்களும் நிகழ்வதைக் காண்போம். சபையை ஒழுங்கு முறையில் நடத்தக் கடமைப்பட்ட அவைத் தலைவர்பாலும், அமைச்சர்கள் மாட்டும் மரியாதை வரம்புக்கு மீறிய கண்ணியமற்ற ஆணவப் பேச்சுக்கள் வெளிவருவதைக் காண்போம். பேச்சுப் பொருளையும் விவாதப் போக்கையும் விடுத்துச் சொந்தக் கருத்துக்களையும், பகைமையான பழைய விவகாரங்களையும் விரிவாகப் பேச முனைவோர் நமது சட்டசபைகளிலும் நகராண்மைக் கழகங்களிலும் மிகப் பலர் உண்டு. பாராளுமன்றப் பெருஞ் சபையின்கண்ணும் வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற நாவலர்களும் அசூயைகொண்டு வீண் விதண்டாவாதங்களில் இறங்கி இந்நாள் முழங்குகின்றனர். இவற்றால் ஒருவர் உண்மை யோக்கியதையும், கண்ணியமும் மக்களால் குறைவாகக் கருதப்படுவதியல்பாம். அண்மையில் சென்னைச் சட்டசபையில் பழைய பிரதமர் உயர்திரு. டி. பிரகாசம் அவர்கள் நிகழ்த்திய நான்கரை மணிநேரப் பேச்சு பயனற்ற வெறும்பேச்சு என்பது ஒருபுறமிருக்க, அது சாரமற்றதாகவும் இணைக்கப்படாததாகவும் பொருத்தமற்றதாகவும் மக்களால் யாண்டும் கருதப்பட்டது. கல்வி கேள்வியும் உலகானுபவமும் முதிர்ந்த வயதும்கொண்ட இப்பெரியார்மீது அண்மையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று பெரும்பாலான அங்கத்தினரால் கொண்டுவரப்பட்ட காலை, அவர்கள் நம்பிக்கையை மீண்டும் பெறும் வழியைத் தேடுவதை விடுத்து விதண்டாவாதமான முறையை இவர் மேற்கொண்டதால் தமது பதவியை இழந்தார். ஆயினும் இதுபோன்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் தமிழ்நாடு காங்கரஸ் தலைவர் உயர்திரு.

கே. காமராஜ நாடார்மீது கொண்டு வரப்பட்டகாலை, அவர் அங்கத்தினர்களின் உணர்ச்சியை நன்கறிந்து மனவெழுச்சி தோன்றப் பொருத்தமாகப் பேசி அதே தீர்மானத்தை நம்பிக்கைத் தீர்மானமாக மாற்றித் தமது பதவியைக் காப்பாற்றிக்கொண்ட முறை யாவராலும் பின்பற்றத் தக்கதொன்றாம். எனவே, ஒரு பேச்சாளர் இடம், காலம், சமயம் அறிந்து பொருத்தமாகப் பேசுதலே வெற்றி காணும் உபாயமெனத் தெளிவுறுத்தற்கு மேலே காட்டிய உதாரணங்களே ஈங்குச் சாலும்.

தகுதியுடைமை

இனி, பேச்சாளரின் தகுதியைக் குறித்தும் சிறிது கூறிமுடித்தல் முறையாம். ஒரு பேச்சாளர் பேச்சுப் பொருளுக்கு ஏற்ற பொருத்தம் பெற்றிருத்தல் இன்றியமையாததாம். குடியர் ஒருவர், கள்ளருந்துதலை எள்ளிப் பொதுமேடைகளில் பேசத்துணிதல் அடாது. புலால் உண்போர் கொல்லாமையைக் குறித்துப் பேசுதல் மனச்சான்றற்ற செயலாம். நாம் வழிபடும் கடவுளரின் பெயர்களை வகித்துக் கொண்டும், புறக்கோலங்களைத் தரித்துக் கொண்டும் தெய்வ வழிபாட்டை இழிவுபடுத்திப் பேசுதல் புல்லறிவாண்மையாகும். காமப் பித்தர் ஒருவர் மனைமாட்சி பற்றியும் கற்பின் மேன்மை குறித்தும் பொதுமேடைகளில் பேச முற்படுவாராயின் மக்கள் சபையைவிட்டகலுதல் உறுதியாம். காவியுடை பூண்ட துறவி ஒருவர் இல்லறவாழ்க்கை குறித்துச் சொல்லத் துணிதல் மிகப் பொருத்தமற்ற பேச்சாம். நாப்பிளக்கப் பொய்யுரைத்து நாள்தோறும் பொருள் தேடும் ஒருவர் சத்திய நெறியை வற்புறுத்திப் பேசத் துணிதலும் பேச ஏவப்படுதலும் தகாத காரியங்களாம்.

ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுதல் ஈண்டைக்கு மிகையன்று. சென்னையில் சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன் பன்னிரண்டு வயதுடைய ஒரு இளம் பாகவதர் தோன்றியிருந்தார். அவர் நிகழ்த்திய சீதாகல்யாணக் காதையில், இராமர் சீதையைக் கண்டு மோகப்பட்டு விரகதாபங்கொண்ட ஒரு சிறந்த பாட்டைப் பல சங்கதிளுடன் பாடி ஆடினார். மோகம் இற்றென அறியாச் சிறுவரின் அச்சிறந்த பாட்டு சபையோரால் வெறுக்கப்பட்டது ; மிகப் பொருத்தமற்றதாகக் கருதப் பட்டுக் கைதட்டலும் நிகழாது போயிற்று! ஆகலின் ஒல்லும்வகை ஒரு பேச்சாளர் பேச்சுப் பொருளுக்கேற்ற தகுதி அல்லது பொருத்தம் பலவும் பெற்றிருத்தல் வேண்டுமென்பது வலியுறுத்திப் பெறப்படுவதாம். சில பொதுமேடைகளில் முதியோருக்கு அறிவுறுத்த இளைஞர்

களான மாணவர்களைக் கடவுள் வழிபாடு போன்ற பெரிய செய்திகளைக் குறித்துப் பேசச் செய்வதுண்டு. பெண்ணீர்மைக்கு விலக்கான பல செய்திகளை இளம் பெண்களைக் கொண்டு பேசச் செய்தலுமுண்டு. இவை பொருத்தமற்ற முறைகளாம்.

---

6. கற்றவை கைகொடுத்தல்

நூலறிவு

ஒரு சபையின்கண் தாம் கற்ற நுண்ணிய நூற்பொருள்கள் ஒரு பேச்சாளருக்குச் சமயத்திற்குதவுதலே ஈங்குக் கற்றவை கைகொடுத்தல் எனப்படுவதாம். மறதியினுற் கொள்ளப்படாமல் மணற்கேணியின் ஊற்றெனக் கருத்துக்கள் ஒருவர் பேச்சிலும், எழுத்திலும் பெருக்கெடுத்து முன்னிற்பதே அவர் கற்றதின் பயனுகும். கற்கவேண்டிய நூற்களைக் கற்று, தக்கன தகாதன இன்னவென்றெக்க வுன்னியுணரும் உணர்வு கற்றோர்க்கே உரித்தாம். ஆகலான், அன்னோர் ஊன்றிக் கற்றவை அவர்க்கு எந்நாளும், யாண்டும் கைகொடுத்தல் உறுதியாம்.

வேற்றுமை எதில்?

ஒரு மேடைப்பேச்சு, எழுத்து ஆகிய இரண்டினுள், ஒருவர் எழுதும் நூற்களைப் புத்தகங்களின் உதவிகொண்டும், சந்தேக விபரீதங்களைச் சாவதானமாகப் பிறர்மூலம் போக்கிக்கொண்டும், சொந்த நினைவுத்திறன் கொண்டும் பன்முறை எழுதியும், கழித்தும், சேர்த்தும் நல்ல முறையில் ஓரோவழி முடிக்க வியலும். ஆனல், மேடைப்பேச்சில் ஒருவர்க்குப் புத்தகங்களின் உதவியும், பிறர் அருகிருந்து உணர்த்தலும் முற்றும் இயலாதனவாம். ஆகலின், ஒரு மேடைப்பேச்சாளர் தாம் கற்றுணர்ந்தவற்றைக் கருவில் பதித்துவைத்துச் சமயத்திற்கேற்றவாறு தயக்கமின்றி உபயோகிக்கப் பழகியிருத்தல் இன்றியமையாதது.

பெரியார் கூற்றுக்கள்

நமது மக்கள், எண்ணிறந்த சுவடிகளை மேலெழுந்த வாரியாகப் படிப்பதிலும், பிறர் மெச்சுவதற்கெனத் தத்தம் இல்லங்களில் பலவகைப் புத்தகங்களை அடுக்கி வைத்திருப்பதிலும், அறிவை உண்மையிலேயே பெருக்கத்தக்க இரண்டொரு நல்ல புத்தகங்களையாதல் ஐயந்திரிபற வாசித்துணர்தலே நலந் தருவதாம். உலகில் ஆசிரியர்களனைவரும்

மானிடரேயாதலால், அவர்கள் ஓரோவழி சோர்வு, உறக்கம், கோபம் ஆகிய குற்றங்கள்பால்பட்டவராவர். ஒலிவர் வெண்டால் ஹோம்ஸ். எனும் பேராசிரியர், " புத்தகங்களுக்குச் சோர்வோ, உறக்கமோ, வெகுளியோ இல்லை ; பிரம்பின் உதவிகொண்டு போதிக்கும் அவசியம் அவைகளுக்கில்லை ; ஒருவர் தேடும் பொருளைக் கொடுத்தற்கும், அறிவு புகட்டற்கும் அவை அல்லும் பகலும் கண்ணுங்கருத்துமாய்க் காத்துக் கொண்டிருக்கும் இன்னுயிர்த் தோழர்கள் " எனப் புத்தகங்களின் சிறப்பைக் குறித்துப் புகன்றுள்ளார். அவர் கூறிய வழிபற்றி விவிலிய நூலைப் படித்துப் படித்து ஆங்கிலப் பேராசிரியரானவரும், கம்பராமாயணத்தில் தோய்ந்து தோய்ந்து புலவரானவரும், திருக்குறளை வாழ்நாள் முழுதும் வாசித்து வாசித்துப் பயன் பெற்றவரும் இந்நாட்டில் நாளும் வதியக் காண்போம். தாம் படித்த பல நூற்களுள் உயர்திரு திரு. வி. கலியாணசுந்தர முதலியார் புறநானூறு, சிலப்பதிகாரம், திருவாசகம், கம்பராமாயணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவைகளே, தமது மனதிற்கிசைந்தவையெனவும் பன்முறை படித்தவையெனவும் கூறினர். அமெரிக்காவின் பதினாறுவது ஐக்கியபதியான ஆபிரகாம் லிங்கனை இனி எடுத்துக்கொள்வோம். வறுமையின் காரணமாக அவர் எல்லாப் பாடசாலையிலும் பன்னிரண்டு மாதங்களுக்குமேல் தம் சிறு வயதில் பயின்றவர் அல்லர். பல புத்தகங்களையும் படித்தறியார். விவிலிய நூல், ஈசாப்ஸ் கட்டுக்கதைகள், ராபின்சன் குரூஸோ, பில்கிரிம்ஸ் புரோகிரஸ் ஆகியவைகளே அவரது ஆயுள்காலத்தில் பன்முறை படித்துச் சுவைத்த புத்தகங்களாம். அவர் அப்புத்தகங்களைப் பொழுது போக்குக்காகப் படித்தவரல்லர். தமது பிற்கால வாழ்க்கைக்கு இன்றியமையாத பேரறிவைப் பெருக்கிக்கொள்வதற்கெனவே அவற்றைக் கருத்தூன்றி ஓதியுணர்ந்தார். ஓரமயம் அவர் இளம்பிராயத்தே ஒரு வைக்கோற்போரின் உச்சியில் இவர்ந்திருந்து ஏதோ ஒரு புத்தகத்தில் ஆழ்ந்திருந்தார். அதைக் கண்ட ஒரு முதியார், " நீ வாசிப்பது யாது?" எனக் கடாவினர். " நான் வாசிக்கவில்லை, கற்றுணர்கிறேன் " என லிங்கன் அவரது வினாவைத் திருத்தி விடையளித்தார் என்பது சரித்திரம். மகாகனம் கிளாட்ஸ்டன் கூறுவது இதுவாம். " என் வாழ்நாள் முழுதும் ஒரு மாணவனாகவே கற்றுவருகிறேன். இன்னும் கற்பதிலேயே கருத்தூன்றி நிற்கிறேன். நீதிமுறையைக் குறித்து எத்துணைக் கற்கவேண்டுமோ அத்துணை அளவு கற்றுத் தெளிய ஆசிக்கிறேன். பொதுவாக, உலகில் மக்கள் மாறுதல்களை விரும்புவதில்லை. அவசியமானால் சிலவற்றை மாற்றலாம். கெட்ட காரியங்களை நல்லன

வாக்கலாம். நல்ல காரியங்களை மேலும் நல்லனவாக்குவதில் எனக்கு விருப்பம் அதிகமுண்டு. எனக்குப் பழைமையில் மிக நம்பிக்கையுண்டு. தாராள மனப்பான்மையைப் பெற என் இளம்பிராயந்தொட்டே முயல்கின்றேன். சுயேச்சையில் எனக்குப் பெரும் நம்பிக்கையுண்டு. என்னைப் பொறுத்தவரை இன்னும் உலகப்போக்கைக் கற்கும் — கவலையுடன் கற்கும் மாணவனாகவே உள்ளேன். இனியும் அவ்வாறே இருப்பேன்." இப்பெரியார் கருத்து, பொன்தகட்டில் பொறித்தற்குரியதாகுமன்றோ? ஒருவர் வயதுக்கும் அறிவு வளர்ச்சி அடைதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. எழுபது வயதுடைய முதியார் ஒருவர் கூறுவதிதுவாம். "ஒருவர் கற்றுத் தேர்தற்குப் புத்தகங்களே போதியனவல்ல; ஏதுமறியா மக்களிடமிருந்தும் நாம் பலவற்றைக் கற்றுத்தெளியலாம். ஒரு இளஞ் சக்கிலிக்கு ஒருநாள் ஒரு சிறிய வேலை தந்தேன். தான் செய்யும் வேலையை முற்கூட்டித் தெளிவுபடுத்தியபின்; 'என் கடமை பெரிது; வேலையை நன்கு முடிப்பேன்; கூலி பெரிதல்ல' என்றான். அவன் தனது கடமையை உணர்ந்ததும் அதனை உணர்த்தியதும் எனக்கு இன்றும் ஒரு பெரிய படிப்பினையாயிற்று." ஆகலின் பொழுதுபோக்குக்காகவும், பிறர் நன்கு மதித்தற் பொருட்டும் ஒருவர் ஒரு நூலை வாசிப்பதுபோல் கையில் கொண்டிருப்பதிலும், விரைவாக வாசிப்பதிலும் அதனைக் கடமையுணர்ந்து கற்குமாறு கற்றலே மேலாம் என்பது நன்கு புலப்படும். அவ்வாறு ஊன்றிக் கசடறக் கற்பவை ஒரு பேச்சாளருக்கு, சமயத்தில் கைகொடுத்து உதவுவதில் ஏதேனும் ஐயமுண்டோ?

நினைவாற்றல்

கருத்தூன்றிக் கற்றபொருள் ஒருவருக்குக் கைகொடுத்தற்கு இரு கண்களும் செவிகளும் மிக்க பயனளிப்பனவாம். வாசித்தும் கேட்டும் அறிந்தவற்றை அவைகளின் உதவியின்றிக் கருவில் வைத்திருத்தற்கியலாது. கருவில் ஒன்றைப் பதித்து வைத்திருத்தற்கு ஒருவர்க்கு மூளைபலம் சிறக்க விருத்தலும், அம்மூளையை மனம்போல் இயக்குவிக்கும் ஆற்றல் பெற்றிருத்தலும் இன்றியமையாதனவாம். மூளை பலமில்லையேல், ஒருவர் கற்ற நூலறிவு சமயத்திற்குதவாதென்பது உறுதி. வாய்வேண்டாமலே கைகள் விரைந்து உணவைக் கொடுத்துதவுதல் போலவும், உடை நழுவுங்கால் கைகள் சரேலென வலிந்து தாங்குதல் போலவும் ஒருவர் பேச்சினிடையே, நூலறிவால் பெற்ற கருத்துக்களும், மேற்கோள்களும் பளிச்சுப் பளிச்சென மின்னி வந்து ஒளிரல் வேண்டுமென்பது வலியுறுத்திப் பெறப்படும். சிலவேளை கற்றறிந்தோர்

மாட்டும் வாதத்தினிடையே எழும் மூர்க்கப் பேச்சுக்கள் நினைவாற்ற லுடன் வெளிவருதல் கடினம். கற்ற நூலறிவும் துணைநிற்றல் அருமை யாம். ஈண்டைக்கோர் விளக்கம் மிகையன்று. காலஞ்சென்ற உயர்திரு. பி. வி. மாணிக்க நாயக்கர் அரசியல் உயர்பதவி வகித்த ஒரு யாந்தி ரீகர் (இஞ்சினீயர்). அவர் ஒரு சிறந்த தமிழ் வித்தகர். தமிழ்எழுத்துக் களின் ஒலி வரிவடிவு இயல்புகளை எண்ணிறந்த சொற்பெருக்கு களாலும் நூல்வடிவிலும் தக்க ஆராய்ச்சியால் விளக்கித் தமிழ் மொழிக் குத் தேற்றத்தை உண்டாக்கியவர். வாதத்திலும் பிடிவாதத்திலும் தம் கோள் நாட்டுவதிலும் இணையற்றவர். 1924-ம் ஆண்டு அரசியலா ரால் நிறுவப்பெற்ற "தமிழ்க் கலைச்சொல் ஆராய்ச்சிக் குழு"வில் அங்கத்தினராக இருந்தார். ஆண்டும் பேச்சுப் பொருளை விடுத்து வாதமே நிகழ்த்துவார். தக்க தமிழ்ச் சொற்களை—தனித் தமிழ்ச் சொற்களை—தேர்ந்தெடுத்தலைக் குறித்து அச்சபையில் எழுந்த ஒரு விவாதம் நூதனமல்ல என்றும் மிகப் பழைமையானதென்றும் அது குறித்துத் தாம் பலவாண்டுகளுக்கு முன்னரே விரிவாக எழுதியிருப்ப தாகவும் அஃது அச்சமயம் நினைவுக்கு வரவில்லையென்றும் கூறினர். மற்றொரு அங்கத்தினரான காலஞ் சென்ற மகா மகோபாத்தியாய டாக்டர் குப்புசாமி சாஸ்திரியார் அவ்விவாதத்தில் குறுக்கிட்டு, உயர் திரு. நாயக்கர் உலகுக்கு உபயோகப் படாதவாறு ஏட்டில் எழுதி மறக் கப்பட்டதை அச்சியற்றி ஒவ்வொருவர் நினைவிலும் இருக்குமாறு செய்வதே இக்கழகம் மேற்கொண்டுள்ள வேலை என நினைக்கிறுர் என்று இடித்துக்காட்டி விவாதத்தை முடித்தார். இவ்வாறு அவ்விரண்டு அணுக் குண்டுகளும் அச்சபையில் அடிக்கடி தாக்கிக் கொள்ளல் சாதாரண வழக்கு. ஒன்று வெடிக்கும்; மற்றொன்று வெடிப்பதில்லை. உயர்திரு. சாஸ்திரியார் பதினன்கு மொழிகளில் மிகப் பாண்டித்தியம் பெற்றவர்; மணிக் கணக்கில் நினைவோடு பேசவல்ல ஆற்றல் பெற்றவராவார். இதன் படிப்பினையை வாசகர்களே நன்கறிவர்.

மூளை பலம்

ஒருவர் நினைவாற்றலைப் பெருக்கும் உபாயங்கள் முந்தியதோர் பகுதியில் கூறப்பெற்றுள்ளன. ஆயினும் நினைவாற்றலுக்கு அடிப்படை யான மூளையின் அமைப்பைக் குறித்தும் அதன் இயக்கத்தைக் குறித்தும் இவண் ஆராய்தல் முறையாம். ஒருவர் மூளையின் பெருக்கத்திற்கும், எடை பேதத்திற்கும் ஏற்றவாறு அறிவுறுத்திறனை அறுதியிடலா மெனச் சில நிபுணர் கூறுவர். ஒருவர் தலையின் பருமனுக்கேற்றவாறு

அறிவுப்பெருக்கமும், நினைவுத்திறனும் உண்டெனக் கூறுவாருமுண்டு. நமது தமிழ்நாட்டில் 'மாங்காய்த்தலையர், தேங்காய்த்தலையர்' என இழித்து கூறப்படுதலை யாண்டும் கேட்போம். சில அயல்நாட்டுப் பேரறிஞர்களின் மூளையை இறந்தபின் எடையிட்டுச் சோதித்துள்ளனரெனப் புனைந்து கூறுவோரும் உண்டு. ஒருவர் உடலின்கண்ணுள்ள இதர உறுப்புகளை உறுதிப்படுத்தல்போல், மூளையையும் சில சாதனங்களால் பெருக்கி உறுதிப்படுத்தலாமென்பது ஆன்றோரின் அநுபவமாம். குழவிப் பருவத்தேயுள்ள மூளைபலம் பற்பல பிராயங்களில் பல படித்தரமாகப் பெருக்கமுறுதலும், வயோதிகப் பருவத்தே மூளை பலம் அருகலும் உலகம் ஒப்பமுடிந்த உண்மைகளாம். ஒருவருடைய மூளை மிருதுவான தசைப்பொருளால் ஆக்கப்பெற்றது. அது இரு கூறுகப் பிரிந்து வல இடபாரிசமாகப் படிந்து மண்டையோட்டால் காப்பாற்றப்படுவதாம். தேனடையை யொத்து அவற்றில் புழுப்போன்று வளைந்த எண்ணிறந்த சிறு பள்ளங்கள் நிறைந்து, மயிரிழையினும் நுண்ணிய இரத்தக்குழல்களால் அவை பிணைக்கப்பட்டிருப்பனவாம். ஒவ்வோர் குழிகட்கும் தனிப்பட்ட நுண்ணிய நரம்புகள் உண்டு. அந்நரம்புகளனைத்தும், மத்திய நரம்பு மண்டலத்துடன் இணைக்கப்பெற்றவையாகும். மூளையின் மத்திய நரம்பு மண்டலத்திற்கும் கண், செவி, மூக்கு ஆகிய உறுப்புகளின் நரம்புகட்கும் மிக நெருங்கிய பிணைப்புண்டு. கண்ணால் பார்ப்பனவற்றையும், செவியால் கேட்பனவற்றையும், மெய்யால் தீண்டுவனவற்றையும் அந்நரம்புகள், மூளைக்குக் கொண்டு சேர்ப்பனவாம். அவைகளின் முக்கியத்திற்கேற்றவாறு, தம் வயத்தேயுள்ள சிறு பள்ளங்களாகிய பேழைகட்குள் பதித்துப் பதனப்படுத்திக்கொள்ளல் மூளையின் வேலையாம். எறும்பு கடித்தல், நெருப்புச் சுடுதல் போன்ற அற்ப உணர்ச்சிகளும் நரம்புகளால் மூளைக்கு அங்ஙனே செலுத்தப்படினும், அவற்றை மூளை ஊன்றிப் பதித்து வைத்துக்கொள்ளமாட்டாது, எனவே, மானிட மூளைக்கு இயற்கையிலேயே, தக்கன தகாதன இன்னவெனப் பகுத்தறியும் சக்தி அமைந்திருத்தல் தெற்றென விளங்கும்.

மானிட உறுப்புக்கள் யாவற்றினும் மூளை மிக முக்கியம் பெற்றதாகும். மூளைக் கோளாறு அல்லது குழப்பமுடையோரைப் பித்தரெனச் சாதாரணமாகக் கூறுவோம். இத்தகையோருக்கு மூளை பலமும் மனோ பலமும் குறைந்து அவை இயங்காதிருத்தல் கண்கூடு. மிருதுவான தசையாலும், நுண்ணிய நரம்புகளாலும் ஆக்கப்பட்டிருக்கும் மூளைக்கு அளவறிந்து வேலை கொடுத்தல் வேண்டும். உபயோகமற்ற தட்டுமுட்டுகளை அடைத்துவைக்கும் கிட்டங்கியைப்போல் ஒருவர் மூளை

யில் சுமக்கமுடியாதவற்றைத் திணித்துவைத்தல் தவறும். பல மணி நேரம் எல்லோருடைய மூளையும், ஒரே வேலையைத் தொடர்ந்து செய்வதற்கியலாது. ஒருவருடைய மூளை இவ்வாறு களைப்படையும் போது, வேறு காரியங்களில் மனதைச் செலுத்தி மூளைக்கு ஓய்வு கொடுத்தல் மிக வேண்டப்படுவதாம். இயன்ற அளவு அக்காரியத்தினின்று மனதைப் பிரித்தல் நன்று. இதற்கு வேலைமாற்றம் பெரிதும் துணை செய்யும். குளிர்ந்த நீரிடை மூழ்கலும், பூங்காவில் உலாவுதலும், கடற்காற்றைப் பருகுதலும், இன்னிசையில் ஆழ்தலும் மூளைக்கு ஓய்வு தரும் சீரிய வழிகளாம்.

பழக்கமே அடிப்படை

நீடிய பழக்கத்தால் ஒருவர் மூளையை முற்றிலும் தம் வயப்படுத்தற்கியலும் என்பது நமது நாட்டறிஞர் கண்ட நெறியாம். அத்தகைய மூளை வேண்டும்போது வேண்டுமளவு இயங்கவும், வேண்டாதபோது பிறங்காதிருக்கவும் கூடும். இப்பழக்க மிகுதியினாலே பிரஞ்சு சக்கரவர்த்தியான போனபார்டு நெப்போலியன் என்பார் மூளையைத் தம் வயப்படுத்தி அதனை மனம்போல் ஆட்டுவித்தாரெனச் சரித்திரம் கூறும். ஒருவர் மூளையை மெழுகாலமைந்த இசைத்தட்டுக்கு உவமிக்கலாம். இசைத்தட்டில் பிடிக்கப்பட்ட பாட்டு எவ்வாறு ஊன்றிப்பதிந்து இயக்குவிக்கும் போதெல்லாம் தங்கு தடையின்றி இயங்குகின்றதோ அது போல், ஒருவர் மூளையில் பதித்துவைத்தக் கற்ற நூலறிவு, வேண்டும் போது — நினைந்தபோது — வெளிவரும் இயல்புடையதா யிருத்தல் வேண்டும். இதனாலன்றோ லாரிமர் என்னும் மேற்றிசை நாவலர், "ஒரு வண்டிப் பாரங்கொண்ட செய்திகளையும், கருத்துக்களையும் உதிரியாக மூளையில் அடைத்துவைத் திருப்பதிலும், அவற்றைத் தனித்தனியே பொறுக்கி, ஒழுங்குபடுத்திப் பெட்டியில் அடுக்கிவைப்பதுபோல் மூளையில் பதனப்படுத்தி வைத்திருந்தால், அவை அவசரத்திற்கும் தேவைக்கும் உதவும்" எனப் புகன்றுளார். நமது தமிழ்ப் பெரியார் உயர்திரு திரு. வி. கலியாணசுந்தரனார், "மூளை நன்னிலையிலிருத்தல்வேண்டும். அப்பொழுதே மனமும் நன்னிலையி லிருக்கும். மூளைக்கும் மனதுக்கும் உள்ள தொடர்பு பெரிது. அத்தகைய மூளையைக் காத்துவர வேண்டுவது மக்கள் கடமை. கஞ்சா, அபினி, கள், சாராயம் முதலியனவற்றின் மயக்கம் உறாதவாறும், வெம்மை, பித்து, நச்சுநீர் முதலியன தேங்காதவாறும், தீயவொழுக்கம் முதலியவாற்றான் நரம்புத்தளர்ச்சி உறாதவாறும், வேறு எவ்வகையிலும் கேடு புகாத

வாறும் மூளை காக்கப்படல்வேண்டும். மூளையின் நரம்புத் தொடர்கள் பழுதுற்றபின் பொறி என் செய்யும்? புலன் என் செய்யும்? பிற உறுப்புக்கள் என் செய்யும்? எக்காரணம் பற்றியும் மூளையில் கோளாறு உறுதலாகாது. மூளைக்கோளாறு மனக்கோளாறாகும்.' ஆகவே, மூளை ஒழுங்கும், நரம்பு ஒழுங்கும், மன ஒழுங்கும் வாழ்வுக்கு இன்றியமையாதன என்று தெளிக" என ஊன்றிக் கூறியிருத்தலை ஓர்க. மேலே கண்டவாறு மூளையில் அமையப்பெற்ற நுண்ணிய கல்வி கேள்விகள் பேச்சாளர் எண்ணியவாறு ஒரு பேரவையில் தாமே வலிந்து வலிந்து வந்து கை கொடுத்தல் உறுதியாம்.

---

7. பேச்சாளர் உள்ளமும் உரையும்

மும்மணிகள்

பொது மேடைகளில் தோன்றும் பேச்சாளர் தமது உள்ளம் உரை, செயல் ஆகிய மூன்று முக்கிய காரியங்களில் கருத்தூன்றுதல் வேண்டுமென இந்நூலின் வேறொரு பகுதியில் கூறியிருத்தலைக் காண்க. பேச்சாளரின் 'செயலை'க் குறித்து ஆங்காங்குப் பல பகுதிகளில் விரித்து விளக்கப்பட்டிருக்கிறது. எஞ்சி நிற்கும் 'உள்ளம்', 'உரை' ஆகிய இரண்டைக் குறித்தும் சிறிது விளக்கம் ஈண்டைக் கேற்புடைத்தாம்.

உள்ளம் யாது?

முதற் கண் 'உள்ளத்தை' நோக்குவோம். 'உள்ளம்' என்பது பல பொருள் குறித்த ஒரு சொல். அது மனம், நினைவு, கருத்து, இதயம், நெஞ்சம், விருப்பம், எண்ணம், சித்தம், சிந்தை என இடத்துக்கு ஏற்றவாறு பொருள் தருவதாம். இலக்கண வழியே நோக்குழி உள்ளுவது, நினைப்பது என்பவை மிகப் பொருத்தமான பொருள்களாம். நினைப்பது எது? நினைப்பது 'மனம்' என்பதை மறுப்பாரில்லை. உள்ளத்தைப் பற்றிய ஆராய்ச்சி பலப்பல ஆண்டுகளுக்கு முன்னரே கீழைநாட்டில் மிக விளக்கங்கண்டு ஓரோவழி முற்றுப்பெற்றதாகும். இதைக் குறித்த மேலை நாட்டாரின் ஆராய்ச்சி இன்னும் முற்றுப்பெறவில்லை. அந்நாட்டு அகத்திணையார் மாட்டும் கருத்து வேற்றுமைகள் இந்நாளும் உள்ளனவாம். இதைக் குறித்து உயர்திரு. திரு. வி. க,

கூற்றை நோக்குவோம். "உள்ளத்தைப்பற்றிய ஆராய்ச்சி, உலகிலே முற்றுப்பெற்றதா? இன்னும் முற்றுப்பெறவில்லையா? கீழ்நாட்டில் உள்ளத்தைப்பற்றிய ஆராய்ச்சி முற்றுப்பெற்றதென்று அறுதியிட்டுக் கூறலாம். மேல் நாட்டில் அவ்வாராய்ச்சி இன்னும் முற்றுப்பெறவில்லை என்று தியங்காது முழங்கலாம். என்னை? கீழ்நாட்டில் ஆராய்ச்சி, அநுபவத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தது. அதனால் உண்மை விளங்கலாயிற்று. மேல்நாட்டின் ஆராய்ச்சி, ஊகத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது. அதனால் உண்மை ஒரோவழியில் காட்சியளித்து, மேலும் மேலும் ஓங்கி உயர்ந்தே போகிறது. புறமனத்துக்கு அப்பாலுள்ள பல நுட்பங்கள் இவர்க்கு விளங்காமற் கிடக்கின்றன." எனவே, மேலை நாட்டார் ஆராய்ச்சியிலும் கீழ்நாட்டாரின் இதைக் குறித்த ஆராய்ச்சியே சிறந்ததென்பதும் முற்றுப்பெற்றதென்பதும் நனி விளங்கும்.

மனம் யாது?

இனி 'மனம்' என்பது என்ன? அஃது எங்குள்ளது? அதன் தோற்றம் யாது? அஃது எவ்வாறு இயங்குவது? என்பனவற்றைச் சற்று ஆராய்வோம். ஒருவரிடம் காண்டல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், உணர்தல், எண்ணல், விரும்பல், வெறுத்தல், ஆய்தல், உரைத்தல் முதலியன நிகழ்தல் இயல்பாம். இவைகட்கு ஊற்றுக்களன் எது? பொதுவாகச் சிந்தித்தால் இவையனைத்தும் உள்ளம் - மனத்தினின்றும் உதிப்பனவாகவே தோன்றும். அவ்வுள்ளம் - மனம் எங்குள்ளது எனக் கேட்டால் சாதாரண மக்களும் தமது நெஞ்சின் இடப்புறமாகத் தொட்டுக்காட்டுவர். பிறர் அறிவு வளர்ச்சியையும் யோசிக்கும் தன்மையையும் குறிப்பிடுதற்கு ஒருவர் தமது தலையின் வலப்புறத்தைத் தொட்டுக் காட்டி மெச்சுதல் வழக்கு. மேலை நாட்டு ஆராய்ச்சியாளர் மனம் மூளையின்கண் உள்ளதென்பர். மானிட தேகத்திலுள்ள நரம்புத் தொடர்களால் மூளை இயக்குவிக்கப் படுகிறதென்றும் அவ்வியக்கத்தால் உருக்கொள்வது 'மனம்' என்றும் அவர் கூறு நிற்பர். மூளை பழுதுற்றால் அல்லது கோளாறு கொண்டால் மனக் கோளாறு உண்டாதலை இதற்கு ஆதாரங் காட்டுவர். நம்நாட்டு அகத்திணையர் மனதைப் பல கூறுக்கி, விழிப்பில் அம்மனம் பெரு மூளையில் படிகின்றதென்றும், கனவில் சிறு மூளையில் தங்குகின்றதென்றும், உறக்கத்தில் இதயத்தைச் சேர்கின்றதென்றும் அநுபவத்தால் அறிந்து கூறுவர். எனவே, இரு நாட்டாரும் மனம் மூளையின்

கண் உள்ளதென்பதை ஒருமித்து ஒப்புகின்றனர். ஆயினும் மனம் ஒரு நிலையில் இதயத்திலும் உறைகின்றதென்பதைக் கண்டு தெளிந்தவர் நமது நாட்டவரேயாவர். நமது நாட்டுப் பெரியார்கள் மனம் சென்றடையும் பல நிலைகளை மேல்மனம், நடுமனம், அடிமனம் என முக்கூறாக்கி அவைகளின் காரியங்களையும் முறையே விரித்துக் கூறியுள்ளனர். இம்மூன்று நிலைகளும் நாம் ஒரோவழி நாடோறும் அநுபவித்து வருவனவாதலால் இவை புதியன வல்ல; அதிசயத்துக் குரியனவு மல்ல. விழிப்பில் உழல்வது மேல் அல்லது புறமனம். கனவில் புறமனம் புலன்களின் கூட்டுறவை இழந்து ஒரோவழி நடுமனமாக மாறுகிறது. நனவிலும் புறமனம் புலன்களின் சேர்க்கையினின்றும் விடுபடுமேல் அவ்வித மாற்றம்பெற்ற அந் நடுமனம் மிக வன்மை பெற்றதாகும். புறமனம் நடுமனத்தையும் கடந்து உறக்கத்தில் மேலும் அடியிற்சென்று நரம்பு நாடிகளை இயக்குவிக்கும் ஊற்றுக் களனாகிய இதயத்தைச் சென்றடைவதுமாகும். இடையறாது ஊன்றிச் சிந்தித்தலால் அல்லது தியானித்தலால் இம்மனம் சக்திகளெலாம் திரண்ட ஓர் அரிய கருவியாய், சகலபேற்றையும் தரவல்லதாய், பல அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலுள்ளதாய் உயர்மாற்றம் பெறுவதாம். அந்நிலையில் மூச்சு இறக்கும்; பேச்சும் கருவி கரணங்களும் ஒப்வுபெறும்; மூளைக்கும் இதயத்துக்கும் ஒரே நேரிய பாட்டை ஏற்படும். உள்ளத்தே நல்ல எண்ணங்கள் அலையென ஓங்கி எழும். உலகைப் பல வகையிலும் வளர்க்கும் நல்ல எண்ணங்களும் கருத்துக்களும் உருக்கொள்ளும். தீய எண்ணங்கள் தலைகாட்டாது ஒழிவனவாம். இந் நிலையே 'உள்ளம்', 'இதயம்' எனும் வேறுபாடின்றி இரண்டறக் கலந்து நிற்கும் ஓர் அரிய நிலையுமாம்.

இதய அமைப்பு

இனி இதயம் யாது? மானிட இதயத்தின் அமைப்பையும் வேலையையும் குறித்து இவண் ஆய்தல் முறையாம். மானிட இதயம் ஓர் அதிசயிக்கத்தக்க நுட்பமான கருவியாகும். அது மார்புக் கூண்டுக்குள் அமைந்துள்ளது. உருவத்தில் அது ஒரு மாங்கனியின் வடிவை ஒத்திருக்கும். மானிடதேகத்தில் உற்பத்தியாகும் இரத்தத்தை ஓரிடத்தில் சேர்த்துச் சுத்தப்படுத்தும். தேகத்திலுள்ள பற்பல பாகங்களுக்கு எண்ணிறந்த இரத்தக் குழல்கள் நரம்புகள் வழியே தண்ணீர் இயந்திரத்தைப்போல் அதனை இறைத்து அளவோடு அனுப்பிக் கொண்டிருத்தலும் அதன் வேலையாம். அது இயங்குங்கால் ஒருவித

ஒழுங்குபாட்டை அனுசரித்துக் கடிகார இயந்திரம்போல் துடித்தலும் ஒலித்தலும் இயல்பாம். இத்துடிப்பு எல்லா நாடிகளிலும் பரிணமிக்கும். வெப்ப மிகுதியால் சற்று வேகமாகத் துடித்தலும், தட்பத்தால் நிதான மாகத் துடித்தலும் அதன் இயல்பாம். ஒரு விநாடி ஒன்றுக்கு 70 அல்லது 80—க்குமேற்படாத ஒலித்துடிப்புக்கள் அதினின்று வெளி வருமாயின் அது நல்ல இதயமெனவும் சுத்தமான இதயமெனவும் கருதப்படும். ஒருவருடைய இதயம் எவ்வளவுக் கெவ்வளவு கரியமல வாயுவைக் கழித்துப் பிராணவாயுவைத் துணைக்கொள்கின்றதோ அவ் வளவு அவ்விதயம் பரிசுத்தம் பெற்றதாம். சுருங்கச் சொல்லில், நாம் உட்கொள்ளும் பிராணவாயுவே நமது இதயங்களை இயக்குவிக்கும் சக்தியாம். இதய நோய்க்கு ஆங்கில மருத்துவர் பிராணவாயுவை (ஆக்ஸிஜன்) இதயத்துள் செயற்கை முறையில் செலுத்துதல் ஒரு சிறந்த சிகிச்சை யென்பர். நல்ல இதயத்தினின்றும் வெளிப்படும் இரத் தமும் ஆண்டேபடியும் எண்ணங்களும் மிகப்பரிசுத்தம் பெற்றவைகளா கக் கருதப்படுவனவாம். இல்லையேல், உலகம் தோன்றிய காலந்தொட்டு இன்றளவும், 'நல்ல இதயம்', 'நல்ல உள்ளம்', 'நல்ல மனம்' என உலக வழக்கில்வரக் காரணமில்லை. தமது மானம் சுயமதிப்பு இழந்த மக்களை 'நல்லஇரத்த மற்றவர்கள்' என உலகில் இடித்துரைத்தல் உன்னத்தக் கது. ஒருவர் இதயத்தினின்றும்-நல்ல இதயத்தினின்றும் - உதிப்பன வற்றைக் கரவாது தீட்டுவோர் நல்ல எழுத்தாளர், ஆசிரியர் எனப்படு வர். அது போலவே அவ்வாறு பேசவல்லாரே பெரும் நாவலராவர். எண்ணங்களைக் குறித்து உயர்திரு. திரு. வி. க. அவர்கள் கூறுவதை உன்னுவோம். "எண்ணங்களில் நல்லனவும் உண்டு; தீயன வும் உண்டு. நல்ல எண்ணங்கள் நல்லுலகை வளர்க்கும். நல்ல எண்ணங்களைப் பெருக்க உறுதி கொள்ளல் வேண்டும். நல்லெண் ணத்தால் பழுத்த மனமுடையாரை எவ்வகைத் தீமையும் ஒன்றும் செய்யாது. தீமை அவரைத் தாக்கினும் வெற்றி பெறாது; தோல்வியுற்றுச் சாயும். நல்லெண்ணம் கனியாத நெஞ்சுடையார் உலகில் மிக எச்சரிக்கையுடன் வாழ்தல்வேண்டும்." என்னே, இவ்வற வுரைகள்!

சுகவழி

மனித ஆயுளில் சரிபாதி உறக்கத்தில் கழிவதாம். இஃது இரு நாட்டாரின் ஒப்பமுடிந்த கருத்தாகும். ஆயினும் மேலைநாட்டார் தூக்கம் தேக சுகத்திற்கு இன்றியமையாத தென்பர். கீழ்நாட்டார் அவ்வாறு

கருதாது தூங்காமற் தூங்கும் நிலையே சுகமென்பர். நடுமனம் தெற்றென இதயத்தில் நிற்குமேல் ஒருவருக்கு உறக்கம் ஏற்படுமென நமது நாட்டார் அநுபவித்துக் கூறுகின்றனர். அப்படிக்கின்றி நடுமனத்தை இதயத்தே நிறுத்திவைத்து, அதனைப் புறமனத்தில் பாயாது அடக்கி வைத்திருக்கவும் அதற்கு வேலை கொடுக்கவும் ஒருவர் பழகியிருப்பரேல் மனித ஆயுள் உறக்கத்தால் குறைவதற்கில்லை. அதனோடும் பிராண வாயுவை தாராளமாக இதயத்தில் புகுத்த வல்லரேல், இதயம் பரிசுத்தப் படுவதும், ஆண்டு நல்லெண்ணங்கள் ஊற்றெனச் சுரப்பதும் ஒருதலை. அவற்றிற்கு மாறான எண்ணங்கள் இதயத்தே உதிப்பனவாயின், அவை உலகோடு உழலும் புறமனத்தினின்றும் உதிப்பனவெனவும், ஓரோ வழி தீய எண்ணங்களோடு உறவுகொண்டவையெனவும் கூறப்படும். எனவே இதயத்தின் பரிசுத்தத்திற்கும் நல்லியக்கத்திற்கும் ஏற்றவாறு பிராணவாயுவை மிக மிக உற்பத்தி செய்து அதனை இதயத்தில் புகுத்த வல்ல பழக்கங்களை-நமது முன்னோர் வகுத்திருக்கும் அரசபாட்டைகளைக் கைப்பற்றுதல் மிக இன்றியமையாததாம். உலக மக்களுக்கு அறிவுச் சுடர் கொளுத்தி அவர்களை நன்னிலைக்குக் கொண்டுவரக் கடமைபூண்ட ஒரு மேடைப்பேச்சாளர் நல்லுளம் கொண்டு, நல்லுரையாடல் வேண்டுவதின் அவசியம் இவற்றால் நனிவிளங்கும்.

தொட்டுவிடல்

ஈண்டு மேலே குறித்த அப்பாட்டையைத் தொட்டுவிடுதல் நல்லது. அப்பாட்டையே மூச்சுச் சாதனம் எனப்படும். அதைப் பிராணாயாமப் பழக்கம் என்பர். இப்பழக்கத்தைக் குறித்தும், இதனாலுறும் அளவற்ற பயனைக் குறித்தும் வேறொரு பகுதியில் விரித்திருத்தலால் மீண்டும் இங்குக் கூறுதல் மிகையாம். எனினும் அச்சாதனத்தைச் சுருக்கி, அஃது இதயத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் முறையென்பது பற்றிச் சிறிது பேசுவோம். ஒருவர் தமது இடது நாசித்துவாரத்தால் மூச்சை உள்ளிழுத்து அதனை வலது நாசித்துவாரத்தால் பையப் பைய வெளியிடப் பழகினால் பிராணவாயுவை மிகத் தாராளமாக இதயத்துக்குள் செலுத்தலாம் ; சேமித்தும் வைக்கலாம். இதயத்துடிப்பும் இரத்தவோட்டமும் மிக ஒழுங்குப்பாட்டில் நடைபெறும். இவ்வாறு ஒழுங்குப் பாட்டில் நடைபெறும் பரிசுத்தமான இதயத்தினின்றும் தீயவெண்ணங்கள் தோன்றுமோ ? கமுகு புல்லெனக் குறுகுமோ ? நல்ல இதயத்தில் தீயஎண்ணங்கள் தங்க இடமேது? அத்தகைய பேச்சாளர் நாவினின்றும் வரும் உரைகள் அவர் இதயத்தினின்றும் வெளிப்படும் நல்ல எண்ணங்

களின் அலைகள் அல்லவோ ? அவ்வித எண்ணங்கள் மேலும் மேலும் சிறத்தலால் உலகமும் உலகமக்களும் உய்யும். எனினும் உலகின் கண்ணுள்ள எல்லாப் பேச்சாளர்களும் இவ்வழி நிற்பவரல்லர். ஆயினும் சங்கரர், இராமாநுசர், புத்தர், இயேசு கிறிஸ்து, நால்வர், ஆழ்வாராதியர் ஆயினோர் இவ்வழி ஊன்றி நின்று உலகுய்ய வழி கண்டுள்ளனர் என்பதை எவரே மறுத்தற்கியலும் ? தமிழ்நாட்டுத் தவப்பெருஞ் செல்வரான சுவாமி தாயுமானர் மெய் நீங்காத உரையும் உள்ளமுமுடைய மக்கள்மாட்டு இறை உறைவதை வலியுறுத்த "மெய்விடா நாவுள்ள மெய்யருளிருந்து நீ மெய்யான மெய்யையெல்லாம் மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை" என அருளியிருத்தலைக் காண்க. மேலும் வள்ளுவரது,

> "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
> உள்ளத் தனையது உயர்வு"

எனும் பொய்யா மொழியையும் ஓர்க.

நமது சுதந்தர இந்தியா வேண்டுவதென்னை ? அஃது இன்று வேண்டுவது பண்டைய பெரியார்களைப்போல் இதய சுத்தம் பெற்ற பேச்சாளர்களையும் நல்லன சுரக்கும் அமுத உரையாளர்களையுமேயாம். அன்றே நமது நாடு பண்டைய உச்சநிலையைச் சென்றடைந்து மானிட அறிவு வளர்ச்சிக்கும் அற வளர்ச்சிக்கும் சுதந்தரம் பெற்றுத் தந்ததாகும். மானிடச் சுதந்தரம் என்பது என்னை ? அது நல்வாக்குச் சுதந்தரமன்றோ ?

---

8. பேச்சலங்காரம்

அலங்காரம்

ஒருவர் பேச்சில் வரும் எதுகை, மோனை போன்ற அலங்காரங்களுடன் இழைந்து நிற்கும் அறுதியிடக்கூடாத பல்வேறு அலங்காரங்களே ஈங்குப் பேச்சலங்காரம் எனப்படும். அவ்வித அலங்காரங்கள் ஒருவர் உடையினாலும் பணியினாலும் பெறப்படுவனவல்ல ; உருவத்தாலும் தோற்றத்தாலும் வருவன அல்ல ; அழகிய சொற்போக்கினாலும், பேச்சலங்காரம் பெறப்படுவதல்ல ; ஆய்ந்தெடுத்த மொழிகளும் சொற்சுவையும் அலங்காரப்பேச்சை உண்டுபண்ணுவன வல்ல. பின்னை அலங்காரப் பேச்சென்பது என்ன ?

இனிய குரல்

ஒருவர் பேசும் பேச்சில் இனிமை கலந்த குரலோடு சந்தம் பொலிந்து இன்பம் கமழ வெளிவரும் வாசகமும், வாசகத் தொடர்களும், அவைகளுக்கேற்ற உச்சரிப்பு மிடுக்கும், மனோநிலையைத் தெற்றெனக் காட்டும் உடல்நிலையும், அலைபோல் உயர்ந்தும் தாழ்ந்தும் தொடர்ந்தும் வரும் சொல்லொலியும் மிகுந்து ஒளிருமேல் அப்பேச்சு பேச்சலங்காரம் பெற்றதெனப்படுவதாம். இவற்றை ஒருபேச்சாளர் தமதுபேச்சில் எங்ஙனம் புகுத்தற்கியலுமென்பது ஆழ்ந்துநோக்கற்குரித்தாம். சந்தம் என்பது தாளத்திற்கியைந்த தொன்றும். வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துத் தொடர்பு கொண்ட தாளக்கட்டோடு, ஒலி யுணர்ச்சி மிகுந்து வரும் மொழித்தொடர் சந்த மெனப்படுவதாம். சொற்சுவை மலிந்த சொற்போக்கோடு சந்தமும் ஓரளவு ஒருங்கு சேர்ந்திடில் அத்தகைய பேச்சு அலங்காரம் பெற்றிலங்குமென்பதில் ஐயமில்லை.

சந்தப் பேச்சு

சந்தத்தோடு விரவிய அலங்காரப் பேச்சில் மத்தளத்தினின்றெழும் ' கமகம் ' போன்ற ஓர் ஒலி வியாபித்து நிற்கும். இனிய குரலின் இயற்கை நாதத்துடன் இவ்வொலியும் கலந்து அப்பேச்சுக்கு ஒரு தனிச் சிறப்பையும், அலங்காரத்தையும் தருதல் இயல்பாம். காலஞ் சென்ற டாக்டர் அன்னிபெசண்டு அம்மையாரின் பேச்சும், ' டெக்கான் கோகிலம் ' எனப் பாராட்டப்படும் திருமதி சரோஜினிதேவியாரின் பேச்சுப் போக்கும் இதற்குத் தக்க சான்றுகளாம். பேச்சோடிசைந்த வார்த்தைச் சந்தமும், அதனோடியங்கும் உடல் அசைவும் உணர்ச்சி பாவமும் அவரிருவர்பால் மிகுதியுமுண்டு. பெசண்ட் அம்மையாரைக் குறித்து ஜியார்ஜ் பர்னர்டு ஷா கூறும் புகழுரை இதுவாம். "பெசண்ட் அம்மையார் அபரிமிதமான ஊக்கமுடையார். அறிவின்மிக்க மூன்று ஆண்மக்கள் நிர்வகிக்கக்கூடிய பொறுப்பைத் தன்னந்தனியே தாங்க வல்லவர். அவர் தொடுவனவெல்லாம் உயர்தர முடிவைத்தரும். இரவு பகல் எனும் பேதமின்றி ஒரு நிமிடத்தையும் விருதாவாக்காது, தொடர்ந்தும் சலியாதும் வேலை செய்யும் ஆற்றலுடையார். முற்காலத்தே மேலைநாடுகளில் மேடைப்பேச்சு எத்துணை உச்சநிலையில் இருந்ததோ, அத்துணை உயர்நிலையை அவ்வம்மையார் பலவாண்டுகளுக்கு முன்னரே அடைந்து, சொல்வன்மையும், இனிமையும், உயர்லட்சியமும் கொண்ட பெரும் நாவலராக விளங்கினர். அவர் பேச்சினின்றும் வெளிவரும் சந்தமும், அதனோடு கூடிய உடலசைவும் அவரது தனிச்

சிறப்பாம். அவருக்கு இணையான ஒரு பெண் நாவலர் உலகில் இன்றளவும் தோன்றவில்லையெனல் மிகையன்று." காலஞ்சென்ற சார்லஸ் பிராட்லாமாட்டும் இவ்வன்மை விளங்கிற்று. பிரமஞான சங்கத்தலைவர் ஜீனராஜதாஸரிடத்தும் இவ்வன்மை மிளிர்வதாகும். எனவே, சந்தம் பொலிந்த பேச்சலங்காரம் ஆண்மக்களினும் பெண்மக்களின் இயற்கையலங்காரத்திற்கு மேலும் அரண் செய்வதாகும். பெண் பேச்சாளர் ஒருவர் இவ்வுண்மையைக் கருத்திலிருத்தி மேடைமீது தோன்றுவரேல், அன்னார் பேச்சு உயர்வடைந்து மெச்சப்பெறுமென்பது ஒருதலை. இந்நாள் மேடைமீது பேய்மையாகப் பேசாது, பேச்சலங்காரத்துடன் பெண்ணீர்மையாகப் பேசுதலே சாலச்சிறப்புடைத்தாம். நாட்டின் நலங்கருதி இத்தகைய பெண்நாவலர் பலரின் தோற்றம் சுதந்தர ஒளி பரந்து வீசும் இந்நாள் மிக வேண்டப்படுவதொன்றும்.

சந்த ஒலி

மேடைமீது உச்சரிக்கப்படும் வார்த்தைகள், வார்த்தைத் தொடர்கள் மட்டுமே பேச்சலங்காரத்தை உண்டாக்கமாட்டா. மிகச் சிறிய வார்த்தைகளும் அவைகளின் நெருங்கிய பிணைப்பும் சந்த ஒலியைப் பெருக்குவனவாம். ஒரு பேச்சாளர் சிறிய பதங்களாகிய 'ஆனல்,' 'ஆகவே', 'ஆகையால்', 'எனவே', 'அவ்வாறாயின்' ஆகிய இன்னோரன்ன மொழிகளைப் பேச்சினிடையே புகுத்துங்கால் அவற்றின் கடைசி பாகத்தைச் சிறிது நீட்டியும், குரலைத் தாழ்த்தியும் இனிய சந்தமெழ உச்சரித்தல்வேண்டும். அவ்வேளை யெழும் சந்தஒலி அப்பேச்சுக்கோர் சொலிப்பையும் தனி அலங்காரத்தையும் தருவதாகும். ஓரே ஓசையொலி கொண்ட இரண்டொரு வார்த்தைகளை அண்மையிலிருத்தி நீட்டியோ குறுக்கியோ அளவோடு பேசுதலாலும் அலங்காரத்தை ஓரளவு உண்டாக்கலாம். உதாரணமாக, இந்நாட்டுப் பூர்வீகச் சிற்பச் சிறப்பைக் குறித்துப் பேசிய ஒரு மேடைப்பேச்சாளர், 'சிற்பம் கேவலம் கட்டுந்தொழிலென மட்டுங்கொண்டால்' என்றபோது அதினின்றெழுந்த சந்த இன்பத்தைப் பருகிச் சபையோர் சிரக்கம்பம் செய்தனர். ஒரு சிற்ப ஓவியருக்குப் பரிசில் வழங்கியபோது, அவர் வந்தனங் கூறுமுகத்தான், 'இவ்வற்பச் சிற்பியைப் பொருட்படுத்திப் பொற்பதக்கம் தந்து' எனத் தமது பேச்சை முயற்சியின்றிச் சந்தமெழப் பேசினர். மிதமிஞ்சிய சந்த அலங்காரத்தோடும், உடலசைவோடும் ஆண்மக்கள் மேடைமீது பேசுதல் இந்நாள் மிகப் பழைமையாயிற்று. ஆண்மக்கள் ஆண்மையோடும், பெண்மக்கள்



1. சரோஜினி தேவியார், 2. விஜயலட்சுமி பண்டிட், 3. டாக்டர் அன்னிபெசண்ட் அம்மை, 4. ராஜகுமாரி அமிர்தகௌரி, 5. இசைவாணி M. S. சுப்புலட்சுமி அம்மை.

பெண்ணீர்மையோடும் பேசுதலே இயற்கையோடிசைந்ததாகும். இப் புத்தகத்தின் நான்காவது மலர்ச்சேர்க்கையிலுள்ள உயர்திரு. கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியார் பேச்சிலுள்ள இத்தகைய சுவையுணர்வு இன்பந் தருவதாம். மேலே காட்டிய உதாரணங்களே ஈண்டைக்குச் சாலும்.

உடல் அசைவு

இனி, சந்தத்தால் ஏற்படும் உடல் அசைவைக் குறித்துப் பேசுவோம். சந்தமெழப் பேசுங்கால் உடல் அசைவு உணர்ச்சி பாவத்தோடு தாமே உதிப்பதாம். அது முயற்சியால் வருவதன்று. 'தமிழ்' எனப் படுவது இனிமையெனப் பொருள் தருவதாம். ஒருவர் செவிப்புலன் போலவே, கட்புலனுக்கு விருந்தளிக்கும் தோற்றமும் வதனப்பொலிவும் இனிமை பெற்றவையாம். எல்லாச் சுவையும் பெற்றதொன்றே 'இனிமை' யெனப்படும். ஒருவர் பேச்சலங்காரம் இவற்றிற்குப் புறம்பானதன்று. நம்நாட்டு உயர்கலாசாலைகளும், பல்கலைக்கழகங்களும், மாணவிகள் பேச்சலங்காரங்கொண்டு பேசுதற்குத் தக்க வாய்ப்பையும், போதனையையும் தருதல்வேண்டும். சில மாணவிகள் மாட்டு இப்பெரும் வன்மை இயற்கையில் அமைவதாகும். அத்தகையோர் பேச்சு முறையை எள்ளாது அவ்வன்மையை மேலும் ஊக்குவித்தலும், வளர்த்தலும், போதிக்கச் செய்தலும் மிக வேண்டப்படும். நமது நாட்டுப் பெண்மணிகள் நுண்ணிய அறிவாளிகள் ஆவர். அவர்கள் தாமே முயன்று கற்பனை சக்தியோடு விரவிய பேச்சலங்காரத்தைப் பெறக்கூடுமாயினும், ஆண்மக்களாகிய பெரியோர், பெண்மக்களை இவ்வழி மேலும் மேலும் ஊக்குவித்தல் வேண்டும். ஒரு மேடையின்கண் ஓராயிரம் ஆண்மக்கள் பேசுதலினும், பெண்மக்கள் ஓரிருவர் பேசுவராயின் அன்னார் பேச்சு சபையின் முழு கவனத்தையும் கவர்வதாகும். பெண்மக்களைப் பேணுதல் குறித்து, சுவாமி விவேகாநந்தர் நமது நாட்டாருக்கு அறிவுறுத்துவதின் சாரம் என்னை? "நமது நாட்டில் ஐந்து பெண்மக்கள் ஒன்று சேர்வார்களானால், அவர்கள் அபிப்பிராய பேதத்தால் சண்டையிட்டுக்கொள்வர். ஐரோப்பிய நாடுகளிலே பெண் மக்கள் பெருங் கழகங்கள் கண்டும், பல துறைகளில் அரிய சேவைகள் புரிந்தும் தங்கள் ஆற்றலைக் காட்டுகிறார்கள். ஆயினும் உலகில் பொது வாகப் பெண்மக்கள் ஆண்மக்களின் துணையைக் கொழுகொம்பென நாடுதல் இயல்பு. மேலை நாடுகளில் ஆண்மக்களிடமிருந்து பெண்மக்கள் இவ்வழி பெரும் பயனடைகிறார்கள். நமது நாட்டிலோ ஒரு பெண்மகள் தலைமை பூண்டு இதர பெண்மக்களை உயர்வழியில் நடாத்த முற்பட்டால்

மே. 24

உடனே ஆண்மக்கள் அத்தலைவியை எள்ளி எள்ளி அவரது ஊக்கத்தைக் குலைத்து அன்னார் முயற்சி குன்றுமாறு செய்துவிடுவர். இதுவே ஆண்மை, வீரம் என்பது அவர்கள் கருத்தாம்." நமது நாட்டின் நலனுக்காக உழைத்த மேடம் பிளாவட்ஸ்கியும், அன்னிபெசண்டு அம்மையாரும் ஆண்மக்களின் பொறாமைக்கும் பல இடையூறுகட்கும் இலக்கானவர்கள். இதர நாட்டுமக்கள் ஆண், பெண் எனும் பேதமின்றி அவர்களுடைய போதனைகட்குச் செவிசாய்த்ததைக் கண்டபின் நமது நாட்டு ஆண்மக்கள் அவர்கள் வகுத்தவழி நடப்பாராயினர். அவ்விருவர் நற்போதனைகளை நமது நாட்டுப் பெண்மக்கள் இன்றளவும் சிந்தித்தனரில்லை; சிந்திப்பதற்கான வசதிகளும் தமிழ் நாட்டில் இல்லை.

இன்றைய பெண்மணிகள்

காங்கரஸ் இயக்கம் வேரூன்றியபின் இந்நாட்டுப் பெண் உலகின் நிலைமை ஓரோவழி மாறியுள்ளது. சுதந்தர இந்தியாவில் ஒரு தனி மாகாணத்தை ஆளும் சீர்த்தி திருமதி சரோஜினி தேவியாரைச் சார்ந்ததாகும். இந்தியப் பார்லிமெண்டில் சுகாதார மந்திரி பதவி வகித்துத் திருமதி ராஜகுமாரி அமிர்தகௌரி அக்கடமைகளைத் திறம்பட நடத்துகின்றார். திருமதி பண்டிதை விஜயலட்சுமி அம்மையார் இந்தியப் பிரதிநிதியாக ருஷ்யாவில் அமர்ந்துள்ளார். சென்னைச் சட்ட சபையின் உபதலைவராகத் திருமதி அம்மண்ண ராஜு விளங்குகின்றார். இந்தியப் பார்லிமெண்டிலும், சென்னைச் சட்டசபையிலும் பெண் அங்கத்தினர்களின் பேச்சுக்களும், விவாதங்களும் எவரையும் வியப்பில் ஆழ்த்துவனவாயுள்ளன. தத்துவ நூல் ஆராய்ச்சியிற்சிறந்த பல பெண் மணிகள் நமது தமிழ்நாட்டிலும் உண்டு. ஆங்கிலக் கலாவிற்பன்னரான மிகப்பல பெண்மக்களும் நம்மிடையே வதியக் காண்போம். சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாகப் பலர் உள்ளனர். பெண்கள் கல்லூரிகளில் பல நாவலர்கள் பேராசிரியராக மிளிர்கின்றனர். அவர்களுள் திருமதி. ஈ. டி. இராஜேஸ்வரி அம்மையார், எம்.ஏ., எல்.டி. குறிப்பிடத் தக்கவராவார். காலக்கிரமத்தே இந்நாட்டில் பெண் நாவலர்கள் மிகப் பலர் போட்டியிட்டு மேடைகளில் தோன்றுவரென்பது உறுதி.

ஜெனரல் ஸ்மட்ஸ் என்னும் தென் ஆப்பிரிக்கப் பிரதமரை உலகம் நன்கறியும். அவர் ஒரு மாபெரும் வீரர். போரிலும், அரசியல் பிடிவாதக் கொள்கைகளிலும் பின்னிடாதவர். அண்மையில் உலக ஐக்கிய நாடுகளின் சபையில் அவரை முறியடித்துத் திருமதி. விஜயலட்சுமி பண்டிதை வெற்றிபெற்றார்! அன்னார் கலையறிவிலும், உடையழகிலும்,

எழிலுருவிலும் சிறந்து, பேச்சலங்காரம் பொங்கி வழிந்தோட இந்தியாவின் கட்சியை அச்சமின்றி எடுத்துச்சொன்னதாலன்றோ சபையோரை வியப்பில் ஆழ்த்தி வெற்றி கண்டார்! அதிகம் கூறுவது எற்றுக்கு? சங்கீத மேடைகளில் நிகரற்று விளங்கும் திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி அம்மையாரின் இனிய சங்கீதத்தை நுகர்ந்தபின், உயர்திரு. எம். கே. தியாகராஜ பாகவதர் ஒருவரை விடுத்து, வேறு எத்துணைச் சிறந்த ஆண் பாடகர்கள் பொழுது புலருமட்டும் பாடினும் அவர்கள் பாட்டு சபைக்கு இனிக்குமோ? இதனாலன்றோ கலையறிவின் பெருமை கண்ட பெரியார், கலைகளின் ஊற்றுக்களைக் கலைமகளெனப் பெண்ணுருத் தந்து உருவகப்படுத்தியுள்ளார். ஈரம் நிறைந்த வீரத்தை இந்தியத் தாயிடத்தே ஈந்துள்ளார். எனவே, இத்தமிழ்நாட்டில் இனிமை, அலங்காரம், ஈரம், வீரம் செறிந்த பேச்சில், அரசியல் மேடையில் நமது பெண்மணிகளுக்குத் தலையாய இடந்தருதல் முற்றிலும் முறையேயாம். அதுவே ஆண்மைக்கு உகந்ததாகுமென்ப.

---

9. இயல்புரை

இலக்கணம்

இயல்புரை யெனப்படுவது இலக்கண முறையால், இயற்கையிலே உள்ளதனை இன்னதென்று இயல்பாகவே விவரித்துக் கூறுதலாம். இயல்புரையை ஈங்கு இயற்கையான பேச்செனவும் சுபாவீகமான பேச்செனவும் கூட்டிக்கொள்ளல் முறையாம். இயற்கையான பேச்சைப் பல கூறாக்கி நோக்கலாம். அவற்றுள் இயற்கைப் பேச்சு, இயற்கைக் குரல், இயற்கை நிலை, இயற்கைப் பேச்சுப்பொருள் ஆகியவை தலைசிறந்தவைகளாம்.

இயற்கைப் பேச்சு

இயற்கைப் பேச்சுப் போக்கென்பது ஒரு மொழிக்கு இலக்கிய இலக்கணங்களாலும் வழக்கப்பாட்டாலும் வகுக்கப்பட்டுள்ள இயல்பான பேசும் வழியெனவும், பேசுவோர் சுபாவீக குணனுக்கேற்ற பேச்செனவும் இருவகைப்படும். பிற மொழிகளில் சில செவிக்கினிமையாகவும், சில கடூரமாகவும், வேறுசில வழவழப்பாகவும், மற்றும் சில வீரம், ஆண்மை செறிந்தும் இருப்பனவாம். உதாரணமாக, ஒருவர் பேசுங்கால் ஆங்கில மொழி, வன்மையும் ஆண்மையும் கொண்டு சிறந்து விளங்கும். பிரஞ்சு மொழி மரியாதையும் வழவழப்பும் மிகுந்ததொன்

றும். உருதுமொழி வீரமும் கடூரமும் கொண்டதாம். தெலுங்கு மொழியோ, இழுத்திழுத்துப் பேசவேண்டிய ஒரு இனிய மொழியாகும். ஆனால் தமிழ்மொழியோ மேலே காட்டியவைகளைப்போலன்றிப் பேசும்போதே செவிக்கினிமையாகவும், இசைக்குப் பொருந்தியதாகவும் அன்றுள்ளதேபோல் இன்றுமிருக்கும் ஒரு தொன்மொழியாம். அம் மொழிபேசும் மக்கள் பலதிறப்பட்ட சுபாவகுணங் கொண்டவராவர். முக்குணங்களாகிய சாத்துவிகம், இராசதம், தாமசம் ஆகியவற்றுள் ஒன்றின்பால் படாத மக்கள் உலகில் இல்லை. இவை ஒருவர் பிறவிக்குணங்களாகுமெனல் மிகையன்று. சாத்துவிகமான மக்கள் மாட்டு சாந்தகுண மிகுந்த பேச்சு வெளிவருவதியல்பு. இராசதக் குணனுடைய மக்களிடத்து ஊக்கம், அறிவு, வீரம், தருமம், தவம், தானம், கல்வி, கேள்வி எனும் எண் குணங்களும் அவைகளுக்கேற்ற வார்த்தைகளும் பேச்சும் வெளிவருதல் இயல்பாம். தாமசம் எனும் மந்த குணமுடையோர்பால் ஒழுக்கவழு, கோபம், ஆணவம், சோம்பல், நீதிவழு, நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சம் முதலிய குணங்கள் குடிகொண்டிருத்தல் இயற்கையாம். எனவே, இத்தகையோர் பேச்சு அவ்விதக் குற்றங்களில் ஒன்றையோ பலவற்றையோ தழுவியிருத்தல் இயல்பாம். ஆகலின், முக்குணங்களின் வழியே ஒரு பேச்சாளர் அவ்வக் குணங்களின் ஏற்றத் தாழ்ச்சிக்கேற்பத் தமது பேச்சை வெளியிடுதல் இயல்பு. பொதுமேடைப் பேச்சாளர் ஒல்லும்வகை சத்துவ, இராசதக் குண மிகுந்தவராயிருப்பதுடன் முயற்சி மிகுதியாலும் சேர்க்கைத் தகுதியாலும் இக்குணங்களைப் பெரிதும் பெறுதல்வேண்டுமென்பது ஊன்றிப் பெறப்படுவதாம். இல்லையேல், ஒரு நல்ல பேச்சாளராவதும், பேச்சுப் பொருளில் ஆழ்ந்து ஊக்கத்தோடு உண்மை நெறியில் நின்று பேசுவதும் இயலாவென்ப. ஆயினும் இராசதக் குணப் பேச்சின் படிக்கிரமங்களை முறைபிறழாது ஒரு பேச்சாளர் கடப்பரேல், சத்துவ நிலையையும் அதற்கியல்பான பேச்சையும் தாமே அடைந்தவராவர் என்பது ஒருதலை. அக்கால் அவர் பேச்சு அருகியும், பேச்சுப் பொருள் நயம் மிகுந்தும் ஒளிர்வதாம். அந்நிலையில் நின்றுநின்று பழகி இறுதி காண்போர் பெரியோர் ஆசிக்கும் பேச்சிறந்த பெருநிலையை ஒரோவழி அடைந்தவராவர்.

குணபேதம்

சத்துவகுணம் நிறைந்த ஒருவரின் இயற்கைப் பேச்சில் சொல்லமைதியும் சாந்தமும் நிலவிநிற்றல் கண்கூடு. அமைதியும் சாந்தமும்

நிறைந்த சொற்களே மக்கள் மனதில் ஊடுருவிச்சென்று நிலைபெறத் தக்கவையாம். வார்த்தைகளின் விரைவினுலும், மிகுதியினுலும் ஒருவர் பேச்சு - பேச்சுப்பொருள் கெடுதலும், மயக்கச் சொற்கள் பல மலிதலும், இரட்டுற மொழிதலும் உண்டாவனவாம். தெளிவோடும் இயல்போடும் பேசுவதால் பேச்சும் பேச்சுப்பொருளும் எக்காலத்தும் கெடுவதில்லை. எப்பேச்சாயினும் அதில் தெளிவும் இயல்பும் ஓரளவோடாதல் அமைந்திருத்தல் முறையாம். விரைவினுல் தூண்டப்பெறும் பேச்சாளர் பேச்சுப்பொருளின் கோவையை இழத்தல் ஒருபுறமிருக்க, நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலமாகிய முக்காலங்களை முறை பிறழ்ந்து சபையில் கூறுவதுமுண்டு. பேச்சுப்பொருளைத் தெளிவுறுத்தப் புகுமுகத்தான் பேச்சின் இயல்புத் தொடர்பை இழந்து வேறுபல செய்திகளைத் தாவிப் பற்றி ஒரு பேச்சாளர் மேலே தொடர்ந்து பேசுதலை யாண்டும் காண்போம். இது மற்றொன்று விரித்தல் எனும் குற்றத்தின்பாற்பட்டதாகும் என்ப.

தாமத குணவியல்பால் கோபமும் ஆணவமும் சோம்பிச் சொல்லுதலும் சொல்லத்தகாதவற்றைக் கூறுதலும் புனைந்துரையாடலும் பொருத்தமற்றவொன்றைப் பொருத்தம்போல் இழுத்தும் வருவித்தும் பேசுதலும் பேச்சாளர்மாட்டுச் சாதாரணமாகக் காணப்படும் வழூஉக்களாம்.

சிறந்த உதாரணம்

மகாகனம் கிளாட்ஸ்டனின் நெருங்கிய நண்பரான டின்சர்ச் என்பார், முன்னவரைப் பிரதமராக்கியபோது பின்வருமாறு கவலைக்குள்ளானுர் என்பது சரித்திரம். "கிளாட்ஸ்டன் ஒரு மாபெரும் மனிதரே; கண்ணியவானும்கூட ஆவார். ஆனுல் அவர் மக்களால் எவ்வளவு நேசிக்கப்படுகிருரோ அவ்வளவு அல்லது அதற்குமேல் வெறுக்கப்படுகிருர் என்பது ஒருதலை. சில வேளைகளில் அவர் மூர்க்கராகக் காணப்படுகிருர். வெகு கோபக்காரர்; ஆணவமுடையார்; எதிரிகளிடத்தில் மன இரக்கமற்றவர். வெகு சுலபத்தில் பொறுமையை இழந்துவிடுகிருர். மனித சுபாவம் எதை ஏற்கும் என்பது அவருக்கு விளங்குவதில்லை. ஆதலால் சிலவேளை துடுக்காகவும் புண்படவும் பேசிவிடுகிருர். இவர் எப்படிப் பாராளுமன்றச் சபையை நடத்துவாரென்றும் மகாராணியாரிடம் எவ்வாறு நடந்துகொள்வாரென்றும் எனக்குப் புலனுகவில்லை." அவர் அவ்வாறு கவலைகொண்டது தவறல்ல என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி உறுதிப்படுத்தும். பாராளுமன்

றத்தில் ஒரு மசோதா நிறைவேறப்பெற்று அது சட்டமாகுமுன் விக்டோரியா மகாராணியார் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டது. மகாராணியார் சிறிது பிடிவாத குணமுடையார். அம்மசோதாவினல் ஏற்படும் மாற்றத்தை அவர் விரும்பவில்லை. அதில் கையெழுத்திடாமலே அதைத் திருப்பி அனுப்பிவிட்டார். மும்முறையும் அவ்வாறே கையெழுத்திட மறுத்துவிட்டார். பிரதமரான மகாகனம் கிளாட்ஸ்டனை அழைத்து அம்மசோதாவின் போக்குத் தமக்குப் பிடிக்கவில்லையென்றும் அதில் கையெழுத்திடப்போவதில்லையென்றும் மகாராணியார் இயம்பினர். மகாராணியார் அதில் கையெழுத்திட்டே தீரவேண்டும் என்றார் மகாகனம் கிளாட்ஸ்டன். மகாராணியாருக்கு அவர் ஆணவப் பேச்சு எரிமூட்டியது. ஒரு மந்திரி மகாராணியிடம் அவ்வாறு மூர்க்கமாகப் பேசியது முறையோவெனக் கடாவினர். மகாகனம் கிளாட்ஸ்டன் இறுத்த விடை இதுவாம்: "தாங்கள் மகாராணியார் என்பது உண்மைதான். யானே இங்கிலாந்து பொதுமக்களனைவரும் ஒருங்குதிரண்ட பிரதம மந்திரி; அம்முறையில் தங்களைக் கட்டுப்படுத்த உரிமையுண்டு." இப்பேச்சில் தாமதகுணத்திற் கியல்பான கோபம், ஆணவம் மிகுந்திருப்பினும் பொதுமக்களின் சார்பாகக் காட்டிய மனோவலி நம் சுதந்தரநாட்டு அரசியல்வாதிகட்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். நிற்க, எழுவாய், பயனிலை, செயப்படுபொருளற்ற பேச்சுக்களையும், ஒருமை, பன்மை கெட்ட குற்றமிக்க பேச்சுக்களையும் பல தமிழ்மேடைகளில் இந்நாளும் காண்போம். ஆகலின், மேலே காட்டிய குறைபாடுகளில் சிக்கி இடர்ப்படாது ஒரு பேச்சாளர் தக்க கவனம் செலுத்தி இயல்பாகவே பேசுதல் முறையாமென்ப.

இயற்கை அமைதி

இயற்கைக் குரல், இயற்கை உடல்நிலை ஆகியவைபற்றிய பல நுணுக்கங்கள் இந்நூலில் வெவ்வேறு பகுதிகளில் விளக்கமாகக் கூறப்பெற்றுள்ளன. அவற்றை ஈங்கு மேலும் விரித்தல் மிகையாம். ஆயினும், ஒரு பேச்சாளர் தமது இயற்கைக் குரலை, வேண்டும்போது வேண்டுமளவு சபையோருக்கு வெறுப்புண்டாகாதவாறு உயர்த்தும் ஆற்றல் பெற்றிருத்தல் மிக வேண்டப்படுவதாம். இயற்கை உடலமைதியும், பற்பல அவயவங்களின் சுபாவீக அமைதியும் முயன்றுபெற்றிருத்தல் ஒரு பேச்சாளரின் இன்றியமையாத கடனும். ஒருவர் பேச்சில் இயற்கைப் பொருளமைதி நிரம்பக் காண்டல் அப்பேச்சுக்கு அரண்கோலியதாகும். இயற்கையெனப்படுவது உண்மை யென்பதை

மனதிலிருத்திப் பேசுவோர் பேச்சு, மக்களால் சுவைக்கப்படுதலும் போற்றப்படுதலும் ஒருதலை. பொதுமேடைகளில் புனைந்துரையாடலும் திரித்துக்கூறலும் ஆகாவாம். பேசும் மொழியின் இயல்பு வேறுபடாமலும், வல்லின மெல்லினத் தவறுகள் உண்டாகாமலும், பல தொடர்மொழிகளை அளவுகடந்து அடுக்குவதால் பேச்சுப்பொருள் கெடாமலும் பேச முனைதலே ஒரு நல்ல பேச்சாளரின் இலக்கணமாம். ஒருவர் பேசுங்கால் ஊசல்போல் முன்னும் பின்னுமாகப் பேச்சை ஓட்டிக்கொண்டிருத்தலும், ஒரே சொல்லைப் பலகாற் சொல்லுதலும், ஒரே கருத்தைப் பன்முறை வார்த்தைபேதமின்றிக் கூறிக் களித்தலும் வழூஉவாம். கருத்துப்பேதந் தோன்றாது கடமைக்காக ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் பேச்சை ஆற்றின் இக்கரைக்கும் அக்கரைக்கும் வேறு வேலையின்றிச் செல்லும் ஓடத்திற்கு ஒப்பிடலாம். ஒருவர் பேச்சில் வரும் ஒரே சொல்லை இருமுறை, அன்றி மும்முறை அவசியம்பற்றி அடுக்கிக்கூறுதல் இலக்கணநெறி கொண்டதாம். 'கண்டேன் கண்டேன்' எனவும், 'வந்தேன் வந்தேன்' எனவும், 'இல்லை இல்லை' யெனவும், ' மிக மிக ' 'பலப்பல' எனவும் இரட்டித்துக் கூறல் முறையேயாம். 'இல்லை இல்லை' என வெறுமையாகக் கூறாது, 'இல்லை, அதுதான் இல்லை' என்னும் அழகிய மொழித்தொடர் இந்நாள் பேச்சு வழக்கில் வந்துள்ளது. இதுபோன்ற பல அழகிய சொற்றொடர்களை நாவலர் காண்டல் இந்நாள் மிக வேண்டப்படுவதாம்.

சொற்களின் இயற்கை நிலை

ஒரு பொருளைக் குறித்து வருகிற பல சொற்கள் சிறந்து, பல வகை இயற்கைநிலையில் நிற்பது செவிக்குச் சொல்லின்பம் தருவதாம். பேசுங்கால் சில பொருத்தமான அடைமொழிகளைக் கொண்டு ஒரு இனத்தைக் குறிப்பாய் உணர்த்தலால் வேறு இனங்களின் தன்மையையும் நன்கு விளக்கற் கியலுமென்ப. உதாரணமாகப் 'பாவிகள் நரகம் புகுதல் உறுதி' யெனப்படுவதால் 'புண்ணியர் சுவர்க்கம் புகுதல் நிச்சயம்' என்பது தெளிவுறுத்தப்படுவதாம். ' அறிவாளிகள் இவ்வாறு கருதுவர்' என ஒரு பேச்சாளர் கூறுவதால் 'அவ்வாறு கருதாதவர் அறிவாளிகள் அல்ல'ரென்பது தானே பெறப்படும். ஒரு காரியம் அல்லது பொருள் இல்லையெனப்படுவதிலும் அம்மரபைச் சார்ந்த வேறுபல உள்ளனவெனக் கூறுதல் நெறிமுறையாம். இதனால் வேறுபல உள்ளனவோ எனும் வினாக்களும் தவிர்க்கப்பட்டுச் சந்தேக விபரீதங்களும் உடன் விளங்கப்படுவனவாம். ஒருவர் இயற்கைப் பேச்சில் வரும்

பேச்சுப்பொருள் பேசும்போதே உடன்தோன்றும் தன்மைத்தாயிருத்த லும், நன்கு விளங்கும்முறையில் அமைதலும்வேண்டுமென்பது வலி யுறுத்தப்படுவ தொன்றும்.

ஓர் உவமை

ஒரு நல்ல பேச்சை ஆற்று நீரோட்டத்திற்கு உவமிக்கலாம். ஆற்றுநீர் ஆங்காங்குச் சிறிது அமைந்துநடத்தல் இயல்பாயினும் திரும்பாமல் ஒரேவழி ஓடும் இயற்கை கொண்டதாம். இடையிடையே சற்று அமைதலால் அருகிலுள்ள பயிர்த் தடங்களைச் செழிப்பித்தல் அந் நீரின் இயல்பாம். அந்நீரோட்டம் இறுதியில் முடிவுபெறுவதல்லால், இடையிடையே தேங்கி நின்றுவிடுவதல்ல. அஃதேபோல் நல்ல பேச் சைத் துவக்கிய ஒருவர், சொல்லியதைத் திரும்பத் திரும்பக் கூறாது பேச்சின் மேல்நிலையை நோக்கி விரைதல் முறையாம். ஆற்றுநீர் பயன்தருமாறு இடையிடையே அமைந்து நடத்தல்போல் ஒரு பேச்சும் சில பகுதிகளில் அடங்கியும் பிற பகுதிகளில் தொடர்ந்தும் விரைந்தும் முடிவுரைக்குச் செல்லுதல் மரபென்ப.

மரியாதை மொழி

ஒரு குருடனைச் செந்தாமரைக் கண்ணன் என மேடையில் பரி கசித்துக் கூறல் குற்றமாம். ஒருவரைக் குருடரெனக் கூறாது 'பார்வையற்றவர்', 'கண்ணிழந்தவர்' எனக் கூறுதல் ஒரு பேச்சாளரின் உயர்குணத்தையும் மனோநிலையையும் தெற்றென உணர்த்துவதாம். பேசும் பேச்சில் மற்றொருவரை நேராகவோ மறைமுகமாகவோ தாக் கிப் புண்படுத்தலாகாதென்பதை ஒரு பேச்சாளர் எப்போதும் மனதி லிருத்தல் நன்றும். இதனால் உண்மையை உண்மையாகக் கூறுவதிலும் அதனை நளினமாகக் கூறுதல்வேண்டுமென்பது விளங்கும். பெண் மக்களைக் குறித்துப் பேசும் ஓர் ஆடவர் நினைந்து எழுத்தெண்ணிக் குற்றமற்ற முறையில் பேசுதல்வேண்டும்.

ஈங்கு ஓர் உதாரணம் கூறுதல் மிகையன்று. ஓரமயம் திருமதி சரோஜினி தேவியார் லாகூர் மாணவர் மன்றத்தில் பேசினார். அவைத்தலைவர் அவரைச் சிறப்பித்துக் கூறுகையில் "இந்தியாவில் பெயர்போன ஒரு பொதுமகள் இன்று பேசப்போகிறார்" என்று உற் சாக மிகுதியால் அர்த்தபேத முணராது தம்மையும் மறந்து அறிமுகப் படுத்தினரென்ப! பெண்மணிகளைத் தாக்கிப் பேசுதல் ஆண்மை இயல் புக்கு அடுத்ததன்று. பெண்மக்களைப் பேணுமுறையில் பேசும்

வழியை மேலைநாட்டுப் பழக்க வழக்கங்களினின்றும், உயர்திரு. திரு. வி. க. அவர்கள் பேச்சுக்களினின்றும் நம் தமிழ்நாட்டார் கற்று ஒழுகவேண்டிய நிலையில் இன்றிருக்கின்றனரென்பது மிகையன்று.

பேச்சு வேற்றுமை

தமிழ்ப்பேச்சின் இயல்பு, நிலம், சாதி, குடி, உடைமை, குணம், தொழில், கல்வி முதலியவற்றால் வேற்றுமைபெற்றிருத்தல் கண்கூடாம். ஈழத்தே பேசுந்தமிழ் தென்னாட்டுத் தமிழினும் உச்சரிப்பும் வார்த்தை பேதமுங்கொண்டு விளங்கும் இயல்புடைத்து. நெல்லைத் தமிழ்ப் பேச்சுக்கும் மதுரைத் தமிழ்ப்பேச்சுக்கும் வேற்றுமையுண்டு. சென்னைத் தமிழ்ப் பேச்சு, யாதிலும் சேராத ஒருவகைத் தமிழ்ப் பேச்சாம். எழுத்துபேதம் வார்த்தைபேத மில்லாவிடத்தும் நிலவேற்றுமையாலும் மக்கள் இயல்பாலும் தமிழ்மொழி ஆங்காங்கு வேறுபட்டிருத்தலைக் காண்போம். மழைநீரின்கண் எவ்விதப் பேதமும் இல்லாவிடினும், அந் நீர், தேங்குமிடங்களிலுள்ளமண்ணின் நிறம், குணம், மணம் ஆகிய வற்றை அடைதல்போல், தமிழ்மொழியும் நிலவேறுபாட்டிற்கும் மக்கள் வேறுபாட்டிற்கும் ஏற்றவாறு திரிபடைதல் இயல்பாம். இனி நந்தமிழ்மொழி ஈங்கும் இலங்கையிலும் அரசாங்க மொழியாகும் காலத்து, இவ்வித வேறுபாடுகள் காலக்கிரமத்தே அறவே ஒழிந்து சங்க காலத்தே கண்ட துங்கத் தமிழாகச் சுடர்விட் டொளிரும் என்பதில் சிறிதும் ஐயமின்றாம்.

---

10. மங்கலச்சொல்

இனிய தமிழ்

'இனிமை' யெனப்படும் தமிழ்மொழியை ஒல்லும்வகை சுபச் சொற்கள்கொண்டு பேசுதல் ஈங்கு மங்கலச்சொல் அல்லது மங் கல மொழி யெனப்படும். பண்டைய தமிழ் மக்கள் - இலக்கிய இலக்கணி கள் - மங்கலமொழிகளில் மிக நாட்டங்கொண்டவராவர். தனித்த எழுத்துக்களிலும், குறிப்பிட்ட நல்லெழுத்துக்கள் கூட்டுறவுகொண்ட மொழிகளிலும் நமது மூதாதையர் மிக்க கவனம் செலுத்தியவ ரென்பது ஆராய்ச்சியால் அறியக்கிடப்பதாம். தமிழ்மொழியில் ஆய்ந்தெடுக்கப்பெற்ற உயிர் நாடியாயுள்ள எழுத்துக்களால் அமைந்த

ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்துக்கள் கொண்ட மந்திரங்களை நமது முன்னோர் உலகுக்குப் பண்டே தந்துள்ளனர். அவைகளை நாப் புடை பெயராது தொடர்ந்து உச்சரித்தலால், அவைகளினின்றெழும் மங்கலஒலி ஒருவர் மனதைப் பரிசுத்தமாக்கி, அகந்தையைப் போக்கி, பேரறிவைத் தந்து, வீடளிக்கும் ஆற்றல் பெற்றதாமென்பது ஆன்றோர் கண்ட அநுபவமாம். அதன் காரணமாக அவை மகா மந்திரங்களென நாளும் இந்நாட்டில் போற்றிக் கொண்டாடப்படுவன வாம். மேலை நாடுகளிலும், சில சொற்கள் மங்கல ஒலியுள்ளனவாகக் கருதப்பட்டன. அந்நாடுகளில் 'அப்ரகாடெப்ரா' (Abracadabra) எனும் மொழியை மந்திரமாகக் கருதுவோர் இந்நாளும் உண்டு. இன்னும் பல்வேறு தேசமொழிகளில் மின்சார சக்திவாய்ந்த மொழிகள் உண்டென்பது சரித்திரங்களால் அறியக்கிடக்கும் உண்மையாம்.

மங்கலச் சொற்கள்

நமது நாட்டுப் பேராசிரியர்களும் புலவர்களும் தாம் எழுதிய வசனங்களிலும் யாத்துள செய்யுட்களிலும் முதற்சொல்லாக வருவதற் குரிய சுபமொழிகளையும், நல்லொலி பல்கும் எழுத்துக்களையும் தேர்ந்தே கையாண்டுள்ளனர். பெரியபுராணம் இயற்றிய ஆசிரியருக்கு 'உலகெலாம்' எனும் ஆரம்பமொழியைக் கடவுளே எடுத்துத்தந்தன ரென்பது இன்றும் தமிழுலகு பக்தியோடு முற்றும் நம்பும் உண் மையாம். எண்ணிக்கை இருபத்திரண்டுடைய இத்தகைய சுபமொழி களைப் பெரியார் பண்டே கண்டுள்ளனர். அவைகள் உலகு, திரு, யானை, தேர், பூ, பரி, கடல், மலை, மணி, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, பரிதி, அமிழ்தம் எனப் படுவனவாம். இவ்வார்த்தைகளில் ஒன்றைத் தலைப்பில் வைத்தே தமிழ் நூற்கள் நாளும் எழுதப்படுவனவாம். எனவே, தமிழ் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்தலிலும், அவைகளை இடமறிந்து உபயோகித்தலிலும் நமது பெரியார்கள் எத்துணை நாட்டங் கொண் டிருந்தனரென்பது இதனால் நன்கு புலனாகும்.

இலக்கண நெறி

இலக்கண நூல்வல்லோர் சிலமொழிகளை இலக்கணநெறி கண்ட தென்றும், மற்றும் சிலவற்றை இலக்கணப் போலியென்றும், வேறு சில வற்றை மரூஉ என்றும் கூறுநிற்பர். இவை மூன்றும் இயல்பு வழக்கின் கீழ் வருவனவாம். மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி என்பன

தகுதிவழக்கில் சேர்ந்தவையாம். இவற்றைச் சில உதாரணங்களால் விளக்குதல் முறையாம். நிலம், நீர், தண்ணீர், வெந்நீர் போன்ற மொழிகள் இலக்கண நெறி பற்றியவை. கோவில் எனும் சொல் கோயில் எனவும், நகர்ப்புறம் என்பது புறநகர் எனவும் இலக்கண நெறிகொண்டன போல் ஒலித்தல் இலக்கணப் போலி யெனப்படுவதாம். தஞ்சாவூர் தஞ்சையெனவும், புதுச்சேரி புதுவை எனவும், சென்னப் பட்டினம் சென்னை யெனவும், பாண்டியநாடு பாண்டி நாடு எனவும் வழங்குவன மரூஉ மொழிகளாம். மங்கல மில்லாத மொழிகளையும் நிகழ்ச்சிகளையும் மங்கலம் அல்லது சுப மொழிகொண்டு கூறுவது பண்டைத் தமிழ் நாட்டுமக்களின் இயல்பாம். இத்தகைய மொழிகளைத் தகுதிவழக்கெனக் கூறி வழக்கப்பாட்டின் கீழ் ஆன்றோர் கொணர்ந் துள்ளனர். மங்கலம் என்பது மங்கலத்தை மங்கலமாகவும், மங்கல மல்லாதவையும் மங்கலமாகவும் கூறுதலாம். வெளிப்படையாகக் கூறப் படாத ஒன்றை மறைத்து வேறு மொழிகொண்டு ஆபாசம் தோன்றாது நளினமாகக் கூறுதல் இடக்கரடக்கலாம். ஒரு கூட்டத்தார் அல்லது சமூகத்தார் ஓர் உண்மைப் பொருளின் சொற்குறியை மறைத்துப் பிறருக்கு விளங்காத வேறொரு சொற்குறியால் சங்கேதமாகப் பேசுதல் குழூஉக்குறி எனப்படுவதாம். மங்கலமானவற்றை, மங்கலமொழிக ளால் கூறுதலும், மங்கலமல்லாத 'சுடுகாட்டை', 'நன்காடு' எனவும், 'சாதல்' என்பதை 'துஞ்சுதல்', 'மறைதல்' எனவும் அருவருப்புத் தோன்றாது கூறுதல் மங்கலமாம். வெளிக்குப் போய்க் கழுவிவந்த உண்மைச் செயலை மறைத்துக் கால் கழுவிவந்தான் எனக் கூறுதல் இடக்கரடக்கலாம். தண்ணீரைத் 'தூத்தம்', வீட்டை 'ஆம்' என்றும், பொன்னைப் 'பரியாசு' என்றும், கள்ளைச் 'சொல் விளம்பி', 'மது' வென்றும் இன்னனைய மொழிகளைச் சில மக்கள் தத்தம் பேச்சில் கையாளுதல் மங்கலமான குழூஉக்குறியென இலக்கண நூல்வல்லோர் வகுத்துள்ளனர். இவற்றால் நமது பண்டையர், பேச்சு முறையில் தமிழ் வார்த்தைகளை இனிமையாகவும், மங்கலமாகவும் யாண்டும் மொழிதல் வேண்டுமென நமக்கு அறிவு புகட்டியுள்ளனர்.

நமது நாட்டு வழக்கு

சுபகாரியங்களில் சுபச் சின்னங்கள் கொண்டும், சுபமொழிகள் புகன்றும், இறுதியில் ' சுபம், சுபம் ' எனப் பன்முறை கூறியும் களித்தல் இன்றுமுள்ள தமிழ் நாட்டு வழக்கமாம். ' பொங்கும் மங்களம் எங்கும் தங்குக ' எனும் சொற்றொடர் இந்நாள் நமது

நாட்டில் கையாளப்பெறும் சுபமொழித் தொடராம். எனவே, எக்காரியத்தையும் சுபமொழிகொண்டு ஆரம்பித்தலும், சுபமொழி கொண்டே முடித்தலும் வேண்டுமென்பது நன்கு புலப்படும். மேடைத் தமிழ்ப் பேச்சு இதற்கு விலக்கானதல்ல வெனக் கோடல் தவறன்று.

சில நற்காரியங்களைத் தொடங்கு முன்னர்ப் பெரியபுராணம், திருவாசகம், இராமாயணம், பாரதம் ஆகிய தொன்னூற்களில் நூலிட்டுப் பார்த்து, அப்பக்கங்களில் சுபமொழிகள் தென்படுமேல், அக்காரியங்களை மேற்கொள்ளலும் இல்லையாயின் எத்துணைப் பெரிய காரியங்களாயினும் அவைகளைக் கைவிடுதலும் சில பெரியோர்மாட்டு இந்நாளும் காணப்பெறும் வழக்காம். இப்பழக்கத்தில் நம்பிக்கை யுள்ளோரும், இது மூடப் பழக்கமென எள்ளுவோரும் நம்முள் பலர் உண்டு. இவ்விரண்டனுள் எதைத்தள்ளுவது அல்லது கொள்ளுவதெனும் ஆராய்ச்சி ஈங்கு வேண்டுவதில்லை. எனினும், நல்லமொழியை - மங்கலச் சொல்லை நமது தமிழ்மக்கள் நாடினர், நாடுகின்றார் எனும் உண்மையை மறைத்தற்கியலாது. இன்றேல், 'இனிமை', இன்பத்தேன்', 'செந்தமிழ்' என்னும் சிறப்புப் பெயர்களை நந்தமிழ்மொழி பெற்றிராதென்பது திண்ணம்.

கூடா மொழிகள்

சாதாரண வீட்டுப் பேச்சிலும் மங்கல மல்லாத மொழியைப் புகல்தல் அருவருப்பைத் தருவதாகும். கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள பெண்மக்கள் 'விளக்கு அணைந்தது' எனக் கூறாது, 'விளக்குக் குளிர்ந்தது' என மங்கலமாகவே நாளும் கூறி நிற்பர். சிலர் பேசுங்கால், 'இல்லை', 'வேண்டாம்', 'முடியாது', 'ஆகாது', 'கூடாது' எனும் எதிர்மறைச் சொற்களை உபயோகிப்பதை நமது பெரியோர் விரும்புவதில்லை. அங்ஙனம் கூற நேரிடின் எதிர்மறை உடன்பாட்டுச் சொற்களால் அக்கருத்தை விளக்குதல் முறையெனப் பெரியோர் கூறுவர். ஆகலின் சொற்களை ஆய்ந்தெடுப்பதிலும் அவற்றை மங்கலமாகக் கூறுவதிலும் பண்டு தொட்டே இத் தமிழ்நாட்டில் கவனம் செலுத்தப்பெற்று வந்ததென்பது வெள்ளிடை மலையாம்.

மங்கல ஒலிவழி

ஒரு மேடைத் தமிழ்ப் பேச்சில் ஆரம்பம் தொட்டு இறுதிவரை எல்லாச் சொற்களும் மங்கலமாக ஒலித்தல் வேண்டுமென்பது

கட்டாய விதியல்ல. அங்ஙனம் செய்தலும் அனுபவ சாத்திய மல்ல. ஆரம்பத்திலும், இடையிலும், முடிவிலும் இரண்டொரு மங்கலச் சொற்களை உபயோகித்தல் அப்பேச்சுக்கு ஒரு தனிச் சொலிப் பைத் தருவதாகும். ஒரு சொற்பெருக்கில் விதண்டாவாதமாகப் பேசத் துணிவோருக்கு மங்கல மொழிகள் தென்படுவது அருமை. மற்றொரு வரை இகழ்ச்சியாக இடித்துரைக்க முற்படுவோர் மாட்டும் மங்கலச் சொல் விளக்கமுறுவதில்லை. சாந்தமாகவும், நிதான உணர்ச்சி யோடும் பேசும் ஒரு மேடைப் பேச்சாளர்பால் மங்கலச் சொற்கள் முயற்சியின்றித் தாமே பிறங்குவனவாம். ஆதலின், ஒரு நல்ல மேடைத் தமிழ்ப் பேச்சுக்கு ஆய்ந்தெடுத்து அளவோடு உபயோகிக்கும் மங்கல மொழிகள், மேலும் அழகு செய்வனவாம்.

---

11. பேச்சுப் போட்டி

உலக முன்னேற்றம்

நாகரிக உலகில் எல்லாத் துறைகளிலும் பரவி நிற்கும் பல போட்டிகளாலேயே மக்கள் அவ்வவற்றில் முன்னேற்றம் பெற்று வருகின்றனர். போட்டி யில்லையேல் உலகம் வளர்ச்சி பெறாது தேங் கிக் கிடப்பதாகும். போட்டிக் காட்சிகளும், போட்டி முயற்சிகளும் மக்களுக்கு மென்மேலும் அறிவு வளர்ச்சி உண்டாக்குவனவாம். அண்மையில் முடிவு பெற்ற இரண்டாவது உலக யுத்தத்தின் பிற்பலனை நோக்குவோம். யுத்தத்தில் ஈடுபட்டிருந்த எல்லா வல்லரசுகளும் ஒன்றோடொன்று போட்டி கொண்டு தத்தம் யுத்த தளவாடங்களை எத்துணைச் செப்பம் செய்தன! நாசகாரியமாகிய போரிலும், மக்கள் தத்தம் நாடு வெற்றி பெறும் நோக்கமாய்க் கண்ணீர்ப் புகை தொட்டு அணுகுண்டு உற்பத்திவரைப் போட்டியிட்டு, அவை சம்பந்தமான கைத் தொழில்களையும் விஞ்ஞான அறிவையும் வளர்ச்சி பெறச் செய்துள்ள னர். இஃதொன்றால், 'வரும் தீமையெல்லாம் ஒரு நன்மைக்கே' எனும் ஆன்றமைந்த சான்றோர் மொழி ஒரோவழி உண்மையாகும்.

பேச்சுப் போட்டிகள்

இந்தியாவில் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் சென்ற ஒரு நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருவனவாம். இப்போட்டிகளில் ஒரு

பேச்சாளர் மற்றொரு பேச்சாளரிலும் மிஞ்சப் பேசுதலே முக்கிய நோக்காம். ஆங்கில ஆட்சியும், ஆங்கில மொழியும் இந்நாட்டில் வேரூன்றிய காலந்தொட்டு மேலைநாட்டு நாவலர்களையும் அந்நாட்டுச் சொற்பொழிவுகளையும் விவாதங்களையும் நம்மக்கள் பெரிதும் பின் பற்றுவாராயினர். ஆங்கில மேடைப் பேச்சுக்கான நூற்கள் ஆயிரக் கணக்கில் மேலைநாடுகளிலும், இந்நாட்டிலும் மலிந்து கிடைப்பனவாம். நாகரித்தினுச்சத்தில் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னின்ற கிரீஸ், ரோம் ஆகிய தேசங்களின் பெரு நாவலர்களது பண்டைய பேச்சுக்களும் விவாதங்களும் இதர தேச மொழிகளில் எல்லாம் வெளி வந்துள்ளன. இங்கிலாந்து தேசம் இவற்றால் பேச்சுத்துறையில் முன்னணிக்கு வந்ததென வலியுறுத்திக் கூறல் மிகையன்று. இந்நாள் பாராளு மன்றத்தில் கையாளப்பெறும் பேச்சு முறைகளும், சொற்போர்களும் மறைவுண்ட அத் தேச முறைகளைத் தழுவி நிற்பனவாம். இங்கிலாந்தில் பாராளு மன்றம் தோன்றிச் சுமார் அறுநூற்றெண்பது ஆண்டுகளாகின்றன. இக்காலத்திற்குள் அம்மகா சபையின் பேச்சு முறைகளும் விவாதங்களும் எத்துணையோ வளர்ச்சி பெற்று, உலகுக்கு எடுத்துக் காட்டாக இந்நாள் விளங்குகின்றன. அத்தாய் மன்றத்தே பல்வேறு கட்சிகளைச் சார்ந்த நாவலர்கள் போட்டியிட்டுப் பேசியுள்ள பேச்சுக்களும், சொற் போர்களும் பிறநாட்டு மக்களையும் நம்மையும் திடுக்கிடச் செய்வனவாம். தந்தை பிட் என்பாரும், தனயன் பிட் எனும் நாவலரும் ஒருவருக் கொருவர் பின்னிடாது பாராளு மன்றப் பெருஞ் சபையில் பேசி அச்சபையை அலங்கரித்திருந்தன ரென்பது சரித்திரம். உவாரன்ஸ் ஹேஸ்டிங்ஸ் பிரபு மீது துரோகப்பழி சுமத்திப் பேசிய பர்க் எனும் நாவலரும் ஷெரிடன் எனும் பெரியாரும் பல நாட்கணக்கில் ஒருவரோ டொருவர் போட்டியிட்டுப் பேசி மக்களுக்குக் களிப்பூட்டினரென்ப. சென்ற நூற்றாண்டினிறுதியில் வதிந்த இருமா பெரும் நாவலர்களான டிஸ்ரலி, கிலாட்ஸ்டன் ஆகியோர் பாராளுமன்றத்தில் போட்டியிட்டுப் பேசியுள்ள பேச்சுக்கள் மக்களால் நாளும் போற்றப் படுவனவாம். மேலும் விரித்தல் எற்றிற்கு? நீதி மன்றங்களில் அன்றாடம் நடைபெறும் வாதப்போர்கள் ஒருவர் மற்றவரை வெற்றி கொள்வதற்கன்றோ? ஆகலின் மேடைப் பேச்செனின், அதனின்றும் வேறாக்கப்படாத பேச்சுப் போட்டியும் அதனூடே பிணைந்து நிற்றல் கண்கூடாம்.

தமிழ்ப் பேச்சுப் போட்டிகள்

தமிழ் நாட்டின்கண் மேடைப் பேச்சுக்கு ஆதாரமான யாதொரு நூலும், வழிகாட்டும் பேச்சுக்களும் நூல்வடிவில் இல்லாதிருந்தும், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளை ஒருபுடை தழுவித் தமிழ்ப் பேச்சுப் போட்டிகள் இந்நாள் ஒரோவழி ஆங்காங்கு நிகழ்கின்றன. உயர்தரக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும், பலவேறு சங்கங்களிலும் தமிழ்ப் பேச்சுப் போட்டிகள் நிறுவப்பெற்றுத் தக்க பரிசில்கள் வழங்கப் பெறுகின்றன. அப்பேச்சுக்களைச் சீர்தூக்கி, சுவையுடனும் கருத்துப் பொலிவுடனும் பேசுவோரைக் கண்டறிய நடுவர்களைத் தேர்ந்தெடுப்ப துண்டு. இந் நடுவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலப் பேச்சு முறையை உரையாணியாகக் கொண்டு தமிழ்ப்பேச்சின் உயர்வு தாழ்வை அளவிட் டறியும் பரிகசிக்கத்தகும் முறையில் இதுபோழ்ந்து இருந்து வருதல் கண் கூடு. தமிழ் நாட்டின்கண் தமிழ்ப் பேச்சுக்கள் மலிந்து, தமிழ் நாவலர்கள் மிகுந்து, தமிழ்ப் பேச்சுப்போட்டிகளைத் தமிழ் உள்ளங் கொண்டு சோதித் தறியப்படும் காலமே அப்பேச்சுப் போட்டிகளும், பேச்சாளர்களும் தமிழ்ப் பேச்சின் உச்ச நிலை காணும் காலமாம். ஆங்கிலக் கண்கொண்டு தமிழ்ப் பேச்சுக்களை நோக்காதிருத்தலும், தமிழ்க் கண்கொண்டே தமிழ்ப்பேச்சை நோக்கலும் வேண்டுமென்பது ஈங்கு வலியுறுத்தப் படுவதாம்.

பிறிதொரு பகுதியில் கூறியுள்ளவாறு, மேடைத் தமிழ்ப் பேச் சாளர் ஒருவருக்குச் சுமார் இரண்டாயிரம் தமிழ் வார்த்தைகளி னுதவியே போதியதாம். மேடைப் பேச்சு வளர வளர, நமது நாவலர்கள் மேலும் பல்லாயிரக் கணக்கான வார்த்தைகளைக் கையாள வல்லுநராவர் என்பது உறுதி. இந்நாள் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் எவ்வளவு தமிழ்ச் சொற்களைக் கையாளக் கூடுமென எவராலும் அறுதியிட்டுக் கூறல் இயலாது. ஆங்கிலத்தில் தோய்ந்து நடுவர்களாய் வருபவர்கள் எத்துணைத் தமிழ்ப் பதங்களைச் சந்தேக விபரீதமற அறிந்தவராவர்? எனவே, இந்நாள் தமிழ்ப்பேச்சுப் போட்டிகள் அம்மொழியின் அடிப்படை காணாது ஆங்கில முறையில், பெயர் மாத்திரமாக ஒரோவழி நடைபெறுவனவாம்.

பேச்சுப் போட்டியின் வழிகள்

இனி, இப்பேச்சுப் போட்டிகள் நடைபெறும் வழியை நோக்கு வோம். பேசவேண்டிய செய்திபற்றிப் பல வாரங்கட்கு முன்னரே

மாணவர் அறிவிக்கப்படுதல் முறையாம். பேசுங் காலவரையும் முற் கூட்டி அறிவிக்கப்படுதலுமுண்டு. நடுவர் தலைமையில் கூடும் அவையில் ஒருவர் பின்னொருவராய் மாணவர்கள் பேசவிடப்படுவது வழக்கு. ஒரு மாணவர் பேசுங்கால் இதர போட்டிப் பேச்சாளர்களைச் சபையில் இருக்க அநுமதித்தல் முறையன்று. அவ்வாறு செய்தல், புத்தகங்களின் உதவிகொண்டு ஒரு தேர்வில் .ஒரு மாணவன் கேள்வித்தாள்கட்கு விடையிறுத்தலைப் போலாம். இத்தகைய பேச்சுக்களை நடுவர் தூக்குங் கால் சொற்சுவையையும், சொற்போக்கையும் மட்டுமே கவனித்தல் சரி யன்று. ஒருவர் விரைவாகப் பேசலாம் ; சொல்லணியோடும் பேசலாம்; இனிமையாகவும் பேசலாம் ; அலங்காரமும் உணர்ச்சி பாவமும் தோன்றப் பேசலாம். ஆனால், ஒரு மாணவர் எத்துணைச் சிறிய மொழி களைக் கொண்டு தமது கருத்தை விளக்குகின்றாரென்பதையும், எத் துணை நூதன மொழிகளைப் புகுத்திப் பேசுகின்றாரென்பதையும், தமது கருத்தை எவ்வாறு படிப்படியே மக்கள் மனதில் பதியுமாறு விளக்கு கின்றாரென்பதையும் நடுவர் விழித்திருந்து நோக்குதல் வேண்டும். ஊன்றியும் சங்கிலித் தொடர்போன்ற - கருத்துப் பிணைப்புள்ள - சிறு வாசகங்களைக் கொண்டும் பேசுகின்றாரா வெனக் கவனித்தறிதலும் நடுவர் கடமையாம். மற்றொன்றும் நடுவர் கவனத்திற்கு உரித்தாம்.

சில பேச்சாளர் நிறுத்தியும் நிதானமாகவும் தனித்தனி உதிரி மொழியாகவும் பேசுதலே நாவன்மையெனக் கருதிப் பேச்சுப் போட்டி களில் அவ்வாறு பேசிக்காட்ட முயல்வர். இப்பழக்கம் மிகக் கொடிய தொன்றாம். மிக விரைந்து பேசுதல் எத்துணையளவு குற்றமோ அத் துணையளவு வார்த்தைகளை எண்ணியெண்ணிப் பேசுதலும் குற்றமாம். ஓர் உதாரணம் ஈங்குத் தருவோம். நமது மாகாண முன்பிரதமரான கனம். டி. பிரகாசம் அண்மையில் சென்னைக் கவர்னர் மேன்மை தங்கிய நை அவர்கள் தலைமையில் செயிண்டு மேரி மண்டபத்தில் பேசினார். தமது பேச்சை மெல்லிய குரலில் ஆரம்பித்தார். வார்த்தைகளை ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணக்கூடிய சாவதானத்தில் பேசிக்கொண் டிருந்தார். 'வயோதிகம், ஐயோ, பாவம்!' என மக்கள் சொல்லிக் கொண்டனர். அவர் பேச்சு ஓரிடத்தில் ஐந்து நிமிடங்கள் நின்றே போயிற்று. கவர்னர் துரையும் சபையோரும் அவருக்கு யாது நேர்ந்ததென அவரைக் கூர்ந்து நோக்கினர்! இதனிடையில் சபையில் அமைதியின்மையும் கலவரமும் உண்டாயின. ஏழு நிமிடங்களில் முடிக்கக் கூடிய அச்சிறிய பேச்சைச் சுமார் இருபத்தைந்து நிமிடங்கள்

நீட்டிப் பேசிக்கொண்டிருந்ததை மக்கள் சுவைக்கவில்லை; வெறுத்தன ரென்பது தெள்ளிதில் விளங்கிற்று.

குணமான பேச்சு

பேச்சுப் போட்டிகளில் சில ஆரம்பப் பேச்சாளர் பிறர்மாட்டுக் குற்றங் காண்பதிலும், நேரிடப் புகழ்வதிலும் இறங்குவர். சிலவேளை இம்முறை நன்மை பயக்கலாம். புகழ்ச்சியான பேச்சுக்கு ஒரு பொது மேடை இடந்தருவதியல்பு. அது பேசுவோருக்கும், புகழப்படுவோருக்கும் திருப்தியளிக்கும். ஆயினும், அத்தகைய பேச்சு நாளடைவில் பலரின் அதிருப்தியையும் அசூயையும் பெறவல்லதாம். எனவே ஒரு பேச்சாளர் அப்பழக்கத்திற் கிடங்கொடுத்தல் தீதேயாம். குற்றங் காணும் பேச்சு பொது மேடைக் குகந்ததல்ல. குற்றம் எனும் மூக்குக் கண்ணாடியைத் தரித்து அவ்வழிப் பார்ப்பவருக்கு உலகம் குற்றமய மாகவே தோன்றும். சிலவேளை, ஒருவர் குற்றத்தை எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுவதுண்டு. நாவன்மை கொண்ட பெரியோர் அவ்விதக் குற்றங்களை நளினமாகக் கூறுவர். ஒரு தமிழ் நாவலர் பேசிய திதுவாம்: "அவைத் தலைவர் கல்விப் பெருங்கடலின் கரை கண்டவர். குகனடி மறவாக் குணப்பெருந்தகையர். அவனருட் செல்வம் அடைந் தொளிர்பவர். இரப்பார்க்கு இல்லையெனது வரையாது அளிக்கும் வள்ளல். இத்தகைய குணக்குன்றின்பால், நல்லுணவுக்கு உப்பிட்டாங்கு, ஒவ்வோர் வேளை வெகுளி கனன் றுறவாடும். ஆயினும் அது 'விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல்' மாறும் இயல்புடைத்து." இவ்வாறு அவைத்தலைவர் அங்கீகரிக்கும் முறையில் அவர் பாலுள்ள குணக்கேட்டை நல்லுளம் கொண்டு நயம்படக் கூறியது ஒரு குற்றமற்ற முறையாம். பேச்சுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் இத்தகைய சூழல்களில் சிக்காதிருத்தல் நலமாம். 'நாவினுற் சுட்டபுண் ஆறாது' எனும் ஆன்றோர் மொழியை ஒரு பேச்சாளர் கருவிற் றரித்திருத்தல் மேலாம்.

புகழ்தல்

புகழ்ச்சியான பேச்சுக்களில், ஒருவரை முக முன்னிலையில் புகழ்தல் குற்றமாம். ஆயினும் அத்தகைய புகழ்மொழிகளை முற்கூட்டித் தீர ஆலோசித்துப் பேசுதற்கு நீடிய மேடைப்பழக்கம் இன்றியமையாததாம். ஒருவரைப் புகழப் புகுமுகத்தான், 'குளிக்கப் போயும் சேறு பூசிக்கொண்டதுபோல்' ஆபாசமாகப் பேசிப்

புகழப்படுவோரின் பகைமையைப் பெறுதல் எவ்வாற்றானும் கூடா தென்ப. லார்டு பீவர்புரூக் எனும் நாவலர், "நேரிடப் புகழ்தல் அலை கடல் அடங்கற்கு எண்ணெயை ஊற்றியதுபோலாம். அதனை எவரும் அருவருக்கார். ஆயினும் அளவுக்கு மிஞ்சிப் புகழ்தல் கூடாது" எனக் கூறுகின்றார். எட்மண்ட் பார்க் எனும் மாபெரும் நாவலர், "மித மிஞ்சிப் புகழ்தல் புகழ்வோர்க்கும், புகழப்படுவோர்க்கும் படுதீங்கிழைப் பதாம். ஒருவர் புகழுரை நேர்மையானதாயின், அது வெறும் உபசார வார்த்தையாக மாட்டாது" என்றார். மாணவர்க்கேற்ற உதாரண மொன்று ஈண்டுத்தருதல் பொருத்தம். மேலைநாட்டுப் பள்ளியொன்றில் ஒரு ஸ்பானிஷ் பேச்சுப் போட்டி நிகழ்ந்தது. ஒவ்வொரு மாணவருக் கும் பேசுதற்குப் பத்து நிமிட நேரமளிக்கப்பட்டது. அப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர், "ஜேம்ஸ் எனும் என் வகுப்பு மாணவரைப் போல் என்னிடம் சொற்சுவையும் சொல்வன்மையும் இருக்குமேல் நான் இங்குப் பேசுதற்குத் தகுதிபெற்றவனாவேன். பிரௌன் எனும் என் கெழுதகை நண்பர் மாட்டுள்ள கல்வித்திறனும் வார்த்தைச் சித்திர மும் என்னிடமிருக்குமாயின், இப்போது கருத்துகட்கும் வார்த்தைகட் கும் அலைவதுபோல் உழலேன். நண்பர் ராபின்சன் போன்று என்னிடம் நகைச்சுவை மலிந்த பேச்சு இருக்குமாயின் உங்களையெல்லாம் களிப் பித்துப் பெரும் நகைப்பில் ஆழ்த்தியிருப்பேன். மற்றொரு நண்பரான ராபர்ட் என்பாரைப் போன்று என்மாட்டுத் தர்க்கவன்மை இருக்கு மேல் உங்களனைவரின் நன்மதிப்பையும் கொள்ளைகொண்டிருப்பேன். நீங்கள் வழங்கவிருக்கும் பரிசிலும் என்னுடையதேயாகும்" என நளினமாகக் கூறி அப்பரிசிலைப் பெற்றவழி மெச்சத் தக்கதொன்றாம். நடுவர்கள் இத்தகைய வன்மைபெற்றவர் மாட்டுத் தனிக்கவனம் செலுத் தல் முறையென்க.

நடுவர் கடமை

மற்றொரு முக்கிய கடமையும் நடுவர்கட்குண்டு. போட்டியில் கலந்துகொள்வோரின் மனப்பான்மையையும், பேசும் செய்தியின் பொருத்தத்தையும் ஊன்றி நோக்குதல் கடனாம். சிலர் பரிசில் பெறும் நோக்கமாய்த் தங்கள் மனச்சான்றையும், பேச்சுப் பொருள் பற்றிய தங்கள் திட்டமான கருத்துக்களையும் கொள்கைகளையும் கைவிடுத்துப் பேச முயல்வர். இத்தகையோர் பேச்சில் உண்மைப் பொருளைக் காண்ட லரிதாம். எனவே, இத்தகைய பேச்சு வெறும் நடிப்பேயாகும். அமெரிக்காவின் ஐக்கியபதியான உட்ரோவில்சன் தமது கல்லூரி நாட்

களில் ஒப்புயர்வற்ற நாவலராக விளங்கி, ஒவ்வோர் ஆண்டும் சொற்பொழிவுப் பரிசில்கள் வழங்கப்பெற்றவராவார். ஓராண்டில், போட்டிக்காக வர்த்தக சம்பந்தமான பேச்சொன்றை நடுவர்கள் நிச்சயித்தனர். உட்ரோவில்சன் வர்த்தக முன்னேற்றத்தில் தாராளமான நோக்கும் நம்பிக்கையும் கொண்டவர். ஆயினும் அவ்வாண்டு வர்த்தகத் தடைகளைப் பற்றிப் பேசுவோருக்குப் பரிசில் வழங்குவதென நடுவர்கள் முற்கூட்டித் தீர்மானித்திருந்தனர். உட்ரோவில்சன் அதைக் குறித்தும் பேச வல்லவராயினும், பேச்சுப் போட்டிக்குக் குறித்த செய்தி தமது மனச்சான்றுக்கும், அதுபற்றித் தாம் கொண்டுள்ள திடமான கொள்கைகட்கும் முரண்பட்டதெனக் கருதியதால் அப்போட்டியில் கலந்து கொள்ள மறுத்துவிட்டார். அப்பெரும் பரிசிலின் வேட்கை அவரை நேரிய பாட்டையினின்றும் திருப்பக்கூடவில்லை. அவர் பிற்காலத்தில் அமெரிக்காவின் ஐக்கியபதி யானதில் ஆச்சரியப்படுவதற் கேதுமில்லை. அவரது உண்மை உள்ளம் அறிந்தே, தமது பட்டத்தைத் துறந்த டாக்டர். எஸ். சுப்பிரமணிய அய்யர், வீராவேசம் கொண்டு, உண்மை நெறியினின்றும் பிறழ்ந்த பிரிட்டிஷ் ஆட்சியைக் குறித்து உட்ரோவில்சனுக்கு 1917-ம் ஆண்டு ஒரு முடங்கல் தீட்டினர். அஃது ஆங்கிலப் பெருமக்களின் உள்ளத்தைக் கலக்கிற்றென்பது மிகையல்ல. எந்நாட்டு மக்களாயினும், உண்மை உள்ளம் படைத்த இரு பெருமக்களின் நெஞ்சம், ஒன்றுவதிலும் பொதுமை அறவழியிற் செல்லுவதிலுமல்லாது வேறு எதிற் செல்லுதல் கூடும் ?

நடுவர் நேர்மை

பேச்சுப் போட்டிகளில் நடுவர்கள் மனச்சான்றுடன் நடந்து கொள்ளலே மாண்புடைத்தாம். சாதி சமய வேறுபாடும், புறச்சான்றுகளின் வேற்றுமையும், ஒரு பேச்சாளர் மாட்டு விருப்பும் வெறுப்பும் காட்டுவோர் நடுவராக இருக்க அருகராகார். சிபார்சு முடங்கல் பெற்று வருவோர்மாட்டுத் தனிச் சலுகை காட்டும் நடுவர்கள் இந்நாட்டிலே மலியக் காண்போம். இது பேசுவோரின் சுயமுயற்சியைப் பாழ்படுத்துவதாகும். பேச்சுப் போட்டியில் ஒரு பேச்சாளர் பேசும் பொருளின் சுவையைப் பல கூறுக்கிச் சிறந்த ஒவ்வொன்றிற்கும் ஒரு புள்ளி (மார்க்) தருதலும், தவறுனவைகட்கு ஒரு புள்ளி குறைத்தலும் செய்து, இறுதியில் எல்லாப் பேச்சாளரும் பெற்றுள்ள புள்ளிகளையும் கணக்கிட்டுப் பார்த்து முடிவு கூறும் முறையை நடுவர்கள் கையாள்வராயின், அவர்களால் நிச்சயிக்கப்பெறும் பரிசில்கள் அவற்றின்

கொடையாளர்கட்கும், வழங்கப்படுவோர்க்கும் இன்பம் பயப்பனவாம். மேலே காட்டியுள்ளவாறு தமிழ்ப்பேச்சுப் போட்டிகள் வளர்ச்சி பெறு மேல், தமிழினமும், தமிழ்நாடும் பெருவளர்ச்சி பெற்று உலகில் எல்லா நாகரிகத்துறைகளிலும் முன்னிற்கும்.

---

12. ஓசை யுணர்வு

மேடைப்பேச்சும் சங்கீதமும்

இந்நூலின் கண் பலப்பல இடங்களில் மேடைப்பேச்சுக்கு நல்ல குரலும், அதனின்றெழும் இனிய ஓசையும் மிக வேண்டப்படு மெனத் தெளிவுறுத்தப்பெற்றுள்ளன. அத்தகைய ஓசை யுணர்வை இயற்கையோடமைந்து பெறாத ஒருபேச்சாளர், அதனைச் செயற்கையில் எவ்வழி ஒல்லும்வகைப் பெறலாமென்பதை ஈண்டு விவரிப்பது முறை யாம். மேடைப்பேச்சென்பது வார்த்தைகளையும், அவற்றின் உச்சரிப்பு நயத்தையும் அடிப்படையாகக் கொண்டது. சங்கீதம், இராகத்தையும் தாளத்தையும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. இவை இரண்டிற்கும் இனிய குரலும், அதனின்றெழும் பல்வகை நாத பேதங்களும் இன்றி யமையாதவைகளாம். குரலின் வேறுபாடுகள் ஒருவர் தொண்டையை மட்டும் பொறுத்தனவல்ல; ஒருவர் உட்கொள்ளும் அல்லது வெளிவிடும் மூச்சை மிகப் பொறுத்து நிற்பனவாம். எவ்வளவிற்கு மூச்சை ஒருவர் உள்ளிழுத்து அடக்கிவைத்துப் பின் சிறுகச் சிறுக வெளிப் படுத்த இயலுமோ, அவ்வளவிற்கேற்பக் குரல் திண்மை பெறுவதாம். திண்மைபெற்ற குரல் இனிமையடைதல் இயல்பாம். யோக நூற்களில் ரேசகம், கும்பகம், பூரகம் எனும் மூன்று கிரமங்கள் யோகிகட்குக் கூறப்பட்டுள்ளன. அவைகளை முறையே மூச்சை உள்ளிழுத்தல், அடக்கிவைத்தல், வெளிப்படுத்தல் எனக் கூறுப. பிராணவாயுவை உட்கொண்டு, இதயத்தால் கழிக்கப்படும் கரியமல வாயுவை வெளிப் படுத்தலே அவற்றின் காரியமாம். வாயு வடங்கினுல், அதாவது கும்பிக் கப்பெற்றால் மனம் அடங்குவதாம். மனம் அடங்கினுல் யோக நிலையின் உச்சியைச் சென்றடைந்து ஒருவர் முத்திநிலை காணலாமென்பது யோக நூற்களின் துணிபாம். அதுபோலவே, மேடைப்பேச்சுக்கும், மேடைச் சங்கீதத்திற்கும் மேலே கூறிய மூன்று பழக்கங்களும் மிக வேண்டப் படும். இம்மூன்றும் கைவந்த விடத்து மேடைப்பேச்சும், சங்கீத

மும் சிறந்து விளங்கும். மூச்சைப் பற்றிய சர்ச்சையில், மேலைநாட்டாரிலும் நம் நாட்டார் மிக்க அநுபவமும் தேர்ச்சியும் பெற்றவராவர். யோக நிலையின் சிகரத்தைச் சென்றடைந்தவரெனல் மிகையன்று. மேலைநாட்டு நிபுணர்கள் மூச்சை, இரு நாசித்துவாரங்கள் வழியே பேதமின்றி உள்ளிழுத்து வெளிப்படுத்தலாமென்பர். நம் நாட்டுக் கலைஞர் சந்திரகலை யெனப்படும் இட நாசித்துவாரத்தால் பிராணவாயுவைப் பூரித்தலும், சூரிய கலை யெனும் வல நாசித்துவாரத்தால் கரியமல வாயுவைப் பையப் பைய வெளிப்படுத்தலும் முறையென விதித்துள்ளனர். வாசியில் நாட்டமுடையோர், சந்திர கலையெனும் இடநாசித்துவாரத்தின் வழியே மூச்சு வெளிப்பாயாது பக்குவம் பண்ணிவைத்தல் வேண்டுமென்பது யோக நூற்களின் கூற்றும். உட்கொள்ளும் பிராணவாயுவை நெஞ்சிற்கும் இரைப்பைக்கும் இடையேயுள்ள மெல்லிய சவ்வில் (Diaphram) மோதிச் சிறிது ஊன்றிவைக்கப் பழகல்வேண்டுமெனவும், எக்காரணம் பற்றியும் தொண்டை வழி ஒருவர் தம் மூச்சை வெளிப்படுத்தல் கூடாதெனவும் இருநாட்டாரும் ஒருமுகமாகக் கூறுவர். எனவே, மேற்குறித்த சீரிய பழக்கங்கள் மேடைப்பேச்சாளருக்காயினும், பாடகருக்காயினும் இருக்குமேல் அவர் வன்மை சிறந்து விளங்குதல் ஒருதலை.

மூச்சின் காரியம்

மேற்கூறிய வண்ணம் மூச்சை - வாயுவை உட்கொள்ளும்போது மூச்சுக்குழல்கள் பெருத்து உறுதிப்படுகின்றன. அதனை வெளிப்படுத்துங்கால் தொண்டையும், குரல்வளையும், ஒலிமண்டலமும் உரங்கொள்ளுமென்பர். கும்பிக்கும்போது மார்பின் உட்புறங்களும், இதயமும் விசாலித்துத் திடன் கொள்ளும். கும்பித்த காற்று வெளிவரும்போது மூச்சுக்குழல்களின் உச்சியிலுள்ள குரல்வளையெனும் ஒலிப்பெட்டியின் வழியே சத்தமாக உரக்க வெளிவருகின்றதென இருநாட்டாரும் ஒத்துக் கூறுவர். ஆயினும் இப்பழக்கங்களில்—கைக்கொள்ளும் முறையிலும், தத்துவத்திலும்—இரு நாட்டாரும் இருமனப்பட்டவராவர்.

மூச்சுப் பழக்கம்

பழகப்புகும் ஒருவர் தமது குதிகால்களில் ஊன்றி நின்று, உடலை நிமிர்த்தி, உச்சந்தலையில் ஒருகையை வைத்து, மூச்சை உள்ளிழுத்து நிறுத்திப் பின் வெளியிடப் பழகல் வேண்டுமென்பது மேலை நாட்டார்

கண்டவழியாம். ஒருவர் நிமிர்ந்திருந்து, முள்ளந்தண்டைச் செங்குத்தாக வைத்து, கூடுமாயின், கால்களை ஒன்றின் மேல் ஒன்றாகப் பிணைத்துப் பின் ரேசக, கும்பக, பூரகத்தைப் பழகல்வேண்டுமென்பது நமது பெரியார்கள் வகுத்தவழியாம். ஒருபேச்சாளர், மேடைமீது நின்று பேசுவதால், நின்றபடிப்பெறும் முந்திய பழக்கம் அவருக்குப் பொருந்துமென்ப. ஆயினும், சங்கீதம் உட்கார்ந்தும் நின்றும் நிகழ்த்தப்படுவது பற்றி, உட்கார்ந்தபடியும் நின்றபடியும் பழகல் பாடகர்கட்கு ஏற்ற முறையாம். எனவே, எவ்வழியிலும் மூச்சைப்பிடித்து நிறுத்தி வெளியிடும் பழக்கமிகுதியால் தமது குரலின் ஓசைப்பொலிவை ஒருவர் விருத்திசெய்து கொள்வதற்கியலும். பலவகை ஒலி பேதங்களையும் நினைத்தவாறு ஒருவர் உண்டாக்கிக் கொள்ளக்கூடுமென்பது வெள்ளிடைமலையாம். ஆயினும், அப்பழக்கம் முயற்சியின்றித் தானகவே சிலருக்கு இயற்கையில் அமைவதுண்டு. பேச்சிலும், பாட்டிலும் மூச்சை அடக்கி சரீரத்திற்காவது தனித்த வேறு அவயவங்கட்காவது விறைப்பு அல்லது முறுக்கேற்றுதல் முறைகேடாம். சரீரத்தின் எல்லாப்பாகத்தையும் உறுப்புக்களையும் சுபாவமான துவண்ட நிலையில் பேச்சாளரோ பாடகரோ வைத்திருந்து பேசுவதும் பாடுவதும் மிக வேண்டப்படுவதாம். உதாரணமாக, ஒரு பலவான் ஒரு யானையை மார்மீது தாங்கவும், ஒரு மோட்டார் வண்டியை இழுத்து நிறுத்தவும் முயல்கின்ருன். அவன் தன்மூச்சை யடக்கி, மனதைக்குவித்துத் தசை, நரம்பு கை, கால் முதலியவற்றிற்கு இயற்கையில் இல்லா முறுக்கை உண்டாக்கிக்கொள்கிருன். அச்சமயம் அவனுல் ஒரு வார்த்தையாதல் வாய்திறந்து பேசக் கூடுமோ? சரீரத்தின் எப்பகுதியாதல் முறுக்கேற்றப் பெற்ருலும் இயற்கை நிலையை இழந்திருந்தாலும் ஒருவர் பேசுவதும் பாடுவதும் இயலாத காரியங்களாம். இந்நிலை பற்றி மேலும் விளக்குவாம். ஒருவர் பேசும்போதும், பாடும்போதும் சரீரத்தையும், இதர அவயங்களையும் ஆகாய வெளியில் மிதப்பனபோல் இலேசாக வைத்திருத்தல் வேண்டும். தமது உடல் அல்லது கழுத்துப் போன்ற முக்கிய உறுப்புக்களை முறுக்கேற்றிக் கொள்வதால் குரலை ஒருவர் பாழ்படுத்திக் கொள்வாரென்பது உறுதி. ஒருவர் குரலுக்கும், சரீரத்தின் ஒவ்வொருபாகத்திற்கும் பிணைப்புண்டென்பதை உணர்தல் வேண்டும். ஆதலின் அவைகளை இயற்கை நிலையில் நிறுத்திப் பேசுதல் ஒரு பேச்சாளரின் தலை சிறந்த கடனும். விரைந்தும் இரைந்தும் பேசுதல் ஆகாதாம். நீண்ட நேரப் பேச்சுக்களால், ஒரு நல்ல பேச்சாளர் குரலில் இரண்டறக் கலந்து இழையும் இனிமை, அல்லது ஓசையுணர்வு நாளடைவில் கெடும்.

பாராளுமன்றத்தே 1860ம் ஆண்டில் ஒரு விவாதத்தில் மகாகனம் கிளாட்ஸ்டன் நீண்ட நேரம் விரைந்தும் இரைந்தும் பேசினர். அங்கத்தினரான ஓர் அறுவை வைத்திய நிபுணர், இனி அத்துணை மூர்க்கமாகவும் அதிகமாகவும் பேசினுல் கிளாட்ஸ்டன் குரலின் ஓசைப்பொலிவு பாழ்படுமென எச்சரித்தார்.

மூச்சுச் சாதனை


ஒருவர் நித்திரை புகுமுன் படுக்கையிலிருந்து மூச்சுச் சாதனை செய்தல் நல்ல முறைபாம். சரீரத்தைத் தளர்ந்த நிலையில் வைத்துக் கொள்ளலும், அஃது இலவம் பஞ்சுப் பொதியென இலேசாகத் தோன்றும் வண்ணம் இருந்துபழகலும் வேண்டும். மனம் பலகாரியங்களைச் சிந்தித்திருந்தால், இந்நிலைமையை ஒருவர் உண்டாக்கிக் கொள்ளல் கடினமாம். இவ்வித மனக்கிலேசங்களை ஒல்லும்வகை நீக்க அறிஞர் முயல்தல் வேண்டு மென்பது ஆன்றோர் கருத்தாம். இனி, ஒருவர் தமது மூச்சை வசப்படுத்துவதெப்படி? இதற்கு நீடிய பழக்கமே தலைசிறந்த வழியாம். ஒருவர் தமது மூச்சை ஆழ்ந்து உள்ளிழுத்து 'டையாபரம்' என்னும் மெல்லிய சவ்வில் தாக்கி நிறுத்தும்போது, மார்புக்கூண்டும் இடுப்பும் பெருத்தலைக் காணலாம். அவைகட்கு முன், பின், பக்கப் பெருக்கும் அசைவும் உண்டாகும். அந்நிலையில் நின்று ஒல்லும்வகைத் தமது வார்த்தைகளை ஒரு பேச்சாளர் உருட்சி திரட்சியோடும், சரியான உச்சரிப்போடும் பேசிப் பழகல் வேண்டும். அதுபோழ்து அடக்கிய மூச்சு, திடீரென வெளிப்படாதவாறு வைத்திருத்தல் அவசியமென்ப. 'டையாபரம்' மிக மிருதுவான சவ்வாதல் பற்றி இவ்விதத் தொடர்ந்த பழக்கத்தால் அதனை உறுதிப் படுத்தலும் தம்வயப்படுத்தலும் இன்றியமையாததாம். இப்பழக்கம் பேச்சுக்கும் பாட்டுக்கும் உரிய தொன்றும். இதனுலன்றோ "மூச்சுப் பேச்சு" என்றும், "மூச்சு விடாது பேசுதல்" என்றும் சாதாரண வழக்கிலும் வரக்காண்போம். இவற்றுல் மூச்சின்றிப் பேச்சில்லை யென்பதும், பேசுதற்கு மூச்சை யடக்குதல் முறை யென்பதும் பெறப்படும். இஃதின்றி ஒரு பேச்சாளர் திறம்படத் தொடர்ந்து பேசுவதும், பாடகர்கள் இராக ஆலாபனையில் உச்சக்குரலை உபயோகித்தலும் இயலாதென்ப.

ஓர் உதாரணம்

உதாரண மொன்று ஈங்குக் கூறுதும். சென்னைமா நகரில் நிகழ்ந்த தமிழிசை முதல் மாநாட்டில் உயர்திரு. எம். கே. தியாகராஜ

பாகவதர் காம்போதி இராகத்தை ஆலாபனை செய்து, எவரிடத்தும் இன்றளவும் காணப்படாத உச்சநிலையில் நிரவல் செய்து, பல நிமிட நேரம் அவ்வினிய மண்டலத்தில் ஊன்றியும் சஞ்சரித்தும் காட்டிய போது, ஆச்சரியம் ஒருபுறமிருக்க, அது சபையோருக்குக் கவலையும் திகிலும் உண்டாக்கியது. அவர் அந்நிலையினின்றும் கீழிறங்கியபோது சபையில் எழுந்த கரமுழக்கம் இடிமுழக்கமெனல் மிகையன்று. பின்னர் அவரைச் சந்தித்த வமயம், அதன் நுட்பத்தைச் சங்கீதத் தேர்ச்சி பெறுதாரும் அறிந்து கொள்ளுமாறு விளக்கக் கேட்டகாலை, " சங்கீதத்திற்கும் மூச்சைக் கட்டுதற்கும் மிக்க சம்பந்த முண்டு. உச்சக்குரலில் பாட வேண்டுமானுல் மூச்சை ஓரிடத்தில் நிறுத்தி, சுருதி அல்லது துருத்தி யெனும் தோல்கருவியைப்போல் வேண்டும்போது வேண்டிய அளவு பெருக்கவும் சுருக்கவும் பழகியிருத்தல் வேண்டும். அடிவயிறு தொட்டு மூச்சுக்குழல், தொண்டை, நாக்கு, மூக்குமுதலிய கருவிகளனைத்தும் தங்கு தடையின்றித் தத்தம் வேலையைச் செய்யு மாறு பழகியிருத்தலும் வேண்டும். தொண்டைக்குத் தடிப்பு ஏற்றிக் கொள்ளல் கூடாது. இனி, சுருங்கச் சொல்வேன். நமது நாட்டுச் சங்கீதக்கலை ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு எழுத்துக்களின் உச்சரிப்பு அளவுபேதத்திலும் கலப்பிலும் அடங்குவதாம். இவ்வேழு எழுத்துக்களை முறையே, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனவும், அவைகளினுசை தொண்டை, நா, உள்நாக்கு, சிரம், நெற்றி, நெஞ்சு, மூக்கு ஆகியவைகளின்றும் வெளிப்படுமெனவும், பால், தேன், தயிர், நெய், ஏலம், கதலி, மாதுளம் கனியெனச் சுவைதரு மெனவும் சங்கீத நூற்கள் கூறுகிற்கும், இவற்றுள் 'ரிடபம்' எனப் படும் 'ரி' எழுத்து நீங்கலாக இதர எழுத்துக்கள் மிகச் சாந்தமானவை; தொல்லை கொடாதவை. ஆனுல் 'ரி' என்னும் எழுத்து வர்க்கத்தின் ஒலியைக் கூட்டுறவு செய்தலும், உச்சநிலையில் சாதகம் செய்தலும் கடின காரியங்களாம். அவ்வெழுத்தை ஒரு மஞ்சுவிரட்டுக்காளைக்கு உவமிக்கலாம். அக்காளையைப்போல் 'ரி' என்னும் எழுத்தின் உச்சரிப் பும், மாத்திரைபேதமும், எடுப்பு, பிடிப்பு, விடுப்பு என்னும் வழிகளும் ஒருவருக்குச் சுலபத்தில் பிடிபடாதவையாம். மஞ்சுவிரட்டுக்காளை பிடிபட்டபின் சாந்தமடைந்து சாதகத்திற்கு வருவதுபோல் 'ரி' எழுத்து வர்க்கம் நாவின் உதவியால் முழுச்சாதகத்திற்கு வருமாயின் எத்துணை உச்சக்குரலிலும் ஒருவர் தேனெனப் பாடலாம். தேன் தேடும் வண்டினங்களின் 'ரீ' எனும் ரீங்காரத்தின் உச்சஒலியே இதற்குத்தக்க சான்றும். இன்னும் ஒன்றே கூறி முடிப்பேன். தஞ்சாவூர் அரசவையில்

ச.ரி.க.ம.ப.த.நி. என்னும் எழுத்துக்களை உச்சரிக்கும் போது சுவாசக்குழல், நாக்கு, மூக்கு முதலியவற்றின் நிலையும் வேலையும்.



பீர்சாகிபு என்ற ஒரு பிரபல பல்லவி வித்வான் இருந்தார். அவர்மீது பொறாமை கொண்டவர் மிகப்பலர். அவர்களுள் ஒரு நாதசுரவித்வான் அவரை வெல்லும் நோக்கமாய் அவர் பாட்டுக்கிசைய வாசிக்க முயன்றார். கச்சேரி மூன்று தினங்களாகத் தொடர்ந்து நடந்தது. "கட்டி மாம்பழத்துள் ஒருவண்டு" எனும் அவர் பல்லவியோ முடிவடையவில்லை. நாதசுரக்காரரும் சளைக்கவில்லை. நான்காம் நாள் பீர்சாகிபு தமது பல்லவியைச் சவுக்கம்கட்டிப் பாடஆரம்பித்துக் "கட்டி மாம்பழத்துள் ஒருவண்டு - அது விர் - ர் - ர் - ர் - ர் - ர் - ர் - ர்-விர் என்று பறந்தது" என நெருடாகப் பாடவே, நாதசுர வித்வான் - ர் - ர் ர் - ர் - ர் என்னும் ஒலியைத் தமது ஊதுகுழலில் வாசித்துக் காட்ட மாட்டாது தோல்வியுற்றாரென்பது சரித்திரம். எனவே, 'ரி' வர்க்க எழுத்துக்களின் சாதகத்தில் சங்கீத வித்வான்கள் குறிப்பாகக் கவனம் செலுத்தவேண்டும் என்பது என் கருத்தாகும் " என்றார். உயர்திரு பாகவதரின் கூற்று, இத்தாலிய, பிரஞ்சு, ஆங்கில சங்கீதப் புத்தகங்களால் சரியெனப் பெறப்பட்டது. எல்லா உலக மொழிகளிலுமுள்ள "ர, ரா, ரி, ரீ, ரை" போன்ற (Fricative) எழுத்து வர்க்கங்களைச் சரியாக உச்சரிப்பது கடினமென்றும், அவற்றைச் சங்கீதத்திலும் பேச்சிலும் திறம்பட உபயோகிக்கப் பழகல் வேண்டுமென்றும் அந் நூற்கள் கூறும். இப்புத்தகத்தில் காட்டியுள்ள சித்திரங்கள் ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு, மூக்கு, தொண்டை, வாய் மூச்சுக்குழல் ஆகியவைகளின் நிலையையும், அவைசெய்யும் வேலையையும் நன்கு விளக்குவனவாம். 'ர, ரி, ர்' என ஒலிக்கும்போது மூச்சுக்குழல்கள் திறந்து, நா, மூக்கு, தொண்டை, வாய் முதலிய எல்லாக் கருவிகளும் ஒருமித்து வேலைசெய்வதை 2, 8-வது சித்திரங்களில் காணலாம். மேலே கூறியுள்ளவற்றை ஆழ்ந்து நோக்கும் பேச்சாளர் தக்க பலனைப் பெறுவரென்பது ஒருதலை.

ஓசையுணர்வு யாது ?

இனி, ஓசையுணர்வுபற்றிச் சற்று சிந்திப்போம். சங்கீதவித்தைக்கு இன்றியமையாத 'தும்புரு' அல்லது 'தம்புரு' எனும்கருவியை முதற்கண் கவனித்தல் சாலும். அஃது ஒருவித மரத்தைக் குடைந்தெடுத்த குடத்தின் மேற்புறத்தில் நான்கு கம்பிகளைக்கொண்ட ஒரு சுருதிக் கருவியாம். கம்பிகளை மிடுக்கி முறுக்கேற்றி அவற்றை விரலினால் நெருடி இனிய ஒலியைப் பிறப்பித்தல் இயல்பாம். அதனை ஒலி அல்லது ஓசையுணர்வு எனக்கூறுவர். அஃது ஒலியின் அலைகளென்றும் சொல்லப்

படுவதாம். அதுபோலவே, ஒரு பேச்சாளர் வாயினின்றுவரும் சொல்லொலி இனிய உணர்வு அல்லது நாதவொலிபெற்று வெளிவருதல் வேண்டுமென்ப. தம்புருக்கு ஒலிக்குடமும் குழல்தண்டும் உள்ளனபோல் மனிதருக்கு அமைப்பிலேயே மண்டையோடாகிய குடமும், மூச்சுக் குழலாகிய குழற்றண்டும் உள்ளனவாம். சுருதி என்னும் துருத்தி வாத்தியத்தையொத்து வயிற்றுத் துருத்தியினின்றும் தொண்டை, குரல்வளை மூலம் வெளிவரும் ஓசை 8வது சித்திரத்தில் காட்டியபடி 1 என்னும் இலக்கமிட்டுள்ள கடினமான தசையில் தாக்கி நிற்கும் போது, குடமாகிய மண்டையோட்டால் அலைக்கப்படுவதாம். சங்கீத உலகில் சரீர, சாரீர செல்வத்தை ஒருங்கேபெற்றுக் கலையறிவு நிரம்பி விழுமியராய் ஒளிர்ந்த காலஞ்சென்ற உயர்திரு. மாங்குடி சிதம்பர பாகவதர் பாடுங்கால் அவர் அடிவயிற்றினின்றும் கட்டோடு எழுந்த ஒலிச்சிறப்பு இதற்கொரு சிறந்த சான்றும். மேலே கூறியவாறு அலைக்கப்படும் ஓசையதிர்ச்சியால் பற்களும் தாக்கப்பெற்று இனிய ஒலியை மேலும் பரப்புவனவாம். பற்கள் ஓசையொலியை ஒழுங்கு படுத்தித் தக்கவாறு பிரதிபலிக்கச் செய்யும் ஒரு தடைச்சுவராமென்ப. ஆக்ரா நகரிலுள்ள உலகப் புகழ்பெற்ற "தாஜ்மஹால்" கட்டிடத்துள் ஓரிடத்தில் நின்று பேசினும், பாடினும் அவ்வொலி ஆங்குள்ள சுவர்களில் தாக்கி, அவற்றின் அமைப்பு, தடிப்பு, ஆகிருதி முதலியவை கட்கேற்பப் பல சுருதிகளில் பிரதிபலிக்கக் காண்போம். அதுபோலவே இயற்கைப் பற்கள் பல்வேறு நாத உணர்வை உண்டாக்குவதில் பெரிதும் உதவுவனவாம். செயற்கைப் பற்களை உடையோரிடம் இனிமையான ஓசையுணர்வைக் காண்பதருமை. காலஞ்சென்ற உயர்திரு. பாலக்காடு-அனந்தராம பாகவதர் பாட்டைக் கேட்டவர்களுக்கு இதன் உண்மை நனிவிளங்கும். எனவே, இயற்கைப் பற்களைச் சுத்தமாகவும், அழுக்குப் படியாமலும், கறை கட்டாமலும் ஒரு பேச்சாளர் காப்பாற்றி வைத்திருத்தல் கடனும்.

நாவின் பயன்

ஓசையுணர்வை மிகுதியும் எழுப்புதற்கு ஒருவர் நாவும் மிகவும் பயன்படுவதாம். நாவின் உதவியை இழந்தவரை மூங்கையரெனக் கூறுவோம். ஓசையின் அலையை எழுப்பிப் பரப்புவது நாவாகும். நுனி நாக்கு மிருதுவாகவும் அகன்றும் நுட்பமாகவும் இருத்தல் இன்றியாத்தாம். பேசுவோரும், பாடுவோரும் நுனி நாக்கை எப்போதும் தம் வயத்தே வைத்திருத்தல் முறையாம். மிதமிஞ்சிய தம்பல மருந்தல்

புகையிலை அடக்கல் இவற்ருல் நா தடித்து, அருகி அதன் கடமை யைச் செய்ய மறுக்கும். அத்தகையோர் பேச்சும் பாட்டும் வெறுத் தற்குரியனவாம். ஷேக்ஸ்பியர் எழுதிய "ஹாம்லெட்" நாடகத் தில் முக்கிய பாத்திரமாகத் தோன்றும் ஹாம்லெட் இளவரசர் தாம் ஒருங்கு சேர்த்த நடிகர்களுக்கு அறிவுறுத்திய திதுவாம்: "நான் பேசிக்காட்டியது போலவே உங்கள் பேச்சை நாவினுல் பேசுங்கள்; வாயினுல் பேசாதேயுங்கள். நாவினுல் பேசுதலே மேடைக் குகந்தது. வாயினுல் பேசும் பேச்சு சந்தைக்கூட்டங்களில் கத்துவதற்குச் சமான மாகும்." எனவே, மேலே கூறியவற்ருல், ஒரு பேச்சாளர் ஓசையுணர் வைப் பெறுதற்கு எத்துணைக் கவனம் செலுத்தி அச்செல்வத்தைக் கைக் கொள்ளுதல் வேண்டுமென்பது நன்கு விளங்கும்.

வாயூற்று

ஒருவர் வாயினின்றும் உமிழ்நீர் ஊற்றுப்போல் சுரப்பதுண்டு. அவர் பேசுங்கால் அந்நீர்த்திவலைகள் வெகுதூரம் பரவும்; இதனை அருகிலுள்ளோர் அருவருப்ப தியல்பாம். அங்கிலேயில் ஒருபேச்சாளர் தமது நாவை விரும்பியவாறு அசைத்தலும், நன்கு பேசுதலும் இயலா வாம். வார்த்தைகளை அழுத்தந் திருத்த மாகவும், அளவோடும் உருட்சி திரட்சியோடும் அன்னோர் உச்சரித்தல் கடினமாம். ஒருவர் வாயில் நீரை ஊற்றிவைத்துக் கொண்டு பேசுதல் கூடுமோ? அது போலவே, அதிக நீருற்றுள்ள நாவும் இயற்கை ஒலியை உண்டாக்க மாட்டா தென்பது உறுதி. இதனுல், "யா காவார் ஆயினும் நா காக்க" எனும் பொய்யா மொழி ஓசையுணர்வுக்கும் ஓரோவழி பொருந்து மன்றே?

---

13. பேச்சாளரும் ஆயுள் விருத்தியும்

முறை யாது?

இதற்கு முந்திய பகுப்பின்கண் மூச்சின்றிப் பேச்சில்லையென்பதும் ஒருவர் நன்கு பேசுதற்கு மூச்சை ஒல்லும்வகை அடக்கிப் பேசு தல் முறையென்பதும் காணப்பெற்றுள்ளன. மூச்சை உள்ளிழுத்து 'டையாபரம்' எனும் சவ்வில் தாக்கிநிறுத்திப் பேசுதலும் அதனைப் பையப் பைய வெளிப்படுத்தப் பழகலும் முறையென்பது கூறப்பட்டது. இதனுல், ஒரு பேச்சாளர், பேசுங்கால் தமது மூச்சை அதிகமாகச் செலவழித்த லாகாதென்பது பெறப்படுவதாம்.

இரு நாட்டார் அநுபவம்

மேலைநாட்டாரிலும் நமது நாட்டார் மூச்சு அல்லது சுவாசப் போக்கைக் குறித்த சர்ச்சையிலும், அநுபவத்திலும் மிக்க உச்சநிலை பெற்றவராவர். நமது நாடு மற்றெல்லா நாடுகளைப்போலன்றி பல திறப்பட்ட யோகிகளையும், பதினெண் சித்தர்களையும், பேரறிஞர்களான ஞானியர்களையும் பண்டு உண்டாக்கியும், நாளும் உண்டாக்கிக்கொண்டும் வருவதாம். அவர்கள் வகுத்த வழியே யோக முறைகளை விவரிக்கும் பலவகைச் சுவடிகளும், பலதிறச் சாதனைகளை உணர்த்தும் நூற்களும், பல்லாயிரமாண்டுகட்கு முன்பிருந்தே இந்நாட்டின் வைப்புப்பொருளாய்த் துலங்குகின்றன. யோகியர் வாயுவை - மூச்சை யடக்கி மனதை ஒரு நிலைப்படுத்தி உலக அமைப்பின் இரகசியத்தை ஊன்றி நோக்குபவராவர். சித்தர்கள் காய கற்பமுண்டு இயற்கையில் மலினப்படும் உடலை உறுதிப் படுத்தி ஆயுளைப்பெருக்கி அவ்வழித் தம்மையும், உலகத்தையுமுணர்ந்து இறுதியில் முத்தியைப் பெற முயன்றவர். ஞானியர் மேலும் பிறந் துழலாது இம்மையிலே முத்தி நிலையடைய முயன்று முடிப்பவராவர். சுவாசிக்கும் வாயுவை அல்லது மூச்சைத் தம் வயப்படுத்தினும், விதிக் கிரமப்படி ஒழுங்குப்பாட்டில் வைத்திருப்பினும் உலகின்கண்ணுள்ள எல்லா நலனையும், ஆயுள் விருத்தியையும் ஆறறிவு பெற்ற மக்கள் அடையப்பெறலாமென்பது யோக நூற்களும், அநுபவிகளும் கண்ட முடிவாம்.

அடிப்படைத் தத்துவம்

இனி, யோக நூற்களின் அடிப்படைத் தத்துவத்தை ஈண்டு ஆராய்வோம். ஒரு மனிதப்பிறவி ஆண் பெண் எனும் பேதமின்றி, நாழிகை யொன்றிற்கு முன்னூற்றறுபது சுவாசமும், அறுபது நாழிகை அல்லது 24 மணி நேரங்கொண்ட நாளொன்றுக்கு இருபத்தோரா யிரத்து அறுநூறு சுவாசப் போக்கையும் இயற்றுவதாமென அறுதி யிடப்பட்டுள்ளது. இவ்வெண்ணிக்கையில் மூன்றிலோர் பாகம் வீணில் கழிவதாம். மூச்சைச் சிக்கனமாகச் செலவழித்தற்கும், விருதாவாகாத வாறு காப்பாற்றுதற்கும் நமது முன்னோர் பல வழிகள் கண்டுள்ளனர். அவைகளுள் பிராணுயாமம் எனும் பழக்கமே தலைசிறந்ததாம். பிராணனை உடற்கண் பெருக்கி அடக்கிவைத்திருத்தல் என்பது அதன் பொருளா கும். ஈங்குப் பிராணன், மூச்சு எனும் இரு சொற்களின் இயற்கைத் தத்துவத்தை யுணர்தலும் நம் கடனும். பிராணன் போனல் மூச்சில்லை யென்போம். மூச்சு நின்றுவிட்டால் பிராணன் போயிற்றெனக் கருது

வதற்கில்லை. மூச்சையடக்கிச் சமாதிகொண்டும், பூமியில் ஆழப் புதையுண்டும் பல மாதங்கட்குப்பின் பிராணனோடு வெளிவந்த * பல பெரியாரை இந்நாட்டில் இன்றும் காண்போம். மூச்சு நின்றுவிட்டதால் பிராணன் போயிற்றெனக் கருதி இடுகாட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்ட மாந்தர் பிழைத்தெழுவது யாண்டும் காணும் அதிசயமாம். இவற்றால் மூச்சு அல்லது சுவாசம் வேறென்பதும் பிராணன் அதற்குப் புறம்பான பிறிதொன்றென்பதும் ஊன்றிப் பெறப்படுவனவாம். நீடிய ஆயுளைப் பெறுதற்குப் பிராணனை சரீரத்தின்கண் மிகுதியும் சேமித்து வருதல் வேண்டுமென்றும், மூச்சில் கலந்து நிற்கும் தோற்றமற்ற பிராணனை உள்ளடக்கி, உருவத்தா லறியக்கிடக்கும் ஒருவர் ஆயுளை மேன்மேலும் வளர்த்தல் முறையென்றும் பெரியார்கள் விதித்துள்ளனர்.

மூச்சுச் சாதனை

இனி, 'பிராணாயாமம்' என்பது என்ன? ரேசகம், பூரகம், கும்பகம் எனும் முறைகளால் மூச்சை உள்ளிழுத்தல், வெளிவிடுதல், உள்ளடக்குதல் ஆகிய கிரமங்களைப் பற்றி, மூச்சோடிழையும் பிராணனை உடற்கண் மிகுதியாகச் சேமித்து ஒருவர் ஆயுளைப் பெருக்கிக்கொள்ள ஆன்றோர் வகுத்திருக்கும் சுலபமான—யாவராலும் பழகமுடிந்த ஒரு உபாயம் அல்லது சாதனையாம். ஒருவரின் இரு நாசித்துவாரங்களின் வழியே மாறி மாறி மூச்சு அல்லது வாயுமயமான சுவாசம் உள்ளிழுக்கப்படுவதும் வெளியிடப்படுவதுமாகும். ரேசகம் என்பது சந்திர கலையாகிய இட நாசித்துவாரத்தால் பன்னிரண்டு அங்குலம் அளவைகொண்ட சுவாசத்தை உள்ளுக்கு இழுத்தலாம். பூரகம் என்பது உள்ளிழுத்த சுவாசத்தைச் சூரியகலையாகிய வலநாசித்துவாரத்தால் எட்டு அங்குலப் பிரமாணம் வெளியில் விடுவதாம். எனவே உள்ளிழுக்கும் சுவாசத்திலும் வெளியிடப்படும் சுவாசம் நான்கு

* சென்னை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 1-4-47-ல் வெளிவந்த செய்தி :

இமாலயத்திலிருந்து பம்பாய் வந்துள்ள திரு. இராமாநந்த சுவாமி எனும் யோகி 24 மணிநேரம் கான்கிரீட்டில் கட்டப்பட்ட சமாதியில் புதையுண்டிருந்து வெளிவந்ததைச் சுமார் 50000 மக்கள் திரண்டு பார்த்தனர். யோக நித்திரை நீங்கிய சுவாமிகள் வெளிப்பட்ட சிறிதுநேரத்திற்குப்பின் கண் திறந்து பழரசம் அருந்தினர். உடற்கலையரசு சாண்டோ லெ. சோமசுந்தரம் செட்டியார் மாணவர்கள் அறவரில் குறிப்பாகப் பலவான். எ. முகுந்தராஜ் எனும் விஸ்வகர்ம வாலிபர் சுமார் 6 மணிநேரம் குழியில் புதையுண்டிருந்து வெளிவரும் ஆற்றல் பெற்றவராம்.

அங்குலம் குறைவுகொண்டதாம். இவ்வாறு மிகுதிப்படும் நான்கு அங்குல மூச்சை உடலின்கண் தங்கச் செய்தலே கும்பகமாம். இப் பிராணுயாமப் பழக்கத்தால், கழிவுப்பட்டது போக எஞ்சிய சுவாசம் நாளொன்றுக்குப் பதினுன்கு ஆயிரத்து நானூறு வீதம் இயங்குவதாம். மேற்கூறியவாறு நாளொன்றுக்குச் சேமிக்கப்படும் சுவாசம் அல்லது பிராணன் இரண்டாயிரத்து எண்ணூற்று எண்பது அங்குலம் அளவு கொண்டதாகும். பிராணுயாமத்தைக் கைக்கொண்ட ஒருவர் ஓராண்டளவில் உடலாகிய கருவூலத்தே பத்துலட்சத்து ஐம்பத்தோராயிரத்து இருநூறு அங்குல அளவுகொண்ட பிராணனுகிய அரும் பொருளைச் சேமிக்கின்றுரென்பது விளங்கும். ஆண்டொன்றில் ஒரு சாதாரண மனிதர் விருதாவாக்கும் சுமார் எழுபத்தெட்டு லட்சத்து எண்பதினுயிரம் சுவாசத்துடன் மேற்காட்டிய எண்ணிக்கை கொண்ட சுவாசமாகிய பிராணனையும் கட்டினுல் அஃது உடலுக்கும் ஆயுளுக்கும் மிக உறுதி பயக்குமென்பதும், ஒருவர் தமது வாழ்நாளை அவ்வழி ஆண்டொன்றுக்குச் சற்றேறக்குறைய தொண்ணூறு நாட்கள் வீதம் அதிகப்படுத்திக்கொள்ளலாமென்பதும் வெள்ளிடை மலையாம். இக் காரணம் பற்றியே மகாத்மா காந்தியடிகள், மக்களுக்கு விதித்துள்ள ஒரு நூறு வயதுக்குமேல் இருபத்தைந் தாண்டுகள் அதிகமாக வதிய ஆசித்தார் போலும்! பல உதாரணங்கள் எற்றிற்கு? மின்சார சக்தியைப் பிடித்து 'பாட்டரி' எனப்படும் விசைப்பேழையில் சேமித்து வைத்து வேண்டும்போது வேண்டுமளவு மின்சார விளக்கையும் மின் விசிறியையும் இரயில் வண்டிகளையும் பலவகைத் தொழில்களையும் இயக்குவித்தல் இதற்கோர் தக்க சான்றும். மேலே கூறியுள்ளவாற்றுல் இடநாசித்துவாரத்தால் தமது மூச்சை ஒருவர் வெளிப்படுத்துதல் ஆகாதென்றும், இரவு பகல் எனும் பேதமின்றி, உண்டிகொள்ளும் போதும் உறங்கும்போதும் இதர காரியங்களில் ஈடுபடும்போதும் வல நாசித்துவாரம் ஒன்றினுலேயே மூச்சை வெளியிடப் பழகல் வேண்டுமென்றும் உணர்தல் வேண்டும்.

ஒருவர் மூச்சு இருநாசித்துவாரங்களில் மாறி மாறியும் ஒருமித்து இருவழியும் வெளிவருவதாம். அத்தகைய ஒன்றை வலநாசித்துவாரமாகிய சூரிய கலைகொண்டு அல்லும் பகலும் ஒருவர் எவ்வாறு வெளிப்படுத்தற்கியலுமென ஆராய்தல் ஈண்டைக் கேற்புடைத்தாம். இடப்புறமாகப் படுத்துறங்கலாலும், மூக்கின் வலப்புறத்தையும் அதில் ஓடும் நாடியையும் கருத்திலிருத்துவதாலும், மூக்கின் நுனியை வலப்புறமாகக் கண்ணோட்டமிடப் பழகியிருத்தலாலும் சுவாசம் இடநாசித்துவாரத்

தால் வெளிப்படவேண்டிய காலத்தும் அதை மாற்றி வலநாசித்துவாரத்தால் ஒருநாள் முழுதும் - ஏன் - ஆயுள் காலம்வரை ஒருவர் வெளிப்படுத்தலாமென்பது யோக நூற்களின் துணிபாம்.

உண்மை யறிதல்

மேடைப்பேச்சில் ஒரு பேச்சாளர் தமது மூச்சைக் கும்பித்து ஒலியைப் பெருக்குதல் வேண்டுமெனக் கூறியுள்ளவாறு மேலே காட்டிய முறைகொண்டு கும்பித்து வலநாசித்துவாரத்தால் மூச்சை வெளியிடப் பழகி இருப்பரேல், சுவாசத்தால் உருக்கொள்ளும் பிராணன் நசிப்பதற்கும் ஆயுள் குறைவதற்கும் காரணமில்லை. இரைந்தும் விரைந்தும் வரும் மேடைப்பேச்சினால் ஒருவர் ஆயுள் குறையுமென்றும், அதற்கஞ்சியே நமது நாட்டில் பெரியார் மௌனவிரதம் பூண்டிருந்தன ரென்றும் கூறுவோர் இந்நாளும் உளர். எனவே சில உதாரணங்களைக் கொண்டு இக்கூற்றின் உண்மையைச் சோதித்தலும், அதனைச் சேதித்தலும் தவறன்று. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நாகரிகத்துறைகளில் உச்ச நிலைபெற்றிருந்த கிரீஸ் நாட்டிலும், ரோமாபுரியிலும் மேடைப்பேச்சைத் தொழிலாகக் கொண்டிருந்த மாபெரும் நாவலர்கள் சுவாசத்தைச் சேமிக்கும் யோக வழியை அறியாதவராயிருந்தும் நீடிய ஆயுளைப் பெற்றே வதிந்துள்ளனர். டெமாஸ்தனீஸ், ஹோரேஸ், சிசரோ, பிளாட்டோ, சாக்ரடீஸ், பிளினி போன்ற பண்டைய நாவலர்களும், இந்நூற்றுண்டே வதிந்த பல மேலைநாட்டு நாவலர்களும் நாவன்மைகொண்டு மிளிர்ந்த பெரியார்களும் நீண்ட ஆயுளோடு வதிந்தவராவர். அல்லும்பகலும் ஆராய்ச்சியிற் படிந்துகிடந்த சர். ஐசாக் நியூட்டன் போதனையிற் சிறந்தவராயினும் நீடிய ஆயுளோடு வதிந்தவராவர். நமது நாட்டில் பேச்சையும், விவாதத்தையும் அன்றாடத் தொழிலாகக் கொண்டிருந்த சர். வி. பாஷியம் அய்யங்கார், சேலம் விஜயராகவாச்சாரியார் போன்ற பிரபல வழக்கறிஞர்களும், உபாத்திமைத் தொழிலில் ஈடுபட்டிலங்கிய டாக்டர் மில்லர், பேராசிரியர் சுந்தரராமய்யர், மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாத அய்யர் போன்ற பெரியார்களும் நீண்ட ஆயுளோடு வதிந்தவராவர். இவ்வுதாரணங்களால், பேசும்போது ஒரு நல்ல பேச்சாளரின் சிந்தை, மொழி, நோக்கு ஆகியவை தாமாகவே பேச்சுப் பொருளில் ஆழ்ந்து அன்னார் மனம் அவ்வழி ஒருமுகப்படுதல் இயல்பென்பதும், அங்ஙனம் ஒருமுகங் கொண்ட மனம், ஆயுளைப் பெருக்குமாறு சுவாசப் போக்கை இயற்கையோடியைந்து தானே பிரயத்தனமின்றி அடிமனம் வரையிற் சென்று

நின்மலப்படுத்துமென்பதும் சந்தேகமின்றிப் பெறப்படுவனவாம். யோக பூமியான இந்நாட்டில் உதித்த மனோவலி மிகுந்த ஒரு மேடைப்பேச்சாளருக்குப் பிராணயாமப் பழக்கமும் இருக்குமேல், அது பொன்னுலாகிய அழகிய மலரிடைத் தேன் துளிக்கும் இனிய மணமும் ஒருங்கு சேர்ந்ததை ஒக்குமன்றோ ?

---

14. மேடைப் பேச்சின் தத்துவம்

இவை போதுமோ?

மேடைப் பேச்சு எவ்வாறு அமைதல் வேண்டு மென்பதும் பேச்சாளர் எவ்வாறு மக்கள் மனதில் ஊன்றிப் பதியுமாறு பேசுதல் வேண்டு மென்பதும் முந்திய பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன. நாவலரின் பேருரை இலக்கணமும், சொற்போக்கு நயம், இனிமை ஆகியனவும், ஏறுதல், இறங்குதல், சமநிலை நிற்றலாகிய முப்பெரும் தேர்ச்சிகள், பல திறப்பட்ட சுவையுணர்வுகள் முதலியனவும் விரிவஞ்சாது கூறப்பட்டுள்ளன. பொதுமேடைப் பேச்சுக்களின் நோக்கங்களைத் தெளிவுறுத்து முகத்தான், அவை மக்களை ஒரு பேச்சாளர் தம் வயப்படுத்தற்கும் தமது கருத்தோடிணங்கச் செய்தற்குமாமென அறுதி கூறப்பட்டுள்ளன. ஒரு நல்ல மேடைப் பேச்சுக்கு மொழி நயமும், இனிமையும், நூலறிவும், பிறரை மகிழ்விக்கும் இயல்பும் மட்டுமே போதியவைகளாவெனச் சற்று ஆராய்தல் ஈண்டைக் கேற்புடைத்தாம்.


காலங்கடந்த சொற்பொழிவு


நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களுக்கும் பொருந்தியதாய், அதன் கருத்துக்கள் உண்மைப் பொருளைத் தழுவி ஆழ்ந்தும் படர்ந்துமுள்ளதாய், காலங்களைக் கடந்து என்றும் நிலை நிற்பதாய், தூரங்களைத் தாண்டிச் செல்லத்தக்கதாய், மக்களுக்கு அறிவுச்சுடர் கொளுத்த வல்லதாய், எண்ணுவார் எண்ணும் அளவிற் கேற்பப் பொருளுணர்த்துவதாய் அதன் பல பாகங்களில் விரவி நிற்கும் கருத்துக்களை வேறொரு பேச்சாளர், திரிக்கவோ, மாறுபடக் கூறவோ இயலாததாய் இருத்தலே ஒரு மாபெரும் பேச்சின் உண்மைத் தத்துவங்களாம். கிறிஸ்து பெருமான் பிறக்கு முன்னரே கிரீஸ், ரோம் ஆகிய தேசங்களில் தோன்றி மாபெரும்











1. சுவாமி விவேகானந்தர், 2. கிறிஸ்து பெருமான், 3. சுவாமி ராமகிருஷ்ணா, 4. வில்லியம் ஜென்னிங்ஸ் பிரையான், 5. சுவாமி அரவிந்தர்.

நாவலர்களாகத் திகழ்ந்த சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்ட்டாடில், டெமாஸ்தனீஸ் போன்ற பெரியார்களும் சிசரோ, பிளினி, காட்டோ ஆகிய விழுமியரும் அவ்வக்காலத்தே பேசிய பேச்சுக்களும் அலங்கார, வித்தாரச் சொற்பெருக்குகளும், இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ஆண்டுகட்குப் பின்னரும் எல்லா தேசமக்களுக்கும் உயரிய எடுத்துக் காட்டுக்களாகவும், பின்பற்றப்படுவனவாகவும் மிளிர்வனவாம். "முதிர்ந்த யோசனையின்றி உதிக்கும் எண்ணங்களாகிய தளைகளி னின்று மானிட வர்க்கத்தின் மனதை விடுவிப்பதே உயர்நீதி", "உம்மையே நீவிர் உணர்ந்து கொள்க", "ஆன்மா என்றும் அழியாதது" என்னும் உண்மைகளைப் போதித்து அவற்றை உலகில் நிலைநாட்டியவர் சாக்ரடீஸ் எனும் பெரும் நாவலரேயாவார். அதற்காகவே அவர் உயிர்நீத்தார். மக்களுக்கு அறிவுறுத்த வேண்டுவனவற்றைப் பலப்பல வினாக்களையும், விடைகளையும் கொண்டே அவர் போதித்துப்போதித்துக் குன்றாப் புகழ்கொண்டாரென்பது சரித்திரம். பிளாட்டோ, அரிஸ்ட்டாடில் ஆகிய இருபெரும் நாவலரும் சாக்ரடீஸைப் போலவே ஆழ்ந்த தத்துவநூல் வல்லுநர் ஆவர். டெமாஸ்தனீஸ் எனும் நாவலர்கோன் மேடைப் பேச்சுக்கே வழிவகுத்து அதற்கு உயிர்நாடி உண்டாக்கியவரென்பது மிகையன்று. பிறப்பில் திக்குவாய் கொண்ட இவர் அதனைப் போக்கியவழியும், சிறந்த நாவலரான முறையும் இன்றளவும் மக்கள் கவனத்திற்குரியவாறு துலங்குவனவாம். உலக முற்றிலும் இந்நாள் பின்பற்றப்படும் கையறுநிலைச் சொற்பெருக்குகட்கு வழிவகுத்துக் காட்டிய முழுப்பெருமை நாவலர் பெரிக்கிள்ஸ் என்பாருக்கு உரியதாம். சிசரோ எனும் ரோமாபுரி நாவலர், காட்டிலீன் எனும் மற்றொரு நாவலர்மீது துரோகப்பழி சுமத்திப் பேசிய பேருரை, பிற்காலத்தே இங்கிலாந்தில் எட்மண்ட் பர்க் எனும் நாவலர் உவாரன் ஹேஸ்ட்டிங்ஸ் பிரபுமீது பழிசுமத்திப் பேசிய மாபெரும் பேச்சுக்கு ஆதாரமாகத் துணைநின்றது. சிறியதந்தை பிளினி, மருகன் பிளினி ஆகிய இருநாவலரின் சொற்பொழிவுகளின் பெருமை ஒருபுறமிருக்க, அன்னார், தினசரிக்குறிப் பெழுதும் வழக்கப்பாட்டையும், அதன்கண் பேச்சுக்களையும் கருத்துக்களையும் குறித்து வைக்கும் முறையையும் உலகுக்கு அளித்தவராவர்.

சில மகான்கள்

கிறிஸ்து பெருமானின் மாமலைப்பொழிவும், நபியின் போதனைகளும் ஒப்புயர் வற்றவைகளாக இன்றும் மிளிர்வனவாம். சுவாமி இராம

கிருஷ்ணு நந்தரின் அறநெறிக் கூற்றுக்களுக்கு ஒப்பானவேறு கூற்றுக்களை இந்நாள் காண்பதற்கியலுங்கொல்? இந்திய மதக் கோட்பாட்டின் பெருமையையும், தத்துவ நுணுக்கங்களையும் அமெரிக்காவில் தமது எண்ணிறந்த சொற்பொழிவுகளின் மூலம் நிலைநாட்டித் தாம் பிறந்த நாட்டுக்கோர் தனிப்பெருமை கண்ட சுவாமி விவேகாநந்தர் எனும் மாபெரும் நாவலரை இந்திய மக்கள் எளிதில் மறத்தல் கூடுமோ? சிகாகோ நகரத்தில் கூடிய சர்வமத மாநாட்டில் தலைமை தாங்கிய உயர். ப்ர்ரோஸ் என்பார், சுவாமி விவேகாநந்தரின் பேச்சில் திகைப்புண்டவராய், உயர்கருத்துக்களில் சிக்குண்டவராய் அவரைப் பலவாறு புகழ்ந்து கூறினர் என்ப. "சுவாமி விவேகாநந்தரை ஈங்குப் பேசாது தடுத்தல், கதிரவனைப் பிரகாசியாது கையால் தடுக்க முயன்ற பேதைமையை ஒக்கும்" என்று சபையிற் கூறியது அவர் புகழ் மொழிகளில் சிறந்த தொன்றும். மற்றுமோர் இடத்தில் பேசிய சுவாமி விவேகாநந்தர், மேற்குத் திக்கில் சூரியன் ஒடுங்கும் காட்சியின் அழகை உற்று நோக்கிய சபையோருக்கு அறிவுறுத்தியது இதுவாம்: "இந்த மாயாப் பிரபஞ்சத்திலே சூரியன் ஒடுங்கும் மாலைநேரக் காட்சியே இத்துணை அழகு செய்யுமானல், இவைகளைக் கடந்ததாய், எப்பொருட்கும் அடிப்படையாய், ஆதித்தனுக்கும் அழகு கொடுக்கும் சோதியைத் தன் வயத்தே யுடையதாய் ஒளிரும் பிரம்மத்தின் பேரழகு எத்தகையதாக இருக்குமோ?" இதில் செறிந்துள்ள உயரிய கருத்துநுட்பங்களைப் பேரறிஞர்களே தத்தம் அனுபவத்தால் நயத்தற்கியலும். "கடவுள் நமது பக்கத்தில் - கட்சியில் - இல்லாவிடினும் நாம் அவரோடு என்றும் ஒன்றியிருப்போம்" எனவும், "நான் படித்த புத்தகங்களுள் எனது தாயினும் சிறந்த புத்தகம் ஒன்றில்லை" எனவும் கூறிய ஆபிரகாம் லின்கனின் சிறந்த கூற்றுக்கள் இந்நாள் புத்தகத்துள் மறைந்து கிடப்பனவாம். "தாயினும் சிறந்ததோர் கோயிலுமில்லை, தந்தை சொன் மிக்கதோர் மந்திரமில்லை" எனும் உண்மைத் தத்துவத்தை இன்னிசை, வானெலி, இசைத்தட்டுகள் மூலம் தமது சொந்த அனுபவமாக உலகுக்குத் தந்துள்ள உயர்திரு. எம். கே. தியாகராஜ பாகவதரின் சற்போதனை இன்று மக்கள் மொழி பேதங்களையும், தேச வேறுபாட்டையும் தூரத்தையும் கடந்து நிலையாய் நிற்பதாம்.

அறமொழிகள்

சென்ற நூற்றாண்டினிறுதியில் வதிந்த கனம் இரானடே என்னும் பெரியாரும் அவரைப் பின்பற்றியொழுகிய கனம் கோபாலகிருஷ்ண கோகலே அவர்களும் இந்நாட்டில் தீண்டாமையை அறவேயொழிக்க, மக்களுக்கு மேடைப் பேச்சுக்கள் மூலம் போதித்து வந்ததன் பயனாக இந்நாள் காந்தியடிகளால் தீண்டாமக்களுக்குத் தென்னாட்டு ஆலயங்கள் திறந்துவிடப் பட்டன வன்றோ? திருப்பாதிரிப்புலியூர் மறைத்திரு ஞானியார் சுவாமிகளும், மறைமலையடிகளும் புகன்றுள்ள சிறந்த அறநெறி மொழிகள் நமது தமிழ் நாட்டில் வேரூன்றி உள்ளன. அவை மற்ற அறிஞர்களால் இந்நாள் மேலும் வளர்க்கப்படுவனவன்றோ? உயர்திரு. சுப்பிரமணிய பாரதியாரின் பேச்சுக்களும், புரட்சிக் கவிதைகளும் நம்நாட்டு மக்கட்கு ஒப்பற்ற உணர்ச்சியையும், கண்விழிப்பையும், வீராவேசத்தையும் உண்டாக்கித் தமிழ்மக்கள் - ஏன் - இந்திய மக்கள் கண்ட அரசியல் கனவை நனவாக்கின. பாரதிதாசர், நாமக்கல் கவிஞர் போன்ற மறக்கப்படாத பலபெரும் நாவலர்களும் நமது தமிழ் நாட்டில் இன்று உளர்.

உண்மைத் தத்துவம்

மானிட வாழ்க்கையில் இன்பத்தின் உச்சநிலை யெய்தற்கும் புனிதம் பெறுதற்கும் இத்தகைய உயரிய பேச்சுக்களினின்று வெளி வரும் உண்மைத் தத்துவங்கள் எத்துணை உதவிபுரிகின்றன வென்பது ஊன்றி நோக்குவோருக்கு நன்கு புலனாகும். உண்மைத் தத்துவம் ஒரு பேச்சில் வெளிப்படவில்லையேல் அவர் பேசும் பேச்சு உயர்ந்த பேச்சாகமாட்டாது. உயர்தரப் பேச்சாகாவிடில் அஃது உலகில் வானவில்போல் நிலைபெறாது மறைவதாம். அப்பேச்சு நினைக்கப்படாது மக்களால் அங்ஙனே மறக்கப்படுவதியல்பாம். அத்தகைய பேச்சுக்களைப் பளிச்செனத் தோன்றி மறையும் மின்னொளிக்கு ஒப்பிடலாம். நிரந்தரமான சூரியவொளிக்கும், அதன் சோதிஉமிழும் கிரணங்களுக்கும் ஒப்பிடத்தக்க பேச்சுக்களே உயர் தத்துவம் செறிந்த சொற்பொழிவுகளாம். வெறும் இன்பம் பொலிந்து, உண்மை தவழாது வார்த்தை யூற்றெனப் பெருக்கெடுத்து வெளிவரும் பேச்சுக்களைப் பட்டாம் பூச்சிகளுக்கு உவமிக்கலாம். பலவகை உருவமும் அழகிய நிறமும் கொண்ட அவைகளைத் தேடிக்கண்டு மகிழ்வோரை யாண்டும் காண்போம். ஆயினும் அவைகளின் மிகக்குறுகிய நிலையற்ற வாழ்க்கை

யும், அவற்றின் உபயோகமின்மையும் மிக வருந்தற் குரியவையாம். எனவே, ஒரு மேடைப் பேச்சு எத்துணை இன்பம் விளைவிப்பதாயினும், அழகு கொண்டதாயினும் அதில் பேச்சுப் பொருளின் உண்மைத் தத்துவம் சிறிதளவாதல் காணப் பெறுவிடின் அப்பேச்சை ஒரு நல்ல சொற்பொழி வெனவும், பேசுவோரை நாவன்மை பெற்ற நாவல ரெனவும் கொள்வதற்கில்லை.

உபாயம் உண்டோ ?

உண்மைத் தத்துவம் நிறைந்த மேடைப் பேச்சை உலகுக்கு வழங்கற்கு ஏதேனும் சிறந்த உபாயம் உண்டோவெனில் அதுதான் இல்லை. ஒரு பேச்சாளரின் புறத்தூய்மையும், அகத்தூய்மையும், மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதும் அந்தண்மையும் மேற்குறித்த பேச்சுக்குப் பெரிதும் துணைசெய்வனவாம். பிறர் பிறர் சீரெல்லாம் தூற்றி, அவர் சிறுமை புறங்காத்து எவராயினும் அவருக்குத் தாழ்மை யாகப் பதிலிறுத்தலும், அவ்வாறே நடத்தலும் ஒரு பேச்சாளருக்குப் பெரிதும் துணை நிற்பனவாம். நானென நிற்கும் அகந்தையும் அகம்பாவமான எண்ணங்களும் இன்னோர்மாட்டுக் காண்பதருமை. ஈன்றெடுத்த மக்கள்மாட்டும் மரியாதை வரன்பினின்றே பழகுதலும், பேசுதலும் இத்தகையோர் தனிச் சிறப்பாம். இந்நாட்டுப் பொது வழக்கிற்கு விலக்காக, மனைவியரை மரியாதைச் சொற்கொண்டு புகலும் பெரியார்கள் நந்தமிழ் நாட்டிலும் வெகுசிலர் உண்டு. இதில் தலை சிறந்தவர் காலஞ்சென்ற கனம் செட்டிநாட்டரசர். இது போன்ற பல வீட்டுப் பழக்கங்களும், தூய எண்ணங்களும் வெளிப் பழக்கங்களாக வருமேல், மரியாதை, மனச்சான்று, உண்மை நெறி யாகியவை தாமே ஒருவரை வலியச் சென்றடையு மென்பது ஆன்றோர் கண்ட நெறியாம். உதாரணமாக வீட்டில் ஒருவர் மனச்சான்று இன்றியும், வாய்மை இழந்தும் பேசுவரேல் அதனைச் செவிமடுக்கும் அவரது மனைவி மக்கட்கு அவர்பால் வெறுப்பும் அவமதிப்பும் உண்டாதல் இயல்பாம். இஃது இங்ஙன மாயின், அவர் மேடைப்பேச்சு எங்ஙனம் உண்மைத் தத்துவம் பொலிந்து இதர மக்களால் போற்றப்பெறும் ? இத்தகைய பேச்சைப் பொதுமக்கள் ஏற்காது காற்றில் விடுக்கக் கேட்பானேன் ? ஆனால், உண்மைத் தத்துவம் செறிந்த பேச்சை மக்கள் ஆவலோடு கேட்ப துடன், அப்பேச்சின் சத்தான பாகங்களை மனப்பாடமும் செய்வர். தம் மக்களுக்கும் அவற்றைப் போதிப்பர். " நீ உண்மையாயிருப்பதை

உன் நெஞ்சமே நன்கறியட்டும். பகலுக்குப்பின் இரவு தோன்றும் உண்மைபோல், நீ பிறருக்கு எக்காலத்தும் பொய்யனாக இருக்க முடியாதென்பது உண்மையா" மென ஷேக்ஸ்பியர் அறிவுறுத்துகிறார். இவ்வழியே உண்மைப் பேச்சு உலகுமுற்றும் பரவும்; தேசம், காலம், சேய்மை ஆகியவற்றைக் கடந்து, உண்மைப்பொருள் எங்ஙணும் நிறைந்து பரவிநின்று பிரகாசிக்க வல்லதாமென அறிஞர் ஆராய்ந்து கூறு நிற்பர்.

இரு கூறுகள்

ஒரு பேச்சுத் தத்துவத்திற்கு வெவ்வேறு கூறுகொண்ட இரு முனைகள் உள்ளனவாம். உண்மை நெறிபற்றி மக்களிடையே சமாதான வாழ்வைப் பெருக்குவது ஒன்று. மற்றொன்று அமைதியின்மையையும், குழப்பத்தையும், கலவரத்தையும் உண்டாக்கிப் பல்லாண்டு அழியாது வசைபெற்று வாழ்வதாம். இங்கிலாந்தின் பிரதம மந்திரியான காலஞ் சென்ற லாய்டு ஜியார்ஜ் எனும் பெரியாரது சமாதான வாழ்வைக் குறித்த பேச்சொன்றின் முடிவுரையை ஈங்கு நோக்குவோம். "உலகில் தங்களையும், தங்கள் குடும்பமக்களையும் காப்பாற்றுதற்காக அல்லும் பகலும் கூலிக்குப் பாடுபடும் இலட்சக்கணக்கான மக்கள் நம்மிடையே உள்ளனர். தங்களுக்கும் தங்கள் பின்வாரிசுகளுக்கும் சொந்தமாகப் பல சதுர மைல்கள் விஸ்தீரணம் கொண்ட இடங்களில் வதிந்து, நற்காற்றையும், வெளிச்சத்தையும், இடவசதியையும் ஒருங்கே தங்கள் சொந்த சொத்தாக அனுபவித்துவரும் பெருமக்கள், அவைகளில் அணுப்பிரமாணமான பாகத்தையும் கொடுத்துதவ மனங்கொள்ளாததால், அத்தகைய எளிய மக்கள் தலைமுறை தத்துவமாகத் தாங்களும், தங்கள் குடும்பங்களும், குழந்தைகளும் வாடி வதங்கி முடிவில் உலகில் உயிர்துறக்கக் காண்கிறோம். நமது மாபெரும் நாட்டின் கண்ணுள்ள பெரிய நகரங்களை நோக்குவோம். அவற்றின் இதயம் போன்ற மத்திய பாகங்களில்கூட அழுகிய குப்பை நிறைந்து துர்நாற்றம் வீச, பார்க்கவும் சகிக்கமுடியாத பல இடங்களில் ஏழை மக்கள் வதியக் காண்போம். நமது அழகிய மாளிகைகட்கும், வசிக்குமிடங்களுக்கும், உய்யானவனங்களுக்கும் நாம் அன்றாடம் செல்லும்போது, பார்த்துக்கொண்டே பார்வையற்றவர்களாக அவற்றைக் கடந்து செல்லுகிறோம். இத்தகைய குற்றத்தை - பாபச் செயலை - தெய்வநீதி மன்னிக்காது என்பதை அதுபோழ்து நாம் மறந்தே விடுகிறோம். நம்மைச் சுற்றிலும், நாலாபுறங்

களினின்றும் எழும் ஒரு தெய்வீக எச்சரிக்கையின் ஓசையை அது போழ்து ஓயாது கேட்கிறோம். நமது பாபங்களாகிய அட்டூழியங்களுக்கு ஏற்ற தண்டனை எனும் இரதங்கள் நரகத்தினின்றும் விரைந்து நம்பால் ஓடிவந்து கொண்டிருக்கின்றனவென்பதை நாம் இனியேனும் உணர்தல்வேண்டும். கடவுளின் சொரூபம் கொண்டுள்ள நம்மையொத்தக் கோடானுகோடி மக்களாகிய ஆண், பெண் இருபாலருக்கும் ஏதுமறியாக் குழந்தைகட்கும் நாம் இழைத்துவரும் கொடுமைகளும், அநீதிகளும், தீமைகளும் எத்துணைக்காலம் இந்நிலவுலகில் நிலைபெறும்? அவை விரைந்து முடிவுக்கு வருவதாகவே இதுபோழ்து நான் சத்தியமாக நம்புகிறேன்." என்னே இம்முடிவுரையின் தெய்வத்தன்மை! மற்றோர் உண்மையை உணர்த்தற்குப் பல சான்றுகள் வேண்டுவதில்லை. ஜுலியஸ் சீஸரின் படுகொலைக்குப் பழிவாங்கிய மார்க் ஆண்டனி எனும் நாவலரின் பேச்சு, அருங் கருத்துக்களைக்கொண்டு மரியாதை மிகுந்து விளங்கினும், அவரது காரிருள் சூழ்ந்த மனதினின்று - சூழ்ச்சி மிகுந்த தீய நாவினின்று - வெளிவந்ததின் காரணமாக ரோமாபுரியே அழிந்துபட்டதன்றோ?

நாட்டுக்குற்ற இன்னல்கள்

காங்கரஸ் கட்சியினின்றும் பிரிவுபட்ட அமிதவாதிகளின் கனலுமிழும் பேச்சுக்களால் நமது நாடு பற்பல இடுக்கணுக்கும், சோதனைக்கும் உள்ளாயிற்றன்றோ? காங்கரஸ் சட்ட மறுப்பு இயக்கத்தின் பயனாக நமது நாடும் நாட்டுமக்களும் தேசத்தலைவர்களும் அனுபவித்த இடுக்கண்களுக்கு ஓரளவும் உண்டோ? காலஞ்சென்ற அன்னை பெசண்டு அம்மையாரின் இதுபற்றிய கூற்று இந்நாள் ஆழ்ந்து உன்னத்தக்கது. "என்னைப் பொறுத்தவரையில் சட்ட மீறலை நாகரிகமாக யான் கொள்ளமாட்டேன். அது நாளடைவில் கொள்ளை, கொலை, புரட்சி முதலிய பல தீமைகளை நாட்டிடைப் புகுத்துவதாகும்." இக்கூற்று, பின்னாள் எத்துணை உண்மையாயிற்று! சட்ட மறுப்பு இயக்கத்தால் விளைந்த கொந்தளிப்பு, அமைதியின்மை போன்றவற்றின் அலைகள் இந்நாளும் ஓய்ந்தபாடில்லை. பொதுவுடைமைக்காரர்கள் இவ்வேளை அத்தகைய அலைகளில் சிக்குண்டுள்ளனரென்பது கண்கூடு. இற்றைநாள் பாகிஸ்தானை வற்புறுத்திய பல முஸ்லீம் தலைவர்கள், இந்தியாவெனும் பெயரையும், இந்திய மக்கள் எனும் சிறப்புப் பெயரையும் குலைத்து அவற்றை இழந்ததோடு, பண்டித ஜவஹர்லால் நேரு காணவிருந்த ஆசியமக்களின் கூட்டுறவுகொண்ட வல்லரசையும், பல தேசங்

களில் இந்தியப் பிரதிநிதிகளை நாட்ட எண்ணியிருந்த அவர் எண்ணத்தையும் தகர்த்தெறிந்தன ரல்லரோ? பழைய இந்துமதப் போராட்டத்தையும், இரத்தக் களத்தையும் குறித்துக் காட்ட செங்கிஸ்கான், டைமூர் ஆகிய முஸ்லீம் வீரர்களின் படையெடுப்பைச் சுட்டிக்காட்டிக் கலாம் எழத் தூண்டிய அவர்கள் பொறுப்பற்ற பேச்சுக்களின் பயனுக நேசப் பான்மை மிகுந்திருந்த இரு மதத்தினரிடையே இந்நாள் இரத்த வெள்ளம் பெருகி ஓடுகின்றதன்றோ? அவற்றை ஒருவாறு தடுத்தற்குக் காந்தியடிகளின் தியாகமும், அன்புநெறி நின்றுணர்த்திய உண்மைப் பேச்சுக்களும், பிரார்த்தனைகளும் எத்துணை உதவினவென்பது நாம் அனுபவத்தில் கண்டதொன்றும். "கருணையே பேச்சாய்க் கனமழையாய் வெள்ளம், பெருகி வழிகிறது பேறு" என உயர்திரு. திரு. வி. க. கிறிஸ்துமொழிக் குறளில் கூறுவதை ஓர்மின்; உணர்மின்; கடைப்பிடிமின்! உண்மைத் தத்துவம் உணராது பொதுஉடைமைக் கட்சியின் பெயரால் நிகழும் பலதிறப்பட்ட பேருரைகளால் தமிழ்நாடெங்கும் ஆலைகள் கதவடைப்பும், மிதமிஞ்சிய வேலை நிறுத்தங்களும், நூற்றுக் கணக்கான மக்கள் சிறைக்கோட்டம் நண்ணுதலும் இந்நாள் காண்கிறோமன்றோ? அரசாங்க உத்தியோகப் பெரும்பதவிகளை வகித்த ஓரிரு முஸ்லீம் பிரமுகர்கள் உண்மைப் பேச்சுத் தத்துவத்தினின்றும் பிறழ்ந்து அதற்கு மாறான ஒன்றைக் கடைப்பிடித் தொழுகுவதால் நாடெங்கும் அமைதியின்மையும், கொந்தளிப்பும் கனன்றெழல் கண்கூடாம். உண்மைநெறிக்கு மாறான இத்தகைய பேச்சுக்கள் நம் சரித்திரத்தில் - ஏன் - உலக சரித்திரத்தில் இடம்பெறும் என்பது ஒருதலை. மேலே விவரித்துக் கூறியுள்ளவாற்றால், உண்மைத் தத்துவம் நிறைந்த பேச்சுக்களும் அதற்கு மாறான தத்துவம்பெற்ற பேச்சுக்களும் முறையே மிக உயர்ந்த பேச்சுக்களாகவும் மிக இழிந்த பேச்சுக்களாவும் உலகில் பல காலம் நிலவி வாழுமென்பதும், அவற்றைச் சரித்திர வல்லோர் மறைத்தற்கியலாதென்பதும் வெள்ளிடைமலையாம்.

---

15. பேச்சொளி

ஒளி விளக்கம்

பேச்சொளி யெனும் தொடர்மொழி, பேச்சுக்கான ஒளி எனவும் பேச்சு உமிழும் ஒளியெனவும் பொருள்பட நிற்பதாம். இந்நூலின்கண் பல பகுதிகளில் பேச்சுக்கேற்ற ஒளிச்சுடர்கள்

விரிவஞ்சாது கொளுத்தப்பெற்றுள்ளன. இனிப் பேச்சு உமிழும் ஒளியையும் அதன் தத்துவத்தையும் ஈண்டு விசாரித்தறிதல் முறையாம்.

ஒளி என்னும் பதம், உவமையாகு பெயராக வருங்கால் 'புகழ்' என்றும், சாதாரண வழக்கில் வரும்போது 'வெளிச்சம்' அல்லது 'சோதி' என்றும் இருபொருள்களைத் தருவதாகும். ஒரு நல்ல பேச்சாளரும், நல்ல பேச்சும் உலகில் புகழப்பெறுதல் இயல்பேயாம். ஒரு நாவலரின் பருவுடல் மறைவுற்றாலும் அவர் பேச்சுப் புகழ் அன்றிருந்தவாறே என்றும் காணப்படுவதாம். இதனால்தான் எது அழிந்துபடினும் ஒருவர் புகழுடம்பு அழியாதென ஆன்றோர் கூறிக் கூறிக் களிக்கின்றனர். எந்நாட்டிலும் பெருமக்கள் தங்கள் அரிய - தன்னலமற்ற - தொண்டுகளாலேயே புகழுடம்பு பெற்றவராவர். இத்தமிழகத்தில் பட்டம் பதவிகளைப் பெறாது தமது பூதவுடலை விட்டெறிந்த உயர். எஸ். சத்தியமூர்த்தி போன்ற தேசப் பெரும் பேச்சுத் தொண்டர்களும் அவ்வாறேயாம். இந்நூலின் முந்திய பகுதிகளில் இனிமை, சொல்லணி, சொற்சுவை, கருத்துப்பொலிவு, அலங்காரமாகிய இன்னோரன்ன மணங்கள் ஒருவர் மேடைப்பேச்சில் நிறைந்திருத்தல் இன்றியமையாததென்பது வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஈண்டு அவைகளுடன் ஒரு பேச்சினின்றும் ஒளி அல்லது வெளிச்சம் எனும் பிறிதொரு பொருள் எங்ஙனம் தோன்றுவதாகுமென்பதும், தோற்றுவிப்பது எவ்விதம் என்பதும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியனவாம்.

நிலையான பேச்சு

ஒருவர் பேச்சின்வழி வெளிச்சம் எங்கிருந்து வரும், எவ்வாறு வருவதற்கியலும் எனும் சங்கைகள் பலர்மாட்டு எழுவதியல்பு. யாண்டு முளைக்கின்றதோ ஆண்டிருந்தே பலதிறப்பட்ட பேச்சுக்களுடன் வெளிச்சமும் இரண்டறக் கலந்து வெளிவருவதாம். மேடையில் பேசும் பேச்சுக்களும், அச்சுடரொளியின் காரியமாகிய பேச்சுப் பொருளும் மக்களை அறியாமை எனும் காரிருளினின்றும் மீட்பதற்குத் திவத்தி போன்றனவாம். இச்சுடர், இந்நாள் நூலறிவாலும் பேச்சு வன்மையாலும் வழக்கப்பாட்டை யொட்டியும் பெரிதும் காட்டப் பெறுகிறது. வெறும் புறக்கண்கொண்டு திரட்டிய பேச்சுப்பொருளையும் தம் நூலாராய்ச்சி அநுபவத்தையும் இப்பேச்சுக்களில் உமிழ்தலே அன்னோர் நோக்காகும். இத்தகைய பேச்சுக்கள், உலகில் நிரந்தரமாக நிலைபெறாது காலதேச மாறுபாட்டினால் அலைக்கப்படுதலும், புறக்கணிக்கப்பட்டு இறுதியில் மறக்கப்படுதலும் உறுதி. இஃதறிந்தே

நமது நாட்டுப் பெரியார்கள் தங்கள் உண்மை அநுபவங்களை நுண்ணறிவு கொண்டு பெருக்கிப் பலவகை நூற்களை நாட்டுப் பெரும் வைப்பென ஈட்டிப் போந்தனர். இற்றை நாளுள்ள வாய்ப்புக்கள் அற்றைநாளில் இருக்குமேல், அப்பெரியார்களின் கருத்துக்கள், பேச்சு உருவிலும் இந்நாட்டில் மலிந்து நிலைபெற்றிருத்தல் கூடும். சென்றது கிடக்க. முன்னாள் அகக்கண்கொண்டு ஆய்ந்த சுய அநுபவத்தைக் கூறு நிற்கும் பழஞ்சுவடிகள் இந்நாட்டில் இந்நாள் அழிவுற்றனவோ? இல்லை; இல்லை. அவைகள் பல்வேறுபட்ட கலைகளாகவும், கலைக்கோயில்களாகவும் இது போழ்தும் துலங்குவனவாம். எனவே, அக்கண்கொண்டு உள்ளொளி நோக்கி, உணர்ந்து, எழுதப்பெறும் நூற்களும் பேசும் பேச்சுக்களும் காலத்தைக் கடந்து நின்று யாண்டும் பெருமையளிப்பனவென்றும் ஒளி வீசுவனவென்றும் அறிதல்வேண்டும்.

உடல் உறுதி

ஒருவர் பருவுடல் உறுதிகொள்ளும் அளவிற்கேற்ப அவ்வுடலின் பல உறுப்புக்களும் நுண்ணுடலும் வளர்ச்சிபெறும். அவைகளின் மூலம் பலதிறப்பட்ட அறிவு வளர்ச்சியும் நுகரப்பெறும். புறக்கண்ணுக்குப் புலனாகாத மனம் எனும் ஒரு மாயாப்பொருளின் மூவகைத் தோற்ற மாகிய மேல்மனம், நடுமனம், அடிமனம் ஆகியவற்றால் பற்பல காரியங்களை உலகில் மக்கள் நிகழ்த்தும் ஆற்றல் வாய்ந்தவராவர். எனினும் ஒருவர் அடிமனம் இயங்குங்கால், அதற்கு அடிப்படையான - பருவுடலுக்கு வேறான - நுண்ணுடலினின்றெழும் நுண்ணறிவால் உள்ளொளி அல்லது உட்பிரகாசம் பிறப்பிக்கப்படுமென்ப. நுண்ணுடல், அடிமனம் ஆகிய இரண்டின் துணைகொண்டு உள்ளொளியை நோக்கற்கு அறிதுயி லெனும் வாகனத்தே ஒருவர் ஊர்தல்வேண்டும். அறிதுயிலினுதவியால் விளக்கம் பெறாததொன்று உலகில் இல்லை. அறிதுயில் கொள்ளலும், ஆழ்ந்த சிந்தனையிற்படுதலும் ஒருவர் பழக்கத்தின்கீழ் வருமேல், அவர் உலகில் ஓர் அரும் பிறவியேயாவார். உலகமும் உலக நுட்பங்களும் திறந்த புத்தகங்களென அவருக்கு எளிதில் விளங்குவனவாம். இதனா லன்றோ, " தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுதல் " எனப் பெரியார்கள் அறிதுயிலை அநுபவித்துக் கூறியுள்ளனர்!

உயர் நோன்பு.

இந்நூலின் மற்றொரு பகுதியில், இயேசுகிறிஸ்து பெருமான் மனிதக் கூட்டத்தை விடுத்து மலைமீதிவர்ந்து நாற்பது நாட்கள் தவங்

கிடந்து பின்னர்த் தமது மாமலைப்பொழிவை உலக மக்கட்குப் போதித்து அறிவுச்சுடர் கொளுத்தினரெனக் கூறப்பட்டுள்ளது. அதே பகுதியின் கண் ஒரு பேச்சாளர் தம் பேச்சுப் பொருளின் சிந்தனையிற்பட்டுக் கனவு காண்டல் வேண்டுமெனவும், படுக்கையில் சிறிது நேரமாதல் பேச்சுப்பொருள் குறித்து யோசித்தலும், சற்றுத் தொடர்ந்து நினைத்தலும் வேண்டுமெனவும் வலியுறுத்தப்பெற்றுள்ளன. இவற்றால், ஒரு பேச்சாளர் ஒரு பொருளில் சிந்தனைகொண்டு படுக்கையிலிருந்து யோசித்தலும், தூங்காமற்றூங்கி நனவாகும் கனவு காண்டலும் வேண்டுமென்பது பெறப்படும். மேற்குறித்த அறிதுயிலில் விளங்காததொன்று உலகில் இல்லை எனும் உண்மையைத் தேர்ந்து அதனில் ஆழ்ந்து நுண்ணறிவின் பயனாகிய உள்ளொளி பெறுதலும், அதனை உலகுக்கு யாதேனும் ஒரு வழியே உணர்த்தலும் வேண்டுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனியென விளங்கும்.

ஒருமுகப்பட்ட மனம்

மேல்மனம், நடுமனம், அடிமனம் எனப்படும் மூன்றும் மனம் எனும் தோற்றமற்றதோர் சேட்டைப் பொருளிடத்தினின்றும் பிறப்பனவாம். மனமோ ஒருவர் மூச்சின் இயக்க பேதத்தாலும், செயற்கைச் செயல்களாலும் முதற்கண் ஒருமுகப்படுத்தப்படுவதாம். ஒருமுகப்பட்ட அம்மனம் ஒருமுகப்படும் அளவிற்கேற்ப மற்றிரு மனத்தையும் இயக்குவிப்பதாம். ஒருமுகப்படும் ஒருவர் மனம் உச்சநிலை பெறுமேல், அது தானே நடுமனத்தையும் தாண்டிச் சென்று அடிமனத்தை இயக்குவித்து அறிதுயிலில் ஆழ்த்தி உள்ளொளியை உணர்த்துமென்பது பெரியார்கள் கண்ட உயர்நெறியாம். இந்நிலை பெறவே, அறிவுச்சுடர் உதயம் காணவே, யாது அழிந்துபடினும் உண்மைப்பொருள் அழியாதென்பதை நிலைநாட்டவே, கிறிஸ்துபெருமான் மலைமீது இவர்ந்து உலகுக்கு வழி கண்டனரென்ப. உண்மைப்பொருளில் ஆழ்ந்து அவர் அறிதுயிலில் கண்ட கனவே மாமலைப் பொழிவெனும் சுடரொளியாயிற்று. அது காலத்தையும், தேசங்களையும், மக்கள் வேறுபாட்டையும் கடந்து நிற்பதாயிற்று. உள்ளொளி பரப்பும் அம்மாபெரும் போதனையை உலகம் தலைமீது வைத்து இன்று போற்றுவதாயிற்று. அது வெறும் வாய்ப்பேச்சாக மட்டுமிருந்தால் எக்காலத்தோ மறைந்து மறக்கப்பட்டிருக்கும். ஒருவர் பேச்சின்மூலம், ஒளி - வெளிச்சம் - மிகுந்த உண்மைப் பிரகாசம் எங்கிருந்து வரும், எவ்வாறு வருமென்ற வினாக்களுக்கு மேலே காட்டிய விளக்கமே சாலும்.

உள்ளொளி கண்டோர்

மேலும் வளர்த்துச் செல்லல் எற்றிற்கு? இந்நாட்டுப் பூர்வத் தொண்டர்கள்மாட்டு இவ்வன்மை சிறந்து விளங்கிற்றென்பது மிகை யல்ல. நம் மதாச்சாரியர்களான சங்கரர், இராமானுசர், மத்துவாச் சாரியர் உள்ளொளிகண்டு உலகுக்கு வழிவகுத்தவராவர். தனித்தமிழ்ப் பெரியோர்களாகிய நால்வர்களும், நாயன்மார்களும், ஆழ்வாராதியரும் உள்ளொளி கண்டு உலகுக்கு உண்மைப்பொருளை உணர்த்தியவராவர். நமது பொய்யாமொழிப் புலவரின் 'திருக்குறள்' மொழிபேதங் கடந்தும், சாதி சமயங் கடந்தும், கடல் கடந்தும், நாடு கடந்தும் இந் நாளும் ஒளி வீசுகின்றதன்றோ? அப்பெரியார்களை வழிபடாதாரும், அன்னார் போதனைகளில் ஈடுபடாதாரும் இத்தமிழ்நாட்டின்கண் இல்லை யென்பது மிகையன்று. இந்நாட்டில் இன்று வதியும் ஒரு பெரியார் இமயத்தைப் பார்த்தவரல்லர். அங்ஙனமிருந்தும் நூல் வடிவில் இமயத் தின் பெருமையை நேரில் கண்டுகளித்தவர்போல் அதி நுட்பமாக விளக்கியுள்ளார்! இமயத்தை இவர் எக்கண்கொண்டு நோக்கினர்? காலஞ்சென்ற கனம் இரானடே யவர்கள் பேச்சும், உலகம்போற்றும் மகாத்மா காந்தி யடிகளின் பேச்சும் மகத்தானவை அல்லவோ? உள்ளொளி கண்ட பெரியார்கள் வெவ்வேறு துறைகளிலும் தங்கள் பெருமையைச் சில அழியாச் சின்னங்களால் இந்நாட்டில் நிலைநாட்டி யுள்ளனர். ஓராயிரமாண்டுகட்கு முன்னர்க் கட்டப்பட்ட தஞ்சாவூர்ப் பெரிய கோயில் கோபுரத்தின் உச்சியில் காணப்படும் ஓர் ஆங்கிலப் பதுமையின் தோற்றம், அதன் ஓவியரின் உள்ளொளியின் பெருமையைத் தெற்றென விளக்குவதாம். மேலும் விளக்கம் வேண்டுவதில்லை. இவ்வுதாரணங்களால் உள்ளொளியால் வரும் பேச்சொளி ஒன்று உண் டென்பதும் அதனை ஒரு மேடைத்தமிழ்ப் பேச்சாளர் முன்னே கூறிய வழிநின்று ஒல்லும்வகை அடைய முயல்தல் சாலச் சிறப்புடைத்தென் பதும் நனிவிளங்கும். ஆகவே, நமது இளைஞர்கள் உள்ளொளி கொண்டு தம்முள் நோக்கி, நாம் எப்பொழுது பேச்சொளிபெற்ற ஒரு தமிழ்ப் பேச்சாளராவோமெனச் சதா சிந்தித்து, புத்தர் போன்ற பெரி யோர்களைப் பின்பற்றி அறிதுயிலில் ஆழ்ந்து அறிவுவிளக்கம் பெற முயல்தல் முறையென்ப.

மூவகை மக்கள்

இன்னும் ஒரு விளக்கம் ஈண்டைக்கு மிகையன்று. உலகில் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான ஓலிவர் வெண்டால் ஹோம்ஸ்

என்பார் உலகின்கண்ணுள்ள பகுத்தறிவு பெற்ற மக்களை மூன்று பெரும் பிரிவினைக்குள் அடக்குகிறார். ஒருதளம் மட்டும் கொண்ட வீட்டைப் போன்று ஒரே ஒரு விவகாரத்தில் மட்டும் ஈடுபடும் சக்தி வாய்ந்த சாதாரண மக்கள் ; மேனிலைமாடங் கொண்டவை போன்று இதர இரண்டொரு விவகாரங்களையும் பகுத்துணரும் வன்மை பெற்ற மக்கள்; மூன்றடுக்கு உப்பரிகைகளை யொத்து பற்பல விவகாரங்களில் ஆழ்ந்து, கல்வியில் தோய்ந்து, கற்பனுசக்தியால் கனவு கண்டு, உள்ளொளி நோக்கி அவற்றை நனவாக்கி உலகுக்கு உணர்த்தும் ஆற்றல்பெற்ற மக்கள் என மூவகைப்படுத்துகிறார். மூன்றடுக்கும் அதற்கு மேற்பட்ட உப்பரிகையும்போன்ற உயரிய மக்களே உலகில் சிறந்தவராகவும், பிறமக்களுக்கு எழுத்து அல்லது பேச்சு மூலம் அறிவு கொளுத்துபவராகவும் உள்ளனர் என்றும், உப்பரிகையின் மேனிலைச்சாளரங்கள் மூலம் காற்றும் ஒளியும் கலந்து பெறுதல்போல் அறிவு விளக்கமும் உள்ளொளியும் மேன்மேலும் அவர்கள் பெறுகிறார்களென்றும் தெளிவுபடுத்தியுள்ளார். ஈண்டைக்கு மற்றுமோர் விளக்கம் பொருந்தும். அறிவு விளக்கத்துக்கு ஆங்கிலக் கல்வி அத்தியாவசியமல்ல. எம்மொழி பயின்றாலும் அஃது அறிவு விளக்கத்துக்கு வித்திடுவதுபோலாம். ஆயினும், ஒரு மொழியிலே தோய்ந்தவர்க்கும் பன்மொழித்தேர்ச்சி பெற்றவர்க்கும் உள்ள அறிவு வளர்ச்சியின் வேற்றுமை வெள்ளிடை மலையாம். ஒருவர் முதலில் தாய்மொழி பயில்வது சிறப்பேயாம். அம்மொழியில் காணப்படாதவற்றைப் பிறமொழியில் கண்டுதெளிதலே ஒருவர் அறிவு விளக்கத்துக்கு அரண்கோலுவதாகும். அவரே பல அடுக்கு உப்பரிகையை ஒத்த உயரிய மனிதராவார்.

சத்திய மொழி

மற்றும் ஒன்று கூறிமுடிப்போம். ஒரு பெரியார் உணர்த்துவது இதுவாம் : " அறிவுத் தெய்வமாகிய கலைமடந்தையின் ஆலயம் மிகவும் தூய்மை வாய்ந்தது. அவ்வழகிய ஆலயத்தின் உள்ளிடத்தை யாரும் எளிதில் அடைந்துவிட முடியாது. உண்மையாகவே கலைமகள்நலனைக் கண்டு களிக்கவேண்டுமாயின், தெளிந்த அறிவும், பரந்த நோக்கும், குற்றமற்ற உள்ளமும் உடையராயிருத்தல் வேண்டும். வெறும் இலக்கிய இலக்கணம் மட்டும் கற்றுச் சொற்களை அடுக்குதல் பயன்படாது. அறிவும், அருளும் நெஞ்சில் சுரந்து பெருக்கெடுத்தபொழுது பேசும் பேச்சுகட்கும், பாடல்கட்கும் ஒரு தனி மதிப்பும் பெருஞ் சிறப்பும் ஏற்படும். இயற்கையே ஒருவர் உள்ளத்தில் தவழ்ந்து, நாவில் ததும்பிப்

பேச்சு அல்லது கவியாக வழியுமானால், அப்பேச்சு அல்லது கவியின் பத்தை எவ்வாறு வருணிப்பது? *உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கிலும் அவ்வொளியே பரவி வெளியாகும்." தேடினும் இத் தெய்வீக வாக்குக்கிணையாக வேறு ஒன்றை எங்குக் காண்டல் கூடும்?

——

16. பேச்சுச்சுவை

பேச்சுச் சுவைகள்

மேடைப்பேச்சில் பல்வேறு சுவைகள் உண்டு. சமயம், காலம், இடமறிந்து ஒரு பேச்சாளர் அவற்றை உபயோகித்தல் இன்றியமையாததொன்றாம். சங்கீதக் கலையை யொத்து மேடைப்பேச்சுக்கும் ஒன்பது சுவைகள் உள்ளன. அவை அதிசயம், கோபம், கருணை, இகழ்ச்சி, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை, வீரியம் எனப்படுவனவாம். ஒரு மேடைப்பேச்சில் சாதாரணமாகக் கருணை, இகழ்ச்சி, பெருநகை, வீரியம் ஆகிய நான்கு சுவைகளே பெரிதும் காணப் பெறும். கருணையோடு கூடிய சாந்தமான மேடைப்பேச்சுக்கு ஒரு தனிச் சிறப்பு எக்காலத்தும் உண்டு. புகழ்ச்சியான பேச்சுக்கு ஒரு பொதுமேடை இடந்தருதல் இயல்பு. இகழ்ச்சியான பேச்சுக்கோ ஆண்டு இடமில்லை. கோபமான மேடைப்பேச்சு ஒரேவித முடிவைத் தான் கொடுக்கவல்லதாம். அதனால் விளையும் விபரீதங்கள் மிகப்பல. அது வாய்ச்சண்டையை மூட்டிக் கலகமெழுப்பி, கைச்சண்டையில் முடிவுபெறும். இதற்கு 1907-ம் ஆண்டு சூரத் காங்கரஸ் மேடையில் பேரறிஞர்மாட்டும் விளைந்த பெருங்கலாமே சான்றாம். இனி, எஞ்சி நிற்பன வீரியம், நகை எனும் இரு பேச்சுச்சுவைகளேயாம். அவை இரண்டும் ஒரு மேடைப்பேச்சின் இரு கண்களெனல் மிகையன்று. அவை உடலும் உயிரும்போல்வன எனினும் பொருந்தும்.

வீரியப் பேச்சு

மக்களின் மனவெழுச்சியைப் பெருக்கற்கும், பேச்சுப்பொருளை ஆணித்தரமாக மக்களின் மனதில் பதித்தற்கும், மக்களின் கீழ்ப்பட்ட

---

*இப்பகுதியை மேலும் விளக்கமாய் உணர்தற்கு உயர். திரு. வி. க. அவர்கள் யாத்துள்ள "உள்ளொளி"யை நோக்குக. மேல்நாட்டு ஹிப்நாட்டிசம், மெஸ்மெரிசம் எனும் மாயாசால அவதானங்கள் ஒருவர் அடிமனத்தைத் தொட்டு அறிவு விளக்கம் தருவனவல்ல.

வாழ்க்கை நிலையை உயர்த்தற்கும், அநீதி, அக்கிரமம், கொடுங் கோன்மை ஆகியவற்றைக் கண்டித்தற்கும் வீரியம்பொருந்திய பேச்சுக்கள் வேண்டும். அந்நிய மக்களால் ஆளப்படும் நாடு களில் இத்தகைய சொற்பெருக்குகள் நிகழ்தல் இயல்பாம். தொழி லாளிகள் முதலாளிகள்மீது பழிசுமத்தும் பேச்சுக்களில் வீராவேசம் கனன்று நாவிட்டெரியும். இவற்றால் ஆலைகள் கதவடைப்பு, தொழில் நிறுத்தம், பட்டினி, கலகம், சாக்காடு முதலியன விளைதல் இயற்கை. இவை தற்கால நாகரிகங்களாக விளங்குவனவாம். துன்புறுத்தாமையை அடிப்படையாகக் கொண்ட காந்தியடிகளின் சாந்தமான எதிர்ப்பும், ஒத்துழையாமைப் பிரசாரமும் அவர் எண்ணத்துக்கு மாறாகப் பல எரிமூட்டும் பேச்சுகட்கும் தீய செயல்கட்கும் இந்நாட்டில் வழிகாட்டின வென்பது புனைந்துரையன்று. சாந்தமும் சமாதானமும் நிறைந்த வாழ்வை மக்களிடையே பரப்புதல் கடினமாம். ஆயினும், மேடைப் பேச்சுக்களால் கலகமிழைத்தலும், கலகமிழைக்கத் தூண்டுதலும் வெகு சுலபமான காரியங்களாம். இந்நாள் பம்பாய், கல்கத்தா, லாகூர், காராச்சி முதலிய பல நகரங்களில் பாகிஸ்தான், இந்துஸ்தான் குறித் தெழுந்த சில தலைவர்களின் கிரம மீறிய பேச்சுக்களின் விளைவாக அமைதியின்மையும் இரத்த வெள்ளம் பெருகி நிற்றலும் கண்கூடு. வீரம் இல்லா மக்கள் உலகில் உயிர்வாழ்வதிலும், வாழாதிருத் தல் மேலெனக் கழறுவாருமுண்டு. ஆயினும், மன ஈரமில்லா வெறும் வீரம் மிகக் கொடுமை வாய்ந்ததென்பது யாவராலும் ஒப்பமுடிந்த உண்மை. அத்தகைய மனப்பான்மையின்றி வெறும் வீரம் செறிந்த பேச்சுக்கள் நாட்டுக்கு நன்மை பயப்பதை விடுத்து, பெருந் துன்பத்தையும், மக்கட்கு மிடிபிட்ட வாழ்க்கையையும் அளிக்கும் இயல் புடையனவாம். இங்கிலாந்து தேசத்திய முதலாவது சார்லஸ் மன்னரை முடியிழக்கச் செய்ததும், சிரச்சேதத்திற்குட்படுத்தியதும், தேசக்காப் பாளராகத் தம்மைத் தாமே உயர்த்திக்கொண்ட ஆலிவர் குராம்வெல் என்பாரின் வீராவேசப் பேச்சுக்களன்றோ! வீராவேசப் பேச்சுக்களால் சுயேச்சைபெற்ற நாடுகளும், முடியிழந்த நாடுகளும், தரைமட்டமாக அழிவுற்றதேயங்களும் பல உண்டெனச் சரித்திரம் பகரும். இவற்றிற்கு முறையே அமெரிக்கா, ருஷ்யா, ஜெர்மனி தேசங்கள் தக்க சான்று களாம். வீரமிக்க பேச்சாளர்கட்கு அமெரிக்காவின் சுயேச்சைக்குப் போராடிய பாட்ரிக் ஹென்றி என்பார் ஒருசிறந்த எடுத்துக் காட்டாவார். "விடுதலையைக் கொடுங்கள், இன்றேல் மரணத்தைக் கொடுங்கள்" என்றும், "மூன்றுவது ஜியார்ஜ் மன்னரின் கொடுங்கோலுக்கு முற்றுப்











1. பிரதமர் கிளிமண்டு ஆட்லி, 2. சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், 3. லார்டு மௌண்ட்பாட்டன், 4. லேடி மௌண்ட்பாட்டன், 5. சார்லஸ் பிராட்லா.

யுள்ளியிடுவோம். சீஸர் அழிந்து பட்டதற்குப் புரூட்டஸ் பிறந்திருந்தார்; முதலாவது சார்லஸ் மன்னரை அழித்தற்குக் குராம்வெல் முளைத்தார். அவர்களை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு ஜியார்ஜ் மன்னர் திருந்தட்டும்" என்றும் வீரமுழக்கமிட்டு அந்நாட்டுச் சுதந்தர உரிமை பெற்றார் எனச் சரித்திரம் கூறும். நாத்திகரான சார்லஸ் பிராட்லாவின் வீரப்பேச்சுக்களும், செய்கைகளும், பார்லிமெண்டின் பிரமாண முறையைக் கவிழ்த்து வெற்றி கண்டனவன்றோ? ஆஸ்திரேலியாவில் கூடிய ஆட்டாவா மாநாட்டில் பேசிய சர். ஆர். கே. சண்முகம்செட்டியாரின் தேசாபிமான வீரமுழக்கம் இந்திய சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளதாம். அவ்வமயம் அவரது உயரிய உருவம், மேலும் உயர, மண்டபமே எதிரிரொலிக்குமாறு தமது உச்சக்குரலில், "இந்திய மக்கள் போர்க்களத்தில் ஆங்கிலேய மக்களுக்குச் சமமாக நின்று மடிவதற்கு உரிமையுடையவர்களானல், உலகில் அவர்களுடன் சமமாக ஒருங்கு கூடி வாழ்வதற்கும் உரிமைபெற்றவராவர்" எனக் கூறித் தமது தேசாபிமானத்தைத் தெற்றென விளக்கினர். செங்கற்பட்டு மாவட்டக் கழகத் தலைவராயிருந்த உயர். டி. சண்முகம் என்பார் திருவொற்றியூரில் தொன்றுதொட்டு ஆண்டுதோறும் நிகழ்ந்துவந்த கொடும் பலியை நிறுத்திக் குன்றாப் புகழ்பெற்றார். அவரது வீராவேசம் செறிந்த பேச்சு முடிந்தபின் பலிபீட மீதிருந்த எருமைக்கடாவின் தலைக்குப் பதிலாகத் தமது தலையை அப்பீடத்தின்மீதிருத்தி வெட்ட.வவினர்! இஃதொன்றால் மதத்தின் பேரால் நடைபெற்றுவந்த அக்கொடிய வழக்கம் அறவே ஒழிந்தது. ஆகலின், வீரம் செறிந்த ஒரு பேச்சில் ஈரம் அல்லது கருணையெனும் பிறிதொரு பசைப்பொருளின் கூட்டுறவு வேண்டும். அவ்வாறு பேசுதலே உண்மையான வீரியப் பேச்சாகுமென்ப. கலகமிழைத்தலையும், நாசகாரியம் செய்தலையும் குறிக்கோளாகக்கொண்ட வீரியப்பேச்சுக்கள் மிகக் கடைப்பட்ட ஆணவப்பேச்சுக்களேயாம். அவை நாவன்மை கொண்ட பேச்சுக்களாகா.

புகழ்ச்சியில் இகழ்ச்சி

மறைந்தோர் ஒருவர் மிகக் கொடியவராயினும் இழிகுணம் படைத்தவராயினும் அவரைப் பொதுமேடைகளிலும் எழுத்திலும் இகழ்தல் மேலைநாட்டு முறையல்ல. நமது நாட்டில் மறைந்தோர் மிதமிஞ்சிப் புகழப்படுகின்றாரேயன்றி ஒருசிறிதும் இகழப்படுகின்றாரில்லை. ஆயினும் இந்நாள் இகழ்ச்சிப் பேச்சுக்கள் மெல்ல மெல்லத் தலைகாட்டுகின்றன. சில பேச்சாளர், உண்மையை மறைக்காது கூறுதல் வேண்டுமென்று

மறைந்தோரின் குணாதிசயங்களைக் குறித்துத் தமது அபிப்பிராயங்களைக் கூறப்புகுவர். நீதிமன்றங்களில் கூறப்படுதல்போல் சிலர் தீர்ப்புக் கூற முற்படுவர். அவ்வாறு கூறப்புகுவோர்க்கு ஒரு நீதிபதிக்குள்ள தகுதியும் மனச்சான்று மிகுதியும் வாய்ந்திருத்தல் இன்றியமையாததாம். இல்லையேல், அவ்விதத் தீர்ப்புக்களை உலகம் ஏற்றல் அரிது. அவை பொதுமக்களின் ஏளனத்திற்கும் எள்ளுதற்கும் உரியனவாம் என்பது ஒருதலை. ஓர் உதாரணம் ஈண்டைக்கேற்புடைத்தாம். பாகிஸ்தானைப் போராடிப்பெற்ற கவர்னர் ஜெனரல் முகம்மது ஆலி ஜின்னா அண்மையில் மறைவுற்றதற்கு வருந்திப் பல பெரியார்கள் தங்கள் அநுதாபச் செய்திகளுடன் பல தாறுமாறான அபிப்பிராயங்களையும் வெளியிட்டனர். ஆயினும், டாக்டர் சர். சி. இராமலிங்க ரெட்டியார் தமது அநுதாபத்தை மட்டும் கூறினாரில்லை; இணையற்ற தீர்ப்பும் கூறினார். அது காலத்தையும், தேசத்தையும் கடந்து நிற்பதொன்றும். மறைவுற்ற கனம் ஜின்னாவை ரோமாபுரியின் தலைசிறந்த வீரரான கொரியோலேனஸ் என்பாருக்கு உவமைப்படுத்தினார். அப் போர்வீரர் ரோமாபுரியின் உயர்வுக்காகப் புரிந்த பல போர்களில் வெற்றி கண்டவர்; அவ்வழி ரோமாபுரியை உன்னத நிலைக்குக் கொண்டு சேர்த்தவர். ஓரமயம் ரோமாபுரியின் மக்களில் ஒருசிலர் தமக்கிழைத்த கடுகளவு தீமையைச் சகியாது, தமது பிறந்த நாட்டை - தாம் உயர்வித்த நாட்டை அழித்துவிடும் நோக்கமாய் மலையென ஒரு பெரும்படை திரட்டிப் போர்க்கோலங் கொண்டகாலை, அவரது வயோதிக அன்னையாரும், அழகிற் சிறந்த மனைவியாரும் அவரை மன்றாடித் தடுத்தனர். அத்தகாத தீய முயற்சியைக் கைவிடுமாறு வேண்டிக் கண்ணீர் உகுத்துக் கதறினர். அவற்றிற்கு இரங்கி அவர் செவிசாய்க்காததால் அவர் அன்னையாரும் மனைவியாரும் செருக்களத்திலேயே உயிர்நீத்தனர். கொரியோலேனஸ் அச்சவங்களை மிதித்துத் துவைத்துத் தாண்டிச் சென்று ரோமாபுரியைத் தாக்கவே செய்தார். ஆயினும் அவர் அதில் வெற்றி கண்டாரில்லை; படுதோல்வியே பெற்றார். மலையெனத் திண்மை பெற்றிருந்த ரோமாபுரியும் பிளவுண்டு சீர் குலைந்தது. கொரியோலேனஸின் பழம் புகழனைத்தும் ஒரே நொடியில் பறந்தன. கனம் ஜின்னா இந்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு கொரியோலேனஸ்போல் விளங்கினார். கிலாபத் கிளர்ச்சியுடன் சேர மறுத்தவரும் முஸ்லிம் தனித்தொகுதியை வெறுத்தவரும் முன்னாள் காங்கரஸ் பேரபிமானியுமான தீரர் ஜின்னா சாகிப் தமது அந்தியக் காலத்தே கெடுமதி பிடித்துந்த இந்தியாவை இரு துண்டாடுதற்குப் போர்ச்சன்ன

தம் கொண்டார். அவரைத் தடுத்து மன்றாடுதற்கு உத்தம அன்னையோ, மனைவியோ அவருக்கில்லை. போராட்டம் கனன்று நாடெங்கும் நாவிட்டெழுந்தது. அதன் பயனாக விளைந்த இரத்த வெள்ளத்தையும் பிணக்குவியல்களையும் தாண்டித் த்ாண்டியே திரும்பிப் பாராது பாகிஸ்தானை நோக்கி நடந்தார். சந்தேகமற அவர் ஒரு தீரர்தான்; விடாப் பிடியுடைய வீரர்தான். அவ்விரு பெருங் குணங்களும் வேறு நல்ல வழியில் தகுதியான காரியங்கட்குப் பயன்படாது இந்தியா பாழ்பட்டதற்கே உதவின. கொரியோலேனஸ் உலக சரித்திரத்தில் இடம் பெற்றிருப்பதைப்போல் ஜின்னு சாகிபும் இந்தியதேச சரித்திரத்தில் உலகம் உள்ள அளவும் இடம் பெற்றுவிட்டார்" என்று கரவாது நீதி நெறியினின்று சர். ரெட்டியார் தீர்ப்புக் கூறினர். இப்பேச்சு எச்சுவை கொண்டதென அறுதியிடுவதற்கில்லை. அஃது எதுவாகினும் ஆகுக. இத்தீர்ப்பளித்த டாக்டர் ரெட்டியார் அத்தீர்ப்புக் கூறுதற்குத் தகுதி வாய்ந்தவரென்பதிலும், அத்தீர்ப்பு சத்தியம் வாய்ந்ததென்பதிலும் எவ்வித ஐயப்பாடுமில்லை. டாக்டர் ரெட்டியார் ஒரு பழுத்துக் கனிந்த தேசாபிமானி மட்டுமல்ல; அறிஞர்க்குத் தகுதிப் பத்திரமளிக்கும் ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் ஆவார் அல்லரோ?

நகைச் சுவை

நாவன்மை மிகுதியும் பெற்றோரே நாவலரெனப்படுவர். வெறும் நூல்வன்மை பெற்றோர் நாவலராகார். ஒருவர் பெற்ற நூலறிவு அவர் தம் மனம் எனும் பூமியைப் பண்படுத்தும் கருவியேயாகும். நன்னிலத்திட்டவித்து ஓங்கித் தழைத்தல்போல், நூலறிவால் பண்பட்ட ஒருவர் மனதினின்று முளைத்தெழும் சொற்களும், கருத்துக்களும் புனிதமும் வன்மையும் பெற்று நாவழி நல்லனவாகப் பொழிதலே நாவன்மையாகும். அந்நாவலருக்கு நயம்பெற்ற பேச்சும், அதில் விரவிவரும் நகைச்சுவையும் இயல்பாகவே உதிப்பனவாம். ஏற்றம், இறக்கம், சமநிலை ஆகிய பேதமின்றி ஒரே குரலில் வெறும் வார்த்தைமழை பொழிதலும், குற்றாலத்து நீர்வீழ்ச்சியைப்போல் வார்த்தைகளை இரைந்தும் விரைந்தும் கொட்டுதலும் சிறந்த நாவன்மையெனக் கோடல் தவறாம். அத்தகைய பேச்சைக் கடுமணல் வெளியான ஒரு பாலைவனத்திற்கு உவமிக்கலாம். அந்நெடிய பாலைவனத்தின் இடையிடையே பசும்புற்றரைகளும், நிழல் தரு மரங்களும், நீரூற்றும் உள்ளனபோல் ஒரு சொற்பொழிவில் மக்கள் களிக்குமாறு நகைச்சுவை மிகுந்த சில வார்த்தைச் சித்திரங்கள் விரவி வருதல் மிக வேண்டப்படுவதாம். அவற்றால் சபையோரைப் பெரு

நகைப்பில் ஆழ்த்தவேண்டுமென்பது கருத்தல்ல. விடாநகைப்பை உண்டாக்கும் பேச்சு அத்துணைச் சிறந்ததன்று. சபையில் பெரு நகைப்பு அடிக்கடி உரக்கஎழுமாயின், ஒருபேச்சாளர் கருத்துக்கோவை யுடன் தொடர்ந்து பேசுதல் கடினமாம். ஒரு சபையில் குறு நகைப்பும், ஒவ்வொருவர் முகத்திலும் புன்முறுவலும் தவழச் செய்யவல்ல பேச்சே நகைச்சுவை யுடையதாமென்ப. இங்கிலாந்தில் மணிக்கணக்கில் பேசவல்ல பெரும் நாவலரான கிளாட்ஸ்டன் பேச்சுக் கள் பெரும்பாலும் பேச்சுப் பாலைவனங்களாம். நகைச்சுவைகொண்ட பசும்புற்றடங்களை அன்னார் பேச்சுக்களில் காண்டல் அருமை. நாவலர் டிஸ்ரவியாரின் பேச்சில் ஆங்காங்கு நகைச்சுவை தலைகாட்டும். அவர் கன்னிப்பேச்சிலும் நகைச்சுவைகள் மலியக் காணலாம். அக்கலவரத்தி னிடையும் "ஒரு கையில் செயிண்டுபால் ஆலயத்தின் திறவுகோலும், மற்றொரு கையில் தொப்பியும்" என்ற உவமை, நகைச்சுவையை உண்டாக்கின்றென்ப. சற்றேறக்குறைய இருபத்தையாயிரம் ஆங்கில மொழிகளை உபயோகிக்கவல்ல பழைய பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலின் பேச்சுக்கள், இயற்கையில் நாசகாரியத்தையே வேலையாகக் கொண்டவை யாதலால் அவைகளில் அழிவு, பயங்கரச் சுவைகளைத் தவிர்த்து வேறு எச்சுவையையும் காண்டல் அரிதாம். பலவாண்டுகட்குமுன் சர்ச்சில் தமது பேச்சுக்களில் சிலவற்றை அச்சியற்றி அவர் நண்பர் ஒருவருக்கு அனுப்பினர். அதனைப் பெற்ற அந்நண்பர் இறுத்த விடை இதுவாம் : "காமன்ஸ் சபையில் தாங்கள் பேசிய பேச்சுக்களை அனுப்பியதற்கு நன்றி ; லார்டு பீக்கன்ஸ் பீல்டு சொல்லியதுபோல், அவற்றைப் படிப் பதில் காலத்தை இழக்கமாட்டேன்". சர். சுரேந்திரநாத் பனர்ஜியர் பேச் சுக்களில் பல சுவைகளுடன் அளவோடு கூடிய நகைச்சுவையும் காண லாம். சாக்ரடீஸ், டெமாஸ்தனீஸ், கிளாட்ஸ்டன் ஆகிய நாவலர்கள் தங்கள் தங்கள் நாடுகளில் சிறந்து மிளிர்ந்ததுபோல் பாபுசுரேந்திரர் இந்தியாவில் தனிச் சிறப்புப்பெற்றிருந்தனர் என்பது மிகையன்று. அவரைப்போன்ற நாவலரை - வித்தகரை இந்தியா மட்டும் அன்று - உலகம் காணுமா என்பது ஐயம். மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரும் அவ்வகுப்பில் வைத்து எண்ணத்தகுந்தவர் ஆவார். அவர்கள் இருவ ரால் இந்தியாவின் பெருமை மிக மிக உயர்வுபெற்றதென்பது உண்மை யாம். அவ்வுயர்வு இந்நாள் திவான்பகதூர் சர். ஏ. இராமசாமி முதலி யாரால் மேலும் உலகெங்கும் பெருக்கப்பட்டு வருதல் பெருமைக்குரிய தொன்றாம். இவர் பேச்சிலும் அளவோடு கூடிய நகைச்சுவை பல இடங்களில் விரவி வருதலைக்காண்போம். அண்மையில் பாரிஸ் நகரில்

கூடிய உலகப் பாதுகாப்புச் சபையின் அவைத் தலைவரான சர். கடோகன் என்பாரை ஐதராபாத் விவாதத்தில் நகைச்சுவை ததும்ப இடித்துக் கூறிய ஒரு வாசகத்தொடர் இன்னாள் உலக சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது. மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரின் பேச்சுக்கள் பெரும் இலக்கியங்களாகக் கருதப்படினும் அவற்றுள் நகைச்சுவையைத் தேடிப்பிடித்தல் கடினமாம்.

சில உதாரணங்கள்

இங்கிலாந்தின் பிரதம மந்திரியான காலஞ்சென்ற லாய்டு ஜியார்ஜ் எனும் நாவலர்பேச்சுத் தோரணையும்,நகைச்சுவையும் மிகக் கொண்டவராவார். இங்கிலாந்தில் அவர் ஆட்சியில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் நெடுநாள் வேலைநிறுத்தம் செய்தனர். அவ்வேலை நிறுத்தத்தின் பயனாகத் தேசத்துக்கு விளையும் பல கொடுமைகளை விளக்கி, விரைவில் கைத்தொழில்கள் நசித்து நாட்டைப் பாழ்படுத்துமென அவர் ஒரு பெருங்கூட்டத்தில் பேசினார். அது சமயம் அப்பேச்சுப் பொருளில் ஆழ்ந்திருந்த ஒருவர், " லாய்டு ஜியார்ஜ் இங்கிலாந்தின் நிலைமையை அல்ல, நரகலோகத்தையே வருணிக்கின்றார் " என்றார். உடனே லாய்டு ஜியார்ஜ் அவர் பக்கம் நோக்கித் தமது பேச்சினூடே "நம்மிடையே நரகத்தினின்றும் ஒரு பிரதிநிதி வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சி தருகின்றது" என்றார். எங்கும் ஓரே நகைப்பு! அஃதொன்றினாலேயே நிலக்கரித்தொழிலாளர் வேலை நிறுத்தத்தை வென்றார். பேபியன் (Fabian) சங்கத்தை நிறுவிய பர்னார்ட்ஷா, அன்னிபெசண்டு அம்மையார், வெப் தம்பதிகள் ஆகிய நால்வரும் உலகப் பிரசித்திபெற்ற பேச்சாளரும், நகைச்சுவை கொண்டவருமாவர். ஒரு முக்கிய காரியத்துக்குப் பதில் அளிக்காது பெர்னார்டு ஷா ஏன் சபையில் மௌனமாக இருந்தாரென ஒருவர் கடாவினார். "என்னுடைய மௌனம் இதுபோழ்து பூமண்டலம் முழுதும் கேட்கப்படுகிறது" என பெர்னார்ட் ஷா எழுந்து பதிலிறுத்தார். மற்றோரமயம் செஸ்டர்டன் என்ற குள்ளமும் மிகப் பருத்த உடலும் கொண்ட நாவலர், உயரமும் மெல்லிய உடலுமுடைய பெர்னார்ட் ஷாவைத் தாக்க எண்ணி, " தங்களை யாரேனும் ஒரு புதியர் பார்ப்பரேல், ஏது, இங்கிலாந்தில் பஞ்சமுண்டோவென ஐயுறுவர்!" என்றார். "அதே மனிதர் உங்களைப் பார்ப்பரேல் அப்பஞ்சத்திற்குக் காரணம் நீங்களே என அறிந்து கொள்வர்!" என்று பளிச்சென நகைச்சுவை ததும்ப விடையிறுத்தார். மகாத்மா காந்தியடிகளின் அகிம்சா தர்மத்தைப் பரிகசித்துப் பேசியகாலை "ஒரு பசுவின் அகிம்சா தர்மக் கொள்

கையால் ஒரு புலி சாக பட்சணியாக மாற்றமடையாது" எனப் பெர்ணுர்டு ஷா நகைச்சுவை ததும்பக் குறிப்பிட்டது இன்று உலக சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

நகைச்சுவை நாவலர்கள்

ஆங்கில அருங்கலா விற்பன்னரும், மேடைப் பேச்சில் தலைசிறந்த நாவலரும், மொழிநயம், சொற்போக்கு, சொற்சுவையிற் சிறந்து இந்நாள் விளங்குபவருமான டாக்டர். சர். சி. இராமலிங்க ரெட்டியார் எதைக்குறித்தும் மணிக்கணக்கில் நகைச்சுவை ததும்பச் சபையோர் களிக்குமாறு உயரிய முறையில் சொற்பெருக்காற்றி வருபவராவார். அவரது பேச்சு ஒரு சமயம் சபையோரை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தும். இன்னொரு சமயம் வியப்பினுச்சியில் கொண்டு சேர்க்கும். மற்றொரு சமயம் தர்க்க வாதத்தால் எதிரிடைப் பேச்சுக்களைக் கண்ட துண்டமாகச் சிதைக்கும். வேறொரு சமயம் வார்த்தைகள் மிக மெருகோடும், சாந்தமாகவும், உயரியமனப்பான்மையைத் தெற்றெனக் காட்டியும் அலையென வெளிவரும். அவரது கம்பீரமான சொல்லணிகள் அவரது பொதுத் தோற்றத்திற்கு ஏற்றனவாக மிளிரும். அவர் அரசியலில் எதிரிடைக் கொள்கை கொண்டவர்களையும் மன்னித்து அணைத்துச் செல்லும் மனப்பான்மை கொண்டவர். பிறரைப் புண்படப்பேசுதல் அவர் மரபல்ல. அவர் பேச்சினிடையே பளிச்சென ஒளிரும் நகைச்சுவைகள் பருகப் பருகத் தேனென இனிக்கும் இயல்புடையன. அவை அவர் வாயினின்றும் வெறும் சொல்லாகப் பிறப்பனவல்ல; தெள்ளிய உள்ளத்தினின்றும் - காவியக் களஞ்சியத்தினின்றும் - பிறப்பனவாதலால் அவை தனிச்சொலிப்புடன் மிளிர்வனவாம். ஒருபோது சென்னைத் தென் இந்திய நலவுரிமைச் சங்க மாநாட்டில், காங்கரஸ் மகா சபை அச்சங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமாய் ஒரு தீர்மானம் நிறைவேறிற்று. அதைக்குறித்து வேறிடத்தில் பேசிய டாக்டர். சர். ரெட்டியார் "நீதிக்கட்சிக்காரர், காங்கரஸ் மகாசபையைத் தென்இந்திய நலவுரிமைச் சங்கத்தின் அகில இந்தியக்கிளைச் சங்கமாக்க விரும்புகிறார்களா? ஐந்து என்னும் எண்ணிக்கை பத்துக்கு மேல் பெரியது போலும்!" என நகைச்சுவை மிளிர இடித்துப் பேசினார். சென்னை அரசியலில் சட்ட மந்திரியாயிருந்த காலஞ்சென்ற சர். கே. வி. ரெட்டியார் சட்டசபையில், காங்கரஸ்வாதிகள் ஆங்கிலேயரை மூட்டை முடிச்சுக்களுடன் நாளையே வெளிக்கிளம்புமாறு வெறுங் கூச்சலிடுகின்றனரெனவும், அவர்கள் சதா முரண்படப் பேசுகின்ற குழுவினரெனவும்

இடித்துத் தாக்கினர். விவாதத்திற்கு சர். சி. ஆர். ரெட்டியார் சாவதானமாகப் பதிலளிக்கையில்; "எனக்குக் காங்கரஸிடம் பெருமதிப்புண்டு. நான் ஆங்கிலேயரை வெறுக்கவில்லை; வெறுப்பது மில்லை. அவர்கள் கலாச்சாரத்தையும், இலக்கியங்களையும் என்னுயிர் போல் நேசிக்கின்றேன். அவர்களுடைய பரந்த விஞ்ஞான அறிவைப் பாராட்டுகிறேன். ஆங்கிலேயரின் ஆக்கல் வேலைகளைப் புகழ்வேன். அவர்கள் அரசியல் அறிவையும் தந்திரமுறைகளையும் பாராட்டுகிறேன். மொத்தத்தில் அவர்களை உலகப் பெருமக்களென்னப் போற்றுவேன். தனிப்பட்ட முறையில் அவர்கள்பால் எனக்கு வெறுப்புச் சிறிதுமில்லை. எனது நண்பர்களாயுள்ளவர்களை வெகுவாக நேசிக்கிறேன். அவர்களும் என்னிடம் அளவுகடந்த அன்பு பாராட்டுகின்றனர். ஆனால், ஆங்கில மக்கள் வர்த்தகர்களாகவும் நாட்டை ஆள்பவர்களாகவும் இருப்பதை மட்டும் நான் விரும்பவேயில்லை. நான் எத்துணை யளவு ஆங்கில மக்களைப் பாராட்டினாலும் நேசித்தாலும் அவர்கள் சூயஸ் ஜல சந்திக்கப்பால் இருப்பார்களாயின் அவர்களை இன்னும் மிக உள்ளூர நேசிப்பேன்" என்று விவாதத்திற்கு நகைச்சுவை ததும்ப விடையிறுத்தார். மற்றொரு சமயம் பிரதம மந்திரியான பனகால் அரசர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைச் சட்டசபையில் வெகு வாக்கு வல்லமையுடனும் நகைச் சுவையுடனும் சர். ரெட்டியார் பிரரேபித்தார். அது படிக்கபடிக்கப் இன்பூறும் ஓர் எடுத்துக் காட்டான பேச்சாகும். அதற்குத் தக்க விடை, தர்க்க ரீதியாகப் பகரமாட்டாத பனகால் அரசர், சர். செட்டியார் தம்மைப் பல கடிதங்கள் மூலம் கேட்டுக் கொண்டும் அரசியல் உயர்பதவி அவருக்கு கொடுக்கப்படவில்லையென்ற ஆத்திரத்தால் கட்சிமாறி இத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளாரென்றும் அக்கடிதங்களைச் சபையோர் அறியுமாறு வாசிக்கப் போவதாகவும் அச்சுறுத்தினர். சர். ரெட்டியார் எழுந்து "இங்கிலாந்து போன்ற நாகரிக தேசங்களில் இரு காதலர்கள் மன வேற்றுமையாலோ அன்றி வேறு காரணம் பற்றியோ பிரிந்தால் அவரவர் எழுதிய காதல் கடிதங்களையும் படங்களையும் கௌரவ முறையில் திருப்பிக் கொடுத்து விடுவது வழக்கு. இச் சபையிலும் அந்த நாரிக முறையை எதிர்பார்க்கிறேன்" எனக்கூறிச் சபையோரை நகைப்பில் ஆழ்த்தியும் பனகால் அரசரைத் திகைப்பித்தும் அக்கடிதங்களைப் படிக்கவொட்டாது தடைசெய்தார். நாகப்பூர் சர்வகலாசாலை ஆண்டு விழாப் பிரசங்கத்தை ஏற்றுக்கொண்டிருந்த சர். ரெட்டியார் அதை மறந்து போயினர். இரயில் பிரயாணத்திலேயே ஆண்டுப் பேசவேண்டியவற்றைக் குறித்துக்

கொண்டு சிறந்த முறையில் சென்று பேச்சாற்றினர். வேறொரு சமயம் அதைப்பற்றிக் குறிப்பிடுகையில், "ஆண்டே சுகப்பிரசவம் ஆயிற்று. தாயும் சேயும் சுகமே" எனக் கூறி நகைச் சுவை யெழுப்பினர்.

தமிழ் நாவலர்

இனி, தனித்தமிழ் நாவலர்களை நோக்குவோம். தமிழ் நாட்டில் ஆங்கிலப் பேச்சுமுறையைப் பின்பற்றிப் பேசும் தமிழ் நாவலர்கள் மிக அருகியிருத்தல் கண்கூடாம். தமிழ்க்கலைக் கடலின் கரைகண்டு ஒளிரும் தமிழ் ஞாயிறு - ஒன்றல்ல, பலப்பல இந்நாட்டின்கண் உண்டு. அவர்கட்கு ஆங்கில மொழிப்பயிற்சியும் ஓரளவு ஒருங்கு சேர்ந்திருக்குமேல், மேடைத்தமிழ்ப் பேச்சு இந்நாள் மிக்க உச்ச நிலையில் நிற்குமென்பது ஒருதலை. இதற்கு உயர்திரு மறைமலையடிகளும், திரு. வி. க. அவர்களும், ஞானியார் சுவாமிகளும் தக்க எடுத்துக்காட்டாவர். இம் மூவரும் ஆங்கில மொழித் தேர்ச்சி பெற்றவர்கள். ஆங்கில மொழியிற் சிறந்தவரா, அன்றி இனிய தமிழில் சிறந்தவராவெனும் ஐயம் தோன்றத் தமிழ்ப் பேச்சை ஆர்வம் பொங்கப் பேசிவரும் சர். ஆர். கே. சண்முகம் செட்டியாரின் பேச்சுவன்மை ஒருபுறமிருக்க, அதில் இடையிடையே மிளிரும் நகைச் சுவை போற்றத்தக்கதாம். முதல் தமிழிசை மாநாட்டில் இவர் தம்மை "ஒரு நாடோடி" எனக் குறிப்பிட்டு, "என் நாடோடி அநுபவத்தைக் கூறுவேன்" என்றபோது நகைப்பும் கைதட்டலும் எழுந்தன. ஆங்கிலம் கற்று இருபட்டதாரியாக மிளிரும் உயர். ஆர். பி. சேதுப் பிள்ளை யவர்களின் தமிழ்ப் பேச்சுநடை எதுகை மோனை தவழ்வதுடன் நகைச்சுவை கொண்டும் மிளிர்வதைக் காண்போம். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் சமமாக வாக்கு வல்லமைபெற்ற உயர்திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் ஒரு காலத்தே சிறந்து விளங்கினர். இவர்மாட்டும் நகைச்சுவை மிக நயத்தற்கியலும். காலஞ்சென்ற மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார் இவர் பேச்சு முறையைக் குறித்தும் இந்நூலாசிரியரிடம் பாராட்டினர். ஆயினும், அவர் வன்மை இந்நாள் பொது மேடைகட்குப் பயன்படாது போனது வருந்தற்குரித்தாம். திருச்சி உயர். கே. ஏ. பி. விசுவநாதம் என்பாரைத் தமிழ்நாடு நன்கறியும். அவர் தம்மைப் போலவே தமிழுக்கு இனிமையும் அழகும் செய்து மேடைமீது பேச வல்லவர். அவர் சீவகாருண்யத்தைக் குறித்துப் பேசிய பேச்சொன்றில், "இன்று காளி கேட்கும் பலிகள் அற்பப் பிராணிகளான வாய்செத்த ஆடு, கோழிகள்

அல்ல; ‘ சிங்கம், புலி, யானை, ஒட்டகம் ஆகிய உயரிய பலிகளை விரும்புகிறேன் ’ என அறைகூவுகின்றாள் ” என நகைச் சுவையும் பொருட் சுவையும் தோன்றப் பேசினார்.

வீட்டுப் பழக்கம்

மேடைப் பேச்சில் நகைச்சுவை பெறுதற்கு வீட்டுப் பழக்கமே அடிப்படையாம். இனிமையாகவும், நகைச் சுவையுடனும் வீட்டில் பேசவல்லோர் வெளியிலும் அவ்வாறே பேசுதல் இயல்பாம். திருச்சியில் புத்தம் புதிய மாளிகை கட்டப் பெற்றகாலை, அதன் தலைப்பணியாளர், உயர்திரு. எம். கே. தியாகராஜ பாகவதரை அணுகி, ‘ சுவர்கட்கு நல்ல மெருகுடன் சுண்ணந்தீட்டுதற்கு இரண்டாயிரம் வாரண அண்டங்கள் தேவை’ என்றார். வேறு யோசனையின்றி உயர் பாகவதர் “ ஒரு கோழிக் குஞ்சின் கொக்கரிப்பே சகிக்க முடியாததென்றால், இரண்டாயிரம் நிரபராதிகளான குஞ்சுகளின் கொக்கரிப்பைஅக்கூடத்தில் வீற்றிருக்கும் நான் சகிப்ப தெங்ஙனம்?” என்று விடையிறுத்தார். சாதாரண வீட்டுப் பேச்சிலும் நகைச் சுவை மிக்க கருத்தை ஓரளவு புகுத்தலா மென்பதற்கு மேற்குறித்த உதாரணம் ஒன்றே சாலும். இன்று நாடக, சினிமா மேடைகளில் நிகரற்று விளங்கும் நகைச்சுவை யரசு உயர்திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் நகைச்சுவை மலிந்த பேச்சுக்களை வீட்டிலும், மேடைகளிலும், இங்கும், அங்கும், எங்கும் காணலாம். மனவேதனை மிக்க சிறைவாசத்திலும் அவரது நகைச்சுவை மிகுந்த உள்ளமும் உரையும் அவருக்கும் அவர் நண்பருக்கும் துணைநின்றனவென்பது மிகையன்று. ஒருவர் மனமாசையும் துயரையும் துடைத்து இன்பம் பெருக்குவது நகைச்சுவை என்பதை ஒரு மேடைப்பேச்சாளர் உணர்ந்து பேசுதல் சாலச் சிறப்புடைத்தாம்.

ஆயிரத்துக்கு ஒருவர்

இத் தமிழ்நாட்டின்கண் ஆயிரத்துக்கொருவரே விதி தப்பாது ‘பாடிப் பிரசங்கம் புரிய’ வல்லராவாரென ஆன்றோர் மொழிந்துள்ளனர். இஃதொன்றால் முற்காலத்தே பாட்டில்லாத தனி மேடைப்பேச்சுக்கள் இல்லையென்பது பெறப்படுவதாம். எஞ்சிய தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது மக்களும் பேச்சுமேடைக்கு அருகராகார் என்பது நமது பெரியோர்களின் கருத்தாம். இன்னிசையோடு பாடிப் பிரசங்கம் புரிவோர் முற்காலத்திலேயே குறைவுபட்டும், தற்காலத்தே

நசித்தும் வரும் ஒரு குழுவினராவரெனக் கோடல் தவறன்று. இக் குறைபாட்டைத் தவிர்த்தற்கு இனி மேடைப்பேச்சொன்றே தக்க கருவியாம். கம்பர் பாரதிகழகங்கள், பொங்கல் தமிழ்த்திருநாள் இயக்கம் ஆகியவை மேடைப்பேச்சுக்களின் மூலம் இக்குறைபாட்டை ஓரோவழி போக்க முயன்றுவருதல் பாராட்டற்குரித்தாம்.

சோதிடக் கலை

நமது தமிழ்மக்கள் சோதிடக்கலையில் மிக்க நம்பிக்கை கொண்டவராவர். கோள்கள் நிற்கும் நிலையும் அவை சஞ்சரிக்கும் இயல்பும் நோக்கி, சூரிய சந்திரகிரகணங்களையும் அவைகளின் கதிபேதங்களையும் வழுவாது பண்டு தொட்டே பஞ்சாங்கங்களில் குறித்து வருகின்றனர். பிறநாட்டாரும் சோதிடக்கலை வானநூலின் ஒரு பகுதியென்பதை ஒப்பியுள்ளனர். இங்கிலாந்தில் பிரசித்திபெற்ற எழுத்தாளரும் நாவலருமான புல்வர் லிட்டன் என்பார் தமது பிற்காலத்தில் சோதிடக்கலை ஆராய்ச்சியில் ஆழ்ந்து தோய்ந்தார். அவர் மகாகனம் கிளாட்ஸ்டன் பிறந்த கோள்களின் நிலையை ஆராயப்புகுந்தார். அவர் கூறிய பலன்களில் பெரும்பாலானவை மிகப் பொருத்தமாயிருந்தன. கோள்கள் நின்ற கூட்டுறவால் கிளாட்ஸ்டனுக்கு இணையான நாவலர் உலகில் இல்லையென்றும், அப்படியிருந்தும் அவர் முற்றும் துறந்த ஒரு துறவியாயுள்ளார் என்றும் கூறியது மிக உண்மையென மக்களால் கருதப்பட்டது. எனினும் அச்சோதிடக் கலைஞர் எவ்வாறு அம்முடிவைக் கண்டாரென்பதை உலகுக்கு உணர்த்தினாரில்லை. பிறந்த நாளில் கோள்கள் நிற்கும் நிலை கண்டு, ஒருவர் கல்வித்தேர்ச்சி, பேச்சுச் சாமர்த்தியம், நகைச்சுவை ஆகியவற்றைக் கண்டறியலாமென்பது நமது நாட்டுச் சோதிட நூற்களின் துணிபு ஆகும். ஒரு சாதகரின் உதய இராசிக்கு இரண்டாமிடத்தில் நற்கோள்கள் இருப்பினும், அவற்றால் நோக்கப்படினும் அவர் கலையறிவு நிறைந்த மேடைப்பேச்சாளராவார் என்பது ஒருதலை. குரு, புதன் ஆகிய கோள்கள் வீற்றிருப்பினும், முக்கியமாகப் பதினாறு கலைகளைக்கொண்டு ஒளிரும் குளிர்ச்சி பொருந்திய சந்திரன் நிலைபெற்றிருப்பினும் அன்னோர் பேச்சுவன்மையிற் சிறந்து, நகைச்சுவை பரிமளிக்குமாறு பேசுவரெனச் சோதிட நூற்கள் கூறும். இவற்றின் நுட்பங்களை மேலும் விளக்கமாக ஆராய்ந்து உண்மையுணர்தலும் உலகுக்கு உணர்த்தலும் அக்கலை வல்லோரின் தலைசிறந்த கடனாம்.












1. ஏ. அரங்கசாமி அய்யங்கார், 2. டாக்டர். பி. வரதராசலு நாயுடு, 3. முகம்மது அலி ஜின்னு, 4. சி. ஆர். தாஸ், 5. சர் சி. பி. இராமசுவாமி அய்யர்.



17. சபையோர் மனப்பான்மை

சபைகளின் இயல்பு

இந்நூலின் வெவ்வேறு பகுதிகளில் சபைகளைக் குறித்தும் சபையோரைக் குறித்தும் பல நுணுக்கங்கள் கூறப்பட்டுள்ளன. சபை என்பது நண்பர்கள் ஈண்டும் கூட்டம் என்றும், சபையோர் பேச்சாளரை நன்கு பேச ஊக்குவிக்கும் அன்பர்களென்றும் குறிப்பாக உணர்த்தப் பெற்றுள்ளன. ஒரு அவையிலுள்ள கூட்டத்திற்கேற்ற அளவு பேச்சாளர் உற்சாகமும் பேச்சுப் போக்கும் அதிகரிக்குமென்பது வலியுறுத்தப் பட்டுள்ளது. பதினொன்கு மக்களைக்கொண்ட ஒரு சிறிய சபையிலும் சாதாரணப்பேச்சு முறையில் நன்குபேசுதல் வேண்டுமெனவும்,நானூறு அங்கத்தினர்களைக்கொண்ட பாராளுமன்ற மகாசபையிலும் ஒரு பேச்சைச் சுவைக்கவல்ல பதினொன்கு மக்களைக் காண்டல் அரிதெனவும் கூறப்பட்டன. ஒரு சபை, கருத்து வேற்றுமையுள்ள பல மக்களைக் கொண்டதாகையால் ஒரு பேச்சாளர் தமது பேச்சுப் பொருளில் ஊக்கமாகவும் உணர்ச்சியோடும் ஆழ்ந்து அம்மக்களைத் தமது கருத்தோடு இணங்கச் செய்தலே அப்பேச்சாளரின் குறிக்கோளாதல் வேண்டுமென்பது வலியுறுத்தப் பட்டுள்ளது. ஆயினும், சபையோரின் பல திறப்பட்ட மனப்பான்மையைக் குறித்துத் தனியே சிலவற்றை ஈங்குத் தெளிவுறுத்தல் முறையேயாம்.

மூன்றுவித மக்கள்

பொதுவாகச் , சபையோரை மூன்று பிரிவினைக்குள்ளாக்கலாம். அவர்களைப் 'பாமர மக்கள்' எனவும், 'படித்த மக்க'ளெனவும், 'குற்றங் காண்போர்' எனவும் பிரிக்கலாம். அவர்களின் பொது அறிவும் மனப்பான்மையும் வேறுபட்டவைகளாம். பாமர மக்களின் மனப்பான்மை பேச்சுப் பொருளில் நாட்டங் கொள்ளும். படித்தவர்கள், பேச்சாளரின் கருத்துக்களை தாங்கள் கொண்டுள்ள கருத்துக்களுடனும், நூலறிவுடனும் ஒப்பிட்டுப்பார்ப்பர். எந்நாட்டிலும் குற்றங் காண்போர் மனம் எப்பொழுதும் குற்றங் காண்பதிலேயே ஈடுபட்டிருக்கும். அவர்களை எப் பேச்சாளரும் திருத்துதற்கியலாது. அவர்கள் விசாலித்த மனப் பான்மையைத் தங்களுள் பெருக்கிக்கொண்டு தம்மைத் தாமே திருத்திக் கொள்ளலே நலமாம். வண்டிப் பாரங்கொண்ட சுவடிகளும் நல்லுரைகளும்கூட அத்தகைய மனப்பான்மை கொண்டவரைத் திருந்தச் செய்தல் அரிதினும் அரிதாம். அவர்கள் திருந்துதற்கு ஓரேவழி

தான் உண்டு. பிற பேச்சாளரைத் தம்மை யொத்த மனிதப் பிறவி யென ஊன்றி மனதில் கொண்டு, பிறர் மாட்டு நடந்து கொள்ளக் கொள்ள, குற்றங்காணும் கொடிய வழக்கம் நாளடைவில் அவர்களை விட்டகலும் என்பது உறுதியாம்.

அறிந்து பேசுக

பொது மேடைகளில் கூடும் மக்களின் மனப்பான்மையை ஒரு பேச்சாளர் நன்கு அறிந்து பேசுதல் இன்றியமையாததாம். சபையோர் எதிர்பார்க்கும் அளவிற்கும், அறிவுக்கும், நோக்கத்திற்கும், கொள்கைகட்கும் ஏற்றவாறு ஒரு பேச்சாளர் பேசுதலே முறையாம். ஒருவர் பேசும் பாகுபாட்டிலும், பேச்சின் சொற்போக்கு நயத்திலும், ஊக்கத்திலும் மிகக் கவனம் செலுத்தல் வேண்டப்படுவதாம். முழு மானிட சக்தியும், உலகப் பொது அறிவும் பிணைந்து நிற்பதே ஒரு நல்ல பேச்சின் இலக்கணமாம். ஒரு சபையின் பெருமை, பேச்சாளர் ஊக்கம் சபையோர் மனப்பான்மை இரண்டும் கூட்டுறவு கொள்வதாலேயே சித்திப்பதாகும். ஒரு நல்ல பேச்சாளர் தமது ஊக்கத்தைப் பெருக்கிக் கொண்டு சபையோர் மனப்பான்மையை ஒருவாறு முற்கூட்டி அறிந்து கொண்டு பேசுதலே நல்ல முறையாம். இல்லையேல், அவர் பேச்சு, சபையோருக்குச் 'செவிடன் காதில் ஊதிய சங்கு'என முடியும். ஒரு மருத்துவர் நோயாளிகளின்நாடியைப் பிடித்தறிந்து மருந்து கொடுத்தல்போல் ஒரு பேச்சாளர் சபையோர் மனம் எனும் நாடியை முகக் குறிப்பாலும் அநுபவத்தாலும் நன்கறிந்து அவற்றிற் கேற்றவாறு பேசுதல் சாலச்சிறந்ததாம்.

மனப்பான்மையின் கூறுகள்

சபையோரின் மனப்பான்மை பல கூறு கொண்டவை. அவை பேசும் இடம், காலம், இயல்பு ஆகியவற்றைப் பெரிதும் பொறுத்திருப்பனவாம். ஒரு பேச்சாளர் தாம் அடிக்கடிச் சந்திக்கும் கூட்டங்களிலும் இடங்களிலும் பேச நேரிடுவதுண்டு. ஆங்கு ஈண்டும் மக்கள் பழகியவர்களாகவும் இருப்பர். அத்தகைய கூட்டங்களில் 'மீன் நீரில் உலவி வாழ்தல்' போல் ஒரு பேச்சாளர் இயல்பாகவும், மெய் விதிர்ப்பின்றியும், கோழைத்தனம் காட்டாமலும் சுபாவிகமாகப் பேசுதற்கியலும். அவ்வாறு வெளிவரும் பேச்சைச் சபையோர் குற்றங் காணாது நட்புப் பாராட்டியே அகமகிழ்ந்து ஏற்றுக் கொள்வர். ஒரு மேடைப் பேச்சு வீட்டுப் பேச்சுப் போல் மேற்பூச்சு அல்லது முலாம் இட்டு ஒளிராது உண்மையாகவும், ஊக்கம் கமழவும் உணர்ச்சியோடு

வெளிவருமேல், அதனைச் செவிமடுக்கும் சபையோர் அப்பேச்சை நன்கு சுவைப்ப ரென்பது உறுதி. சிறிய வார்த்தைகள், எளிய நடை, சிக்கலற்ற வாக்கியத் தொடர்கள், கருத்துப் பொலிவு ஆகியவை அப் பேச்சுக்குப் பெரிதும் துணைநிற்பனவாம்.

வெறுப்பும் விருப்பும்

சில பேச்சாளர் மனவேற்றுமை, கருத்து வேற்றுமை கொண்ட விரோதப் பான்மையுடைய கூட்டங்களில் பேச நேரிடுவதுண்டு. சபை யோர்க்கு ஒரு பேச்சாளரைப் பிடிக்காதிருத்தற்குப் பல காரணங்கள் உண்டு. அப்பேச்சாளர் பொது மக்களால் வெறுக்கப்படும் குழுவின ரில் ஒருவராக இருக்கலாம். அல்லது அவர் பொதுமக்களின் நம்பிக் கைக்கும், வழக்கப்பாட்டுக்கும் முரண்பட்ட கருத்துடையவராக லாம்; பிசகான நடைமுறைப் பழக்கங்களைக் கைக்கொண்டவராகவும் இருக்கலாம். பன்னிரண்டு பட்டைநாமங்களான வைணவக் குறி களைத் தரித்துக் கொண்டு சங்குச் சக்கரக் காதணிகளைப் பூண்ட வைண வர் நிரம்பியுள்ள ஒரு கூட்டத்தில், அக்கமணி வடங்களும் திருநீறு பூத்தமேனியும் கொண்ட ஒரு பேச்சாளர் எத்தகைய வரவேற்பைப் பெறுவார்? அவர் பேச்சு அக்கூட்டத்தில் ஏற்கப்படா தென்பதும் வெறுக்கப்படுமென்பதும் ஒருதலை. அத்துவிதப் பற்று டைய கூட்டங்களில் துவிதக் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்படா. இனி, சுவாமி விவேகாநந்தரை எடுத்துக் கொள்வோம். அமெரிக்காவில் பல்லாண்டுகட்கு முன் நடைபெற்ற சர்வமத உலக மா நாட்டில் இந்து மத உயர்வைக்குறித்துப் பல நாட்கள் பேசினர். முதலில் அவரை யும், அவர் பேச்சையும் மக்கள் பரிகசித்து அலட்சியம் காட்டினர். பின் னர் அவர் ஊக்கத்திலாழ்ந்து பேசப் பேச அவர் பேச்சு இன்னமுதா யிற்று; கற்கண்டென உருசியுடையதாயிற்று. அவர் உருவைப் போற்றுவதா, அன்றி அவர் பேச்சின் உயர்வைப் போற்றுவதா வெனத் தோன்றாது மக்கள் திகைப்புற்றனர். அவர் விளக்கிய இந்து மதக் கொள்கைகள் சிரமீது தாங்கப் பெற்றன; பொன்னே போல் போற்றப்பட்டன. அம்மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது? அவர் தம் கோள் நாட்ட விரைந்து விரைந்து பேசவில்லை. சபையினரின் மனப் பான்மையையும் அறிவு விளக்கத்தையும் அவர் உணர்ந்து உணர்ந்தே பேசினர். தாம் விளக்க விரும்பிய கருத்துக்களை - கோட்பாடுகளைப் படிப்படியே சபையோர் மனதில் ஊன்றிப் பதியுமாறு வலியுறுத்தினர். அவரது ஆங்கில மொழித் தேர்ச்சியும் அழகு திரண்ட தோற்றமும்

சபையோரை வசப்படுத்தின வென்பது மிகையல்ல. முதலில் விரோதப் பான்மை கொண்ட அச்சபையோரின் மனப்பான்மை, பின்பு சுவாமி விவேகாநந்தருக்கு அடிமைப் பட்டு விட்டதில் ஆச்சரியமில்லை. அவர் அச்சபையோருக்கு அறிவுச் சுடர் பரப்பும் கதிரவனுன் ஆனர். சபை யோர் மனமெனும் ஒரு சிறு குடை அவரது பேரறிவுச் சுடரைத் தடுத்தற்கியலாது போயிற்று. எனவே, ஒரு நல்ல பேச்சாளர் விரோத மான மனப்பான்மை கொண்ட சபையிலும் தாம் நடந்துகொள்ளும் விதத்தால் நல்ல வரவேற்பும் நன்மதிப்பும் பெறலாமென்பது வெள் ளிடை மலையாம்.

பெரியோர் பேச்சு முறை

ஒரு பேச்சாளரை மெச்சிப் புகழும் மனப்பான்மை கொண்ட ஒரு சாரார், அப்பேச்சாளர் பேசு மிடங்கட்கெல்லாம் தவருது செல்லு தல் வழக்கு. பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் பேச்சுக்கும், சி. என். அண்ணுதுரையார் பேச்சுக்கும் மக்கள் அழைக்கப் படாமலே திரள் திரளாக ஈண்டுதல் எற்றுக்கு ? அஃது அவர்கள் பேச்சுப் பொருளைச் சுவைத்தற்கு மட்டுமல்ல; ஆரவாரித்துக் கைதட்டித்தட்டி மேலும் மேலும் ஊக்கம் காட்டி அவர்கள் கருத்துகட்கு ஆதரவு பெற்றுத் தருவதற்கேயாம். அவர்களிருவரும் மற்றப் பேச்சாளர்களைப்போல் சபையில் ஈண்டியுள்ளோரை நண்பர்களெனவும், எதிரிகளெனவும் இரு கூறுக்குவதில்லை. சபையோர் அனைவரும் தமது நண்பர்களெனவும் ஒத்த கருத்துடையவரென்வும் பாவித்தே பேசுவர். அவ்வாறு பேசு வதால் விரோதப்பான்மையோடு வந்த மக்களும், "தேனில் வீழ்ந்த ஈ" என அவர்கள் பேச்சில் வயப்பட்டு விடுவர். பொது மேடைகளில் பண்படாத பேச்சாளர், " இச்சபையில் என் கருத்துக் கிணங்காத பலரைக் காண்கிறேன். அவர்கள் என் கருத்தோடு இணங்காவிடினும் கலவரம் ஏற்படாதவாறு நடந்து கொள்வார்களென நம்புகிறேன் " எனத் தமது பேச்சைத் துவக்குவதுண்டு. சில காட்டாளிகளான பேச் சாளர், " அத்தகைய விரோத மனப்பான்மையுடையோருக்கு ஈங்கு வேலையில்லை; வேண்டுமானல் வெளியேறுதல் நலம் " என்று கூறுவதை நாம் பல இடங்களில் கண்டு கேட்டுள்ளோம். ஒரு சபையைத் தம் வயப்படுத்தலாமெனும் மனப்பான்மையும் உறுதியும் திடச்சித்தமும், தன்னம்பிக்கையும் இல்லாத அத்தகைய பேச்சாளர் சபையோரை வெளிச் செல்லுமாறு கூறுவதிலும் தாமே பேசாது வெளியேறுதல் உத்தமமாம்.

விளக்கமும் தொடர்ச்சியும்

பேச்சுப் போக்கில் சபையோரை எப்பேச்சாளரும் சந்தேகத்தில் ஆழ்த்தல் முறையல்ல. ஒருவர் பேச்சில் விளக்கம் வேண்டும்; தொடர்ச்சியும் வேண்டும். முன்னால் பேசிய இரண்டொரு வார்த்தைகளின் தொடர்ச்சியாகப் பின்னால் வருவனவற்றைச் சபையோர் தாமே அறிந்து கொள்ளும் வண்ணம் பேசுதலே சபையோர் மனப்பான்மையொடு ஒருபேச்சாளர் இரண்டறக் கலத்தற்குச் சிறந்த மார்க்கமாம். இதற்கு ஒரு சிறு உதாரணம் சாலும். அரிச்சுவடி படிக்கும் ஒரு குழந்தை, "அ" என்று தனது பாடத்தைப் படிக்கப் புகுந்தால், "ஆ" "இ" என்பன தொடர்ந்து வருதல் எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக ஒரு பேச்சாளரின் வார்த்தைகள் அடுத்து அடுத்து இருத்தல் வேண்டுமென்பது இதன் கருத்தாம். அவ்விதப் பேச்சில் சபையோரின் மனப்பான்மை மேலும் மேலும் வருவனவற்றை எதிர்பார்த்து ஈடுபடுதல் உறுதியாம். சில வேளை அடுத்துவரும் வார்த்தைகளை உணர்ந்துகொள்ளமாட்டாது சபையோர் அவதிப்படுதலுமுண்டு. அதற்கோர் விளக்கம் ஈண்டைக்கு மிகையல்ல. சாதாரணமாக ஏற்ற மிறைப்போர் பாடிக்கொண்டு நீரிறைத்தல் வழக்கு. ஏற்றம் நிற்கவே, பாட்டு முடிவுபெற்றாலும் பெறுவிட்டாலும் அங்ஙனே நின்றுவிடும். ஓர் ஏற்றக்காரன் "மூங்கில் இலைமேலே" என்றுகூறிப் பாட்டை முடிக்காமலே நிறுத்தினன். அதைக் கேட்டுக்கொண்டிருந்த கம்பர் பெருமான் அப்பாட்டின் தொடர்பைக் காண முயன்றார்; ஓரிரவு முழுதும் முயன்றார். முடியாது போகவே மறுநாட் காலை ஏற்றமிறைக்க ஆரம்பிக்குமுன் அவ்விடத்தில் வந்து காத்திருந்தார். ஏற்ற மிறைப்போர் முன்னாள் விட்டஇடத்திலிருந்து தொடர்ச்சியாகத் தமது பாட்டை ஆரம்பித்தல் வழக்காதலால், ஏற்றக்காரன் "தூங்கும் பனி நீரே" என்றான். அவ்வளவுதான்! அது சந்தேகத்தில் ஆழ்ந்திருந்த கம்பரைத் தூக்கி வாரிப் போட்டதென்பது சரித்திரமாம். எனவே இவ்வாறு கம்பரைத் திகைப்பில் ஆழ்த்தியதுபோல் ஒரு பேச்சாளர் பேச முயல்தல் புல்லறிவாண்மையாம்.

தேர்வுப் பேச்சுக்கள்

இந்நாள் நடைபெறும் தேர்வுப் பேச்சுக்கள் விறுவிறுப்புடையனவாக இருத்தல்வேண்டும். பலவித மனப்பான்மையும், மனோவலியும், அறிவு விளக்கமும் கொண்டுள்ள மக்கள் ஈண்டும் கூட்டங்களே தேர்வுக்

கூட்டங்களாகும். இந்நாள் சாதாரணமாக நடைபெறும் தேர்வுக் கூட்டங்களில் தேர்வுக்கு நிற்கும் ஒருவர் மற்றவர்களை இயன்றவரை இழிவுபடுத்திப் பேசுதல் வழக்கு. அவ்வாறு பேசுவதால் வாக்காளரின் மனப்பான்மையைத் தம்வயப்படுத்துவதை விடுத்து அதற்கு மாறாக அவர்களுடைய அநுதாபத்தையும் ஆதரவையும் இழக்க நேரிடும். தேர்வுக்கூட்டங்களில் பேசுவோர் தமக்குப் பிடித்த ஒருவரை வானளாவப் புகழ்தல் குற்றமன்று. தேர்வுக்குப் போட்டியிடும் மற்றவர் களைக் குறைத்துப் பேசுதல் கட்டாய விதியல்ல. அவ்வாறு புண் படாது பேசுபவர்பால் வாக்காளர் மனம் திரும்புதல் உறுதியாம். இந்நாள் தேர்வுக்கூட்டங்களில் மிகத்தகாத முறைகள் கையாளப்படு கின்றன. சுவரில் ஒட்டிய விளம்பரங்கள் அழிக்கப்படும்; கல்வீச்சுகள் நிகழும் ; தார்மழை பொழியும். தேர்வுக்கூட்டம் நடைபெறுதவாறு பல இடையூறுகள் போட்டியிடுவோரால் நிகழ்த்தப்பெறும். பல ஒலிபெருக்கிகள் ஊளையிடும். சில இடங்களில் பறை, கொம்பு, தாரை முதலியவைகள் முழக்கப்பெறும். சிலவேளை மேளதாளம், பஜனைக் கூட்டங்களோடு சுவாமிபுறப்பாடும் நிகழும். கட்டைவண்டிகளைக் குறுக் கும் நெடுக்குமாக விரைந்தோடச் செய்வதுண்டு. இன்னனைய பல இடை யூறுகளை, எல்லாத் தேர்வுக்கூட்டங்களிலும் காணலாம். இவ்வாறு இடையூறுகட்கு ஆளாக்கப்பட்டவரே முடிவில் வெற்றிபெறுவதை யாண்டும் காண்போம். இதற்கு, வாக்காளரின் மனப்பான்மை உடனடியாக மாறித் துன்புறுத்தப்பட்டவர்பால் வலிந்து செல்வதே காரணமாம். மேலைநாட்டினின்றும் இறக்குமதியான இத்தகைய தீய - தகாத முறைகளை நம் நாட்டார் கைக்கொள்ளல் வேண்டுமென்பது கட்டாயமல்ல. கீழைநாட்டாரின் உடன்பிறப்பான மரியாதைக் கிரமங் கள் தேர்வுப்பேச்சுக்களிலும் கூட்டங்களிலும் காட்டப்பெறுதல் மிக இன்றியமையாததாம்.

சட்டசபைப் பேச்சு

அரசியல் சட்டசபைகளில் இந்நாள் மரியாதையற்ற, தாறுமாறான பேச்சுக்கள் மலிந்து நிகழக் காண்போம். அச்சபைகளில் கௌரவ முறையில் வெளிவரும் பேச்சுக்கள் மிக அருகியுள்ளன. அகம்பாவமான பேச்சுக்களும் ஆணவ வாய்வீச்சுக்களும் மிகப் பெருகியுள்ளன. நளின மான பேச்சுக்களும், நாகரிகமான வாதங்களும் நாளுக்குநாள் மறைந்து வருகின்றன. கட்சி பலத்தால் எழும் தடித்த பேச்சுக்கள் அதிகார வர்க்கத்தினரிடையும், அங்கத்தினர்களிடையும் சாதாரணமாகக் காணப்

படுவனவாம். தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவு கொண்டும் பேசவேண்டிய அச்சபைகளில் அகம்பாவ மொழிகட்கும் ஆணவப்பேச்சுகட்கும் இடமேது? அரசாங்கப் பொறுப்பு வகிக்கும் அவைத்தலைவரும் அமைச்சர்களும் அங்கத்தினர்கட்கு நல்வழி போதிக்கக் கடமைப்பட்டவ ராவர். ஆயினும், அவ்வாறு தமது கடமையை உணர்வோர் மிகச் சிலரே. பெரும்பாலோர் அம்முறையைக் கைவிட்டவராவர். உதாரண மாக நமது சட்டசபைகளில் ஓர் அங்கத்தினர் கேட்கும் கேள்வி கட்கு அளிக்கப்படும் விடைகளின் வழக்கப்பாட்டை நோக்குவோம். ஓர் அங்கத்தினர் கேட்ட கேள்வியைச் சேதித்து ஒற்றை வார்த்தை யில் விடையிறுப்பதில் அமைச்சர்கள் மிகக் களிப்படைகின்றனர். " அங்கத்தினர் கேள்வியின் முதல் பாகத்திற்குப் பதில், ' இல்லை '; இரண்டாவது பாகத்திற்குப் பதில், ' ஆம் '; மூன்றாவது பாகத்திற்குப் பதில், ' தெரியாது '; நான்காவது பாகம், 'பொதுநலத்தை நாடியதல்ல'; ஐந்தாவது பாகம், 'பதிலளிக்க மறுக்கப்படுகின்றது'; ஆறாவது, 'அங்கத் தினர் சொல்வதை அரசியலார் கவனிக்கத் தயாராக இல்லை' ; ஏழாவது 'அது குறித்துச் சர்க்காருக்குத் தகவல் இல்லை '; எட்டாவது, 'அங்கத் தினர் கேள்வியால் எவ்வித உபயோகமும் இல்லை '; ஒன்பதாவது, ' சமயம் நேர்ந்தால் கவனிக்கப்படும்'; பத்தாவது, 'அரசியல் இரகசியம்' என இச்சபைகளில் விடையிறுக்கப்படுகின்றன. பாராளுமன்றச் சபை யிலும், இதர நாகரிக நாட்டுமக்கள் சபைகளிலும் இத்தகைய ஆணவ மான பதில்களைக் காண்டல் அருமையாம். இவ்வாறு பதில் அளிக்கப் படும் சபைகளில் அங்கத்தினராய் ஒருவர் இருப்பதிலும் இல்லாதிருத் தலே மேலாம். சட்டம், விதிக்கிரமம், ஒழுங்குப்பாடு, மரியாதை முதலியனவற்றை நடைமுறையில் போதிக்கக் கடமைபூண்ட இச்சபை கள், இனிமையும் மரியாதையும் மிகுந்த தமிழ்மொழி அரசாங்க மொழியாகுங்கால் மிகச் சீர்படுமென்பது ஒருதலை. மற்றுமோர் விளக்கம் மிகையன்று. சென்னை மாகாணப் பிரதமராக கனம் பனகால் அரசர் வீற்றிருந்த காலத்தும் கனம் சர். பி. இராஜகோபாலாச் சாரியார் சட்டச்சபைத் தலைவரா யிருந்தபோழ்தும் நிகழ்ந்த சட்ட சபைப் பேச்சுக்கள் மிக உயர்வானவையாம். முன்னவர், கௌரவம் சுயமதிப்பு வாய்ந்த ஒரு அரசியல் தந்திரியாவார். பின்னவர், சபையை ஒழுங்குமுறையில் நடத்தவல்ல நகைச்சுவை மலிந்த அவைத்தலைவ ராவார். அக்காலத்திய சட்டசபைப் பேச்சுக்களும் விவாதங்களும் மிக உயர்ந்த எடுத்துக்காட்டுக்களாக மக்களால் இன்றும் கருதப்படுவனவாம்,

ஓர் உண்மைநிகழ்ச்சி

மேலே கூறியுள்ளவாற்றால் நமது சட்டசபைகள் நல்ல ஒழுங்கு முறையில் நடைபெறவேண்டுமென்பது நன்கு பெறப்படும். இல்லையேல் சுதந்தர இந்தியாவின் அரசியல் நடைமுறைகள் ஏளனத்திற்குள்ளாகு மென்பது ஒருதலை. ஈங்கு ஓர் உண்மை நிகழ்ச்சியைக் கூறுதும். 1917ம் ஆண்டு, தஞ்சையில் ஒரு சமூக மாநாடு கூடிற்று. மாகாணத்தின் பல பாகங்களினின்று பிரதிநிதிகள் வந்து குழுமியிருந்தனர். அம்மாநாட்டின் செயலாளர் வழக்கம்போல் அறிக்கை வாசித்தார். எதிர்கட்சித்தலைவர் அதிலுள்ள இரண்டொரு சந்தேகங்களை விளக்கக் கேட்டார். அச்செய லாளர் மரியாதையாக விடையிறுப்பதை விடுத்து, ' அவ்வாறு செய்ய முடியாது, அப்படிச் செய்வதும் அவசியமல்ல ' என்றார். அந்த அகம் பாவமான பதில் அச்சபையில் வீற்றிருந்த எதிரிகள், நண்பர்கள் எல்லோர் மனத்தையும் புண்படுத்தியது. அவர்கள் எல்லோரும் ஒருங்கு திரண்டு அச்சபையில் தங்கட்கு இனி வேலையில்லையெனச் சொல்லி வெளிக்கிளம்பிவிட்டனர். சபை வெற்றிடமாயிற்று. பிற்பகல் மாநாடு கூடுமுன் செயலாளர், தலைவர் ஆகியோர் ஒவ்வொருவரிடமும் சென்று மன்னிப்புக்கோரிப் பிரதிநிதிகளை அவைக்குக் கொணர்ந்து மாநாட்டைத் தொடர்ந்து நடத்தினர். இதன் படிப்பினை மேலும் விளக்கமின்றி எளிதில் உணரத்தக்கதாம். ஆங்கில அரசாட்சியின்கீழ் நடைபெற்ற சட்ட சபைகளில் அங்கத்தினர்கள் வாய்ப்பூட்டு இடப்பட்டு, ஆணவப் பேச்சுகட்கும் அகம்பாவமான பதில்கட்கும் வேறு விதியின்றி உட்படுத் தப்பட்டிருந்தனர். இச்சுதந்தர இந்தியாவில், சுதந்தர இந்திய மக்கள் அங்கத்தினர்களாகக் குழுமியுள்ள சட்டசபைகளில் பழைய முறைகள் கையாளப் பெறுமேல் அச்சபைகள் ஒருகாலத்தில் வெற்றிடமாதல் உறுதியாம். எனவே, அரசியல் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும் தலைவர்களும் விடையிறுப்பதிலும், அங்கத்தினர்கள்மாட்டுப் பேசுவ திலும் மிக்க கவனம் செலுத்தக் கடமைப்பட்டவராவர்.

பெண்கள் கூட்டம்

இனி, பெண்மக்கள் ஈண்டியுள்ள சபைகளின் மனப்பான்மையை நோக்குவோம். பெண்மக்கள் தராசு முனைபோன்ற மனப்பான்மை யுடையவராவர். அவர்கள் கூட்டங்களில் பேசப்புகும் ஆடவர் அள வறிந்து, அவர்கள் மனமறிந்து பேசுதல்வேண்டும். ஓர் ஆடவரின் பேச்சு மிகினும் குறையினும் அவர்கள் மனதைப் பெரிதும் அலைக்க வல்லதாம். பெண்மக்கள் கூட்டத்தில் பேசும் ஒரு பேச்சாளர் 'கற்பு',

'காதலித்தல்', 'காமுறுதல்', 'தற்காத்தல்', 'அச்சம்', 'மடம்' நாணம்', 'பயிர்ப்பு', 'பேதமை', 'கைம்மை' ஆகிய இன்னனைய வார்த்தைகளை இயன்றவரைத் தவிர்த்தல்வேண்டும். அப்பேச்சாளர் இக்கூட்டங்களில் பொதுப்படச் சபையிலுள்ளவர்களை நோக்கிப் பேசுதல் முறையாகும். குறிப்பாக இரண்டொருவரை மட்டும் நோக்கிப் பேசுதல் முறையல்ல. சிரித்தலும் பல்லை இளித்தலும் மிகத் தகாதவையாம். இந்நாளைய நாகரிகத்திற்கு வேறுபட்ட ஆன்றோர் கூற்றுக்களை இச்சபைகளில் ஒருவர் கூறாதிருத்தல் நலமாம். திருவள்ளுவர் வாக்கில் தோன்றிய "அடிவருடிப் பின்தூங்கி முன்னெழும் பேதாய்" என்ற உயரிய கருத்துக்கள் ஆங்கில நாகரிகத்தில் தோய்ந்த நமது பெண்மணிகட்கு இந்நாள் அருவருப்பைத் தருவனவாம். "பெண் மக்கள் ஆண்மக்கள் துணையின்றித் தனிவழிச் செல்லலாகாது" என ஒரு பேச்சாளர் கூறப்புகுவரேல் அஃது இதுபோழ்து எள்ளுதற்குரியதாகும். இன்றைய பெண்ணுலகம் முழுமாறுத லடைந்துள்ளதென்பது கண்கூடு. அவர்கள் தம்மைத் தாமே காத்துக்கொள்ளும் வன்மையும், முழுதும் யோசித்துணரும் திண்மையும் பெற்றுள்ளனர் என்பது மிகையல்ல.

சிறந்த பெண்கள்

பெண்மக்களின் மனோநிடத்தைக் குறிக்கும் ஓர் உண்மை நிகழ்ச்சியை ஈண்டுத் தருவோம். 1938-ம் ஆண்டு பெரியகுளம் நகரில் ஒரு மாபெரும் பெண்கள் கூட்டத்தில் இந்நூலாசிரியர் நல்வரவேற்புப் பெற்றார். அந்நிகழ்ச்சி முற்கூட்டிப் பல வாரங்களுக்குமுன் விளம்பரம் செய்யப்பட்டதாகும். அக்கூட்டத்தில் ஈண்டிய பெண்மக்களில் பெரும்பாலோர் முதியராயினும் கல்லாதவராயினும் மிக நாகரிகக் காட்சியளித்தனர். முன்னணியில் வீற்றிருந்தவர்களின் தோற்றம் நவநாகரிகம் கொண்டு விளங்கியது. "நான் எங்கு உள்ளேன் ? எவர் முன்னிலையில் பேசுகின்றேன் ? இஃது எவ்வுலகம் ?" என்று இந்நூலாசிரியர் தமது பேச்சை நளினமாக ஆரம்பித்தார். அது சபையிலுள்ள பெண் மக்களைப் பரவசப்படுத்திற்று. காரணம் என்ன ? அப்பெண்மக்கள் தங்கள் சமூகத்தலைவரின் வரவை எதிர்நோக்கி அந்நாட்டு வழக்கையும் பழைய மனப்பான்மையையும் கைவிட்டு அவ்வூரில் உள்ள ஓர் ஆங்கில மருத்துவரிடம் காட்டித் தங்களுடைய வளர்ந்து தொங்கிய காதுகளை வெட்டிக் குறைத்து அவைகளுக்கேற்ற அழகிய சிறிய காதணிகளை அணிந்தும் நல்லுடை யுடுத்தியும் அக்கூட்டத்திற்கு வந்திருந்ததே

யாம்! அவ்வாறு ஒருநூறு பெண்கள் சிகிச்சைபெற்றனரென அம் மருத்துவர், மறுநாள் அத்தலைவரிடம் ஆச்சரிய மிகுதியால் கூறினர். எனவே, பெண்மக்களின் மனப்பான்மை இற்றென உணர்தற்கு இதனி னும் வேறு சான்று வேண்டுங்கொல் ?

உலகோர் மனப்பான்மை

உலக வாழ்க்கையில் ஓர் அவையிலுள்ள மக்களின் மனப் பான்மையை மட்டும் ஒருவர் அறிந்து கொள்ள முயலுதல் போதியதல்ல. உலக மக்கள் ஒவ்வொருவருடைய வேறுபட்ட மனப்பான்மைகளையும் அறிந்து கொள்ள முயலுதல் அறிவுடைமை யாகும். உலகில் அத்தகைய அறிஞர் உன்னத பதவியையும் அழியாப் புகழையும் பெறுவரென்பது உறுதி. அமெரிக்க நாட்டின் ஐக்கியபதியான ஆபிரகாம் லின்கனை இவ்வழி நோக்குவோம். அவர் எம்மக்கள் மனத்தையும் சேதித்தும், சோதித்தும் அறியவல்லவர். பிறர் மனப்பான்மையின் தன்மையை நன்குணர்ந்து கல்லான மனத்தையும் கரைக்க வல்லவராம். அம்மனத்தின்கண் உறையும் அணுப்பிரமாண மான நல்ல குணத்தைத் தட்டி எழுப்பி வெளிக்கொணர வல்லவர் அவராவார். அவர் நோக்காலும் வாக்காலும், தீய மனமும் நாவும் படைத்தோர் நன்மக்களாக வெகு சடுதியில் மாற்றம் அடைவராம். அவர், ஐக்கியபதியாகுமுன் ஒரு நியாயவாதியாக இருந்தார். ஒரு பொய் வழக்கில் இரு வாலிபர்கள் ஒரு முதியாரைக் கடன் கொடாமல் ஏமாற்ற முனைந்தனர். அன்னோர் வழக்கறிஞர், அவர்கள் வயது வராத வாலிபர்களென வாதாடினர். ஆபிரகாம் லின்கன் அது சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்கதே என்றார். நீதிபதியையும் நடுவர்களையும் விளிக்குமுன் அச்சிறுவர்களின் முகத்தை ஒருமுறை இரக்கத்தோடு உற்றுநோக்கித் தமது பேச்சை ஆரம்பித்தார். "கண்ணியமிக்க நடுவர் களே! ஏதுமறியா இச்சிறுவர்களைத் தங்கள் நீண்ட வாழ்நாள் மார்க்கத்தில் 'அயோக்கியர்கள்' என்ற கறைப்பட்ட முத்திரையுடன் வழிநடக்கச் செய்யப் போகின்றீர்களா? அல்லது அவர்கள் பிற் கால வாழ்வில் பிறர் முகத்தை நாணாது பார்க்கவல்ல யோக்கியர் களாகச் செய்யப்போகிறீர்களா ?" என்று தமது வழக்கை ஆரம் பித்து முடிவில் வென்றார். அவ்விரு சிறுவர்களும் தமது பிந்திய வாழ்நாளை யோக்கியமாக நடாத்தி ஆபிரகாம் லின்கனைப் போற்றி வாழ்ந்தனரென்பது சரித்திரம். இத்தகைய மனோவலிபெற்ற லின்கன் ஐக்கியபதி யானதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை.

இறுதியாக ஒன்றே கூறி முடிப்போம். ஒருவருடைய பேச்சு, பெருந்தகைமையோடும் உயரிய மனப்பான்மையோடும் உள்ளத்தினின்று உண்மையாகவும் பிறர் ஒப்புமுறையிலும் வெளிவருமேல், அப்பேச்சு, சபையில் ஈண்டியுள்ள மக்கள் மனப்பான்மையையும் அவ்வண்ணமே மாற்றம்பெறச் செய்யுமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

---

18. பேச்சாளரும் ஒலிபெருக்கியும்

ஒலிபெருக்கியின் உதவி

பேச்சு மேடைகளில் இந்நாள் ஒலிபெருக்கிகளும், ஒலிபரப்பிகளும் நாட்டப்பெறுவதால் ஒருவர் இயற்கைக் குரலில் பேசுதலே சாலுமென்பது முந்தியதோர் பகுதியில் கூறப்பட்டுள்ளது. மேடைப் பேச்சாளர் பலதிறப்பட்டவரெனவும், அவர்கள் குரலோசை பல்வேறு சுருதிகொண்டவையெனவும், அவற்றைப் பெருக்கிக்கொள்ளற்கு ஒரு பேச்சாளர் மேற்கொள்ள வேண்டிய செயற்கைப் பழக்கங்கள் இவை என்பனவும் கூறப்பட்டுள்ளன. இந்நாள் திறந்தவெளிகளிலும், கடற்கரையிலும், மைதானங்களிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஈண்டும் பெருங்கூட்டங்கள் நடைபெறுதல் மிகச் சாதாரண நிகழ்ச்சிகளாம். இயற்கைக் குரலோசையை மிகுதியும் பெற்றிருந்தாலன்றி இத்தகைய மாபெருங் கூட்டங்களில் ஒருவர் நன்கு பேசுதற்கியலாது. இக்கூட்டங்களில் சாதாரணக் குரலோசைகொண்ட ஒருவர் பேசுவரேல், தமது உச்சக்குரலில் பேச்சை ஆரம்பிக்கும் அவசியம் ஏற்படும். எனவே அப்பேச்சு வரவரக் குறைந்து முடிவில் பேசுவதின்னதென விளங்காது. தொண்டைக் கட்டுண்டாவதால் பேச்சும் தடைப்பட்டுச் சபையில் குழப்பமும் அமைதியின்மையும் பரவுவதைப் பல இடங்களில் காண்போம். ஆகலின் ஒரு பேச்சாளரின் இயற்கை ஒலியைப் பன்முறை பெருக்கி மிகத் தூரத்தில் அமர்ந்துள்ளவர்களும், விலகி உட்கார்ந்துள்ள பெண்மக்களும் கேட்டு மகிழுமாறு இந்நாள் அப்பெருங் கூட்டங்களில் மின்சார ஒலிபெருக்கிகளும் ஒலிபரப்பிகளும் நாட்டப்படுவனவாம்.

உச்சக்குரல் நாவலர்கள்

இங்கிலாந்து தேசத்து அரசரான கென்யூட் என்பார் கடலருகே தமது அரியாசனத்திலமர்ந்து, " ஒலிக்கின்ற திரைகடலே, நீ ஒலியா

திருப்பாயாக! திரைகளே நீவிர் ஓய்வீராக! இஃது உமது அரசரின் ஆணை" என்றார். ஆயினும் அக்கடல் அவ்வரசர் ஆணைக்குக் கீழ்ப் படியவில்லையென்பது சரித்திரம். அத்தகைய ஆணவம்கொண்ட கடல் ஒரு பேச்சாளரின் குரலுக்குத் தலைவணங்கியதை நம்மில் பலர் கண்டிருப்பர். வங்காளத்து மாபெரும் நாவலரான பாபு விபின சந்திர பாலர் சென்னைக்கு 1907-ம் ஆண்டு போந்தகாலை வங்காளப் பிரி வினைக் கொடுமைகளைக் குறித்தும், வைஸ்ராய் கர்ஸன் பிரபுவும், லார்டு மார்லியும் அது குறித்து மக்களின் மனப்பான்மையை அறிந்து கொள்ளாமலே பிடிவாதம் சாதித்து வந்தது பற்றியும் பல கண்டனக் கூட்டங்களைக் கடற்கரையில் கூட்டிப் பேசினர். அக்கால் திரைகடல் அவர் குரலோசைக்கு அஞ்சி ஒடுங்கிற்று. அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றையும் தொலைவிலிருந்த மக்களும் கேட்டின்புற்றனர். அந் நாள் ஒலிபெருக்கிக் கருவிகளே இல்லை. பாபு சர். சுரேந்திரநாத் பனர்ஜியார், தமது கழுத்து நரம்புகளும் தொண்டையும் வீங்கிப்புடைத் தெழ உச்சக்குரலில் ஆரம்பந்தொட்டு இறுதிவரை பேசிய நாவலர் பெருமானவார். தென்னாட்டிலும் இவ்வரிய பேச்சுச் செல்வத்தைப் பெற்ற சில பேச்சாளர் இன்றுண்டு. தமது இளமையில் ஒலிபெருக்கி யில்லாத காலத்து உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் சுமார் இருபதினாயிரம் மக்கள் ஈண்டிய பெருங்கூட்டங்களில் இரைந்தும் விரைந்தும் பேசியதுண்டாம். கூட்டங்களில் அமர்ந்து பேசும் இந்நாள், ஒலிபெருக்கியின் அவசியம் தோன்றுவதாக அவர் கூறினர். போடிநாய்க்க னூர் நகராண்மைக்கழக அங்கத்தினரான சுவாமி நித்தியானந்த அடி களும், பொதுவுடைமைக் கட்சித் தலைவரான உயர்திரு. ஜீவானந்தம் அவர்களும், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர் களும் உச்சக்குரலில் பேசுவதில் தலைசிறந்தவராவர். அவர்களில் முன்னிருவரும் 'மைக்' எனும் ஒலிபெருக்கியின் முன்னின்று பேசுவ ரேல், அக்கருவி பழுதுபட்டு இயங்காதென்பது உறுதி. கேட்போர் செவிகளும் துளைக்கப்பெறும். எனவே, இத்தகைய குரல் செல்வம் பெற்றவர்கட்கும் திடம்பெற்ற உடல்வலி கொண்டவர்கட்கும் ஒலி பெருக்கியின் உதவி தேவையற்றதாகும். ஆயினும், அது வயோதிகர்க் கும் உடல் நலிவுற்றவர்க்கும் பெரிதும் உதவுவதாம்.

பேசும் விதம்

ஒலிபெருக்கியின்முன் பேசும் ஒரு பேச்சாளர் அக்கருவிக்குமுன் சுமார் ஒருமுழ தூரத்திற்கு அதிகப்படாது நின்று, கைகால் உடல்

அசைவின்றி, 'டையாபரம்' எனும் பேசும் வட்டக் கருவியைத் தமது வாயளவு உயரம் உயர்த்தியும் தாழ்த்தியும் தக்கநிலையில் வைத்துப் பேசுதல் முறையாம். அதுபோழ்து அப்பேச்சாளரின் தோற்றமும் உருவமும் சிறிது சிதைந்து அக்கருவியின் நீண்ட குழற்றண்டால் வெட்டுண்டவர்போல் தோற்றமளிப்பார். ஒரு நாவன்மை கொண்ட நாவலர் தமது பேச்சுத்தோரணை, கை மெய் காட்டல், சொற்சுவை முதலிய இன்றியமையாத பல பேச்சிலக்கணங்களை ஒலிபெருக்கி யின்முன் காட்டிப் பேசுவதற்கில்லை. பல படித்தரமான குரலோசை களையும் தமது பேச்சினிடையே காட்டிப் பேசுதற்கியலாது. ஒரு பள்ளி மாணவன் நெட்டுருச்செய்த தனது பாடத்தை உணர்ச்சியின்றி ஒப்பு வித்தலைப்போல் ஒரு பேச்சாளர் தமது பேச்சுப்பொருளை உடலசை யாது, தலைகுனிந்து ஓரோவழி ஒலிபெருக்கிமுன் ஒப்புவித்தல் கூடும். தமது முழுக் கவனமும் தமது பேச்சு முறையிலும், ஒலிபெருக்கி மீதும் செலுத்தப்படுவதால் பேச்சைச் சபையோர் எவ்வாறு சுவைக்கின்றன ரென்பதை அன்னோர் முகக் குறிப்பால் ஒருவர் உணர்ந்துகொள்வதற் கில்லை. இந்நாள் மேடைமீது நின்று பேசும் பேச்சாளர், கூட்டத்திற் கேற்றவாறு தமது குரலைத் தயாரித்துக்கொள்வதை விடுத்து, 'மைக்' எனும் ஒலிபெருக்கிக் கேற்றவாறு தங்கள் குரலைத் தயாரித்துக்கொள் ளும் அவசியம் பரவிவருதல் கண்கூடு. சாதாரணமாக உருவச்சிலைகளும் வர்ணந்தீட்டிய முழு உருவப்படங்களும் சுபாவிக அளவுக்குமேல் சற்றுப் பெரிதாக அமைத்தல் வழக்கு. அவ்வைகள் வைக்கப்படும் உயர்நிலைக்கேற்ப, அவைகளின் தலை உடல் கை கால்கள் முதலிய பல அங்கங்களின் பரிமாணத்தைச் சற்று மிகைபட ஓவியர் இயற்றிக் காட்டுவர். அளவுக்கு மீறுமாயின், அவை கோர ரூபங்கொண்டும், பயங்கரமாகவும், அரக்க உருவங்களோவென மக்களுக்கு ஐயமெழுப்பு வனவாகவும் இருக்கும். ஒலிபெருக்கிகள் பல்வேறு வேலைப்பாடுள்ளவை யாதல் பற்றி அவை ஓரே படித்தரமான நாதவொலியைத் தம்பூரு, வீணை போன்ற நரம்புக்கருவிகளை யொத்து ஒலிப்பனவல்ல. சில வேளை அவை ஒருவர் இயற்கைக்குரலை உருத்தெரியா வண்ணம் பன்மடங்கு மிகைப்படுத்தி வெளியிடுவதால் அவ்வித விபரீத ஒலியைக் கேட்கும் பேச்சாளருக்கும் அது தமது குரல்தானோவெனும் ஐயம் தோன்றுவது இயல்பாம். அக்கால் அப்பேச்சாளர் தமது குரலைத் தாழ்த்த முற்படு வார். அன்றி உயர்த்தவும் முயல்வார். அக்காலங்களில் அவர் பேச்சு ஆரம்பத்தில் ஒருவித ஓசைகொண்டும், இடையிலும் இறுதியிலும் ப்பல விபரீத ஓசைகொண்டதாகவும் முடியும்.

ஒலிபெருக்கி அவசியமா ?

ஒரு பெருங்கூட்டத்தை ஒலிபெருக்கியின் உதவியின்றியே சமாளிக்க இயலும், ஒரு நல்ல பேச்சாளர் ஒலிபெருக்கியின் ஆதரவு மீது தமது முழு நம்பிக்கையும் கொண்டு பேசிப் பழகுவரேல், காலஞ் செல்லச் செல்ல தமது சுயநம்பிக்கையையும், பேசும் சக்தியையும் இழந்தவராய் மிகக் கடைப்பட்ட பேச்சாளராவார் என்பது ஒருதலை. ஓர் உண்மை நிகழ்ச்சி ஈண்டைக்குப் பொருந்தும். இளம் சங்கீத வித்வான் ஒருவர் சாரீரச் செல்வம் மிகப் பெற்றவராயிருந்தும் தமது கச்சேரிக்கு 'மைக்' கின் உதவியை வற்புறுத்தினர். அப்பாடகர் 'மைக்' கின் முன் தலைகுனிந்து அதனை முத்தமிடுபவர் போல் அமைந்திருந்து பாடினர். அவருக்கு ஒரு தங்கப் பதக்கம் அளித்துப் பாராட்டிப் பேசிய இந்நூலாசிரியர் அப்பழக்கம் மிகக் கொடியதென எச்சரிக்கை வழங்கினர். எனவே, மேடைமீது ஒலிபெருக்கி நாட்டப்பெற்றிருப்பினும் இருக்கலாம்; அஃது இல்லாவிடினும் அதன் அவசியம் ஒரு பேச்சாளருக்கு இன்றியமையாததாக மட்டும் தோன்றலாகாது. ஒலி பெருக்கியின்முன் பேசுதற்குத் தவிர்க்கமுடியாத கட்டாயம் ஏற்படுமேல், முற்கூட்டியே பேசித் தயாரித்துக் கொண்டு ஒரு பேச்சாளர் தமது குரலைத் தக்க சுருதியில் வைத்துப் பேசுதல் முறையாம்.

கடற்கரை, திறந்தவெளி, பெரிய நடனசாலைகள், சினிமாக் கொட்டகைகள், விசாலித்த மண்டபங்கள் ஆகியவற்றில் ஒரு பேச்சு நன்கு புலனுதற்கு ஒலிபெருக்கிகளும், அவற்றுள் ஆங்காங்கு ஒலிபரப்பு விரிகுழல்களும் சற்று உயரத்தே இந்நாள் அமைக்கப்படுவனவாம். பேசுமிடங்களில், " ஒலிபெருக்கி உண்டு " என முற்கூட்டி விளம்பரப் படுத்துவதும் இற்றைய நாகரிக முறையாயிற்று. ஆயினும் சட்டசபைகளிலும், நீதிமன்றங்களிலும், சொற்போர் அல்லது விவாதங்களிலும், நாடக மேடைகளிலும் ஒலிபெருக்கிகள் அவைகட்குப் பொருந்திய துணைக்கருவிகளாகக் கருதப்படவில்லை. இயற்கைக் குரலே ஈங்குப் பெரிதும் விரும்பப்படுவனவாம்; சுவைக்கப்படுவனவாம்.

வானொலிப் பேச்சுக்கள்

வானொலி நிலையங்களினின்றும் இந்நாள் பலதிறப்பட்ட பேச்சுக்களும், பாட்டுக்களும் மிகத் தெளிவாகவும், உணர்ச்சியுடனும், இனிமையாகவும் வெளிவரக் காண்போம். அவைகட்கென நாட்டிய சிறிய அறைகளில் அமைக்கப்பட்டிருக்கும் ஒலிபெருக்கிகள்முன் இவை



இசைவேந்தர் - M. K. தியாகராஜ பாகவதர்

நிகழ்த்தப்பெறுவதால் வட்டத்தட்டுக்குமுன் நேராக அசைவற்று நின்று பேசவோ பாடவோ வேண்டிய அவசியமில்லை. எனவே, ஒரு பேச்சாளர் அல்லது பாடகர் தம் மனம்போல் இயற்கையாகவே ஈங்குப் பேசுதலும் பாடுதலும் கூடும். பேச்சு மேடைமீது அமைக்கப்படும் ஒலிபெருக்கியின்முன் அவ்வாறு பேசுதற்கியலாது. இங்குப் பேச்சாளர் அல்லது பாடகர் தமது குரலை 'மைக்' எனும் ஒலிபெருக்கியின் தன்மைக்கு ஏற்றவாறு தக்க சுருதியில் வைத்து அக்கருவியுடன் ஒன்றுபட்டிழையுமாறு நிறுத்திப் பேசுதலும் பாடுதலும் வேண்டப்படும். இடையிடையே அக்கருவி, ஒலியைக் கடூரமாகக் கக்கும் இயல்பு கொள்ளும். மின்சாரக்கம்பிகள் அலைக்கப்பட்டால் அக்கருவியினின் றெழும் ஒலி அலைகளும் பற்பலவமயம் அலைக்கப்படுவனவாம். இத்தகைய நிகழ்ச்சிகள் நேர்வதை ஒரு பேச்சாளர் அல்லது பாடகர் தமது அநுபவத்தால் முற்கூட்டி அறிந்திருத்தலும் எச்சரிக்கையோடிருத்தலும் நன்று. சிலவேளை அக்கருவி வேலை செய்யாது நின்றுவிடின் பேச்சாளரின் பேச்சுத் தடைப்பட்டுப் பேச்சின் கோவையும் இற்றுவிடும்.

சாதாரணமாக எல்லாப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகளும் வானொலியால் பரப்பப்படுவனவல்ல. சில தக்காரின் முக்கியமான அரசியல் பேச்சுக்கள், குறிப்பிட்ட சில நல்ல பேச்சாளரின் பேச்சுக்கள் மட்டுமே இந்நாள் வானொலியில் வருவனவாம். ஆயினும், பாட்டுக்களும் இதர சங்கீதக் கச்சேரிகளும் இதுபோழ்து விலைகொடுத்து மிக விரிவாக ஒலிபரப்பப்படுகின்றன. அவற்றில் பலதிறப்பட்ட பாடகர்களும் பாடுவதைக் கேட்போம். பாடல்களின் நாதவொலியும் பல்வேறு தன்மை கொண்டதாக மிளிரும். அவைகளில் தக்க கவனம் செலுத்திச் சுவைத்துக் கேட்போர்க்கு, இதர பாடகர்களிலும் உயர்திரு எம். கே. தியாகராஜ பாகவதரின் பாட்டுக்கள் மட்டும் சிறந்த தாளக் கட்டுடன், தொடர்ந்தும் அலையென உயர்ந்தும் தாழ்ந்தும் இனிமை கமழ ஒலிபெருக்கியுடன் இரண்டறக் கலந்து இழைந்து இன்பம் அளிப்பதை நாம் இந்நாள் காண்போம். ஒலிபெருக்கிமுன் பேச முற்படும் பேச்சாளரும், முயன்றால் ஓரோவழி இன்பம் கமழப் பேசலாமென்பது இவ்வுதாரணமொன்றால் நன்கு புலனாகும்.

பண்டைய பேச்சாளர்

சாக்ரடீஸ், டெமாஸ்தனீஸ், கிளாட்ஸ்டன், சர். சுரேந்திரர், விபினசந்திர பாலர் ஆகிய பெரும் நாவலர்கள் ஒலிபெருக்கி

இற்றென அறியாக்காலத்தே வதிந்தவராவர். ஆயினும் அன்னோர் பேச்சை எத்துணைப் பல்லாயிர மக்கள், அவ்வக் காலங்களில் கேட்டின்புற்றனர்! காரணம் என்ன? அத்தகைய பெரியார்கள் ஆரம்பந் தொட்டே, ஈண்டிய கூட்டத்திற்கேற்றவாறு தங்கள் குரலை உயர்த்தவும் தாழ்த்தவும் இனிமையாகப் பேசவும் பழகியிருந்ததே யாமென்க. தங்கள் குரலையும் குரலோசையையும் இன்னோர் நீடிய பழக்கமின்றித் தம் வயப்படுத்தினவர்களல்லர். டெமாஸ்தனீஸ் எனும் நாவலர் ஒலிக்கின்ற ஆழியின் முன்னின்று அதன் பேரிரைச்சலுடன் போட்டியிட்டுப் பேசிப் பழகிய பேச்சுகட்குக் கணக்குமுண்டோ? பிரக்கின்ரிட்ஜ் எனும் மாபெரும் நியாயவாதியின் பேச்சைக் கேட்ட இளம் ஆபிரகாம் லின்கன் காடுகளிலுள்ள அடர்ந்த மரங்களோடு பேசிப் பேசிப் பழகியே பெரும் நாவலராயினார். எனவேதான் காலக்கிரமத்தே பொதுமக்களைச் சூழ்ந்துள்ள அச்சம், அறியாமை, அக்கிரமம், துச்சவாழ்வு எனும் காரிருளை வெருட்டிப் பெருந்தாரையாகப் பேச்சு மழை பொழிய வல்ல அரும்பெரும் நாவலராகி இவ்விருவரும் இன்றும் உலகில் புகழுடம்பு பெற்று வதிகின்றனர்! எனவே, நல்ல பேச்சாளராக விரும்பும் ஒருவர் ஆரம்பந்தொட்டே ஒலிபெருக்கியின் உதவியை விரும்பாதிருத்தல் மிக வேண்டப்படுவதாம். நமது நாட்டில் ஒலிபெருக்கிகள் பெருகப் பெருக நல்ல மேடைப்பேச்சாளர்கள் அருகுவரென்பது காலஞ்சென்ற மகாகனம் சாஸ்திரியார், உயர்திரு. திரு. வி. க ஆகிய இருவரின் அபிப்பிராயமாகும். ஒரு பேச்சாளர் ஒலிபெருக்கியை ஓர் அவுடதம்போல் கருதல் முறையாம்; அதனை உணவுபோல் இன்றியமையாததெனை எண்ணுதல் தவறாம். * பெரியார்கள் இது குறித்து உலகுக்கு எச்சரிக்கையே வழங்கியுள்ளனர். ஆகவே, ஒருவர் சுயமுயற்சி கொண்டும், பழக்கவன்மையாலும் திடம்பெற்ற இயற்கைக் குரலில் முழு நாட்டமும் நம்பிக்கையும் வைத்துப் பொதுமேடைகளில் பேசுதலே சாலச் சிறப்புடைத்தாம்.

—

*புகழுடம்பு பெற்ற மகாத்மா காந்தியடிகள் ஆசியமக்கள் மாநாட்டில் பேசியது: "கூட்டத்தின் கடைக்கோடிவரை இந்த ஒலிபெருக்கியின் குரல் கேட்கும் என்பது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. நான் பேசுவது கூட்டத்திலுள்ள சிலருக்குக் கேட்காவிட்டாலும் ஒலிபெருக்கி நின்றுவிட்டாலும் அஃது அக்கருவியின் குற்றம்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

19. இறுவாய்

இந் நூல் பரந்த மேடைத் தமிழின் முடிவைக் கண்டதல்ல. அவ்வாறு காண்டலும் அரிதாம். ஆயினும், ஒல்லும்வகை ஆண் பெண் இரு பாலருக்கும் நனி உதவுமாறு இந்நூல் தொகுக்கப் பெற்றிருத்தல் கண்கூடு. இவ்வழி மிகப்பல புத்தகங்கள் நூதன கருத்துக்களுடன் காலந்தழுவித் தோன்றுமேல் அவை மக்கட்குப் பெரிதும் பயன் தரும்.


இனிய தமிழ் மொழியை இடைக்காலத்தே நமது மக்கள் புறக்கணித்து ஆங்கிலத்தை வீட்டிலும் வெளியிலும் பெரிதும் போற்றியது உண்மை. ஆயினும், காலச்சக்கரச் சுழற்சி வேகத்தால் துச்சநிலையினின்ற நமது தாய்மொழி, தவழ்ந்து சென்று இதுபோழ்து உச்ச நிலையை அணுகலாயிற்று. தாய்மொழிப் பற்றும் அதனை வளர்க்கும் ஆர்வமும் காட்டுத் தீப்போல் கனன்றெழுந்து நாடெங்கும் விசாலித்துப் பரவுகின்றன. 'எங்கும் தமிழில்', 'எல்லாந் தமிழில்', 'எதுவும் தமிழில்' என்பன செவிபட இந்நாள் முழங்குவனவாம். தென்னாட்டுப் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் பிற பாடங்களைத் தமிழ் மொழியிலேயே போதிக்கத் தலைப்பட்டுவிட்டன. பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக்களில் அரசியல் அமைச்சர்களும் தமது உயரிய அறவுரைகளைத் தாய் மொழியிலேயே பேச வழிகண்டுள்ளனர். அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டப் பரிசளிப்பு விழாவில் சென்னை அரசியல் கல்வி மந்திரியார் கனம் டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் தாம் நிகழ்த்திய தனித் தமிழ் அறவுரையால் குன்றாப் புகழ் கொண்டார் அன்றோ? அரசியல் அலுவலகங்களிலும், நகராண்மைக் கழகங்களிலும் ஆங்கிலத்தை முறியடித்துத் தமிழ்மொழி இவ்வேளை வெற்றி கண்டுள்ளது. தமிழிசையோ பல எதிர்ப்புக்களினிடையே பெருமித வெற்றிபெற்று மக்கள் மனதை மகிழ்விக்கின்றது. சட்ட சபைகளில் தமிழ்ப் பேச்சுக்கள் தற்போது தலைகாட்டலாயின. அதற்கெனத் தமிழ்ச் சுருக்கெழுத்தாளரும், அச்சுப் பொறிப்போரும் விரும்பப்படலாயினர். பொது மேடைகளில் தமிழ்ச் சொற்பெருக்குகளும் மேலோங்கி வருகின்றன. ஆயினும், அவைகள் மிகச்செப்பம் பெற வேண்டியவைகளாகவே இன்றும் உள்ளன. எனினும், பிற மொழியை விடுத்து, தமது கருத்துக்களைத் தாய்மொழியிலேயே வெளியிட வேண்டுமெனும் சிந்தனையை மக்கள் கடைப்பிடிப்பாகக்

கொண்டுள்ளனரென்பது கண்கூடு. பிறமொழிச் சொற்பெருக்குகள் எத்துணை இனித்தனவோ அத்துணை, மக்கட்கு இந்நாள் கைக்கலாயின. வள்ளுவர் கம்பர் கழகங்களும், பாரதியார் விழாக்களும், பொங்கல் - தமிழ்த் திருநாள்களும், கலைச்சொல்லகராதி உற்பவமும் தமிழ்மொழியை இன்னொன்று மேலும் வளர்ப்பனவாம். அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைத் தமிழ் வெளியீடுகள் தமிழ்மொழிக்கு மேலும் அரண் செய்வனவாம். இவையனைத்தும் மிகைபடு உரையோ புனைந்துரையோ அல்ல.

தமிழ்நாடு மொழிப் பிரிவினைகொண்ட நாடாக அரசியலில் மிளிரும் நாள் விரைந்து வருதல் வெள்ளிடை மலையாம். அரசியல் நிர்ணய சபையும் நாடுகளை மொழிவாரியாக அறுதிபிடுவதில் நாட்டஞ் செலுத்துவதாயிற்று. தனித் தமிழ் நாடு வேண்டும், வேண்டும், அவசியம் வேண்டும் என ஆர்ப்பரித்த பெரியார்களின் பெருமுயற்சி கைகூடும் காலம் நெருங்கிவிட்டது. உயர்திரு. பாரதியார் கண்ட தமிழ்க் கனவு, அரசியற்கனவு, சீர்திருத்தக் கனவுகளெல்லாம் இந்நாள் நனவாயின. இனிய தமிழ்வெள்ளம் நாடெங்கும் கரைபுரண்டோடவும், தமிழ்த் தென்றல் பரந்து வீசி மணக்கவும் நமது அரசியலார், முன்னைய மூவேந்தரையொத்து, முனைவரென்பது உறுதி.

நந்தமிழ் நாடு பலதுறைகளிலும் உயர்வெய்தற்குப் பழையன கழிதலும் புதியன புகுதலும் மிக வேண்டப்படும். பிற மொழிக் கலைகளை இகழ்தலும், ஆங்கிலத்தை அறவே புறக்கணித்தலும் நமது மொழி வளர்ச்சியையும், சமூக வளர்ச்சியையும் இடர்ப்படுத்துவனவாம். ஆங்கில மொழித் தேர்ச்சியும், கலைகள், நாகரிகம் ஆகியவையும் நம் நாட்டுக்கு எத்துணையோ நலனளித்துள்ளன. இன்றுள்ள சுயேச்சை வேட்கையும், உலக அரசியல் அறிவும் அவ்வழிப் பெறப்பட்டனவென்பதை மறுத்துரைப்பார் யாண்டுளர்? எம்மொழியாயினும் அம்மொழி நூற்களைப் பயில்தலும், சத்தானவற்றைத் திரட்டி விரைந்து தமிழ்நூல் வடிவில் வடித்தலும் இந்நாள் சாலவும் வேண்டப்படுவனவாம்.

மேடைத் தமிழ்ப் பேச்சு உச்சநிலை பெறுமேல், தமிழ் மொழியும், இலக்கியங்களும், வீட்டுத் தமிழும் தாமே உயர்வனவாம். பற்பல விஜயலட்சுமிப் பண்டிதரும், சரோஜனி தேவியரும் தமிழ் நாடெங்கும் தழைத்தெழுவர். இன்றுள்ள நமது நாட்டுப் பண்டிதைகளின் காலங்கண்ட உழைப்பும், தமிழ்த்தவமும் கைவரப் பெற்று மிகப் பல பண்டிதைகள் தோன்றித் தமிழ் நாட்டை அலங்கரிப்பர் என்பதில் ஐயமின்றும். பற்பல சீர்திருத்தத் தாய்மார்களும், சகோதரிகளும்



1. ராய்பகதூர். பி. அனந்தாச்சார்லு, 2. லோகமான்ய பாலகங்காதர திலகர், 3. சர் பிரோசிஷா மேத்தா, 4. சர் சர்வேபள்ளி இராதாகிருஷ்ணன், 5. டாக்டர் R. K. சண்முகம் செட்டியார், 6. கல்கி. R. கிருஷ்ணமூர்த்தியார், 7. கவி சுப்பிரமணிய பாரதியார்.

தோன்றி, பிற நாடுகளையொப்ப நமது நாட்டுப் பெண்களின் நிலைமையை உயர்த்துவரென்பது உறுதி. அடிமை வாழ்வும், மூடப்பழக்கங் களும், குருட்டு நம்பிக்கைகளும் நாட்டை விட்டகலும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இனி, தமிழ் நாடு தமிழருக்கேயாம்; தமிழ் நாடெங்கும் தமிழ் மணமாம்; அன்னார் நினைப்பது தமிழாம்; மொழிவது தமிழாம்; வரை வது தமிழாம்; இசைப்பதும் தமிழேயாம். இனி எல்லாம் இன்பத் தமிழ் மயமாய் விளங்கற்கு, தமிழ் நாடு தழைத் தோங்கற்கு, தமிழ் மக்கள் இன்புற்று வாழ்தற்கு நந்தமிழ் அன்னை அருள் செய்வாளாக! நாடெங்கும் இன்பம் பொங்குவதாக!

---

20. பொன்னாள் உதயம்

இந் நூலுக்கு இறுவாய் கூறி முடித்த நாள், நமது நாட்டில் சுதந் தரச் சூரியன் தனது பொன்னொலாய கிரணங்களைப் பரப்பி உதய மான செய்தி கிட்டிய நன்னாளாயிற்று. கடந்த இருநூறு ஆண்டு களாக இந்நாட்டை ஆட்சி புரிந்த பிரிட்டிஷார் மனமாற்றம் பெற்று நமது நாட்டின் ஆட்சியை நம்மிடமே ஒப்படைத்து விட்டனர். சின்னாளில் இந்தியா, பூரண சுதந்திரம் பெற்றுள்ள இதரநாடுகளை யொத்து உலக முன்னணியில் நிற்கு மென்பதில் சிறிதும் ஐயமில்லை. உயர் தாதாபாய் நெளரோஜி, சர். பிரோசிஷா மேத்தா, டபிள்யூ. சி. பொனர்ஜி, சர் சுரேந்திரநாத் பனர்ஜியர், பண்டித மோதிலால் நேரு, சித்தரஞ்சின தாஸ், மதன் மோகன் மாளவியா, கோபால கிருஷ்ண கோகலே, அரவிந்தர், சுபாஷ் சந்திர போஸ், பால கங்காதர திலகர், திவான் பகதூர் ஆர். இரகுநாத ராவ், ஜி. சுப்பிரமணிய அய்யர், பி. அனந்தாச்சார்லு, டாக்டர். எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. ரெங்கையா நாயுடு, சேலம் இராமசாமி முதலியார், எஸ். சத்திய மூர்த்தியார், எஸ். சீனிவாச அய்யங்கார் போன்ற எண்ணிறந்த பெரு மக்கள், சென்ற அறுபது ஆண்டுகளாக முயன்றுழைத்ததன் பயனாகவும், ஏ. ஓ. ஹ்யூம், சர். வில்லியம் வெட்டர்பர்ன், ஆல்பிரட் வெப், சர் ஹென்றி காட்டன், அன்னை பெசண்டு அம்மையார் போன்ற ஆங்கில நன்மக்களின் துணைவலியின் பயனாகவும் இந்தியா இந்நாள் சுதந்தரம் காணலாயிற்று. 1889-ம் ஆண்டு கூடிய 5 வது இந்தியக் காங்கரஸ் மகா

சபைக்குப் போந்த, 'உலகமே எமது தேசம், அதற்கு நலம் புரிவதே எமது நோன்பு' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த சார்லஸ் பிராட்லா எனும் மாபெரும் நாவலரும், தலைசிறந்த சீர்திருத்த வாதியுமான பெரியார் அச்சபையில் சொற்றதிதுவாம்: "அன்பர்களே! நீவிர் பொறுமையை உறையுளாகவும் உண்மை அஞ்சாமைகளைப் போர்க்கருவிகளாகவும் பெற்று நல்லுளங்கொண்டு உரிமைப்போர் புரிதல் வேண்டும். இங்கிலாந்தில் நிகழ்ந்துள்ள சீர்திருத்தங்களனைத்தும் போராடிப் போராடி மிகத் தாமதமாகவே பெற்றவையாகும். அவ்விதச் சீர்திருத்தங்களுக்குப் போராடியவர்கள், ஆதாரமாயிருந்தவர்களெல்லாரும் அரசியல் துரோகிகளாகவும், நாட்டின் விரோதிகளாகவும் கருதப்பட்டுக் குற்றவாளிகளாகத் தண்டனை பெற்றுச் சிறைவாசமும் அனுபவித்தனர். ஆயினும், அவர்கள் பேச்சுக்கள் நிலைபெற்று உயிர் வாழ்வனவாயின. சத்தியத்தைச் சிறைவாசம் எக்காலத்தும் நசுக்கிவிட மாட்டாது. அத்தகைய உண்மை இயக்கத்தைச் சிறிதளவு, மிகச் சில காலம் தடைப்படுத்தலாம். ஒரோவழி அம்முயற்சியை ஒரு மணி நேரம் நிறுத்தி வைத்தற்கியலும். ஆயினும் அஃது அச்சிறைக் கோட்டத்தின் சுவர்களுக்குள்ளே மின்சார விசையென வளர்ந்து உயிர்நாடி பெற்றதாகின்றது. அச் சக்தி சிறைக் கோட்டத்தினின்றும் வெளிப்படும்போது, மென்மேலும் வளர்ச்சி பெற்று இந் நிலவுலகையே ஆட்டுவிக்கும் மகத்தான சக்தியை அடைந்துவிடும் என்பதை நீவிர் கவனத்திலிருத்துவது அவசியமென வற்புறுத்திக் கூறுகிறேன்." இம் மகானின் வாக்கைப் பின்பற்றி உண்மை நெறிநின்று சிறை அநுபவித்தவர்களும், நாடு கடத்தப்பட்டவர்களும் எண்ணிறந்தவர் ஆயினர். பாலகங்காதர திலகர், லாலா லஜபதி ராய், அரவிந்தர், சுபாஷ் சந்திர போஸ் ஆகிய தேசாபிமானிகள் அடைந்த இடுக்கண்கட்கோர் அளவில்லையெனலாம். இப் பெரியார்களுக்குப்பின் தேச சேவையில் இறங்கிய - இன்றும் என்றும் சிரஞ்சீவியாக விளங்கும் - மகாத்மா காந்தி யடிகளின் பிறவுயிரைத் துன்புறுத்தா உயர்விரதமும், சாத்வீக எதிர்ப்பும், சத்திய நெறியும் உலகெங்கும் பரவியதால் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி முற்றுப் பெற்று, கோரிய எல்லாச் சுதந்தரங்களையும் இந்தியர் இவ்வேளை அடையலாயினர். பெர்னார்டு ஷா அவர்கள் எண்ணியதற்கு மாறாக, காந்தியடிகளாகிய பசுவின் அகிம்சா தர்மக் கொள்கையால், பிரிட்டிஷ் புலி - ஏன் - சிங்கம் சாக பட்சணியாக மாற்ற மடைந்து விட்டது! நமது நாட்டு மக்களும், கலைஞர்களும், கவிவாணர்களும் நீண்டகாலம் கண்ட கனவுகளெல்லாம் இதுபோழ்து


நனவாயின எனல் மிகையன்று. உயர்திரு. சுப்பிரமணிய பாரதியார் தமது அகக்கண் கொண்டு பாடிய தெய்வீகப் பாடல்களும், தேசீய கீதங்களும் இந்நாள் பலிதம் பெற்று, மக்களை 'ஆடவும்', 'பள்ளுப் பாடவும்' செய்து உலகில் நிலைபெற்று ஒளிர்கின்றன!

1947-ம் ஆண்டு ஜூலைத்திங்கள் பதினெட்டாந் தேதி வெள்ளியாகிய நாளைப் பொன்னாளாக்கி, மாட்சிமை தங்கிய ஆறும் ஜியார்ஜ் மன்னர், இந்திய சக்கரவர்த்தியெனும் பட்டத்தைத் துறந்து, இந்திய நாட்டை ஒரு சுதந்தர நாடாக்கி, அதற்கான சுதந்தரங்களனைத்தையும் வழங்கினார். இருநூறு ஆண்டுகளாக இருந்து வந்த பிரிட்டிஷ் ஆட்சியின் தொடர்பும் சம்பந்தமும் அந்நாள் பதினைந்து நிமிடங்களில் பெருஞ் சடங்குகளுக்கிடையே நீக்கம் பெற்றன. இந்திய நாடு அன்று விடுதலையடைந்தது. அறுபது ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த போராட்டமும் மனக்கசப்பும் அன்று முடிவு பெற்றன என்பது மிகையல்ல. இம்மகத்தான தேச சம்பவத்தை நமது மகாத்மா காந்தியடிகள், தமது வாழ்நாளிலேயே கண்ணாரக் காணவேண்டுமென விதித்திருந்தது போலும்! அவர் புகழ், சுதந்தரச் சூரியன் தோன்றியுள்ள நமது நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கும் நீடு நிலைத்திருப்பதொன்றும்.

உலகத்தின்கண் நன்மையும் தீமையும் இரவுபகலெனக் கலந்து வருவ தியல்பு. முகம்மதிய மதம் தோன்றிய நாள்தொட்டு இந்நாட்டில் இந்துமக்களுடன் இணைபிரியாது வாழ்ந்து வந்த முஸ்லீம் சகோதரர்கள், இன்று 'பாகிஸ்தான்' எனும் தனிச்சுதந்தரம் அடைந்து நம்மினின்றும், அந்தோ, பிரிந்துவிட்டனர்! இப்பிரிவு இந்தியாவுக்குற்ற ஒரு பெருங்குறை யென்பதை இதர நாட்டு மக்களும் ஒப்புவாராயினர். நமது நாடு இரு கூறுக்கப்பட்டு, இரு தாயரிடம் கொடுக்கப்பட்ட மகவுபோல் இன்று உள்ளது. இதைக்குறித்து, மகாத்மா காந்தியடிகள் மகிழ்ச்சியடையவில்லை யென்பதில் ஆச்சரியமில்லை. அரசியல் அறிவிலும், சூழ்ச்சிகளிலும், சாணக்கிய முறையிலும் ஒப்புயர்வற்ற ஆங்கில மக்கள் இப்பிரிவினைச் சுதந்தரத்தை இத்துணைத் துரிதத்திலும், எதிர்ப்புக்களி னிடையும் அளித்து உலகறியச் செய்துவிட்டனர். பிரிவினை கொண்டு தனித்தனி ஆட்சியின்கீழ் வந்துள்ள நமது நாட்டின் வருங்கால நிலைமையை முற்கூட்டி அறுதியிடுதல் மனித அறிவுக்கும் சக்திக்கும் மீறிய தொன்றும். ஆயினும், இருநாடுகளும் போட்டியிட்டும், ஒருமித்துழைத்தும் எல்லாத்துறைகளிலும் முன்னேற்ற மடையுமென உலகம் ஆவலோடு எதிர்பார்த்தல் தவறன்று. மற்றொரு முக்கிய காரியத்தையும்

மக்கள் எதிர்பார்த்தல் முறையேயாம். சுதந்தர இந்தியாவில் அதிகார வர்க்கத்தினர்பால் அமைதியும் சத்தியமும் குடிகொண்டிருத்தல் இன்றியமையாததாம். ஒழுக்கமே உருவாய்க்கொண்ட நல்லமைச்சராலும் சட்ட சபைகளாலும் நாட்டின் நலன் பெருகுவதாகும். அதிகாரப்பேய் பிடியாதிருக்கும்போது ஒருவர்பால் குடிகொண்டுள்ள உயரிய மனப்பான்மையும் தூய எண்ணங்களும் அப்பேய் பற்றியபின் விலகிப் பறந்தோடி, எளிதில் மறக்கப்படுவனவாம். இதுவே நாம் காணும் இன்றைய உலக வழக்கு. ஆனால், நமது தமிழ்நாட்டில் ஆணவப்பேய் அகன்று நல்ல நேர்மையான அரசியல் ஆட்சி இனி நீடித்து நிலவுமென்பது ஒருதலை. வெறும் அரசியல் விடுதலையால் அந்நிய ஆதிக்கம் மட்டும் நீங்கும்; அடிமைத்துன்பம் நீங்காது. அதனுடன் பொருளாதார விடுதலையும் வேண்டப்படுவதாம். அரசியல் பொருளாதார விடுதலையே நாட்டின் முழு விடுதலையாகும். இனி, இந்திய அரசாங்கம் அவ்விடுதலைக்கான முயற்சிகளை மேற்கொள்ளல் முறையாம்.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி நமது நாட்டுக்குப் பூரண சுதந்தரம் வழங்கப்பெற்ற சுபதினமாம். இக்குதூகலக் கொண்டாட்ட தினம் ஒரு பெருந்திருநாளாக நமது தமிழ்நாடு எங்கணும் வரவேற்கப்பெற்றது. அந்நாள், அரசியல் சுதந்தரம் பெற்ற நாள் மட்டுமன்று. நந்தமிழ்த்தாய் ஒவ்வொரு தமிழர் இதயத்தையும் கோயிலாகக்கொண்ட நாள்; தமிழ்மொழி வளர்ச்சி தொடங்கிய நாள்; தமிழ் மக்களின் தளைகளோடு, தமிழ்மொழியின் தளைகளும் களையப்பெற்று அம்மொழி விடுதலைபெற்ற நாள்; தமிழ்க்கலை வளர்ச்சி ஓங்க வித்திட்டு, நீர்பாய்ச்சிய நாள்; தமிழ்ப் பேச்சு வெள்ளம் நாடெங்கும் பரந்தோடத் திட்டம் வகுத்திட்ட நன்னாள். சர் சுரேந்திரநாத் பனர்ஜியர் விழைந்த - காலவரையின் மகத்தான சக்தியால் விளைந்த - அழகிய தேச சம்பவமான ஒரு பொன்னாள்; கனம் இரானடே கூறியவாறு, இந்தியா தனது வினைப்பயனைப் போராடி வென்று புனிதம் பெற்று உயர் உலக மான - இமையோர் ஒவ்வோர் காலத்தில் மண்ணுலகில் தோன்றி மக்களுக்கு ஆக்கமளித்ததாகச் சொல்லிய - மகத்தான நாள்; பிரதமர் கிளிமெண்டு ஆட்லி, லார்டு மௌண்ட் பேட்டன், ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஆகிய இன்னோரன்ன ஆங்கிலப் பெருமக்கள் தேவரென இந்திய மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிபுகுந்த தீஞ்சுவைத்திருநாள். அந்நாளை நந்தமிழன்னை திருவுளங்கொண்டேற்று, மேலும் புனிதம் பெறச் செய்வாளாக! இந்திய மக்கள் ஒரே சமுதாயமென அரசியல் உலகில் இன்புற்று வாழ்வாராக! பொங்கும் மங்களம் எங்கும் தங்குவதாக!



1. இந்தியப் பிரதமர் பண்டிட் ஜவகர்லால்நேரு, 2. கவர்னர் ஜெனரல் C. இராஜகோபாலாச்சாரியார், 3. மகாத்மா காந்தி, 4. வல்லபபாய் பட்டேல், 5. சர். A. இராமசுவாமி முதலியார்.

21. இந்நாள் அரசியல்

இதற்கு முந்திய பகுதியில் பொன்னாள் உதயத்தின் பெருமை விரித்துக் கூறப் பெற்றுள்ளது. 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15ம் தேதியன்று இந்தியாவுக்கு முழுச் சுதந்தரம் வழங்கிய அந் நாளில் நமது நாடு இந்தியா எனும் ஒருபகுதியாகவும் பாகிஸ்தான் எனும் மற்றொரு பகுதியாகவும் பிரிவினை பெற்றதென்பது அறிவோம். முந்திய பெரிய பகுதிக்குப் புது டில்லி நகரும், பிந்திய சிறிய பகுதிக்குக் கராச்சி நகரும் அரசியல் தலைநகர்களாயின. புது டில்லியில் ஒரு நாட்டின் தலைநகருக்குரிய அலங்காரங்களும் அரண்களும் மாளிகைகளும் கண்களைக் கவரும் உய்யான வனங்களும் அழகிய சாலைகளும் நிரம்பியுள்ளன. நகர் நிர்மாணத்தின் அழகோ செப்புந்தரமன்று. ஆயினும் பாகிஸ்தானின் தலைநகராகிய கராச்சியில் அத்தகைய மாளிகைகள் இனி நூதனமாக அமைக்கப்பட வேண்டியவைகளாகும்.

முத்தூண்கள்

1935-ம் ஆண்டு தோன்றிய இந்திய அரசியல் சட்டப்படிக்கும் 1947-ம் ஆண்டு கொடுக்கப்பட்ட இந்திய சுதந்தரச் சட்டப்படிக்கும் இந்திய அரசியல் இன்று நடைபெற்று வருகின்றது. அச்சட்டங்களுக் கிணங்கி இந்தியாவின் கடைசி வைசிராய் பதவி வகித்த லார்டு லூயி மௌண்ட்பேட்டன், சுதந்தர இந்தியாவுக்கு முதல் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப் பெற்றார். இந்திய மாதாவின் அருந்தவப் புதல்வரான பண்டித ஜவஹர்லால் நேரு பிரதம மந்திரியாகத் தேர்வுபெற்றார். இவ்விரு வைபவங்கட்கும் மகாத்மா காந்தியடிகள் நல்லாசி கூறிக் களித்தார். பிரதமருக்கு உதவியாக ஒரு மந்திரி சபை நிறுவப்பெற்றுள்ளது. அதில் இந்நாள் பல மந்திரிகள் பதவி வகித்துள்ளனர். சர்தார் வல்லபாய் பட்டேல் உதவிப் பிரதமராக இருந்து வருகின்றார். இம் மந்திராலோசனைச் சபை கூடும்போது சாதாரணமாக கவர்னர் ஜெனரல் தலைமை வகிப்பது வழக்கு. பொதுவகையில் கவர்னர் ஜெனரல் இந்திய ஆட்சிக்குப் பொறுப்பாளராயினும் அவர், மந்திரி சபையின் நோக்கத்திற்கும், ஆணைக்கும் கட்டுப்பட்டவராவார். அரசாங்க முழுப்பொறுப்பும் மந்திரி சபையைச் சார்ந்ததாகும். இதுபோழ்து நமது நாட்டின் தலைசிறந்த அரசியல் தந்திரியும் நிபுணருமான மேன்மை தங்கிய சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கவர்னர் ஜெனரல் பதவி தாங்கியுள்ளார். இவர் ஒரு புறம், பண்டித நேரு மற்றொரு

புறம், சர்தார் பட்டேல் இன்னொரு புறமாக அமைந்து நின்று இந்தியாவின் முத்தூண்களெனச் சிறந்து விளங்குகின்றனர். நாட்டின் தவக் குறைவால் மகாத்மாவான மத்தியத்தூண் வீழ்ந்துபட்டு வெறும் வெளியாயிற்று. என்னே பாவம் !

இந்தியப் பார்லிமெண்டு

மந்திரிசபைக்கு உதவியாக "இந்தியப் பார்லிமெண்டு" எனும் ஒரு மாபெரும் சபை உண்டு. அச்சபை தேர்வுபெற்ற அங்கத்தினர்களைக் கொண்டதாகும். அதற்கு ஒரு தலைவரும் உப தலைவரும் உண்டு. அங்கத்தினர்களனைவரும் மாகாணவாரியாக வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவராவர். இந்தியாவின் ஆட்சிமுறையையும் நிர்வாகப் பொறுப்பையும் கண்காணித்தலும், சட்டதிட்டங்களை வகுத்தலும், வரி விதித்தலும் நீக்கலும், கல்வி கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை நாட்டுக்கேற்ற முறையில் அடிகோலி அமைத்தலும் இம் மகாசபையின் வேலைகளில் முக்கியமானவைகளாம். அவசியமான சாதாரண சட்டதிட்டங்களையும் அவசரச் சட்டங்களையும் அப்போதைக் கப்போது உருவாக்கி மந்திரி சபையின் அங்கீகாரத்துக்கு அனுப்புதலும், மந்திரி சபை அவற்றைப் பரிசீலனை செய்து கவர்னர் ஜெனரல் சம்மதம் பெற்றுச் சட்டமாக்குதலும் அச்சபையைச் சார்ந்த நடைமுறைப் பழக்கங்களாகும். கவர்னர் ஜெனரல்முதல் சபையின் அங்கத்தினர்கள்வரை எல்லோரும் குறிப்பிட்ட நிவேதனமும் 'அலவன்ஸ்' எனப்படும் படிப்பணமும் பெறுபவராவர்.

சென்னை மாகாணம்

சென்னைமாகாணம் ஒரு கவர்னர் ஆளுகைக்கு உள்பட்டதாகும். மே. த. சர் ஆர்ச்சிபால்டு நை எனும் பழைய கவர்னர் சுதந்தர ஆட்சியிலும் கவர்னர் ஆனார். பவநகர் அரசர், கவர்னர் பதவியை அண்மையில் ஏற்று வகிக்கின்றனர். இவருக்கு ஒரு பிரதம மந்திரியுள்படப் பன்னிரண்டு மந்திரிகளைக் கொண்ட மந்திராலோசனை சபை ஒன்றுண்டு. மந்திரி சபைக்கு ஆலோசனை கூற, 'அசெம்பிளி' என்ற கீழ் சபையும் 'கௌன்சில்' என்ற மேல் சபையும் ஆக இரு சபைகள் உள்ளன. கீழ் சபைக்கு 'ஸ்பீக்கர்' எனப்படும் தலைவரும் மேல் சபைக்குப் 'பிரசிடெண்டு' எனும் தலைவரும் உண்டு. அவ்விரு சபைகட்கும் உதவித் தலைவர்கள் உளர்.

கீழ்சபை (அசெம்பிளி)

இங்கிலாந்தின் பாராளுமன்றத்தை யொத்துக் கீழ்சபை அமைந்துள்ளதாகும். 'ஹவுஸ் - ஆப் - காமன்ஸ்' எனப்படும் மக்கள் சபையைப்போல் இதில் உள்ள அங்கத்தினர்களனைவரும் வாக்காளர்களால் பொதுத் தேர்வுகளில் தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவராவர். அரசியலாரால் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தினர் ஈங்கில்லை. இச்சபை அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை 245. இதில் பொதுத் தொகுதிகளின் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தொகை 146. தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் 30. எஞ்சிய 69 இடங்களுக்கு அங்கத்தினர்கள் கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்படுவர். பிற்பட்ட பகுதிக்கு 1, முஸ்லீம்களுக்கு 28, ஆங்கிலோ-இந்தியருக்கு 2, ஐரோப்பியர்கட்கு 3, இந்தியக் கிறிஸ்துவர்கட்கு 8, கைத்தொழில் வாணிபத்திற்கு 6, நிலச்சுவான்தாருக்கு 6, பல்கலைக் கழகத்துக்கு 1, தொழிலாளர்கட்கு 6, பெண்மக்கள் பொதுத்தொகுதிக்கு 6, முஸ்லீம் பெண்களுக்கு 1, இந்தியக் கிறிஸ்துவப் பெண்களுக்கு 1.

மேலே குறித்துள்ள அங்கத்தினர்கள் சாதாரணமாக ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பர். மீளவும், பொதுத் தேர்தல்கள் மூலமே இச்சபை அமைக்கப் பெறுவதாகும். இடையில் நேரும் காலிஇடங்கள் அந்தந்தத் தொகுதியின் வழியே தேர்தல்மூலம் பூர்த்தி செய்விக்கப்படுவனவாம்.

மேல்சபை (கௌன்சில்)

இச்சபைக்கு 56 அங்கத்தினர்கள் உண்டு. இதற்குப் 'பிரசிடெண்டு' எனப்படும் தலைவரும் ஒரு உபதலைவரும் உளர். மேற்குறித்த 56 அங்கத்தினர்களில் பொதுத்தொகுதிகட்கு 35. முஸ்லிம் தொகுதிகட்கு 7, ஐரோப்பியருக்கு 1, இந்தியக் கிறிஸ்துவர்கட்கு 3, ஆக 11 தனி இடங்களுமுண்டு. கவர்னரோடு கூடிய மந்திரி சபையார் 8 முதல் 10 அங்கத்தினர்களை நியமனம் செய்யலாம். ஆயினும் இன்றைய நடைமுறையில் அரசியலாரால் செய்யப்படும் இந்த நியமனங்கள் எவ்வித ஒழுங்குப்பாட்டையும் அனுசரித்தவையல்ல. இரண்டொரு இடங்கள் பல வருடங்களாகப் பூர்த்திசெய்விக்கப்படாமலே வெற்றிடமாயுள்ளன.

மத்திய ஆட்சி

இனி ஏற்படவிருக்கும் அரசியல் மாறுதல்கள் பலவகைப்பட்டனவாகும். பொதுத் தேர்வுகளில் வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை

உண்டு. அத்தகைய வாக்காளரின் பட்டியல்கள், மாகாணம் முழுதும் இவ்வேளை தயாரிக்கப்பட்டு வருகின்றன. அப்பட்டியல்களில் உள்ளவர்களே சட்டசபை, நகராண்மைக் கழக அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவராவர். அரசியல் நிர்ணய சபையாரால் தேர்வுபெற்ற ஏழு அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு குழு (கமிட்டியார்) அரசியல் மாறுதல் சம்பந்தமாக ஒரு அறிக்கை மூலம் பல சிபார்சுகள் செய்திருக்கின்றது. அவைகளுள், 'யூனியன் ஆப் ஸ்டேட்ஸ்'- இந்தியக் கூட்டு சமஸ்தானங்கள் (ஸ்டேட்ஸ்) என்ற அரசியல் பொதுப் பெயரும், அமெரிக்காவின் ஐக்கியபதியைப் போன்ற 'பிரசிடெண்டு' என்ற ஒரு அரசியல் தலைவரும், அவருக்குதவியாக ஒரு பிரதமரைக் கொண்ட மந்திரி சபையும், மக்கள் சபை ஒன்றும், சமஸ்தான (ஸ்டேட்) கௌன்சில் என்ற மற்றொரு சபையும், அவைகளுக்குத் தலைவர்களும் உபதலைவர்களும் நியமிக்கப்படவேண்டுமாய் சிபார்சு செய்யப்பட்டிருப்பனவற்றை இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம். மேற்குறித்த இரு சபைகளிலும் 'இந்தி' அல்லது 'ஆங்கிலம்' அரசாங்க மொழியாகும். இவை இரண்டிலும் பயிற்சி இல்லாதவர்கள் தங்கள் தாய்மொழியில் பேசுதற்குச் சபைத் தலைவர்கள் அநுமதிக்கலாம்.

மாகாண ஆட்சி

'ஸ்டேட்' எனப்படும் கவர்னர் ஆட்சிக்குட்பட்ட மாகாணங்களுக்கு ஒரு கவர்னர் பொது வாக்காளர்களால் தேர்வுபெற்று ஐந்து ஆண்டுகள் பதவி வகிப்பார். 'லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி' எனும் மக்கள் சபையும் 'கௌன்சில்' எனும் மேல்சபையும் ஆக இரு சபைகள் உண்டு. 'சீப் மினிஸ்டர்' எனப்படும் பிரதமரைக் கொண்ட மந்திரி சபையும் உண்டு. மக்கள் சபையில், தேர்வுபெற்ற அங்கத்தினர்கள் 300க்கு அதிகப்படாமலும் 60க்குக் குறையாமலும் இருப்பர். மேல்சபையில், மக்கள் சபையிலுள்ள அங்கத்தினர்களின் தொகையில் 25 சதவிகிதம் அங்கத்தினர்களாக இருப்பர். இவ்வாறு உத்தியோகப் பதவி வகிப்போர் அனைவரும் குறிப்பிட்ட நிவேதனமும், படிப்பணமும் பெறுபவராவர். மேலே குறித்துள்ள திருத்தங்கள் இந்தியப் பார்லிமெண்டு மகாசபையின் பரிசீலனைக்குப் பின் அங்கீகாரம் பெற்று அமுலுக்கு வரும்வரையில் இன்றுள்ள ஆட்சிமுறை நீடிக்கும். பின்னர், இந்நாள் எடுக்கப்படும் வாக்காளர் பட்டியல்களின் உதவிகொண்டு ஆங்காங்குத் தேர்வுகள் நடைபெற்று இந்திய ஆட்சிமுறை மாற்றி அமைக்கப்பெறுவதாகும்.

வாழ்க சுதந்தர இந்தியா !



பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு

பண்டித ஜவஹர்லால் நேரு

1947-ம் ஆண்டு டிசம்பர் 13-ம் தேதி அரசியல் நிர்ணய சபையில் இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆற்றிய பேருரையின் சாரம் :

" தலைவர் அவர்களே !

இந்திய அரசியல் நிர்ணய சபை முதல் கூட்டத்தின் ஐந்தாம் நாள் இன்று ஆகும். சில முக்கிய அம்சங்களிலும் நடவடிக்கை முறைகளிலும் நமது கவனம் இதுவரை நன்கு செலுத்தப் பெற்றுள்ளது. ஆயினும் நாம் செய்யவேண்டிய ஆக்க வேலைகள் இன்னும் முற்றுப்பெற வில்லை. புத்துயிர் பெற்ற இந்திய சமுதாயத்தை மேலும் தட்டி எழுப்பு முறையில் நாட்டுக்கான சட்டதிட்டங்களை வரையறுக்கவும் ஆலோசனைக் கழகங்களை நிறுவவும் நாம் கடமைப் பட்டுள்ளோம். எனினும் நமது எதிர்கால முயற்சிகள் எவ்வெவ் வழிகளில் செல்லுமென்பதை கோடிக்கணக்கான இந்திய மக்களுக்கும், நிர்ணய சபையின் அங்கத்தினர்கட்கும், பொதுவாக உலக மக்கட்கும் சூசனையாகவேனும் இவ்வேலை எடுத்துக் காட்டல் மிக இன்றியமையாததாகும். எனவே, இத்தீர்மானத்தை இச் சபையின் கவனத்திற்குக் கொணர்ந்து வலியுறுத்துகின்றேன். இது வார்த்தைகள் நிறைந்த ஒரு தீர்மானம் என்பது உண்மையே. ஆயினும் இது தீர்மானங்களை யெல்லாம் கடந்து நிற்பது ; உயிர்நாடி பெற்றுள்ளது. இத்தீர்மானம் இச் சபைமுன் இனி வரும் தீர்மானங்களுக்கெல்லாம் தலையாயது. இதனை 'இந்திய சமுதாயப் பட்டயம்' எனக்கூறினும் பொருந்தும்.

இத்தகைய தீர்மானத்தை ஆதாரமாகக் கொண்டு இதன்படி நடப்பதென நாம் ஒவ்வொருவரும் மன உறுதியுடன் ஈங்குக் கங்கணம் கட்டிக் கொள்ளவே கூடியுள்ளோம். அதனை உலகுக்கு அறிவிக்கவே இது போழ்து முனைந்துள்ளோம். ஆகவே இத்தீர்மானத்தின் வார்த்தைப் போக்கையோ சட்ட முறையையோ நாம் கவனியாது இத்தீர்மானத்தில் பொதிந்துள்ள அரும்பெரும் கருத்துக்களில் கவனம் செலுத்தக் கடவோம். அதன்படி நடக்க முயல்வோமாக.

மிக முக்கியம் வாய்ந்த இத்தீர்மானம் வழக்கம்போல் வெறும் கரமுழக்கத்தாலும், கைதூக்குதல் செய்வதாலும் நிர்ணயிக்கப்படுவதல்லவென வணக்கமாகக் கூறுவேன். அங்கத்தினர்கள் அனைவரும் எழுந்து நின்று பக்தி பூர்வமாகத் தலைவணங்கி இத்தீர்மானத்தை

ஏகோபித்து ஏற்றுக்கொள்வார்களாயின், அவர்கள் உண்மையிலேயே ஒரு புதிய பிரமாணத்தை ஏற்றுக்கொண்டவராவர் என்பது உறுதி. எனவே, இம் முறையைத் தழுவுமாறு நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இச் சபையில் இன்று இருக்க வேண்டிய முக்கியமான பலர் இல்லை என்பது கண்கூடு. இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள பிரதிநிதிகள் இன்றைய நடவடிக்கைகளில் கலந்துகொண்டிருக்க வேண்டுவதும் மிக அவசியமாகும். இல்லையேல், நாம் நமது மனக்கண்ணால் காண்கிற - கற்பனையால் உருப்படுத்துகிற எதிர்கால இந்தியாவை நிர்மாணித்து நாற்பது கோடி மக்களின் நல்வாழ்வைக் காண்டல் அருமையாகும். என் கண்முன் சில அங்கத்தினர்களின் நாற்காலிகள் காலியாக இருப்பதைக் காண வருந்துகிறேன். இனி அடுத்துக்கூடும் இச்சபையின் கூட்டங்களில் எல்லா அங்கத்தினர்களும் தங்கள் கடமையை உணர்ந்து பொறுப்பை ஏற்றுக்கொண்டு இச்சபையை அலங்கரிப்பார்களென நம்புகிறேன்.

இனி, இச்சபை மேற்கொண்டுள்ள பணிகளைச் சற்றுக் கவனிப்போம். முதற்கண் நாம் கட்சி பேதங்களையும் முரண்பட்ட விவாதங்களையும் அறவே கைவிடுதல் வேண்டும். தேசநலன் ஒன்றிலேயே நாம் நாட்டங் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் கவனம் கொள்ளுங்கால் நாம் நமது நாட்டு நலன் மட்டுமல்ல - உலக நலத்தையே நாடியவர்களாவோம். நமது நாடு உலகநாகரிகத்தின் உச்சநிலையில் ஒரு காலத்தில் இருந்ததென்பதையும் இன்று அஃது பூட்டப்பட்டிருந்த அடிமைத்தளைகளை முறித்தெறிந்து முன்னேற்ற மார்க்கத்தில் முனைந்து செல்லுகின்றதென்பதையும் நாம் மனத்தில் பதித்தல் வேண்டும்.

நமது மாபெருந் தலைவர் - நூதன இந்தியாவின் தந்தையார் - இன்று இச்சபையில் நம்மிடை இல்லையேயென நாம் அனைவரும் கவலைப்படாதிருக்க முடியாது. ஆயினும், நமது தாய்நாட்டின் ஒரு பகுதியில் தோன்றியுள்ள குழப்பத்தைக் களைந்து அமைதியை நிலைநாட்டவே அவர் சலியாது இதுபோழ்து உழைத்து வருகின்றார். அத்தகைய பெரிய காரியம் அவர் ஒருவரால் மட்டுமே சாதிக்கக்கூடும் என்பதை நீங்கள் ஒப்புவீர்கள். அவர் இத்தருணம் இச்சபையில் இல்லாவிட்டாலும் அவருடைய ஆன்மசக்தி நமக்கு வழிகாட்டி நமது முயற்சிகட்கு ஆசி கூறுகின்றதென்பது என் துணிபு. அவ்வாறே நீங்களும் கருதுவீர்கள் என்பதும் எனது தேற்றம்.

இன்று உங்கள் முன்னிலையில் நின்று பேசுங்கால் வருங்காலத்தின் பெரும் சுமை - அளவுகடந்த பாரம் எனது தோள்மீது ஏறுகின்றதென்பதை நன்குணர்கின்றேன். நாம் பழைய சகாப்தத்தைக் கடந்து புதியதோர் சகாப்தத்தில் புகுகின்றோம். இதுபோழ்து என் மனம் இந்தியா ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னிருந்த சரித்திர நிலைமையில் படிந்து படிந்து எழுகின்றது; எண்ணும் தோறும் இன்பம் ததும்புகின்றது; மேன்மேலும் ஊக்குவிக்கின்றது. எனவே, நாம் காணும் நூதன சகாப்தத்தின் பெருமை எவராலும் பகரொணாதவொன்றாகும்.

இனி மேலும் சொல்லுவேன். சுதந்திரம் பெற்றுள்ள இந்திய சமுதாயம் இன்று என் கையில் தந்துள்ள போர்வாள் இருபுறமும் கூர்மை கொண்டதாகும். ஒரு புறத்தால் கடந்த காலத்தை வெட்டி வீழ்த்தி மற்றொரு புறத்தால் வருங்காலத்தைச் சீர்படுத்திச் செப்பனிட்டுக் கண்காணிக்கும் பெரும் பொறுப்பை என்பால் அளித்திருக்கின்றதென்பதை நான் வெகு பயபக்தியுடன் உணர்ந்து அதனை ஏற்றுக்கொள்கிறேன். உலக சரித்திரத்தில் ஒவ்வொரு நாடும் உருக்கொண்ட சரிதைகள் வரையப் பட்டுள்ளன. மிகப் பல வீரர்களின் தீரச்செயல்களும் பலதிறப்பட்ட மன்னர்களின் பெருமைகளும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பெற்றுள்ளன. முதன் முதல் சிறுகத் தோன்றிப் பலநூறு ஆண்டுகளாகப் படிப்படியே உன்னதம் பெற்ற மகத்தான ஸ்தாபனங்களின் பெருமைகளை எல்லா நாடுகளும் நன்கறியும். இன்றோ நமது ஸ்தாபனம் உருக்கொள்ளுகின்றது. சரித்திர வல்லோர், ஏடும் எழுதுகோலும் கையுமாக இங்குக் காட்சியளிக்கின்றனர். அறிவு ஆற்றல் மிகுந்த தேசாபிமானிகளாகிய அங்கத்தினர்களின் பேருதவியால் அசையா அடிப்படையின் மீது அமைக்கப்படும் பல அடுக்குகளைக் கொண்ட இச் சபையாகிய தேசீய உப்பரிகை - நமது இந்திய பார்லிமெண்டு மகாசபை - வானளாவ உயர்தற்கு நமது இந்தியத்தாய் முன்னின்று நமக்கு நல்வழி காட்டி ஆசீர்வதிப்பாளாக! நாம் அனைவரும் நமது அன்னையைப் போற்றி வணங்கி ஒற்றுமை பெற்று உறுதியுடன் ஒரே சமுதாயமாக வாழ்வோமாக!"

[ஐக்கியபதி ஆபிரகாம் லின்கன் பேச்சுக்குப் பின்னிடாத இப்பேருரையைச் சுருக்கி வெளியிட்டு இப்புத்தகத்தின் குறையீடு பின்னர்க் களையப்பெற்றது.]

சேர்க்கைகள்

சேர்க்கை—1

முதுமொழிக் கோவை

பல நாவலரின் கருத்துக்கள்

இப்பகுதியின்கண் மேடைப்பேச்சைக் குறித்த மேனாட்டு நாவலர்களின் கருத்துக்களும், நம்நாட்டுப் பெரியார்களின் கருத்துக்களும் உள்ளன. மேடைப்பேச்சாளர்கட்குப் பெரிதும் பயனளிப்பனவாதல் பற்றி, அவை திரட்டி ஈங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. "உப்பிட்ட உணவுபோல் உன் பேச்சு எப்பொழுதும் அருட்சுவை மலிந்து இருக்கட்டும்." —செயிண்ட் பால் (St. Paul)

* * *

2. "நீ வார்த்தைகளுக்காக அலையவேண்டாம். பேசும் செய்தியின் நுட்பங்களையும், கருத்துக்களையும் தேடிப் பார். அப்போது நீ தேடாமலே வார்த்தைஅலைகள் உன்னிடமிருந்து வெளிப்படும்."

—ஹோரேஸ்

* * *

3. "ஒன்றைக் குறித்து எண்ணமிடுவது சுலபம்; அதைச் செயலுக்குக் கொண்டுவருதல் கடினம். எண்ணுவதுபோல் பேசுவதும் ஒத்து நடப்பதும் உலகத்தில் மிகக் கடின காரியங்களாம்." —கெத்தே

* * *

4. "உயிரற்ற, விறுவிறுப்பற்ற வார்த்தையில் மற்றவர்கள் பேசினால், ஒரு நல்ல பேச்சாளர் அதே பேச்சை ஆணித்தரமாகவும் அலங்காரமாக்வும் பேசுவார்." —சிசரோ

* * *

5. "உணர்ச்சி பாவமே சொற்சுவைக்கு அடிப்படை. ஏதுமறியாதவன் கண்களைக் காட்டிலும், செவிகள் மிகக் கூர்மையானவை."

—வில்லியம் ஷேக்ஸ்பியர்

* * *

6. "மன உரமே வெற்றிக்கு வித்தாகும். திருந்தச் சொல்; திருந்தச் செய்." —போனபார்ட் நெப்போலியன்

* * *

7. " பேசுங்கால் எக்காலத்தும் ஊக்கமிழவாதே. ஆயினும் நீ தொடங்கியது நன்கு முற்றுப்பெறவேண்டு மென்பதற்காகச் சோர்வு காட்டல் குற்றமன்று. "

—எட்மண்டு பர்க்

* * *

8. " நீ நன்கு உணராத ஒன்றைப் பிறருக்கு உணர்த்தப் புகுதல் நகைப்பிற் கிடமாம். உன் மனதில் ஒரு காரியத்தைத் தெளிவாகத் தரித்திருந்தால், பிறர் மனதிலும் அதை அவ்வாறே நன்கு பதியச் செய்யலாம். "

—பைரன்

* * *

9. " ஊக்கத்துடன் உரைக்கப்படுவனவெல்லாம் உண்மையாக மாட்டா. நீதியென வலியுறுத்தப்படுபவை எப்போதும் நீதிநெறி பற்றியும் இரா. எக்காலத்தும் மனச்சான்றுடன் மொழிதலே உண்மை, நீதி எனப்படுபவையாம். "

—டிஸ்ரலி

* * *

10. " பாராளுமன்றத்தைவிடப் பேச்சாளருக்குப் பயங்கரமான இடம் உலகில் வேறில்லை. "

—லார்டு மெக்காலே

* * *

11. "ஆண்மைக்கு மேடைத்தைரியமே சிறந்தஅணிகலனாகும்."

—டானியல் வெப்ஸ்டர்

* * *

12. " எனது பேச்சுத்திறனைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. எங்கள் நாட்டுப் பூர்வகலாச்சாரம், பண்டைய நாகரிகம் ஆகியவை வழிவழியே என் இரத்தத்தில் கலந்திருக்கலாம். "

—மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரிகள்

* * *

13. " பயத்தின் ஆலோசனையைக் கேட்டு எந்நாளிலும் மேடையிற் பேசப் புகாதே. "

—ஸ்டோன்வெல் ஜாக்ஸன்

* * *

14. "எத்துணைக் கடின காரியமாயினும் அதைச்செய்து அல்லது பேசி முடிவுகாணுவோம் எனும் மனோதைரியத்துடன் ஆரம்பித்தால், அப்பொழுதே அதைச் செய்து முடித்தவராவோம். ஓர் எளிய காரியமும், செய்துமுடிக்க முடியா தென்ற எண்ணத்துடன் முயன்றால் முற்றுப்பெறுவது கடினமாம். கரையான் புற்றுக்களும்கூட ஏற முடியாத பெருமலைகளாகிவிடும். "

—எமிலி கௌ

* * *

15. " சுயநம்பிக்கை கொண்டு உன் வேலையில் முழுமனதுடன் முயன்றால், அதுவே நூற்றுக்குத் தொண்ணூறு பாகம் வெற்றிக்கு அடிகோலியதாகும். "
—தாமஸ் இ. வில்ஸன்

*　　*　　*

16. " சபையில் பயன்படு முறையில் பேசும் வன்மை, ஒருவர் தாமேமுயன்று பெற்ற செல்வமல்லால், கடவுளின் கொடையன்று. "
—வில்லியம் ஜென்னிங் ஸ்பிரையான்

*　　*　　*

17. "தமது சொந்த கௌரவத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமானால், தாம் ஒரு படித்த அறிவாளியாகவும், பிறருக்கு ஆலோசகராகவும் இருப்பதிலும், சொல்திறம் உடையராயிருத்தல் மேலாம். அது எவ்வழியிலும் லாபந்தரும். "
—லண்டன் 'டெயிலி டெலிகிராப்'

*　　*　　*

18. " ஒரு சிறு தவறும் நேராதவாறு, பேசவேண்டிய செய்தியை நன்கு தயாரித்துக்கொண்டால், அதுவே ஒருவர் சுயநம்பிக்கை பெறும் நல்வழியாம். "
—லாக்வுட் தார்ப்

*　　*　　*

19. " ஒரு பேச்சாளர் சபையில் பேசுமுன் தாம் இன்னின்னவற்றைக் குறித்துப் பேசப் போவதாகத் தமது நண்பர் ஒருவருக்கு முடங்கல் தீட்டுதல்போல் எழுதிப் பார்த்தல் வேண்டும். தாம் பேச விரும்புகிற ஒழுங்குப்பாட்டில் எழுதுதல் நன்று. அவ்வாறு எழுதிய கடிதம் திருப்தியளிக்காவிடின், தம்மைப் பேச அழைத்த அச்சபைக்குத் தமது பாட்டி இறந்துவிட்டாள் என்று ஒரு சாக்குச் சொல்லி வரமுடியாதென எழுதி விடுவதே நலம். "
—எட்வார்ட் எவரெட் ஹேல்

*　　*　　*

20. " என்னை எல்லோரும் பேச்சில் ஒரு நிபுணனெனப் பாராட்டுகின்றனர். என்னிடமுள்ள நிபுணத்துவம் இதுவாம். நான் பேச வேண்டிய செய்தியை முதற்கண் ஆழ்ந்து கவனிப்பேன். இரவும் பகலும் அஃது என் கண்முன் நிற்கும். அதைப் பல நிலைகளினின்றும் நோக்கி ஆராய்வேன். அவ்வெண்ணமே என் மனம் முழுவதும் வியாபித்திருக்கும். இவைகளின் விளைவைத்தான் எனதன்பர்கள் 'நிபுணத்துவம்' என்று அன்புடன் அழைக்கின்றனர். உழைப்பு, ஆழ்ந்து யோசித்தல் ஆகிய இரு சக்திகளின் மூலம் அடையும் பலனே அது. "
—அலெக்சாண்டர் ஹாமில்டன்

*　　*　　*

21. "என்னிடம் இரகசியம் ஏதுமில்லை. நான் ஒரு பொருள் பற்றிப் பேச விரும்பினால், ஒரு பெரிய காகித உறையின் மேற்புறத்தில் அந்தச் செய்தியின் தலைப்பைக் குறிப்பேன். அதுபோன்ற பல உறைகள் என்னிடம் உண்டு. நான் ஏதேனும் ஒன்றைப் படிக்கும்போது என் பேச்சை யொட்டிய ருசிகரமானவை தென்பட்டால், அவைகளை எழுதிச் சம்பந்தப்பட்ட உறைகளில் இட்டுவைப்பேன். அவை இரண்டொரு ஆண்டுகள்கூட அவ்வுறைகளில் கிடக்கும். நான் ஏதேனும் ஒன்றைக் குறித்துப் பேசவேண்டின் அந்த உறையில் உள்ளவற்றை எடுத்துப் பார்ப்பேன். அதற்கிடையில் நான் ஆலோசித்து முடிவுகட்டிய சங்கதிகளையும் அவைகளுடன் கூட்டிக்கொள்வேன். எனவே, என் பேச்சுக்கள் எப்பொழுதும் புதியனவாகவும், கருத்துக்கள் நிறைந்தனவாகவும் திகழும்." —டுவைட் எல். மூடி

* * *

22. "முட்டைமீது கோழி அடைகாத்தல்போல், நீவிர் பேச எடுத்துக்கொண்ட பேச்சுப் பொருளில் மனங்குவிந்து இருத்தல் வேண்டும். குவிந்த மனம் அப்போது செலுத்தப்படும் இடங்களுக்கெல்லாம் விரைந்துசெல்லும் இயல்புடையதாகும். அதன் விளைவாக அருமையான கருத்துக்கள் என்னும் குஞ்சுகள் துள்ளி விளையாடும். நீவிர் ஒரு ஞாயிற்றுக்கிழமை பேசவிருந்து, சனிக்கிழமை பிற்பகல் வரை அதைக் குறித்து எண்ணங்கொள்ளாதிருந்தால், தோல்வி என்னும் படுகுழியில் தள்ளப்படுவீர் என்பது திண்ணம்."

—டாக்டர் சார்லஸ் ரெனல்டு பிரெளன்

* * *

23. "பேசும் விவகாரங்களின் முக்கிய அம்சங்களைப் பாகுபாடு செய்துவைத்திருப்பது அறிவாளிகளின் கடமை. அதுவே படித்தவர்கட்கும் படியாதவர்கட்குமுள்ள பெரும் வித்தியாசமாகும். கல்லூரியில் கற்ற கல்வியையும், பெற்ற அறிவையும் அது சந்தேகமற எடுத்துக்காட்டுவதாம்." —ஜான் கிரியர் ஹிப்பன்

* * *

24. "ஒருவர் தாம் பேசவேண்டிய செய்தியைப் பேச்சுருவாகச் செய்து, சபைமுன் பேசுவதுபோலவே பாவித்துச் சுருக்கெழுத்து எழுதுவித்தால், அது தமது பேச்சை நன்கு தயாரித்ததாகவும், முற்கூட்டிப் பழக்கம் செய்துகொண்ட சிறந்த முறையாகவும் முடியும்."

—சர். ஒலிவர் லாட்ஜ்

* * *

25. "நமது நாட்டில் தாய்மொழிப்பேச்சுக்குள்ள அல்லலுக்குக் காரணம், தாய்மொழியின் சுருக்கெழுத்துப் பயிற்சி, இன்னும் முற்றும் வளம் பெறாமையேயாகும். தமிழ்ப்பத்திரிகை நிருபர்கள் தமிழ்ச் சுருக்கெழுத்துப் பயில்வதில்லையாதலால், புதினத்தாள்களில் வரும் வாய்ப் பேச்சு, பேசுவோர் கருத்து, மொழிநயம் என்னும் உடையிழந்து தமிழ்க்கொலையாக முடிகின்றது. தமிழ்ப்புலமையுடன் தமிழ்ச் சுருக்கெழுத்தும் வித்வான் தேர்வுகளில் கட்டாய பாடமாகப் போதிக்கப் படின், அது தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்ததாகும். இதுவே, இந்நாள் தமிழ்ப் பேச்சு வளர்ச்சிக்கு வித்தாகும்." —திரு. வி. க.

* * *

26. "ஏதேனும் ஒரு முக்கிய காரியத்தைப் பற்றி நான் பேச விரும்பினால், சபையோர் மனதில் எதை அழுந்தச் சொல்ல வேண்டு மென்பது குறித்து ஆலோசிப்பேன். பேசும் செய்தியையோ, அல்லது விவகாரத்தையோ முழுவதும் எழுதுவதில்லை. ஆனால், முக்கியமான கருத்துக்களின் தலைப்புக்களைச் சிறு துண்டுக் காகிதங்களில் எழுதி வைத்துக் கொள்வேன். அப்படிப் பேசும்போது தக்க வார்த்தைகளும் வாக்கியங்களும் தாமே வந்தமையும். எந்த வாக்கியம் பிழையின்றி இருக்க வேண்டுமோ, அதை மட்டும் முழுதும் எழுதிப் பார்ப்பதுண்டு. ஆனால், என் முடிவுரையை அல்லது முடிக்கும் வாக்கியத் தொடர்களை எப்பொழுதும் எழுத்தெண்ணி முற்றிலும் எழுதிப்பார்ப்பது வழக்கம்." —ஜான் பிரைட்

* * *

27. "நானும் சார்லி சாப்பிளினும் அன்றாடம் ஒன்றாக ஊண் கொள்வோம். ஒருநாள் நாங்களிருவருமே தனிமையில் சாப்பிடும் போது, சார்லி சாப்ளினை மற்றொரு விருந்தாளிக்கு அறிமுகப் படுத்துவதுபோல் வேடிக்கையாகப் பேசினேன். பாவம், அவர் அதற்குப் பதில் கூற வேண்டியதாயிற்று! அன்று முதல் சாப்பிடுவதற்குமுன் ஏதேனும் ஒன்றைக் குறித்து அறுபது நிமிடம் பேசுவதென முடிவு கட்டிக் கொண்டோம். பேசும் செய்திகளை எழுதிச் சீட்டுப்போட்டு எடுப்போம். அவைகளில் இரண்டு காரியங்களைத் தேர்ந்து நானும் அவரும் பேசுவோம். இவ்வழியே இரண்டு ஆண்டுகள் உழைத்துப் பேசும் வன்மையைப் பெருக்கி வருகிறோம்." —டக்ளாஸ் பேர்பாங்க்ஸ்

* * *

28. "சொற் சுவையின் முக்கிய அங்கம் யோக்கியப் பொறுப் பாகும். நமக்கு உண்மை உணர்ச்சி இல்லையானால், பிறருக்கு நாம் அதை உண்டாக்க முடியாது." —ஹாஸ்லிட்

29. "நான் எந்த மேடையிலும், எந்தச் சமயத்திலும் மனந் தளர்வடைய இடந்தருவதில்லை. ஒரு காரியத்தைச் சாதிக்க முதலாவது வேண்டப்படுவது கடின உழைப்பு; இரண்டாவது, தொடர்ந்து ஊடாடுதல்; மூன்றாவது, பகுத்தறிவு." —தாமஸ் ஆல்வாய் எடிசன்

* * *

30. "பேச்சில் வெற்றியடையலாமென நம்புகிறவர்கள் வெற்றியை அடைகிறார்கள். ஏதேனும் ஓர் அச்சத்தைத் தினந்தோறும் போக்காதவர் வாழ்நாளின் மர்மத்தைக் கண்டவர் ஆகார். பேச்சுப் பொருளின் நுட்பங்களை முதலில் நன்குணர்ந்துகொள்; பின்னர் அதைத் தழுவிநில்; அப்பொழுது உனது உண்மை உணர்ச்சி செம்மையாக வெம்மைபெற்று வெளிப்படும்." —எமர்சன்

* * *

31. "பேச விரும்பும் காரியத்தில் வைத்துள்ள பேராவலே ஒரு பேச்சாளரைக் காப்பாற்றவல்லது. நல்ல முடிவைப்பெற நீ விரும்பினால் அது வந்தெய்தும். நீ சீமானாக வேண்டுமென்று விரும்பி உழைத்தால் சீமானாவாய்; நீ ஒரு கலைஞனாகத் திகழ விரும்பின், அங்ஙனமே ஆவாய்; நீ ஒரு குணவந்தனாக இருக்க முயன்றால் அது கைகூடும். ஆயினும், ஒரு நூறு காரியங்களைக் குறித்து ஒரே காலத்தில் எண்ணமிடாமல், ஒன்றைப் பற்றியே சதா சிந்தைசேர்ந்து நிற்றல் வேண்டும்."

—பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ்

* * *

32. "உன் மனமே உனக்கு அறிவுறுத்தட்டும். உன் நாவில் அது நிற்கட்டும். அதைவிட ஆப்தமானது உனக்கு வேறில்லை. உன்னைப் பாதுகாக்கும் வேறு உண்மை மெய்க்காப்பு உலகில் காண்பதற்கில்லை." —கிப்ளிங்

* * *

33. "நான் முதற்கண் சபையில் பேச எழுந்து நின்றபோது என் வாயில் பஞ்சைத் திணித்து அடைத்தது போலிருந்தது. என்னுடைய நாடிகள் பந்தயக் குதிரையோட்டம்போல் பட பட வெனத் துடித்தன." —மார்க் டுவைன்

* * *

34. "நான் இன்று பிரான்ஸ் தேசத்தில் ஒரு பெரிய பேச்சாளி என்பது உண்மையே. ஆனால் என் கன்னிப் பேச்சுக்குமுன் ஒரு வருடம் ஊமை போலிருந்தேன். பின்னரே பேசத் தைரியம் பெற்

றேன். பேசத் துணிவுகொள்ளுமுன் கருத்துக்களை மனத்தின்கண் திரட்டிவைத்தல் வெற்றிகாணும் வழியாம்." —ஜீன் ஜாரஸ்

* * *

35. "நீங்கள் எதைச் சொல்ல விரும்புகிறீர்களோ அதை அப்படியே எழுதி, ஆஸ்திரேலியாவுக்கு, உங்கள் செலவில் தந்தி கொடுப்பதாகப் பாவியுங்கள். வார்த்தை ஒன்றுக்கு ஐந்து ஷில்லிங் கட்டணம் கொடுக்க யோக்கியதையற்ற வார்த்தைகளை நீக்குங்கள். மிச்சப்படும் வார்த்தைகளே நீங்கள் பேசத்தக்கவையாம்."

—டபிள்யூ. டி. ஸ்டெட்

* * *

36. "யுத்த களத்தில் தற்காப்பெனப்படுவது, தமது சொந்த எதிர்ப்பாகும். ஆகையால் சபையில் பேசுவதற்கு முன், உன் கோழைத் தனம் என்னும் பயத்திற்கு எதிர்ப்பை நீயே உண்டாக்கிக்கொள்."

—மார்ஷல் பாக்

* * *

37. "எல்லோரும் ஒத்துக்கொள்ளுமாறு பேசும் வன்மை பெறுவதை விட, ஒருவர் பெறும் அரிய சம்பத்து உலகில் வேறு இல்லை." —சான்ஸி. எம். டெப்யூ

* * *

38. "நான் ஒரு யுத்த வீரன் என்பது மெய்தான். ஆயினும் முதல் தடவை பேச எத்தனித்தபோது, என் முழங்கால்கள் உதறி ஒன்றோடொன்று மோதிக் கொண்டன."

—வில்லியம் ஜென்னிங்ஸ் பிரையான்

* * *

39. "நான் கோடி கோடியாகப் பணம் சம்பாதித்து மென்? பெரிய முதலாளி எனப்படுவதிலும், நான் ஒரு பெரிய பேச்சாளி என்ற பெயர் வாங்கினல் போதுமே!" —பிலிப். டி. ஆர்மர்

* * *

40. "ஒருவர் கருத்தை மற்றவருக்கு நயமாக உரைக்கப் புகுவோருக்குக் கல்வி, ஆராய்ச்சி, உயர்குடிப் பிறப்பு, சொல் வன்மை, மனத்திண்மை, கம்பீரத்தோற்றம், அஞ்சாமை முதலியன இன்றியமையாதவைகளாம்." —பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார்

* * *

41. "ஒருவர் பேச்சினல் உலகத்தைக் கட்டுப் படுத்தும் காலம் இன்றுபோல் என்றும் இருந்ததில்லை. ஒருவருக்கு அஃது இன்றியமை

யாத சம்பத்து என்றும், புகழுக்குரிய ஒரு தெய்வீகச் சக்தி என்றும், மிக உபயோகமான கருவி யென்றும் உலகெங்கும் மதிக்கப்படுவதாம்."

—லார்டு கர்ஸன்

* * *

42. "ஒருவர் கருத்தை நன்கு வெளியிடுதற்கு 'மொழி' ஒரு இடையூறுதான். சைகையால் கருத்தை விளக்கி விடுவது மிகச்சுலபம். ஓர் அறையினின்றும் ஒருவரை வெளிக் கடத்த வேண்டுமானல், வாயிலைச் சுட்டிக் காட்டினுல் போதுமன்றோ? வாயின்மீது ஒரு விரலை வைத்துக்காட்டி ஒருவரைப் பேசாமற் செய்து விடலாம். விரலின் சைகையால் ஒருவரை அருகே அழைக்க இயலுமன்றோ? கண்களை யிரண்டு திறந்தால் ஆச்சரியத்தை உணர்த்தலாமன்றோ? நாம் நம் தோள்களைக் குலுக்கிக் காட்டும் உணர்ச்சியை வார்த்தைகளால் நன்கு விளக்குதல் கூடுமோ? இவ்வுணர்ச்சிகளனைத்தையும் ஒருவர் பேச்சில் புகுத்துவதே நாவன்மையாம்." —ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்

* * *

43. "நாடு முழுதும் சொற்பொழிவுகள், மாநாடுகள், பெருங் கூட்டங்கள் முதலியவை மிகுந்து நடைபெறும் இவ்வேளை, நமது தமிழ் உரையாளர்கள், ஒரு பொருளை எடுத்துப் பேசுவதற்கு முன்பே, அதனை நன்கு ஆராய்ந்து, பலவிதங்களாகப் பாகுபாடு செய்து ஒழுங்கு படுத்திக்கொண்டு பேசித் தங்களை மேன்மைப் படுத்திக்கொள்வது சிறந்த பண்பாகும்."

—இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்

* * *

44. "ஒரு சிறந்த பேச்சாளர் சிறிய கூட்டத்தில் பேசுவதை விட, ஒரு நிறைந்த சபையில் பேசுவது மிக உற்சாகம் அளிக்குமென் பது பலர் கருத்தாகும். ஆயினும், நான் ஒரு பெரிய சபையில் பேசும் உற்சாகத்துடனே பன்னிருவர் கொண்ட ஒரு சிறு கூட்டத்திலும் பேசுவேன். ஆனல் அப்பன்னிருவரும் மூலைக்கொருவராய் உட்கார்ந் திராமல், என்னருகில் ஒருவரை யொருவர் தொட்டுக்கொண்டு நெருங்கி யிருத்தல் வேண்டும்." —ஹென்றி வார்ட் பீச்சர்

* * *

45. "பல பேருடன் உன்னையும் பேசக் குறிப்பிட்டிருந்தால், உன் பேச்சின் எடுத்தலையும், முடித்தலையும் நன்கு கவனித்தல்

வேண்டும். இடைப்பாகத்தை எவ்வாறாயினும் திணித்து உருப்படுத்தி விடலாம்."
—விக்டர் மர்டாக்

* * *

46. "மக்களின் நாகரிக நிலையைத் தேர்ந்தறிய வழிகள் பலவுண்டு. அவற்றுள் தலைசிறந்தது, பிறர் பேச்சில் வெளியிடும் கருத்துக்களில் ஒவ்வொன்றையும், மக்கள் எவ்வெவ்வாறு சுவைக்கின்றார்களென்பதைக் கண்டறிவதேயாகும்."
—சுவாமி சண்முகானந்தர்

* * *

47. " ஒருவர் தமது வாழ்நாள் பயணத்தில் வெற்றிபெறுவதின் இரகசியம் ஒன்றிருக்கிறது. அது பிறமக்களின் மனதைத் தன் மனதிற்கு இசையச் செய்யும் சக்தியாகும். இதனை அடையப் பெற்றோர் பிரபல நியாயவாதிகளாகவும், அரசியல் வாதிகளாகவும், போதகாசிரியர்களாகவும், பெரிய வர்த்தகர்களாகவும், போற்றத்தக்க பேச்சாளர்களாகவும் விளங்குவர்."
—டாக்டர் பிராங்க்கிரேன்

* * *

48. "இந் நாட்டில் பெண்கள் நிலைமைமிகக் கடைப்பட்டிருப்பது கண்கூடு. மேடைப் பேச்சின் வழியே மேனாட்டுப் பெண்மக்கள் நிலைமை, பல துறைகளில் சிலவாண்டுகட்குள் உயர்ந்து விட்டது. இந் நாட்டுப் பெண்மக்கள் அவ்வழியே தங்களை உயர்த்திக்கொண்டு நாட்டுக்குச் சகோதரிகளாகவும், வீட்டுக்கு நற்றாய்களாகவும் விளங்கல் வேண்டும்."—பண்டிதை. கா. அலர்மேல் மங்கைத்தாயார் அம்மையார்

* * *

49. "பேசுவதற்கு ஏதேனும் நல்ல சரக்கை ஒருவர் கைவசம் வைத்திருத்தல்வேண்டும். 'சரக்கில்லாமல் இவர் பேசப் புகார்' என்று ஒருவர் கருதப்பெற்றால், அவர் பேச்சு சபையில் நன்கு எடுபடும். ஒரு பேச்சாளர் எதிரிகளால் ஏளனம் செய்யப்பட்டால், அதற்குக் கடுமையான பதிலும், கடுமையாகத் தாக்கப்பட்டால், பரிகாசமான பதிலும் கொடுத்தல் முறையாம். ஆனால் எக்காரணம் பற்றியும் மனச் சோர்வு அடைதல் கூடாது."
—லார்டு பிரைஸ்

* * *

50. உலகில் பரந்துகிடக்கும் இலக்கியங்களில் சில நல்ல இலக்கியங்களை ஆய்ந்தெடுத்து அவைகளில் மூழ்கித் தோய்ந்து படியுங்கள். அப்பொழுது வார்த்தைகள்—அழுத்தமான வார்த்தைகள்—தெளிவும்

அலங்காரமும் பொருந்திய வார்த்தைகள்—உங்கள் பேச்சுக்கு நிச்சயமாகவே கிடைக்கும். —டாக்டர் வின்ஹொரால்டு ஹோ

* * *

51. பொருளாழம், தெய்வப் புலமை, மனக்காட்சி, சுவையுணர்வு, ஆராய்ச்சி, உணர்ச்சி, மெய்யறிவு உயர்நிலை, தனிப்பட்ட தன்னுணர்வு, இயற்கைநிலை, அறிவுநிலை, புனைந்துரை நேர்மை, எளிமை, உருப்படும். மனஇளக்கம், நுட்பம், செய்திறம், கொழுமை, பல்வகைப்பான்மை, அழகு, ஊற்றெனச் சுரக்கும் மாறாச் சொற்றிறம், குளிர்ச்சி, இந்திர ஜாலம், மனக்கவர்ச்சி, சாயல், ஆற்றல், நுண்ணிய நோக்கம், பேரறிவு, வளப்பமான படிப்பினை, சீரியபோக்கு, நாகரிகம், இனிமை, மேன்மை, தவறாப் பெருநிலை, தெளிவு, உரைவளம், ஒத்திசை, மின்னெனப் பொலியும் விளக்கம், தங்கு தடையற்ற பேச்சு ஓட்டம், பொலிவு, கழிவிரக்கம், மேம்பாடு, முழுமைக் காட்சி, குறைவிலா நிறைவு இவைகளை ஒருங்கே காணவேண்டுமானால் வால்டேர் (Voltaire) எனும் பெரியாரிடம் காணுங்கள்."

—ஈ. த. பத்மாவதி அம்மையார், எம். ஏ., எல். டி

* * *

52. மேடைப் பேச்சு ஒரு வெறும் வித்தை; கற்றதைக் காட்டல். நாவன்மையோ, சொன்மாரி; வார்த்தைச் சித்திரம்; அருங்கலை; அருட்பேறு; செல்வத்திற்கெல்லாம் தலையாய செல்வம்.

—தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்

* * *

53. ஒரு பேச்சாளரின் வார்த்தை உச்சரிப்புக் கொச்சையாக இருந்தால், கேட்போர் காதுகளும் மனமும் அருவருக்கும். அவருக்குப் போதிய கல்வித் திறனும், உயர்வாழ்க்கைக்குரிய நாகரிகமும் இல்லையென்பது பெறப்படும். —டப்ளியூ. எச். பி. பைப்

* * *

54. பீதியடைந்த கண்களுடன் வருங்காலத்தை ஒரு பேச்சாளர் நோக்குவது கோழைத்தனமாம். மனத்திடம், நூதன உலகங்களை உண்டாக்கவல்லது. "மனம்போல் வாழ்வு" எனும் மூதுரையை ஒரு பேச்சாளர் மனதில் தரித்திருத்தல் சாலச் சிறப்புடைத்தாம். —இ. எச். ஹாரிமான்

* * *

55. தமிழ்ச் சொற்பொழிவாளர்களும், நூல் நிலையங்களும் தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஊர்களிலுங் காணப்படுதல் வேண்டும். அது தமிழின் நிலைபேற்றிற்கு இன்றியமையாததாகும். கோயில்கள் முதலிய பொது நிலையங்களெங்கும் நூற்கோவை அமைக்கப் பெற்று, சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றால் இலவசக் கல்வி பொது நன் மக்களுக்குக் கிட்டுவதாகும்.

—பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்

* * *

56. பேராசிரியர் பெர்னார்ட்ஷா, ஆக்ஸ்போர்டு யூனிவர்சிட்டியையும் கேம்பிரிட்ஜ் யூனிவர்சிட்டியையும் ரொம்ப ரொம்பக் கண்டித்துப் பேசுகிறார். அந்த யூனிவர்சிட்டிகளில் கற்பதெல்லாம் புஸ்தகத்தை வைத்துத்தான், விஷயங்களை நேர்முகமாக வைத்தல்ல; பேச்சினாலும் அல்ல. அது காரணமாகக் கற்பன யாவும் பிரயோசனமற்றவை என்று பெரும் புகார் செய்கிறார்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்

* * *

57. பொது மேடைப் பேச்சுக்களில் பிறர்மீது புகார் கூறாதே; சிறிய காரியத்தை மிகவிரித்துப் பேசப் புகாதே. —டிஸ்ரலி

* * *

58. பொதுமக்கள் ஈண்டியுள்ள கூட்டங்களில் உன்னைத் தற்காத்துக்கொள்ளும் முறையில் பேசாதே; ஆனால் எதிர்ப்புக்கு ஆணித்தரமான பதில் கூறுதல் முறை. உனது எதிர்ப்பைச் சுவைக்கும் மக்கள் உன்மீதுள்ள குற்றங்களை மறப்பரென்பது உறுதி.

—கிளாட்ஸ்டன்

* * *

59. அரசியல் விவகாரங்களில் ஈடுபடுவோர் மாட்டும், பதவிகளுக்கு ஆசிப்போரிடத்தும், மேடைகளில் குற்றம் பாராட்டுவோர் பாலும் மனச்சான்று, உள்ளன்பு, நேசம் ஆகியனவற்றைக் காண்டல் அரிது. —சிசரோ.

சேர்க்கை—2

மேனாட்டு நாவலர் சிலரின் மாதிரிச் சொற்பொழிவுகள்

மேனாட்டு நாவலரின் சில அரிய சொற்பொழிவுகள்—அவற்றின் நயங்களை மேடைப் பேச்சாளர் வாசித்துணருமாறு தமிழில் வடித்துத் தரப்பெற்றுள்ளன.


மகாகனம் கிளாட்ஸ்டன்

1. இங்கிலாந்து தேசத்தின் பிரதமரான மகாகனம் வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்டன், அயர்லாந்து தேசத்தின் பூர்வ சரிதையைக்கூறி, அதன் அரசியல் கிளர்ச்சிபற்றிப் பேசிய பெரும் பேச்சின் புகழ்பெற்ற முடிவுரை.

" கனவான்களே! அயர்லாந்தில் இனி ஏற்படும் அரசியல் சண்டமாருதங்கட்கு, முன் வீசிய புயல்காற்றுகள் இணையாகா. ஐரிஷ் மக்களின் மனதைச் சோதித்தறிந்தால், ஒரு மாபெரும் சண்டமாருதத்தை நிச்சயமாகவே விரைவில் எதிர்பார்க்கலாம். இது குறித்து அந்நிய மதத்தையொட்டிய ஓர் அழகிய பழங்கதை என் நினைவிற்கு வருகின்றது. மதப்பற்றுள்ள கட்டுக்கதைகளில் பொய்யும், ஆபாசமான கற்பனைக் கூற்றுக்களும் மலிந்திருப்பது இயல்பு. ஆயினும், அவைகளில் சில சுவையுள்ளனவாகவும், நீதிக்கதைகளாகவும் இருக்கும். நினைவு கடந்த ஒரு காலத்தே, 'காஸ்டர்', 'போலக்ஸ்' எனும் இரு சுத்த வீரர்கள் லாஸ்டிமோனியாவில் வதிந்திருந்தனர். அவர்கள் இருந்தபோது அதிகக் கீர்த்தியையும், இறந்த பின்னர் அதினும் மிக்க கீர்த்தியையும் பெற்று, இறந்து பட்டும், இன்றும் உயிருடன் இருக்கின்றனர். *ஆகாயத்தில் துலங்கும் ஒரு நட்சத்திரத்தை மக்கள் அவர்கள் பெயரால் அழைக்கலாயினர். பற்பல கற்பனையான எண்ணங்களையும், ஆழ்ந்த நம்பிக்கையையும் மக்கள் அந்நட்சத்திரத்தின்மீது அன்பு

---

* இற்றைக்குச் சுமார் பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தவராகக் கூறப்படும் அகத்திய முனிவர் பெயரால் ஒரு நட்சத்திரம் இந்நாட்டில் உண்டு. அது தோன்றுமாயின் சமுத்திர அலைகள் ஒடுங்கும். இஃது அவர் கடல் குடித்த பெருமாட்சிமைக்கு ஓரறிகுறியாகக் கொள்ளத் தக்கதாம்.



1. ஐக்கியபதி ஆபிரகாம் லின்கன், 2. (டிஸ்ரலி) லார்டு பீக்கன்ஸ் பீல்டு, 3. வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்டன், 4. வின்ஸ்டன் சர்ச்சில், 5. ஜியார்ஜ் பர்னார்டு ஷா.

டன் வைக்கலாயினர். ஒரு கப்பல் புயற்காற்றினுல் திசை தப்பியகாலே, மாலுமிகளும் திகிலடையும்போது - நம்பிக்கையனைத்தையும் கைவிட்டு வினைப்பயனை நொந்துகொள்ளும்போது - விசும்பில் விண்மீன்தென்படு மேல், அது, கார்மேகங்கள் மாறி, கடும்புயல்கள் ஓய்ந்து, சமுத்திரத்தின் அலைகள் சாந்தமடைந்து, எதிர்பார்த்த பேராபத்துக்குப் பதிலாக அக் கப்பல் குதூகலமாகக் குறித்த துறைமுகத்துக்கு வந்து சேருமென் பதற்கு அறிகுறியாம். இங்கிலாந்து தேசத்தில் தாராளச் சிந்தை கொண்ட ஒரு சாரார் 1880-ம் ஆண்டு பார்லிமெண்டு மகா சபையில் அயர்லாந்து தேசத்தைக் குறித்து வரையறுத்துள்ள கொள்கைகளை, இதுபோழ்து செயலளவுக்கு நாம் கொண்டுவந்தால், அந்நாட்டுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நேசப்பான்மையும் அமைதியும் நிலவும். அந்நட்சத்திரம், கப்பல்களுக்கும் கப்பற் சனங்களுக்கும் உதவுதல் போல், நமக்கும் நமது நாட்டுக்கும் பெருந்துணைபுரிவதாகும். "

* * *

2. அயர்லாந்து தேசத்தின் சுயஆட்சியைக் குறித்துப் பார்லிமெண்டு மகா சபையில் கிளாட்ஸ்டன் பேசிய பேச்சின் முடிவுரை :

" என் உள்ளத்தை உள்ளபடியே உறுத்தி வருத்துவது இஃதொன்றுதான். நமது தேசம் பல தலைமுறைகளாக எவ்வண்ணம் படிப்படியே வளர்ச்சி பெற்றுவருகின்றதென்பதை ஆராய்ந்து, வருங் காலத்திய சரிதைவாணர் இன்றுள்ள ஆட்சியைப் பதிவுசெய்வரேல், நமது தேச சரித்திரத்தில் 'அபகீர்த்தி' எனும் ஒரு தனிப்படலத்தை வகுத்து, அதன்கண் நாம் அயர்லாந்து தேசத்தை நடத்திவரும் படுமோசத்தை விளக்குவரென்பது உறுதி. அந்நாட்டுக்கும், நமக்கு மிடையே போராட்டம் ஒன்று நிகழுமானுல், அதனை நியாயம், சமத் துவம் எனும் திராசுத் தட்டுகளிலிட்டுத் தீர்மானித்தல் மிக வேண்டப்படுவதாம். நமது நாட்டார் அயர்லாந்து மக்களிடம் நீதி நெறியுடன் நடந்துகொள்ளவில்லையென இச்சபையில் நான் இவ்வேளை ருசுப்படுத்தப் புகின், ஐரிஷ்மக்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கைப் பற்ற ஒரு காலத்தில் முயல்வாராயின், அதற்கு நான் மிக உதவிபுரிந்து அவர்கள் கையில் இன்றே கொள்ளிகொடுத்தவனுவேன். ஆதலின், ஆங்கிலேய மக்கள் எத்துணை சனப்பெருக்கமும், பணப்பெருக்கமும், சரித்திரப்பெருமையும் பெற்றுள்ளனரோ அத்துணை நீதிப்பெருக்கமும் உடையரானுல், அயர்லாந்து தேசத்திற்குரிய நியாயத்தை வழங்கப் பின்வாங்கவேண்டுவதில்லை. இன்னும் வேற்றுமையையும், அநீதியையும்

வளர்த்துச் சென்றால், அச்செயல் இங்கிலாந்து தேசத்தை மட்டற்ற பலவீனத்திற்குள்ளாக்க நாமே அடிகோலுவதாகும்."

பெஞ்சமின் டிஸ்ரலி

இங்கிலாந்து தேசத்தின் பிரதம மந்திரியான கனம் மிக்க பெஞ்சமின் டிஸ்ரலி எனப்படும் பீக்கன்ஸ் பீல்டு பிரபுவின் பேச்சுக்கள்.

3. [பார்லிமெண்டு மகா சபையில் கிளாட்ஸ்டன் இடிமுழக்கமென இரைந்து, கடுமையாகத் தாக்கிப் பேசி, இறுதியில் வழக்கம்போல் மேசைமீது அறைந்ததால், அதன் மீதிருந்த பேனாக்கள், காகிதங்கள் பல திக்குகளிலும் சிதறியோடின. அப்போது டிஸ்ரலி சாவதானமாக எழுந்து பேசியது :]

"உன்னதக் கீர்த்திவாய்ந்த கனவான் (கிளாட்ஸ்டன்) இம்மாபெருஞ் சபையில் இதுகாறும் எவரும் உபயோகிக்காத முறையிலும், உச்சக்குரலிலும் எம்மை நேரிடத் தாக்கிப்பேசியுள்ளார். அன்னார் கடூரமான பேச்சைச் சிறிதும் பொருட்படுத்தினேனில்லை. ஆயினும், அவருடைய பேச்சுத்தோரணை, திகிலையும் பயங்கரத்தையும் சபையில் உண்டாக்கிவிட்டதெனக் குறிப்பிடாதிருக்கக் கூடவில்லை. எதிரில் வீற்றிருக்கும் அங்கத்தினர்கட்கும் அவருக்கும் இடையே விசாலமான இம்மேசை ஒன்று இருந்ததால், இன்று உயிர்தப்பினோமெனச் சபையோர் கண்டிப்பாக எண்ணாதிருக்கமுடியாது. எனவே, மகாகனம் பொருந்திய கனவான் மிக்க அகம்பாவத்துடனும், அதற்குரிய வாக்கு வல்லமையுடனும்-ஏன்-வெகு மூர்க்கத்துடனும் பேசினார். (சற்றுத் தயக்கம்) ஆயினும், அவர் இழைத்துள்ள தீங்குகளை ஒருவாறு ஒழுங்குபடுத்திவிடலாம்."

[இவ்வாறு பேசி, வருத்தம் தோன்றக் குனிந்து, சிதறியோடிய பேனா, காகிதம் முதலியவற்றை ஒவ்வொன்றாகப் பொறுக்கி எடுத்து முன்போல் வைத்த பின், தமது பேச்சைத் தொடர்ந்து மேலும் பேசினார்.]

* * * *

4. [இங்கிலாந்தின் பிரதம மந்திரியான கனம்மிக்க சர். ராபர்ட் பீல் பார்லிமெண்டு மகாசபையில் டிஸ்ரலியைக் குத்திப்பேச வெண்ணி, தமக்கு முன் பிரதமராயிருந்த கான்னிங் எனும் நாவலரும், கவிஞருமான பெரியார் யாத்துள்ள "என்னை நண்பர்களிடமிருந்து காப்பாற்றுங்கள், நான் பகைவர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்வேன்" என்ற செய்யுளை மேற்கோளாகக் கூறியதற்கு டிஸ்ரலி அளித்த பதில் :]

"கண்ணியமிக்க மந்திரியார், (சர். ராபர்ட் பீல்) 'விக்ஸ்' கட்சிக்காரர் நீராடும் வேளை பார்த்து அவர்கள் உடைகளைக் களவாடிப்

போயினர். அன்னார் நிர்வாணமாக விருத்தலை அவர்களையே ரசிக்கச் செய்து, அவ்வுடைகளுக்குத் தாமே காப்பாளருமானர். தமது எதிர்க் கட்சியார் சிலவேளை இவரை ஆதரிக்க முற்பட்டாலும் கண்ணியமிக்க இக்கனவான் வசைபாடுவதே அவர்கட்குப் பரிசில் என்றெண்ணித் தாராளமாக அவ்வழியைப் பின்பற்றுகின்றார். வேறு விதியின்றி நாங் களும் அவற்றை வாய்பொத்தி ஏற்றுக்கொள்ளல்வேண்டும். தனிப் பட்ட முறையில், அவர் கைப்பிரம்பின் ஓச்சுக்கு நான் தலைவணங்கு வேன். இன்று வசைமொழியில் இறங்காமல், மேற்கோள்களை மட்டும் உதாரணங் கூறி அவர் நின்றிருக்கலாம். அஃது அவருக்கு எவ்வித அபாயமும் கொடாத ஒரு கைப்படையாகும். வசைபாடுவதில் அவர் இணையற்ற சமர்த்தர். தாக்கும் வேகத்திற்கேற்ப வசைமொழி களை உபயோகிக்க வல்லவர். அவர்ஒரு வாசகத்தையோ, அல்லது செய் யுளையோ தமக்குச் சாதகமான மேற்கோளாக உபயோகிக்க விரும்பினல் அது சபையின் அங்கீகாரத்தைப் பெறத் தக்கதாயும், மிக உற்சா கத்தை விளைவிப்பதாயும் இருக்கும்.

ஒரு விவாதத்தில் அல்லது பேச்சினிடையில் மகான்களாகிய பெரியார்களின் பெயரை ஒரு பேச்சாளர் மெல்ல நுழைத்தலால் ஏற் படும் நற்பலனையும், மின்சார விசையையும் அவர் நன்கறிவார். அவர் பிரசித்திபெற்ற ஒரு பேராசிரியரையே எப்போதும் சான்றாகக் கூறுதல் வழக்கு. சிலவேளை மக்களின் அபரிமிதமான அன்பிற்குப் பாத்திரமான- உதாரணமாக - கான்னிங் போன்ற மேதாவிகளின் கூற்றுக்களையே எடுத்துக் கையாள்வார். கான்னிங் எனும் பெயரை உச்சரிக்கும் போதே இம்மகாசபையில் இனியதோர் உணர்ச்சி எங்கணும் வியாபித் தல் இயல்பன்றோ ? அவருடைய மூதறிவை நாமெல்லோரும் இன்றும் பாராட்டுகிறோம். அவருடைய அகால மறைவைக் குறித்து இன்றும் வருந்துகிறோம். சில மூர்க்கமான எதிரிகளுடனும், நயவஞ்சகமான சில நண்பர்களுடனும் பலமான துர்அபிப்பிராயங்களினிடை சிக்கிக் கொண்டு அவர் பட்ட பாட்டைக் கண்டு பன்முறை நாம் அநு தாபம் காட்டியிருக்கிறோம். கண்ணியமிக்க கனவான் (சர். ராபர்ட்பீல்) காலஞ்சென்ற அம்மகானின் வாக்கை மேற்கோளாக இச்சபையில் கையாண்டால் அதற்கு ஒரு பெருஞ் சிறப்பு உண்டென்பதை நன்கறி வார். உதாரணமாக, நண்பரின் மாண்பு பற்றி அப்பெரியார் கான்னிங் யாத்துள செய்யுளைக் கண்ணியமிக்க கனவான் இச்சபையில் புகல்வா ராயின், அதற்கொரு தனிச் சிறப்புண்டாம். ஆகா ! என்ன ஆச்சரியம் ! 'நட்பின் மாண்பு' என்னும் சொல்லணியின் பெருமை என்னே !

அதைச் செய்யுளாக யாத்துள்ள கவியின் பெருமை என்னே! அதனை இச்சபையில் உச்சரித்தவரின் பெருமைதான் என்னே! இன்ப ரசம் மிளிர்ந்திழையும் பொருத்தம் என்னே! நமது விவாதத்தில் அந்த ஒரு மேற்கோள் நம்மில் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தி விட்டதன்றோ? "நண்பர்களிடமிருந்து காப்பாற்றுங்கள்" என்ற அப் பாட்டின் தலைப்பு அக்கண்ணியமிக்க கனவான் எம்மைச் சுட்டிச் சொல்லியதாக இருக்குமானால், நான் செய்யக்கூடிய தொன்றேயாகும். அஃது யாது? கண்ணியமிக்க அக்கனவானின் நினைவாற்றலையும், நெஞ்சுரத்தையும், கொஞ்சமும் அஞ்சிப் பின்னிடாத அவர் மனச் சான்றையும் இச்சபையில் வெளிப்படையாக மெச்சி மிகப் பாராட்டு வதே யாகும்."

[கான்னிங் கட்சியிலிருந்த நண்பர் சர் ராபர்ட் பீல் அவரைக் காட்டிக் கொடுத்தன ரென்பது டிஸ்ரலியின் புகார்.]

* * * *

5. பார்லிமெண்டு மகாசபையில், தமது கட்சிக் கொள்கைகளி னின்றும் நழுவிய சர். ராபர்ட் பீல் பேசியதற்கு டிஸ்ரலியின் கண்டனம்.

"ஒரு சபையில் தமது குரலை எத்துணைப் பயங்கரமாக உயர்த்திப் பேசலா மென்பதற்கு, கண்ணிய மிக்க கனவான் ஈண்டுப் பேசியதே சான்று. அதுகிடக்க. கண்ணிய மிக்க கனவான் இப்பொழுது மேற் கொண்டுள்ள கொள்கைமாற்றத்தை விளக்கிக் காட்டுதற்குச் சரித்தி ரத்தில் தக்க உவமானம் ஏதேனும் இருக்கின்றதா வெனத் துருவிக் கண்டுபிடித்தல் கடினம். ஆயினும் சமீப காலத்தே விவாண்டுப் பிர தேசப்போரில் நிகழ்ந்த ஒரு அரிய சம்பவத்தைக் கண்ணிய மிக்க கன வானின் செய்கைக்கு ஓரளவு உவமிக்கலாம். துருக்கி தேசம் சீர் குலைந்து அங்குப் பெரும் போராட்டம் நிகழ்ந்தகாலை, மதிநுட்பமும் ஆற் றல் மிக்கவருமான காலஞ்சென்ற சுல்தான் பல போர்க்கப்பல்களைக் கட்டுவித்து, பல படைகளையும் திரட்டித் தமது தேசத்தைக் காப் பாற்ற முயன்றார். எண்ணிறந்த போர்க்கலங்கள் தயாரிக்கப்பட்டன. எல்லா மாலுமிகளும் பொறுக்கியெடுத்த நிபுணர்கள். உத்தியோகஸ்தர் களோவெனின் முதற்றரமான சாமர்த்தியசாலிகள். எல்லா உத்தி யோகஸ்தர்கட்கும், வீரர்கட்கும் யுத்தம் நடவா முன்னரே தக்க பரிசில்கள் வழங்கப் பெற்றன. மகா சுலைமான் ஆட்சிக்காலத்திற்குப் பின் அதனினும் சிறந்த கப்பற்படை யொன்று, டார்டனல் சந்தியினின்

றும் வெளிப்போந்த தில்லை. தமது கடற்படை போருக்குச் செல்வதை சுல்தான் நேரில் கண்டுகளிக்க வந்திருந்தார். நம் நாட்டுப் பொதுத் தேர்வுகளில் நமது மக்கள் பிரார்த்தனை புரிவது போல், அந்நாட்டு முல்லாக்களும் மக்களும் சுல்தான் வெற்றிபெற வேண்டுமாய்ப் பிரார்த் தனை புரிந்தனர். கப்பற்படைபோ, துறை முகத்தினின்றும் கம்பீர மாக வெளிப் போந்தது. வெடிகள் முழங்கின. துருக்கிக் கப்பற் படைத் தளகர்த்தர் எல்லாக் கப்பல்களையும் நடத்தி, வரிசை வரிசையாக எதிரியின் துறைமுகத்திற்குள் நேரே கொண்டுசேர்த்துச் சரண் அடைந்தபோது சுல்தானுக்கும் துருக்கி மக்கட்கும் எவ்வித மனத் திகிலை அஃது உண்டாக்கி இருக்கும்! யோசியுங்கள். அப்பொழுது அந்த நிரபராதியான தளகர்த்தரின் செய்கையையும் மனமாற்றத்தை யும் மக்கள் மிகத்தப்பிதமாக எண்ணினர்! அவரைத் தேசத்துரோகி யென்றும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் இழைத்தவ ரென்றும் வாய் கூசாமல் வசை பாடினர். தளகர்த்தரோ வெனின், தாம் செய்தது தவறல்ல வென ருசுப்பிக்க முற்படாமலில்லை. ' நான் இந்த மகத்தான கப்பற்படையின் தளகர்த்தன் என்பது உண்மையே. நமது முல்லாக் கள் நமது வெற்றியைக் கோரிப் பிரார்த்தனை புரிந்ததும் உண்மையே. ஆனல் தொடர்ந்து சண்டை புரிவதிலோ எனக்குக் கொஞ்சமும் பிடித் தம் இல்லை. அதற்குப் பலமான ஆட்சேபம் எனக்குண்டு. இந்தப் போராட்டத்தை மேன்மேலும் வளர்த்துக்கொண்டு போவதால் தேசத் திற்கு யாதொரு நற்பயனுமில்லை. நான் தளகர்த்தர் பதவியை ஏற்றுக் கொண்டதன் காரணம், என்னை இறுகத் தழுவி ஆலிங்கனம் செய்து வழியனுப்பிய அன்பின்மிக்க சுல்தானை - என் எசமானரைக் காட்டிக் கொடுத்தாகிலும், இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டு மென்பதேயாம்.' அத்தளகர்த்தரின் கொள்கையை கண்ணிய மிக்க கனவான் (சர். ராபர்ட்பீல்) இக்காரியத்திலும் பின்பற்றியுள்ளார்." (ஒரே நகைப்பு.)

ஆபிரகாம் லின்கன்

6. அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பதினாருவது அதிபதியான பிரசித்தி பெற்ற ஆபிரகாம் லின்கன் கெட்டிஸ்பர்க் நகரில் நிகழ்த்திய நிகரற்ற பேருரை (சுமார் 267 சிறு ஆங்கில வார்த்தைகளைக் கொண்டது).

"எமது தாய்நாட்டு மக்களே! உலகில் பிறப்பிலே எல்லோரும் சமத்துவமானவர்கள். தனிப்பட்ட இச்சா சுதந்தரம் ஒவ்வொருவருக்

கும் உண்டு என்னும் கொள்கைகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்த நம் மூதாதையர் ஒரு புதிய சமுதாயத்தை நான்கிருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர் இப் பூகண்டத்தே புகுத்தினர். இத்தகைய சுதந்தர வேட்கையோடு தோன்றிய சந்ததியாரின் வழிவந்த நமது சமுதாயம், இனிஉலகில் இருப்பதா, அன்றி இறப்பதா என்னும் சந்தேகம் தோன்ற உள்நாட்டுப் பெரும் போரில் இதுபோழ்து மூழ்கிக் கிடக்கின்றது.

அப்பெரும் போர் நடைபெற வேண்டிய செருக்களத்திலேயே இன்று நாம் குழுமியுள்ளோம். தம்மால் நிறுவப் பெற்ற சமுதாயம் உயிருடன் உறுதியாய் வாழ வேண்டுமென நம் முன்னோர்கள் தங்கள் இரத்தத்தைச் சிந்தி, ஆவியிழந்து புதையுண்டிருக்கும் இக்களத்தின் ஒரு பாகத்தை அவர்கட்கு உரிமைப் படுத்துவதே நாம் இங்குக் குழுமியதின் நோக்கமாம். அவ்வாறு முயன்றிருத்தல் அன்னோரின் சந்ததியாராகிய நமது பிறவிப் பெருங்கடனேயாம். ஆயினும், சமுதாயவன்மை, ஒற்றுமை, நீதி முதலியவற்றைத் தற்காலம் இழந்துழலும் நாம் இக் களத்தை அவ்வாறு புனிதமாக்கவும், உரிமைப்படுத்தவும் அருகர் ஆவோமா? அப்பெரும் போரில் ஈடுபட்ட சுத்த வீரர்கள், நமது இவ்வெளிய முயற்சியைவிட ஆயிரமடங்கு அதிகமாகவே இக்களத்தைப் புனிதமாக்கி யுள்ளனர். அத்தகைய பரிசுத்த பூமியினின்று நாம் பேசுவ தென்னவென்பதை உலகம் கவனித்தல் அரிதாம். ஒரோவழி அவ்வாறு கவனம் செலுத்தினும் அஃது அதிககாலம் மனிதர் சிந்தையில் பதிந்திராது. ஆனால், நம்முன்னோர்கள் இங்கு நிகழ்த்திய தென்ன என்பதை மட்டும் உலகம் எந்நாளும் மறவாது. இன்று பிராணனோடிருக்கும் நாம், நமது முன்னோர்கள் அரை குறையாக விட்டுப்போன பெரிய சமுதாயப்பணிகளை மீண்டும் தொடங்கி, முற்றுப்பெறச்செய்ய ஈங்கு, இவ்வேளை கங்கணம் கட்டிக் கொள்வதே நமக்குப் பொருந்திய கடனும். மடிந்தும், வீழ்ந்துபட்டும் இங்குப் புதையுண்டிருக்கும் சுத்த வீரர்களின் சமாதிகளினின்று எழும் பரிசுத்த வீராவேச உணர்ச்சியை நுகர்ந்து மேன்மேலும் நமது சமுதாயக் கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலை நமது ஆழ்ந்த பக்தி கொண்டு பெறவேண்டியவர்களாகவே இருக்கின்றோம். அச் சீரிய வன்மையைப்பெற்று விடுவோமாயின் இங்கு வீழ்ந்திறந்த நம் முன்னோர்கள் வீணில் மடிந்தவராவரோ? ஆண்டவன் அருளால் நமது மக்கள் இன்று புத்துயிர்பெற்று, முன்னினும் மிக்க சுதந்தர மடைந்து, பற்பல வகையிலும் முன்னேறி, பொது மக்களாலேயே, பொது

மக்களின் நன்மைக்காகவே, பொது மக்களின் ஆட்சியை நடத்தி, இப்பூவுலகில் மடிந்து வீணே மாளாத மாண்புமிக்க சமுதாய மக்களென வாழ முயல்தல் அறநெறியா மன்றோ?"

* * *

7. இரண்டாவது முறை ஐக்கியபதியாகத் தேர்வுபெற்றபோது ஆபிரகாம் லின்கன் ஆற்றிய விரிவுரையின் சாரமான பிற்பகுதி.

"எம் சகோதரர்காள்! வாளைக் கையில் ஏந்துபவர் அவ்வாளுக்கே ஒரு நாள் இரையாவது ஒருதலை. மானிட வர்க்கத்திற்குத் தெய்வ தண்டனையாகவும், நமது சமுதாயத்திற்குச் சோதனையாகவும் ஏற்பட்டுள்ள இக்கொடிய யுத்தம் சீக்கிரமே ஒழியவேண்டுமாய் நாம் வெகு ஆவலோடு எதிர்பார்க்கிறோம்; மிக உருக்கமாகப் பிரார்த்தனை புரிகின்றோம். அவ்வாறிருந்தும் ஆண்டவன் சித்தத்தில் இந்த யுத்தம் நீடிக்க வேண்டுமென்றிருந்தால் - கசையடியால் இரத்தம் சிந்தி, இருநூற்றைம்பது ஆண்டுகளாக வதிந்த நம் மக்கள், ஒரு சுகமும் பெறாது, ஈட்டிய செல்வம் சிதறி, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் விதித்துள்ளவாறு கத்திமுனையில், இரத்தக்களத்தில் மடியவேண்டுமாயின் - அது கடவுளரின் நீதியான தண்டனையே யென நாம் ஒப்பித் தலைவணங்கல் வேண்டும்.

எவரிடத்தும் படுபகையின்றியும், எல்லோரிடத்தும் தர்மசிந்தனை காட்டியும் ஆண்டவன் நமக்களித்திருக்கும் ஆறறிவைப் பயன்படுத்தி, நீதியை ஊன்றிக் கடைப்பிடித்து, நாம் மேற்கொண்டுள்ள இச் சமுதாயப் பணிகளை இனி மன உறுதியுடன் இனிது முடிக்க முயலுவோம். சமுதாயத்திற்கு இந்நாள் ஏற்பட்டிருக்கும் படுகாயங்களில் நல்ல மருந்துவைத்துக் கட்டுவோம்; யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரையும் போற்றிப் பாராட்டுவோம்; கணவரை இழந்த காரிகைகளையும், அநாதைக் குழவிகளையும் ஆதரிப்போம். உலகத்தோடு ஒத்து வாழ்வதற்கும், நம்முள் ஒற்றுமை ஓங்கி வளர்தற்கும் சமாதான வாழ்க்கை எங்ஙனும் நிலவுதற்குமான சகல முயற்சிகளையும் இனி நாம் மேற்கொள்வோம்."

[மொழிக்கு மொழி ருசிக்கும் மேற்குறித்த இரு பேச்சுக்களும் தெய்வத் தன்மை பொருந்தியதெனக் கருதப்பட்டுப் பொன்னேபோல் உலகில் இன்றும் போற்றப்படுவனவாம்.]

மார்க் ஆண்டனி

8. **மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள ' ஜூலியஸ் சீஸர் ' எனும் நாடகத்தில் மார்க் ஆண்டனி எனும் நாவலர் நிகழ்த்திய கையறுநிலைச் சொற்பெருக்கு.**

" நண்பர்களே ! நேயர்களே ! என் நாட்டு நன்மக்களே !

நான் புகல்வதைச் சற்றுக் கேண்மின் ! நான் சீஸரைப் புதைக்க வந்தேன் ; அன்றி அவரைப் புகழ வந்தவனல்லன். ஒருவர் தமது ஆயுட் காலத்தில் இழைத்த பிழைகள் அவர் இறந்த பின்னும் உலகில் நிலைப் பனவாம். ஆனால் ஒருவர் செய்த நன்மைகளோ உலகில் நினைக்கப்படுவ தில்லை. அவருடைய எலும்புகளுடன் அவை மண்ணில் புதைக்கப் படுகின்றன. சீஸர் கதியும் அவ்வாறே ஆகட்டும். பெருந்தன்மை மிக்க புரூட்டஸ், சீஸரைப் பேராசை பிடித்தவரென உங்களுக்குச் சொன்னார். அங்ஙனமாயின், அது வருந்தற்குரிய பெருங் குற்றமே யாகும். அப்பெருங்குற்றத்திற்கேற்ற தண்டனையை சீஸர் இன்று அடைந்துவிட்டார். புரூட்டஸ் ஒரு கண்ணியவான் ; அவர் நேயர்களும் கண்ணியமிக்கவர்களே. ஈங்கு அவர்கள் தயவால் சீஸரின் ஈமக்கடன் பேச்சாற்ற நான் வந்துள்ளேன். சீஸர் என் மனதிற்கினிய நண்பர்; என் பால் மிக்க அருளுடையவர்; என்னிடத்து நட்பின் நெறிவழுவாது நடந்து கொண்டவர். புரூட்டஸோ அவரைப் பேராசை படைத்தவரெனச் சொல்கின்றார். ஆனால், புரூட்டஸோ மிகக் கண்ணியமானவர். பல யுத்தங்களில் சீஸர் பிறநாட்டுப் பெருமக்களைச் சிறைப்படுத்தி உரோமா புரிக்குக் கொண்டுவந்தார். கைப்பற்றிய அவர்கள் பொன்னை உரோமா புரியின் கருவூலங்களிலே கொட்டி நிரப்பினார். இதனால் சீஸர் பேராசை கொண்டிருந்தவரென உங்கட்குப் புலனாகின்றதா ? ஏழை மக்கள் கதறியழுதகாலை, சீஸர் தாமும் கண்ணீர் வடித்தார். ஆயினும், பேராசைக்காரருக்கு இதனிலும் மிக்கக் கடின சித்தம் பிறப்பில் இருக்க வேண்டாமா ? எனினும் புரூட்டஸ், சீஸரைப் பேராசையின் உருவ மென்கிறார். ஆனால் புரூட்டஸோ கண்ணியமிக்கவர். நான் லூப்பர் கால் திருவிழாவில் மும்முறை மன்னர்க்குரிய மணிமுடியைத் தந்ததை நீங்களறிவீர்கள். மும்முறையும் சீஸர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டதையும் நீங்கள் அறிவீர்களன்றோ ? எனினும், புரூட்டஸ் அவரைப் பேராசைகொண்டவரெனச் சாதிக்கின்றார். ஆனால் புரூட் டஸோ உண்மையாகவே ஒரு கண்ணியவான். புரூட்டஸ் பேசியதைப் பொய்ப்பிக்கும் நோக்கமாய் நான் பேச வந்தேனில்லை. எனக்குத்

தெரிந்தவற்றை உங்களுக்குச் சொல்லவே இங்குப் பேசவந்தேன். ஒரு காலத்தில் நீங்கள் அனைவரும் சீஸரை வெகுவாக நேசித்தீர்கள். காரணமில்லாமலா நீங்கள் அவரிடம் அவ்வித அளவுகடந்த அன்பு காட்டினீர்கள்? அத்தகைய நீங்கள் இப்போது ஏன் அவருடைய மரணத்தைக் குறித்துத் துக்கங்கொண்டாட மனங்கொள்ளாதிருக்கிறீர்கள்? ஆகா, பகுத்தறிவே! நீ மனிதவர்க்கத்தினின்றும் பிரிந்து மிருக வர்க்கத்திற்குள் ஒளிந்துகொண்டனையோ? அந்தோ, மானிடர்களே! நீங்கள் உங்கள் பகுத்தறிவை இழந்துவிட்டீர்களா, என்ன? கொஞ்சம் பொறுமையோடிருங்கள்.' என் இதயம் இக்கணத்தே சீஸரின் சவப் பெட்டிக்குள் சென்றிருக்கிறது. அஃது என்னிடம் திரும்பி வரும் வரை என் பேச்சைச் சற்று நிதானிக்கிறேன்.....

சீஸர் நேற்று ஒரு வார்த்தை சொன்னால் உலகமே திடுக்கிட்டலறும். இன்றோ, அவர் எளியரினும் எளியராய் எவரும் மரியாதை காட்டா வண்ணம் கொலையுண்டு கிடக்கின்றார்! ஆகா! என் எசமானர்களே! உங்கள் இனிய இதயத்தை - அரிய உள்ளத்தைக் கொள்ளைகொண்டு பெருங் கலவரத்தையும் கோபாவேசத்தையும் உண்டாக்குவேனாயின், புரூட்டஸுக்கும் காசியஸுக்கும் தீங்கிழைத்தவனாவேன். அவர்களிருவரும் கண்ணியமானவர்களென்பது உங்கட்குத் தெரியுமன்றோ? ஆகையால், அவர்கட்குத் தீங்கிழைக்கக் கொஞ்சமும் எண்ணிலேன். உயிரிழந்த என் தோழருக்கும், எனக்கும், உங்களுக்கும் நான் ஒருக்கால் தீங்கிழைப்பினும் இழைப்பேன். ஆனால் அந்தக் கண்ணியமிக்கவர்கட்கோ தீங்கிழைக்க எந்நாளும் மனமிசையேன். இதோ பாருங்கள்! சீஸரின் சொந்த முத்திரையிட்ட பத்திரம் இது. இதனை அவருடைய சிற்றறையில் கண்டெடுத்தேன். இஃது அவருடைய மரண சாசனமாகும். இதில் என்ன எழுதிவைத்திருக்கிறார் என்பதைக் கேளுங்கள்! இல்லை; இல்லை; என்னை மன்னியுங்கள்! நான் அதைப் படிக்க விரும்பவில்லை. நான் அதைப் படித்தால் இறந்துகிடக்கும் சீஸரின் பிரேதத்திலுள்ள காயங்களை நீங்கள் முத்தமிட முற்படுவீர்கள். அவருடைய பரிசுத்தமான இரத்தத்தில் உங்கள் கைக்குட்டைகளைத் தோய்த்து வைத்துக்கொள்வீர்கள். ஏன் - நினைவுச் சின்னமாக அவருடைய தலைமயிர் ஒன்றை யாசிப்பீர்கள்! அதை உங்கள் சந்ததியாரின் பணப்பேழைக்குள் பத்திரப்படுத்தவேண்டுமாய் மரண சாசனமும் எழுதிவைப்பீர்கள்!

பரம சாதுக்களான நேயர்களே! கொஞ்சம் பொறுங்கள். உங்கள் பால் சீஸர் எத்துணை அன்புகொண்டிருந்தாரென்பதை இப்பொழுது

நீங்கள் அறிந்துகொள்ளல் சரியல்ல. நீங்கள் என்ன, மரப்பாவைகளா? நீங்கள் என்ன, கற்சிலைகளா? நீங்களனைவரும் இரத்தவோட்டம் பெற்ற உயர்ந்த மனிதர்களல்லரோ? நீங்கள் உயர்மனிதர்களாதலால், சீஸரின் மரண சாசனத்தைப் படிக்கக் கேட்டபின், உங்கள் கோபவனல் கொழுந்துவிட்டெரியுமே! உங்களுக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடிக்குமே! ஆகையால், சீஸர் உங்களனைவரையும் தம் சொத்துக்களுக்குப் பின்வார்சாக ஏற்படுத்தியிருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ளாதிருப்பதே நலமாகும். நீங்கள் அதை அறிந்துகொண்டால், அதனால் விளையும் விபரீதங்களைக் குறித்து மிக அஞ்சுகிறேன். கொஞ்சம் பொறுமை காட்டுங்கள்; சற்று நிதானியுங்கள். நான் அதைக் குறித்து உங்கள் ஆவலைக் கிளப்பியது என் குற்றமே. அதைப் படித்தால் எவருடைய கட்டாரிகளால் சீஸர் குத்துண்டு இறந்தாரோ அந்தக் கண்ணியர்கட்குப் படுதீங்கிழைத்தவனாவேன். அவர்கள் உயிரைக் குறித்தும் நான் அஞ்சவேண்டி வரும்!

நீங்கள், அந்த மரண சாசனத்தை நான் படிக்கவேண்டுமென இன்னுமா கட்டாயப்படுத்துகிறீர்கள்? சரி, அப்படியே ஆகட்டும். சீஸரின் சவப்பெட்டியைச் சுற்றிலும் வட்டமாக நில்லுங்கள். அப்பொழுது உங்கள் நலனைக் கோரி மரணசாசனம் எழுதிவைத்த கண்ணியரை உங்களுக்கு நன்றாகக் காட்டமுடியும். நான் மேடையினின்றும் கீழிறங்க உத்தரவு கொடுக்கிறீர்களா? உங்களுக்குக் கண்ணீர் என்று ஒன்று இருக்குமானால், அதனை இங்கு, இப்பொழுதே தாரை தாரையாக உகுக்கத் தயாராகுங்கள்! இதோ, சீஸர் தரித்திருக்கும் மேலங்கியை நீங்கள் இதற்குமுன் பார்த்திருப்பீர்கள். நெர்வி நாட்டில் வெற்றிக்கொடி நாட்டித் திரும்பியபின்னர் ஒருவேனிற்கால மாலை, கூடாரத்தில் தமது நண்பர்களுடன் சல்லாபித்திருந்தபோது தரித்துக்கொண்ட போர்வை இதுவாகும். இந்தத் தூய உடையில், பொறாமைகொண்ட காசியஸின் கட்டாரிக் குத்துப்பாய்ந்து துளைத்த இடம் இதோ இருக்கிறது. அவருடைய உயிர்த்தோழரான புரூட்டஸ் குத்தியதால் கிழியுண்ட இடம் இதோ இருக்கிறது, பாருங்கள்! அவர் தமது கட்டாரியை சீஸர் உடம்பிலிருந்து பிடுங்கியபோது இரத்தம் பீறிட்டோடி எத்துணைக் கறைகட்டி இருக்கின்றது, பாருங்கள்! சீஸர், புரூட்டஸைத் தமது குலதேவதையாகவன்றோ மனதில் கொண்டிருந்தார். அந்த புரூட்டஸ் உண்மையிலேயே தம்மைக் குத்தினாரா என்பதைத் தெரிந்துகொள்ளப் பீறிட்டோடும் இரத்தத்துடன் வெளியேறிப் பார்த்தார்! ஓ, தெய்வங்காள்! சீஸர், புரூட்டஸை


எத்துணை நேசித்திருந்தார் என்பது உங்கட்குத் தெரியாதா? மகாப் பிரபுவான சீஸர், புரூட்டஸ் மீண்டும் குத்தும்போது கண்ணால் கண்டு விட்டார்! அத்துரோகச் செயல், உலகத்துரோகங்களனைத்தையும் தோற்கடித்துவிட்டது. இதைவிட நேசத்துரோகம் வேறென்ன வேண்டும்? அந்த நேசத்துரோகியின் குத்தின கைவலிமையைவிட அவருடைய துரோக பலம் பன்மடங்கு வலிமைபெற்றதாயிற்று. சீஸரின் திடம்பெற்ற இதயம் படீரென வெடித்தது. தமது மேலங்கியினால் முகத்தை மூடிக்கொண்டு, இரத்தவெள்ளம் புரண்டோட பாம்பிச்சிலையின்கீழ் அடியற்ற மரம்போல் சீஸர் வீழ்ந்து விட்டார். நேயர்களே! அவர் வீழ்ந்த கோலத்தை என்னென்பேன்? அப்போது நானும் மூர்ச்சித்து விழுந்தேன். நீங்களும் மூர்ச்சை கொண்டிருப்பீர்கள் ஏன், எல்லோருமே மூர்ச்சையடைந்தோம்! கொலையும், நம்பிக்கைத் துரோகமும் ஆண்டுத் தாண்டவமாடின. ஆகா! இப்பொழுதோ நீங்கள் ஏங்கி அழுகிறீர்கள். நீங்கள் இப்பொழுது மிகப் பரிதாபப்படுகிறீர்கள். இப்பொழுது நீங்கள் சிந்தும் கண்ணீர் மிகப் புனிதமானது. இரக்கங்கொண்ட நண்பர்களே! குத்துண்ட உடையைப் பார்த்தே இத்துணைத் துக்கம் கொள்ளும் உங்கட்கு, இரக்கமின்றித் துரோகிகளால் இழைக்கப்பட்ட குத்துக்காயங்களைக் காட்டுவேன், பாருங்கள்!

அன்பான நண்பர்களே! மனதிற்கினிய நேயர்களே! நான் உங்களைத் திடீரெனக் கலாமிழைக்கத் தூண்டுவது சரியன்று. ஏனெனில் இக்குரூரச் செயலைச் செய்தவர்களோ மிகக் கண்ணியமானவர்கள்! அவர்கட்கு வேறு யாது உட்பகையிருந்து இங்ஙனம் செய்யத்தூண்டியதோ, நானறியேன். ஆயினும் அதைச் செய்தவர்களோ மிக மிகப் புத்தி மான்கள்; கண்ணியவான்கள். காரணம் கேட்டால், உங்களுக்குத் திருப்தியான பதிலை அவர்கள் சொல்லக்கூடும். உங்கள் இதயத்தைக் கொள்ளைகொள்ள நான் இங்கு வரவில்லை. புரூட்டஸைப்போல் வாக்குவன்மையுள்ள ஒரு நாவலன் அல்ல நான். சாதாரணமாக, எப்பொழுதும் உண்மை பேசும் கள்ளங்கபடற்ற உள்ளங்கொண்ட ஒரு வெள்ளை மனிதன் நான் என்பதை நீங்களறிவீர்கள். எனது நண்பரை நான் அதிகமாக நேசித்திருந்தது அவர்கட்கு நன்றாகத் தெரியும். அதனால் பகிரங்கமாக இங்குப் பேச எனக்கு அநுமதி தந்தனர். மனிதருக்கு இரத்தக்கொதிப்பை உண்டாக்கும் சாமர்த்தியம், வார்த்தை, மதிப்பு, செய்கை, சொல் நயம், வாக்குவன்மை முதலியன என்னிடம் இல்லையென்பதும் அவர்கட்குத் தெரியும். ஏதோ, மனதில் தோன்றுவன

வற்றைக் கபடின்றிப் பேசுகிறவன் யான். உங்கள் எல்லோருக்கும் தெரிந்தவற்றைத்தான் நானும் சொல்லுகிறேன். வாயில்லாத, ஊமைகளான அக்குத்துக்காயங்களைத்தான் உங்களுக்கு நான் காட்டக்கூடும். நான் பேசுவதற்குப் பதிலாக அக்காயங்களைப் பேசச் சொல்லுவேன். நான் புரூட்டஸாக இருந்தால், ஆண்டனியாகப் பேசாமல், புரூட்டஸ் - ஆண்டனியாகவே பேசியிருப்பேன். ஒவ்வொரு காயங்களுக்கும் நாவுண்டாக்கி அவைகளைப் பேசச்செய்து, உரோமாபுரியிலுள்ள கற்கோட்டைகளைத் தகர்த்து, மனக்கொந்தளிப்பையும் கிளப்பி, கலகத்தையும் விளைவித்திருப்பேன். என் நண்பர்களே! இன்னும் கேளுங்கள். நீங்கள் சரி, தப்பு என்று பாராது எதையோ செய்யப்போகிறீர்களெனத் தோன்றுகிறது. அவ்விதமான அன்பை இப்பொழுது ஏன் சீஸரிடம் காட்டுகிறீர்கள்? அவலம்! அவலம்! அதன் காரணத்தை நீங்கள் அறியீர்கள். அதை நான் இப்பொழுது வெளியிடட்டுமா? நான் முன்னே சொன்ன மரணசாசனத்தைப் பற்றி மறந்துவிட்டீர்களே! இதோ பாருங்கள்! சீஸர் சொந்த முத்திரையிட்ட மரண சாசனம் இது. ரோமாபுரியிலுள்ள ஒவ்வொரு நபருக்கும், இப்பட்டயமூலம் எழுபத்தைந்து பொற்காசு பரிசிலாக எழுதிவைத்திருக்கிறார், அந்தப் பேராசைக்காரர்! அவசரப்படாதீர்கள்! பொறுமையுடன் கேளுங்கள். மேலும் அவர் தம் சொந்த உபயோகத்திலிருந்துவந்த வழிநடைகளையும், உய்யான வனங்களையும், புதிய பழமுதிர் சோலைகளையும், சவுக்கண்டிகளையும், டைபர்நதிக்கு இப்பாலுள்ள இடங்களனைத்தையும் உங்கள் எதேச்சையான அநுபவத்திற்கு அளித்திருக்கிறார். நீங்களும் உங்கள் சந்ததியாரும் அவைகளை ஏகபோகமாக ஆண்டனுபவித்துக் கொள்ளவும் விதித்திருக்கிறார். பாருங்கள், இப்படிப் பட்ட ஒரு சீஸரும் நம்மிடையே இருந்திருக்கிறார்! இப்பொழுதோ அவர் படுகொலையுண்டு இறந்துகிடக்கிறார். அவரைப்போல் வேறொருவரை நாம் இனிக் காண்பதெந்நாள்? நண்பர்காள்! என் தாய்நாட்டு மக்காள்! நன்கு சிந்தியுங்கள்." *

---

*இப்பேச்சு முடிந்தபின், "கலகமே நீ கனன்றெழுந்தனை, நீ எம்மார்க்கமாயினும் செல்லுக" எனத் தம்முள்ளே சொல்லி ஆண்டனி திருப்தியடைந்தார் ஒரு நாவலர் எத்தனை வீராவேசத்தை மக்கட்குப் படிப்படியே புகட்டலாமென்பதற்கு இப் பேச்சொன்றே சான்று. இப்பேச்சுக்கும் இவருக்கு முன் பேசிய புரூட்டஸ் பேச்சுக்குமுள்ள தாரதம்மியம் 168-ம் பக்கத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளது.



மகாத்மா காந்தி

சேர்க்கை - 3

சில இந்திய நாவலரின் ஆங்கிலச் சொற்பெருக்குகள்

இப்பகுதியில் சில இந்திய நாவலரின் ஆங்கிலச் சொற்பெருக்குகள் சுருக்கித் தமிழாக்கப் பெற்றுள்ளன.

மகாத்மா காந்தியடிகள்

1. மகாத்மா காந்தியடிகளின் நற்செய்தி (1920)

" அன்பான சகோதரர்களே, சகோதரிகளே !

என்னுடைய ஐம்பத்தோராவது ஆண்டு விழாவைக் கொண்டாடி வாழ்த்தியனுப்பிய தந்திகள், கடிதங்கள் கணக்கற்று எனக்குக் கிடைத்துள்ளன. உங்கள் அளவுகடந்த அன்பிற்கு யான் யாது கைம்மாறு ஆற்றவல்லேன் ? என்னுடைய நன்றியை எச்சொற்கொண்டு வெளியிடுவேன் ? நான் எக்காலத்தும் மக்களின் குருட்டு அன்பை நம்புகிறவன் அல்லன். மக்களின் பகுத்தறிவோடு கூடிய அன்பைச் சந்தேகமறப் பாராட்டுகிறவன் யான். பல இடங்களில் அத்தகைய அன்பு, மக்களுக்கு நன்மை பயக்கும் வழியில் காட்டப்பெற்றிருப்பதைக் காண நான் பெரிதும் மகிழ்கின்றேன். இந்தியாவின் ஆழ்ந்த வறுமை நிலைமையைக் கண்கூடாக் கண்டறிந்த யான், எவ்வித உபயோகமுமின்றிச் செலவிடப்படும் பணம், பரம ஏழைமக்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதாகவே கருதுவேன். எனக்குத் தந்தியனுப்பியதில் செலவிட்ட பணத்தைக்கொண்டு சுதேசியக் கதர் வாங்கி, நிர்வாணமாயுள்ள ஏழை மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கலாம். அல்லது பசிக்கொடுமையால் வாடும் திக்கற்ற மக்கட்கு ஒருவேளை உண்ண உணவு அளித்திருக்கலாம். அம்மக்கள் அவ்விதக் கொடையாளிகளை வாயார வாழ்த்தியிருப்பார்களன்றோ ? ஏழைமக்கள் அழுத கண்ணீரும் அவர்களிட்ட சாபமும் எத்தனையோ சமுதாயங்களை அழித்திருக்கின்றன ; பணக்காரர்களை மீளா ஏழைகளாக்கியிருக்கின்றன ; மன்னர்களைத் தமது முடியிழக்கச் செய்திருக்கின்றன. ஆனால், ஏழைமக்களின் அன்பான வாழ்த்துக்களால், எத்தனையோ இராச்சியங்கள் மகத்தான நிலைமையில் வாழ்கின்றன.

என்பால் மக்கள் வைத்துள்ள அன்புக்கு அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகளே தக்க சான்றுகள். பிறர் பின்பற்றுதற்குரிய நன்னடத்தைகள் எவையேனும் என்பால் இருப்பின், அவைகளைப் பின்பற்றி நடப்பதிலும், எனக்கு மட்டற்ற மனக்களிப்பை உண்டாக்குவது வேறில்லை. என்னுடைய பிறந்த தினத்தன்று பலர் சுதேசப் பிரமாணம் எடுத்துக்கொண்டுள்ளனர். எனது சகோதரிகளில் பலர் தமது கையினால் நூற்ற நூற்கட்டுகளைப் பரிசாக அனுப்பியுள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்கட்கு உதவிபுரிவதென அன்று பலர் உயர்விரதம் பூண்டுள்ளனர். ஆமதாபாத் நகரிலுள்ள சுதேசிப் பண்டகசாலையார் பல கஷ்டநஷ்டங்களுக்கிடையே அன்று தங்கள் சரக்குகளை விலைகுறைத்து விற்றனர். சூரத்திலிருக்கும் சுதேசி பந்தர் காரியாதிகாரிகள் அவ்வழியைப் பின்பற்றினர். அவ்விதப் பிறந்தநாள் கொண்டாட்டங்களே பரிசுத்தமான அன்பின் சின்னங்களாம். உலகில் ஆண்மக்களும் பெண் மக்களும் இம்முன்னேற்றத்துறைகளில் நாளுக்குநாள் அபிவிருத்தியடையவேண்டுமென ஒருவர் ஆசிப்பாராயின், பல பிறந்த நாட்களை நாம் விரும்பி வரவேற்பது நியாயமாகும்.

பாகினி சமாஜத்தார் எனக்கு ஒரு பணமுடிப்புக் கொடுப்பதெனத் தீர்மானித்துள்ளனர். இஃது என்மீது ஒரு சுமக்கமுடியாத பளுவைச் சுமத்துவதாகும். அதை நல்ல வழியில் செலவிடும் தொல்லையை நான் சமாளிக்க வேண்டிவரும். ஆயினும், அம்முடிப்பை இந்தியப் பெண் மக்களின் நிலைமையை உயர்த்துவதில் செலவிடுவேனென்பதை, மிக யோசனை செய்து கூற வேண்டுவதில்லை. இந்தத் திரவியத்தை நல்ல வழியில் செலவிடுவதற்கான யோசனைகளை என் சகோதரிகளும், சகோதரர்களும் கூறுவராயின் அவர்கட்கு என்றும் கடப்பாடுடையவனாவேன்.

நம்நாட்டிலுள்ள எல்லா மக்களும், பிறநாட்டு மக்களும் ஒருமித்து எனக்குத் தீர்க்காயுளை ஆசீர்வதிக்கின்றனர். என்னுடைய மட்டற்ற ஆவல்கள், எனது வாழ்நாளில் உண்மையைப் பின் தொடர்ந்து

[இம்மகான் 125 ஆண்டுவரை உயிர் வாழவேண்டுமென எண்ணியிருந்தது உலகறிந்த உண்மையாம். ஆயினும் ஆண்டவன் சித்தமோ வேறாயிற்று. 1948 - ம் ஆண்டு ஜனவரி 30-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் சென்ற இம்மகானை, முடிவணங்கி, பாதங்களில் வீழ்ந்து, கரங்கூப்பியபின் ஒரு பாதகன் சுட்டு வீழ்த்தினான். இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் இயேசுகிறிஸ்துப் பெருமானும், எண்பத்துமூன்று ஆண்டுகட்குமுன் ஆபிரகாம் லிங்கனும், இவரைப்போல் ஒரு வெள்ளியிலேயே கொலையுண்டு இன்றும் வெள்ளிபோல் உலகில் ஒளிர்கின்றனர்.

செல்லவேண்டும்; உண்மையாகவே நடக்கவேண்டும்; உண்மையான உள்ளத்தோடு கலந்து உறவுகொண்டிருக்கவேண்டும் என்பவையாகும். இப்பேரவா எனக்குக் கைகூடும்படி எனது நண்பர்கள் பிரார்த்தனை புரிவார்களாயின் அதனை நான் மனமாரப் போற்றுவேன்.

எனக்குத் தந்தி, கடிதங்கள்மூலம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ள அன்பர்கட்குத் தனித் தனியே எனது நன்றியை எழுதிப் பதிலளிக்க இயலாமைக்கு என்னை அவர்கள் மன்னிப்பார்களாக!"

டாக்டர் சுப்பராயன்

2. சென்னைச் சட்ட சபையில் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களின் அனுதாபப் பேச்சு.

"நம் தேசத்தின் தந்தையாகவும், தேச சுதந்தரத்தை நிர்மாணித்த சிற்பியாகவும் விளங்கிய காந்திஜி கொலையுண்டதற்காக இந்தச் சபை எல்லையற்ற சோகத்தில் ஆழ்ந்திருக்கிறது.

அம் மகானை இழந்ததால் நமது சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஈடுசெய்ய முடியாத நஷ்டத்திற்காக இச்சபை பெரிதும் வருந்துகிறது.

அம் மகான் நமக்கு அளித்து, தமது வாழ்க்கையிலும் அவர் நடத்திக்காட்டிய மூல மந்திரங்களான சத்தியம், சேவை, அஹிம்சை இவைகளின்படி வாழ்க்கை நடத்துவதன் மூலமே, நாம் நமது மாபெரும் தலைவருக்கு நன்றி செலுத்தமுடியும்."


டாக்டர் சுப்பராயன் கண்ணீர் உகுத்து மேலும் பேசியதாவது: "தற்போது நம் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் நிலைமையை நினைத்தால், பேசுவதற்கே என் நாவெழவில்லை. தான் செய்வது என்னவென்றே அறிந்துகொள்ளாத ஒரு மூர்க்கனுடைய செயலால் பாபு மடிந்தார். கடவுளை வணங்கிக்கொண்டே அவர் தன் ஆவி நீத்தார். தாமே சகல கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு, யுத்தமில்லாமல் நம்

அகிம்சா தர்மக் கொள்கையை நிலைநாட்டவே, மகாத்மா இக்கொடும் இம்சைக்குள்ளானார். ஒரு சிறு உடற்கூண்டில் அடையுண்டு அளவுகடந்து விசாலித்திருந்த அவரது விடுதலைபெற்ற, பரிசுத்த ஆன்மா தாம் விடுதலை பெற்றுத் தந்த பிறந்த நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கும் வியாபித்து அகிம்சை, சகிப்பு, கழிவிரக்கம் ஆகியவற்றைப் பரப்பி என்றும் நிலை பெற்றிலங்குமென்பது சத்தியம். மகாத்மா காந்தியடிகளின் ஆன்மா சாந்திபெறுவதாக! உலகெங்கும் சுடர் பரப்பி ஒளிர்வதாக!]


நாட்டுக்குச் சுதந்தரத்தை தேடித் தந்தார். இம்மாதிரியான ஒரு அரும் பெரும் காரியத்தைச் சாதித்த மற்றொரு தலைவர் சரித்திரத்திலேயே கிடையாது. சென்ற 25 ஆண்டுகளாக அவர் நடத்திய சுதந்தரப் போராட்டங்கள் எல்லாம் அன்பை அடிப்படையாகக்கொண்டு அஹிம்சா முறையில்தான் நடந்தன. அவருடைய ஆத்ம சக்தியாலேயே அப் போராட்டங்கள் வெற்றிகண்டன. இறுதி வெற்றி, அவர் கோரியபடி இல்லை. நாடு பிரிக்கப்பட்டதைக் கண்டு மனம் வருந்தினார். இரு வகுப்பினரின் ஒற்றுமைக்காக மகாத்மா இரண்டு தடவை உண்ணாவிரத மிருந்தார். உத்தமக் கொள்கைகளுக்காகத் தங்கள் உயிரையே தியாகம் செய்த சாக்ரடீஸ்களோடும், ஏசுநாதர்களோடும் நம் மகாத்மா சரித் திரத்தில் இடம்பெற்றுவிட்டார். இந்த நேரத்தில் எனக்கு ஆபிரஹாம் லின்கனின் நினைவு வருகிறது. பாபுவைப் போன்றே அவரும் சுட்டுத் தாக்கப்பட்டார்; நமது ஒப்புயர்வற்ற தலைவரை இழந்ததற்காக இந் நாட்டிலுள்ள நாம் மட்டுமல்ல, உலகமே வருந்துகிறது. மகாத்மா மனிதவர்க்கத்துக்கே போதகராக விளங்குகிறார்.

மகாத்மா காலமான தினத்தன்று இரவு ரேடியோவில் பண்டித நேரு, "சோதியோ மறைந்துபோய் விட்டது; ஆனால் குன்றா அதன் அருளொளி ஆயிரம் வருஷங்களுக்குப் பின்னரும் இந்நாட்டில் வீசும்" என்று புண்பட்ட மனந்திறந்து புகழ்ந்து கூறினார். நேசதேசப் பாதுகாப்புக் கவுன்சில் தலைவர் தமது அனுதாபச் செய்தியில், "மகாத்மா காந்தி நாட்டின் விடுதலைக்காக போராடிய தலைவர் மட்டுமல்ல; மனிதர்களுக்குப் போதகராக, புத்தர் பாரம்பரியத்தில் தோன்றி விளங்கி அவர் திகழ்ந்தார். தாம் உபதேசித்தபடித் தம் வாழ்க் கையை நடத்தியும் காட்டினார்." என்று கூறினார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றி மறைந்த ஏசுநாதர் போலத் தம் கொள்கைக்காக தம் உயிரைத் தியாகம் செய்த மகான் மகாத்மா காந்தி. ஆபிரஹாம் லின்கன் ஒரு வெள்ளியன்று கொலை யுண்டார். மகாத்மா காந்தியடிகளும் ஒரு வெள்ளியன்றே கொலை யுண்டார். மகாத்மா மறைந்தால் அவர் கொள்கையும் மறைந்து விடு மென மூடத்தனமாக நினைத்த ஒருவனால் அவர் கொலையுண்டார். கொலை செய்தவன் நினைப்பு அடியோடு தவறும் மூடத்தனமுமானதென் பதை உலக முழுவதிலுமிருந்து நமக்கு வந்துள்ள அநுதாபச் செய்தி கள் எடுத்துக் காட்டுகின்றன. ஒப்புயர்வற்ற தலைவரும், போதகருமான நம் மாபெரும் தலைவருக்கு உண்மையானவர்களாக நாம் நடப்போமாக! அன்னார் உபதேசங்களையும், காட்டிய வழிகளையும் பின்பற்றி நமது



1. மகாகனம். வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், 2. கனம். கோபாலகிருஷ்ண கோகலே, 3. டபுள்யு. சி. பொனர்ஜி, 4. கனம். எம். ஜி. இரானடே, 5. பாபு சர் சுரேந்திரநாத் பனர்ஜி.



நாட்டினுடையவும், இதர நாடுகளினுடையவும் முயற்சிகளால் " உலகில் அமைதி, மானிடர்களிடையே நல்லுறவு" என்ற அன்னார் கொள்கையை வெற்றிபெறச் செய்வோமாக ! நமக்களித்துள்ள கொள்கைகளை நாம் வழுவாமல் கடைபிடித்து நடக்க மகாத்மாவின் ஆன்மசக்தி நமக்கு வழி காட்டுமாக ! மகாத்மா இறக்கவில்லை. அவர் அமரர். அவர் எல்லோருடைய இருதயங்களிலும் அழியா இடம் பெற்றுவிட்டார். "

சுரேந்திர நாத் பனர்ஜி

3. மாபெரும் இந்திய நாவலர் பாபு சர். சுரேந்திர நாத் பனர்ஜியர், 1902-ம் ஆண்டு அலகாபாத் காங்கரஸில் ஆற்றிய சொற்பெருக்கின் சாரம்.

" கனவான்களே !

இந்நாள் நாம் முனைந்திருக்கும் உரிமைப் போராட்டத்திற்கு ஆங்கிலேய மக்களின் முழு ஒத்துழைப்பும், நாகரிக மனிதவர்க்கத்தின் அநுதாபமும் மிக மிக இன்றியமையாதனவாகும். அரசியல் மேனோக்கை இங்கிலாந்துதான் நமது உள்ளத்தில் விதைத்தது. அது முளைத்து, படிப்படியே வளர்ந்து, நாளுக்கு நாள் தழைத்துப் பூத்துக் காய்த்து இன்று பழுத்துள்ள கனியை நம்முடையதென உரிமை பாராட்டுகிறோம். அதைக் கைக்கொள்ளவே விரைந்து போராடி வருகிறோம். ஆங்கிலேய சரித்திரங்களில் மலிந்து காணப்பெறும் பொது மக்கள் நலனுக்காகப் பாடுபட்ட பெருமக்களின் போராட்டங்களை எடுத்துக் காட்டுகளாகக் கொண்டு நமது உள்ளக்கிளர்ச்சி பொங்கி எழுகின்றது.

எக்காலத்தும், எத்தேயத்தும் அரசியல் துறையில் ஆங்கிலேய மக்கள் முன்னணியில் முனைந்து நிற்பதென்னே ? அவர்கள்பாலுள்ள தெள்ளிய உள்ளமும், அடக்க சிந்தையும், உயரிய உள்ளக்கிடக்கையும், புரட்சியிலும் நியாய வரம்பில் நிற்றலும் அன்றோ அவர்களுடைய பிறவிப் பெருங்குணங்களாக அமைந்துள்ளன. மாறுபடும் காலத்திற்கேற்றவாறு நமது நிலைமையை நன்கு அமைத்துக் கொள்ளும் ஆசையை அபிவிருத்தி செய்தவரும், அதற்கு நீதியான வழிகளைக் கற்பித்தவரும் ஆங்கிலேயப் பெருமக்களே யாவர். ஆகலின், நமது கொள்கைகளை - நமது குறிக்கோள்களை நடைமுறைக்குக் கொணர்தற்கும், அடைதற்கும் உதவிபுரிய வேண்டுமென்று ஆங்கிலேயரை அறைகூவி அழைத்தால், அவர்கள் நம்மீது குற்றங் காண்பது முறையன்று ; நீதியுமன்று.

சுய ஆட்சிபெற்ற இதர நாடுகளைப்போல் நமது நாட்டுக்கும் ஓர் உன்னதபதவி அளிக்க வேண்டுமென்பது நமது வேண்டுகோளாம். இப்புனிதமான கோரிக்கை கைகூடும் நாள் மிகத்தாமதமாகத்தான் வருமென்பதை நாமறிவோம். ஆதலின், அப்புனிதமான போராட்டத்தை ஆரம்பித்தற்கு இன்றே நன்னாளாகும். இந்நாள் தேசிய சுதந்தரத் தீயை எங்ஙனும் பரப்பும் நன்னாள். ஒரு வெற்றிகரமான காலத்தின் ஆரம்ப நாளுமாகும்.

ஒருவர் பின் ஒருவராய் நமது நாட்டின் ஆட்சியை வகித்த கீர்த்தி வாய்ந்த இராஜப்பிரதிநிதிகளின் நன்னோக்கால் புனிதமான நமது இயக்கம் இன்று மேலும் பலங்கொண்டு வளர்கின்றது. மாட்சிமை பொருந்திய நமது மன்னர் பிரானின் முடிசூட்டு வைபவம் நமது இயக்கத்திற்கு மேலும் பலமளிப்பதாகும். நமது மன்னர் பிரானின் இந்திய சுற்றுப் பிரயாண நினைவுகள் இன்னும் நமது அன்பு ததும்பும் உள்ளத்திடையே குலவி நிற்கின்றன. அவர் அருளும், அன்பும், தயையும் நம்முள் அரச பக்தியைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்கின்றன. அவர் விடுத்துள்ள பட்டயத்தின் உறுதி மொழிகள் நமது இருசெவிகளில் நின்றொலிக்கின்றன. நமது நியாயமான வேண்டுகோள்களை நன்காராய்ந்து, இந்திய மக்களுக்குப் போதிய சுதந்தரம் அளித்து, ஆட்சி முறையைச் செவ்வனே செப்பம் செய்வாராயின், அதுவே அவர் இந்தியாவுக்கும், இந்தியருக்கும் நீதி வழங்கியதாகும். அதுவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மனச்சான்றுள்ள கொடையுமாகும்.

சில அயல் நாடுகள், சுயஆட்சி நல்கப்பட்டதன் காரணமாகத் தற்போது தங்கள் அரச பக்தியை உணர்த்தி வருகின்றன. நாமோ பிறவியிலேயே அரச பக்தியுடைய ஒரு சமுதாயத்தார். பிரிட்டிஷ் ஆளுகையில் நம்பிக்கை வைத்து, அதனுடன் தொடர்ந்த சம்பந்தம் நிரந்தரமாக இருக்கவேண்டுமென ஆசிக்கிறோம். சுய ஆதிக்கம் என்றும் ஒரே நிலையாக நிற்காதெனச் சரித்திரம் நமக்கு அறிவுறுத்துகிறது. மனிதர் கருத்தே கடவுளின் சித்தமாகும். எனவே, அரசியல் வர்க்கத்தார் நமது நாட்டுமக்களின் அன்பையும் நன்மதிப்பையும் பெற்று அசையாத அடிப்படையின் மீது அமைக்கும் கட்டிடம் எத்துணை வலிமை பெற்றதாகும்! அதை விடுத்து எதேச்சாதிகார ஆட்சியை நீண்டகால ஆட்சியாகச் செய்துகொண்டுபோதல் அறிவுடைமையாகமாட்டாது. தென் ஆப்பிரிக்காவின் அரசியல் காரியங்களில் அதிக நாட்டம் செலுத்தும் கனம். சேம்பர்லேன் இத்தகைய

இந்திய முயற்சிகளுக்கு ஆக்கமளிப்பரேல், அது மிகச் சிறந்த ஓர் அரசியல் தந்திரமாகும்.

இந்திய மக்களாகிய நாம் நமது தாய் நாட்டின் சுதந்தரத்திற்காகவும், நீதி முறைகளுக்காகவும் சமத்துவத்திற்காகவும் மன்றுடுகின்றோம். அவைகளுக்காக இம்மகத்தான காங்கரஸ் மூலம் நியாய வரம்பினின்று முயற்சி செய்கின்றோம். அம் முயற்சி நாளுக்கு நாள் பலங்கொள்வதால் அது சுலபத்தில் மடிந்துவிடுமென எவரும் கருதுவதற்கில்லை. காங்கரஸின் முயற்சி வேகத்தால் சீர்திருத்தம் பெற்ற நம் நாடு - நமது இந்தியா - பூரண சுதந்தரத்துடனும், பலத்துடனும், செல்வத்துடனும், என்றும் குன்ற ஊக்கத்துடனும், இங்கிலாந்துடன் நெருங்கிய உறவுடனும் ஒரு சிறந்த நாடாக ஒளிரும் என்பதில் ஐயம் உண்டோ ?''

[இந்நாவலரின் எண்ணம் 45 ஆண்டுகட்குப்பின் இன்றே பூர்த்தியாயிற்று.]

கோபாலகிருஷ்ண கோகலே

4. 1903ம் வருடம் தார்வார் நகரில் கூடிய சீர்திருத்த மாநாட்டில் கனம் கோபாலகிருஷ்ண கோகலே, சி. ஐ. இ. அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கு.

" தலைவரவர்களே ! கனவான்களே !

தங்கள் முன்னிலையில் என்னால் பிரரேபிக்கப்படும் தீர்மானத்தை முதலில் வாசித்துக்காட்டுகிறேன். யான் பொதுவாகக் கடுமையான வார்த்தைகளைப் பொதுமேடைகளில் உபயோகிப்பதை விரும்புவதில்லை. ஆயினும் இம்முக்கிய தீர்மானத்தில் செறிந்துள்ள வார்த்தைகள் எத்துணை அழுத்தமாக இருக்கவேண்டுமோ அத்துணை அழுத்தமாக இல்லையென்பது எனதபிப்பிராயம். தாழ்ந்த வருணத்தோரின் சமூக நிலைமை நமது இந்திய சமுதாயத்திற்கே இழிவுண்டாக்கும் வண்ணம் மிகக் கேவலமாக அமைந்துகிடக்கின்றது. படித்த வர்க்கத்தினர், இவர்களிடம் நடந்துகொள்ளும் விதம் மனக் கலக்கத்தை உண்டாக்குகின்றது. எனவே, இம் முக்கியத் தீர்மானத்தைக் குறித்து நீதிமுறை, சீவகாருண்யம், சமுதாய கௌரவம் ஆகிய நோக்கினின்று பொதுப்படையாகப் பேச விரும்புகிறேன்.

நம்மைப்போன்ற சரீர அமைப்பும் யோசிக்கவல்ல மூளையும் இதயத் துடிப்பும்பெற்ற மக்களை மீளா அடிமைகளாகச் செய்துவைத்து ஆளுவது, நமது நீதியான மனோபாவத்தைக் கறைப்படுத்தும் மாசுக்

குன்றும். நம்மை அவர்கள் நிலையில் வைத்து நோக்குவோமாயின், நமது கொடுமையும், குற்றமும், அநீதியும் தெற்றெனப் புலப்படும். நாம் ஒரு பூனையைத் தொடலாம்; ஒரு நாயை அணுகி ஆடலாம். ஆயினும் இம்மனித வர்க்கத்தினரைத் தொடுவதுமட்டும் தீண்டாமை யின்பாற்படுவ தென்னே?

பம்பாய் நகரில் சுமார் ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்குமுன் கனம் இரானடே அவர்கள் நிகழ்த்திய சொற்பெருக்கு ஒன்று எனது நினைவிற்கு வருகின்றது. நமது இந்திய மக்கள் தென் ஆபிரிக்காவில் சரியாக நடத்தப்படவில்லையென்ற கூக்குரல் எழுந்தகாலம் அது. நமது நண்பர் காந்தியார் இங்குச் சிறிதுகாலம் வதிந்திருந்தபோது, நேட்டால், கேப் காலனி, டிரான்ஸ்வால் முதலிய இடங்களில் இந்தியர் பொதுநடைப் பாதைகளில் நடக்க, முதல் வகுப்பு வண்டிகளில் ஏற, பொது விடுதிச் சாலைகளில் தங்க அனுமதிக்கப்படுவதில்லையென்றும், இன்னும் பல கொடுமைகளும் அநீதிகளும் இழைக்கப்படுகிறார்கள் என்றும் எடுத்துக்காட்டினார். பொது மக்களின் இரத்தம் அப்போது கொதித்தெழுந்தது. இதை மற்றவர்கள் மனதிற்கொண்டதுபோலவே கனம். இரானடே அவர்களும் கொண்டார். அவர் ஓர் அந்தரங்க ஆலோசகராகக் காந்தியவர்களுடன் கடிதப்போக்கு வரவு நடத்தி வந்தார். அது சமயம் இந்திய தேசாபிமானிகள் ஒவ்வொருவரும் தென் ஆபிரிக்காவில் இந்தியர் நடத்தப்படும் முறையைக் கண்டித்துப் பேசியபோது, கனம். இரானடே அவர்கள் முன்வந்து, "அது போன்ற பாபச் செயல்களை இந்தியராகிய நாம் இந்தியாவில் புரிந்துவரவில்லையா?" எனக் கடாவினார். "உன் உள்ளொளி கொண்டு உன்னையே உன்னிப்பாா்" என்ற தலைப்புடன் அன்று தமது பேச்சை ஆரம்பித்தார். அஃது ஒரு பிரமாதமான சொற்பொழிவு. அது மலைப்பொழிவை நிகர்த்தது. அதற்கிணையானதொன்றை இதுவரை யான் கேட்டதில்லை. தென் ஆபிரிக்காவில் இந்தியர் படுந்துயரைக் குறித்து அனுதாபங் காட்டித் தமது பேச்சை ஆரம்பித்தார். வெளி நாட்டில் வதியும் தம் நாட்டு மக்களைக் குறித்து இந்தியர்கள் விழித்தெழுந்து அநுதாப உணர்ச்சியும் வீராவேசமும் பெற்றிருப்பதைப் பாராட்டினார். அவ்வித உணர்ச்சியைப் புதையுண்ட எலும்புகள் உயிர்த்தெழுந்ததற்கு உவமைப்படுத்தினார். "நீங்கள் காட்டும் இவ்வித அபிமானமும் சிரத்தையும் இந்நாட்டினின்று வெளிநாடு போந்து துன்பம் அநுபவிக்கும் உங்கள் சகோதரர் சகோதரிகட்குமட்டுமா, அல்லது பொதுப்படையாகக் காலின்கீழ் மிதியுண்டு, ஒடுக்கப்பட்டு, நீதி வழங்

கப்பெருத இதர மக்களுக்குமா? அந்நிய நாட்டார்மீது இவ்விதக் குறைகள் கூறுவது இயற்கையே. ஆயினும், நம்மிடம் இவ்விதக் குறைபாடுகள், அநீதிகள் இல்லையாவென நாம் நம் உள்ளொளிகொண்டு பார்க்கவேண்டும்" என்ருர்.. பின்னர், இந்தியாவின் பல பாகங்களில் தாழ்ந்த வகுப்பார் நடத்தப்படும் கொடுமைகளை விளக்கிக்காட்டிய போது, சபையோர் வெட்கித் தலைகுனிந்து கண்ணீர் விட்டனர். கனம் இரானடே மேலும் தொடர்ந்து, "உங்கள் நாட்டில் உங்கள் உடன்பிறந்தாரைச் சீவகாருண்யமின்றி, நியாய வரம்பு கடந்து, நசுக்கி வதைத்துவரும் நீங்கள் தென் ஆபிரிக்காவாசிகளின் நடத்தையைக் குறித்துக் கண்டிக்க அருகராவீரோ?" என்னும் மற்றுமொரு கேள்வி யுடன் தமது பேச்சை முடித்தார். எனவே, 'தீண்டாமை' என்பது பிறவுயிருக்குத் தீங்கிழைப்பதேயாகும்.

அடுத்தபடியாகத் தீண்டாமையைச் சீவகாருண்யவழி நோக்கு வோம். நமது நாட்டில் சாதிக் கட்டுப்பாடுகளிருந்தால், மேலை நாடு களில் வகுப்பு பேதங்கள் இருக்கின்றனவென்றும், இவை இரண்டிற் கும் யாதொரு பேதமுமில்லையென்றும் கூறப்படுகின்றன. ஆயினும், சற்று ஆழ்ந்துநோக்கினுல் வித்திபாசம் வெளிப்படும். மேலைநாடுகளில் வகுப்புபேதங்கள் தாராளமான நோக்கங்கொண்டு அமைந்திருப்பவை யாம். ஆனுல், கீழ்நாட்டுச் சாதிபேதங்களோ, உருக்கு இரும்பினுல் வார்ப்பட மிடப்பட்டவைகளாகும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இன்று உன்னத பதவி வகிக்கும் கனம் சேம்பர்லேன் ஒரு சக்கிலியாவார். அவர் இன்று அரசருடனும், அரசகுடும்பத்துடனும் கலந்து விருந் துண்கிருர். பெருமக்களுடனும் சமத்துவமாகக் குலவுகின்ருர். இந் தியாவில் ஒரு சக்கிலி இவ்வித உயர்பதவியை வகிக்கவும், இவ் வளவு சமத்துவம் கொண்டாடவும் கூடுமோ? மற்றவரால் அது சகிக்கப்படுமோ? ஒரு சமுதாயம் உருக்கொள்வதற்குப் பல சமூகங் களும், அச்சமூக முன்னேற்றமும் அவசியமாகுமெனவும், சாதிக் கட் டுப்பாடுகள் அவ்வழி மிகு பயனளிப்பவையென்றும் ஒரு போசிரியர் வலியுறுத்துகின்ருர். அஃது ஒருவகையில் உண்மையாகும். நீங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் எந்நிலையில் இருந்தீர்களோ அதி லேயே எள்ளளவும் மாறுதலின்றி நிற்கவேண்டுமென்று விரும்பி ஞல், சாதிவேற்றுமையை மாற்றியமைக்கவோ களையவோ முனைய வேண்டுவதில்லை. ஆயினும் நெடுங்காலமாக நாம் அமிழ்ந்துகிடந்த சகதியினின்றும் வெளியேறவேண்டுமாயின், சாதிக்கொள்கைகளை இன் னும் கடைப்பிடித்தொழுகுவது நன்றன்று.

இறுதியில் யான் ஒன்றே கூறுவேன். நாம் ஒரே சமுதாயமாக விளங்கி, எல்லா நலன்களையும் பெற விரும்பினால் 'தீண்டாமை' எனும் தீய அரக்கனை காலந்தாழ்க்காது வெட்டி வீழ்த்தல்வேண்டும். இதை விட உயர்ந்த அல்லது பரிசுத்தமான பணி உலகில் வேறில்லை. நமது நாடு இன்றுள்ள நிலைமையில் முதியோர் சேவையை நாடவில்லை. தன வந்தரின் பொருளை ஆசிக்கவில்லை. நமது பல்கலைக் கழகங்களில் படித்துத் தேர்ந்த பட்டதாரிகளில் நூற்றுக்கு ஒருவரேனும், ஆங்காங்கு முனைந்து உழைக்க முன்வருவாராயின், தீண்டாமை அல்லது தீண்டா வகுப்பார் இந்நாட்டில் வதிய இடமுண்டோ? இன்று வேண்டுவ தென்ன? படித்த இளைஞரிடையே பரந்தநோக்கும், தியாகசிந்தையுமே. இவை நமது முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தி, நாட்டையும் நாட்டுமக்களையும் புனிதப்படுத்தும்."

[இப்பெரியார் தமது அறவுரையைச் செயலில் காட்டியவர். தாம் தரித்திருந்த பூணூலை அகற்றி இறுதிவரை அந்தண்மை பூண்டொழுகினர்.]

மகாகனம் சாஸ்திரியார்

5. மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், காலஞ்சென்ற உயர் திரு. ஏ. அரங்கசாமி அய்யங்கார் அவர்களுடைய உருவப்படத் திறப்பு விழாவில் ஆற்றிய சொற்பெருக்கு.

"சீமாட்டிகளே, சீமான்களே!

உலகத்தின் உயர்வெல்லாம் தனிச் சிறப்புவாய்ந்த சில பெருமக்களின் அரிய தொண்டுகளாலே தோன்றி நிலைபெறுவதாகும். ஒவ்வொரு நாடும் அவ்வந்நாட்டில் தோன்றும் பெரியோரால் அவ்வாறே நலனடையும். மிகப் பெரியார் சிலரது வாழ்க்கை, காலம், இடம் என்னும் பாகுபாடுகளைக் கடந்துநின்று, எந்நாட்டிலும், எக்காலத்தும் பயன் தருவதாம். இத்தகையோரது நினைவை உலகம் பலவகையாக நிலை நாட்டி, அவர்தம் தொண்டிற்கேற்றவாறு போற்றிவருகின்றது.

தேச முன்னேற்றத்திற்கும், தமிழ்மொழிக்கும் பெருந்தொண்டாற்றிய நமது உயர்திரு - ஏ. அரங்கசாமி அய்யங்கார் நம் நாட்டுப் பெருமக்களில் ஒருவராவார். அவரது தொண்டின் பயனைப் பொதுவாக நம் தேசத் மக்களும் சிறப்பாகத் தமிழ்மக்களும் சென்ற முப்பது ஆண்டுகளாக அநுபவித்துள்ளனர். அவரது அருஞ் செயல்களை நினைக்கும் போது முதலில் நம் கண்முன் அவர் உருவம் நிற்கின்றது. மலரின் மணம் மலரைக் காணுவிடத்தும் நுகரப்பெறும். மலரைக் கண்ட

விடத்து அது பெருமகிழ்ச்சியை விளைவிப்பதைப் போன்று, அப் பெரியாரது செயல்களும், குணமும் அவரது உருவைக் காணும்போது பெரும்பயனைப் பன்மடங்கு வலியோடு அளிப்பனவாம். உலகத்தே பெரியார் பலருக்கு உருவச்சிலை நாட்டியும், நினைவுச் சின்னங்கள் கட்டியும், உருவ ஓவியங்களைப் பொதுவிடங்களில் அமைத்தும் பாராட்டுதல் இந்நோக்கத்தாலேயாம். எனவே, இச்சபையார் உயர்திரு. அய்யங்கார் உருவ ஓவியத்தை ஈண்டு நாட்டுவது சாலப்பொருந்தியதொன்றும்.

இந்நாள் புகழுடம்புபெற்று விளங்கும் உயர்திரு. அய்யங்கார், ஒரு விழுமிய அரசியல் அறிஞரென்பதில் ஐயமில்லை. பொதுப்பிரச்னைகள் நாட்டில் எழுந்தகாலத்து, அவரது ஆலோசனையைப் பெற நமது நாடு விழைந்ததென்பது மிகையன்று. தேசப் பொதுவாழ்க்கையிலும், பொருளாதாரத் துறையிலும், தீரமாக ஈடுபட்ட இயக்கங்களுடனும், தலைவர்களுடனும் மிகத் தீவிரமாகக் கலந்து அவர் பின்னிடாது உழைத்தவர். பல அரசியல் சபைகளில் செயலாளர் எனும் பொறுப்பு வாய்ந்த பதவிகளை ஏற்று அவர் ஆற்றியுள்ள தேசக் கடன்கள் எண்ணில.

1931ம் ஆண்டில் வட்டமேசை மாநாட்டுப் பேச்சு நாடெங்கும் செவிபட முழங்கிற்று. இங்கிலாந்தில் முதல்தடவையாக அது கூடிய போது உயர்திரு அய்யங்கார், மகாத்மாகாந்தியவர்களின் சொந்தக் காரியதரிசியாகவும், அரசியல் ஆலோசகராகவும் சென்றகாலை, இந்திய தேசாபிமானிகளின் முழு நோக்கும் கவனமும் அவர்மீது பாய்ந்தன. அவ்வமயம் யானும் இங்கிலாந்தில் இருந்தேன். நான் உயர்திரு அய்யங்காரை அடிக்கடி சந்திப்பதும் மாநாட்டைக் குறித்து உரையாடுவதும் உண்டு. உயர்திரு அய்யங்காருக்கும் எனக்கும் மாநாட்டின் நடவடிக்கைகள் உற்சாகமளிக்கவில்லை. இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்குமிடையே உண்டாய பிளவைச் சரிப்படுத்த முற்பட்ட எங்கள் முயற்சி எரிந்து சாம்பராயிற்று.

காந்திஜியின் பேச்சுக்களில் உயர் அய்யங்காரின் யோசனைகள் பல விரவியிருந்தும், அவைகள் அவர் உருக்கொடுத்ததென வெளிவராத காரணம் யாதென யான் அவரைக் கேட்டதுண்டு. என் வினவிற்கு அவரிறுத்த விடை இதுதான்: "இங்கு நடைபெறுவனவற்றை உய்த்துநோக்கின் ஈண்டு நாம் போதரவேண்டுவதில்லை. காந்திஜியின் காரியதரிசியென யான் அழைக்கப்படுவது உண்மையில் பெருமையளிப்பதாகும். ஆயினும் அவர் மனத்தில் பதிந்துள்ள கருத்துக்கள், உள்ளக்கிடக்கைகள் எவை என்பதுபற்றி உங்கட்கு எத்துணைத்

தெரியுமோ, அத்துணையே யானும் அறிவேன். காந்திஜி எச் செய்தி பற்றி வெளிப்படையாக என்ன கூறுகின்றாரோ அதுபற்றி அவருக்கே அதைவிட அதிகம் தெரியுமெனக் கூறுவதற்கில்லை" என்றார். இரண்டாண்டுகளுக்குப்பின் நானும் நண்பர் அய்யங்காரும் லண்டனுக்குச் சென்றோம். பார்லிமெண்டு கூட்டுக்க்ழகவேலை முடிந்தபின் நமது நாடு திரும்பிய உயர்திரு அய்யங்கார்மாட்டு இந்திய அரசியல்பற்றிய நம்பிக்கையோ உள்ளக் கிளர்ச்சியோ சிறிதும் காணப்படவில்லை. அன்றிருந்த நிலைமையில் முழுப் புரட்சி ஏற்படவேண்டுமென்ற பிரார்த்தனையில் எங்கள் காலங்கழிந்தது.

உயர்திரு ஏ. அரங்கசாமி அய்யங்கார் பத்திரிகைத் தொழிலொன்றே தமக்கு ஏற்றதென்று நினைத்து அத்துடன் திருப்தியடைந்தாரா? இதற்கு நான் திட்டமான விடையிறுப்பதற்கில்லை. பத்திரிகைத் தொழிலுக்கு ஈடாகப் பல துறைகளிலும் அவருக்கு அபூர்வமான திறமை யுண்டு. பொருளாதாரம், அரசியல், அரசாங்கச் சட்டம் முதலியவற்றைக் குறித்து அவருக்கிருந்த நுண்ணறிவு இணையற்றதென எங்கும் புகழ்ப்பெற்றது. அரசியல் உலகில் தலைமை இடம் பெற்று முன்னணியில் நிற்பதற்கும், உன்னதப் பதவிகளைக் கைப்பற்றுதற்கும் தமது தோழர்களைப் பின்னுக்குத் தள்ளிக் காட்டிக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டவர்கட்கே முடியும். பொதுமக்களிடையே விளம்பரத்தை விரும்பாதவர்கள் எத்துணைத் திறமைசாலிகளாயினும் அவர்கள் பின்னணியில்தான் நிற்கவேண்டும். காரியங்கள் செவ்வனே நடைபெற்றால் தாம் எங்கிருப்பினும் சரியென்றெண்ணித் தமது அரசியல் அறிவையும், தேசபக்தியையும் பிறர்மூலம் விளக்கி "ஜே" கோஷத்தை விரும்பிய மற்றவர்கட்கே தலைவர் பதவியை விட்டுக்கொடுத்தார்.

உயர்திரு ஏ. அரங்கசாமி அய்யங்கார் வாழ்க்கை மக்கட்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். உண்மையான தேசாபிமானிகள் வேறு நலன்களை விரும்பாமலே தமது திறமை, அறிவு முதலியவற்றைப் பொது வாழ்க்கை நலத்திற்காகவே தியாகம் செய்வதற்கியலுமென்பதை நிரூபித்துள்ளார். உயர்திரு ஏ. அரங்கசாமி அய்யங்கார், நாட்டின் நன்மைக்காகவே பிறந்தார்; உயிர் வாழ்ந்தார்; மறைந்தார்; இன்று புகழுடம்பு பெற்றுள்ளார் எனக் கூறுவது புனைந்துரையன்று. ஆகலின் அவரது அழகிய இவ்வுருவ ஓவியத்தை, மனத்துயர் ஒருபுறமிருக்க, மிக்க மனக்களிப்புடன் திறந்துவைக்கிறேன். அவரைப்போன்ற தன்

னலம் விரும்பாத தேசாபிமானிகள் பலர் தோன்றி நமது நாட்டைச் சிறப்புறச் செய்யவேண்டுமென்ற பிரார்த்தனையும் புரிகின்றேன்."

[இது மகாகனம் சாஸ்திரிகளின் அங்கீகாரம்பெற்ற மொழிபெயர்ப்பாகும். இந்நூலாசிரியருக்கும், உயர்திரு அய்யங்காருக்குமிடையே மிளிர்ந்த நட்பு இப்பேச்சைத் தேர்ந்தெடுக்கச் செய்தது.]

திருமதி சரோஜனி தேவி

6. திருமதி சரோஜனி தேவியார் (தற்போதைய ஐக்கிய மாகாண அதிபர்) ஆசிய உறவு மாநாட்டில் பேசியது.

" நண்பர்களே !

பழம் பெருமை படைத்த, ஆனால், என்றும் இளமையே நிறைந்திருக்கும் நமது இந்தியத் தாய் ஆசியநாடுகள் அனைத்துக்கும் பண்டை நாளில் கூறியதுபோலவே இன்றும் நல்வரவு கூறி நிற்கின்றாள். அவளுடைய அன்பான அழைப்புக்கிணங்கி வானத்தை முட்டிநிற்கும் மலைகளைக் கடந்து, ஏழு கடல்களையும் தாண்டி மக்கள் இங்கு ஈண்டியுள்ளனர். பாரதமாதாவின் ஆசிகளைப் பெறவும், நாட்டின் அறிவு, பண்பு, என்றுமழியாச் சமாதான நோக்கு முதலியவற்றை அள்ளி அள்ளி வாய் மடுக்கவும் இரவு பகலாக வானவெளியில் மேகங்களின்னூடே பறந்து வந்து சேர்ந்துள்ளனர்.

உரமான அடிப்படையின்மீது தமது எதிர்கால வாழ்வை நிர்மாணிக்கவேண்டிய சக்தியும் எழுச்சியும் பெறுவதற்காகவே வாழ்க்கை மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் யாத்ரீகர்களாக அவர்கள் இங்கு வந்துள்ளனர். அந்த எதிர்கால அமைப்பு, அந்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்வுக்கும் அடிகோலுவதோடு தொன்றுதொட்டு வழங்கிவரும் பழக்க வழக்கங்களுடன் ஒன்றியதாகவே இருக்கும். பழமையின் சாயல் இருந்தாலும், புத்துணர்ச்சிபெற்று வீறுகொண்ட ஆசியா, நாகரிக உலகோடு சமமாக நிற்க அவை உறுதுணையாக உதவுவனவாம்.

ஆசிய மாநாட்டிற்கு அண்டைநாடுகளிலிருந்தும் வந்துள்ளார்கள் ; நெடுந்தொலைவிலுள்ள-யாவருக்கும் தெரியாத, ஆசியநாட்டு மூலை முடுக்குகளினின்றும் பலர் வந்திருக்கிறார்கள். அவர்கள் பலதிற நாகரிகமுடையவர்கள் ; முரண்பட்ட கோட்பாடு உடையவர்கள் ; பல்வேறு மொழி பேசுகிறவர்கள். அவர்களின் வாழ்க்கைமுறையும் வேறுபா

டையதே. வாழ்க்கையின் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க அவர்கள் கடைப்பிடிக்கும் வழிகளும் வித்தியாசப்படுவனவாம்.

நம் பாரதத்தாயின் அழைப்புக்கிணங்கி அந்நியநாட்டிலிருந்து மிகப்பலர் வந்து குழுமியுள்ளனர். பழம்பெருமைகளை நினைவூட்டும் இந்திய தேசத்தில் அனைவரும் சந்தித்து, வருங்காலம் எனும் அழகான ஆடையை விதி எனும் தறியிலிட்டு நெய்வதற்கு முன்னணிவேலை செய்வதே அவர்கள் மேற்கொண்டுள்ள கடமை. பகற்கனவான ஒன்றை நடைமுறையில் செய்துகாட்ட நமது இந்தியத் தாயை அன்றி வேறு யாரால் முடியும்? ஏனெனில் ஆசிய மாநாடு ஒரு மகத்தான மாநாடாகும்; அது அரியபெரிய காரியங்களைச் சாதிக்கவல்ல ஒரு சரித்திர நிகழ்ச்சியை உண்டாக்கவல்லதாகும்.

நேற்றுவரை, இந்த நாடுகள் நமக்கு நெடுந்தூரத்திலிருந்தன. போக்குவரவற்ற அந்நிய நாடுகளாகவே அவை இருந்தன. நாம் சிறுவர்களாக இருந்தபொழுது சீனு, ஈரான், பர்மா, சயாம், ஜாவா, எகிப்து, அரேபியா ஆகிய பிரதேசங்களும், கைபர்க் கணவாய்க்கு அப்பாலுள்ள மலைப்பிரதேசங்களும் அவற்றின் பெருமைகளும் சிறப்புக்களும் நம்மைக் கேள்வியளவில் பரவசப்படுத்தின. திபேத் என்ற ஒரு தேசமிருப்பதைக் கதைகளில்தான் படித்திருக்கிறோம். மங்கோலியா நமக்குப் புதிதாக இருந்தது. அந்நாட்டின் நகரங்களைப் புராணக் கதைகளிலும், பூகோள நூலிலும் படித்திருக்கின்றோம். ஆனால் இன்று ஆசியா விழிப்புற்றுள்ளது. அஃது இன்று உயிர்நாடிகொண்டு விளங்குகின்றது. பற்பல நூற்றாண்டுகளாக உறங்கிக்கிடந்த நாட்டைக் காலத்தோடு உலகத்தோடு சமமாக நிற்குமாறு தட்டி எழுப்பியுள்ளது. சமூக, பொருளாதார, தேசீய, ஆத்ம விலங்குகளை உடைத்தெறியாவிட்டால், அழிந்துபடுவது திண்ணம் என்பதை ஆசியா இன்று உணர்ந்துள்ளது.

சுதந்தரம்தான் ஆசிய மக்களின் மனதில் வேரூன்றிப் பதிந்திருக்கும் வேட்கை. புத்துயிர்பெற்ற இந்தியா பிற ஆசிய நாடுகளுக்கெல்லாம் சங்கம் ஊதி அழைப்பு விடுக்கிறது. சமாதானத்தைத் தழுவி நிற்போம் என்று ஒன்றுகூடிப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள இந்தியா கூவி அழைக்கின்றது.

சமாதானமே சகல நாகரிகத்திற்கும் கலாசாரத்திற்கும் பாதுகாப்பு அளித்தற்கியலும். அதுதான் மனித சமூகத்தைப் போற்றி வளர்த்து, இடைஞ்சலற்ற சுதந்தரத்தையும், சௌந்தர்யத்தைச் சிருட்டிக்கும் சந்தர்ப்பத்தையும், சத்தியநெறியில் ஒழுகி மாறாத அன்பும்

உணர்ச்சியும் ஊட்டும் உண்மையான நட்பையும் கொடுக்கவல்லதாம். எனவே, ஆசிய மாநாடு பாரதத்தாயின் அருளால் வெற்றிபெறுவதாக! ஆசிய மக்கள் ஒருமித்து வாழ்வார்களாக!"

சர். எஸ். இராதாகிருஷ்ணன்

7. சர். சர்வேபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களின் பட்டமளிப்பு விழாப் பேருரை.

" இளைஞர்களே!

சர்வகலாசாலைப் பட்டத்தை ஒருவர் பெறுதல் அவர் வாழ்நாள் பிரயாணத்தில் ஒருகல்தூரம் நடந்ததேயாகும். கல்வியென்னும் பெரும் பாட்டையின் முடிவை அது கண்டதாகாது. அஃது உண்மையிலேயே ஒருவருடைய வாழ்நாள் பிரயாணத்தின் ஆரம்பமெனச் சொல்லலாம். சர்வகலா சங்கத்தின்மூலம் ஒருவருடைய கல்வித் தேர்ச்சியையும், மன வலிமையையும், நடைமுறைப் பழக்கங்களையும் சோதித்தறியலாம். சர்வகலாசாலைகள் எக்கலையை வளர்க்கக் கங்கணம் பூண்டுள்ளனவோ, அத்தகைய நூதனக் கலைகளையும், உலகானுபவங்களையும், புதிய பிரச்னை களையும், செல்வாக்கான பதவிகளையும் தம்மிடம் கற்றுத் தேர்ந்த மாண வர்கள் பெறவேண்டுமென மிக எதிர்பார்க்கின்றன. இந்தியா மிக விரைவில் சுயேச்சை பெற்றுவிடுமெனக் கூறுவதற்கு ஒரு தீர்க்கதரி சியை நாம் தேடி அலையவேண்டுவதில்லை. வருங்காலமோ மிக அழ கானது. அது மாணவர்கட்கு உன்னதப் பதவிகளையும், பொறுப்புக்களை யும் கொடுக்கவல்லது. ஒரு நூதன இந்தியாவைத் தலையெடுக்கச் செய்வது சர்வகலாசாலைகளில் படித்துத் தேர்ந்த வர்க்கத்தினரின் தலை யாய கடனும். சரித்திர சம்பந்தம்பெற்ற அக்கடமைகளை ஒருவர் சாதாரணமாகப் பெருக்கியும் அடுக்கியும் கூறிவிடமுடியாது. இன் றுள்ள சர்வகலா சங்கங்கள் உயர்தரக் கல்வியையும் தொழிற்கல்வியை யும் தருவனவாயும் நன்னடக்கைக்கு வித்திடுவனவாயும் நுண்ணறிவு பெற்ற நூதன இளந் தலைவர்களை உண்டாக்கவல்லனவாயும் நமது நாட்டில் அமையப்பெற்றிருக்கின்றனவென்பது கண்கூடு.

நீடித்த - முற்றும் ஆலோசிக்கும் ஆற்றலையும், பொதுமக்களின் விருப்பு, வெறுப்பு முதலியவற்றால் அலைக்கப்படாத மனப்பான்மையை யும், கலகக்காரரின் கோபத்தைப் பொருட்படுத்தாத பெருங்குணத்தை யும் ஒருவர் அடையப்பெறுவிட்டால், சர்வகலாசாலைக் கல்வி அவருக்கு

யாதொரு பயனையும் அளிக்கவில்லையெனக் கூறலாம். ஒரு படிப்பாளி உண்மைப்பொருளைப் பின்பற்றிச் சென்று அது நடத்திச்செல்லும் இடங்களுக்குச் செல்வது இயற்கை. ஆராய்ந்தறியாது எல்லோரும் செய்வதை ஓர் உயர்தரப் பட்டதாரி செய்வதற்கு ஒருப்படார். அறிவுமிகுதியால் ஒருவர் ஆதிக்கம் பெறலாமென்பதையும், சத்தியத்தைக் கடைப்பித்தலால் சுயேச்சை பெறலாமென்பதையும் அப் பட்டதாரி நன்குணர்வார். நூதன இந்தியாவைத் தலையெடுக்கச் செய்வதில் நாம் ஒவ்வொருவரும் நன்கு ஆழ்ந்து யோசித்து, யூகமான திட்டங்களை வரையறுத்து வகுத்தல்வேண்டும். புத்தம்புதிய நோக்கை மேற்கொள்வதால், நம்பிக்கையான பல திட்டங்களையும், மக்களுக்கான சட்டங்களையும் நிர்மாணித்தல்கூடும். வேலைக்காரர்கள் கல்லையும் சுண்ணும்பையும் கையிற்கொண்டு வேலை ஆரம்பிக்காமுன்னரே, அவர்கள் மனம் பல கோபுரங்களையும் கோட்டைகளையும் கட்டிவிடுகின்றன. பஞ்சபூதங்கள் அவைகளை அழிக்குமுன் மனிதர்மனம் அவைகளை நொடிப்போழ்தில் அழித்துவிடுகின்றதென ஆசிரியர் ஓபிட்எட் என்பார் கூறுகின்றார். சரித்திரங்களில் ஒரு காரியம் மகத்தானதென வரையப்படுமுன், அவை வெறும் மனோ கற்பனையினின்றும் உதித்தவைகளேயாகும். சத்தியம், புனிதம் ஆகியவை உலகில் மக்களை இயக்குவிப்பது உண்மையாயின், அவை ஒருவர் மனோவலிமைக்குக் கீழ்ப்படிகின்றனவென்பதும் உண்மையாகும். கற்பனையான எண்ணங்கள் உலகை இயக்குவிக்கின்றன ; நூதன உலகை உண்டாக்குகின்றன; கண்மூடி வழக்கங்களையும், இழிந்த எண்ணங்களையும், தகாத நடவடிக்கைகளையும் முறியடிக்கக்கூடிய ஆற்றல் பெற்றுவிடுகின்றன. சமூகாபிவிருத்தியைப் புதிய முறையில் அமைப்பதற்கு இன்றியமையாத தகர்த்தெறியும் சக்தியை அடிப்படையாகக் கொண்டவர்களையும் மனோபாவமுடையவர்களையும் கண்டுபிடிக்க வேண்டுமாயின், நமது நோக்கு சர்வகலாசாலை வித்தியார்த்திகளிடத்தும், கருத்தாளர்களிடத்தும் செல்லாது வேறு யாண்டுச் செல்லுதல்கூடும்? ஐரோப்பாவிலுள்ள பற்பல சமுதாயங்கள் சென்ற சில நூற்றாண்டுகளாகப் பல மாறுதல்கள் அடைந்து வருகின்றன. அறிவு மறுமலர்ச்சியும், கைத்தொழில் புரட்சியும், அரசியல் போராட்டமும், நூதன மத உணர்ச்சியும் நமது நாட்டில் எங்ஙணும் பரவி வருதல் கண்கூடு. மற்ற நாடுகளிலும் இந்தியா மிகப் பெரிய தேசமாகையால் அவ்வித மறுமலர்ச்சியை எல்லாத் துறைகளிலும் மீசுரமாகவும் உடனடியாகவும் பெறுதல் முறையன்றோ ?"

சர். ஏ. இராமசாமி முதலியார்

8. வைசிராய் நிர்வாக சபை அங்கத்தினராயிருந்தவரும் தற்போதைய மைசூர் திவானுமான சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்களின் திறப்புரை (1935)

"இளைஞர்களே!

இந்நாட்டில் ஒவ்வொரு வகுப்பாரும் தத்தம் முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் இந்நாள், அரசியலார் குடிசைத்தொழில் களை அபிவிருத்தி செய்ய முனைந்திருக்கும் இவ்வேளை, முன்னேற்ற மடைவதற்கான இத்தகைய முயற்சியைக் கைத்தொழிலாளரே மேற் கொண்டிருத்தல் மெச்சத் தக்கதாம். இக்காரியங்களில், தேச யுவர் களுக்குத் தனிமையான கடமை இருக்கிறது. கைத்தொழில் வகுப்பு யுவர்களுக்கு அதனிலும் மிக்கப் பொறுப்புண்டு. வகுப்பு முன்னேற்றத் திற்கு வேலை செய்யும் பெரியோர்களுக்கு யுவர்களே பக்கபலமாக இருந்து, தங்கள் படிப்பின் பயனைக் காட்டி யோசனை சொல்லி வருதல் வேண்டும். தேசத் தொண்டாற்றுவதில் யுவர்கள் எவ்வித உயர்வு தாழ்வும் பாராட்டலாகாது. தேச நலனும், தம் வகுப்பு முன்னேற்றமும் அவர்களுடைய குறிக்கோளாதல் வேண்டும்.

இந்தியா தொன்றுதொட்டு ஒரு விவசாய தேசமாக இருந்துவரு கிறது. விவசாயமோ காலநிலைகளுக்கேற்றவாறு மாறுபட்டு, தேசப் பொருளாதார நிலைமையைப் பீடிக்கின்றது. ஆகலின் கைத்தொழிலில் இந்தியா தேசம் இதர நாடுகளை யொத்து அபிவிருத்தியடைய வேண்டு மென்பது தேசாபிமானிகளின் பேரவலாகும். இதற்கு அடிப்படை யாகத் தற்போதுள்ள நமது நாட்டுக்கல்வி முறை அடியோடு மாற்றித் திருத்தி அமைக்கப்படல் வேண்டும். இந்நாளிலுள்ள கணக்கற்ற சர்வ கலாசாலைகளால் எண்ணிறந்த நடுத்தர வகுப்பினர் படித்துப் பட்டதாரி களாகி வேலையில்லாமல் அல்லற்படுகின்றனர். இம்மாதிரி நிலைமை ஏற் படாதிருப்பதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குதற்கும் நமது கல்வி முறையை இனித் திருத்தியமைப்பது அவசியமாகும். தொழிற் கல்வி மிகுதியும் பரவுதற்கான வசதிகள் இந்நாடெங்கும் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

சென்னை அரசியலார் ஐந்து வருடங்களுக்குமுன் குடிசைத் தொழில் சம்பந்தமாக மாகாண முழுதும் ஆராய்ச்சி நடத்தி முடிவு கண்டுள்ளனர். இதன் முழு விபரங்களையும் பாமர மக்கள் அறிந்துகொள்ளுமாறு ஆங்காங்குச் சென்று பிரசாரம் செய்ய

வேண்டுவது யுவர்களின் தலையாய கடனும். இதனால் படித்து வேலை யற்றிருக்கும் அவர்கட்கு ஒருவிதப் பிழைப்பும் நாட்டுக்கு நலனும் ஏற்படும். இதற்கான திட்டங்களை வகுத்தல் இதுபோன்ற மகாநாடுகளின் கடமையாகும்.

நிற்க, இந்நாள் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரப் போட்டியில் கைத்தொழிலாளர் தங்களைத் தாங்களே சமாளித்துக்கொள்ளத் தயாராக இருத்தல்வேண்டும்; சிக்கன வாழ்க்கையை மேற்கொள்ளல் வேண்டும். இதுபோன்ற தொழிலாளர் இயக்க அமைப்புக்களை நாடெங்கும் காண்டல்வேண்டும். ஜர்மனியை யொத்து ஏராளமான கூட்டுறவுச் சங்கங்களை நமது மாகாண முழுதும் ஏற்படுத்திக்கொண்டால், நமது பூர்வீக நாட்டுக் கைத்தொழில்கள் பாதுகாக்கப்பட்டு, நூதனத் தொழில்கள் விருத்தியடையும். நமது நாட்டிலிருந்து மறைந்து போன வகுப்புத் தொழிற் சங்கங்களை (கில்டு) மீண்டும் உயிர்ப்பித்தல் வேண்டும். படித்த யுவர்களைத் தக்கவாறு தொழிலில் பயிற்சி செய்வித்தல் முறையாம். காலத்திற்கும் தேவைக்கும் ஏற்றவாறு தொழில்களை எந்தெந்த வழியில் சீர்திருத்தம் செய்யவேண்டுமோ அவற்றில் முழு கவனத்தையும் செலுத்தித் திருத்தப்பாடு செய்தல்வேண்டும். குடிசைத்தொழில் அபிவிருத்தியில் அரசியலார் தற்போது ஊக்கங் கொண்டிருப்பதால், தருணமறிந்து அதனைக் கைத்தொழிலாளர்கள் பயன்படுத்திக்கொள்வார்களென நம்புகிறேன்.

நமது நாட்டில் சரீரப் பிரயாசையால் செய்யப்படும் வேலைகளை இழிவாகக் கூறுவோர் இந்நாள் யாருமில்லை. இயந்திரங்கள் அதிகரித்த போதிலும், அவை கைவேலைத்திறனை எந்நாளும் வெல்லா. கைகள் ஒருவர் மனம்போல் வளைந்து கொடுக்கும் ஆயுதங்களாம். இந்தியாவில் இயந்திர வேலைகள் எத்துணையளவு விருத்தியடைந்தாலும், கையினுதவியால் செய்யப்படும் பல தொழில்கள் மறைந்துபோகும்படி அவைகளால் எக்காலத்தும் செய்யமுடியாதென்பது உறுதி. இப்போது ஏதேனும் ஒரு தொழிற்கல்வித் தேர்ச்சியின்றி, வெறுங் கல்வியாலும், இயந்திர சகாயத்தாலும் நாட்டுக்கும் நாட்டுக் கைத்தொழில்கட்கும் நன்மை ஏற்பட்டுவிடாது. எனவே, இந்நாட்டுக் கைத்தொழில் வகுப்பு மக்கள் வெறுங் கல்வியோடு திருப்தியடையாமல் கைத்தொழிலில் பழகவேண்டுவது மிக அவசியமாகும். படித்த கைத்தொழில் யுவர்கள் அரசியல் உத்தியோகங்களையும் அடிமைத்தொழில்களையும் ஆசித்தல் வெட்கக்கேடாம்.

நான் உலகத்தின் பல பாகங்களையும் பார்த்திருக்கிறேன். அவைகளிலுள்ள தொழில் நுட்பங்களை வெகுவாகக் கவனித்திருக்கிறேன்.

மிக வேலைப்பாடுள்ள தங்க வெள்ளிச் சாமான்களை அற்புதமாகச் செய்வதில் இம்மாகாணத்திலுள்ள தொழில் நிபுணர்களைப்போல் பிரிட்டனிலோ மற்ற நாட்டிலோ இல்லை. நமது தேசத் தொழிலாளரின் வேலைத்திறனை மிஞ்சக்கூடியவர்கள் எங்குமில்லையென மீண்டும் ஊன்றிக் கூறுகிறேன். ஏனெனில், தொழில் ஞானம் இவர்களுக்கு தலைமுறை தத்துவமாக வளர்ந்து வந்திருக்கிறது. ஆனால், உள்ளதே போதுமென நீங்கள் திருப்தி யடைந்துவிடக்கூடாது. நீங்கள் கைத்தொழிலை அப்பியசிக்குமுன் போதுமான பொதுக்கல்வி யிருந்தால் உங்கள் வேலையைத் திறமையாகவும் இலாபகரமாகவும் நடத்தமுடியும். ஏழை மக்களாகிய உங்கள் வகுப்பின் பெரும்பாலருக்கு வெறுங்கல்வி மட்டும் உணவளித்து விடமாட்டாது என்பதை நினைவில் வைத்து இம்முக்கியக் காரியத்தில் மற்ற தேசத்தாரை எடுத்துக்காட்டாகக் கொண்டு நீங்கள் நடந்துகொள்ளல் வேண்டும். இனிப் பேச்சளவில் நில்லாது, செயலளவில் உங்கள் சமூகாபிமானத்தையும், பரோபகாரத்தையும், தேசாபிமானத்தையும், வீரத்தன்மையையும் நிலைநாட்டுங்கள். கடவுள் உங்கள் அரிய முயற்சிக்கு அருள்புரிவாராக!"

நீதிபதி சந்திரசேகர அய்யர்

9. உயர்திரு. எஸ். சத்தியமூர்த்தியாரைப் பற்றிய பாராட்டுப் பேச்சு.

" இளைஞர்களே!

உயர்திரு. சத்தியமூர்த்தியின் அரும்பெரும் குணங்கள், பேச்சு வன்மை, பிரசாரவேலை, பொதுஜனசேவை ஆகிய தொண்டுகளை மதிப்பிடுவது எளிதல்ல. அவருக்குத் தேசப்பற்று மிக அதிகம். அவர் ஒரு சங்கீதப் பிரியர். நாடகத்திலும் பங்கெடுத்துக் கொண்டவர். கலைவளர்ச்சியில் மிக்க ஆர்வம் கொண்டவர். நிறையப் படித்தவர். வடமொழியில் பாண்டித்தியம் உண்டு. எவருடனும் அன்புடன் பழகுவார். ஆனால், எதிர்க்கும்போது தயை தாட்சண்யம் காட்டார். எதிரிகளைச் சம்மட்டி கொண்டு அறைதல் போல் மண்டையில் அடித்து விடுவார். ஆயினும் சபையின் நடைமுறை விதிகளை நன்றாகப் பின்பற்றியே பேசுவார். திரு. சத்தியமூர்த்தியார் தாம் பார்ப்பனரென்பதில் பெருமை கொண்டார். இந்திய சமுதாயத்தை உருப்படுத்துவதில் பார்ப்பன வகுப்பாருக்கும் பங்கு உண்டென்பதை உணர்ந்து நடந்தார். இது இதர பார்ப்பன அன்பர்கட்கு ஓர் எடுத்துக் காட்டாதல் வேண்டும்.

இந் நாட்டில் வகுப்பு வாதம் தொலைய வேறுபாடுகள் பூரணமாக ஒழிய வேண்டும். சர்க்கார் உத்திரவுகளிலும், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதிலும், பாஷையிலும் வகுப்பு வேற்றுமை அறவே ஒழிதல் நாட்டுக்கு நலந் தருவதாகும்.

திரு. சத்தியமூர்த்தி அரசியல் துறையில் வெகு சமர்த்தர்; வாசாலகர். பக்குவமாகவும் பிரமாதமாகவும் நீர் வீழ்ச்சி போல் சொன் மாரி பொழிய வல்லவர். கூட்டத்தின் மனப்பான்மையை அளந்து கட்டி அதற்குத் தகுந்தபடி பேசுவார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சண்டமாருதம் போல் வீசுவார். கூட்டம் பெருகப் பெருக அவருக்கு ஊக்கமும் உற்சாகமும் பெருகும். சபையோர் மனப்பான்மையை நன்குணர்ந்து அவர்கள் ரசிக்கும்படிச் சித்தரித்து அலங்காரமாகப் பேசுவார். பேச ஆரம்பித்தால் இனிய நாதம் கட்டும். வீணைத்தந்தி மீது விரல் ஓடி ஒலி எழுப்புவது போல் அவர் பேச்சு மிகஇனிமையாக வெளிவரும். நகைச்சுவை மலியப் பேசுவார். ஆணித்தரமாகவும் பேசுவார். சட்டசபையில் அவர் செய்த சேவை அளவிடற்கரியது. அவருடைய வாதப்போர் எங்நாட்டு மக்களையும் வியப்பில் ஆழ்த்தும். சர்க்கார் கட்சியை விளாசி விடுவார்.

உயர்திரு. சத்தியமூர்த்திக்கு மக்களின் க்ஷேமாபி விருத்திக்கான எச்சபைகளிலும் ஸ்தாபனங்களிலும் பங்குண்டு. ஓயாத உழைப்பு, சலியாத சேவை, தேர்தல் பிரசாரம் ஆகியனவற்றில் முழு மூச்சுடன் இறங்கினர். காங்கிரஸ் இம்மாகாணத்தில் அதிகாரத்திற்கு வர அவரது பிரசாரமே முக்கிய காரணம். பதவியேற்று அதிகாரம் வகிக்கும் சமயம் வந்தவுடன் அவர் வெளியே தங்கவேண்டியதாயிற்று. அவர் ஊருக்கு உழைத்தாரே அன்றி வேறு என்ன கைம்மாறு கண்டார்? நயவஞ்சகமான நண்பர்களின் சூழ்ச்சி அவரைப் பதவிகளினின்றும் விலகி நிற்கச் செய்தது. போட்டியாளராகக் கருதப்பட்டு அவர் வேண்டுமென்றே நீக்கப்பட்டார். அவர் ஏணியானர். அதன்உதவியால் மற்றவர் உயர்ந்தனர்.

உயர்திரு. சத்தியமூர்த்தியின் சேவைகளைப்பற்றி எல்லோருமே பேசுகிறார்கள்; மெச்சுகிறார்கள். அவர் மறைந்தபின் நண்பர்கள், எதிரிகள் எல்லோரும் அவரைப் பாராட்டுகிறார்கள். ஆயினும் அவருக்குத் தகுந்த நினைவுச் சின்னம் நிறுவுவதிலும் அதற்கான நிதி திரட்டுவதிலும் பொதுமக்களும், அவர் உழைப்பால் நலனடைந்தவர்களும் இதுவரை தக்க கவனம் செலுத்தவில்லை. இதிலும் மக்கள் சத்திமூர்த்திக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்து விட்டனர்."















1. K. காமராஜ நாடார், 2. சர். பிட்டி. தியாகராயச் செட்டியார், 3. சர். K. V. ரெட்டியார், 4. பிரதமர் ஓமாந்தூர் இராமசுவாமி ரெட்டியார், 5. பனகால் அரசர், 6. கனம். T. S. அவிநாசிலிங்கம் செட்டியார், 7. பாபு புபேந்திரநாத் பாசு.

டாக்டர் சி. ஆர். ரெட்டியார்

10. 17-4-48ல் இராஜாஜி மண்டபத்தில் பிரதமர் ஓ. பி. இராமசுவாமி ரெட்டியார் படத்திறப்பு விழாவில் டாக்டர் சி. இராமலிங்க ரெட்டியாரின் பேருரை.

"கனவான்களே!

நம் பிரதமரின் உருவப் படத்தைத் திறந்துவைக்க என்னை அழைத்துக் கவுரவித்ததற்கு என் நன்றி. என்னைக் குறிப்பிட்டுப் பேசும்பொழுது உயர்திரு ஷாபிமகமத் நான் ஒரு பெரிய சிங்கம் என்றார். ஆனால் இப்போது நான் அதைரியமடைந்திருக்கிறேன். (சிரிப்பு)

ஏனெனில் இவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் பேசியதே கிடையாது. மண்டபம் முழுவதும் ஜனத்திரள். காலரிகளிலும் கொஞ்சம் கூட இடத்தைக் காணோம். ஹாலும், காலரியும், உங்கள் எல்லோருடைய மனமும் மிக நிறைந்துதான் இருக்கின்றன. தலைகளும் நிறைந்துதான் இருக்கின்றனபோலும்! (சிரிப்பு)

இன்று நான் செய்ய ஒப்புக்கொண்டிருக்கும் வேலை பெரிய பதவியில் உள்ள ஒரு பெரியாரைக் குறித்துப் பேசுவது. புகழ்ந்து பேசினால் ஏதோ பதவியில் இருப்பவரைக் காரணார்த்தமாகப் புகழ்வதாக நினைக்கலாம். ஆனால் உயர்திரு. ரெட்டியாரோ தம்மைப் புகழ்வதைச் சிறிதும் விரும்பாதவர். கண்டித்தாலோ, 'பழைய எதிரிதானே - கண்டிக்காமல் வேறு என்னசெய்வார்?' என்று சொல்லலாம். ஆகவே, என் வேலை தர்ம சங்கடமானதே. இந்த உருவப்படத் திறப்பு விழாவுக்கு இரு சர்வகலாசாலை உப-அத்யட்சகர்களை ஏன் ஒன்றாகப் போட்டிருக்கிறார்கள் என்றால், சர்டிபிகேட் கொடுப்பதற்குத் தகுதியானவர்கள் அவர்களே என்ற நினைப்பில் இப்படி ஏற்பாடு செய்திருக்கலாம். (சிரிப்பு)

கனம் ஓமந்தூர் இராமசுவாமி ரெட்டியாரைப் புகழ்ந்தும் பாராட்டியும் பேச எனக்கு போதிய அருகதை இருப்பதாகத் தெரியவில்லை. அவரைப்புகழ நான் ஒரு சாதுவோ, சன்னியாசியோ அல்ல. திரு. ரெட்டியார் அரசியல்வாதியும், உண்மையான காங்கிரஸ்காரருமாவார். தன்னடக்க மிக்க தூய சீலர். தம் எதிரில் தம்மை இதரர் புகழ்வதை அறவே வெறுப்பவர். தமக்குத் தெரியாமல் யாரேனும் மறைமுகமாகப் புகழ்ந்தால் அதையும் விரும்பாதவர். ஒருவர் தம்மை எதிரில் புகழ்வதைவிடக் கண்டிப்பதை வரவேற்பவர். அதிகாரத்தில் உள்ள ஒருவரைப் புகழ வேண்டிவரின், அவரிடம் புகழ்ச்சிக்குரிய குணங்கள் இருந்தால் அவற்றை உண்மையாக வெளியிட நம்மில் சிலருக்குக் கஷ்டமேற்படு

கிறது. என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இருவசதிக் குறைவுகள் இருக்கின்றன. எனக்கு ஓமந்தூராரைப்பற்றி அதிகமாகத் தெரியாதாகையால் அவர் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கமுடியாது. இதுவரை நான் அவரை நான்கு முறைதான் சந்தித்திருக்கிறேன்.

தயாள குணம், நல்ல நோக்கம், புத்திகூர்மையான முடிவுகளைச் செய்யும் ஆற்றல் முதலியன அவரிடம் இருப்பது எனக்கு நன்கு புலனாகியது. 'இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன்' என்று அவர் வாக்குறுதி எதுவும் அளிப்பதே இல்லை. அவர் எப்படி வாக்குறுதிகளை அளிக்காது பொதுஜன ஆதரவைப் பெறுகிறார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. 'நான் கவனிக்கிறேன்' என்றுதான் அவர் கூறுகிறார். ஆகவே, அவர் பிரச்சினைகளில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை எனச் சிலர் தப்பபிப்பிராயப்படுகின்றனர். அன்னாரின் உயர்ந்த குணங்களைச் சரிவரத் தெரிந்துகொள்ள விசேஷ ஆற்றலும் புத்திகூர்மையும் அவசியமென்று நான் அவரைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்த பின்னர்த் தெரிந்துகொண்டேன்.

இராஜீயக் கட்சி விவகாரங்களில் பல வருஷங்களாக நான் கலந்துகொள்ளாமல் இருப்பது என் மற்றொரு வசதிக் குறைவாகும். ஆகவே, உயர்திரு. இராமசுவாமி ரெட்டியாரைப்பற்றி நான் கொண்டுள்ள கருத்தையே இதுபோழ்து வெளியிடுகிறேன்.

நமது பிரதமர் ரெட்டியார் தினசரி பல பிரசங்கங்களைச் செய்வதில்லை என்பது அரசியல்வாதியாகிய எனக்கு ஒரு முக்கிய விஷயமாகத் தோன்றுகிறது. அவர் ஏதோ சில சந்தர்ப்பங்களில்தான் பிரசங்கங்கள் செய்கிறார். ஷன்றிப்பார்க்கு மிடத்து ஒரு இராஜதந்திரியின் குணம் இதுவென்று நான் கருதுகிறேன். தாம் ஒன்றைக் கூறுமுன் அதுபற்றித் தீவிரமாகச் சிந்திப்பதும், பொதுஜனங்களும் அங்ஙனமே செய்ய அவகாசம் அளிப்பதும் ஒரு இராஜதந்திரியின் குணமாகும்.

சாதாரணமாகத் தலைவர்கள் செய்வதுபோல், தன்னை விளம்பரப் படுத்திக்கொள்ளும்வகையில் தன்னைப்பற்றியோ, தனது இறந்தகால சேவைகளைப்பற்றியோ அவர் குறிப்பிடுவதே கிடையாது. எதற்கும் அஞ்சாமல் திடமனதுடன் கொள்கையினின்று சிறிதும் வழுவாமல் அவர் நடந்துவந்திருக்கிறார்.

பிரதமர் பதவி என்பது பல சோதனைகள், தொல்லைகள், மனக் கஷ்டம், கவலை, சுமக்கமுடியாத பெரும் பொறுப்புகளின் பாரம் முதலியன மலிந்ததாக இன்று இருக்கிறது. தேசத்தில் உண்டான பயங்கரக் கிளர்ச்சிக்குப்பின்னர் நிலைமை சரியாகிப் புதியநிலைமை ஏற்படக் கொஞ்ச

காலம் பிடிக்கலாம். ஒழுக்கமும், அமைதியும் இன்னும் ஏற்பட வில்லை. சென்னையைப் பொறுத்தவரையில் கட்சித் தலைவர் தேர்தலைப் பிரதி வருஷமும் வைத்துக்கொள்வதால் கஷ்டம் அதிகரித்திருக்கிறது.

பொதுத் தேர்தலில் தலைவர் தோல்வி அடைந்தாலும் அன்னார் தலைவராகவே இங்கிலாந்தில் இருக்கின்றனர். வின்ஸ்டன் சர்ச்சில் இன்றும் தலைவர்தான். தலைமைப் பதவிக்கு ஆசைப்படுபவர்கள் பார்லிமெண்ட் அங்கத்தினர்களைச் சந்தித்து வோட்டுப் போடும்படி ஆதரவு தேடுவதில்லை. நிர்வாகத்தை நடத்துகிறவர் செய்வது பிடிக்கவில்லையென்றால் கட்சியினர் வேறு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். கட்சி அங்கத்தினர்கள் விரும்புகிறபடித் தான் தலைவர் நடக்கவேண்டுமென்பதில்லை. இம்முறையே சரியானமுறை.

மந்திரிசபைபற்றிய சட்டதிட்ட முறைகள் தெளிவாக இருக்கின்றன. மந்திரிசபைக்கான மந்திரிகளைப் பிரதமர் பொறுக்குகிறார். அவர் மந்திரிகளை இராஜிநாமாச் செய்யும்படிச் சொல்லலாம். ஆனால் பிரதமரை இராஜிநாமாச் செய்யும்படி மந்திரிகள் கூறமுடியாது. காமன்ஸ் சபைதான் பிரதம மந்திரியை இராஜிநாமாச் செய்யும்படிச் சொல்லமுடியும். அவர் இராஜிநாமாச் செய்தால் மந்திரிசபையே இராஜிநாமாச் செய்துவிட்டதாகி விடுகிறது.

பிரதமர் ஒரு கமிட்டித் தலைவர் போன்றவரல்லர். மந்திரிசபை அவருடையதே. ஆனால் மந்திரிசபையினுடைமை அவர் அல்லர். இந்த உண்மையான நிலைமையை நம்மவர்கள் சரியாகத் தெரிந்து கொண்டிருப்பார்களாயின் சமீபத்தில் சென்னையில் நடந்த சம்பவங்கள் நட[illegible] சந்தித்துப [illegible] விரும்பும்போதெல்லாம் அவர்களைச் சந்தித்துப [illegible] இருக்கவேண்டுமோம்! அவர்கள் கூறுவதைப் பிரதமர் கேட்டாகவேண்டு மாம்!

இங்கிலாந்தில் நிலைமை அப்படி அல்ல. அங்கு மந்திரிகள் அதிக கவுரவமாக நடத்தப்படுகின்றனர். சந்திப்பிற்கு முற்கூட்டி எழுதிக் காலத்தை நிர்ணயம் செய்துகொண்டபின்னர்தான் மந்திரிகளைச் சந்திக்க முடியும். மந்திரிகளைச் சந்தித்துப் பேச அடிக்கடி நண்பர்களும், இதரரும் வந்து குவிந்துகொண்டே இருந்தால் மந்திரிகள் எப்படித் தங்கள் அலுவல்களையும் கடமைகளையும் செய்யமுடியும்? இவ்விஷயத்தில் சிறந்த நிர்வாகியான கனம் சி. இராஜகோபாலாச்சாரியார் ஒரு நல்ல வழியைக் கடைப்பிடித்துக் காட்டினார். தம் வீட்டையோ, காரியாலயத் தையோ சத்திரமாக மாற்றுவதை அவர் அனுமதிக்கவில்லை.

3764

இனி திரு. இராமசுவாமி ரெட்டியாரின் உருவப் படத்தைத் திறக்கும் பணியில் முற்படுகிறேன். உண்மையான ஒரு விவசாயி உலகில் இப் பெரும் பதவிக்கு வந்தது இதுதான் முதல் தடவை. (கைதட்டல்)

சென்னையில் கம்பீரமாகவும், தவறின்றியும் ஜனநாயகம் உண்மையில் வெற்றிபெற்றிருக்கிறது என்பதற்கு இது ஒரு சிறந்த அறிகுறியாகும். இப்பதவிக்கு ஆசைப்பட்டு அவர் அலையவில்லை. இதற்காகச் சதியும், சூழ்ச்சியும் செய்யவும் இல்லை. பதவி தானே அவரைத் தேடி அடைந்தது. பிரதமராக அமர்ந்து இப்பதவிக்கே புதுப் பெருமை தந்திருக்கிறார். அவர் பரம சாது. எதையும் அலசி ஆராய்ந்து அறிய ஆவலும் நுட்ப அறிவுமுள்ளவர்.

எல்லா தஸ்தாவேஜுகளையும் அவர் தாமே கவனித்துப்பார்த்துத் தம் உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார். அவசரப்பட்டு அவர் வாக்குறுதி எதுவும் அளிப்பதில்லை. வீண் பெருமைகளை அவர் தேடி அலைவதில்லை. அவர் அதிகம் பேசுவதில்லை. கண்டபடி சுற்றுப் பிரயாணம் செய்வதும் இல்லை (சிரிப்பு). கடமையிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருப்பவர். அவர் சுயநலமற்ற நியாயவாதி. ஆகவே அஞ்சா நெஞ்சம் படைத்தவராக இருப்பது ஆச்சரியமன்று. எல்லா வகையிலும் அவரை ஒரு துறவி என்றே சொல்லவேண்டும். விவசாயிக்கு நல்ல பகுத்தறிவு உண்டென்பதை அவர் பல வழிகளில் தெளிவாக்கிவிட்டார். அவர் பெரிய மேதையாகவும், பேச்சாளராகவும் இல்லாமல் இருக்கலாம் ; ஆனால், ஒழுக்க சீலர். சர்க்காரை நடத்த இது மிகவும் அவசியமானது.

பாரபட்சமின்றி நிலைமையைக் கவனிக்கவும் நான் அறிந்துகொண்டிருப்பது இவ்வளவுதான். காங்கிரஸ் கட்சியிலும், சட்டசபையிலும் அவருக்கு மதிப்பும் நம்பிக்கையும் இருந்துவருகின்றன. எல்லாக் கட்சியினரிடமும் பொதுமக்களிடமும் அவர் மதிப்பும் கவுரமும் பெற்றிருக்கிறார். ஒழுக்கத்திற்கும், கவுரவத்திற்கும் அவர் உதாரண புருடர். அவரிடம் அப்பழுக்குக் கிடையா. மேலும் நல்ல இராஜதந்திரியாக அவர் விளங்குவார் என்று நம்புகிறேன். தற்பொழுதுள்ள நெருக்கடியான காலத்தில், ஆட்சிசெய்யும் எந்த சர்க்காரையும் ஆதரித்து ஒத்துழைப்பதுதான் மக்களின் கடமையாகும்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த பிரதமர் உருவப் படத்தைத் திறப்பது என் கடமை என்றே கருதுகிறேன். இச்சடங்காற்ற மிகக் களிப்படைகிறேன்." (நீடித்த கைதட்டல்)

சேர்க்கை- 4

தமிழ்நாட்டு நாவலரின் தனித்தமிழ் விரிவுரைகள்

தமிழ்நாட்டு நாவலர் சிலரின் பேச்சுக்கள் சுருக்கி ஈங்குத் தரப் பெற்றுள்ளன.

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

1. கொச்சி திவானாக விருந்தகாலை சர். சண்முகம் செட்டியாரவர்கள் ஆரிய - திராவிடப் பிரச்சினை பற்றியும், தமிழ்நாடு தனி நாடாக வேண்டுமென்பது பற்றியும் ஈரோடு நகரில் பேசியதன் சுருக்கம். (7-4-40)

" தோழர்களே !

ஆரிய - திராவிடக் கிளர்ச்சி நூதனமானதொன்றல்ல. ஆரியர், திராவிடர் என்ற மொழிகளை எவரும் புதிதாக உண்டாக்கவில்லை. பண்டைய தமிழ் நூல்களில் ஆரியர் - திராவிடர் என்ற பிரிவினை இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவருகின்றது. சிலப்பதிகாரம் என்னும் காவியத்தில், தமிழ் மன்னர்களை வடநாட்டு ஆரிய மன்னர்கள் இழித்துப் பேசிய காரணத்தால், சேரன் செங்குட்டுவன் எனும் தமிழ் மன்னன் படையெடுத்துச் சென்று கனகவிசயர் என்ற ஆரிய மன்னரை அடக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் தமிழ் மன்னர்களை ஆரியர்கள் இழிவுபடுத்தி வந்தனரென்பதும், இதனால் பேதமும், விரோதமும் விளைந்தனவென்பதும் நன்கு விளங்குகின்றன. ஆதலின், ஆரியர் - திராவிடர் எனும் வழக்கில் புதுமை ஒன்றுமில்லை.

" தமிழ்நாடு " என்பது புதிய கருத்தா ? இல்லை, இல்லை. பூர்வ காலத்திலேயே " தமிழகம் " உண்டு. அதற்கோர் எல்லையும் வரையறுத்துள்ளனர். வடவேங்கடமும் தென்குமரியும் தமிழகத்தின் எல்லையைக் குறிப்பனவாகும். தொன்றுதொட்டுத் தமிழ்நாடு, இந்தியாவினின்றும் வேறுபட்ட ஒரு தனி நாடாகத்தான் இருந்து வந்திருக்கிறது. இது ஒரு கட்டுக்கதையன்று ; இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் சரித்திர உண்மை. இதனை மறைத்தும் மறுத்தும் கூறுவதால், மக்களின் உணர்ச்சியை அடக்கிவைத்தல் கூடுமோ ?

ஆனால், இந்த உணர்ச்சி வெளிப்பட்ட காரணம் என்னவென்பதைப் புத்திமான்கள் நன்கு யோசித்தல்வேண்டும். அது நல்லதோ கெட்டதோ, ஆராய்ச்சியில் புகுந்து அல்லற்படாமல், ' தமிழ்நாடு

தமிழருக்கே ' என்று " பாக வழக்கு"த் தொடர்ந்துவிட்டார்கள். இந்த வழக்கைத் தமிழ்மக்கள் பொதுவாகத் தொடுத்தார்களென்பதையும் இஃது ஒருவரின் தனி முயற்சியல்லவென்பதையும் யாவரும் உணரக் கடவர்.

முஸ்லீம் நாடு தனியாக வேண்டுமென்பதும், தமிழ்நாடு தனியாகப் பிரிவினைகொள்ள வேண்டுமென்பதும் இரு சாராரின் பிடிவாதமான கொள்கையாகும். இவ்விதப் பிரிவினைக்கு ஏராளமான ஆதாரங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. பற்பல எதிரிடைப் பிரசாரங்களும் நிகழ்த்தப் பெறுகின்றன. கற்பனையான கதைகளும், வாதத்திற்கிடமான வினாக்களும் எழுகின்றன. சுயநலம், அரசியல் சூழ்ச்சி என்னும் வார்த்தைகள் தாராளமாக உபயோகிக்கப்படுகின்றன. இந்திய மாதாவைத் துண்டிப்பதா ? குழந்தையை இரு கூறுக்குவதா ? ஒரு குடும்பத்தைப் பிளவுபடுத்துவதா ? என்ற கூக்குரல்கள் எங்கும் முழங்கக் காண்கிறோம். இதைக் குறித்து, ஒப்பா, தப்பா என்ற ஒரு முடிவான அபிப்பிராயத்தைக் கூற வந்தேனில்லை. ஆனல், முஸ்லீம் நாடு தனியாகப் பிரிக்கப்படவேண்டுமென்று கேட்டபோது நான் ஆச்சரியமோ, பயமோ, நடுக்கமோ கொள்ளவில்லை. தனித் தமிழ்நாடு வற்புறுத்தப் பட்டபோதும் அவ்வித நிலைமை எனக்கு ஏற்படவில்லையென்பதை ஊன்றிச் சொல்லுவேன்.

" இந்தியா " என்ற ஒன்றுபட்ட ஒரு நாட்டைத் துண்டாடுவது சரியா ? ஒன்றுபட்ட ஒரு நாட்டைப் பிரிப்பது பெருந் தவறுதான். அதிலும் இற்றைநாள், ஐரோப்பாவில் வேறுபட்ட பல நாடுகள் ஒன்று பட்டு வேலைசெய்யும் காலம். ஆனல், நான் [illegible] றுதான். [illegible] நாட்டைப் பிரிப்பது சரியா என்ற அந்த வினவிலுள்ள வாசகம் சரியாவென்பதுதான். இந்தியா ஒன்று பட்ட நாடா ? எக்காலத்திலாயினும் அரசியல் துறையில் இந்தியா ஒன்று பட்ட நாடாக இருந்ததுண்டா ?

வடமொழிப் புராணங்களில் ஐம்பத்தாறு தேச மன்னர்கள் இருந்தார்களெனக் கூறப்பட்டிருக்கின்றது. அசோகர் இந்தியாவை ஒன்றுபடுத்தி ஏகதேசமாக ஆள நினைத்தார். அதற்காகப் பெரிதும் முயன்றார். ஆனல், தண்டகாரண்யம் வரையில்தான் அவரால் வரமுடிந்தது. அதற்கப்பால் அசோகர் இதில் படுதோல்வியடைந்தார். அசோகர் இராஜ்யத்தில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. சேர, சோழ, பாண்டிய, சதிய புத்திரர் என நான்கு தனி ஆட்சிகள் இருந்தனவென்றே அசோகர் கல்வெட்டுகள் கழறுகின்றன.

அக்பரும் இந்தியாவை ஒரே நாடாக்கி ஆட்சிபுரிய எண்ணினர். தமிழ்நாட்டை அவர் எண்ணியபடி ஒரு குடையின்கீழ்க் கொண்டுவரக் கூடவில்லை. அக்பர் காலத்திற்குப் பிறகு என்னவாயிற்று? அக்பர் ஆட்சியில் ஒன்றுபட்டிருந்த வடநாடுகளும் தனித் தனியே பிரிந்து வேறு பட்டன. ஆங்கிலேய ஆட்சியின்போதுதான் இந்தியா ஒரே நாடு என்ற எண்ணம் பிறந்தது. அதிலும் கடந்த எழுபத்தைந்து அல்லது எண்பது ஆண்டுகளாக இந்தியா "ஒரு நாடு", "தாய்நாடு" என்ற கருத்து வேரூன்றி வருகின்றது.

முடிவாக, இந்தியாவைச் சில "மாபாதகர்கள்" பிளக்கச் சொல்லு கிருர்களே என்று குறைகூறுவதில் பொருளில்லை; பயனுமில்லை. இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டுமென்று விரும்பும் ஒரு சாரார் மற்றவர் கள்மீது குறைகூறுவதிலும், அவர்கள் முயற்சியை நிந்திப்பதிலும் தங் கள் அரிய காலத்தைச் செலவிடுவது வீணுகும். அத்தலைவர்களை அழைத்து இத்தகைய கருத்து அவர்கட்குண்டானதற்குக் காரணம் யாதெனக் கேட்கவேண்டும்.

நான் முன்பு சொன்னது போலவே "தனித் தமிழ்நாட்டு"ப் பிரச் சினையின் முடிவு எதுவாயினும் ஆகுக. ஆனல், சோர்வின்றி, ஊக்கத் துடன் பாடுபட்டுப் பார்ப்பதே தமிழ் மக்களின் தலையாய கடனுகும். இம்முயற்சி வெற்றி பெறுமாயின், தமிழ்நாடு தன் தளைகளை முறித் தெறிந்து சுயேச்சை பெற்றதாகும். அந்நாளை நான் வெகு விரைவில் எதிர்பார்க்கிறேன்; மிகவும் வரவேற்கிறேன்."

இராஜா சர். முத்தையாச் செட்டியார்

2. ஈரோட்டில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் செட்டிநாடு (குமார) ராஜா சர். எம். எ. முத்தையாச் செட்டியார் B. A. அவர்கள் ஆற்றிய தலைமைப் பேருரை (1940).

"அன்புள்ள நண்பர்களே! இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கும் படி என்னைப் பெருமைப்படுத்தியதற்கு எனது மனமுவந்த நன்றி. நான் பெருமையைக் கருதி இங்கு நாடினேனில்லை. உங்களை யொத்து ஒரு தோழனுக - ஒரு தமிழனுகப் போதரலானேன்.

ஈண்டு நோக்கு முகத்தான், இனி நமது இயக்கம் உறுதிப்படுவதற் கான சிறந்த அறிகுறிகள் தோன்றுகின்றன. இது கோவை ஜில்லா மாநாடாகக் கூடினும் மாகாணத்தின் பல பாகங்களிலுமிருந்து பல தோழர்கள் இங்குக் குழுமியிருக்கக் காண்கிறேன். நண்பர், சர். ஆர். கே.

சண்முகம் செட்டியாரவர்கள் வந்திருந்து உதவுவது ஒரு பெரும் பாக்கியமாகும்.

இம்மாநாடு ஒரு கொடிய யுத்தத்தினிடையே நடைபெறுகின்றது. தமிழ்நாட்டில் ஒரு போராட்டத்தின் இறுதியில் நாம் கூடியிருக்கிறோம். அதுதான் கட்டாய இந்தி எதிர்ப்பு. தமிழ்மொழிக்கும் கலைக்கும் பேராபத்தை விளைவிப்பதாயிருந்த இந்தியைக் காங்கரஸ் சர்க்கார் கட்டாயப் பாடமாகப் புகுத்திய ஞான்று, தமிழ்நாட்டில் வதியும் பெரு வாரியான மக்கள் அதை எவ்வளவு பலமாகத் தாக்கக் கூடுமோ, அவ்வளவு பலமாகத் தாக்கிக் கண்டித்தனர். பொதுமக்கள் சர்க்கார் என்ற காங்கரஸ் அரசியலார் அதுபற்றிய பொதுமக்களது அதிருப்தி யின் ஆழத்தை அளவிட்டறியவில்லை.

தேர்தலுக்குமுன் எதைக் கொடிய சட்டமென்று குறைகூறி வந்தனரோ, அதே சட்டத்தைக் கொண்டு பொதுமக்கள் இயக்கத்தை அடக்கக் காங்கரஸ் சர்க்கார் முயன்றுழைத்தனர். கிரிமினல் திருத்தச் சட்டத்தையும் தாராளமாக ஈரமின்றிக் கையாண்டனர். இவைகளின் விளைவாக வீரத்தாய்மார்களும், வீரத்தோழர்களும் பற்பலர் தோன்றி அரசியலாரை அஞ்சாது எதிர்த்து நின்றனர். எத்துணைக் கொடிய சிறைத் தண்டனை விதித்தாலும் எதிர்த்து நிற்கத் தயார் என்பதை நம் தமிழ்மக்கள் மெய்ப்பித்துவிட்டார்கள்.

காங்கரஸ் குழுவினர் இந்தியாவிற்கு ஒரு பொது தேசீய மொழி வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர். அவர்கள் ஆட்சிபுரிந்த இரண்டரை ஆண்டுகளுள் தேச ஒற்றுமைக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் எவ்வித முயற்சியும் செய்யாது வாளாவிருந்துவிட்டு, தேசீய மொழி பற்றி மட்டும் அவர்கள் கொண்ட கவலையும், அவசர முயற்சியும், கை யாண்ட கொடுமையும் அறிவின்பாற்பட்டனவாவெனக் கேட்கின்றேன்.

" வரும் கெடுதல்களும் ஒரு நன்மைக்கே " என்பதுபோல் இந்திக் கிளர்ச்சியினால் பொதுவாகத் தமிழ்நாடெங்கும் ஒற்றுமையும் விழிப்பும் ஏற்பட்டுவிட்டன. நமது முயற்சிகளும் வெற்றிபெற்றன. கட்டாய இந்தியை ரத்துசெய்து பிறப்பித்த உத்திரவுக்காக அரசாங்கத் தாருக்கு நாம் நன்றி செலுத்தக் கடவோம்.

உலக நெருக்கடியான இந்த நேரத்தில் பிரிட்டனுக்கு நிபந்தனை யின்றி, யுத்தத்தில் வெற்றி காணும்வரையில் உதவுவதாக முற்கூட்டித் தெளிவுபடுத்தியிருக்கிறோம். யுத்தத்தைக் குறித்துக் காங்கரஸ் கொண்டுள்ள கருத்தை இச்சமயம் குறிப்பிடுவது மிக அவசியமாகும். இந்த யுத்தத்திற்கு உதவுவதில்லையெனக் காங்கரஸ் முடிவு கட்டியிருக்கின்றது.



செட்டிநாட்டரசர் - ராஜா சர். M. A. முத்தையாச் செட்டியார்

அது புத்திசாலித்தனமான முடிவு அல்லவென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இங்ஙனமாகச் சண்டிசெய்வதாலேயே பூரண சுதந்திரம் வந்துவிடுமாவெனக் காங்கரஸ் கவனித்தல்வேண்டும். இது குறித்துக் காலஞ்சென்ற உயர். கோபாலகிருஷ்ண கோகலே பலவாண்டுகளுக்குமுன் சொல்லியதென்ன ? “ தாய்நாட்டைப் பற்றி எனக்குள்ள ஆசையின் நிகளத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. மற்றவர்கள் எவ்வாறு தங்கள் நாடுகளில் வாழ்கின்றனரோ அதுபோலவே நமது நாட்டு மக்களும் வாழ வேண்டுமென்பது என் கருத்து. சாதி, மத வேறுபாடின்றி எல்லா மக்களும் யாதொரு தங்கு தடையின்றி எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெறுதல்வேண்டும். ஏனைய நாட்டு மக்களையொத்து, அரசியல் துறையிலும், கைத்தொழில் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், மதம், கல்வி, கலை, விஞ்ஞானமாகிய பல உயரிய துறைகளிலும் நாம் சமநிலை பெற்று விளங்கவேண்டுவது இன்றியமையாததாகும். ஆயினும் அதே சமயத்தில் இவை யாவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குட்பட்டே சித்திக்கவேண்டும்.” இப்பெரியாரின் கருத்து ஒப்பத் தக்கதன்றோ ?

பிரிட்டிஷ் சர்க்காரின் பிரித்தாளும் சூழ்ச்சியே இந்து – முஸ்லிம் சமூகங்களுள் ஒற்றுமை நிலவாமைக்குக் காரணமென்பது காங்கரஸின் முறையீடாகும். ஆனால் காங்கரஸ் சர்க்காரின் இரண்டரை வருட ஆட்சியில் அது கைக்கொண்டிருந்த சமுதாய வேற்றுமைக் கொள்கைகளே இவ்விதக் குழப்பங்களுக்கு அடிப்படையாகும். இனிமேலாகிலும் தேச நன்மைக்கும், மக்களின் அமைதிக்கும் பாதகம் விளைவிக்கக் கூடிய நீதியற்ற குற்றச்சாட்டுகளையும், எதிர்ப்புகளையும் காங்கரஸ் கைவிடுவது முறையாகும். இம்மாகாண ஆட்சிப் பொறுப்பை நமது கட்சி ஏற்ற காலத்தில் கட்சி பேதமின்றியும், சமூக பேதமின்றியும் அரசியலை நடத்தி அகில இந்தியாவின் நன்மதிப்பையும், ஆதரவையும் மிகுதியாகப் பெற்றுள்ளதாகும். சமுதாய ஒற்றுமை, சகோதரத்துவம் ஏற்படப் பொதுநல நோக்குடனும், ஒற்றுமை கொண்டும் சலியாது பாடுபட்டுப் புதியதோர் ஒற்றுமை உலகத்தை விரைவில் காண்போமாக !”

பண்டிதமணி

3. **மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களின் பேருரைச் சுருக்கம் (தூத்துக்குடி).**

“அன்புமிக்க ஐயன்மீர், அன்னைமீர் !

இம்மாநகரில் தோன்றிய இச்சைவ சித்தாந்த சபையே தமிழ் நாட்டில் சமய சம்பந்தமாக நிறுவப்பட்ட கழகங்களுள் காலத்தால் முற்

பட்டது. இதனைத் தோற்றுவித்தவர்களின் தூயவுள்ளமே இத்துணை யாண்டு இச்சபை செழித்து வளர்ந்ததற்குக் காரணமாகும். நன்னிலத் திட்ட வித்தாக இச்சைவப் பைங்கூழ் தோன்றிய பின்னர் இதனைப் பாதுகாக்கும் அன்பர்களுடைய பொருண்மாரியாலும், அறிவுரத் தாலும் இஃது ஆக்கம் பெற்று நற்பயன் விளைத்து வருகின்றது.

மக்களுக்கு மொழியறிவும் சமய வொழுக்கமும் இரண்டு கண்கள் போல் இன்றியமையாதன. மொழிப்பயிற்சியால் அறிவும் சமய வுணர்ச்சி யால் ஒழுக்கமும் உண்டாமென்பது பெரியோர் கண்டது. இவ்விரண்டி னுள்ளும் முன்னது கருவியும் பின்னது புலனுமாம் என்ப. மொழி யறிவை உடலுறுப்புக்களுட் சிறந்த கண்போல்வதெனக் குறிப்பிட்ட திருவள்ளுவர், ஒழுக்கத்திற்குச் சிறந்த உவமைகாண நெடிது சூழ்ந்து கண்ணிற் சிறந்த உறுப்பில்லையாதலால் உறுப்புக்களைவிட்டு அவ்வுறுப்புக் களோடு கூடிய உடலையியக்கும் உயிரையே உவமானமாகக் கொண்டு ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படுமென்றார். ஆகவே மொழியறிவிலும் அதன் பயனாகிய ஒழுக்கம் சிறந்ததென்பது புலனும். அவ்வொழுக்கம் மக்கள் வாழ்க்கையிற் சமயநெறியோடு மிகவும் தொடர்புடைய தென்பது பெரியோர் மொழியாலும் அனுபவத்தாலும் கண்ட உண்மை. ஒரு சிலர் சமயத்தொடர்பின்றி ஒழுக்கம் நிலைபெறுமெனவும் அறிவாற் றலால் வரையறுக்கப்பட்டு மேற்கொள்ளத் தக்க ஒழுக்கத்திற்குச் சமயச்சார்பு வேண்டியதில்லையெனவும் கூறுவர்.

இனி, பல்வேறு வகையாக விதித்துக் கிடக்கின்ற சமயங்களுள் எதனை மெய்ச்சமயமாகக் கொண்டு மேற்கொள்ளலாமென்பது ஆராயற் பாலது. அவ்வாராய்ச்சியில் தலைப்படுங்கால், ஊனுடம்புடைய மக்களுக்கு இவ்வுடம்பு வந்தவாறும், இதற்கும் உயிர்க்கும் உள்ள இயைபும், அறி வுடைப் பொருளாகிய உயிர் சடப்பொருளை விரும்புவதற்கு ஏதுவும், இவ்வுடலோடு கூடிய வாழ்க்கையின்றும் அறியப்படும் இன்ப துன்ப உணர்ச்சிகளுக்குக் காரணமும் ஆகிய இன்னோரன்ன தெளிந்து துணியற்பாலனவாம். இந்நிலையில் இவ்வுடல் தோற்றுதற்கு மூலமாகச் சடவடிவமாகவுள்ள (மாயையாகிய) வித்துண்டென்பதும், அதன் காரியமே உடல், கரணம் முதலிய எல்லாம் என்பதும் புலனும். மாயாகாரியமாகிய உடலுடன் கூடிய வாழ்க்கையில் நிகழும் இன்ப துன்பங்களுக்கு ஏதுவாகவும் ஒன்றிருக்கவேண்டுமென்பது அறிவுக்கு ஒத்ததாகும். ஏனெனில் ஓரே செயலில் முற்பட்டு முயலும் மக்கள் பலர்க்கும் அச்செயற்பயன் ஒன்றாக இல்லாமல் பற்பல வகையாக அநுப வத்திற்கு வருகின்றதாகலின் வாழ்க்கையில் நிகழும் அவ்வின்ப துன்பங்

களுக்குக் காரணமாகவுள்ளன அவரவர் முன்னர்ச் செய்த நல்லனவுந் தீயனவுமாகிய செயல்களே என்பது தெளிவாம். அச்செயற் பயன்களை யனுபவிப்பதற்கே மாயாமூலத்தினின்றும் இறைவனருளால் உடல் கிடைத்ததென்ப. இங்ஙனம் போதரும் உண்மை தெளிவடைந்து இத் துன்பத் தொடர்பினின்றும் விடுதலை பெறுவதற்கு உயிர் விரும்புவது இயல்பே. இவ்விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இத்தொடர்பு யாதும் இன்றி எல்லா ஆற்றலும் நிரம்பிய கடவுட் பொருள் ஒன்று இருக்க வேண்டுமென்பது தெளிவாகும். அக் கடவுள் என்றும் உள்ளதாகவும் இன்ப வடிவினதாகவும் எல்லாவற்றையும் ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் வல்லதாகவும் முற்றுணர்வு முதலிய உயர் குணங்களுடையதாகவும் இருந்தாலொழியச் சிற்றுயிர்களாகிய நம்மனோர்க்கு நலஞ்செய்ய இயலாதென்பது போதரும். ஆகவே, இத்தகைய ஆராய்ச்சிகளால் முடிவாகத் துணியப்பட்ட பொருள் இறை உயிர் உடல் என முத்திறப் படும் என்பது தெளிவாம். சைவசமயம் பரந்த நோக்கமும் வேற்றுச் சமயங்களை வெறுத் தொதுக்காமல் படிமுறையில் ஏற்றுக்கொள்ளும் இயல்பும் உடையது.

சைவ சமயத்தின் உண்மைகளைத் தேவார திருவாசக முதலிய பாசுரங்களும் மெய்கண்ட சித்தாந்தமாகிய சிவஞான போத முதலிய நூல்களும் ஐயமறத் தெரிவிப்பனவாம். உலகியல் நீதியை வரை யறுத்துணர்த்துவதில் திருக்குறள் எத்துணைச் சிறந்ததோ அத்துணைச் சிறப்புடையன. சைவ வுண்மையை அனுபவத்திற் கண்ட திருமூலர், பட்டினத்தடிகள் முதலிய சிவஞானச் செல்வர்கள் நமக்குச் செய்த உதவி பெரிதாகும். கேட்பாருள்ளத்தைத் தன் வயப்படுத்துச் சிவானந்தக் கடலுள் திளைக்கச் செய்வது திருவாசக அருட்பாசுரங் கள் என்பதை யார் மறக்கமுடியும்? இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த நூற் கருவூலங்களையும் அளவை நூலுக்குப் பிறழாத சைவ வுண்மைகளையும் நம் பண்டையோர் நமக்கு அருளியிருப்ப அப்பொருட் பயன்களை அடையாமலும் அப்பெரியோர் நன்றியை மறந்தும் அவரு டைய உண்மைகளையும் அவரையும் இகழ்ந்தும் பேசிவரும் தமிழரில் ஒரு சாரார் கொள்கை மிகவும் இரங்கத் தக்கதொன்று.

இப் பிறழ்ச்சிக் கொள்கைகளெல்லாம் ஒழிந்து நன்னெறிப்படு தற்கு அறிவுடையார் முற்படுதல்வேண்டும். கல்விக்கண்ணிலும் சிறந் தது சமயக்கண். அக்கண்கொண்டு காண்டலே உண்மைக் காட்சியாகும். அக்காட்சியிற் றலைப்பட்டுப் பேரானந்தப் பெருஞ்செல்வர்களாக இம்மை மறுமை வாழ்க்கை நலங்களையும் இருமையும் கடந்த வீட்டின்

பத்தையும் அன்புரிமைச் சோதரர்கள் அடையவேண்டுமென்பதே என் குறிக்கோள்.

இதற்குக் கருவியாயுள்ள இச்சைவ சித்தாந்த சபையும் இதனுறுப்பினராகிய அன்பர்களும் மற்றைய சிவநேசச் செல்வர்களும் நீடு வாழ்க வெனத் திருவருளைத் துணையாகக்கொண்டு வாழ்த்துகின்றேன்."

திரு. வி. க.

4. உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் 1925ம் ஆண்டு காஞ்சியில் கூடிய தமிழர் மாநாட்டில் ஆற்றிய தலைமைப் பேருரை. (சிலபகுதிகள்)

"சகோதரிகளே, சகோதரர்களே!

நாட்டின் விடுதலைக்குரியதா யெழுந்த ஒரு பெரும் இயக்கம் விழுந்துள்ள இக்காலத்தில், அவ்வியக்கத்திற் புகுந்து, எவ்வேற்றுமையும் கருதாது உழைத்துச் சிறைக்கோட்டம் நண்ணிய தலைவர்களுக்குள்ளும் பிணக்கு நிகழ்ந்துவரும் இந்நேரத்தில், அப்பிணக்கான் எம்மூலையினும் வகுப்பு வேற்றுமையும், காழ்ப்பும் கனன்றெரியும் இவ்வேளையில், தமிழ்நாட்டின் முப்பத்தோராவது அரசியற் பெருங்கழகம், இப்பழம் பதியின்கண் இன்று கூடி இருக்கிறது. இக்கூட்டத் தலைவனாக என்னைத் தெரிந்தெடுத்திருக்கிறீர்கள். இத்தெரிவுக்கு உளங்கொண்ட உங்கள் உழுவலன்பிற்கு எனது நன்றியை முதற்கண் செலுத்தி, உங்கள் துணைகொண்டு ஒல்லும்வகை எனது கடனாற்ற முயல்கின்றேன்.

தாய் நாடு

நாமனைமரும் தமிழ்நாட்டின் பெயரால் ஈண்டுக் குழுமியிருத்தலால் அந்நாட்டின் தொன்மையும், பிறவும் நமக்குள் ஊக்கமெழுப்பி ஒற்றுமை கூட்டுவனவாகலான், அவை குறித்து இவண் சில உரையாதல் பகரல் வேண்டும். இதுபோழ்து நாம் வதியும் தமிழ்நாட்டின் எல்லை, பன்னிரண்டு மாவட்டங்கள் அளவில் கட்டுப்பட்டுக் கிடக்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாடு, சேரநாட்டையும் தெலுங்கு நாட்டின் ஒரு பாங்கரையும் உடன் பெற்றிருந்தது. சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொல்காப்பியத்துக்குப் பாயிரங் கூறப்புகுந்த ஆசிரியர் பனம்பாரனர், "வடவேங்கடந் தென்

குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" என்று தமிழ் நாட்டின் வரம்பு குறித்துப் போந்தார். அவர் காலத்துக்கு முன்னர், தமிழ் நாட்டின் வடகோடு, விந்தியம் வரை முட்டியிருந்த தென்றும், அவ்வரை கடந்தும் நின்றதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுப. தென் கோடாகக் குறிக்கப்பெற்ற குமரி என்பது, இக் காலத்தில் ஒரு முனைக்கு வழங்கப் படினும், பழந்தமிழ் நூல்களில் அஃதோர் ஆற்றிற்கு வழங்கப்பட்டு வந்தது. அவ்வாற்றுக்குத் தெற்கே பஃறுளி என்னும் மற்றுமோர் ஆறு ஓடியதாகவும் நூல்கள் அறிவிக்கின்றன. இவ்வாறுகள் வளஞ்செய்த செழிய நிலப்பரப்பே குமரி நாடென்று சொல்லப்படுவது. அந்நாடு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்க் கடலால் கொள்ளப்பட்டது. இப்பொழுதுள்ள இந்துமகா சமுத்திரம் என்னும் பெருநீர்ப்பரப்பு, நிலப்பரப்பாயிருந்த தென்றும், ஆண்டே மக்கள் தோற்றம் முதல் முதல் உற்றதென்றும், அந்நிலம் பின்னைக் கடலால் விழுங்கப்பட்டதென்றும் அறிஞர் பலர் தமது ஆராய்ச்சியிற் கண்ட உண்மையை உலகுக்கு உணர்த்தியிருக்கின்றனர். இத்தொன்னிலப் பரப்பின் அழிவுபோக, எஞ்சி நிற்பதே இதுபோழ்து நாம் வாழும் தமிழ்த் தாயகம். இத்தமிழகத்தின் தொன்மை சரித்திர காலத்தையுங் கடந்து நிற்பது. 'இத்தொன்மை வாய்ந்த நாட்டிற் பிறந்தவர்கள் நாம்' என்று சொல்லும்போது, நம்மை அறியாது இறுமாப்பெழுகின்றது.

தமிழ்

இசை மயமான இயற்கை நிலத்தில் வாழ்வு நடாத்தி, இயற்கைத் தமிழைச் சுவைத்தவர் நம்முன்னோர். தமிழ் என்பதற்கு, 'இனிமை' என்பது பொருள். 'இனிமை' என்னும் பொருள்படத் 'தமிழ்' என்னும் சொல்லை ஆண்டிருத்தலைக் காண்கிறோம். நம்மக்கள் வாழ்வே தமிழ் வாழ்வு. அவர்கள் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ்; உற்றது தமிழ். அத்தமிழ் அமிழ்தங் கொண்ட நாடு இந்நாடு. அவ்வின்பம் நுகர்ந்த இக்காலத் தமிழ்ப் பாவலர் பெருமானாகிய நம் பாரதியார் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று கூறியிருத்தல் காண்க. இன்பத் தமிழ் நாட்டிற் பிறந்த நாம், இதுபோழ்து தமிழின்பம் நுகர்கிறோமா? இல்லையே! காரணமென்னை? தமிழை மறந்தோம். மீண்டும் உரிமையுணர்வு பெறத் தமிழ்த் தாயிடம் செல்வோமாக!

சாதி

பண்டைத் தமிழ்நாட்டில் பிறப்பிலே சாதிப் பாகுபாடு இருந்ததா ? இல்லையென்றே கூறலாம். நிலப்பாகுபாடு ஒன்றே தமிழ்நாட்டில் நிலவியிருந்தது. இடைக்காலத்தில் முளைத்த பிறப்புயர்வு தாழ்வும், தீண்டாமைக் கொடுமையும் நாட்டை அடிமைக்குழியில் வீழ்த்திவிட்டன. கொடுமையினின்றும் நாட்டை விடுவிக்க இதுபோழ்து அன்பர் பலர் முயன்று வருகின்றனர். அம்முயற்சிக்குப் பழந்தமிழ் நூலாராய்ச்சி பெருந்துணை செய்யும் என்பதை யான் விரித்துக் கூறவேண்டுவதில்லை.

பெண் மக்கள்

பழந் தமிழ்நாட்டில் பெண்மக்கள் நிலை எவ்வாறிருந்தது என்பதும் ஆராயற்பாலதே. அதுகுறித்து எனது உள்ளத்தெழும் அவாவினைக் காலத்தின் அருமை நோக்கி, அடக்கி இரண்டோர் உரை கூறப்புகுகின்றேன். 'தலைவனுந் தலைவியும் ஒத்த கல்வியுடையராயிருந்தனர்' என்னும் குறிப்பும், 'பெண்மகள் தனக்கினிய ஒருவனைத் தனக்குரிய தலைவனாகத் தானே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தாள்' என்னும் குறிப்பும், இன்னபிறவும் பழந்தமிழ் நாட்டுப் பெண்மக்கள் நிலையைப் புலப்படுத்தும். ஆண்மகன் தன்னை யொத்த பெண்மகளைக் காமப் பொருளாக என்று கருதினனோ, அன்றே, இன்பம், சிற்றின்பம் பேரின்பமெனப் பிரியலாயிற்று.

கலை

இனித் தமிழ் நாட்டின் கல்வி, இசை, ஓவியம், மருத்துவம், வானூராய்ச்சி, தொழில், வாணிபம், அரசியல், வீரம் முதலியவற்றின் மீது சிறிது கருத்துச் செலுத்துவோம். தமிழ், இயல், இசை, நாடகம் என்னும் மூன்று வழியிலும் வளர்ந்து வந்தது. தமிழ்க் கல்வித்திறனையுணர்த்தப் பழைய சங்கமருவிய நூல்களும், பெரியபுராணம், கம்பராமாயணம், தேவார திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய நூல்களும் கருவிகளாகத் துணைபுரிகின்றன. தமிழ் நாட்டுக்கென சிறப்பாக இசையுண்டு. மருத்துவமாண்பைச் சித்த நூல்கள் தெரிவிக்கின்றன. தமிழ்மக்கள் வான ஆராய்ச்சியில் வல்லுநராயிருந்தனர். பழைய சோழர் கட்டிடங்களும், பழைய கோயில்களும், அமராவதி, மாவலிபுரம் முதலிய இடங்களிலுள்ள சிற்ப நுட்பங்களும், பழந்தமிழ் மக்களின் அணிகலன்களும், அவர்களதுபாட்டுக்களும் தமிழ் ஓவியத்தின் உயர்விற்கு நிலைக்களன்களாயிருக்கின்றன.

ஆரியர், திராவிடர்

ஆரியர் திராவிடர் கிளர்ச்சியைச் சிறிது நோக்குவோம். தென்னாட்டிலுள்ள மக்களுள் 'ஆரியர் இன்னார், திராவிடர் இன்னார்' எனப் பகுத்துக் கூறல் எவரால் முடியும்? ஐயாயிரம் ஆண்டுகளாக ஈங்கு நிலைத்து வாழ்ந்துவரும் மக்களாகிய ஆரியர்க்கும், இந்நாட்டுப் பழங்குடிகளாகிய திராவிடர்க்கும் கலப்பு நிகழாதிருக்க முடியுங்கொல்? சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் நமது நாடு போந்த ஐரோப்பியர்க்கும் நம் நாட்டாருக்கும் கலப்பு நேர்ந்து, அதன்பயனாக ஒரு தனி வகுப்பும் நமது நாட்டில் தோன்றியிருக்கிறதெனில், பல ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இந்நாட்டில் நிலைத்து, வழக்க ஒழுக்கங்களிலும், கடவுள் வழிபாட்டிலும், பிறவற்றிலும் ஒன்று பட்டு வாழும் ஆரியர் - திராவிடருள் கலப்பு ஏற்பட்டிராது என்று எவரால் கூறுதல் கூடும்? இக்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள அனைவரும் தமிழரெனச் சொல்வதே சிறப்பாகும்.

தீண்டாமை

தீண்டாமை, பிறப்பாலோ, நிறத்தாலோ, செல்வத்தாலோ, கல்வியாலோ, மற்றெதனாலோ உண்டாகிய உயர்வு தாழ்வு காரணமாக ஏற்பட்டது. இந்தியர் அனைவருமே தீண்டாதவர், தாழ்ந்த வகுப்பார் என்பது என் கொள்கை. உலகத்தில் 'தாழ்ந்த வகுப்பார்' அடிமைப்பட்ட 'இந்தியரே' என்று நான் கருதியிருக்கிறேன். இந்தியாவில் பிறந்த அனைவருக்கும் அடிமைத்தன்மை அகன்று சுயராஜ்யம் அடைவதே நோக்காகும். ஒரு சாதியாருக்கு மட்டும் சுயராஜ்யம் கேட்கப்படவில்லை. ஒன்றுபட்ட சுயராஜ்யம் பெறுவதே தமிழரின் பிறப்புரிமையாம்.

இறுவாய்

தமிழ்த் தலைவர்களே! உங்கள் பொறுப்பை உணருங்கள். நீங்கள் உரிமையில்லா நாட்டுத் தலைவர்கள் என்பதை மறவாதேயுங்கள். உரிமை பெறும்வரை நீங்கள் போர்முனையில் நின்றே தீரவேண்டும். உங்கள் உறையுள் பொறுமையாகவும், பொருள் அருளாகவும், போர்வை தியாகமாகவும், போர்க் கருவிகள் உண்மை அஞ்சாமையாகவும், பகை தன்னலம் தற்பெருமையாகவும் ஒளிரல் வேண்டும். நல்லுளங் கொண்டு, உரிமைப்போர் புரிந்து, பாரதநாடிழந்த ஆண்மையையும், பெண்மையையும், அழகையும் தமிழ் மக்களாகிய நீங்கள் மீண்டும் பெறுமாறு முயலுங்கள். உலகிலுள்ள மற்ற நாடுகளை நோக்குங்கள். உங்கள் நாட்டையும் உடன் நோக்குங்கள். உரிமைவேட்கை கொள்

ளுங்கள். பண்டைத் தமிழ் மணம் மீளவும் வீசும். சுயஆட்சி மல்கும். ஆண்டவனருளால் உங்கட்கு எல்லா நலனும் உண்டாகும்."

[இச்சொற்பொழிவின் மொழி நயமும், எடுத்தல், தொகுத்தல், முடித்தல் ஆகிய மூன்று கூறுகளும் ஆழ்ந்து உணர்தற் குரியனவாம்.]

பெரியார் ஈ. வெ. ரா.

5. தமிழ்நாட்டுத் தனிப்பெருந் தலைவர் திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியாரவர்களின் சீர்திருத்த மாநாட்டுப் பேருரை (சுருக்கம்)

"சகோதரர்களே, சகோதரிகளே!

இப்பெரியதும், முக்கியமானதுமான மாநாட்டுத் தலைவனாக என்னைத் தெரிந்தெடுத்ததன் மூலம் தாங்கள் எனக்களித்த சிறப்புக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மாநாடு சீர்திருத்தக்காரர்கள் மாநாடு என்று சொல்லப்படுகிறது. எனவே, இத்தகைய ஒரு மாநாட்டுக்குச் சீர்திருத்தத்தில் மிகுதியும் நம்பிக்கையுள்ள ஒருவரைத் தலைவராகத் தெரிந்தெடுப்பீர்களானால் அது மிகவும் பொருத்தமுடையதாக இருந்திருக்கும். ஏனெனில் வரவர எனக்குச் சீர்திருத்தம் என்பதில் உள்ள நம்பிக்கை மறைந்துகொண்டே வருகிறது. நமது நாட்டைப் பொறுத்தவரையில் இப்போது நடைபெற்றுவரும் சீர்திருத்தம் உண்மையான சீர்திருத்தமல்ல. இவ்விதச் சீர்திருத்தங்கள் சுயநலத்தைக் கருதியே பெரிதும் கண்டுபிடிக்கப் பட்டவைகளாகும். அவற்றின் முடிவுகளெல்லாம் மேலும் மேலும் மோசமான நிலைமைக்கே அதாவது இனிமேல் சுலபத்தில் சீர்திருத்தம் செய்யமுடியாத நிலைமைக்கு போய்க்கொண் டிருக்கின்றன.

சமுதாயச் சீர்திருத்தம் என்பது ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு மாதிரியாக இருக்கின்றது. மேல்நாடுகளில் சமுதாயச் சீர்திருத்தம் எல்லா மக்களையுமே பொறுத்திருக்கின்றது. அதாவது, சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய சமூகப் பழக்க வழக்கம் முதலியன எல்லோருக்கும் ஒரேமாதிரியாகவே இருப்பனவாகும். நமது நாட்டில் பெரும்பாலும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவைகள் என்று சொல்லப்படுபவைகள் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு வகையில் உள்ளனவாகும்.

நமக்குள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சீர்திருத்தம் பொது மனித சமூகத்தில் மக்கள் பிறப்பின் காரணமாக உள்ள உயர்வு தாழ்வு போக்குவதாகும். இந்த முறை நமது இந்தியாவைத் தவிர வேறு

எங்கு நாட்டிலும் இவ்வளவு மோசமான கற்பனையின்மீது கையாளப்படுவதே இல்லை. அடுத்தபடியானவை, மக்களின் வாழ்க்கையில் இருந்து வரும் பழக்கவழக்கம், மூடபக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியவை போன்றவைகள். இவைகள் எல்லாம் நமது நாட்டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம் என்பதன் பெயர்களாலேயே நடைபெற்று வருகின்றன.

சீர்திருத்தக்காரர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்களில் மூடப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் ஒழிப்பது என்பது எவ்வளவு முக்கியமானது என்பதைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில், இந்த விஷயமே இப்போது எங்கும் பேச்சாயிருக்கிறது. இந்த மூடப்பழக்க வழக்கங்களால் பிழைக்கின்ற கூட்டம் தவிர மற்றவர்கள் எல்லோரும் இதன் அறியாமையை நன்றாய் உணர்ந்திருக்கின்றார்கள். ஆனாலும் அவர்களுடைய தைரியமற்ற தன்மையினால் அதை மாற்றிக்கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றார்கள்.

கடவுள், மதம், பக்தி, வேதம் முதலானவைகள் மாத்திரம் அல்லாமல் உற்சவம், சுபம், அசுபம் என்பன சம்பந்தமான சடங்குகள், நோன்பு, விரதம், வேண்டுதல், தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம், காணிக்கை ஆகியவைகள் போன்ற விஷயங்களில் நாம் நடந்துகொள்ளும் நடவடிக்கைகள் முழுவதும் மூடப்பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் ஆகியவைகளில் பட்டனவாகும். இவைகளே நமது முற்போக்கை அடியோடு கெடுத்து விடுகின்றன. இவற்றால் நமது நாடு விடுதலையடைய முடியாத அடிமைத் தன்மையில் ஆழ்ந்து கிடப்பதாகும்.

நாமோ மூடப்பழக்க வழக்கம் என்று சந்தேகமற நன்றாயறிந்த ஒரு சிறு விஷயத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமானாலும் நடுங்குகின்றோம். மேலும் 'பெரியவர்கள் நடந்த வழி' என்கின்ற எண்ணம் பெரிய தடையாகி விடுகின்றது. எனவே, இவ்விஷயத்தில் சிறிதும் தாட்சண்யமற்ற - தயக்க மில்லாத - அழிவு வேலையே மிகவும் தேவையானது என்று மறுபடியும் சொல்லுவேன்.

இந்த மூட நம்பிக்கை, குருட்டுப் பக்தி என்கின்ற துறையில் நமது மக்களின் பணம் வருஷம் ஒன்றுக்குப் பலகோடிக் கணக்கில் வீணாகின்றது. நமது தென்னாட்டில் மட்டும் வருஷத்தில் ஒரு லட்சம், இரண்டு லட்சம், ஐந்து லட்சம், பத்துலட்சம், இருபது லட்சம் வரும்படியுள்ள கோயில்கள் பல இருக்கின்றன. வருஷத்தில் பத்து லட்சம், இருபது லட்சம், ஐம்பது லட்சம் செலவு செய்து கூட்டம் கூடும் யாத்திரை ஸ்தலங்கள் நமது தேசத்தில் அநேக மிருக்கின்றன, இவைகள்

யாவும் ஒருசில கூட்டத்தாரின் சுயநலத்திற்காக வஞ்சகக் கருத்துக் கொண்டு உண்டாக்கப்பட்ட மோசடியே அல்லாமல் வேறல்ல. இவைகள் பாமரமக்களை ஏமாற்றச் செய்த சூழ்ச்சிகளேயாகும்.

நமக்குச் செல்வமோ, கல்வியோ, அறிவோ, ஆராய்ச்சியோ வேண்டுமானால், இந்த மூடநம்பிக்கைகளை அடியோடு வெட்டி வீழ்த்த வேண்டும். இந்தத் துறையில் மற்றெல்லாத் துறைகளையும்விட மிகுதியும் அழிவு வேலை செய்யப்பட வேண்டும். இல்லையேல், சமூக சீர்திருத்தம் என்பது பகற்கனவாகவே முடியும்."

டாக்டர் - பி. வரதராஜுலு நாயுடு

6. திருநெல்வேலி ஜில்லா 5 - வது தேசீய மாநாட்டின் தலைமைப் பேருரைச் சுருக்கம் (21 - 3 - 24)

" சகோதரிகளே !

மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டத்தில் முக்கிய அம்சமாய் விளங்குகிற கதரை அபிவிருத்தி செய்வதற்கு எல்லா சாதனங்களும் அமையப் பெற்ற உங்கள் ஜில்லாவின் மாநாட்டில் அக்கிராசனப் பதவியை வகிக்குமாறு எனக்கு நீங்கள் உத்தரவிட்டது ஒரு பெரும் பாக்கியமென்றே கருதுகிறேன். இந்த ஜில்லாவில் காணப்படும் இயற்கை அற்புதங்களை வர்ணிப்பது கம்பர் போன்றவர்களால்தான் சாத்தியமாகும். சர்வ ரோகங்களையும் நீக்கி, தேகத்திற்கும் மனதிற்கும் உற்சாகத்தைக் கொடுத்துக்கொண்டிருப்பதும், தென் இந்தியாவில் அதற்கு நிகராக வேறு ஒன்றைக் காண முடியாதென்று சொல்லக் கூடியதுமான குற்றால நீர்வீழ்ச்சி இந்த ஜில்லாவிலேயே இருக்கிறது. அகத்திய முனிவருடைய வாசஸ்தலமாகிய பொதிகை மலையும் இந்த ஜில்லாவிலே இருக்கிறது. சிறந்த தேசாபிமானியும், கவிச்சக்ரவர்த்தியும், சமீபத்தில் காலஞ் சென்றவருமான சுப்பிரமணிய பாரதியார் ஜனித்ததும் இந்த ஜில்லாவில்தான். நமது மாகாணத்தில் சுயராஜ்ய தாகங்கொண்ட எந்த ஜில்லாவிற்கும் திருநெல்வேலி பின்வாங்கி நின்றதில்லை. மகாத்மா காந்தியின் இயக்கந் தோன்றிய பின்பு தனது கடமையைக் கூடியவரையில் இந்த ஜில்லா நிறைவேற்றி வந்திருக்கிறது. பல வகைகளிலும் சிறப்புற்று விளங்கும் இந்த ஜில்லாவின் 5 - வது மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்குமாறு நீங்கள் உத்தரவிட்டதற்காக எனது மனப்பூர்வமான வந்தனங்களை உங்களுக்குச் செலுத்துகிறேன்.

சுயராஜ்ய தத்வம்

சுயராஜ்யமென்றால் நமது ஆத்மாக்களின் தன்மையும் காரியமும் இவையென்று அனுபவித்தறிவது என்றே நாம் கருதுகின்றோம். தன் ஆத்மாவின் பெருமையும் மகத்துவமும் கௌரவமும் இப்படிப்பட்டவை யென்று அறியச் சக்தியில்லாதவன் தன்னை சுயராஜ்யக்காரன் என்று சொல்லிக்கொள்ளக்கூடாது. அப்பெயர் அவனுக்குத் தகாது. உலகி லுள்ள முக்கிய விஷயங்களும் அழகின் பெருமையும் ஆத்மாவினிடமே உற்பத்தி யென்ற அறிவு எவருக்கு உண்டோ அவரே அதன் தெய்வத் தன்மையையும் தர்ம சொரூபத்தையும் அனுபவிக்கமுடியும். இவ்வித ஆத்மீக தத்துவமே நமது நாட்டில் அநாதிகால முதற்கொண்டு நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்தையும் உருவாக்கி வந்திருக்கிறது. இப்போதும் நாட்டில் நன்மை பயக்கும் தொண்டுகளுக்கெல்லாம் அந்தத் தத்துவமே அஸ்திவாரமாக நிற்கிறது.

ஏதேச்சாதிகார ஆட்சி

இந்த ஆட்சிமுறையில் ஒரு மனிதனது வாழ்க்கையும் சுதந்திரமும் ஆபத்திற்குள்ளானால் மன்னரது உதார குணத்தை நம்பவேண்டியதைத் தவிர வேறு வழி கிடையாது. மன்னர் நல்லவராகவும் அன்பும் நீதியும் நிறைந்து ஆட்சி செலுத்துகிறவராகவும் இருக்கலாம். ஆனால் அவர் ஜனங்களிடம் எவ்விதமான கடமையையும் நிர்ப்பந்தமாகச் செலுத்தியே தீரவேண்டுமென்று சொல்வதற்கில்லை. அவர் தம் இஷ்டத்தின்படியே ஆட்சி செலுத்துகிறார். இயற்கையில் மன்னர் குணம் திறமாக இருக்க லாம். அவ்வளவேதான். ஏதேச்சாதிகாரம் பெற்ற மன்னரது ஆளு கையில் மன்னருக்கும் பிரஜைக்குமுள்ள சம்பந்தம் எஜமானனுக்கும் அடிமைக்கும் உள்ள சம்பந்தம் போன்றது. ஜனங்களுடைய மூலாதார மாயுள்ள உரிமைகள் காப்பாற்றப்படுமென்ற நிச்சயமில்லை.

வேற்றுமைகளை யொழித்தல்

உலகிலுள்ள சகல சமூகங்களும் ஒரே சமூகமாகி ஒரேவித எண் ணங்களையும் பழக்க வழக்கங்களையும் அடையுமாறு செய்யப் பிரயத்த னம் செய்வதற்கு ஒரு கிளர்ச்சி நடைபெறுகிறது. இது சில காலமாக உலகெங்கும் இருந்து வருகிறது. இந்தக்கிளர்ச்சியில் எனக்கு நம்பிக்கை யில்லை. இது பலிக்க வேண்டுமென்ற விருப்பமும் எனக்கில்லை. இந்தக் கிளர்ச்சியானது பலவித குணங்களுடன் கூடிய தேச சமூகங்களை அழிக்க முயற்சி செய்யும். ஒரு சமூகத்தாரை மற்ற சமூகத்தவரி

னின்று பிரித்துக் காட்டத்தக்க சில வேறுபட்ட தர்மங்கள் உண்டு. இவற்றை அழித்துவிடவே அந்தக் கிளர்ச்சி வந்திருக்கிறது. இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் எங்கும் ஒரேவித வாழ்க்கையும் மனோ பாவனைகளும் நிறைய வேண்டு மென்கிறார்கள். இந்த நிலை மனிதர் அடையத்தக்க லட்சியமாயிருக்க முடியாது. ஒரு மனிதனோ ஒரு சமூகமோ எவ்விதத்திலும் அடைய முடியாமலும் அப்படி யடைந் தாலும் பலனில்லாலும் போய்விடக்கூடிய ஒரு நிலையை லட்சியமாக அடைவதைப் போல் மூடத்தனம் உலகில் வேறு இல்லை.

சர்வதேச சகோதரத்துவம்

பல தேசங்களிலும் ஒன்றுக நட்புக்கொள்ளும் எண்ணம் பரவ வேண்டும். இம் முயற்சியில் ஒரு தேசமும் தன் சிறப்பான குணத்தை இழக்கவேண்டிய அவசியமில்லை. இவ்வித சர்வதேச ஐக்கியத்தை நாம் அங்கீகரிப்போம். இந்தக் கொள்கையில் ஒவ்வொரு தேசத்திற்கும் பலன் இருக்கிறது. தேசத்து விசேஷகுணம் பெருக இங்கு இடமுண்டு. ஒரு தேசத்திற்குத் தொண்டு செய்ய ஒருவர் தமது குடும்பத்தாரிடம் அன்பைச் செலுத்தாமலிருக்க வேண்டு மென்பதல்ல. குடும்பத்தாரி டம் அன்பு குன்றுமலே தேசத்தொண்டும் செய்யமுடியும். அது போலவே நமது தாய்நாட்டினிடம் அன்பு குன்றுமலே பல தேசங்கள் சேர்ந்த ஒரு குடும்பத்தினிடம் அன்பை விரிவாக்கிவிட முடியும். அவ் வாறு இருப்பது சிறந்த நிலையென்று சொல்வதற்கு ஆட்சேபமே இருக்க முடியாது. இது அடைய முடியாத நிலையுமல்ல. ஆதலால் இந்த நிலையை லட்சியமாக ஒவ்வொரு தேசமும் கைக்கொள்ளலாம்.

ஸ்திரீகளின் நிலை

இந்தியாவில் மனிதன் செய்து முடித்த மிகப் பெரிய காரியங்களி லும் மிக நேர்த்தி பெற்றதும் இனிமையில் சிறந்ததும் மகா கௌரவம் பொருந்தியதும் சத்திய குணச் செல்வமிக்கதும் ஆகிய எந்த விஷயத்தி லும் ஸ்திரீகளின் ஊக்கமே ஆதாரமாக நின்றிருக்கிறது. நமது தேசத்துப் பழைய வழக்கங்களையும் பயிற்சிகளையும் அழிய விடாமல் ரட்சித்து வந்ததும் பெண்மணிகளேயென்று சொல்லவேண்டும். இத் தேசத்து மாதர்கள் நல்ல கொள்கைகளையெல்லாம் ஒன்று சேர்த்து ரட்சித்து வந்தவர்கள். நம்மிடம் பழைய கால முதல் விளங்கிவரும் நேர்த்தியான இனிய சாதனங்களைச் சேர்த்து ரட்சிக்காமல் இருப்போ மானல் நமது பூர்வகால சரித்திரத்துடன் நாம் கலந்துகொள்ள இட மில்லாமல் போய்விடும். இந்தியப் பெண்மணிகள் தமக்குள்ள சாமர்த்தி

யத்தாலும் பொறுமையாலும் சகிக்கும் குணத்தாலும் தீரத் தன்மையாலும் மனோ பலத்தாலும் அமைதியுடன் கூடிய மனத்தாலும் அசாதாரணமான பற்று என்ற பலத்தாலும் தமது தெய்வத்திற்காகவும் தேசத்திற்காகவும் ஜனங்களுக்காகவும் ஆடவர்களைப்போலவே மிக்க தீரத்தன்மையுடன் போராடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஸ்திரீகளை நாம் இப்போது எவ்வாறு நடத்துகிறோம்? நமது தாய்மார்களும் சகோதரிகளும் மனைவிமாரும் செய்திருக்கும் அரிய வேலைகளுக்குத் தகுந்தபடி நாம் நடந்துகொள்ளுகிறோமா? ஸ்திரீகளுக்குரிய சுதந்திரங்களைப் பறிமுதல் செய்தோமானால் நாம் நாகரிகமற்ற காட்டு மனிதர் என்று நமது நெற்றியில் பட்டம் கட்டிக்கொள்கிறோம். அவர்களுக்குச் சுதந்திரமில்லை யென்று நாம் சொல்வோமானால் நமது கால்களிலும் கைகளிலும் விலங்கைப் போட்டுக் கொண்டவராவோம்.

நண்பர்களே! நாம் எழுவோம், நம்பழிகளைப் போக்கிக்கொள்வோம்! நமது ஸ்திரீகளின் உரிமையை அறிந்து அதை அவர்களுக்கு நாம் அளிக்காவிட்டால், அவர்களும் முன்னேற்றமடைந்து நம்முடன் நாம் நடத்தும் போரை நடத்த முன்வராவிட்டால் தேசவிடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் குந்தகம் ஏற்படுமென்பதை அறியுங்கள்.

தீண்டாத வகுப்பினர்

இப்போது நான் ஒரு விஷயம் கூறப்போகிறேன். அது மிக்க அவசியமான விஷயம். அதைப்பற்றி எவரும் தவறுதலாக எண்ணிக்கொள்ளக்கூடாது. மேனாட்டு நாகரிக சம்பந்தத்தால் நான் அதைக் கூறுகிறேன் என்று நினைக்கவேண்டாம். அந்த மயக்கம் எனக்குக் கிடையாது.

தீண்டாத வகுப்பினருக்குச் செய்யப்படும் கொடுமையை நான் கண்டிக்க முற்படுவதற்குக் காரணம் நான் உண்மையான ஹிந்துவென்பதேயன்றி வேறெதுவுமில்லை. ஹிந்து மதத்தினிடம் பக்தி மிகுதியால் நான் தீண்டாத வகுப்பினரிடம் அன்பு செலுத்துகிறேன். தீண்டாத வகுப்பினரை நடத்தும் வழக்கம் நம்மிடம் கடின சித்தத்தை உண்டாக்கிவிட்டது. மிருகங்களிடம் காட்டும் கருணைகூட இந்தத் தீண்டாத வகுப்பினரிடம் நாம் காட்டுவதில்லை. ஜீவராசிகளிடம் கருணை செலுத்தவேண்டுமென்று நமது மதம் போதிக்கின்றது. மிருகங்களைக் காட்டிலும் தாழ்வாக இவர்களை நடத்துகிறோமென்பதைச் சிலர் மறுக்கலாம். தீண்டாமை யென்னும் கொள்கையும் ஜாதியில் உயர்வு தாழ்வு

என்பதும் தீமை பொருந்திய பொய்க்கதைகளாகும். இது ஹிந்து தர்மத்திற்கு ஒத்ததல்ல.

தற்கால நிலைமை

நாம் சுயராஜ்யமடைவதற்கு முதலில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையும் தீண்டாமையை ஒழித்தலும் அவசியம். பலாத்காரத்தால் நிரந்தரமாக ஒரு காரியத்தைச் சாதித்துக்கொள்ளவோ உண்மையான சமாதானத்தை நிலை நிறுத்தவோ முடியாதென்பதை இதுவரை நடந்துள்ள உலக சரித்திரத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். ஆகவே நமது சத்தியமான விருப்பத்தையோ இயக்கத்தையோ பலாத்காரத்தால் அடக்கிவிட முடியாது. பலாத்காரத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த மேனாட்டார் கூட அதன்மேல் வெறுப்புக் கொண்டு, அஹிம்சா தர்மத்தின் மகிமையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

முடிவுரை

சகோதரர்களே! தேசத்தின் நெருக்கடியான நிலைமையை அறிந்து உழைக்க உடனே முன் வாருங்கள். உலகத்திலேயே சிரேஷ்டராயுள்ள மகாத்மா காந்தி நமக்குத் தலைவராகக் கிடைக்கப் பெற்றிருக்கிற அதிர்ஷ்டத்தைச் சிந்தியுங்கள். இந்த நல்ல சமயத்தைக் கைவிட்டு விட்டால் பின்சந்ததியார்களின் பழிப்புக்கும் சாபத்திற்கும் ஆளாவீர்கள். பொறாமை அகங்காரம் முதலிய அற்பகுணங்களை விடுத்து அன்பு அடக்கம் தயை முதலிய உன்னத குணங்களை மேற்கொண்டு, ஜாதி மதப்பகைமைகளை ஒழித்துத் தேசத்திற்காக உழைக்க உடனே எழுங்கள்! உங்கள் போராட்டம் சத்தியமானதாகையால் உங்களுக்கேதான் வெற்றி யென்பதில் சந்தேகமில்லை. எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு அருள்புரிவானாக!"

பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை

7. உயர்திரு ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள், சென்னை மதுவிலக்குச் சங்க ஆண்டுவிழாவில் 'மணிமேகலையும் மதுவிலக்கும்' என்பது பொருளாகப் பேசியது.

"இயற்கை வளம் நிறைந்த தமிழ்நாட்டில் பனையும் தென்னையும் பல்லாயிரம் உண்டு. பாண்டிநாடு தொன்று தொட்டுப் பனைவளம் படைத்ததாகும். சோழநாட்டிலும் சேரநாட்டிலும் தென்னைச் செல்வம் சிறந்து விளங்குகின்றது. தென்னையிலும் பனையிலும் ஊறுகின்ற மது ஆறாகப் பாய்வதற்குப் போதியதாகும். ஆயினும் தென்னாட்டிற் பிறந்த

சமயங்களும், புகுந்த சமயங்களும் மதுவிலக்குப் பிரசாரம் செய்தன. சைவமும் வைணவமும், பௌத்தமும் சமணமும், மகம்மதியமும் கிருஸ்தவமும் மதுபானத்தைக் கடிந்தன. மற்றைய கொள்கைகளில் பிணக்கமுற்ற இப்பெருஞ் 'சமயங்கள் மது விலக்குக் கொள்கையில் இணக்கமுற்றுப் பணிசெய்த பான்மையாலேயே தமிழ்நாட்டில் மது பானம் மட்டுப்படுவதாயிற்று.

தமிழ்மொழியில் இறவாத பெருநூல்கள் இயற்றிய பேரறி வாளரும் தம் கவிகளின் வாயிலாக மதுவிலக்குப் பிரசாரம் செய்துள் ளார்கள். தமிழ்மறை யென்று தமிழ்நாட்டார் போற்றும் திருக்குறள், மனித சமுதாயத்துக்குக் கேடு விளைக்கும் மூன்று தீமைகளை மிக அழுத்தமாகக் கண்டிக்கின்றது. விபசாரம், மதுபானம், சூதாட்டம் இம் மூன்றும் செல்வத்தைச் சிதைத்துச் சீர்மையை அழிக்கும் என்று அந் நூல் கூறுகின்றது.

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு"

என்பது வள்ளுவர் வாய்மொழி.

சமண முனிவராகிய பவணந்தியார் நன்னூல் என்னும் இலக்கண நூலின் வாயிலாக மதுவிலக்குப் பிரசாரம் செய்கின்றார். கள்ளுண்பவர் கல்வியறிவைப் பெறுதற்கு உரியரல்லர் என்பது அவர் கொள்கை. 'களிமடி மானிகாமி கள்வன்' முதலியவர்கள் கல்விபெறுதற் குரியராகார் என்று ஆசிரியர் கட்டுரைக்கின்றார். கள்ளுண்பவன் 'களி' யெனப் படுவான். மாணவராதற்குத் தகுதி யற்றவர்களில் முதல் வரிசையில் முதலாகக் கள்ளுண்பவனை வைத்தமையால் மதுவிலக்குப் பிரசாரத்தில் நன்னூலார்க்கு எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பது நன்கு விளங்கு கின்றதன்றோ ?

பௌத்த சமயத்தைச் சார்ந்த நூல் மணிமேகலை. அந்நூல் ஐந்து சிறந்த கொள்கைகளைப் பஞ்சசீலம் எனப் பாராட்டுகின்றது. பஞ்சசீலம் வாய்ந்தோரே சிறந்தோர் ஆவர். கள்ளுண்ணாமை, பொய் யுரையாமை, கொலைசெய்யாமை, களவு செய்யாமை, விபசாரம் செய் யாமை, ஐந்தும் பஞ்சசீலம் எனப்படும்.

இனி மணிமேகலையில் அமைந்த மதுவிலக்குப் பிரசாரத்தைப் பார்ப்போம்.

பசிப்பிணி யென்னும் பாவியை இப்பாரினின்றும் ஒழிக்க முயன் றாள் ஆதிரை; அவள் கணவனாய சாதுவன் மது என்னும் அரக்கனை

இம்மாநிலத்தினின்றும் அகற்ற முயன்றான். ஒருநாள் அவன் கப்பலேறி வங்கநாட்டுக்குப் புறப்பட்டான். நடுக்கடலிற் கப்பல் செல்லும்பொழுது ஒரு சுழல்காற்று எழுந்தது. மரக்கலம் சின்ன பின்னமாகச் சிதைந்து தாழ்ந்தது. கருங்கடலில் மிதந்த சாதுவன் கையில் ஒரு பாய்மரம் அகப்பட்டது. சிலநாள் இரவு பகலாக அலைகளால் மோதுண்டு அலைந்த அம்மரம் ஒரு தீவிலே அவனைக் கொண்டுசேர்த்தது. அங்கே நாகர் என்னும் வகுப்பார் வாழ்ந்து வந்தார்கள். விலங்குகளுக்கும் அவர்களுக்கும் வேற்றுமை இல்லை. தம்முள் ஒருவனைத் தலைவனாகவும் குருவாகவும் அவர்கள் கொண்டிருந்தார்கள். அவன் ஆண்கரடி போன்றவன். அவன் மனையாள் பெண்கரடி போன்றவள். கரையிலே ஒதுக்கப்பட்ட சாதுவனைச் சில நாகர் கண்டார்கள்; நரமாமிசம் கிடைத்ததென்று நாக்கு ஊறினார்கள்; தம் குருநாதனிடம் அவனைக் கொண்டு சென்றார்கள். பசியால் மெலிந்து குளிரால் நலிந்த சாதுவனைக் குருநாதன் கூர்ந்து நோக்கினான்; "நீ யார்? இங்கு வந்த காரணம் என்னை?" என்று நாகநாட்டு மொழியிலே வினவினான்.

அம்மொழியை அறிந்திருந்த சாதுவன் கருங்கடலில் நேர்ந்த துன்பத்தை உருக்கமாக எடுத்துரைத்தான். அந்நிலையில் குருநாதன் உள்ளத்தில் இரக்கம் பிறந்தது. அருந்துயருற்ற நம்பிக்கு நாட்பட்ட கள்ளும் நல்ல ஊனும் கொடுக்கும்படி அருகே நின்ற நாகரைப் பணித்தான். அவ்வுரை கேட்ட சாதுவன் திடுக்கிட்டான். இரு கையாலும் செவியைப் பொத்திக்கொண்டு 'ஐயனே! கள்ளும் ஊனும் வேண்டேன்' என்று உறுதியாக உரைத்தான். அவ்வுரை கேட்ட குருநாதன் வியப்படைந்தான். 'கள் என்ற சொல்லைக் கேட்டபொழுது துள்ளி மகிழாத உள்ளமும் உண்டோ! நாவுக்கினிய ஊனையும், கவலையை ஒழிக்கும் கள்ளையும் விலக்கலாமோ' என்று வெகுண்டு வினவினான். அது கேட்ட சாதுவன் மதுபானத்தின் தீமையைக் குருநாதன் மனங்கொள்ள உணர்த்தலுற்றான். "ஐயனே! மானிடப்பிறவியில் நாம் அடைந்துள்ள செல்வங்களுள் எல்லாம் சிறந்தது அறிவுச் செல்வமே ஆகும். அவ்வறிவாலேயே நன்மை தீமைகள், குற்ற நற்றங்கள் இவற்றைப் பகுத்து உணர்கிறோம். இத்தகைய அறிவை வளர்க்கின்றனவர்களே மேலோர்; அதனைக் கெடுக்கிறவர்கள் கீழோராவர். மதுபானம் நம் அறிவை மயக்குகின்றது; நாளடைவில் அதனைக் கெடுத்து விடுகின்றது. செய்யத்தக்கது இது, செய்யத் தாகாதது இது என்று பகுத்தறியும் திறமையை இழந்துவிட்டால் மாலுமியில்லாத மரக்கலம் போல நமது வாழ்க்கை நெறி கெட்டொழியும். இதனாலேயே,

" மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்
அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தனர் "

என்று சாதுவன் எடுத்துரைத்தான்.

உயிர்க்குறுதி பயக்கும் உண்மைகளைச் சாதுவன் வாயிலாகக் கேட்ட நாகர் தலைவன் அவனடிகளில் வீழ்ந்து வணங்கினான்; அதுவரை கடலிற் கவிழ்ந்த மரக்கலங்களிலிருந்து கைப்பற்றிய அரும் பெரும் பொருள்களை அவனுக்குக் கையுறையாகக் கொடுத்தான்; வங்கநாட்டினின்றும் அங்கு வந்தடைந்த வாணிகக் கப்பலில் அவனை ஏற்றி அனுப்பினான்.

ஆகவே மதுவிலக்குப் பிரசாரம் தமிழ்நாட்டில் புதிதாகத் தோன்றிய தொன்றன்று என்பது இக்கதையால் விளங்கும். செல்லுமிடந்தோறும் தமிழ் மக்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் கடமையை மேற் கொண்டிருந்தார்கள். நாட்டில் இருந்தாலும் நடுக்கடலிற் போந்தாலும் இப்பணியை ஒல்லும் வகையால் செல்லும் வாயெல்லாம் செய்து வந்தார்கள். நரமாமிசம் புசிக்கும் நாகர் நாட்டிலே ஒதுக்கப்பட்ட ஒரு தமிழ் வணிகன் அறவுரையால் அந்நாட்டு அரசனைத் திருத்தி யருளினான் என்னும் தெள்ளிய வரலாறு நாம் போற்றுதற்குரிய தன்றோ ?"

அறிஞர் அண்ணாத்துரை

8. சேலத்தை அடுத்த இராசிபுரத்தில் சிறுவர் ஆரம்பப் பள்ளிக் கூடத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தபோது (10-7-48) உயர்திரு. சி. என். அண்ணாத்துரை அவர்கள் பேசியது.

" வழக்கமாக இவ்விதமான பள்ளிக்கூடங்களில் திறப்புவிழா வாற்ற மந்திரிமார்களை வரவழைப்பார்கள். நானோ மந்திரிமார்கள் கைது செய்யவேண்டுமென்று தயாரித்துள்ள பட்டியலில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளவன். என்னைக் கூப்பிட்டு இந்தப் பள்ளிக் கூடத்தைத் திறந்து வைக்கச் சொல்வது சற்றுத் துணிவான காரியமாகும்.

இந்தச் சிறிய அழகிய பட்டியில் இவ்வளவு பெரிய பள்ளிக் கூடக் கட்டிடம் அமைத்து, இந்தக் கல்விக் கழகத்தைத் திறந்து வைக்கும் அரும் பணியை ஆற்றும்படி என்னை அழைத்த என் நண்பர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது வாழ்க்கைத் துறையிலேயே ஓரளவுக்குச் சலிப்பு ஏற்பட்டு, சோர்ந்து கிடக்கும் எனக்கு இந்த அரும்பணி சற்றுப் புது உற்சாகத்தைக் கூட ஊட்டுகிறது. உருவான காரியம், பயன்தரும் பணி, கொள்கை கோட்பாடுகளை நிலைநிறுத்தும் அமைப்புகள் தேவை. அவைகளைச் செய்ய நம் தோழர்கள் பயிற்சி பெற வேண்டும், செய்ய வேண்டும் என்பதிலே, நான் சற்று அக்கறை அதிகமாகக்கொண்டவன். உருவான காரியமெதுவும் செய்ய வாய்ப்பும் திறமும் அற்றவர்களா நாம்? ஆற்றலில்லையா அல்லது அவ்விதம் செய்வதற்கு அவசியம் ஏற்படவில்லையா என்று பல தடவைகள் எண்ணி ஏங்கி இருக்கிறேன். நாட்டிலே மூடமதியும், அறியாமையின் பிடியும் மிகப் பலமாக இருக்கிறது என்பதை நாம் அறிவோம் - நாட்டுக்கு அறிவித்தோம் - அறிவித்துக்கொண்டே இருக்கிறோம் - ஆம், அறிவிக்கத்தான் வேண்டும். அந்த அரும் பணியாற்றும் நாம், அத்துடன் திருப்தியடைந்து விட வேண்டியது தானா? அறிவு பரவ-மூடமதி முறியடிக்கப்பட, அறியாமை ஒழிய, ஏன் நாம் ஆங்காங்குக் கல்விக் கழகங்களை, ஆரம்பப் பள்ளிகளை அமைக்கக் கூடாது? உருவும் பயனும் தெரியுமே - ஊருக்கும் நல்லது ஆகுமே - நமது உயர்தரமான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமே, இத்தகைய அமைப்புகள்-பள்ளிகள் - படிப்பகங்கள் - பட்டிதொட்டிகளெல்லாம் அமைக்கவேண்டும் என்ற அக்கறை, அறிவுபரவ வேண்டும் என்றநோக்கம் கொண்ட நமக்குத்தானே ஏற்படும் - நாம்தானே நாட்டாருக்கு நல்லறிவு தேவை, தேவை என்று வலியுறுத்துகிறோம் - நாம்தானே அந்த அறிவு பரவும் கல்விக் கழகங்களை அமைக்கவேண்டும் - என்றெல்லாம் எண்ணுவதும், அத்தகைய உருவான காரியமாற்றாது இருக்கிறோமே என்பதை எண்ணி உள்ளம் நோவதுமான நிலையில் உள்ளவன் நான். என்னை நண்பர் இராமசாமி, தமது குக்கிராமத்திலே முப்பதாயிரம் ரூபாய்க்குமேல் செலவிட்டு அமைத்திருக்கும் அறிவாலயத்தைத் திறந்துவைக்க அழைத்தபோது, நொந்த என் உள்ளத்திலே செந்தேன் பாய்வது போலிருந்தது. இதோ செயலாற்றுகிறார்கள்—உருவான காரியம் நடைபெறுகிறது—பேச்சு, ஒலி வடிவோடு நில்லாமல் செயலாக உருவெடுக்கிறது என்று எண்ணிக் களித்தேன். நண்பர் இராமசாமியை எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரியும். அவரிடம் நான், இப்படிப்பட்ட உருவான காரியத்தை உண்மையில் எதிர்பார்க்கவே இல்லை. படபடவெனப் பேசுவார்—ஆர்வத்தால் கட்சிக்கூட்டங்களில் எல்லாம் கலந்து கொள்வார்—சற்றுக் கண்டிப்பாகவே பேசுவார்—இவ்வளவுதானே தவிர, காரியமாற்றுவார்-

ஓர் ஊர் மக்களையே மனம் மாறச் செய்து, அவர்களின் உதவியைப் பெற்று, இப்படி ஒரு உருவான காரியம் செய்வார் என்று நான் எண்ணினதே இல்லை. வந்து பார்க்கிறேன், இந்த வசீகரமான கட்டிடத்தை. பெருமை அடைகிறேன், என் நண்பரின் பெரும் பணியைக் கண்டு. எந்த நகரமும் பெருமை கொள்ளக்கூடிய அளவிலும், தரத்திலும் அமைந்திருக்கிறது இந்தக் கட்டிடம்—கிராமக் கல்விக் கழகம். என் நண்பர் நகைச் சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன், தமது கிந்தனார் காலட்சேபத்திலே கிராமப் பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பாடுவார், அழகாக! "ஜன்னல் ஒண்ணிருக்கும்—கரையான் திண்ணிருக்கும்" என்று. கிராமங்களிலே பள்ளிக்கூடங்கள் அப்படித்தான் இருக்கும்— கள்ளிகாளான் முளைத்து. பாம்புப்புற்றும் பாழுங் கிணறும் உள்ள புறக்கடையும், சரிந்துள்ள சுற்றுச் சுவரும், ஒழுக்கல் கூரையும் கொண்டதாக இருக்கும். இதிலேதான், "கல்விக்கரசியை"க் கொலுவீற்றிருக்கச் செய்வார்கள்! கல்வி பரவுமா? இதோ உள்ள இந்த அறிவாலயம், இந்த ஊரிலேயே ரம்மியமான இடம்—இது ஊரின் பொதுச் சொத்து—சீலமிகுந்தவர்களின் செல்வம்—நாட்டின் எதிர்காலத்தை ஆக்குவிக்கும் பாசறை. இதை அமைத்த நண்பருக்கும், அவருக்கு உதவி புரிந்த நண்பர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * *

எவ்வளவு பெருமையாக இந்நாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டாலும், அதற்கு எதை எதை ஆதாரமாகக் காட்டினாலும், பதிகங்களைப் பாடினாலும், வானை முட்டும் கோபுரங்களைக் கட்டினாலும், ஓர் உண்மையை மறக்கவேமுடியாது. மனித சமுதாய வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளை, பொருள்களை உலகுக்கு நாம் இன்னமும் ஒன்றுகூட, நமது அறிவின் மேம்பாட்டினால், திறமையினால், அளித்ததில்லை. மாறாக, உலகின் மற்றநாடுகள் தமது அறிவுத் தெளிவாலும், விஞ்ஞானத் திறமையாலும், கண்டுபிடித்துக் கொடுத்துள்ள வாழ்க்கை வசதிப் பொருள்களைக் கொண்டுதான், நாம் நமது வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருகிறோம்! ஒளி விஷயத்தில், குத்துவிளக்குக்குப் பிறகு நாம் முன்னேறவே இல்லை — 'அரிக்கன் விளக்கு' அளவுகூட!! ஒலி விஷயத்தில், நாம் பூசாரியின் உடுக்கை ஒலி 'ஓம் ஓம்' என்ற பிரணவ மந்திரத்தைக் காட்டுகிறது என்று கூறும் நிலையிலிருந்து முன்னேறவேயில்லை. பிரணவத்தின் பெருமையைச் சைவ மெய்யன்பர், ஒலிபெருக்கி மூலம், அயலார் அளித்த இந்த அற்புத சாதனத்தின்

மூலம் பக்தர்களுக்கு உபதேசிக்கிறார்! ஒரு துறையிலாவது நாம் நவீன உலகுக்கான கருவிகளை, எண்ணங்களைக் கண்டிருக்கிறோமா என்பதை எண்ணிப் பாருங்கள்! அந்தப் பாதையிலாவது சென்று கொண்டிருக்கிறோமா? நமது கல்வித்திட்டம் இந்த நோக்கத்தை மனதிற் கொண்டு மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்போது தான் பணம் செலவிடுவதால் முழுப் பயன்கிடைக்கும். நமது நாடும் முன்னேறும்.

இந்த அறிவு பரப்பும் அரும் பணியினையே நோக்கமாகக் கொண்டு கல்வியின் அடிப்படை மாற்றி அமைக்கப்பட வேண்டுமே யன்றி, வெறும் பிழைப்புக்கான கல்வியாகவோ, பேதைமையை வளர்க்கும் கல்வியாகவோ இருக்குமானால் பயன் இல்லை. கல்வி முறையை மாற்றாமல் மேலும் சில பல பள்ளிக்கூடங்களைக் கட்டி விட்டால் போதாது. இன்றுள்ள நிலையில், நமது நாட்டுப் பள்ளிக்கூடங்களுக்கும் பஜனை மடங்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. பள்ளிக்கூடங்களில் பஜனை மடத்தில் நடைபெறாத ஒரு வேடிக்கை நிகழ்கிறது என்று வேண்டுமானால் கூறலாம். பழைய கட்டிடம் கலனாகி, செங்கற்கள் பெயர்ந்துபோய்த் தூளாகிக் கிடக்கும் இடத்திலே மழை பெய்தால், அந்த மழைநீர் செங்கற் தூளிலே பாய்ந்தோட, தண்ணீரும் காவிக் கலராகும், தூளும் குழையும்—நீரும் கெடும். சிவப்பாகத் தெரியுமே தவிர, ஆடையைக் கரையாக்குமே தவிர சிகப்புச் சாயமாகி விடாது! இரண்டுங் கெட்ட நிலை! நமது நாட்டுக் கல்வி முறை ஏறத்தாழ இவ்விதமாகவே அமைகிறது. பழைய எண்ணங்களிலே கொஞ்சம் புது அறிவு தெளிக்கப்படுகிறது—ஒரு கலப்பு, பயனற்ற குழம்பு—பக்குவமற்ற முறை! இந்த நிலையில் உள்ள கல்வி பயன் தராது—நிச்சயமாகத் திருத்தி அமைத்தாக வேண்டும். அமைச்சர்கள் இந்தக் காரியத்தைச் செய்வார்களா ?

ஆனால் மாறுதலைச் செய்யாமல் கல்வி மூலம், அறிவைப் பெருக்க முடியாது. இதை ஆளவந்தவர்கள் உணர மறுத்தாலும், அவர்களை ஆளவந்தார்களாக்கிய நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். படிப்பு இருந்தால் பிழைக்கலாம், பெரும் பொருள் திரட்டலாம் என்ற ஆசை வார்த்தை கூறி நான் உங்களை மயக்க மாட்டேன். நான் அறிவேன், நீங்களும் அறிவீர்கள், கைஎழுத்துப் போடவும் தெரியாதவர்கள் கனதனவான்களாகி உள்ளனர்! அதேபோது M. A. B. L. வீட்டு வாடகை தரமுடியாததால், ஆண்டிற்கோர் வீடாக மாறுகிறார். கல்லூரி காணாத சிவாஜியும், அக்பரும் பெரிய சாம்ராஜ்யங்களைச் சிருஷ்டித்து ஆண்டிருக்கிறார்கள் சிறப்புடன். எனவே, கல்வியின் மூலமாகத்

தான் பணம் திரட்ட முடியும், பட்டம் பெற முடியும், ஆகவே கல்வி தேவை என்று கூறவில்லை. கல்வி, சான்றோர்கள் எண்ணங்களின் தொகுப்பு. கல்வி பயில்வதன் மூலம், அந்தச் சான்றோர்களின் எண்ணங்களை அறிந்து, அறிந்ததால் நாமும் சிந்தித்து, சிந்திப்பதால் நாமும் சில பல எண்ணங்களைக் கொண்டு, பிறகு உலகுக்கு அந்த எண்ணங்களையும் அந்த எண்ணங்களை அடிப்படையாகக் கொண்ட செயல்களையும் விளைவுகளையும் காணிக்கையாக்குகிறோம். டெலிபோன் கண்டுபிடித்தான் ஒரு விஞ்ஞானி-ஆனால் அந்தப் பொருள் இன்று அவனுடைய வீட்டிலேயா இருக்கிறது, பரம்பரைச் சொத்தாக! எங்கும்—எவருக்கும் பயன் தருகிறது! அவன் பேருபகாரி!! உலகுக்கு நமது அறிவின் மூலம், செலவின் மூலம் ஒரு துளி நலனாவது கிடைப்பதற்கு ஏற்ற ஆற்றலை நமக்கு அளிக்கக்கூடிய கல்வி நமக்குத் தேவை. கட்டாய இலவச ஆரம்பக் கல்வி மட்டும் போதாது, இந்த நோக்கம் ஈடேற. முப்பது நாற்பது வயதுக்கு மேற்பட்ட மக்கள் உள்ளனர் ஏராளமாக—எழுத்தறிவுமற்று. அவர்களை இனி ஆரம்பப் பள்ளிகளில் அமர்த்தி அணில் ஆடு சொல்லித் தருவது கேலிக் கூத்தாகும். ஆயினும் அவர்களை, அறிவுத் துறையிலே நுழையாது இருக்கச் செய்வதும் கூடாது. அந்தப் பெருந் தொகையினர், பழைய உலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தால், புதிதாகக் கல்வி பெறும் தொகையினருக்கும் அவர்களுக்குமிடையே பெரியதோர் பள்ளம் அகன்ற வாயுடன் இருக்கும். அது பயங்கரப் பள்ளம்—ஜாதி பேதத்துக்குச் சமமான ஓர் கொடிய பேதத்தை, அந்த இரு கூட்டத்திற்கு மிடையே உண்டாக்கிவிடும்—அது ஆபத்தான நிலை! எனவே முதியோர் கல்வித் திட்டம் வேண்டும்—வெறும் எழுத்தறிவிப்புப் போதாது. உலக அறிவை, அவர்களுக்கு ஊட்டவேண்டும்—பாடல், நாடகம், கதை, உரையாடல், பேச்சு, காட்சி ஆகியவை மூலம். அதிகமான பொருட் செலவுமின்றி இதைச் சாதிக்க முடியும். இராமாயண பாரதக் கதைகளை, இன்றுள்ள மக்களில் பெரும்பாலோர் அறிவர். எப்படி?—படித்தனரா?—இல்லை—கேள்வி ஞானமூலம் தெரிந்து கொண்டனர்—தலைமுறை தலைமுறையாக. நாமும், அவர்களுக்கு அதே முறையிலே புத்துலக அறிவைப் பரப்ப முடியும், அறிவுக் கழகங்கள் மூலம். நாயன்மார்களின் சரிதங்களைக் கேட்டு கேட்டுப் பழகிப்போன மக்களுக்கு நாம், நமது நாட்களில் வீரர், விவேகி, விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாற்றினை, இதுபோன்ற பெரிய கிராமக் கூட்டங்களில் எடுத்துக் கூறி, அவர்கள் மனதிலே புதிய கருத்துப் பரவச்செய்ய முடி

யும். அதிலும் நமது கிராம மக்கள், தெளிவான, வளமான இயற்கை அறிவுள்ளவர்கள்—அவர்களுக்கு விஷயத்தை நாம் நல்ல முறையிலே விளக்கினுல் பதிந்துவிடும். முதியோர் கல்வித் திட்டத்தை இம்முறையில் நடாத்த, பொதுநல நோக்கமும் பகுத்தறிவுக் கோட்பாடும் கொண்ட கழகங்கள் பெரிய கிராமப் பகுதிகளில் தோன்ற வேண்டும். திருத்தி அமைக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் மூலம் ஓர்புறம் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியும், மற்ருேர்புறம் முதியோர் கல்வித் திட்டமும் சேர்ந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டால், நாட்டிலே நல்லறிவு நிச்சயம் பரவும்; நாடும் முன்னேறும். இதற்கு ஓர் அச்சாரம் போல அமைந்திருக்கிறது, நண்பர் அமைத்துள்ள இந்தப் பள்ளிக்கூடம். இதிலே பணியாற்றப் போகும் ஆசிரியர்களும், நாட்டு நிலையை நன்கறிந்து பணிபுரிய வேண்டுகிறேன்."

"கல்கி"

9. உயர்திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) யவர்கள் சென்னைத் தமிழிசை முதல் மாநாட்டில் பேசியது.

"பெரியோர்களே!

நாளைய தினத்திலிருந்து இங்குத் தமிழிசை மழை பொழியப் போகின்றது. இன்றைய பேச்சுக் கச்சேரியை நீங்கள் கேட்டு இவ்வளவு கைதட்டல் செய்து உற்சாகப்படுத்துவதைப் பார்க்கும் போது, நாளை முதல் சங்கீத வித்வான்களுக்கும் கை தட்டல் செய்து உற்சாகப் படுத்தித் தமிழிசை அபிமானத்தைக் காட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

நீங்கள் காட்டும் இத்தகைய உற்சாகத்தைப் பார்க்கும்போது நம் தமிழ்த் தாய் அடைந்திருக்கும் புதிய வெற்றியைக் குறித்து எனக்குப் பெருமை உண்டாகிறது. சென்ற இருபது வருட காலத்தில் மூன்று யுத்தங்களில் தமிழ்த் தாய் வெற்றி மாலை சூடி யிருக்கிருள். நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது தமிழர் பொதுக்கூட்டங்களில் அரசியல் விஷயங்களை யெல்லாம் ஆங்கிலத்தில்தான் பெரிய பெரிய தலைவர்கள் பேசுவார்கள். நம்மைப்போல் தமிழ் அபிமானிகள் சிலர் அங்கிருந்தால் "தமிழ்", "தமிழ்" என்று கத்துவார்கள். அப்பொழுது பிரசங்கியார் எனக்குத் தமிழ் அவ்வளவு பேச வராது, தெரிந்ததைப் பேசுகிறேன் என்று ஆரம்பிப்பார். இப்பொழுது அரசியல் விஷயத்தைப் பற்றித் தமிழ் நாட்டில் பேசுவதற்குத் தமிழ் மொழிதான்

சரியானதென்று ஏற்பட்டுவிட்டது. அரசியலைப் பற்றித் தமிழில் சொல்ல முடியாத விஷயங்கள் இல்லையென்றும் ஏற்பட்டுவிட்டது. இதுவே தமிழ்த் தாயின் முதல் வெற்றி.

சகோதரர்களே! இரண்டாவது, பள்ளிக்கூடங்களில் அப்பொழுது விஞ்ஞானம் முதலியவைகளெல்லாம் ஆங்கிலத்தில்தான் சொல்லிக் கொடுப்பார்கள். ஆனால் உபாத்தியாயர்களே இப்பொழுது மாநாடுகள் கூட்டி விஞ்ஞானம் முலியவைகளைத் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்கிறார்கள்.

இன்னும், தத்துவ நூல்களை ஆங்கிலத்தில்தான் சொல்லிக் கொடுக்க முடியும் என்று சொல்லி வந்தார்கள். நமது தத்துவ சாத்திரப் பேராசிரியர் சர். எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் தத்துவ ஆராய்ச்சி பற்றிப் பெரிய பெரிய புத்தகங்கள் ஆங்கிலத்தில் கணக்கின்றி எழுதினார். ஆனால் ஒரு இங்கிலீஷ் பத்திரிகைக்காரர் சர். இராதா கிருஷ்ணன் எழுதியிருக்கும் இங்கிலீஷ் ஒரே அபத்தம் என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் நமக்கு வியப்பாய்ப் போய்விட்டது. சர். இராதாகிருஷ்ணனைப் போன்ற வைஸ்சான்சலருடைய ஆங்கில மொழி அபத்தமென்றால், நாம் ஆங்கிலம் படித்துத்தான் என்ன பிரயோஜனம்? ஏதேது சொந்த பஷைக்குப் போக வேண்டியது தானே? என்று ஓர் உணர்ச்சி உண்டாகி விட்டது. உபாத்தியாயர்களெல்லாம் தமிழிலேயே எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறோமென்று துணிந்து ஆரம்பித்து விட்டார்கள். இந்த இரண்டாவது யுத்தத்திலும் நம் தமிழ்த் தாய் வெற்றி யடைந்தாள்.

இப்பொழுது மூன்றாவது யுத்த அரங்கத்தில் தமிழ்த் தாய் வந்து நிற்கிறாள். இங்குக் கூடியிருக்கும் கூட்டத்திலிருந்தே இது நன்றாகத் தெரிகிறது. இதே மண்டபத்தில் மூன்று மாதங்களுக்கு முன் ஒரு கூட்டம் நடந்தது. அப்பொழுது என் சகபாடியான ஒரு பெரிய பத்திராதிபர், தமிழில் பாடி சங்கீதத்தின் தரத்தைக் குறைத்து விடாதீர்கள் என்று சொன்னார். இதே இடத்தில் ஒரு கச்சேரியில் ஒரு பாகவதர் தெலுங்கில் பாடிக்கொண்டே வந்தார். பின்னைத் தமிழ்ப்பாட்டைப் பாடினார். பாடியவுடன் கைதட்டல் செய்து ஆரவாரித்தார்கள். ஆகையினால் தமிழில் பாடினால் தரம் குறையாதென்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டேன். தமிழில் பாடியதால் கச்சேரி கெட்டுவிட்டது, தெலுங்கில் பாடியதால் கெடவில்லை யென்று நான் கேள்விப் பட்டதில்லை. பாடுகிறவர் சரியாகப் பாடினார், நன்றாக இருந்தது; நன்றாகப் பாடவில்லை, கெட்டு விட்டது என்று சொல்லத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இந்த இரண்டு வருடத்தில் பெரும்பாலும் தமிழில் பாடும் கச்சேரிகள் மிக நன்முக நடந்து வருவதைப் பார்க்கிறோம்.

இப்பொழுது இரண்டு வருடமாக ராஜ குலத்தைச் சேர்ந்த சுவாதித் திருநாள் பாடியதை மெட்டுக்கள் போட்டுப் பாடுகிறார்கள். அதனால் சங்கீதத்தின் தரம் கெட்டுப்போகவில்லை. முத்துத் தாண்டவர் பாட்டைக் கேட்டால் மட்டம், கோபாலகிருஷ்ண பாரதி பாடல்களைக் கேட்டால் கெட்டுவிடும், அருணாசலக் கவிராயர் பாட்டைப் பாடினால் தரம் கெடும் என்று சொல்லுவதெல்லாம் சுத்த அபத்தம் என்பது எல்லாப் பாட்டுக்களையும் கேட்டவர்க்குத் தெரியும்.

ராஜாஜி, 'எதிர்க்காமல் மட்டும் இருந்தால் போதாது, இயக்கத்தை ஆதரிக்க வேண்டும்' என்று சொன்னார்கள். இந்த இயக்கத்தை ஆதரிக்கா விட்டாலும், எதிர்க்காமலிருந்தாலே போதுமென்று எனக்குத் தோன்றுகிறது. அதாவது அனுவசியமான, இல்லாத காரணங்களைச் சொல்லி எதிர்க்காமலிருந்தாலே போதும். தமிழாயிருந்தால் கெட்டுவிடும் என்று சொல்வது, கோதண்டராமன் பசு நீங்கலாக மற்ற பசுக்கள் வாழட்டும் என்று கூறிய கதையாகும். தமிழைக் கோதண்டராமன் பசுவாகச் செய்யக்கூடாது. தமிழ்ப் பசு தமிழ் நெல்லைத்தான் தின்பேன் என்று சொல்கிறது. அதை அடிப்பது பாதகமென்றுதான் நான் சொல்லுகிறேன். இன்று போலவே நாளை முதல் இங்கு வந்திருந்து பாடகர்களை உற்சாக மூட்டி, தமிழிசையை வளர்த்து நிலை நாட்ட வேண்டுமென்று உங்களைப் பெரிதும் கேட்டுக் கொள்கிறேன்."

டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார்

10. உயர்திரு. குலோத்தாரக டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியாரின் விரிவுரை (1935).

" நண்பர்காள்!

கைத்தொழிலைத் தொன்று தொட்டுப் பிழைப்புக்கு ஆதாரமாகக் கொண்டு பொது மக்களின் ஆதரவை நாடும் நம் நாட்டுத் தொழிலாளர்களில் பெரும்பாலோர், மிக்க நெருக்கடியான இக்காலத்தில் வருமானமின்றி, ஒருவேளை முழுஉணவுக்கும் வழியற்று, வருந்தித் தவிக்கின்றனரென்பது நாம் அனைவரும் கண்கூடாக் காணும் உண்மை. ஆகவின், இம் மாநாட்டில் தொழிலாளர் படுந்துயரைப் போக்கும் வழிகளைக் காண்பதில் நமது கவனத்தைச் செலுத்தக் கடவோமாக!

இம் மாநாட்டு இயக்கம் தோன்றிய சில ஆண்டுகட்குள் நேரிட்ட யுத்த காரணத்தாலும், சட்ட மறுப்பியக்கம், கட்சி பேதங்கள், பொருளாதார மந்தம், தங்கம், பொன், வெள்ளி வெளியேற்றம் முதலிய பல தொல்லைகளாலும் நமது தொழிலாளர் வறியரினும் மிக வறியராகித் தொழிலும், உணவும், உடையுமின்றி நாடெங்கும் நலிவுற்றிருந்தனர். ஆகலான் நமது மாநாட்டு முயற்சி, கால நிலை நோக்கிச் சில ஆண்டுகள் தளர்த்தப்பட்டிருந்தது. இது போழ்து மீளவும் ஆரம்பிக்கப் பெற்றுள்ளது. இங்கு ஒரு பொருட் காட்சியும் நடைபெறுகின்றது.

தேசக் கைத்தொழில் அபிவிருத்திக்காக இவ்வேளை தேசாபிமானிகளும், அரசியலாரும் புது நோக்குக் கொண்டு பல நிர்மாணத் திட்டங்களைத் தயாரித்து வருகின்றனர். கிராமக் கைத்தொழிற் புனருத்தாரணம் எனும் பேச்சு நாடெங்கும் முழங்குகின்றது. உலகமும், மக்களும், கைத்தொழில்களும் நாளுக்கு நாள் வெகு வேகமாக மாறி வருதல் கண்கூடு. ஆனால், நாமோ சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த இடத்தை விட்டு எள்ளளவும் நிலைபெயராது நிற்கின்றோம். இவ்வாறாயின், உலகில் ஒரு பண்டைய தொழிற் சமூகமென வாழ இனி நமக்கிடமேது? நமது தற்காலச் சமூக வாழ்க்கை மிகப் பரிதாபகரமான நிலைமையிலன்றோ ஆழ்ந்து கிடக்கின்றது! மற்ற வகுப்பினர் பல்வேறு துறைகளிலும் மேம்பாடுற்றுள்ளனர். நாமோ கல்வியற்று, கலையிழந்து, கைத்தொழிலைக் காலமறிந்து விருத்தி செய்யும் வகை அறியாது பழைய வழிகளிலேயே பின்னும் பின்னும் ஈடுபட்டு, மிகப் பின்னடைந்து வருகின்றோம். சுருங்கச் சொல்லில், வருங் காலத்திய வகுப்பு முன்னேற்றம், தேச முன்னேற்றம் எனும் போராட்டங்களில், இப்பரிதாபகரமான நிலைமையினின்றும் நமது சமூகம் வெளிப் போந்து நாட்டுக் கைத்தொழில்களின் சீர்திருத்தச் சிறப்பினால் நலம் பெறுதல் எங்ஙனமென்பது இம்மாநாட்டில் குழுமியுள்ளோர் ஒவ்வொருவர் மனதிலும் எழவேண்டிய முக்கிய எண்ணமன்றோ?

இனி, இம் மாசபையில் எம்மால் கொண்டுவரப்படும் ஐந்து தீர்மானங்களை முறையே நோக்குவோம். தொழில் வகுப்புச் சிறுவர்களை உயர்தரக் கல்வி நிர்ப்பந்த மின்றி, உபகாரச் சம்பளமுதவி, அந்நிய நாடுகளுக்கனுப்பித் தொழிற்கல்வி கற்றுவரத் தேர்ந்தெடுக்க வேண்டுமாய் அரசியலாரைக் கேட்டுக்கொள்ளும் முதல் தீர்மானம் 1915-ம் ஆண்டு தொட்டுத் தொடர்ந்து செய்யப்படுவதொன்றும். 1918-ம் ஆண்டு இந்தியக் கைத்தொழில் கமிஷன் முன்னிலையில் எம்மால் வற்புறுத்தப்பட்ட வேண்டுகோளும் அதுவேயாகும். முந்திய மாநாடு

களில் அரசியலாரையும் பிரபல உத்தியோகஸ்தர்களையும் பேட்டி கண்டு பேசுவதற்கான ஒரு செல்வாக்குள்ள மத்தியக் கழகம் சென்னையில் நிறுவவேண்டுமென முடிவுசெய்யவில்லை. ஆகவே, அவசரத்திற்கும் அவசியத்திற்கும் ஏற்றவாறு நமது சமூகப் பணிகளை அப்போதைக்கப்போது செய்ய இயலாது, பல அரிய வாய்ப்புக்களை இதுகாறும் இழந்துவிட்டோம். இனியேனும் கண்விழிப்போமாக!

நமது மாகாணத்தில் பல கைத்தொழில் பாடசாலைகள் உள்ளன. அவைகளில் சுமார் எழுபத்தைந்து பாடசாலைகள் சர்க்கார் மானியம் பெற்று நடைபெறுவனவாம். சென்னைச் சிற்பவித்தியா போதனை சாலையில், மரத்தொழிலும், சித்திரமும், சிற்ப ஓவியத் தொழிலும், உலோக வார்ப்படத் தொழிலும், பொன் வெள்ளி ஆபரணத்தொழிலும், அலுமினியத் தொழிலும் ஒரு காலத்தே போதிக்கப்பட்டன. இப்பொழுது அப்பாடசாலையில், நாட்டுக்குத் தேவையான வேலைகளை விடுத்து, தேவையற்ற சில சிறு தொழில்களே போதிக்கப் படுகின்றன. இதர கைத்தொழிற் பாடசாலைகளிலும் அவ்வாறேயாம். இப்பாடசாலைகளில் நமது சிறுவர்களை அதிகமாகச் சேர்க்க வசதியில்லை. சிலர் சேர்க்கப்படினும் அவர்கட்கு உபகாரச் சம்பளம் வழங்கப் பெறுவதில்லை. இவ்விதப் பாடசாலைகளைச் சடுதி பார்த்து யோசனை கூறுதற்குப் பல கௌரவ மேற்பார்வையாளர் சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ளனர். கைத்தொழிலாளர் வகுப்பினின்றும் இதற்கு இதுவரை ஒருவராதல் நியமிக்கப்படாதிருப்பது வருந்தத் தக்கதாம். நமது இரண்டாவது தீர்மானத்தைச் செய்தனுப்பி இவ்வித மேற்பார்வையாளர் குழுவில் நம்மில் ஒருவரை அங்கத்தினராக்க முயலல் வேண்டும். இல்லையேல், இவ்விதப் பாடசாலைகளில் நமது சிறுவர்களுக்கான தொழிற் கல்வி வசதிகளை வருங்காலத்தே பெறுவது கடினமாகும்.

நமது மாகாணத் துரைத்தனத்தாரால் தற்காலம் மேற்கொள்ளப் பட்டிருக்கும் கிராமக் கைத்தொழில் புனருத்தாரண முயற்சியை முழு மனதுடன் வரவேற்பது நமது கடமையாகும். ஒரு போட்டி இதிலும் உண்டு. காங்கரஸின் சார்பாகக் காந்தியடிகளால் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் முதற்கண் கதர் அபிவிருத்தியும், கைக்குத்து அரிசி உற்பத்தியும், நாட்டு வெல்லம் காய்ச்சுதலும் மேற்கொள்ளப்படுமென அறிக்கை யிட்டுள்ளனர். இதற்கான நிர்மாணத் திட்டங்களும், பொருள் திரட்டும் முயற்சிகளும் கைக்கொள்ளப் பட்டுள்ளன. இவைகட்கு ஒரு கோடி ரூபாய் மூலதனம் ஆரம்பத்தே வேண்டுமென மதிப்பிடப் பட்டிருக்கிறது.

நமது சர்க்காரும் தமது கடமைகளை உணர்ந்து ஒரு கோடி ரூபாய் கைத்தொழில் புனருத்தாரணத்திற்கென ஒதுக்கி வைத்திருக்கின்றனர். கிராம ரஸ்தாக்களைத் தாராளமாக உண்டாக்குவதிலும், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துவதிலும் முதல் முதல் தங்கள் கவனம் செலுத்தப் படுமென அரசியலார் உறுதி கூறுகின்றனர். இவ்விரு பிரயத்தனங்களாலும் அல்லது ஒன்றின் வழியாலும் நமது நாட்டுக் கைத்தொழில்கள் காலக் கிரமத்தே மிகச் சீர்படுதல் ஒருதலை. நமது ஐந்தொழில்களே, இதர கைத்தொழில்கட்கும், வாணிபத்திற்கும் ஊற்றுக்களனென்பதை மறுத்துக் கூறவல்லார் இல்லை. அநாதி காலந்தொட்டு நமது சமூகம் இந்நாட்டில் பொது நிலைமைவகித்து நிற்பதால், இரண்டு முயற்சிகளுக்குமான உதவிகளைப் புரிதல் குற்றமற்ற நமது குலக் கடனேயாம். சென்னை மாகாணத்தில் பத்துவருடத்திட்டம் ஒன்று அரசாங்கத்தாரால் தயாரிக்கப் பெற்றிருக்கிறது. அதற்கென முப்பது லட்சம் ரூபாய் மூலதனம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, கிராமப் புனருத்தாரணத் திட்டத்தை முழுமனதுடன் வரவேற்பதையும், ஒத்துழைக்கத் தயாராக விருப்பதையும் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக் கொள்ளல் இம்மாநாட்டின் முக்கிய கடமையாதல் பற்றி இம் மூன்றுவது தீர்மானம் சபையின் ஆலோசனைக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

நமது கைத்தொழில்கள் சீர்படுதற்கு நம்மனோர் பல கூட்டுத் தொழில் வர்த்தகச் சங்கங்களையும், ஐக்கிய நாணயச் சங்கங்களையும் ஆங்காங்குக் கண்டிருப்பது உண்மையே. ஆயினும் பதிவு செய்யப்பட்ட சில கூட்டு வியாபாரச் சாலைகள், பல இடுக்கண்களை யடைந்து மூடி விடப்பட்டன. பல ஐக்கிய நாணயச் சங்கங்களின் கதியும் அவ்வாறே ஆயிற்று. இவ்விதச் சங்கங்களை நிர்வகிப்பதற்கு நம்மனோர் மாட்டுப் போதிய கல்வி யறிவும், உலகானுபவமும் இல்லை யென்பது கண்கூடு. எனினும், காலத்திற் கேற்ப ஐக்கிய நாணயத் தொழிற் சங்கங்களை ஏற்படுத்தி, தொழிலபிவிருத்திக்கு மட்டும் கடன் கொடுத்து, தீரும் உற்பத்திப் பொருள்களை விலைக்கு வாங்கி விற்பனை செய்து கடனை ஈடு செய்துகொள்ளக் கூடியவாறு ஆங்காங்கு ஐக்கியத் தொழிற்சங்கங்களை நிறுவுதல் இன்றியமையாததாகும். இந்நாள் இந்திய சர்க்கார் கைத்தறி நெசவுக்கு இவ்வழிப் பேருபகாரம் புரிகின்றனர். ரொக்கக் கடனுக்குப் பதிலாக நூல், சாயப்பொருள், தறி, கூலி முதலியன நெசவுக்காரருக்குக் கொடுக்கப் படுகின்றன. தீர்ந்த துணிகளைக் காலக்கிரயப் படிக்கும், ஒப்பந்தப்படிக்கும் விலை கொடுத்து வாங்கிச் சென்னையிலுள்ள தலைமைச்

சங்கத்துக்கு அனுப்புகின்றனர். அவற்றை விற்பனை செய்து கடனை ஈடு செய்யும் பொறுப்பு தலைமைச் சங்கத்தைச் சார்ந்ததாகும். ஆகலின் நமது நான்காவது தீர்மானத்தின் மூலமாக அரசியலாரை நாம் செய்து தரக் கேட்பது அவ்வித ஐக்கிய நாணயத் தொழிற் சங்கங்களேயாம். பொன், வெள்ளி நீங்கலாக இதர உலோக, மர உற்பத்திச் சாமான்களுக்கான வசதிகளை முதற்கண் உண்டாக்குதல் மிக வேண்டப்படுவதாம். 'இண்டஸ்டிரியல்' அல்லது கைத்தொழில் பாங்குகளின் கடமையும் ஒரோவழி முன்னர்க் கூறியவற்றை ஒத்திருக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ளவைகளுடன் கைத்தொழில் காட்சி நிலையங்களையும், மாதிரித் தொழிற்பண்ணைகளையும் அரசியலாரை ஆங்காங்கு அமைத்துக் கொடுக்குமாறு நான்காவது தீர்மானத்தால் கேட்டுக்கொள்கிறோம். சென்னையில் "விக்டோரியா இன்ஸ்டிடூட்" என்னும் நிரந்தரக் காட்சி நிலையத்தை நம்மில் பலர் பார்த்திருக்கலாம். அப்படிப் பாராதவர் அதனை நாளையே பார்த்தல் அவசியமாம். அந்த நிலையத்தில் எல்லாத் தொழில் சம்பந்தமான காட்சிப் பொருள்களும் விலை, விலாசம் முதலியன குறித்து விளம்பரப் பொருளாக வைக்கப்பட்டிருக்கின்றன.

அபூர்வ வேலைகள் பலவற்றை ஆங்குக் காணலாம். எத்துணையோ பாரம்பரியக் கைத்தொழிலாளர் குடும்பங்கள் இந்நிலையத்தால் சீவித்து வருகின்றன. எனவே, சில முக்கிய ஜில்லாக்களிலும், தாலூகாக்களிலும் கைத்தொழில் உற்பத்திச் சாமான்களுக்கெனத் தனித்த காட்சி நிலையங்களை ஏற்படுத்துவது அரசியலார் கடமை யென்பதையும் இத்தீர்மானம் வற்புறுத்தும்.

இத் தீர்மானத்தில் மற்றுமொரு கிளைத் தீர்மானமும் அடங்கியிருக்கின்றது. அது, மாதிரித் தொழிற் பண்ணை ஏற்படுத்துவதைக் குறித்ததாகும். விவசாய அபிவிருத்தியைக் கோரி அரசியலார் ஆங்காங்கு விவசாயப்பண்ணைகளை நிறுவியிருப்பது போல், கைத்தொழில் பண்ணைகளை ஆங்காங்கு நிறுவக் கேட்கிறோம். இத்தீர்மானம் பன்முறை வற்புறுத்தப்பட்டாலன்றி அரசியலாரின் கவனத்தைப் பெறுதலரிதாம்.

கனவான்களே! இத்தீர்மானங்களைக் குறித்துச் சுருங்கப் பேச நினைந்தும் அவற்றின்முக்கியம் கருதி எனது பேச்சுச் சற்று விரிந்துவிட்டது எனினும் ஐந்தாவது தீர்மானத்தைச் சற்று அலசி விளக்காவிடில் எனது பேச்சு பூர்த்தியற்றதாகும். ஐரோப்பிய நாடுகளில் தொழில் வல்லோர் ஒருகாலத்தில் நம்மிலும் தாழ்ந்து மிகக் கேவல நிலைமையிலிருந்தனர். நம்மைப் போலவே அரசாங்க உதவியை நாடினர். தாங்களும் பல்வேறு

சுயமுயற்சிகளைக் கைக்கொண்டனர். தங்கள் தொழில்களுக்கேற்ற 'கில்டு'களை - தொழிற்சங்கங்களை நிறுவி, கூலிக் கட்டுப்பாடு, நாணய வரிசைக்கான 'ஹால் மார்க்' எனப்படும் பரிசுத்த அடையாள மிடுவது ஆகியவற்றைச் சட்டமூலமாகப் பெற்றுத் தங்கள் தொழில்களை யாவரும் வியக்குமாறு உச்சநிலைக்குக்கொண்டுவந்தனர். இன்று அவர்கள் உலகில் கோடீச்சுரராகவும், செல்வாக்குள்ளவர்களாகவும், பாராளு மன்றத்து அங்கத்தினர்களாகவும் இருக்கின்றனர். சாதிப் பாகுபாட்டால் உயர்வு தாழ்வு அற்ற மேற்றிசையார், தொழிலுன்னதம் ஒன்றினாலேயே மேன்மை பெறுவதைக் கருத்திலிருத்தி, நம்மனோர் பல தொழிற் சங்கங்களை நிறுவி, கிராமப் புனருத்தாரண இயக்க மூலமாகப் பொருளுதவியைப் பெறமுனைதல் வேண்டாவா? ஆகலின், இனி நம்மக்கள் சுக வாழ்வடைய வேண்டுமானால், நமது கைத்தொழில்கள் சீர்பெற வேண்டுமானால், நாம் வறுமைப் பிணியினின்றும் மீளவேண்டுமானால், நாமும் ஒரு செல்வாக்குள்ள தொழிற்சமூகமென உயிர்வாழ்ந்து உலக முன்னணியில் நிற்க வேண்டுமானால் இவ்விதத் தொழிற்சங்கங் (கில்டு) களைக் காலந் தாழ்க்காது அரசாங்க உதவியை எதிர்பாராது ஆங்காங்கு நிறுவுதல் நம்மனோரின் தலைசிறந்த கடனாம். எனவே, நமது நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியையும், சமூக முன்னேற்றத்தையும் இதயத்தே கொண்ட இந்த ஐந்து முக்கியத் தீர்மானங்களையும் இம்மா சபையார் ஏகோபித்து ஏற்றுக்கொள்ள வேண்டுமாய் மிக்க ஆர்வத்துடன் பிரரேபிக்கின்றேன்."

[பல கிளைத் தீர்மானங்களைக் கொண்ட ஒரு தீர்மானத்தை (Omnibus Resolution) விவரிக்கும் முறை இப்பேச்சால் நனி விளங்கும்.]

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

சொலல்வல்லான் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்(து)இனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

—*திருவள்ளுவர்*

மேடைத் தமிழ் அகராதி

மேடைத் தமிழ் அகராதி

முன்னுரை

உலக நாகரிகங்களில் முற்பட்ட பண்டைய கிரீஸ் தேசம் மேடைப் பேச்சுக்குப் பிறப்பிடமாகும். ஆண்டே மேடைக்கலை முதற்கண் உச்சநிலை கண்டது. அஃது அங்கிருந்து ரோம், பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளை நண்ணிற்று. எந்நாட்டிலு முள்ள இயல், இசை, நாடகம் ஆகிய இலக்கியங்களைப்போல், மேடைக் கலையெனும் மற்றொரு தனி இலக்கியத்தை வளர்த்துப் பல்வழியிலும் பண்படுத்தியது இங்கிலாந்து தேசத்திய பாராளுமன்றச் சபையாகும். அச்சபை உலகுக்கே மேதக்க எடுத்துக்காட்டான தாய்ச்சபையாக இந்நாளும் துலங்குவதாம். இதுபோழ்து ஆங்கிலச் சொற்பொழிவுகள் உலகெங்கும் நடைபெற்றினும் அவைகள் கிரீஸ், ரோம் ஆகிய இருநாடு களின் பண்பட்டுள்ள. சொற்பெருக்குகளை மாதிரிகளாகக் கொண்டும், அவற்றில் செறிந்து கிடக்கும் நயம்பெற்ற கருத்துக்களை ஓரளவு கடன் கொண்டும் நிகழ்த்தப்படுவனவாம்.

நமது நாட்டு ஆங்கிலப் பேச்சாளர் அத்தகைய பண்டைய பேச்சுப் புத்தகங்களின் துணைகொண்டும், பாராளுமன்றப் பேச்சுக்களைத் தழுவி யும் பேசுவாராயினர். தமிழில் பேச முனையும் பேச்சாளர்களும் தமது கருத்துக்களை ஆங்கில மொழியிலேயே முதற்கண் நினைந்து, கருத்துக் களைத் திரட்டித் தக்க வார்த்தைகளைப் புகுத்திப் பொதுமேடைகளில் பேச முனைகின்றனர். தனித் தமிழ்ப் பேச்சுக்களும், அவற்றிற்கான இலக்கியங்களும் தோன்றி இந்நாட்டில் கால்கொள்ளும் வரை நமது தமிழ்நாட்டு நாவலர்கள் இன்னும் பல வாண்டுகள் முற்கூறிய வழியைப் பின்பற்றுவரென்பது உறுதி. அன்னோர் கருத்தில் எழும் மேடைப் பேச்சுக்குரிய ஆங்கிலப் பதங்கட்கு, தமிழ்ப் பிரதி மொழிகளை அகராதியிலுள்ளவாறே தமது பேச்சில் பொருத்தமற உபயோகித்து வருதலை யாண்டும் காண்போம். பேச்சாளர் வாய்ப்புக்கேற்றவாறும் இட மறிந்தும்தக்க தமிழ்ப் பிரதிப்பதங்களைப் பிழையின்றிக் கையாளும் வண் ணம் இவ்விளக்கவுரைகள் அகராதியையும், வழக்கப்பாட்டையும் தழுவி

ஈண்டு எழுதப்பெற்றுள்ளன. இதன்கண் பல ஆங்கிலப் பதங்களுக்கு ஓரே தமிழ்ப் பிரதிமொழி பொதுவாகக் கொடுக்கப்பெற்றிருத்தல் ஊன்றி நோக்கின் புலனாகும். ஆராயுமிடத்து, ஆங்கிலச் சொற்களிலும் தமிழ்ச்சொற்கள் மிகக் குறைந்திருத்தல் இதற்குக் காரணமென்க. கேவலம், பிறந்துழலும் மக்களாலே உண்டாக்கப்பட்டு, பற்பல காலங் களில் படிப்படியே உயர்ந்து, இருபத்தாறு எழுத்துக்களை மட்டும் கொண்ட ஆங்கிலமொழியில் இன்றுவரை சுமார் நான்கு லட்சத்து ஐம்பதினாயிரம் வார்த்தைகள் தொகுக்கப்பெற்றுள்ளன. மேலும் பல்லாயிரம் வார்த்தைகளும், சொற்றொடர்களும் நாவலர்களாலும், பேராசிரியர்களாலும் நாளும் உண்டாக்கப்பட்டுவருகின்றன. எனவே, இன்னும் சிலவாண்டுகட்குள் ஆங்கிலமொழி மேலும் விருத்தியடைதல் ஒருதலை.

இலக்கண வரம்பு மிகுந்த நந்தமிழ்மொழி சார்பெழுத்துக்களுடன் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களைக் கொண்டிருந்தும், தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை ஆன்றோரால் தொகுக்கப்பட்டவாறு நாற்பத் திரண்டு ஒலிபேதங்கொண்ட சுமார் தொண்ணூற்றையாயிரம் வார்த்தை களில் அடங்கி, யாதொரு வளர்ச்சியும் முன்னேற்றமும் பெறாது தேங்கிக் கிடப்பதாகும். சிற்சில ஒலிபேதங்களை வடமொழி உதவி யின்றி உச்சரித்தற்கும் எழுதுதற்கும் தனித்தமிழ் இடந்தருவதில்லை. எனவே, பேச்சாளர் தக்க தமிழ்மொழியைக் காணாது பிறமொழிகளி னின்றும் பற்பல வார்த்தைகளைக் கடன்கொள்வா ராயினர். இது மன்னித்தற்குரிய தொன்றும்.

தமிழ் மொழியின்கண் பல படித்தரமான அர்த்தங்களையும், உணர்ச்சி பேதங்களையும் தரும் வார்த்தைகளை எளிதிற் காண்பதற் கில்லை. உதாரணமாகக் கோபம், வெகுளி, சீற்றம், சினம், முனிவு, ஆத்திரம் எனும் வார்த்தைகள் நுட்பமான அர்த்தபேதமும், உணர்ச்சிபேதமும் முன்பு பெற்றிருந்தும் இன்று உலக வழக் கில் வேறுபாடற்ற முறையில் வழங்கப்படுகின்றன. ஆனால், Wrath, Anger, Indignation, Irritation, Excitement, Inflammation முதலிய ஆங்கிலச்சொற்கள் அர்த்தபேதமும், உணர்ச்சி பேதமும் கொண்டு வழங்கப்படுதலைக் காணலாம். இன்னும், Subject. Object, Riches, Things, Meaning ஆகிய வேறுபட்ட ஆங் கிலப் பதங்கட்குப் 'பொருள்' என்றும், Timber, Log, Tree, Wood ஆகியவைகட்கு 'மரம்' என்றும் ஒரு பொதுத் தமிழ்ப்

பதமே மொழி பெயர்ப்பாகப் பெரிதும் கையாளப் பெறுவதாம். இவற்றால் தமிழ்மொழியின் இன்றுள்ள நிலைமை வெள்ளிடைமலையாம்.

ஆகலின், நம்செந்தமிழை, இந்நாள் நல்ல முறையில் வளர்த்தலும் பெருக்கலும் தமிழ்மக்களின் இன்றியமையாத கடனும். ஒரு மொழியின் பிறப்பும் தொன்மையுமட்டுமே அம்மொழிக்கு உயர்வளிக்கமாட்டா. எனவே, இக்குறைபாட்டில் தமது கருத்தைச் செலுத்திப் பல்லாயிரம் நூதன மொழிகளை ஒலிபேதந் தோன்றவும், அர்த்தபேதங் கொண்டும், உணர்ச்சி பாவத்துடனும் உண்டாக்குதல் தமிழ்ப் பேராசிரியர்கள் தலையாய கடனும். நாம் மற்றொன்றையும் முக்கியமாகக் கவனத்தி லிருத்துதல் மிக வேண்டப்படுவதாம். ‘Anonymous’ எனும் ஆங்கிலச் சொல்லுக்குப் ‘பெயரில்லாத’, ‘கைபொப்பமற்ற’ எனும் தமிழ்ப் பிரதிமொழிகளுடன், ‘அநாமதேய’ எனும் வடமொழிப் பதமும் வழக்கிலிருப்பதை யொத்து, சற்றேறக்குறைய ஒரே உச்சரிப்பு ஒலியுடைய தமிழ்ப் பிரதிப் பதங்களைக் காண்டல் சாலச் சிறப்புடைத் தாம். இஃது ஒரு கடின காரியமன்று. சௌராட்டிர மொழிக்கு இலக்கிய, இலக்கணங்களை உண்டாக்கிய உயர். எல். கே. துளசிராம் எனும் நாவலர் இந்நூற்றாண்டில் வதியும் மானிடப் பெரும் பிறவியே யாவார். நமது நாட்டின் தவப்புதல்வரான டாக்டர் சர். சி. இராமலிங்க ரெட்டியார் எத்துணை ஆயிரக்கணக்கான ஆங்கிலத் தொடர்மொழிகளை நூதனமாக உண்டாக்கி, ஆங்கிலப் பேராசிரியர்களும், நாவலர்களும் வியக்குமாறு தமது பேச்சிலும் எழுத்திலும் புகுத்தி வருகின்றனர்! அதிசம் கூறுவது எற்றுக்கு? தமது பேச்சு நடையிலும், எழுத்து நடையிலும் உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எத்துணை அழகிய தமிழ்ப் பதங்களைக் கண்டுள்ளார்! கரந்தைத் தமிழ்ச்சங்கமும், கலைச்சொல்லாக்கக் குழுவும், செந்தமிழ்ச் செல்வி போன்ற இலக்கிய இதழ்களும் இவ்வழி செய்த—செய்துவரும் தொண்டு மிகப் பாராட்டு தற்குரித்தாம். இந்நூலின் கண்ணும் அவ்வழி சிறு முயற்சியைக் காண லாம். தமிழ்ப் பேராசிரியர்களும், நாவலர்களும், பல்கலைக் கழகங் களும் இப்பெருங் குறைபாட்டைக் காலதாமதமின்றிப் போக்க முற் படுதல் இந்நாள் பெரிதும் வேண்டப்படுவதாம். ‘என்சைக்குளோ பீடியா’ எனும் ஆங்கிலப் பேரகராதியை யொத்து, தமிழ் விரி வகராதி யொன்றைப் பெரும்பொருட் செலவில் தயாரிக்க முற்பட்டுள்ள சில உயரிய தமிழ்ப் பெருமக்கள் முயற்சியைப் பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக அரசியலாரும் வரவேற்று ஆதரிக்கும் கடப் பாடுடையவராவர்.

தமிழ்மேடைப் பேச்சுக்கேற்ற ஆங்கில அரும்பத அகராதி விளக்கம்

Abide - இணங்குதல், கட்டுப்படுதல், உடன்படுதல்.

Abiding interest - ஆழ்ந்த அன்பு, ஆழ்ந்த சிந்தை, ஆழ்ந்த பற்று, பேரபிமானம், பேரன்பு, நிலைபெற்ற அன்பு, அபரிமிதமான உடன்பாடு.

Ability - சாமர்த்தியம், சக்தி, ஆற்றல், வன்மை, சமத்காரம், திறமை, கெட்டிக்காரத்தனம்.

Able speech - சாமர்த்தியமான பேச்சு, சமத்காரமான பேச்சு, ஆணித்தரமான பேச்சு, திறமையான பேச்சு.

Abrupt manner - தடித்தனமான நடத்தை, மரியாதையற்ற முறை, துடுக்கான நடத்தை, பதட்டமான நடத்தை.

Abundant opportunity-ஏராளமான சந்தர்ப்பங்கள், தாராளமான வசதிகள், ஏராளமான சமயங்கள், மிக்க வாய்ப்புக்கள்-

Absorbing interest - ஆழ்ந்த கவலை, ஆழ்ந்த பற்று, ஆழ்ந்தபக்தி, ஆழ்ந்த சிந்தை, அழுந்திய கருத்து.

Absurd notions - பிசகான எண்ணங்கள், தப்பிதமான கொள்கைகள், தவறுதலான அபிப்பிராயங்கள், துர் எண்ணங்கள்.

Abusive language - திட்டு மொழி, நிந்தைமொழி, பழிமொழி, வசை மொழி.

Accomplishment - நாகரீகம், சிறப்பு, 'ேதற்றம், தேர்ச்சி, பல்வகைப் பயிற்சி, பல் வகைத் தேர்ச்சி, பல்வகைச் சிறப்பு, கலை முதிர்ச்சி, குணவிசேஷம், பேறு.

Accepted bills - ஏற்றுக் கொள்ளப்பட்ட மசோதாக்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிக் கணக்குகள், ஒப்புக் கொள்ளப் பட்ட கணக்குகள், அங்கீகரிக்கப் பெற்ற ஒப்பந்தங்கள்.

Accepted facts - ஒப்பிய உண்மைகள், ஒப்பிய செய்திகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட காரியங்கள், அங்கீகரிக்கப் பெற்ற வர்த்தமானங்கள்.

Acoustic effect - ஒலி விளைவு, ஒலி பலிதம், ஓசை உணர்வு.

Acquisition - ஆதாயம், பேறு, உடைமை, தேடக் கிடைக்காத பொருள், சம்பத்து, செல்வம், செம்பொருள், சம்பாதித்தல், சேகரித்தல், கூட்டுதல்.

Action - செய்கை, சேட்டை, நடவடிக்கை, யுத்தம், கிரியை கருமம், வினை, வழக்கு, பிரியாது, போர், இயக்கம், அபிநயம், கை மெய் காட்டல், நடித்தல்.

Acting - நடிப்பு, பதிலாக, தற்காலிகமான, நீடியாத, நிரந்தரமற்ற, பதில்வேலை பார்த்தல்.

Acumen - கூர்மை, யூகம், யுக்தி, மூதறிவு, தெளிவு, பேரறிவு, தெளிந்த புத்தி, விவேகம், ஆராய்ச்சி மதி, நுண்மதி, அறிவுக் கூர்மை, தெள்ளிய ஞானம்.

Address- பிரசங்கம், பேசு, பேச்சு, விளித்தல், சொற்போக்கு, சொற்பெருக்கு, விலாசம், முகவரி, வக்கணைப் பேச்சு, புத்திமதி, உபசார மொழி, வசனமொழி, விரிவுரை, வாசாலகம், வாக்கு விலாசம், பிரயோகி.

Adjournment motion - ஒத்திவைப்புப் பிரரேபணை, தவணை குறிக்கும் பிரரேபணை, தாமதிக்கும் பிரரேபணை, தடைப் பிரரேபணை.

Administration - அரசாட்சி, ஆளுகை, காரிய விசாரணை, பராமரித்தல், பாராளுதல், கொண்டு செலுத்துதல், அரசுரிமை, அதிகாரம் செலுத்துதல், பரிபாலனம், கண்காணிப்பு.

Admirable courage - ஆச்சரியமான தைரியம், அதிசயிக்கத் தக்க மனோவலிமை, மெச்சக் கூடிய மனோதிடம், வியக்கக் கூடிய வீரம், அதிசயமான ஆண்மை.

Advantage - அனுகூலம், இலாபம், ஆதாயம், நயம், பிரயோசனம், காரியானுகூலம், நன்மை, மேன்மை.

Adventurous - வீரமுள்ள, துணிச்சலான, திடமான, துணிவுள்ள.

Advice - புத்திமதி, ஆலோசனை, தெரிவித்தல், அறிவுறுத்தல், போதனை, உபதேசம், அறிக்கை.

Aesthetic - ரசாஞானம், கலையறிவு, கலைநுகர்ச்சி, இலட்சணமுணர்ச்சி, சித்திரமான, ரசமான.

Affectation - மாயம், போலி, பாவனை, கர்வம், போலித் தோற்றம், பாசாங்கு.

Age - வாழ்நாள், வயது, காலம், காலவரை, நடக்கும் யுகம், பருவம்.

Agenda-குறிகை பத்திரம், நிகழ்ச்சி நிரல், விஷய அட்டவணை.

Agitation - சலனம், கலகம், குழப்பம், கொந்தளிப்பு, சல சலப்பு, பரபரப்பு.

Agreement - பொருத்தம், இணக்கம், உடன்படிக்கை, ஒப்பந்தம், முச்சலிக்கை, ஒப்புப் பத்திரம், கட்டுப்பாடு, ஒருமைப்பாடு.

Aid - துணை, உதவி, சகாயம், ஒத்தாசை, ஆதரவு, மானியம்.

Aim - இலக்கு, குறிக்கோள், நோக்கு, கருத்து, இலட்சியம்,குறி, கருத்துக் கொள், முற்ற முடிந்த கருத்து, எண்ணிய கருமம், மனோலட்சியம்.

Amendment - திருத்தம், மாற்றம், தணிவு, திருத்தப் பிரரேபணை, சொல் மாற்றம், வார்த்தைத்திருத்தம்.

Amicable settlement - சமாதானமான முடிவு, இணக்கமான திட்டம், ஒத்துப் போதல், மனமொத்த முடிவு, சமரச முடிவு.

Analogy - ஒத்த தன்மை, உவமை, ஒத்த தோற்றம், சமத்துவம், ஒத்த சம்பவம், ஒப்புவமை.

Analytical speech - கூறு கொண்ட சொற்பெருக்கு, பிரிவு கொண்ட பேச்சு, பகுதிகளாக்கிய விரிவுரை, பல கூறுக்கிய பேச்சு.

Anecdote - கதை, உபகதை, சிறு கதை, பொருத்தமான கதை, சரித்திரம், வரலாறு.

Angry gesture - கோப பாவம், வெகுண்ட பாவம், கோபக்குறி, ஆத்திரமான சைகை.

Animated eloquence- உணர்ச்சியான சொற்போக்கு, உயிருள்ள சொற்றிறன், உச்சக்குரல் பேச்சு, உற்சாகமான சொற்பெருக்கு, உயிர் நாடியுள்ள பேச்சுத் தோரணை.

Annoyance - துன்பம், தொந்தரை, இடர், சள்ளை, எரிச்சல், கோபமூட்டல், துன்புறுத்தல், அல்லல், உறுகண்.

Antagonistic view - விரோதக் கருத்து, பகைமையான எண்ணம், எதிரிடை நோக்கம், எதிரிடையான கருத்து, விபரீதமான நோக்கம்.

Applaud - புகழ், பாராட்டு, மெச்சு, ஆரவாரி, கொண்டாடு, சிரமேற் கொள், வியந்து பேசு, துதிபாடு.

Applause - புகழ்ச்சி, கரமுழக்கம், வியப்பு, கை தட்டல், ஆரவாரம், மறுமுறை விரும்பல்.

Apology - மன்னிப்புக் கோருதல், வணங்கிக் கேட்டல், வணக்கம், கீழ்ப்படிதல், பணிதல், தொழுதல், இரந்து கேட்டல், கழிவிரக்கம்.

Apologetic explanation - இரங்கற்கூற்று, மன்னிப்புக் கோரிய விளக்கம், வணங்கிய வியாக்கியானம், கீழ்ப் படிதலான விபரம், பணிவான விளக்கம்.

Appeal - முறையீடு, மனு, அபயம், வேண்டுகோள், விண்ணப்பம், மறுவிசாரணைமனு, புனர் விசாரணை, யாதாஸ்து, மேல் பிரியாது.

Appropriate - ஏற்ற, உரிய, தகுதியான, பொருத்தமான, இணக்கமான, சரியான, இடத்துக்கேற்ற, தகுதி வாய்ந்த.

Apt - தக்க, தகுதியான, ஏற்ற, பொருத்தமான, இணங்கிய, பொருந்திய, சரியான.

Arbitary - தன்னிஷ்டமான, சுயேச்சையான, மனதிற்குத் தோன்றிய, ஏதேச்சையான, தான்றோன்றித் தனமான.

Argument - நியாயம், விவாதம், தர்க்கம், நியாயவாதம், வாக்குவாதம், வாதாடுதல், அனுவாதம், விவகாரப் போக்கு.

Aristocracy - பிரபுத் தன்மை, பெருங்குடி, உயர்குடி மக்கள், உயர்ந்தோர், சீமான்கள்.

Arrangement - ஒழுங்கு, திட்டம், ஏற்பாடு, வரிசைக் கிரமம், அடுக்கு, செப்பம்.

Artist - ஓவியர், வர்ணந் தீட்டுவோர், படமெழுதுவோர், விசித்திரன், விநோதன், அலங்கரிப்போன், அழகு செய்வோன், பாடகன், நடிகன், அற்புதன், வித்தகன், சிற்பி.

Art of speaking - பேச்சுச் சித்திரம், பேச்சு வன்மை, பிரசங்க வித்தை, பேச்சுக் கலை, பேசுமுபாயம், சொற்றிறன், வாக்கு வல்லமை, வாசாலகம்.

Artistic elegance - ஓவியச் சிறப்பு, ஓவிய அலங்காரம், அழகுச் சித்திரம், சித்திராலங்காரம்.

Ascendency - மேம்பாடு, தலைமை, முதன்மை, மேலேறுதல், உயர்தல், எழுச்சி, உச்சமடைதல், ஆரோகணம், அதிகாரம், ஆளுகை, ஆதிபத்தியம்.

Ashamed - வெட்கமுள்ள, நாணமுள்ள, கூசிய, பரிபவப்பட்ட, அவமானமான, அவமதிப்பான, வெட்கத்துக்குள்ளான, மானக்கேடான.

Aspiration - அவா, நாட்டம், தாவுதல், வேட்கை, ஆசை, பிரியம், மேனோக்கு, உயர்நோக்கு, ஆர்வம், முன்னேற்ற வேட்கை.

Aspiring candidate - அவாவுடன் முன்னிற்போன், விரும்பி முயல்வோன், நாடுவோன், அபேட்சகர், தேர்வுபெற விரும்புவோர்.

Assembly - சங்கம், சபை, குழு, அம்பலம், ஆஸ்தானம், அரசியல் அரங்கு, கீழ்ச்சபை, மக்கள் சபை, சபா மண்டபம், மாபெருங் கூட்டம், சதசு, அரசவை.

Assent - சம்மதம், இணக்கம், உடன்பாடு, ஒத்துக்கொளல், அங்கீகாரம், அனுமதித்தல், ஆமெனல்.

Assistance - உதவி, துணை, ஒத்தாசை, சகாயம், துணை புரிதல், உபகாரம்.

Association - சங்கம், சபை, கழகம், சமாஜம், கோட்டம், தோழமை, கருத்துத் தொடர்பு.

Assumed humiliation - பசப்பான மனத்தாழ்மை, பொய்யான பணிவு, பொய்த்தாழ்வு காட்டுதல்.

Astonishment - ஆச்சரியம், வியப்பு, பிரமிப்பு, அதிசயம், திகைப்பு, மதிமயக்கம்.

Attack - எதிர், தாக்கு, மேல்விழு, நெருக்கு, சாடு, போரிடு, பொருதல்.

Attainment - பேறு, சம்பத்து, சித்தி, கல்வித்திறம், பெறுதற்கரிய திறமை, சாமர்த்தியம்.

Attempt - முயற்சி, துணிவு, எத்தனம், சதியாலோசனை, பிரயத்தனம், தலைப்படுதல்.

Attitude - கோலம், நிலை, மனோநிலை, நோக்கம், எண்ணம், கருத்து, நிற்கும் விதம்.

Attraction - இழுப்பு, கவர்ச்சி, ஆகருஷணம், சௌந்தர்யம், இலட்சணம், வசியம், மனோகரம்.

Audience - சபையோர், சபை, அரங்கம், செவிகொடுத்தல், பகிரங்கமாக, விசாரணை புரிதல், பேட்டி, தரிசித்தல்.

Audience fear - சபை நடுக்கம், சபைக் கோழை, சபை விதிர்ப்பு, மெய்விதிர்ப்பு, உள்ளுடைதல்.

Auditorium - சபாமண்டபம், பிரசங்க சாலை, பேச்சு மண்டபம், அரங்கம், பேரவை, நடன மண்டபம், சித்திரக் கூடம், மகால், அம்பலம், மகா மண்டபம்.

Auspicious - மங்களகரமான, சுபமான, நல்ல முகூர்த்தமான.

Auspices - பரிபாலனம், ஆதரவு, சார்பு, தொடர்பு, செல்வாக்கு, அநுசரணை.

Author - ஆக்கியோன், கர்த்தா, எழுதியவன், செய்தவன், உண்டாக்கியவன், சிருட்டித்தோன், கிரந்த கர்த்தா, எழுத்தாளன், நூலாசிரியன்.

Authority - அதிகாரம், பிரமாணம், மேற்கோள், ஆட்சி.

Autocrat - ஏகாதிபதி, சித்தமே சட்டமாகக் கொண்டவன், தன்னரசு செலுத்துவோன், கட்டுப்படாதவன், கொடுங்கோலன்.

Average - சராசரி, நடுத்தரம், விகிதம், வீதாச்சாரம், மையமான, மத்தியப் போக்கான.

Available data - காரியத்திற்கான புள்ளிகள், பிரயோசனமான விவரங்கள், கிடைக்கும் புள்ளி விவரங்கள்.

Avowed intentions - பிரசித்தமான கருத்துக்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட அபிப்பிராயங்கள், பகிரங்கமான யோசனைகள், ஒப்பத்தக்க எண்ணங்கள்.

Avoid - நீக்கு, விலக்கு, தவிர், ஒழி, கழி, விடு, விலகி நில், ஒதுக்கு, நிராகரி, தள்ளு.

Awkward - ஆபாசமான, அசம்பாவிதமான, திருத்தமற்ற, அவலட்சணமான, குணக் கேடான, கொச்சையான, விகாரமான.

Awkward situation - அவலட்சணமான நிலைமை, வெட்கக்கேடான நிலைமை, ஆபாசமான நிலைமை, குணக்கேடானஇடம், அசம்பாவித சமயம், திண்டாட்ட நிலைமை.

Axiom - நியாயம், நீதிமொழி, உண்மை, சூத்திரம், தத்துவம், பிரமாணம், பழமொழி, பட்டாங்கு, முதுமொழி, சித்தாந்தம்.

Axiomatic truth - உண்மைத் தத்துவம், அழியாத நீதி, என்றுமுள்ள உண்மை, மாறாத சத்தியம், உலகியல் உண்மை, பட்டாங்கில் உள்ளது.

Backed out - பின்வாங்குதல், பின்னிடுதல், வார்த்தை தவறுதல், கைவிடுதல், புறங்காட்டுதல்.

Back bone - முதுகெலும்பு, முள்ளந்தண்டு, நிமிர்ந்து நிற்றல், தைரியமாயிருத்தல், திடனுக நிற்றல்.

Backward classes - பிற்பட்ட வகுப்பினர், பிற்போக்கான வகுப்பினர், முன்னேருத சாதிகள் கல்வி செல்வாக்கற்ற சாதிகள், அரசியலாரால் தொகுக்கப்பட்ட கீழ் நிலமக்கள்.

Ballot - சீட்டு, திருவுளச்சீட்டு, சம்மதிச்சீட்டு, சீட்டு எடுத்தல், சீட்டுக் குலுக்கல், வாக்கு எடுத்தல்,

Bank - நாணயச்சாலே, கரை, மேடு, நிதி சேமிக்குமிடம், வட்டக்கடை.

Base intrigues - இழிவான கபடச் செய்கைகள், கீழான சதிகள், நீசமான தந்திரங்கள், கபட நாடகங்கள்.

Batch - ஒரு கூட்டம், ஒரு பகுதி, ஒரு சாரார், ஒரு பிரிவு.

Battle field - யுத்தகளம், போர்க்களம், அமர்க்களம், சமர்பூமி, யுத்தபூமி, போர்முனே.

Beggar problem - பிச்சைக்காரர் பிரச்சனே, எளியோர் பிரச்சனே, வறியோர்க்குதவி, யாசகர்பிரச்சனே.

Behaviour - நடத்தை, ஆசாரம், ஒழுக்கம், நல்லொழுக்கம், நன்னடக்கை, நடைமுறை.

Believer - பக்தன், விசுவாசி, நம்பிக்கையாளன், ஆஸ்திகன், சித்தாந்தி, உறுதி கொண்டவன்.

Benefactor - உபகாரி, தர்மிஷ்டன், தர்மசாலி, ஈகையாளன், கொடையாளி, வள்ளல், உதாரி, பிறர் நன்மை நாடுபவன், ரட்சகன்.

Beseeching gesture - மன்றாடும் சைகை, வேண்டும் சைக்கினே, கேட்டுக் கொள்ளும் சாடை, கையேந்து பாவனே.

Betray - இரண்டகம் இழை, காட்டிக்கொடு, இடர்ப்படுத்து, வஞ்சி, துரோகமிழை.

Bills - மசோதாக்கள், சீட்டுகள், உண்டியல்கள், பத்திரங்கள், கணக்குகள், பட்டியல்கள், நிலுவைச் சீட்டுகள், புள்ளிவிவரங்கள், சட்டங்கள், பட்டயங்கள், முடிவடையாத சட்டங்கள்.

Biography - ஒருவர் சரித்திரம், வாழ்க்கைச் சரித்திரம், சுயவாழ்க்கை வரலாறு, ஜீவிய சரித்திரம், சுயசரித்திரம்.

Birth right - பிறப்புரிமை, சொந்தம், பிறப்புச் சுதந்திரம், ஜன்ம சுதந்திரம், பாரம்பரிய பாத்தியம்.

Blame worthy - குற்றத்திற்காளான, குற்றங்கூறத் தகுந்த, குற்றம் சாட்டுதற்கேற்ற, நிந்தைக்குரிய.

Blessing - ஆசீர்வாதம், அருள், வரம், வாழ்த்துதல், ஸ்தோத்திரம், நல்லாசி கூறுதல்.

Blood shed - கொலே, இரத்தஞ் சிந்துதல், உயிர்க்கொலே, படுகொலே, இரத்தவெள்ளம்.

Boast - வீம்பு, வீறுப்பு, தற்புகழ்ச்சி, வீண் விருதுகூறல், வீம்பு பேசல், தற்பெருமை யடித்தல்.

Boldness - ஆண்மை, துணிகரம், தீரம், திடம், அஞ்சாமை, தைரியம், சாகசம், வீரம், நெஞ்சழுத்தம்.

Bombastic - டம்பமான, ஜம்பமான, சொற் பகட்டான, படாடோபமான.

Boundless admiration - அளவற்ற வியப்பு, மட்டற்ற மெச்சுதல், மிஞ்சப் புகழ்தல், மிகுபுகழ், எல்லே கடந்த புகழ்.

Bow - வணக்கம், பணிவு, சிரந்தாழ்தல், தலேவணக்கம், பணிதல், மரியாதை, வளே, வில், யாழ்வில், கப்பலின் முன் பக்கம்.

Bowed out - வணங்கி வெளி யனுப்புதல், பணிந்து வெளிக்கிளம் புதல், வணங்கிப் போக விடை யளித்தல்.

Bribery - லஞ்சம், பரிதானம், கைக் கூலி, நெறிவழு.

Brilliant speech - தளுக்கான பேச்சு, சோதியான சொற் பொழிவு, ஒளி பொருந்திய சொற் பெருக்கு, சோபையான சொற் போக்கு, சாதுரியமான வாக்கு, பிரகாசமான பேச்சு.

Broad minded - விசாலமான நோக்கம், தாராள சிந்தை, விசா லித்த மனப்பான்மை, பரந்த நோக் கம், விரிந்த மனங்கொண்ட.

Brotherhood - சகோதரத்துவம், தோழமை, உடன்பிறந்த வாஞ்சை, சோதரச் சபை, சகோதரக்கழகம், சகோதர உணர்ச்சிபாவம்.

Bureaucratic Government - அதிகாரவர்க்கத்தினர் ஆட்சி, கீழ் உத்தியோகஸ்தர் ஆட்சி, கீழதிகாரி நிர்வாகம், எழுத்ததிகாரிகள் அரசி யல், பேனமுனை அரசாங்கம்.

Burning zeal - சுவாலிக்கும் உற் சாகம், கொழுந்து விட்டெரியும் முயற்சி, கனன்றெழும் ஆவல், சுவாலிக்கும் வைராக்கியம்.

Business acumen - தொழிலூகம், தொழில் ஞானம், தொழிலறிவு, வர்த்தகத் தேர்வு, கொண்டு விற்ற லறிவு.

Business programme - தொழில் விளம்பரம், வியாபார விளம்பரம், வர்த்தக விளம்பரம், சூசிகைப் பத்திரம், நிகழ்ச்சி நிரல், நடை முறை பத்ததி, நிகழ்ச்சிக் கிரமம், நடைமுறை ஒழுங்குப்பாடு, நிகழ்ச் சிக் குறிப்பு.

Bust - சிரசுதொட்டு இடுப்பளவுள்ள படம் அல்லது உருவச்சிலை, மேல் பாகம், மேலுறுப்புடைய பிரதிமை, தனம்.

By and by - பிறகு, பிற்பாடு, கொஞ்சகாலஞ் சென்று, காலக்கிர மத்தில், நாளடைவில்.

Bye law - துணைச்சட்டம், உபச் சட்டம், உபவிதி, கிளைவிதி.

By word - பழமொழி, வழக்கச் சொல், கையாளும் மொழி, செலா வணிச் சொல்.

Cabinet - மந்திராலயம், மந்திரி சபை, ஆலோசனை மன்றம், பேழை, அலமாரி.

Callous indifference - கன் னெஞ்சான உபேட்சை, உணர்ச்சி யற்ற உதாசினம், கடின சித்தமான கவலையீனம், உணர்ச்சியற்ற அலட் சியம், கொடூரமான அவதிப்பு, கடின வெறுப்பு.

Calmness - அமைதி, சாந்தம், பொறுமை, சகிப்பு, கிம்மதி, சலன மின்மை, ஓய்வு, சிதானம்.

Campaign - யுத்தபூமி, சொற் போரிடம், முகாம், அமர்க்களம், முற்றுகை,

Candidate - அபேட்சகர், தேர் வுக்கு நிற்பவர், மாணவர், மனு தாரன்.

Candid friend - மனந்திறந்த சிநேகர், கபடில்லாத தோழர், மனங்கலந்த நேசர், கபடற்ற அன்பர், வெள்ளை உள்ளம் படைத்த நண்பர்.

Candid speech - கபடற்ற பேச்சு, காவற்ற விரிவுரை, கள்ளங் கபடற்ற வாக்கு, வெளிப்படை யான சொற்பெருக்கு, உள்ளந் திறந்த பேச்சு.

Capacity - வல்லபம், திறமை, பதவி, உத்தியோகம், சக்தி, ஆற்றல், அளவு பரிமாணம், கொள் அளவை.

Capital - தலைநகர், தூண்தலை, கைம் முதல், பெரிய எழுத்து, பிர மாண்டமான.

Capitalist - முதலாளி, செல்வன், பணப்புழக்கமுடையவன், லேவா தேவிக்காரன், பாக்கியவான், சீமான், சௌக்கார்.

Captivating speech - மயக்கும் வாக்கு வல்லபம், வசிகரிக்கும் பேச்சுச் சாமர்த்தியம், மதிமயக்கும் வாக்கு விலாசம், வாக்கு வசீகரம், சொற்சாலப் பேச்சு.

Careful - கருத்தான, ஜாக்கிரதை யான, முன்பின் யோசனையுள்ள, கவலையான, ஆழ்ந்த, எழுத்தெண்ணிய, ஆலோசிக்கப்பட்ட.

Career - வாழ்நாள் வழி, உத்தி யோகம், ஜீவனம், தொழில், வயிற்றுப் பிழைப்பு, பிற்காலவாழ்வு,

Carping critic - தர்க்கிக்கும் குதர்க்கி, குறை சொல்லும் தர்க்க வாதி, குற்றங் காண்பதே வேலை யாகக் கொண்டவன், தோஷதரிசி.

Carry out - சாதித்து விடுதல், முடிவு கட்டுதல், நிறைவேற்றி விடுதல், முடிவ காணுதல்

Casting vote - அதிகப்படி வாக் குரிமை, மத்தியஸ்த வாக்கு, அக் கிராசனர் வாக்கு.

Casual - எதிர்பாராத, தற்செயலான திடும்பிரவேசமான.

Casual visitor - தற்செயலாக வந்த பார்வையாளர், அகஸ்மாத் தாக வந்தவர், அழையாத பார்வை யாளர், எதிர்பாராத அதிதி, தாமே வந்தவர்.

Casual remark - யோசியாது வரும் சொல், முற்கூட்டி ஆலோ சிக்கப்படாத குறிப்பு, பேச்சுப் பராக்கில் வெளிவரும் சூசனை.

Catalogue - அட்டவணை, விளம் பரப்புத்தகம், விலைக் குறிப்பு, விலைப்பட்டி.

Categorical - வரிசைக் கிரமமான, ஒழுங்குப்பாடான, வழி வகையான, இனவரிசையான, பகுதியான, கிர மம் பற்றிய.

Caustic remark - காரசாரமான பேச்சு, சுடுசொல், புண் படுத் தும் சூசனை, எரிச்சல் மூட்டும் சொல்.

Cautiows - எச்சரிக்கையான, முன் சாக்கிரதையான, விழிப்பான, நிதானமான, அமைதியான, சிந்தனை யுள்ள.

Celebrated-கீர்த்தியான, உன்னதம் வாய்ந்த, பிரபலமான, பாராட்டு தற்குரிய, புகழ்பெற்ற, பெயர் போன, சிறப்புவாய்ந்த, சீர்கொண்ட திக்குரிய, பிரசித்தமான, கீர்த்தி யான.

Censor - சோதிப்பவன், குற்றம் காண்பவன், குற்றம் நீக்குவோன், சோதனையாளன், நோட்டக்காரன்.

Censure motion - குற்றப் பிர ரேபணை, நிராகரிப்புத் தீர்மானம், கண்டனத் தீர்மானம், கண்டனப் பேச்சு.

Census - குடிக்கணக்கு, குடி மதிப்பு, குடிகளின் எண்ணிக்கை, குடித்தொகை.

Ceremony - கிரியை, சடங்கு, அலுவல், பிரயோசனம், கருமம், கொண்டாட்டம், விசேடம், விவ சம், விழா, முறைமை.

Certify - எழுத்தில் உறுதிப் படுத்து, ஒப்பம் வை, சரிசொல்லு, நற்சாட்சி பத்திரமளி, யோக்கிதா பத்திரம் கொடு.

Challenge.- போருக்கழை, வாதுக் கழை, அறைகூவு, முழக்கமிடு, ஆட்சேபம்.

Chancellor - அமைச்சர், மந்திரி, சர்வகலாசாலைத் தலைவர், பல்கலைக் கழகத் தலைவர், சங்கத்தின் மூல புருடன், அத்தியட்சகர்.

Chapter - அத்தியாயம், அதிகாரம், படலம், அங்கம், பகுப்பு, பிரிவினை, நூலுறுப்பு, பிரிவு, காண்டம், மடம்.

Character - குணுதிசயம், தன்மை, பண்பு, சீலம், எழுத்து, அட்சரம், புகழ், நன்னடக்கை, நல்லொழுக்கம், தகுகுணம், யோக்கியதை, நாணயம், கூத்தன், நாடக பாத்திரம்.

Charity - அறநிலையம், தருமம், ஈகை, கொடை, உதாரம், பிச்சையளித்தல், அறம், பிரிவு காட்டுதல்.

Charming - மனங்கவரும், இன்ப கரமான, மனோகரமான, இனிமையான, ஆகருஷிக்கக் கூடிய, கவரக் கூடிய, வசீகரிக்சக் கூடிய, ரம்மியமான, மனோரஞ்சிதமான.

Choice words - தேர்ந்தெடுத்த வார்த்தைகள், ஆய்ந்த சொற்கள், உகந்த மொழிகள், உசிதமான கூற்றுகள், தீஞ்சொற்கள், செவிக்கினிய வார்த்தைகள், செம் பொருள் மொழிகள்.

Circular - சுற்றறிக்கை, விளம்பரம், வட்டறிக்கை, பிரகடனம், வெளியீடு, தாக்கீது, வட்டமான.

Circulation - சுற்றுப் போக்கு, சுழன்று வருதல், பரிவர்த்தனம், ஓட்டம், பார்வைக் கனுப்புதல், தாதோட்டம்,

Civic consciousness - நகர பரிபாலன உணர்ச்சி, நகர முன்னேற்ற எண்ணம், நகர் வளர்ச்சி நோக்கம், குடிஜன முன்னேற்ற உணர்ச்சி, நகர உரிமை உணர்வு.

Civilization - நாகரீகம், நற்பாங்கு, சீர்திருத்தம், தேசாசாரம், நல்லொழுக்கம், மக்களுயர்வு, மாந்தர் பெருமை.

Class hatred - வகுப்புத்துவேஷம், வகுப்புப் பகை, சாதிப்பகை, சாதி எதிர்ப்பு.

Classical - இலக்கிய, சரித்திர காலத்திய, பழங்காப்பிய, காவிய சம்பந்தமான.

Clearness - சுத்தம், துப்புரவு, தெளிவு, திருத்தம், நன்கு புரியக் கூடிய வகை, திருந்தச் சொல்லுதல், சொற் சோர்வின்மை, விளக்கம்.

Clear insight - நுண்ணிய அறிவு, அகப்பார்வை, தெளிந்த விசாரணை, ஆழ்ந்த பார்வை, தெள்ளிய அறிவு.

Closure - தடை செய்தல், மூடிவிடல், அடைப்பு, முடிவுரை, நிறுத்தி விடுதல், தடுத்து விடுதல், மேல்பேசாது முடித்து விடுதல், விவாத முடிவு.

Close friendship - நெருங்கிய நட்பு, அன்பார்ந்த சிநேகம், மனங் கலந்த நேசம், மயிருடாடா நட்பு, அந்நியோன்யம்.

Coaxing eloquence - பூசுதலான சொற்போக்கு, புகழ்தலான சொல் நயம்.

Code rules - சட்ட விதிகள், சட்ட முறைமை, சட்ட நியாயம், சட்டப் பிரமாணம்.

Code words - கோடீகரித்த வார்த்தைகள், விரிபொருள் கொண்ட சுருக்க வார்த்தைகள், தந்திப் போக்கு வார்த்தைகள், சங்கேதப் பதங்கள், மறைபொருள் மொழிகள்.

Cold formalities - உணர்ச்சியற்ற சடங்குகள், மனப்பற்றில்லாத ஒழுங்குப் பாடுகள், வெறுப்பான வெளியாசாரம், பற்றற்ற ஒப்புரவுகள்.

Collection - சேர்க்கை, கூட்டுதல், வசூல், திரட்டல், தண்டல், குவியல், சேகரித்தல்.

Colossal-பிரம்மாண்டமான, மகாப் பெரிய, பிரமாதமான, பூதாகரமான, அகண்டமான, மகத்தான.

Capitalist - முதலாளி, செல்வன், பணப்புழக்கமுடையவன், லேவா தேவிக்காரன், பாக்கியவான், சீமான், சௌக்கார்.

Captivating speech - மயக்கும் வாக்கு வல்லபம், வசீகரிக்கும் பேச்சுச் சாமர்த்தியம், மதிமயக்கும் வாக்கு விலாசம், வாக்கு வசீகரம், சொற்சாலப் பேச்சு.

Careful - கருத்தான, ஜாக்கிரதை யான, முன்பின் யோசனையுள்ள, கவலையான, ஆழ்ந்த, எழுத்தெண் ணிய, ஆலோசிக்கப்பட்ட.

Career - வாழ்நாள் வழி, உத்தி யோகம், ஜீவனம், தொழில், வயிற்றுப் பிழைப்பு, பிற்காலவாழ்வு,

Carping critic - தர்க்கிக்கும் குதர்க்கி, குறை சொல்லும் தர்க்க வாதி, குற்றங் காண்பதே வேலை யாகக் கொண்டவன், தோஷதரிசி.

Carry out - சாதித்து விடுதல், முடிவு கட்டுதல், நிறைவேற்றி விடுதல், முடிவ காணுதல்

Casting vote - அதிகப்படி வாக் குரிமை, மத்தியஸ்த வாக்கு, அக் கிராசனர் வாக்கு.

Casual - எதிர்பாராத, தற்செயலான திடும்பிரவேசமான.

Casual visitor - தற்செயலாக வந்த பார்வையாளர், அகஸ்மாத் தாக வந்தவர், அழையாத பார்வை யாளர், எதிர்பாராத அதிதி, தாமே வந்தவர்.

Casual remark - யோசியாது வரும் சொல், முற்கூட்டி ஆலோ சிக்கப்படாத குறிப்பு, பேச்சுப் பராக்கில் வெளிவரும் சூசனை.

Catalogue - அட்டவணை, விளம் பரப்புத்தகம், விலைக் குறிப்பு, விலைப்பட்டி.

Categorical - வரிசைக் கிரமமான, ஒழுங்குப்பாடான, வழி வகையான, இனவரிசையான, பகுதியான, கிர மம் பற்றிய.

Caustic remark - காரசாரமான பேச்சு, சுடுசொல், புண் படுத் தும் சூசனை, எரிச்சல் மூட்டும் சொல்.

Cautiows - எச்சரிக்கையான, முன் சாக்கிரதையான, விழிப்பான, நிதானமான, அமைதியான, சிந்தனை யுள்ள.

Celebrated - கீர்த்தியான, உன்னதம் வாய்ந்த, பிரபலமான, பாராட்டு தற்குரிய, புகழ்பெற்ற, பெயர் போன, சிறப்புவாய்ந்த, சீர்கொண்ட துதிக்குரிய, பிரசித்தமான, கீர்த்தி யான.

Censor - சோதிப்பவன், குற்றம் காண்பவன், குற்றம் நீக்குவோன், சோதனையாளன், நோட்டக்காரன்.

Censure motion - குற்றப் பிர ரேபணை, நிராகரிப்புத் தீர்மானம், கண்டனத் தீர்மானம், கண்டனப் பேச்சு.

Census - குடிக்கணக்கு, குடி மதிப்பு, குடிகளின் எண்ணிக்கை, குடித்தொகை.

Ceremony - கிரியை, சடங்கு, அலுவல், பிரயோசனம், கருமம், கொண்டாட்டம், விசேடம், திவ சம், விழா, முறைமை.

Certify - எழுத்தில் உறுதிப் படுத்து, ஒப்பம் வை, சரிசொல்லு, நற்சாட்சி பத்திரமளி, யோக்கிதா பத்திரம் கொடு.

Challenge - போருக்கழை, வாதுக் கழை, அறைகூவு, முழக்கமிடு, ஆட்சேபம்.

Chancellor - அமைச்சர், மந்திரி, சர்வகலாசாலைத் தலைவர், பல்கலைக் கழகத் தலைவர், சங்கத்தின் மூல புருடன், அத்தியட்சகர்.

Chapter - அத்தியாயம், அதிகாரம், படலம், அங்கம், பகுப்பு, பிரிவினை, நூலுறுப்பு, பிரிவு, காண்டம், மடம்.

Character - குணுதிசயம், தன்மை, பண்பு, சீலம், எழுத்து, அட்சரம், புகழ், நன்னடக்கை, நல்லொழுக்கம், தகுகுணம், யோக்கியதை, நாணயம், கூத்தன், நாடக பாத்திரம்.

Charity - அறநிலையம், தருமம், ஈகை, கொடை, உதாரம், பிச்சையளித்தல், அறம், பிரிவு காட்டுதல்.

Charming - மனங்கவரும், இன்பகரமான, மனோகரமான, இனிமையான, ஆகருஷிக்கக் கூடிய, கவரக் கூடிய, வசீகரிக்கக் கூடிய, ரம்மியமான, மனோரஞ்சிதமான.

Choice words - தேர்ந்தெடுத்த வார்த்தைகள், ஆய்ந்த சொற்கள், உகந்த மொழிகள், உசிதமான கூற்றுகள், தீஞ்சொற்கள், செவிக்கினிய வார்த்தைகள், செம் பொருள் மொழிகள்.

Circular - சுற்றறிக்கை, விளம்பரம், வட்டறிக்கை, பிரகடனம், வெளியீடு, தாக்கீது, வட்டமான.

Circulation - சுற்றுப் போக்கு, சுழன்று வருதல், பரிவர்த்தனம், ஓட்டம், பார்வைக் கனுப்புதல், தாதோட்டம்,

Civic consciousness - நகர பரிபாலன உணர்ச்சி, நகர முன்னேற்ற எண்ணம், நகர் வளர்ச்சி நோக்கம், குடிஜன முன்னேற்ற உணர்ச்சி, நகர உரிமை உணர்வு.

Civilization - நாகரீகம், நற்பாங்கு, சீர்திருத்தம், தேசாசாரம், நல்லொழுக்கம், மக்களுயர்வு, மாந்தர் பெருமை.

Class hatred - வகுப்புத்துவேஷம், வகுப்புப் பகை, சாதிப்பகை, சாதி எதிர்ப்பு.

Classical - இலக்கிய, சரித்திர காலத்திய, பழங்காப்பிய, காவிய சம்பந்தமான.

Clearness - சுத்தம், துப்புரவு, தெளிவு, திருத்தம், நன்கு புரியக் கூடிய வகை, திருந்தச் சொல்லுதல், சொற் சோர்வின்மை, விளக்கம்.

Clear insight - நுண்ணிய அறிவு, அகப்பார்வை, தெளிந்த விசாரணை, ஆழ்ந்த பார்வை, தெள்ளிய அறிவு.

Closure - தடை செய்தல், மூடிவிடல், அடைப்பு, முடிவுரை, நிறுத்தி விடுதல், தடுத்து விடுதல், மேல்பேசாது முடித்து விடுதல், விவாத முடிவு.

Close friendship - நெருங்கிய நட்பு, அன்பார்ந்த சிநேகம், மனங்கலந்த நேசம், மயிருடாடா நட்பு, அந்நியோன்யம்.

Coaxing eloquence - பூசுதலான சொற்போக்கு, புகழ்தலான சொல் நயம்.

Code rules - சட்ட விதிகள், சட்ட முறைமை, சட்ட நியாயம், சட்டப் பிரமாணம்.

Code words - கோடீகரித்த வார்த்தைகள், விரிபொருள் கொண்ட சுருக்க வார்த்தைகள், தந்திப் போக்கு வார்த்தைகள், சங்கேதப் பதங்கள், மறைபொருள் மொழிகள்.

Cold formalities - உணர்ச்சியற்ற சடங்குகள், மனப்பற்றில்லாத ஒழுங்குப் பாடுகள், வெறுப்பான வெளியாசாரம், பற்றற்ற ஒப்புரவுகள்.

Collection - சேர்க்கை, கூட்டுதல், வசூல், திரட்டல், தண்டல், குவியல், சேகரித்தல்.

Colossal-பிரம்மாண்டமான, மகாப் பெரிய, பிரமாதமான, பூதாகரமான, அகண்டமான, மகத்தான.

Colossal failure - பெருந் தோல்வி, மகத்தான தோல்வி, பிரமாதமான அபஜயம், படுதோல்வி.

Colossal impudence - பெருத்த மானக்கேடு, பெரிய போக்கிரித் தனம், பிரமாதமான மனக்கொழுப்பு, மிஞ்சிய மனத்திமிர்.

Clossal mistake - மிஞ்சிய குற்றம், பெருதத இழுக்கு, மிஞ்சிய வழு, பிரம்மாண்டமான குற்றம், பெருந் தவறு.

Colony - குடியேற்றம், குடியேறிய நாடு, குடியேற்றப் பிரதேசம், வந்தேறிய குடிகள், புதுக்குடி.

Comedy - கூத்து, நாடகம், சிரிப்பில் முடியும் கதை, நகைச்சுவை நாடகம், சிரிப்புண்டாக்கும் கூத்து, மங்களக்கூத்து.

Comic - பரிகாசமான, ஆசியமான, சிரிப்புண்டாக்கும், நகைச்சுவையான, கோமாளித்தனமான.

Commemoration - கொண்டாட்டம், நினைவு, ஞாபகார்த்தம், போற்றுவிழா.

Commemoration volume - நினைவு மலர், போற்றும் நூல்.

Commencement - தொடக்கம், ஆரம்பம், மூலம், ஆதி, முதற்கண்.

Committee - கழகம், குழு, சபை, விசாரணை சபை, உபசபை, தேர்ந்தெடுத்த குழு.

Common sense - பகுத்தறிவு, பொதுஞானம், சாதாரண அறிவு, இயற்கைஅறிவு,பொருள் பொதிவு.

Commons house of - பொது ஜன சபை, பொதுமக்கள் சபை, கீழ்ச் சபை, குடிகள் சபை, பாராளுமன்ற மக்கள் சபை, ஜனப் பிரதிநிதி சபை.

Communication - போக்குவரத்து, சம்பந்தம், கடிதம், சம்பாஷணை, சொல்லியனுப்புதல், தெரிவித்தல், வழி, வெளியீடு.

Compassionate allowance - இரக்கப் படி, பரிதாபப் படி, இரங்கற் சம்பளம், துக்கப்படி, உபகாரச் சம்பளம்.

Compel - கட்டாயப் படுத்து, பலாத்காரம் செய், கட்டுப்படுத்து, நெருக்கு.

Compensation - ஈடு, நஷ்ட ஈடு, பூர்த்தி செய்தல், சரிகட்டல், கைம்மாறு, பரிகாரம், பிரதியுபகாரம்.

Competent authority - தகுந்த மேற்கோள், தக்க பிரமாணம், சரியான அதிகாரி.

Competition - போட்டி, முந்துதல், எதிர் முயற்சி, வெல்லுமுபாயம், போட்டிச் சோதனை, பந்தயம், போராட்டம்.

Competitive examination - போட்டிப் பரீட்சை, போட்டித் தேர்வு, போட்டிப் பரிசீலனை.

Competing candidate - வெல்லப் பார்க்கும் அபேட்சகர், எதிரிடை அபேட்சகர், போட்டிப் பரிசுக்கு நிற்கும் மாணவன், தேர்வை விரும்பியவன்.

Complain - குறைகூறு, முறையிடு, பிராது கொடு, சிணுங்கு, புலம்பு, பரிதவி, முணுமுணு.

Complicated question - சிக்கலான பிரச்சினை, இடக்கு முடக்கான காரியம், பின்னலான விஷயம்.

Compliment - முகமன், உபசாரம், வாழ்த்துரை, வாழ்த்து, வந்தனங்கூறல், உபசார வார்த்தை மங்களங்கூறு, துதித்தல், நன்மொழி புகலல், நயமொழி கூறல்.

Comply - இணங்கு, சம்மதி, ஒப்பு, ஒப்பகட, மனமிசைதல், ஒப்புரவொழுகல், ஒருப்படல்.

Composition - கூட்டு, திரட்டு, இணைப்பு, கலப்பு, யாத்தல், கட்டுரை, வியாசம், சேர்க்கை, கிரந்தம், கடன் தீர்க்கும், உடன்படிக்கை.

Compromise - இணக்கம், மனப் பான்மை, ஒன்றுபடல், வித்தியா சம் போக்கிக் கொளல், சமாதானம், சமரசம், கவுரவத் தாழ்வு.

Compulsory - பலவந்தமான, கட்டாயமான, நிர்ப்பந்தமான, கட்டுப் படுத்தக்கூடிய.

Comrade - கூட்டாளி, நேசன், நண்பன், துணைவன், தோழன், சம அந்தஸ்துடையவன், கூட் டுழைப்பாளி, தோள் தொடுப் போன்.

Conceited - அகந்தை கொண்ட, கர்வமான, வீணான, தலைகொழுத்த, மமதையான, மண்டைக் கர்வ மான, அகம்பாவமான, ஆணவமான.

Conceive - உண்டாக்கு, நினை, எண்ணமிடு, உருஉண்டாக்கு, மனக் கண்ணால் நோக்கு.

Concentrate - மனங்குவிதல், மனதை ஒன்றிலே செலுத்துதல், ஒருமுகப்படல், ஒருமனப்படல், தியானித்திருத்தல், சாரமிறக்கு.

Conception - மனோபாவனை, மனத்தோற்றம், எண்ணம், உருவகம், மனத்தொழில், நினைவு, கற்பிதம்.

Concern - பொறுப்பு, காரியம், அலுவல், விசாரம், வர்த்தகம், சிந்தனை, குறித்த, கரிசனை, கவலை.

Concert - யோசனை செய்தல், யூகித்தல், வகைசெய், வழிவகு, ஒப்பந்தம் செய், களியாட்டம், நடனம், விநோதக்கூத்து, பாட்டுக் கச்சேரி.

Concession - தயை காட்டல், குறைத்தல், அநுதாபம், கரிசனம், பரிவு காட்டல்.

Conciliation - கூடுதல், உறவாதல், இணங்குதல், ஒத்துப் போதல், ஐக்கியம், ஒற்றுமை கூட்டுறவு, உடன்பாடு, சமாதானம், சமரசம்.

Concise - சுருக்கமான, அடக்கமான, பொழிப்பான, குறுகலான, ஆடம்பரமற்ற.

Conclusion - முடிவு, தீர்ப்பு, சித்தாந்தம், முடித்தல், தீர்ந்த முடிவு, முடிவுரை, முற்றுவித்தல், சமாப்தி, இறுவாய்.

Concur - இணங்குதல், ஒத்துக் கொள்ளுதல், ஒத்துப் போதல், உடனிகழ்தல், ஒன்றுபடக் கூறல், இசைதல், ஒப்பமிடுதல், சம்மதித்தல், ஒருமனப் படுதல், ஒருப்படல்.

Condemn - கடிதல், குற்றங் காணுதல், தள்ளுபடி செய்தல், தண்டி, விலக்குதல், கழித்தல், கண்டித்தல், தூஷித்தல், மரண தண்டனை.

Condescend - தயைபுரிதல், பரிவு காட்டு, சித்தமிரங்கு, கடாட்சி, கிருபைகாட்டு, கடைக்கண் நோக்கல், கண்ணோட்டமிடு, தாட்சண்யம் காட்டுதல், திருவுள்ளம் பற்றுதல்.

Conditional clause - நிபந்தனை வாக்கியம், ஷரத்து, நிபந்தனை வசனம்.

Condole - பரிதபி, துக்கம் கொண்டாடு, இரங்கு, மாழ்குதல், சோகந் தெரிவித்தல், புலம்பல், இறந்தவர்க் குப் பரிவு, இழவு கொண்டாடுதல், கழிவிரக்கம் காட்டல்.

Conduct - நடத்தை, ஒழுக்கம், வழிகாட்டும் விதம், நல்லொழுக்கம், கூட்டிப்போ, துணைபோ, நற்குணம், நடந்து கொள்ளுமுறை, நிர்வாகம்.

Confess - ஒத்துக்கொள், விஞ்ஞாபி, வெளியிடு, விமோசனம் கோரு, குற்றத்தை ஒப்புதல்.

Conference - மகாநாடு, மாபெருங் கூட்டம், ஆலோசனைசபை, வித்தகர் சபை, பேரவை, சம்மேளனம்.

Confide - அந்தரங்கமாகச் சொல், இரகசியம் புகல், மனந்திறந்து கூறல், ஒப்புவி, நம்பிச் சொல்லு.

Confound - திகைப்பு, மலைப்பு, தடுமாற்றம், கலக்கு, மலைக்கச் செய், தட்டழி, குழப்பு.

Congratulations - வாழ்த்துதல், மங்களம் கூறல், புகழுரை புரிதல், வந்தனோபசாரம், முகமனுரை, சுப மொழி, மங்கலமொழி, வாழ்த்து மொழி.

Congress party - காங்கரஸ் கட்சி, ஜனநாயகக் கட்சி, சுய ஆட்சிக் கட்சி, தேசீய சுதந்திரக் கட்சி.

Conscious - நெஞ்சறிந்த, உண்மையெனத் தெரிந்த, மனமுணர்ந்த, தன்னறிவான.

Conscientious objection - மனச்சான்றுடைய ஆட்சேபனை, நேர்மையான ஆட்சேபனை,

Consent - இசைதல், சம்மதம், உடன்பாடு, இணக்கம், ஒப்புதல், அங்கீகரித்தல்.

Consequence - விளைவு, பலன், உறும்பயன், முடிவு, பிரதானம், மேம்பாடு, முக்கியம்.

Consolidate - திரட்டு, ஒன்றுசேர், கூட்டு, உறுதிப்படுத்து, பரிபக்குவப்படுத்து, கெட்டியாக்கு, உரமாக்கல், ஒன்று படுத்துதல்.

Constitutional - அரசாட்சி முறைக்குரிய, அரசியலுக்கடுத்த, நியமமான, சட்டத்தை யொட்டிய, ஒழுங்குமுறைக் கிணங்கிய.

Constitutional assembly - அரசியல் நிர்ணயசபை, அரசியல் அமைப்பு மன்றம்.

Constitutional reforms - ஆட்சி முறைத் திருத்தங்கள், அரசரட்சி முறை மாறுதல்கள், அரசியல் திருத்தங்கள், ஆட்சி முறை மாற்றங்கள்.

Construction - அர்த்தம், அபிப்பிராயம், ஆக்கல், கட்டுதல், இணைத்தல், திருப்பணி, சொற் புணர்ச்சி, கட்டிடப்பணி.

Consumate speaker - தீர்ந்த பேச்சாளர், கைதேர்ந்த வாசாலகர், வல்வாயர்.

Consumate villain - கைதேர்ந்த போக்கிரி, பழகித் தேர்ந்த அயோக்கியன், தீர்ந்த காதகன், படுபோக்கிரி.

Contemplated projcet - செயலுக்கு வராத உபாயம், எண்ணப்பட்டுள்ள கற்பனை, நினைவிலுள்ள யோசனை, மனத்தோற்றத்திலுள்ள ஏற்பாடு.

Contemporary - ஒரே காலத்தில் வதிந்த, சகபாடியாக வாழ்ந்த, ஒரே யுகத்திலிருந்த, சம காலத்தவன், உடனிகழ்கிற.

Contempt - இகழ்ச்சி, நிந்தனை, அலட்சியம், ஏளனம், உதாசினம், உபேட்சை, தூஷணை, அவமதிப்பு, வெறுப்பு.

Contend - போராடு, தர்க்கி, விவாதி, வாதாடு, சண்டையிடு, சொற்போரிடு, எதிர்வாதமிடு.

Context - தொடர்ச்சி, தொடர் வாக்கியம், விஷயத்தொடர், வாக்கியப் பொருத்தம், கருத்துக் கோவை, முன்பின் சந்தர்ப்பம்.

Continuation - தொடர்ச்சி, முற்றுப் பெறுத நிலை, இடைவிடாத, ஒட்டியது.

Contract - ஒப்பந்தம், உடன்படிக்கை, குத்தகை, ஏற்பாடு, சுருக்கு, ஒடுக்கு, குறை, குவி, நெருக்கு.

Contradiction மறுப்பு, ஆட்சேபம், ஒவ்வாமை, மொழிமாற்றம், சொல் விழுக்கு, முரண்பாடு, முன்னுக்குப் பின் விரோதம், மாறுபடக்கூறல், விபரீதப்பேச்சு.

Contrast-எதிரிடை, மாறுன நிலை, மாறுபட்டது, ஒவ்வாதது, வேற்றுமை, விரோத உவமை, முரணுக்கு, பேதத்தைக்காட்டு.

Contribution-உதவி, நன்கொடை, பண ஆதரவு, சகாயம், வியாசம், விமரிசனம், கட்டுரை, வசூலான தொகை.

Contrive - உபாயஞ் செய், வழி தேடு, சூழ்ச்சி செய், ஏற்பாடுசெய், கண்டுபிடி, கற்பனை பண்ணு.

Control - கட்டுப்பாடு, அதிகாரம், நிறுத்து, ஒழுங்குப்படுத்து, பங்கீடு செய்,கண்காணித்தல், மேற்பார்வை ஆட்சி, அடக்கி ஆளுதல்.

Controversy - தர்க்கம், வாது, குறுக்குவாதம், எதிர்வாதம், வாக்குவாதம், வாய்ச்சண்டை, சம்வாதம்.

Conversation - சம்பாஷணை, சல்லாபப்பேச்சு, உரையாடுதல், வார்த்தையாடுதல், அளவளாவுதல், கூடிப் பேசல்.

Convince - உணர்த்து, திருப்தி செய், தெளிவுறுத்து, அறிவுறுத்து. எடுத்துக்காட்டு, குற்றமுணர்த்து, நம்பச் சொல், ஒப்பவை.

Convocation - திருச்சபை, கல்விச்சங்கம், பட்டமளிப்பு விழா,

Cool - சாந்தம், குளிர்ந்த, அமைதியான, பொறுமையான, தட்பமான, நட்பில்லாத.

Co-operate - ஒத்து நடத்தல், கூட்டுறவு, ஒற்றுமை யுணர்ச்சி, ஐக்கிய பாவம், ஒத்து நட, உடன்படு.

Co-operative Society - கூட்டுறவுச் சங்கம், ஐக்கிய நாணய சங்கம்.

Copy - பின்பற்று, நகல் செய், பார்த்தெழுது, பிரதி, பெயர்த்தெழுது, மாதிரி.

Copy right - அச்சிடும் உரிமை புத்தக உரிமை.

Correspondent - கடிதமெழுதுவோன், பத்திரிகை நிருபர், ராயசக்காரர், வர்த்தமானி, செயலாளர்.

Corporation - நகரசபை, நகராண்மைக் கழகம், நகர பரிபாலன சபை, இணைக்கப்பட்ட சபை, நகர விசாரணைச் சங்கம், வணிகச் சங்கம், வர்த்தக மண்டலம்.

Correct - திருத்தமான, சரியான செம்மையான, யாதார்த்தமான, ஒழுங்கான முறையான, தகுதியான, பிழையற்ற.

Corridor - நடைபாதை, சுற்றுவழி, பிரகாரம், ஆளோடி, தாழ்வாரம்.

Corrupt - நேர்மையற்ற, பழுதான, குற்றமான, பரிதானம் பெற்ற, லஞ்சம் வாங்கிய, நேர்மை தவறிய, கைக்கூலி கொண்ட.

Cosmic conscience - உலகியல் உணர்ச்சி, பிரபஞ்சஞானம், உலக ஞானம், மெய்ப்பொருளுணர்வு, அண்டோற்பத்தி யறிவு, பிரபஞ்சோற்பத்தி ஞானம், மெய்ஞானம், மோட்சநிலை யுணர்வு.

Cosmopolitan - சர்வமத, சர்வ தேச, சர்வஜன, ஜாதி சமய பேதமற்ற, சகோதரத்துவமுடைய, எம்மதமும் சம்மதமான.

Council - சங்கம், கழகம், ஆலோசனையிடம், ஆஸ்தானம், மந்திரம், அம்பலம், அரங்கம்.

Councillor - அங்கத்தினர், உறுப்பினர், ஆலோசனை கூறுபவர்,

Counsel - யோசனை கூறு, எச்சரி, வக்கீல், நியாயவாதி, சட்டவாதி, வழக்கறிஞர்.

Counter sign - மேலொப்பமிடு, உறுதிக் கையெழுத்திடுதல், மேற் கையொப்பம் வைத்தல்,

Courage - தைரியம், அஞ்சாமை, மனோ வலிமை, வீரம், ஆண்மை, திடம், தீரம், வல்லமை, மனத் துணிவு, அஞ்சா நெஞ்சம்.

Courteous - மரியாதையான, விநய மான, வணக்கமான, உபசரிப் பான, நாகரிகப்பாங்கான.

Coveted honours - இச்சிக்கும், பட்டங்கள், ஆசைப்படும் கவுரவங் கள், ஆவல்வைத்த பட்டம் பதவிகள்.

Coward - கோழை, பயங்காளி, ஆண்மையில்லாதவன், மனவலிமை யற்றவன்.

Craftsman - கம்மியர், வித்தகர், தொழில் வினைஞர், தொழில் வல் லோர், கைவினைஞர், சித்திரக் காரர், தொழில் வல்லவர், அற்புதர், கண்ணுளர், ஓவியர்.

Creative faculty - சிருட்டிக்கும் மனோசக்தி, படைக்குமறிவு, உண் டாக்கும் ஆற்றல், தோற்றுவிக்கும் சக்தி, சிருட்டி, ஞானம், படைப்புச் சக்தி.

Creed - சமயக்கோட்பாடு, ஒழுங்குப் பாடு, கட்டுப்பாடு, குழுவினர், மதம், கொள்கையாளர், சமயநெறி.

Criterion - அளவை, பிரமாணம், உரைகல்.

Critic-பிழை ஆராய்வோன், குற்றங் காணுவோன், திருத்துவோன், கடிவோன், சோதகன், குதர்க்கன்.

Cross examination - குறுக்கு விசாரணை, எதிர் விசாரணை, குறுக்குக் கேள்வி.

Crown - முடி, கிரீடம், மன்னர், மகுடபதி, மகுடம், அரசர், அரசு, நிருபர்,

Current topic - நிகழும் சம்பவம், நடைபெறும், விவகாரம், அன் றையப் பேச்சு.

Custom-வழக்கம், பழக்கம், மாமூல், அப்பியாசம், ஆயம், சுங்கம், தீர்வை, தேசாசாரம், வாடிக்கை, நாட்டு வழக்கு.

Cynic - குறும்பன், கோபி, வம்பன், தூற்றுபவன்.

Cut motion-வெட்டுப் பிரரேபணை, ஆட்சேபப் பிரரேபணை, குறுக்குப் பிரரேபணை, வெட்டுப் பேச்சு.

Dabble - பல காரியங்களில் கையிடு தல், ஊடாடுதல், அந்நியர் கருமத் தில் தோய்தல், குழப்புதல், அலப்பு தல்.

Daily - அனுதினம், தினசரி, அன் றுடம், தினசரிப் பத்திரிகை நாள் தோறும், தினப்படி.

Dais - மேடை, அரங்கு, சபை மேடை, நடன மேடை.

Damaging - Statements - அவ தூறு வாசகம், மான நஷ்டமான வாக்குமூலம், பழி மொழிகள்.

Dauntless - Courage - அஞ் சாத வீரம், பராக்கிரமம், சௌகரி யம், பின்னிடாத ஆண்மை.

Debate - சொற்போர், விவாதம், வாக்குவாதம், சம்வாதம், வார்த் தைச் சிலம்பம், வாதப்போர்.

Debating-Society - தர்க்க சபை, பட்டி மன்றம், வாத சபை.

Decency - ஒழுக்கம், மரியாதை, யோக்கியம், சீர், மேன்மை, தக வின.

Decision - தீர்ப்பு, முடிவு, உறுதி, நிர்ணயத் திடமொழி, பைசல், வழக்கறுத்தல்.

Decline - மறுதளித்தல், ஒவ் வாமை, இணங்காமை, தளர்தல், நிராகரித்தல், விருத்தாப்பியமடை தல்.

Decree - கட்டளை, உத்தரவு, தீர்ப்பு, நியாயஸ்தல முடிவு, விதித்தல்.

Dedicate - அன்பளிப்பு செய், உரிமையாக்கு, சமர்ப்பி, பிரதிஷ்டை செய், ஒப்பனைசெய்.

Defame - இகழ், நிந்தி, அவதூறு செய், பழிகூறு, கீர்த்தியைப் பங்கப்படுத்தல்.

Defeat - தோல்வி, முறியடி, ஏமாற்றம், குலைவு.

Defence-காப்பாற்றிக்கொள்ளுதல், எதிர்வாதம், பாதுகாப்பு, காப்புப் படை, பிரதி யுத்தரம்.

Deference - மரியாதை, பணிவு, மதிப்பு, கவுரவம், கட்டுப்படுதல்.

Degradation - பங்கம், குறைவு, ஈனம், அவமானம், மானக்கேடு, மானபங்கம்.

Delegate - பிரதிநிதி, துணைவன், பிரஜானுகூலன், தெரிந் தெடுக் கப்பட்டவன், தூதுவன்.

Delicate-மென்மையான, நயமான, நளினமான, விநயமான, பிறர் தலையிடக்கூடாத.

Delight - இன்பம், உவகை, மனக் களிப்பு, மனோகரம், மகிழ்ச்சி, எக் களிப்பு, சந்தோஷம்.

Delinquent - தவறிழைப்போன், குற்றவாளி, முறை தவறுவோன், இடங்கேடன்.

Delivery - சொற்போக்கு, கொடு, ஈதல், தருதல், பட்டுவாடா, பேச்சு நயம், பிரசவம்.

Delusion-மாயம், மயக்கு, பொய்ச் சாட்சி, கண்கட்டு, ஏமாற்றம், சந் தேகமுண்டாதல், புத்தி மாருட் டம்.

Demand - கோரிக்கை, வேண்டு கோள், உரிமைப் பாத்தியம், கேள், கடனிறுக்கக் கேட்டல், அதிகாரத் துடன் கேட்டல்.

Demarcation - எல்லைக்குறி, வரம்பு, வரையறுத்தல், எல்லை கோலுதல், அறுதியிடல், கங்கு.

Democracy - குடியரசு, குடி யாட்சி, ஜனநாயகம், மக்களாட்சி.

Demonstrate - மெய்ப்பி, நிரூபி, அத்தாட்சிசெய், பிரமாணங் காட்டு, நிச்சயப்படுத்து.

Dependence - சார்பு, கீழ்ப்பட் டிருத்தல், ஒன்றியிருத்தல், பிறர் கைபார்த்திருத்தல், ஆதாரங்கொள் ளல், அடுத்திருத்தல்.

Depose - நீக்கு, பதவியிழக்கச்செய், கீழிறக்கு, தாழ்த்து, ஆணையிட்டு சாட்சி சொல், அரசிழக்கச் செய், வாக்குமூலம் கொடு.

Depressed classes - பிற்போக்கு வகுப்புக்கள், பின்னிட்ட சமூகங் கள், தீண்டா வகுப்பினர், அரிசனங் கள்.

Deputation-தூதனுப்புதல், தூது கோஷ்டி, ஏற்படுத்துதல், பிரதி நிதிக்குழு, பிரார்த்தனைக்கோஷ்டி.

Description - விவரம், விளக்கம், தெளிவுறுத்தல், விரித்துக்கூறல், வருணனை.

Desperate - துணிவுகொண்ட, அசட்டுத்தைரியமான,மூர்க்கமான, எதற்கும் துணிந்த.

Despotic ruler - கொடுங்கோல் மன்னன், தன்னரசு செலுத்து வோன், கொடிய ஆட்சிபுரிவோன்.

Destitute - ஆதரவற்ற, அநாதை யான, வறுமையான, தரித்திர மான, அகதியான, கதியற்ற.

Deteriorate - கெடு, பழுதாக்கு, சீரழி, சென்று தேய்தல், தேய்ந்து கெட்ட.

Determination - தீர்மானம், துணிபு, நிர்ணயம், நிச்சயம், முடிவு, பிடிவாதம், உறுதிப்பாடு.

Dexterous - கைவன்மைகொண்ட, சாமர்த்தியமான, கைதேர்ந்த, சாதுரியமான.

Dialogue-சம்வாதம், சம்பாஷணை, சல்லாபம், பேச்சு, வாக்குவாதம்.

Diametrically opposite - நேர் விரோதமான, ஏறுமாறான, முழு விரோதமான.

Diarchy-இரட்டையாட்சி, இருபுற ஆட்சிமுறை, கலந்த அரசியல்.

Diction - வாசகப்போக்கு, எழுத்து நடை, பேச்சுநடை, வசன சாதுர்யம், பாஷை நயம், மொழியமைப்பு.

Dictator - கட்டளையிடுவோன், கட்டுக்கடங்காத தலைவன், ஏதேச்சாதிகாரி, நாட்டாண்மைக்காரன்.

Difference of opinion - மாறுபட்ட அபிப்பிராயம், முரண்பட்ட கருத்து, கருத்து வேற்றுமை.

Diffidence - அடக்கம், நாணம், சந்தேகம், கோழைத்தனம், துணிவின்மை, மன அயர்வு.

Dignified speech - கம்பீரமான பேச்சு, கண்ணியமான பேச்சு, பெருந்தன்மை பொருந்திய பேச்சு.

Diplomatist - அரசியல் சதுரன், இராஜதந்திரி, சாணக்கியன், அரசியல் நிபுணன்.

Disadvantage - தாழ்ச்சி, இலாபமின்மை, பலனின்மை, பிரதிகூலம்.

Disagree - இரண்டு படு, மாறுபடு, இணங்காதிரு,ஒவ்வாமை, பிணங்கு.

Disallow - தள்ளுபடி செய், தடு, நீக்கு, தடைசெய், வெட்டிவிடு, நிறைவேறாமற் செய், ஏய்த்தல்.

Disappointment - ஏமாற்றம், நம்பிக்கை பங்கம், காரியத் தவறு.

Disarmament-ஆயுதப்பரிகரணம், ஆயுதப்பறிமுதல், நிராயுதபாணியாக்குதல், படையொழிப்பு, சைனியங்களை ஒடுக்குதல்.

Dispurse - பணம் செலவிடு, பட்டுவாடா, கூலி கொடு, சம்பளம் கொடு, கணக்கை நேர் செய்.

Discharge - விடுவி, பிரயோகி, கடனிறு, கடமையைச் செலுத்து, வெடிதீர், நீக்கு, தீர்த்தல், கழிவு.

Disclose - வெளிப்படுத்து, வெளியிடு, புலப்படுத்து, பகிரங்கமாக்கு, பிரசித்தப்படுத்து, திறந்துகாட்டு.

Discomfiture - தோல்வி, அவமானம், மானக்கேடு, குலைவு.

Discontent - மனத்தாங்கல், அதிருப்தி, மனக்குறை, சஞ்சலம்.

Discourse - பேச்சு, பிரசங்கம், உரையாடுதல், சம்வாதம்.

Discredit - நம்பிக்கையின்மை, மதிப்பின்மை, நாணயமின்மை, சந்தேகம், இகழ்ச்சி.

Discrepancy - தப்பிதம், ஒவ்வாமை, பேதம், பிரிவினை, பிழை, முன்னுக்குப்பின் விரோதம்,முரண்பாடு.

Discretion - புத்தி, சூழ்ச்சி, விவேகம், நுண்ணறிவு, பகுத்தறிவு, ஆராய்வு.

Discussion - பேசித் தெளிதல், விவகாரம், தர்க்கம், சொற்போர், விசாரணை, தர்க்கித்தறிதல்.

Disgrace - அபகீர்த்தி, அவமானம், மானபங்கம், இழிவு, வடுப்படுத்தல், மானங் கெடுதல்.

Dishonest - உண்மையற்ற, நாணயமற்ற, நம்பிக்கையற்ற, வஞ்சனையான, நேர்மையற்ற அயோக்கியமான.

Disinherit - உரிமையகற்று, சுதந்தரமிழக்கச் செய், வார்சு நீக்கு.

Disloyal - இராஜத்துரோகமான, விசுவாசமற்ற, இராஜநிந்தனையான, இரண்டகமான, துரோகமுள்ள,

Disorder - கலக்கம், குழப்பம், ஒழுங்கீனம், மாருட்டம், அலங்கோலம், சீர்குலைவு, கலகம் விளைத்தல்.

Disparage - புறக்கணி, அவமானப்படுத்து, அவமதி, தாழ்த்து, பழித்துக் கூறு, தூற்று.

Disparity - தாரதம்மியம், ஏற்றத்தாழ்ச்சி, உயர்வு தாழ்வு, சமமின்மை.

Dispassionate-நிதானமான, பட்சபாதமற்ற, சித்தங் கலங்காத, செம்மை நெறியான, கோபமற்ற.

Display - காட்சி, ஆடம்பரம், ஆர்வாரம், வெளிப்பகட்டு, பிரத்தியட்ச-மாக்குதல், களியாட்டம், வேடிக்கை.

Dispose - செலவழி, விற்றுவிடு, தீர்த்துவிடு, பைசல் செய், முடித்தல்.

Disqualify - தகுதியற்றதாக்கு, தள்ளுபடி செய், உரிமை நீக்கம் செய்.

Dissemination - வித்திடல், பரப்புதல், அறிவு வளர்த்தல், பிரகாசிக்கச் செய்தல், பிரகடனப் படுத்துதல்.

Dissenting opinion - சம்மதமில்லாத கருத்து, மாறுபட்ட எண்ணம், அபிப்பிராய பேதம்.

Dissidence - ஒவ்வாமை, பிணக்கு, ஒற்றுமையின்மை, விரோதம், இணங்காமை.

Dissociate - வேற்றுமைப்படுத்து, பிரி, இனம்பிரி, பிரிந்துவில்.

Dissuade - நியாயம் சொல்லித்தடு, மனதைக் கரை, மறியல் செய், தடை செய், புத்தியை மாற்று, தடுத்துரை.

Distinguished - பிரபலமான, சிறப்பான, கண்ணியமிக்க, கவுரவமான, பெயர்பெற்ற, கீர்த்தி பெற்ற.

Distribution - பங்கீடு, பிரித்துக் கொடு, விநியோகம், பறிமாறுதல்.

Diversion - விநோதம், பொழுது போக்கு, விளையாட்டு, களியாட்டம், வேலை மாற்றம், மனதைத் திருப்புதல்.

Divine - தெய்வீகமான, புனிதமான கடவுள் தன்மை, ஊகி.

Divorce - விவாக ரத்து, கைவிடு, விலக்கு, தள்ளி வை, ஒதுக்கி வை, விட்டு விடுதல், நீத்தல்.

Divulge - வெளிப்படுத்து, வெளியிடு, பிரசித்தப்படுத்து, பிரபலமாக்கு, விளம்பரமிடு.

Doctrine - போதனை, உபதேசம், கொள்கை, கோட்பாடு,மதபோதம், சித்தாந்தம்.

Dogmos - கோட்பாடு, பிடிவாத நெறி, அடவாதம், குரங்குப்பிடி.

Dominion status - குடியேற்ற நாட்டந்தஸ்து, பிரஜா உரிமை.

Double dealing - இரண்டகம், வஞ்சகம், நயவஞ்சகம், பாம்புக்கு வாலும்மீனுக்குத் தலையும்காட்டுதல்.

Draft - சட்டம், மசோதா, நகல், முற்குறிப்பு, சித்திரம் வரை, இழுத்தல்.

Dramatic - நாடகத்திற்குரிய, நடிப்பான, வேடமான, கூத்துப்போன்ற.

Draw back - குறைவு, குணதோஷம், கழிவு,தாழ்ச்சி, லோபம், தடை.

Duly - தகுதியாய், கிரமமாய், ஏற்ற சமயத்தில், கடைப்பிடி, காலக்கிரமத்தில், ஒழுங்கு முறைப்படி.

Duplicate - உபய, இரட்டித்த, சவாபு, நகல், ஐதையான.

Duty - கடமை, நியமம், கடப்பாடு, தொழில், உத்தியோகம், தீர்வை, சுங்கம், ஊழியம்.

Dynasty - ஒருகுலத் தரசர், ஒரு வழிப் பிறப்பு, வம்சம், குலம், அரச பரம்பரை.

Eager - ஆவலுள்ள, அவாவுடைய, பிரியமுள்ள, பேரவாக் கொண்ட, உற்சாகமுடைய, பொறுமையற்ற, 'கஞ்சி வரதப்பா' என எதிர் நோக்குகிற.

Earnest - ஊக்கமான, முயற்சி யான, ஆவலுள்ள, மெய்யான, சிரத்தை, அச்சாரம், முன்னீடு.

Ease - இலகுவாக்கு, கரைத்து விடு, தணி, சாந்தப்படுத்து, சுகம், இளைப் பாறு, ஓய்வு, அமைதி.

Eastern - கீழ்த்திசையி லுள்ள, கிழக்கு நாட்டு, கீழ்தேச, கிழக்கி லுள்ள, குணதிசை.

Eccentric - விபரீதமான, பல கருத் துக் கொண்ட, போக்குப் பிசகான, நிலை தடுமாற்றமான, கோணலான, ஒழுங்கற்ற.

Economy - மட்டான செலவு, திட்டமான செலவு, சிக்கனம், செட்டு.

Ecstacy - பரவசம், மிகுகளிப்பு, பர மாநந்தம், தன்னை மறந்த இன்ப நிலை, கொண்டாட்டம்.

Edict - கட்டளைச் சட்டம், பிரமா ணம், ஆணை, பட்டயம், கல்வெட் டுக் கட்டளை.

Editor - பத்திரிகாசிரியர், ஆசிரி யர், பதிப்பவர், பதிப்பாசிரியர், நூலதிகாரி.

Educative-அறிவு புகட்டக்கூடிய, கற்பிக்கக் கூடிய, படிப்பினையான, துலக்கத்தக்க.

Efficiency - வல்லமை, ஆற்றல், சாமர்த்தியம். திறமை, சக்தி, யோக்கியதாம்சம்.

Efflux - வழிந்தோடல், காலவரை முடிதல், காலங்கடத்தல், அறுதி யடைதல், காலக்கழிவு.

Egotist - அகங்காரி, தற்பெருமை யாளி, தற்புகழ்ச்சிக்காரன், வீம்பன், வீணன், தன்னையே புகழ்பவன்.

Eject - எறி, உமிழ், தள்ளு, வெளிப் படுத்து, அகற்று, குடிபெயரச் செய்.

Elaborate - விரிவான, பெருமித மான, விளக்கமான, விளங்க வைக் கக் கூடிய, பிரமாதமான.

Elastic - நீட்டல் குறுக்கலுக்குரிய, இழுத்த இழுப்பிற்கு வரக்கூடிய, நெகிழ்தற்குரிய.

Electors - வாக்காளர்கள், தேர்ந் தெடுப்போர், தேர்வு உரிமையுடை யோர், வாக்கு உரிமையாளர்.

Election pledges-தேர்தல் உறுதி மொழிகள், தேர்வாளர் பிரதிக்கினை கள், தேர்வு வாக்குறுதிகள்.

Elegance - அழகு, எழில், அலங் காரம், விசித்திரம், விநோதம், வடி வச் சிறப்பு, வனப்பு, கவர்ச்சி.

Elementary principles - மூலா தாரமான கொள்கைகள். அடிப் படையான தத்துவங்கள், மூல காரணங்கள்.

Elite - தக்கோர், பெரியார், கண் ணியவான்கள், தகவோர், நாகரிகர்.

Elocution - உச்சரிப்புத் தோரணை, பேச்சுத் தோரணை, வாக்குச் சாதுர் யம், வாக்கலங்காரம், பேச்சலங் காரம்.

Eloquence - வாசாலகம், சொற் போக்கு, சொற்சுவை, சொல்லணி, பேச்சு வன்மை, சொல் வன்மை.

Elucidate - விளக்கு, தெளிவி, விளக்கிக் காட்டு, புரியச் செய், விரித்துரை, விளங்க வை.

Embarrass - குழப்பு, தவிக்கச் செய், வெட்கச்செய், கூச்சமுண் டாக்கு, சங்கோசப்படுத்து, திகைப் புறல்.

Embody - கட்டு, திரட்டு, ஒன்று சேர், உட்புகுத்து, கூட்டுறவாக்கு.

Embrace - கட்டிக்கொள், தழுவு, அணைத்துக்கொள், ஆலிங்கனம் செய், பற்றிக்கொள், சேர்த்துக் கொள்.

Emergency - அதி அவசரம், தவிர்க்க முடியாதது, காலந்தாழக் கூடாதது, உடன் தேவையானது.

Eminent-உயர்ந்த, மேன்மையான, சிறந்த, தகவுடைய, உன்னதமான.

Emolument - பலன், சம்பளம், கிவேதனம், வருமானம், பிரயோசனம், கொடுக்கும் கூலி, தட்சணை.

Emotional - உணர்ச்சியான, ஆவேசமான, உருக்கமான, மனங் குழைந்த, மனவெழுச்சிக்குரிய.

Emphasis - வார்த்தையழுத்தம், ஊன்றிப்பேசுதல், அழுத்தந் திருத்தம், சொல்லழுத்தம், வலியுறுத்தல்.

Empire - இராஜ்ஜியம், ஏகாதிபத்தியம், சாம்ராஜ்ஜியம்.

Empty house - காலியான கூட்டம், வெறுஞ் சபை, வெற்றிடம்.

Encore - மறுபடியும் பேச பாட கைதட்டுதல், திரும்பவும் பாட பேசக் கேட்டுக் கொள்ளல், பாராட்டு ஆரவாரம், ஆர்ப்பரித்தல்.

Encouragement - ஆதரவு, தேற்றுதல், பரிவுகாட்டல், அபயமளித்தல், தைரியமூட்டல்.

Endeavour - துணி, எத்தனி, முயற்சி செய், பாடுபடுதல்.

Enforced silence - கட்டாய மவுனம், வாய்ப்பூட்டு, வாய் கட்டப்படுதல்.

Enfranchise - தேர்தல் உரிமை, வாக்குரிமை, அரசியல் தேர்வு உரிமை, தேர்தலுக்கான சுதந்தரம்.

Engagement - அலுவல், காரியம், குறிப்பிட்ட வேலை, யுத்தம், வரித்தல், மூற்கூட்டி எண்ணிய, நிர்ணயித்த வேலை.

Enlarge - பெரிதாக்கு, அதிகப்படுத்து, விருத்திசெய், விடுதலை செய், விட்டுவிடு, விரித்துரை, கருத்தை விளக்கு.

Enormity - பாதகம், அளவு மீறுதல், மகாக்கொடுமை, மட்டற்ற, அளவுக் கதிகம், பிரமாண்டம், துராக்கிரமம்.

Enquiry - விசாரணை, சோதனை, ஆராய்ச்சி, வினவுதல், குற்ற விசாரணை, கலை ஆராய்வு.

Enterprise - முயற்சி, ஊக்கம், எடுத்த கருமம், துணிவு, அருந் தொழில், நூதன வியாபாரம், சாகசம்.

Entertainment - உபசரணை, வேடிக்கை, விநோதம், விருந்து, பொழுது போக்கு, விளையாட்டு, களியாட்டம், வேலையில் அமர்த்தல்.

Enthusiasm அபிமான உணர்ச்சி, வைராக்கியம், ஆவேசம், மனக் கிளர்ச்சி, உள்ளக் கிளர்ச்சி, மன வெழுச்சி.

Entity - உண்மை, உள்ளது, உயர்ந்தது, கணக்கில் சேர்க்கக் கூடியது, உயர்ந்த புள்ளி, மதிப்புடையது.

Entreaty - பிரார்த்தனை, வேண்டுகோள், மனு, இரத்தல், கேட்டுக் கொளல், கெஞ்சுதல்.

Enunciate - உச்சரி, சொல்லு, அறிவி, தெரிவி, கிர்த்தாரணம் செய், வியாக்கியானம் கூறு, உறுதிப்படுத்து.

Envious - பொறாமையான, அழுக்காறுடைய, வஞ்சனையான.

Epithet - அடைமொழி, பண்பை விளக்கும் சொல், உயர்மொழி, பண்புச் சொல், பட்டப் பெயர்.

Equality - சமத்துவம், சமானம், நேர், ஒப்பு, இணை, பொருத்தம், சமஉரிமை, சமநிலைமை.

Equivocate - சிலேடை, இரட்டுற மொழி, உள்ளொன்று வைத்துப் பேசு.

Era - காலக்கிரமம், நூதன காலம், புதியவாண்டு, சகாப்தம், பொன்னாள்.

Erratum - பிழை திருத்தம், எழுத்துப் பிழை, தவறு நீக்கல்.

Erudition - பாண்டித்தியம், கல்வி சாமர்த்தியம், கலை முதிர்ச்சி, இலக்கிய ஞானம், கலை ஞானம், கல்வித் திறம்.

Etiquette - சபைப் பழக்கம், சபை முறை, சடங்குமுறை, மரியாதைக் கிரமம், ஒழுங்கு முறை, கவுரவ முறை.

Evidence - வாக்குமூலம், அத்தாட்சி, பிரமாணம், திருஷ்டாந்தம், சாட்சியம்.

Evolution - கூர்தல் அறம், விரிவு, பரிணாமம், உள்ளது சிறத்தல், அபி விருத்தி, வளர்தல்.

Exaggeration - மிகைபடக் கூறுதல், அதிகப்படுத்திச் சொல்லல், உயர்த்திப் பேசுதல், பிரமாதப் படுத்தல்.

Examination - சோதனை, ஆராய்வு, பரீட்சை, தேர்வு, பரிசோதனை, விசாரணை.

Example - மாதிரி, எடுத்துக்காட்டு, உதாரணம், பின்பற்றக்கூடிய வழி, சான்று, உவமானம்.

Excellence - மேன்மை, சிரேஷ்டம், உயர்வு, உத்தமம், விசேடம், பெருமை, மேம்பாடு, சிறப்பு.

Exemplary - பின்பற்றத் தக்க, மாதிரியாகக் கொள்ளக் கூடிய, உயர்ந்த, நடவடிக்கையிற் சிறந்த, சிறப்பான, படிப்பினையான, மெச்சத்தக்க.

Exempt - நீக்கு, விலக்கு, வஜா செய், தள்ளுபடி செய், விடுவி.

Exhortation - புத்தி புகட்டல், போதனை, எச்சரிப்பு, நன்மை செய்யத் தூண்டுதல், நல்வழிப்படுத்தும் பேச்சு.

Exonerate - நிரபராதியாக்கு, பழியகற்று, குற்ற நிவர்த்தி, விடுவித்தல், குறைகளை மன்னித்தல்.

Expectation - காத்திருத்தல், எதிர்நோக்கல், நம்பிக்கையான எண்ணம், விரும்பிய நலன், வார்சு பாத்தியத்தை எதிர்பார்த்தல்.

Experiment - சோதனை, பரீட்சை, பரீட்சித்தறிந்த முடிவு, பரீட்சார்த்தம் கண்டறிதல்.

Expert - பழகின, கைதேர்ந்த, சாமர்த்தியமான, சதுரன், நிபுணன், ரசாஞானி, உயர் அறிவாளி, தொழில் ஞான முடையோன்.

Expire - முடிவு, முற்றுப்பெறுதல், இறத்தல், மூச்சொடுங்கல்.

Explanation - விளக்கம், விருத்தியுரை, வியாக்கியானம், சிறக்கக் கூறுதல், பொருள் விரித்தல், விளக்கஞ் செய்தல்.

Expound - வியாக்கியானம் செய், விரித்துக்கூறு, விளங்கச் செய், நிர்த்தாரணப் படுத்து, தெளிவாக்கு, பிரசங்கம் செய்.

Expunge - நீக்கு, விலக்கு, தள்ளுபடி செய், துடை, ஒழி, அழி, கழிவாக்கு.

Extempore - அங்கேயே பேசுகிற, தயாரிப்பில்லாத, வாய்மொழியான, மனதில் எழுந்தவாறு பேசுகிற, எழுதிப் படியாத.

Extract - சாரம், சங்கிரகம், சுருக்கம், வடித்தது, கடைந்தெடுத்தது, சத்து, கஷாயம், பகுதி.

Extraneous - புறம்பான, சாராத, விலக்கமான, ஒட்டாத, அன்னியமான, வேறுபட்ட.

Extraordinary - அசாதாரணமான, விசேஷித்த, அபூர்வ, வியப்பான, நூதனமான, விந்தையான.

Extravagance - வீண்செலவு, டாம்பீகச் செலவு, மிகைப்பட்டது, அளவு கடந்தது, வரம்பு கடந்தது, ஆராதூரித்தனம்.

Extreme - இறுதி, முடிவான, கடைசியான, எல்லைகடந்த, மிகைப் பட்ட, அதிதமான.

Exultation - களிப்பு, குதூகலம், ஆரவாரம், கர்வமான உணர்ச்சி, பெருமை யடித்துக் கொள்ளுதல், ஆர்ப்பரித்தல், வெற்றி, மகிழ்வு.

Eye witness - கண்கண்ட காட்சி, கண்ணாரக் கண்டவன், கண்டதை விண்டவன்.

Fabrication-பொய்க்கதை, முடிச்சு முடிதல், கற்பனை, இல்லாததை உண்டாக்குதல்.

Fabulous - கற்பிதமான, பொய் யான, உண்மைக்கு விரோதமான, மானசீக சிருட்டியான, நம்பத் தகாத.

Facility - இலகு, சுலபம், சௌக் யம், ஏற்பாடு, சாதகம், துணை.

Fact - நடந்த காரியம், உண்மை, உள்ள செய்தி, வர்த்தமானம், நட வடிக்கை, கருமம், தத்துவம், சத்தி யம், என்று முள்ளது, உண்மைப் பொருள்.

Faction - கலகம், கட்சி, பிரிவினை, உட்கலகம், கலவரம், கட்சி விரோ தம், அபிப்பிராய பேதம்.

Factor - குணம், விசேடம், எண் ணத்தகுந்தது, மதிப்புக் குரியது, கவனத்திற் கேற்றது, நாட்டம் செலுக்கூடியது, மூலாம்சம்.

Faculty - உணர்வு, மனோசக்தி, அந்தக்கரணம், கலையறிஞர்.

Fag - end - கழிவு, ஓய்வு காலம், கடைக்கோடி, ஓய்ந்த நிலைமை, தளர்ந்த சமயம்.

Failure - தவறு, குற்றம், இழுக்கு, தோல்வி, கடனிறுக்கத் தவறல், தேர்வுகாணமை, கோரிக்கை வழு வல்.

Fairness - அழகு, சிறப்பு, நேர் மை, தெளிவு, நியாயமுறை.

Faith - விசுவாசம், குன்று பக்தி, சிரத்தை, நம்பிக்கை, அபிமானம், கொள்கை, நேர்மை.

Fallacious - பொய்க்கோலமான, போலியான, நியாயமற்ற, நீதி யற்ற, ஒழுங்கற்ற, முறைதவறுன.

False - hood - பொய்மை, அபத் தம், கள்ளம், கரவு, இரண்டகம், புரட்டு.

Falsification - பொய்யாக்குதல், புரட்டுதல், கற்பித்தல், ஜோடித் தல், பொய்க் கணக்கு எழுதுதல்.

Famous - பிரபலமான, பிரக்கி யாதியான, புகழ்பெற்ற, நற்பெய ருடைய, பேர் பெற்ற, பிரசித்தி யான.

Fanatic - மதாபிமானி, குருட்டபி மானி, மதப்பேயன், மதப்பித்தன், உன்மத்தன், ஆவேசமானவன், மதவெறியன்.

Farce - பரியாசக்கூத்து, ஆசியக் கூத்து, சிரிப்பெழுப்பும் ஆட்டம், களியாட்டம், பாசாங்கு.

Fare-well - விடை கொடுத்தல், பிரிவுபசாரம், ஆசி மொழிதல், வழியனுப்புதல்.

Far fetched - சம்பந்தத் தொலை வான, காரிய சம்பந்த மற்ற, நெருக்கமற்ற.

Fascination - மயக்கம், மோகம், மருட்சி, பரவசம், வசியம், மோக னம், கவர்ச்சி.

Fateful - விதிவசமான, விதிக்கப் பட்ட, தலைஎழுத்தான, மரண துக்க மான, தெய்வ சம்மதமான.

Fatigue-சோர்வு, களைப்பு, தளர்வு, இளைப்பு, ஆயாசம், சிரமம்.

Fault finder - குற்றங் காண் போன், குறைகண்டு பிடிப்போன், மாசு காண்போன்.

Favourable - வசதியான, சுக மான, தயையான, ஏற்ற, சமயானு கூலமான,

Feasible - சாத்தியமானது, முடிக்கக்கூடிய, நிறைவேற்றக்கூடிய.

Feast - விருந்து, திருவிழா, பண்டிகை, உற்சவம், நோன்பு, விசேஷ தினம், விருந்து நாள்.

Feature - சாயல், முகக்குறிப்பு, உறுப்பு, அம்சம், விசேடம், அருமைப்பாடு, அழகு.

Federal - சம்பந்தப்பட்ட, சமமான ஒன்றுகூடிய, உடன்பட்ட, சகபாடியான, உறவு கொண்ட, கட்டுப்பட்ட, நேசநாட்டுக்கட்டுள்ள.

Feeling - உணர்ச்சி, மனக்கருத்து, மனவெழுச்சி, அனுதாபம், இரக்கம், சிந்தனை, ஸ்பரிசம்.

Felicitate - ஆனந்தங் கொள்ளச் செய், வாழ்த்துக்கூறு, உற்சாகப் படுத்து, களி கூறு.

Fellow citizen - தன்னகரத்தான், தன் நாட்டான், தான் பிறந்த நாட்டில் பிறந்து வளர்ந்தவன், ஒரூர் வாசி.

Fellowship - ஐக்கியம், அங்கம் வகித்தல், உடந்தையாளர், உயர் படிப்பாளி, கலைக்கழக அங்கத்தினர்.

Felony - பாதகம், காதகம், துரோகம், சதி, கொடுமை, படு தீங்கு, கடுங்குற்றம்.

Feminine - பெண்மையான, பெண்ணீர்மை, பெண்களுக்குரிய, பெண்களுக் கடுத்த, பெண்பால், மென்மையான, கடின சித்தமற்ற, ஆண்மையற்ற.

Fencing - வேலி, அத்து, அரண், சிலம்பவித்தை, குத்துச் சண்டையில் தற்காப்பு, பேச்சுச் சிலம்பம், பிடி கொடுக்காதிருத்தல், தடைச் சுவர்.

Fertile imagination - வளமான மனோகற்பனை, மிகுயூகம், விரிவான கற்பனா சக்தி.

Fervent - விநயமான, பக்தியான, உள்ளும் புறமு மொத்த, சிந்தையிற் படிந்த, இருதய பூர்வமான.

Festival - பண்டிகை, திரு விழா, உற்சவம், திருநாள், நன்னாள், விருந்து.

Fickle - நிலையற்ற, சஞ்சலமான, உறுதியற்ற, திடமற்ற, சபலமான.

Fidelity - பக்தி, விசுவாசம், நாணயம், நேர்மை, உண்மை, நிறை, கற்பு.

Fighting speech - தாக்கும் பேச்சு, பேச்சுப்போர், போராட்டப்பேச்சு, வீரப்பேச்சு.

Figurative speech - உருவகமான பேச்சு, உவமை கொண்ட பேச்சு, இலக்கணையான பேச்சு, அலங்காரப் பேச்சு.

Financial - பண சம்பந்தமான, அரசிறைக்குரிய, நிதிக்குரிய, பொருள் சம்பந்தமான.

Finished speaker - தேறிய பேச்சாளர், அழகிய பிரசங்கி, முற்றும் தேர்ந்த நாவலர், தீர்ந்த பேச்சாளர், கடைந்தெடுத்த நாவலர், பேச்சுக் கரை கண்டவர், பேச்சழகர்.

Finishing touch - மெருகிடுதல், தீர்மான மாக்குதல், முடிவான வேலை, இறுதிவேலைப்பாடு, முடிக்கும் கைத்திறன்.

Firy speech - வெகுண்ட பேச்சு, நெருப்புப் பொறி பறக்கும் பேச்சு, கனன்றெழும் பேச்சு.

Firmness - உறுதிப்பாடு, நிலையாக இருத்தல், திடம், வைராக்கியம், மன உறுதி, சலன மின்மை.

Fitting occasion-ஏற்ற தருணம், தகுதியான வாய்ப்பு, பொருத்தமான தறுவாய், பக்குவ சமயம்.

Flatteringly - இச்சகமாக, முகஸ்துதியாக, இங்கிதமாக, புகழ்ச்சியாய், வாக்குபசாரமாய்.

Flawless argument - பழுதற்ற விவாதம், குற்றமற்ற தர்க்கம், மாசற்ற வாக்குவாதம்.

Flexible-வளையக்கூடிய, இசையக் கூடிய, மடியத்தக்க, ஒத்துப் போகக்கூடிய, இழுத்த இழுப்புக்கு வரக்கூடிய, நெளியக்கூடிய.

Flippant - சாதுர்யமான, சாமர்த் தியமான, வாசாலகமான, குறும் பான, வாய்த்துடிப்பான, வாயாடி யான.

Flourish - சோபை, அலங்காரம், செழிப்பு, வளம், வாழ்வு, வீசு, சுழற்று, சிங்காரி.

Fluctuation-உயர்வு தாழ்வு, நிலை யற்ற தன்மை, உறுதியற்றிருத்தல் நிலவரம் இன்மை.

Fluent speech - வாசாலகமான பேச்சு, சாதுர்யமான சொற் பொழிவு, சொல்லணி பெற்ற சொற்பெருக்கு, தங்குதடையற்ற பேச்சு, சரளமான பேச்சு.

Foolish - முட்டாள்தனமான, மூட மான, மதியற்ற, மௌட்டீகமான.

Footstep - அடிச்சுவடு, பின்பற்றி நடத்தல், ஒருவர் நடந்த வழிபற்று தல், காலடி.

Forbearance - பொறுமை, சாந் தம், அடக்கம், மன்னிக்கும் தன்மை, சகிப்புத்தன்மை.

Forbidding - மறியலான, பயங் கரமான, வெறுப்பான, சகிக்க முடி யாத, தவிர்க்கத்தக்க, கொடூரமான.

Fore fathers - முன்னோர், ஆன் றோர், பூர்வீகர், மூதாதையர்

Forfeiture - இழத்தல், தண்டம், நஷ்டம், பறிமுதல்

Forgather - சந்தித்தல், முன்னால் கூடுதல், முற்கூட்டிச் சேர்தல், ஒருங்கு சேர்தல்.

Formal - ஒழுங்குப்பாடான, வழக்க மான, ஒப்புரவான, முறைமை தழுவிய, வாலாயமான.

Forth coming வெளிவருதல், முன்வரக்கூடிய, வருகிற, நேரக் கூடிய, சம்பவிக்கிற.

Forth with - உடனே, தாமத மின்றி, தட்சணமே, அக்கணமே, அப்பொழுதே, அவ்வேளையிலே.

Foundation - ஆதாரம், கடைக் கால், அடிப்படை, அடி, மூலம்.

Fountain head - நீரூற்று, ஊற் றுக்கண், கீழூற்று, நதிமூலம்.

Fragmentary - துண்டான, கண்டமான, சிதைவான, வெட் டுண்ட.

Fraud-கபடம், மோசடி, ஏமாற்றம் வஞ்சகம், சூதுவாது, பித்தலாட் டம், எத்துதல், வய்த்தல்.

Freedom - விடுதலை, சுயேச்சை, சுவாதீனம், விடுபடுதல்.

Friendship - உறவு, நேசம், நட்பு, அந்யோந்யம், தோழமை, நட்புறவு.

Frown - கோபம், வெகுளி முகச் சுளிப்பு, முகக்கோணல், கடுகடுப்பு, வெடுவெடுப்பு, சிடுசிடுப்பு, முகங் கடுத்தல், சீற்றம்,

Fruition - நற்பலன், விளைவு, பலாபலன், நல்விளைவு பிரயோ சனம், கனிதல், காரியசித்தி.

Frustrate - காட்டிக்கொடு, விக் கினம் செய், சிதறச்செய், வெட்டி விடு, இடையூறு செய், இடுக்கண் விளை.

Fundamental · மூலாதாரமான, மூலகாரணமான, அடிப்படையான, வித்தான.

Furious - கடுமையான, மூர்க்க மான, ஆவேசமான, மிக்க கோப மான, கனலுமிழும்.

Futile - பலனற்ற, வியர்த்தமான, உதவாத, கையாலாகாத.

Future - வருங்காலம், எதிர்காலம், மறுமை, பரம், பிற்கால வாழ்வு.

Gag - வாய்க்கட்டு, வாய்ப்பூட்டு, வாயடைப்பு, திணித்து வைத்தல், பேசாமற் செய்தல்.

Gaiety - குதூகலம், ஆனந்தம், மகிழ்ச்சி, களிப்பு, வேடிக்கை, கும்மாளம், எக்களிப்பு.

Gainsay - எதிர்ப்பு, மறுத்துரை, நிராகரி, அதிக்கிரமித்துப் பேசல், தர்க்கித்தல்.

Gallantry - வீரம், பெண்கள் மாட்டுப்பரிவு, ஆண்மை, பராக்கிரமம்.

Gallery - மேற்றளம், படிவரிசைத் தளம், சித்திரக்கூடம், ஆளோடி.

Garland - மாலை, தொங்கல், பூமாலை, தொடையல், தெரியல், மலர்மாலை.

Garrulous - அதிகப் பிரசங்க, ஓயாமற் பேசுகிற, வாயாடுகிற தொணதொணத்த, வல்வாயான, தோல்வாய் கொண்ட.

Gathering - கூட்டம், கூடுதல், ஒருங்கே சேர்தல், உல்லாசக்குழு, பொறுக்கல், பறித்தல்.

Genealogical - வம்சாவளி, சந்ததிவழி, உற்பத்திக் கிரமம், தலைமுறை வரிசை.

Generosity - உதாரகுணம், தயாளம், பெரும்போக்கு, தயை, பெருந்தன்மை, ஈகைக்குணம், மன இளக்கம்.

Gentleman - சற்குணன், துரைமகன், சீமான், பெருமகன், பிரபு, கனவான், கண்ணியன் செந்நெறியர், தூங்கன், சீரியன்.

Genuine - கலப்பற்ற, பரிசுத்தமான, தெள்ளிய, உள்ளும் புறமுமொத்த, கபடமற்ற, களங்கமற்ற.

Gesture - சைகை, உணர்ச்சி பாவம், சாடை, அபிநயம், மன உணர்ச்சியால் உண்டாகும் மெய்ச் சேட்டை.

Giant intellect - பேரறிவு, அபார மூளை, பெரும் புத்தி, மூதறிவு, அசாதாரண ஞானம்.

Glance - பார்வை, கடைக்கண்ணோட்டம், மேலெழுந்த நோக்கம்.

Glaring fault - பகிரங்கமான பிழை, வெட்ட வெளிச்சமான குற்றம், உலகறியும் பிசகு, பிரசித்தமான தவறு.

Glib tongued - பெருவாயான, வாயாடியான, பெரும் பொய்யனான, வாய்ப்பட்டியான.

Glory - மகிமை, பெருமை, மாட்சி, மாண்பு, கீர்த்தி, புகழ், பிரதாபம், பிரபலம்.

Goal - இலக்கு, இலட்சியம், குறிக்கோள், முடிவு, எல்லைக்குறி.

Good nature - உத்தமகுணம், நற்குணம், நற்சுபாவம், இரங்கும் குணம், பெருந்தகைமை, சத்துவ குணம்.

Government - அரசியல், சர்க்கார், துரைத்தனம், அரசாங்கம், இராஜரீகம், ஆட்சி, நாயகம்.

Graceful speech - அலங்கார மான பேச்சு, கம்பீரமான பேச்சு, அழகான பேச்சு, இனிய பேச்சு, செவிக்கினிய பேச்சு.

Graduate - அருங்கலா வித்தகன், பட்டதாரி, கலைவிநோதன், சர்வ கலாசாலைப் பட்டம் பெற்றோன், விற்பன்னன்.

Grammarian - இலக்கணி, இலக்கண வித்வான், இலக்கண முறையுணர்ந்தோன், வியாகரணி, சிரமமறிவோன்.

Grandiloquence - வீம்புப் பேச்சு, பிரபுடீக வார்த்தை, வார்த்தையலங்காரம், நயம்பட்ட உரை, பகட்டுப் பேச்சு.

Graphic description - வார்த்தைச் சித்திரம், சித்திரப்பேச்சு, வருணனை, கற்பனாலங்காரம், வார்த்தை அலங்காரம்.

Gratitude - செய்ந்நன்றி, உபகாரம் பேணுதல், நன்றி நினைத்தல், நன்றியறிவு.

Greeting - வந்தனை, வாழ்த்து, அளவளாவல், முகமன், அஞ்சலி, வணங்கல்.

Grievance-மனக்குறை, ஆயாசம், துன்பம், கிலேசம், மனச்சலிப்பு, மனக்கவலை, புகார்.

Grudge - உட்பகை, வஞ்சம், பொறாமை, மனப்புகைச்சல், வயிற்றெரிச்சல், இஷ்டமில்லாமல் கொடுத்தல்.

Guarantee - உத்தரவாதம், பிணை நிற்றல், பிணைகொடு, உறுதிப்படுத்து.

Guest - விருந்தாளி, அதிதி, உபசரிக்கப்படுவோன், விருந்தினர், புதியர்.

Guilty conscience-குற்றமுள்ள மனச்சாட்சி, குற்றமுள்ள நெஞ்சு, குறுகுறுத்த நெஞ்சு, வஞ்சநெஞ்சம்.

Habitual - வழக்கமான, வாலாயமான, வாடிக்கையான, சுபாவத்தோடிணங்கிய, இயற்கையோடியைந்த, மாமூலான.

Hair spliting - மயிர் பிளத்தல், கடுகு போகுமிடம் ஆராய்தல், அணுவை மாமேரு வாக்குதல்.

Half learned - அரைப்படிப்புள்ள, கற்றும் கல்லாத, குறைப் படிப்புள்ள, அரைவாயன்.

Halting speech - இருமனப்பட்ட பேச்சு, ஸ்திரமற்ற பேச்சு, தயக்கமான பேச்சு, தடைப்படும் பேச்சு.

Handsome - வடிவுள்ள, அழகான, எழிலான, பார்வையான, லாவண்யமான, வசீகரமான, தாராளமான.

Harmonious - இன்னிசையான, இனிய, மனோரம்மியமான, இணக்கமான, கூடி இழைதலான.

Harshness - கொடுமை, கடுமை, வெடுவெடுப்பு, கடுஞ்சொல், கடூரம், காரமான.

Haste-துரிதம், சீக்கிரம், அவசரம், தீவிரம், ஆத்திரம், பதட்டம், வேகம், விரைதல், படபடப்பு.

Haughtiness - அகந்தை, அகம்பாவம், அகங்காரம், இறுமாப்பு, கர்வம்.

Headman-நாட்டாண்மைக்காரன், தலைவன், பெரியதனக்காரன், கார்பார், கொலையாளி.

Head quarters-சமஸ்தானத் தலைநகர், பிரதான இருப்பிடம், மூலஸ்தலம், முக்கிய நகரம், தலைமை நகரம்.

Head strong - முட்டாள்தனமான, முரடான, பிடிவாதமான, குதர்க்கமான, இரும்புத்தலையான.

Hearers - கேட்போர், சபையோர், அரங்குளோர், செவிமடுப்போர்.

Heartfelt - மனப்பூர்ணமான, பரமதிருப்தியான, உள்ளம் நிறைந்த, உள்ளங்கனிந்த, உள்ளூற அன்புடைய.

Helpful - உபயோகமான, உதவியான, துணையான, ஆதரவான.

Hereditary - பரம்பரை உரிமையான, பிதிரார்ஜித, காணியாட்சி, தலைமுறை தத்துவ, பிறப்புரிமையான, வாழையடி வாழைபோன்ற, வழித்தோன்றிய.

Hesitancy - இருமனம், தயக்கம், தடை, ஐயப்பாடு, தங்குதல்.

High birth - உயர்பிறப்பு, உயர்குடித்தமர், பெருங்குடிப்பிறந்தோர், பெருமக்கள்.

Hinderance - தடங்கல், விக்கினம், தடுப்பு, குந்தகம், மறியல், குறுக்கிடல்.

Historical facts - சரித்திர பூர்வமான உண்மைகள், சரித்திர நிகழ்ச்சிகள், சரித்திரக் கூற்றுக்கள், பண்டைக்கால உண்மைகள்.

Hoard - குவி, திரட்டு, சேகரி, புதையல், பதுக்குதல்.

Home rule - சுயராஜ்யம், நாட்டாட்சி, சொந்த ஆட்சி, தன்னரசு.

Honesty - யதார்த்தம், கண்ணியம், உண்மைநெறி, யோக்கியப் பொறுப்பு, நல்ஒழுக்கம்.

Honorary - கௌரவ, நிவேதனமில்லாத, சம்பளமற்ற, பிரதிப் பிரயோசனமில்லாத.

Honourable - கனமான, கண்ணியமிக்க, கௌரவமிக்க, பூஜிதையான, மானமுள்ள.

Honours - விருதுக்கள், பட்டங்கள், பதவிகள், கௌரவப்பட்டங்கள்.

Hospitality - உபசாரம், உபசரணை, விருந்தோம்பல், இடமளித்தல்.

Hostel - தங்குமிடம், சத்திரம், விடுதி, மாணவர் இல்லம், உண்டிச்சாலை.

House of parliament - பாராளு மன்றம், மாபெரும்மக்கள் சபை.

Hostile - விரோதமான, எதிரிடையான, பகைமையான, முரணான.

Humble - தாழ்மையான, பணிவுள்ள, எளிய.

Humorous speech - தமாஷான பேச்சு, விகடமான பேச்சு, நகைச்சுவையான பேச்சு, நளினமான பேச்சு.

Hypnotic - வசீகரமான, மயக்கத்தக்க, வயப்படுத்தக்கூடிய, யோகநித்திரைக்குரிய, புலன்களோய்ந்த, மனமொடுங்கிய, ஸ்தம்பன.

Ideas - எண்ணங்கள், கருத்துக்கள், கற்பனைகள், நினைவுகள், அபிப்பிராயங்கள்.

Idiom - மொழிப்போக்கு, பாஷைநடை, சொல்லணி, மொழிக்கோவை.

Ignoble - இழிவான, ஈனமான, மானமற்ற, அபக்கியாதியான, அகௌரவமான.

Ignorance - அறியாமை, பேதைமை அஞ்ஞானம், மூடம், ஞான சூனியம்.

Ignore - கண்டு கொள்ளாதே, அசட்டை செய், பொருட்படுத்தாதே, லட்சியம் வையாதே, புறக்கணி.

Illegal - நீதியற்ற, நியாய மற்ற, சட்ட விரோதமான, அநியாயமான.

Illegible - படிக்கமுடியாத, சுலபத்தில் புரியாத, சிக்கலான, தெளிவற்ற, கிருக்கெழுத்தான.

Illegitimate - ஒழுக்கவழுவான, முறை கேடான, சோர புத்திர, சந்ததிகேடான, இரத்தசுத்தமற்ற, வைப்பு வழியுதித்த.

Illiterate - கல்லாத, படியாத, எழுத்து வாசனையற்ற, மூடத்தனமான.

Illogical - நியாய விலக்கணத்துக்கு விலக்கான, நியாய வாதத்திற்குப் பொருந்தாத, தர்க்க லட்சணமற்ற, குதர்க்கமான.

Illusion - மயக்கம், இந்திரசாலம், மாயை, வெப்பு, கண்கட்டு.

Illustrate - ஒப்பனைசெய், தெளிவி, திருட்டாந்தப் படுத்து, படமெழுது, எடுத்துக்காட்டு, சித்திரி, விளக்கப் படுத்து.

Illustrious - பிரபலமான, கீர்த்தியுள்ள, சிறப்பான, மகிமையுள்ள, மேதக்க, புகழ்பெற்ற.

Imagination -மனோபாவம், மனக் கற்பனை, கற்பனுசக்தி, நினைவுப் பெருக்கம், சிந்தனையோட்டம், சிந்தனு சக்தி.

Immemorial-நினைவிற் கெட்டாத, நினைவு கடந்த, அநாதியான, தொன்று தொட்ட, காலாகாலங் கடந்த.

Immortal - அழிவில்லாத, சாக்காடு அற்ற, நிரந்தரமான, இறந்து படாத, செத்தும் சாகாத, புகழுடம் புடைய.

Impartial - பாரபட்சமற்ற, நீதியுள்ள, நடுநிலைமையான, ஓரமில்லாத, வஞ்சனையில்லாத.

Impeach - குற்றஞ்சாட்டு, அவமதி, பழிசுமத்து, இடித்துரை.

Imperative - கடுமையான, கீழ்ப்படிய வேண்டிய, சட்டாயமான, தவிர்க்கமுடியாத, நிர்த்தாட்சண்யமான, அவசியமான.

Impertinent-வாய்க்கொழுப்பான, அடக்கமில்லாத, மனத்திமிரான, பதட்டமான, அதிகப்பிரசங்கமான.

Imperturbable - கலங்காத, அசைவற்ற, தடுமாற்ற மற்ற, வெளிக்காட்டாத, முகத்தில் ஈயாடாத.

Implication - உட்படுத்துதல், உடந்தை யாக்குதல், பிணைப்படுத்தல், ஊகை, உட்பொருள், உட்கருத்து.

Impolite - அவமரியாதையான, தடித்தனமான, யோக்கிய மற்ற, குணக்கேடான.

Impressive speech - அழுத்தமான பேச்சு, கருத்துள்ள பேச்சு, ஆணித்தரமான பேச்சு, சிந்தனை கொண்ட பேச்சு.

Imprudent - புத்திதாழ்ச்சியான, அவிவேகமான, ஆராய் வின்மையான, முன்பின் யோசனையற்ற, மூடத்தனமான.

Impodent - குறும்பான, வெட்கங் கெட்ட, மடத்தனமான, திமிரான, யோக்கியமற்ற.

Inadequate-குறையான, போதாத, பூர்த்தியற்ற, பற்றும் பற்றாத.

Inadmissible -ஏற்கத்தகாத, இடங் கொடுக்கக்கூடாத, ஒப்பமுடியாத, ஏற்கவொண்ணாத, சேர்க்க முடியாத.

Inaudible கேளாத, காதில்விழாத, சப்தக்குறைவான, ஓசைப் பொலிவற்ற, செவிப்புலனுக் கெட்டாத, ஈனக்குரலான.

Inauguration - பட்டஞ் சூட்டு, ஆரம்பவிழா, பட்டங்கொடு, திறப்பு விழா, துவக்கம்செய்தல், தொடங்குதல், பிரதிஷ்டை.

Inauspicious-அமங்கலமான, அசுபமான, சகுனக்கேடான, தீமையான.

Incapability - இயலாமை, முடியாமை, கையாலாகாமை, சக்தியின்மை, கூடாமை.

Inception - கருக்கொள்ளல், தொடக்கம், ஆதி, தோற்றம், உற்பத்தி, உருக்கொள்ளல்.

Incompetent - ஒன்றுக்கும் உதவாத, தாழ்ச்சியான, அசக்தமான, காரியத்தைச் சாதிக்க முடியாத, தகுதியற்ற, திறனற்ற, கையாலாகாத.

Incomprehensible - அறியொணுமை, அதீதம், அறிவுக்கெட்டாத, புரியாத, விளங்காத, பொருள் அறியக்கூடாத.

Incredible - நம்பக்கூடாத, ஐயமான, சமுசயமான.

Independence - சுதந்தரம், சுயேச்சை, விடுதலை, சுவாதீனம், தன்னிச்சை, தான்றோன்றித்தனம், பந்தமின்மை.

Index - அடையாளம், குறியீடு, அட்டவணை, அகக்குறிப்பு.

Indifference - உபேட்சை, உதாசீனம், வழவழப்பு, பற்றில்லாமை, கவலையீனம்.

Indigenous - சுதேச, உள்நாட்டு, பூர்வீக, பாரம்பரிய, பூர்வகாலத்திய.

Indignation - எரிச்சல், கோபம், வெகுளி, மனக்கொந்தளிப்பு, வெஞ்சினம்.

Indiscretion - மதியீனம், பேதைமதி, பகுத்தறிவின்மை, அவிவேகம்.

Individuality - மனுஷத்தனம், தனிப்பட்ட உயர்வு, சொந்த குணாதிசயம்.

Industrious - சுறுசுறுப்புள்ள, சோம்பலற்ற, கருமத்திலே கண்ணுன, பாட்டாளியான, உழைப்பாளியான, கைத்தொழில் சம்பந்தமாகப் பாடுபடுகிற, நெற்றிவியர்வை நிலத்தில் விழ வேலை செய்கிற.

Inevitable - விலக்கவொண்ணுத, தவிர்க்க முடியாத, தப்பாத, தவருத, வந்தே தீருகிற, வேண்டாமல் வருகிற, விரும்பி அழையாத.

Influence - செல்வாக்கு, சிபார்சு, இயக்கும் சக்தி, அதிகாரம், ஆட்சி.

Ingenious - விவேகமான, யூகமுள்ள, சமத்காரமான, நூதன, சூழ்ச்சியான.

Inherent - இயல்பான, உடன்பிறந்த, உள்ளூறிய, புறத்திற்குப் புலனுகாத, இயற்கை தர்மமான.

Inscription-சாசனம், கல்வெட்டு, செப்பேடு.

Institution-ஸ்தாபனம், அமைப்பு, ஏற்பாடு, வித்தியாசாலை, சங்கம், நிலையம், பாடசாலை, அறச்சாலை.

Interference - இடையே தலையிடுதல், குறுக்கிடல், இடைமறித்தல் பிறர் காரியத்தில் பிரவேசித்தல், தடுத்தல், அழையாது பேசுதல்.

Interim Government - மத்தியகால சர்க்கார், இடைக்கால சர்க்கார்.

Interpellation - கேள்வி, வினு, உசாவுதல், கேள்வி கேட்டல், ஐயவினு, அறிவினு, இடைக்கேள்வி.

Interpretation - உரை, வியாக்கியானம், அர்த்தம், பாஷியம், மொழிபெயர்த்தல்.

Interview - தரிசனம், கண்டு பேசுதல், பேட்டி, உரையாடல்.

Intonation - தொனி, நாதம், ஒலி, குரல்பேதம், ஏறுதல் சமனிசை இறங்குதல் ஆகிய குரல்மாற்றம்.

Invention - சூழ்ச்சி, கற்பனுசக்தி, கண்டுபிடித்தல், நூதனமாக இயற்றுதல், சிருட்டி இல்லாத ஒன்றை உண்டாக்கல்.

Investigation - ஆராய்வு, நுட்ப விசாரணை, விசாரம், ஆழ்ந்து நோக்கல், கிளறுதல், மூலகாரணத்தைக் கிண்டுதல்.

Invitation - அழைப்பு, திருமுகம், வேண்டுகோள்.

Ironical - விகடாலங்காரம், கிண்டல், இகழ்ச்சியான, புகழ்ல்போல இகழ்தல், பரிகாச முறையான.

Irrelevency - பொருந்தாமை, ஒவ்வாமை, குதர்க்கம், இணைப்பில்லாத, சம்பந்தமற்ற.

Jail - காராக்கிரகம், சிறை, காவற்கூடம், சிறைச்சாலை.

Jealous - பொருமையுள்ள, சமுசயமுள்ள, சந்தேகமான.

Jeer - பரிகாசம், கேலி, சரசம், கிண்டல்.

Journal-பத்திரிகை, வர்த்தமானத்தாள், குறிப்புத் திரட்டு.

Jubilee - உற்சவம், கொண்டாட்டம், விழா, நினைவுநாள்.

Judge - நீதிபதி, நிதானித்து யூகி, தீர்மானி, தீர்ப்பளிப்போன், நிர்ணயி.

Jumble - கலந்த, கலவைக் கீரை போன்ற, தடுமாற்றமான, ஒழுங்கு தவறிய நிலை, குழப்பிய, சிதைவான.

Juncture - சந்தி, சந்தர்ப்பம், தறுவாய், ஏற்ற தருணம்.

Jurisdiction - அதிகார வட்டம், ஆணை செல்லுமிடம், நியாயாதிக்கம், அதிகாரவரை, ஆதிக்க எல்லை.

Juror - மத்தியஸ்தன், நடுவன், பஞ்சாயத்து, வழக்குத் தீர்ப்போன்.

Justice - நீதி, நியாயம், தர்ம நியாயம், ஓரஞ் சொல்லாமை, நீதிபதி.

Justification - நியாயமென்னல், நீதியாக்குதல், சரியெனப் பகரல், ஒழுங்கென நிரூபித்தல், தங்கோள் நிறுத்தல்.

Keenness - கூர்மை, கருக்கு, நுட்பம்.

Key stone - ஆப்புக் கல், பொறுப்புக் கல், நெற்றிக் கல், மையக் கல்.

Kind hearted - தயையான, பொறை நிறைந்த, தாட்சண்யமான, பட்சமுள்ள, உள்ளன்புள்ள, இளக்க மனமுடைய.

Kingdom - இராச்சியம், அரசு, தாதுக்கணம், தாது ராசி, தாதுப் பொருள் வர்க்கம், இராஜதானி, தேசம்.

Kinsman-உறவோன், சுற்றத்தான், இனத்தான், சொந்தக்காரன்.

Knack - சாமர்த்தியம், சமத்காரம், கைத்திறம், சாகசம், திறன், அபூர்வ சக்தி.

Knave - வஞ்சகன், கள்ளன், குத்திரன், அயோக்கியன், படுக்காளி.

Kneel - முழந்தாளிடு, பணி, மண்டியிடு, வணக்கம் செலுத்தல்.

Knight hood - உயரிய பட்டம், வீரப்பட்டம், வீரத்தன்மையைக் குறிக்கும் ஆங்கில அரசாங்கப் பட்டம்.

Knowledge - விவேகம், ஞானம், அறிவுத்திறம், கூர்மதி.

Laboratory - ரசாயன சாலை, பரீட்சை சாலை, ஆராய்ச்சி நிலையம், சோதனைச் சாலை.

Labour party - தொழிற்கட்சி, தொழில் தொகுதி, கைவினைஞர் பகுதி

Labour classes - தொழில் வகுப்பார், பாட்டாளி மக்கள், கூலி வேலைக்காரர்கள்.

Laconical - சுருக்கமான, ஒற்றை வார்த்தையான, சுருங்கச் சொல்லுகிற, ஒரேமொழி.

Lamentation - புலம்பல், பிரலாபம், ஓலம், அரற்றல், அழுதல், துக்கித்தல்.

Land lord-நிலச்சுவான்தார், மனைக்குடையோன், வீட்டுச் சொந்தக்காரன், முதலாளி, சுகஜீவனவாசி.

Language-மொழி, பேச்சு, வசன நடை, பாஷை நடை, மொழிப் போக்கு.

Law abiding - சட்டத்திற் கடங்கிய, விதிக்கிரமத்திற் கஞ்சிய, நீதியை யடுத்த, நியாய வழியில் நிற்கும்.

Lawyer - நியாயவாதி, வழக்கறிஞர், வக்கீல், நீதிவாதி, சட்டஞானி, சட்டவாதி.

Lay man - சாதாரண மனிதன், ஏதுமறியாதவன், விஷய முணராதவன், புல்லறிவாளன், பாமரன்.

Leaders - தலைவர்கள், வழிகாட்டுவோர், அதிபர்கள், நாட்டாண்மைக்காரர்கள்.

Leaflets - துண்டுப் பிரசுரங்கள், விளம்பரங்கள், சிறு வெளியீடுகள், துணுக்குப் பத்திரிகைகள்.

League - சங்கம், பந்துக்கட்டு, சாம்பிரதாயக்கட்டு, உறவினர் சங்கம்.

Leave taking - விடைபெற்றுக் கொள்ளல், உத்தரவு வாங்கிக் கொள்ளுதல், அநுமதியுடன் பிரிதல்.

Lecture - சொற்பெருக்கு, சொற்பொழிவு, விரிவுரை, பிரசங்கம், உபந்நியாசம்.

Legislative assembly - சட்டநிரூபண சபை, சட்டசபை, கீழ்ச் சபை, மக்கள் மன்றம்.

Lexicon - அகராதி, நிகண்டு, சொற்பொருள் மாலை, மொழிச்சங்கிரகம், நூல் விரிவுரை, மொழிஇலக்கணம், உரை விளக்க நூல், அபிதான மஞ்சரி.

Libellous - குற்றஞ் சாட்டுகிற, பழிச்சொல்லான, தூற்றுகிற, அவதூறான, மான நஷ்டத்திற்குரிய.

Liberal - தாராளமான, உதாரமான, ஈகையான, கொடைத் தன்மை பொருந்திய, தியாகமான.

Liberty - சுதந்தரம், விடுதலை, சுயேச்சை, இச்சா சுதந்தரம், கட்டுப்படாமை.

Lifetime - ஆயுள் காலம், வாழ்நாள், பிழைத்தநாள், ஜீவிய பரியந்தம், தலைமுறை.

Light hearted - உல்லாசமான, மகிழ்ச்சியான, கவலையற்ற, மனம் நெகிழாத.

Literature - இலக்கியம், கலைஞானம், தொன்னூல், காவியம், இதிகாசம், பழம்நூல்கள், கலைப்பண்பு.

Living - பிழைப்பு, சீவனம், வயிற்றுப்பாடு, வாழ்க்கை, உயிரோடிருத்தல், வாழ்நாள் கழித்தல், வாழ்க்கைத்தரம்.

Locution - பேச்சழகு, பேச்சலங்காரம், அழகுப்படப் பேசுதல்.

Logic - நியாய விலக்கணம், தர்க்க நீதி, நீதிவாதம், தர்க்கவாதம்.

Loyalty - பக்தி, அரசபக்தி, ராஜ விஸ்வாசம், வினய விஸ்வாசம்.

Lucid - தெளிவான, துலக்கமான, வெளிப்படையான, எளிதில்புரியக் கூடிய.

Lucrative - ஆதாயமுள்ள, வருமானம் தரக்கூடிய, லாபகரமான.

Luke warm - இளஞ்சூடு, மந்தோற்சாகம், வெது வெதுப்பு, போதிய அக்கறையின்மை, ஏனோதானோ வென்றிருத்தல், பட்டும் படாத உற்சாகம்.

Luminous - பிரகாசமுள்ள, வெளிச்சமான, பளிச்சென் றொளிரும், காந்தியான, ஒளிதரக்கூடிய, சுடர்விடுகிற.

Lustre - ஒளி, சுடர், பிரகாசம், சோதி, காந்தி, பள பளப்பு, மினு மினுப்பு.

Luxurious - செல்வமுள்ள, பெருவாழ்வான, சொகுசான, இன்பம் பொருந்திய.

Mace - அதிகாரச் சின்னம், எடுபிடிக் கோல், மாத்திரைக் கோல், ஆலவட்டம்.

Machination - உபாயம், தந்திரம், சூழ்ச்சி, சூத்திரம், சாணக்கியம், படுமுயற்சி.

Magazine - சமாச்சாரப் பத்திரிகை, ஆயுதச் சாலை, வெடி மருந்துக் கிடங்கு, களஞ்சியம்.

Magnanimity - மகத்துவம், மாட்சிமை, பெருந்தகைமை, கேண்மை, கடாட்சம், பெரு நோக்கு, உயர் மனப்பான்மை, கௌரவ மான போக்கு.

Magnificient - மகத்துவமான, சிறப்பான, அலங்காரமான, விசித்திரமான.

Magnify - பெரிதாக்கு, உயர்த்திப் பாராட்டு, சிறப்பி, பெருக்கச்செய், பூதக்கண்ணாடி கொண்டு சிறிய உருவத்தைப் பெருக்கல்.

Maiden speech - கன்னிப்பேச்சு, முதல்மேடைப்பேச்சு, பேரவையில் ஒருவர் முதல் முதல் பேசும் பேச்சு.

Majestic - கம்பீரமான, அரசருக் குரிய, இராஜலட்சணமான், ஒய்யார மான, இராஜகம்பீர.

Majority - பெரும்பான்மையோர், வயதுவந்த, பெரும்பாலான, தக்க பருவமுடைய, அதிகவாக்கு.

Malicious - பகைமையுள்ள, வஞ் சனையான, குரோதமுள்ள, காழ்ப் பான, சதியான.

Manifeto - பிரகடனப் பத்திரம், வேண்டுகோள், அறிக்கை, விளம் பரம், தேர்வு விண்ணப்பம்.

Manuscript - கையேடு, கையெ ழுத்துப் பிரதி, ஏட்டுச்சுவடி, அச்சி டாதது, இலிகிதம்.

Master builder - சிற்பாசிரியன், அற்புதன், கட்டிடநிபுணன், பெருந் தச்சன், பேரோவியன், ஓவியநூல் நிபுணன்.

Match - பொருத்தம், சம்பந்தம், இணக்கம், தீக்குச்சி, ஜதை, ஜோடி செய்வித்தல்.

Mature consideration- பழுத்த யோசனை, தீர்க்காலோசனை, முதிர்ந்த கருத்து.

Maximum - பெருந்தொகை, அதி கப்படியான, பரிமாணமிக்க, உச்ச மான.

Meaning - அர்த்தம், பொருள், கருத்து, சொற் பயன், சொற் கருத்து, பொருட்சுவை.

Measures - திட்டங்கள், ஏற்பாடு கள், வரையறைகள், நிபந்தனைகள், சாதனங்கள், உபாயங்கள்.

Meeting place - கூடுமிடம், அவை, சபாமண்டபம், பேசுமிடம், சந்திப்பு இடம்.

Meloncholy - மனவருத்தமான, மனவாட்டமான, விசனமான, துக்கமான, சோகமான, மனக் கிலேசமான.

Melodious - இனிய, இசைபொருந் திய, சுக சாரீர, செவிக்கினிய.

Member-அங்கத்தினர், உறுப்பினர், அவையினர்.

Memoir - சரிதை, சரித்திரக் குறிப்பு, எழுதி வைத்தல், வாழ்க் கைக் குறிப்பு, தினக்குறிப்பு.

Memorable - நினைக்கத்தக்க, நினை விற் பதிந்துள்ள, என்றும் மறவாத, மிக முக்கியம் வாய்ந்த.

Memorandum - யாதாஸ்து, நினை வூட்டுப் பத்திரம், வேண்டுகோள் பத்திரம், குறிப்பேடு, அறிக்கை.

Memorial - விஞ்ஞாபனம், மனு, விண்ணப்பம், வேண்டுகோள் பத் திரம், ஞாபகார்த்தச் சின்னம், யாதாஸ்து.

Memory - நினைவு, ஞாபகம், கருத்து, சிந்தை, அவதானம், அறி வுத் திறம், கருவிலிறுத்தல்.

Mercenary - கைக்கூலியான, இலாப இச்சையுள்ள, கூலிக்கான, கூலிக்கு மாரடிக்கிற, விலைக்குத் தம்மை உட்டுபடுத்துகிற.

Meritorious - புகழ்ச்சியான, பிர பலமிக்க, வீரதீர பராக்கிரமமான, பேர்பெற்ற, மகா உன்னதம் வாய்ந்த.

Method - வகை, விதம், மாதிரி, வழிவகை, செய்ந்நேர்த்தி, கிரமம்.

Military - இராணுவம், படை, சேனை, சைனியம், தானை, யுத்தத் திற்குரிய, யுத்த சம்பந்தமான, இராணுவ சம்பந்தமான.

Minister - அமைச்சர், மந்திரி, பிர தானி, பாதிரி, குரு, பூசாரி.

Minority - இளம்பிராயம், வயது வராமை, பாலியம், சிறுபான்மை யர்.

Minutes - நிமிடங்கள், கணங்கள், விநாடிகள், குறிப்புப் புத்தகம், நடவடிக்கைக் குறிப்பு.

Misconception - தப்பெண்ணம், தவறுதலான கருத்து, பிழையான எண்ணம், துர் அபிப்பிராயம்.

Misconstrue - தப்பர்த்தம் செய், பிழையாகக் கருது, தப்பபிப்பிராயம் கொள்.

Mis giving-சந்தேகம், ஐயப்பாடு, சமுசயம், ஏங்குதல், கவலைப் படுதல்.

Mislead - தர்வழிகாட்டு, தப்புவழி நடத்து, திரித்துக் காட்டு.

Modest - அடக்கமுள்ள, ஒழுக்கமான, அகந்தையற்ற, மரியாதையான, நாணமுடைய.

Modification - பேதம், திரிபு, மாற்றுதல், கூட்டவோ குறைக்கவோ செய்தல், செப்பஞ்செய்தல்.

M o n a r c h y -ஏகாதிபத்தியம், கோனாட்சி, முடியரசு, அரசாட்சி.

Monopolize - காணியாட்சியாக்கு, சுதந்தரப்படுத்து, சொந்தமாக்கு, உரிமை செய்.

Moral - படிப்பினை, கருத்து, நல்லொழுக்கமான, நன்னெறி, உத்தம போதனை.

Motion - சலனம், அசைவு, இடம் பெயருதல், இயக்கம், ஆட்டம், பிரரேபணை.

Motto - பிரமாணம், நீதிமொழி, கட்டுரை, மூதுரை, பழமொழி, ஆன்றோர் வாய்ச் சொல்.

Municipality - நகராண்மைக் கழகம், நகரசபை, நகர பரிபாலன சபை.

Museum-பல்பொருள் காட்சிசாலை, கண்காட்சி ஸ்தலம், விநோதப் பொருளகம்.

Musical - இராகமான, இசையான, இனிய நாதமுள்ள, வாத்தியகோஷமான, செவிக்கினிய.

Mutilated speech - சிதைவுண்ட பேச்சு, தாறுமாறான பேச்சு, உருவற்ற பேச்சு, வெட்டுண்ட பேச்சு.

Mutual agreement - பரஸ்பர ஒற்றுமை, இணங்கிப் போதல், கட்டுப்பட்டு நடத்தல்.

Mythology - புராண காவியம், புராணக் கற்பனை, கற்பனைக் கதைத் திரட்டு, கட்டுக் கதை, மத சம்பந்தமான கதைகள்.

Name - நற்பெயர், பெயர், நாமம், பிரபலம், சொல்லு, கீர்த்தி.

Narration - சரித்திரம், கதை, காதை, இதிகாசம், புராணம், சொல்லுதல்.

Nation - சமுதாயம், ஜாதி, ஒரு தேச மக்கள்.

National Movement - தேசக் கிளர்ச்சி, சுதேசியக் கிளர்ச்சி, சமுதாயக் கிளர்ச்சி.

Natural - இயற்கையான, சுபாவீக.

Necessity - தேவை, அவசரம், இன்றியமையாமை.

Negative - எதிரான, எதிர்மறையான, தள்ளுபடி செய், மறுதளி.

Negligence - அசட்டை, பராமுகம், அலட்சியம், புறக்கணித்தல், அயர்வு, கவனக்குறைவு,

Negotiate - மத்தியஸ்தம் செய், பேச்சுநடத்து, சரிப்படுத்து, சமரசமாக்கு, கொடுக்கல் வாங்கல் செய்.

Nervous - கூச்சமுள்ள, சங்கோசமான, நரம்புத்தளர்ச்சியான, தயக்கமான, நடுக்கமான.

Neutral - நடுநிலைமையான, மத்தியஸ்தமான, பட்சபாதமற்ற, எக்கட்சியிலும் சேராத.

News - செய்திகள், சமாச்சாரம், வர்த்தமானம், பத்திரிகை, செய்தித்தாள், அக்கப்போர்.

Nobility-பிரபுத்தன்மை,உயர்குலம், பெருமக்கள், பணம் படைத்தோர், பிறப்பிலுயர்ந்தோர்.

Nomination - பெயர் குறிப்பிடல், தேர்வு செய்தல், ஏற்படுத்தல், நாமம் விளம்பல், தேர்தல்.

Non attendance - பிரசன்ன மாகாமை, போகாதிருத்தல், தலை மறைவாதல்.

Notion-எண்ணம், நினைவு, கருத்து, கொள்கை, மனப்பான்மை.

Non plus - மலைவு, தொந்தரை, தோன்ருமை, திகைப்பு, மனத்தேக் கம், கதிகலக்கம்.

Normal - விதிக்கிரமமான, சாதா ரணமான, போதனு சக்திக்குரிய, சாலக்கிரமமான, ஒழுங்கான.

Notable - பெயர்பெற்ற, வியக்கத் தகுந்த, குறிக்கத்தகுந்த, பதித்து வைக்கக்கூடிய, கருத்திலிருத்தக் கூடிய.

Notice - அறிவிப்பு, விளம்பரம், முற்கூட்டி அறிவித்தல், அறிக்கை, பிரகடனம், கவனி, கூர்ந்து நோக்கு.

Novelty - நூதனம், நவம், புத்தம் புதியது, விசேடம் பொருந்தியது.

Novice - புதியவன், அப்பியாசி, கற்பவன், மாணுக்கன், கற்றுக் குட்டி.

Nucles-மூலம், மூலாதாரம், வித்து, அடிப்படை, விளைவுக்குக்காரணம், அங்கம்.

Numerical strength - எண் ணிக்கைப்பலம், ஜனக்கட்டு, ஜனப் பெருக்கம், எண்ணிக்கை மிகுதி.

Nut shell - சுருக்கமான, சங்கிரக மான, தொகுப்பான.

Oath-சத்தியம், ஆணை, பிரதிக்ஞை சூளுரை.

Oath taking - சத்தியம் செய்தல், பிரமாணம் எடுத்துக்கொள்ளல்.

Obedience - வணக்கம், தாழ்மை, கீழ்ப்படிதல், பணிவு, அடக்கம்.

Obeisance - உபசாரம், வணங்கல், வழிபாடு, வந்தனம், பணிவு.

Obituary - மரணக்குறிப்பு, மரணச் செய்தி, மறைந்தோர்க்சிரங்கல்.

Object - உட்கருத்து, உள்ளக் கருத்து, எண்ணம், விஷயம், பொருள்.

Objectionable - ஆட்சேபணைக் குரிய, தவறுதலான, பிசகான, தடைக்குரிய, ஒப்பத்தகாத.

Obligation - கடமை, பொறுப்பு, உத்தரவாதம், கட்டுப்பட்டிருத்தல், நன்றி காட்டல்.

Obloquy - பழிப்புரை, நிந்தை, இடித்துரைத்தல்.

Observation - இமையாது கவனித் தல், கொண்டாடல், அனுஷ்டித் தல், ஊன்றி நோக்குதல், அழுந்தச் சொல்லல்.

Observer-உற்றறிவோன், கவனித் திருப்போன், முடிவு கூறுவோன்.

Obsolete - பழைய, முதிய, வழங் காத, புராதன, செல்லாத, செலா வணியாகாத, கடந்த.

Odious - அருவருப்பான, வெறுக் கத் தக்க, நிந்தனையான.

Offering - கொடை, பலி, காணிக் கை, ஈதல்.

Omnipotence - சர்வ வல்லமை, சர்வசக்தி, நித்தியமான வஸ்து, பரம்பொருள்.

Omnipresence - சர்வ வியாபகம், எங்கும் நிறைந்த பொருள், அகண் டாகாரம், நித்தியம்.

Omnicient-சர்வஞானம், பிரபஞ்ச ஞானம், சர்வவியாபகம், பரிபூரண ஞானம்.

Onerous - பொறுப்பு வாய்ந்த, சுமையான, கனமான, பளுவான.

Opening speech-ஆரம்பப்பேச்சு, பேச்சை எடுத்தல், முன்னுரை,முக வுரை, பீடிகை.

Opponent - எதிரி, பகைஞன், விரோதி, பிரதிவாதி, குஸ்திபிடிப் போன்.

Optimism - சர்வானுகூலவாதம், நன்னம்பிக்கை, குணத்தையே நாடுதல், பெருநம்பிக்கை.

Optional - பிரியமான, தன்னிஷ்டமான, இஷ்ட பாடம்.

Opulence - செல்வம், ஐசுவரியம், தனம், ஈகை, வள்ளன்மை.

Oral - வாய்மொழியான, விழுங்கக் கூடிய, வாய்ப்பாடமான, செவியாறலான, எழுதப்படாத.

Oration - பிரசங்கம், சொன்மாரி, பெருஞ் சொற்பெருக்கு, பேச்சுப் பெருந்தாரை, நாவன்மையான பேச்சு, கம்பீரம் கலந்த சொல் வன்மை.

Orator - பெரு நாவலர், சண்டப் பிரசண்ட பேச்சாளர், பெரும் பேச்சாளி, பேருரையாளர், வாக்குத் தோரணை மிகப் பெற்றவர்.

Oriental - கீழ்த்திசைக்குரிய, கீழ் நாடு சம்பந்தமான.

Orientation - பார்வை, திருஷ்டி, திருப்பம், திக்கு, நோக்கு.

Ornament - ஆபரணம், நகை, அலங்காரம், சிங்காரம், ஒப்பனை.

Orthodoxy - வைதிகம், வேத சம்பந்தமான, மதப்பற்றுள்ள.

Out rage-மானபங்கம், அநியாயம், கொடுமை, சூறை, கொள்ளை.

Over flow - பொங்கிவழிதல், ததும்புதல், கரைபுரண்டோடல்.

Over haul - பழுதுபார், பிரித்துச் சரிசெய், துப்புரவாக்கல், சுத்தஞ் செய்தல்.

Over rule - விலக்கு, தடுத்தாள், நிராகரி.

Over throw - கவிழ், தோற்கடி, எடுத்தெறி, தூக்கி எறி.

Over whelm-அமிழ்த்து, திணறச் செய், திக்குமுக்கலாடச் செய்.

Over zealous - வைராக்கிய முற்றிய, பெருநெறி பிடித்த, மிதமிஞ்சிய, ஊக்கங்கொண்ட.

Pace-நடை, காலடி, நகர்தல், பெயர்தல், கதி, தொடர்ந்து நடத்தல்.

Pacify - சமாதானப்படுத்து, சாந்தமாக்கு, தணி, பக்குவம் செய், பதப்படுத்து.

Pageantry - காட்சி, ஆடம்பரம், பவனி, உலா, திருவோலக்கம், வேடிக்கை, திருவிழா.

Pains taking - பிரயாசையுள்ள, உழைப்பாளியான, பாட்டாளியான, மிக்க வேலையுள்ள.

Palliative - தணி, இதமாக்குதல், இலகுவாக்குதல், தற்கால சாந்தியாக்குதல், மட்டுப்படுத்தல்.

Panegyric-புகழ்ச்சி, சொன்மாலை, புகழ்ச்சிப்பிரசங்கம், புகழ்மாலை.

Papers - கடிதங்கள், தஸ்தாவேஜிகள், சமாச்சாரத்தாள்கள், காகிதங்கள்.

Parade - அணிவகுப்பு, ஆடம்பரம், கொலு நிறுத்தல், இராணுவ அணி, படைவகுப்பு, ஆடம்பரக் காட்சி.

Paradise - மோட்ச உலகம், தேவலோகம், தேவர் சோலை.

Paragraph - அதிகாரத்தின் உட்பிரிவு, ஒரு பகுதி, வாசகத் தொகுப்பு, பிரிவினை வாசகம்.

Pardon - மன்னிப்பு, மன்னி, குற்றம் பொறு, தயை காட்டு, விட்டுவிடு.

Parliament - பாராளுமன்றம், உலகத் தாய்சபை.

Parliamentary - பாராளுமன்றத்திற்குரிய, மந்திரி சபைக்கேற்ற, மகா சபையின் கௌரவத்தைத் தழுவிய, சபா ரஞ்சிதமான.

Partition - பிரிவினை, பாகம், பங்கு பிரித்தல், தாயப்பிரிவினை, தடுக்கு மறைப்பு.

Pathetic - மனதை உருக்கக்கூடிய, துக்ககரமான, இரக்கமான, பரிதாபமான.

Patience - பொறுமை, அமைதி, மனவடக்கம், சகிப்பு.

Patriotism - தேசாபிமானம், தேச பக்தி.

Patron - புரவலர், போஷகன், ஆதரிப்போன், துணைபுரிவோன், ஆதரவாளன்.

Peasantry - பயிரிடுவோர், குடியானவர், நாட்டார், குடிமக்கள், குக்கிராம வாசிகள்.

Pecuniary - பணவரவிற்குரிய, தனலாபமான, லேவாதேவி சம்பந்தமான, பொருள் சம்பந்தமான.

Peerage - பிரபுத்வம், அரசியல் மான்யமும் பட்டமும், பரம்பரை பிரபுத்வம்.

Penman ship - எழுத்தாளும் சக்தி, எழுதும் வன்மை, எழுதும் பாஷையில் தேர்வு, பாஷை நடைச் சிறப்பு, எழுதும் நடைச்சிறப்பு, உரைநடை.

Pensioner - உபகாரச் சம்பளம் பெறுவோன், அலுவலிலிருந்து விலகியவன், சுகவாசி, தள்ளுபடியானவர்.

Peremptory-முடிவான, கண்டிப்பான, கடுமையான, கெடுவில்லாத, தள்ளக்கூடாத.

Perfection - நிறைவு, பூர்த்தி, முற்ற முடிந்த நிலை, குறைவற்ற நிலைமை, பூரண நிலைமை.

Perfect gentleman-உத்தம கண்ணியவான், சம்பூரண கனவான், பெரியார்.

Perhaps - ஒருவேளை, சிலவேளை, சில சமயம், ஒருசமயம், ஏகதேசம், ஒரோவழி.

Permanent - நிரந்தரமான, காயமான, அசையாத, நிலையான, அழிவிலாத, இடம்பெயராத, ஊன்றிய.

Peroration - முடிவுரை, முடித்தல், இறுவாய், தொகுப்புரை, ஒரு சொற் போரின் அழகிய முடிவு.

Perpetual-இடைவிடாத, ஓயாத, சலியாத, நித்திய, அனவரதமான.

Persistence - பிடிவாதம், விடாப்பிடி, மூர்க்க வாதம், குரங்குப்பிடி, விட்டுக்கொடாமை, தான் பிடித்த முயலுக்கு மூன்றே காலெனல்.

Persuade - வசப்படுத்து, திருத்துதல், இணங்கச்செய்தல், ஊக்குவி.

Petitioner - மனுதாரி, விண்ணப்பக்காரன், வேண்டுதலைக்காரன், யாதாஸ்துக்காரன்.

Philanthrophy - பரோபகாரம், ஜனோபகாரம், லோகாநுகூலம், தயை.

Philosopher - தத்துவ சாஸ்திரி, தத்துவஞானி, வித்தகன், கலைஞானி, கலைவாணர்.

Piece meal - சிறுகச்சிறுக, துண்டு துண்டாக, சின்ன பின்னமாக, சிறுபாகமாக.

Pit fall - படுகுழி, படுகிடங்கு, வீழ்ச்சி, இடர்ப்படுதல்.

Placard - விளம்பரம், பிரசித்தம், நெற்றியில் எழுதி ஒட்டிக்கொள்ளல் போல், பிரகடனம்.

Plagiarism - நூற்சோரம், கலைத் திருட்டு, வித்யாசோரம், ஒன்றைப் போலாக்குதல், கருத்துத் திருட்டு.

Plain spoken - நிஷ்கபடமாகப் பேசும், கபடமற்ற, வெளிப்படையான.

Plaintiff - வாதி, வழக்குத்தொடுப்போன், பிரியாதுக்காரன்.

Platform - மேடை, அரங்கு, பீடம், வேதிகை, பிரசங்க மேடை.

Play house - நாடக சாலை, நடனசாலை, விளையாடுமிடம், சிலம்பக்கூடம்.

Plead - வாதமிடு, எடுத்துப்பேசு, போராடு, பரிந்து பேசு, சட்ட நியாயம் காட்டு, வழக்குரை.

Poet - புலவன், பாவலன், கவிஞன், செய்யுள் இயற்றுவோன், பாவாணன், கவிவாணன், கவிராயன்.

Policy - அரசுமுறை, அரசியல் ஒழுக்கம், மனப்பான்மை, அரசியல் சாதுரியம், ஒப்பந்தச் சீட்டு.

Politician - இராஜதந்திரி, அரசியல் நிபுணன், அரசியல் வாதி.

Politics - இராஜ நீதி, ஆட்சிமுறை நீதி, அரசியல் காரியங்கள்.

Poor house - தர்ம சாலை, அறச் சாலை, பிச்சைக்கார விடுதி.

Popular government - மக்கள் ஆட்சி, ஜனநாயக ஆட்சி, பொது மக்கள் அரசியல், பொறுப்பாட்சி.

Prediction - சோசியம், வருவது உரைத்தல், குறி சொல்லல், வரு முன்னுரைத்தல்.

Preface - முகவுரை, முன்னுரை, நூன்முகம், பாயிரம்.

Prejudice - தப்பெண்ணம், துர் எண்ணம், மதிமோசம், சேதம்.

Prepration - தயாரித்தல், சமைத்தல், ஆக்குதல், ஆயத்தம், பிரயத்தனம், முஸ்தீபு.

Prerogative - சுதந்தரம், தனி உரிமை, சொந்தம், சலுகை, காருண்யம்.

Presence of mind - ஸ்திர சித்தம், மனக்கலக்கமின்மை, அஞ்சா நெஞ்சம், மனோதிடம்.

President - சபா நாயகர், அக்ராசனாதிபதி, அவைத்தலைவர்.

Prestige - தொன்மை, உரிமை, காணியாட்சி, பராம்பரியப்பெருமை, வாலாயம், தொன்றுதொட்டுள்ள, வழி வழி வந்த உயர்வு.

Presumption - துணிச்சல், மனத்திமிர், எடுத்தெறிந்து பேசுதல், கரைகண்டதுபோல் பேசுதல், எல்லா முணர்ந்ததுபோல் நடித்தல்.

Pretension-பாசாங்கு, கபடம், கரவடம், பாவனைகாட்டுதல், நடித்தல்.

Pre text-சாக்குப்போக்கு, போலி நியாயம், பொய்க்காரணம், பொய்ச்சாட்டு.

Prevarication - நாப்புரட்சி, வாக்குத்தவறு, பேச்சுப் புரட்டு, பித்தலாட்டப்பேச்சு, புனைந்துரையாடல்.

Pride-தற்புகழ்ச்சி, கர்வம், மமதை, செருக்கு, அகந்தை, இறுமாப்பு, ஆணவம்.

Prime minister - பிரதமமந்திரி, முதல் அமைச்சர், பிரதமர்.

Principle - கலாசாலைத் தலைவர், அதிபதி, முக்கியமான, பிரதான, முதன்மையான.

Principle - மூலகாரணம், ஆதாரம், கொள்கை, விதி, நியமம், ஒழுங்குப்பாடு.

Priority - முதன்மை, சிரேட்டம், தலைமை, வரிசைக்கிரமம்.

Private-மர்மமான, தனியிருக்கை, ஏகாந்தம், அந்தரங்கம், தன்னந்தனியான, பொதுவல்லாத, தனித்திருக்குமிடம், தனிமை.

Privilege - சுதந்தரம், உரிமை, பேறு, ஏகபோகம்.

Privy councillor - மந்திராலய ஆலோசகர், மகா நீதிஸ்தல உறுப்பினர், அமைச்சர்.

Procedure - நடைமுறை, போக்கு, விவகாரப்போக்கு, ஒழுங்குமுறை.

Proceedings - வர்த்தமானம், நிகழ்ச்சி, நடை முறைக்குறிப்பு.

Proclamation - கட்டளைச்சட்டம், அரசியல் பிரகடனம், ராஜ ஆக்ஞை, அரசியல் வாக்குறுதி.

Procure - சேகரி, திரட்டு, தேடிக் கொடு, உதவு.

Profession - சீவனம், தொழில், உத்தியோகம், வேலை, பிழைப்பு, பாசாங்கு, பசப்பு.

Programme - விளம்பரப்பத்திரம், நிகழ்ச்சி நிரல், நடை முறைக் குறிப்பு, முற்குறிப்பு.

Prohibition - மறியல், தடுத்தல், மதுவிலக்கல், குடிநீக்கம்.

Promise - வாக்குத்தத்தம், உறுதிப்பாடு, பிரதிக்கினை, சத்தியஞ் செய்தல், ஆணையிடுதல், வாக்குறுதி.

Promote - உயர்த்து, முன்னேறச் செய், விருத்திசெய்.

Proof - ருசு, அத்தாட்சி, திருட்டாந்தம், அச்சுத்திருத்தத் தாள், நிரூபணை.

Proportion - அளவு, பரிமாணம், ஏற்றத்தாழ்ச்சி, விகிதாச்சாரம்.

Proposition - தீர்மானம், ஆலோசனைக்குரிய விஷயம், யோசனை, பிரரேபணை.

Prorogue - முடித்துவிடு, முடிவுரை கூறு, இறுதிப்பேச்சு.

Prosperity - வாழ்வு, செல்வம், செழிப்பு, அமோக வாழ்வு, பெருவாழ்வு, சௌபாக்கியம்.

Providence - தெய்வம், தெய்வச் செயல், தெய்வாதீனம்.

Publication - வெளியீடு, பிரசுரம், புத்தகம்.

Plupit - பிரசங்க பீடம், குரு ஆசனம், வாசக மேடை, புலவர்பீடம்.

Punctualiy - காலந்தாழாமை, தவறாமை, தவணைப்படி நடத்தல், குறித்தகாலம் கடவாமை.

Pursuit - பின் செல்லுதல், விரட்டுதல், தொடர்தல், தொழில்.

Puzzle - புதிர், தடுமாற்றம், யோசித்து அறியும் ஒன்று, குழப்பம்.

Quack - மூடவைத்தியன், பாமர வைத்தியன், அரைவைத்தியன்.

Quaff - குடி, உறிஞ்சு, ஒரே மூச்சில் குடித்தல்.

Qualification - தகுதி, யோக்கியதை, பாத்திரம், திறமை.

Quality - தன்மை, இயல்பு, குண உயர்வு, சுபாவம், சிறப்பு, சிலாக்கியம், விசேஷ குணம்.

Quantity - அளவு, பரிமாணம், இராசி, மிகுதி, திரட்சி, ஏராளம்.

Quarrel - சண்டை, சச்சரவு, கலகம், போராட்டம், மனத்தாங்கல்.

Quarters - வாசஸ்தலம், வீடு, குடியிருப்பு, காருண்யம், தயை, பிழை பொறுத்தல், மன்னிப்பு, நான்கு பாகம்.

Quash - அழி, நாசமாக்கு, நிர்மூலப்படுத்து, உடைத்துவிடு, சின்ன பின்னமாக்கு.

Queen - இராணி, அரசி, பட்டமகிஷி.

Query - கேள்வி, வினா, கடாவுதல், விசாரணை.

Questionable-சந்தேகமான, ஐயப்பாடான, வினவுதற்குரிய, மோசமான.

Quiet-அமைதி, சாந்தம், பொறுமை, சாவதானம், சந்தடியின்மை.

Quit - விடு, விலக்கு, விலகு, நீங்கு, நட, துரத்து, வெளியேறு.

Quota - பகுதி, படியளத்தல், பங்கீடு, பங்கு, பாகம், இயன்றது புரிதல்.

Quotation - எடுத்துக்காட்டு, மேற்கோள், விலைவாசி, பூர்வ இலக்கிய மொழி, ஆதாரம்.

Race - சாதி, பந்தயம், ஓட்டம், சந்ததி.

Radical change - முழு மாறுதல், அடியோடு மாற்றம், தலைகீழாக்கல்.

Railery - பரிகாசம், ஏளனம், பழிப்பு, நையாண்டி, கேலி.

Rambling speech - தடுமாற்றமான பேச்சு, பிணைந்த பேச்சு, சிக்கலான பேச்சு, கோணலான பேச்சு.

Ransom - பிரதிக் கிரயம், சிறை மீட்கும் பொருள், விடுதலை கொள்ளும் பணம், சிறைக் கப்பம்.

Rapid - விரைவான, வேகமான, துரிதமான.

Rapture - ஆவேசம், பரவசம், ஆனந்தம், மிகு மகிழ்ச்சி.

Recover - திரும்பப்பெறு, கடன் தண்டு, வசூல் செய், தெளிவுபெறு, மீளுதல்.

Redeem - திருப்பு, மீட்டுக்கொள், ஈடேற்று, தவறியதைச் சரிப்படுத்து.

Redress - சீர்ப்படுத்து, செப்பஞ் செய், அபயங்கொடு, குறைதீர், பரிகாரம்.

Redundancy - அதிகப்படி திரும்பத் திரும்பச் செய்தல் அல்லது சொல்லுதல், கூறியது கூறல்.

Re-Election - இரண்டாம்முறை தேர்தல், மீண்டும் தேர்ந்தெடுத்தல், மறுதேர்வு.

Reference - குறிப்பு, தகவல், சுட்டுதல், காட்டுதல், மேற்கோள், பார்த்தல், பிரஸ்தாபம்.

Refinement - திருத்தம், செம்மை, நுண்மை, நாகரிகம், அழகு.

Reflection - சிந்தனை, . சிந்தனை, தியானம், சாயை, பிரதிபலித்தல்.

Reforms - சீர்திருத்தங்கள், அரசியல் அமைப்பு மாறுதல்கள், சட்டத் திருத்தங்கள், புனர் நிர்மாணத் திட்டங்கள், சீரமைப்பு.

Refuge - தஞ்சம், அடைக்கலம், சரண், ஒளிந்து கொள்ளல், புகலிடம்.

Refund - திருப்பிக்கொடு, வாபீஸ் செய். திருப்பிக் கொடுபடும் பணம்.

Refusal - மறுதளிப்பு, நிராகரிப்பு, கொடாமை, ஒவ்வ மறுத்தல், மாட்டேனெனல்.

Refutation - ஆட்சேபணை, நிராகரிப்பு, கண்டித்தல்.

Regret - வருந்தல், விசனித்தல், இரங்குதல், துக்கப்படல், பரிதபித்தல், கழிவிரக்கம்.

Rehearsal - ஒத்திகை, சரிபார்த்தல், அறையிலாடுதல்,

Re-in-Force - பலப்படுத்து, அதிகப்படுத்து, வலுச்செய், உரப்படுத்து.

Re-in-State - மறுபடியும் சேர்த்துக்கொள், மீளவும் பதவியளி, பூர்வ நிலையில் வை.

Reiterate-திரும்பச் சொல், அழுத்தமாகச் சொல், அழுத்தந் திருத்தமாகச் சொல், ஊன்றிப்பேசு.

Rejoinder - வினவுக்கு விடை, செவ்வனிறை இறுத்தல், ஆட்சேப சமாதானம், விடை பகர்தல். மேலும் கூறுதல்.

Relaxation - இளக்கம், தளர்ச்சி, அசைவு, குலைவு, பிடியைத் தளர்த்தல், நிவாரணம்.

Relevancy - ஒவ்வுதல், பொருத்தல், அசந்தர்ப்பமின்மை, பொருந்தக் கூறுதல்.

Religion - மதம், சமயம், மார்க்கம், அறத்துறை, தெய்வ வழிபாடு, வழிபடு மார்க்கம், மதக்கோட்பாடு, ஜாதி, மதப்பிரிவினை.

Relinguish - விட்டுவிடு, துற, கைவிடு, விட்டொழி, அகலு, நீங்குதல் செய், ஒழித்துவிடு, ஒப்படைத்துவிடு.

Reluctance-வேண்டா வெறுப்பு, விருப்பமின்மை, மனமின்மை.

Remarkable-குறிப்பான, அதிசயமான, உத்தமமான, கவனத்திற்குரிய, பெருமை வாய்ந்த, கீர்த்தி வாய்ந்த.

Remedial Measures - பரிகாரமான திட்டங்கள், பிராயச்சித்த ஏற்பாடுகள், நிவர்த்தி மார்க்கங்கள், சீர்படுத்தும் வழிவகைகள், நிவாரண வேலைகள்.

Reminiscence - பூர்வ சரித்திரம், பழங்கால நினைவு, பழஞ் சங்கதிகளை நினைத்தல், பழங்கதைகள்.

Remonstrate - எதிர்வாதம் செய், முரண்படு, வற்புறுத்து, போராடு.

Remorse - பச்சாத்தாபம், மனவியாகூலம், கழிவிரக்கம், கழிந்ததற்கிரங்கல், மனங் கசிதல்.

Remuneration - கைம்மாறு, பிரதிப்பலன், பிரதியுபகாரம், சம்பளம், பொருள் கொடுத்தல்.

Renovation - புதுப்பித்தல், புத்துயிர் கொடுத்தல், திருப்பணி, புனர் உத்தாரணம்.

Renown - புகழ், பிரபலம், நற்பெயர், கீர்த்தி, சிறப்பு, பேர்போன.

Repartee - வெட்டெனக் கூறல், சட்டெனப் பதிலிறுத்தல், செவ்வனிறையிறுத்தல்.

Repentance-கழிவிரக்கம், பச்சாத்தாபம், வெகுதல், குற்றமுணர்ந்து மனங்கசிதல், அநுதாபம்.

Repercussion - எதிர் திரும்புதல், எதிர் தாக்குதல், எதிரிடை விளைவு.

Reply - பதில், விடை, ஜவாப், உத்தரம்.

Representation - பிரதிநிதித்துவம், எடுத்துச் சொல்லல், மனு, தூது.

Reputation - கீர்த்தி, நற்பெயர், கண்ணியம், புகழ், பிரதாபம்.

Research-பரீட்சார்த்தம், சோதனை, தேடிப் பிடித்தல், ஆராய்ச்சி.

Resignation - இராஜினாமா, விட்டுவிடுதல், பரித்தியாகம், வினைப்பயனை நோதல், நீங்குதல்.

Resistence - எதிர்ப்பு, தாங்கும் தன்மை, சகிக்கும் தன்மை.

Resolutions - தீர்மானங்கள், பிரரேபணைகள், முடிவுகள், பேச்சுவிளைவுகள், மனவுறுதி.

Resonance-எதிரொலி, ரீங்காரம், நாதம், ஓசையுணர்வு, ஒலியலை.

Respond - ஒத்துக்கொளல், மறுமொழி சொல், பதில் கூறு, இணங்கு.

Response - உத்தரம், மறுமொழி, இணக்கம், பதில்.

Responsible - பொறுப்பான, ஜவாப்தாரியான, உத்தரவாதமுள்ள, கடமைப்பட்ட.

Restrain - அடக்கு, கட்டுப்படுத்து, வேகந்தணி, கடிவாளத்தை இறுகப்பற்று, ஓடவிடாதே.

Retaliate - பதிலுக்குப்பதில் செய், சரிக்குச்சரிசெய், திருப்பித்தாக்கு.

Retrenchment - அதிகப்படியாக இருப்பதைக் குறைத்தல், மிச்சம் பிடித்தல், சிக்கனமுறை, செலவைக் குறைக்கும் வழி, வெட்டுதல்.

Retribution - வினைப்பயன், தூர்க்கருமத்தின் விளைவு, தொடரும் வினை.

Retrogade policy - பிற்போக்கான கொள்கை, பின்னோக்கம், மாறுபட்ட கொள்கை.

Reverence - வணக்கம், பணிவு, வழிபடு, உபசாரம், மரியாதை.

Revise - பிழை திருத்து, திரும்பச் செய், சோதி, பரிசோதனை செய், திருத்தம் பார்.

Revoke - மாற்று, பரிகரி, ரத்துச் செய்.

Revolution - புரட்சி, மக்கள் எழுச்சி, நாட்டுக் கலகம்.

Rhetoric-வாக்கலங்காரம், வாக்குச் சாதுர்யம், வாசாலகம், சொல்லணி இலக்கணம்.

Rhyme - எதுகை மோனை சந்தம், எதுகையலங்காரம், சொல்லலங்காரம்.

Rhythm - லயம், தாளக் கட்டு, நாதக்கட்டு, சொல்லோசை.

Right honourable - மகாகனம் பொருந்திய, கண்ணிய மிக்க, மேன்மைமிக்க.

Righteousness - நீதிநியமம், நியாயவழி, அறநெறி, சன்மார்க்கம், உண்மைநெறி.

Ring leader - கலகமிழைப்போன், கலகக்காரன், கலகத்தலைவன்.

Rivalry - எதிரிடை, போட்டி, போராட்டம்.

Romantic - மனோ கற்பிதமான, சித்திரமான, நம்பக்கூடாத, உண்மையல்லாத.

Routine - நடைமுறை, வழக்கமானமுறை, நித்தியானுஷ்டானம், அனுஷ்டான முறை.

Rudimental - ஆதியான, அடிப்படையான, மூலாதாரமான, சாதாரணமான.

Rural-நாட்டுப்போக்கான, கிராமாந்திர, பட்டிக்காட்டுக் கிசைந்த.

Rustic - பட்டிக்காட்டான், நாட்டான்,குக்கிராமவாசி, அநாகரீகன்.

Ruthless-இரக்கமில்லாத, கொடிய, குரூரமான, பழிபாவத்திற்கஞ்சாத.

Sacred - திவ்விய, புண்ணிய, பரிசுத்த, தெய்வீக, புனித.

Sacrifice - யாகம், பலி, நைவேத்தியம், நழுவவிடுதல், கைவிடுதல்.

Sacrilege - தெய்வத்துரோகம், தீட்டுப்படுத்தல், பரிசுத்தத்தைக் கெடுத்தல்.

Safe guard-கண்காணித்தல், பாதுகாப்பு, காப்பாற்றுதல், தஞ்சம்.

Sagacity - புத்திக்கூர்மை, மோப்பம், முகர்ந்து அறிதல், பகுத்தறிவு, அறிவுத்திறம்.

Saintly - பரிசுத்தமான, பக்தர்களுக்குரிய, மகான்களுக்கடுத்த, முனிவர் போன்ற, மகிமையுள்ள.

Salary - சம்பளம், கூலி, மாதப்படி.

Salient - அதிமுக்கியமான, பிரதானமான, சாலச் சிறந்த, முக்கியம் வாய்ந்த.

Saloon - தனிவண்டி, இரதம், ஊர்தி, அலங்கார மண்டபம், கொலு மண்டபம், தனி வீற்றிருக்கை.

Salutation - உபசாரம், வந்தனை, வழிபாடு, வணக்கம், சலாமிடுதல், கும்பிடுதல்.

Salvtion - ஈடேற்றல், ரட்சித்தல், மீட்பித்தல், வீடளித்தல், காப்பாற்றுதல்.

Sanctify - பரிசுத்தமாக்கு, புனிதம் செய், தூய்மை செய், தெய்வீகமாக்கு.

Sanction - அங்கீகாரம், அநுமதி, ஒப்புதல், அநுகூல உத்தரவு.

Sarcasm - இன்னாச்சொல், இடக்கு வார்த்தை, பரிகாசம், கிண்டல், குறும்புச் சொல்.

Satire - வசை, சுடுசொல், வசைக் கவி, பழிப்பு, விகடசிந்தை.

Satisfaction - திருப்தி, பூரணம், சம்மதி, மனசிம்மதி, மனநிறைவு.

Savour - வாசனை, உருசி, சாரம், சத்து, வாடை, வீச்சு, மணம்.

Sayings - வாக்கு, பெரியோர் வாய்ச்சொல், ஆன்றோர் வாக்கியம், பழமொழி, உரைத்தல்.

Scandal - அவதூறு, தூஷணை, அபவாதம், வசைபாடு, நிந்தை.

Scant courtesy - வேண்டா வெறுப்பான மரியாதை, மரியாதையற்ற வணக்கம், அற்பமான முகமன்.

Scarcity - பஞ்சம், அருமைப்பாடு, காய்ச்சல், தாழ்ச்சி, தட்டு, முடை, வரட்சி, வரண்ட நிலை.

Scare - வெருட்டு, பயமுறுத்து, திடுக்கிடச் செய், அதட்டு.

Scenery - இயற்கை வனப்பு, சித்திரக்காட்சி, சிங்காரக்காட்சி, ஊர்த்தோற்றம், திரைக்காட்சி, நடனசாலைக்காட்சி, அற்புதக்காட்சி.

Sceptre - செங்கோல், ராஜசின்னம், மாத்திரைக்கோல், நீதிக்கோல், முத்திரைத்தண்டு.

Scheduled classes - தீண்டா வகுப்பார், தாழ்ந்த வருணத்தார், அரிஜனங்கள், ஆதித்திராவிடர்.

Scheduled time - குறித்தகாலம், குறிப்பிட்ட காலவரை, கால அட்டவணை.

Scholar - மாணவன், கற்போன், பண்டிதன், வித்துவான், கலை விநோதன், விற்பன்னன், படிப் பாளி, கலைஞன்.

Scholarship - உபகாரச் சம்பளம், படித்தற்குதவி, மாணவர் பண உதவி.

Science-கலை, வித்தை, விஞ்ஞானம், கலாஞானம், ரசாயன சாஸ்திரம், உயர்கலைகள், அருங்கலைகள்.

Scope - இலக்கு, கருத்து, வரை யறை, நோக்கம், விரிவு, இடங் கொடுத்தல்.

Scoundrel - சண்டாளன், போக் கிரி, பாதகன், அயோக்கியன், காலாடி, தூர்த்தன்.

Scrap of paper-துண்டுக்காகிதம், வெள்ளோலை, வெற்றோலை, உத வாக்கரையான அறிக்கை.

Scribble - கிறுக்கெழுத்து, விரைந் தெழுதல், கோணல்மாணலான எழுத்து, புரியாத எழுத்து.

Scrutiny - சோதனை, பரீட்சை, கண்ணோட்டம், ஆழ்ந்துநோக்கல், கூர்ந்துபார்த்தல், தணிக்கை செய் தல், பரிசோதித்தல்.

Sculptor - ஓவியன், சிற்பி, கல் தச்சன், அற்புதன், ஸ்தபதி.

Secede-பின்வாங்கு, பிரிதல், விட்டுப் போதல், அகன்றுபோதல், முன் வைத்த காலைப் பின்னிழுத்தல்.

Seconder-ஆமோதிப்போன், துணை நிற்போன், தாங்கிப் பேசுவோன்.

Secrecy - இரகசியம், அந்தரங்கம், மறைப்பு, மனத்தில் வைத்திருத் தல், பிறர் அறியாதிருக்கச் செய் தல்.

Secretary - அமைச்சர், காரிய தரிசி, செயலாளர்.

Sedate - அமைதியான, சாந்தமான, சமாதானமான, நிதானமான.

Sedentary - அசைவிலாத, இடம் விட்டுப் பெயராத, போக்குவர வற்ற, வெளிச்செல்லாத.

Sedition - இராஜத்துரோகம், அரசி யல் குற்றம், ஊர்க்கலகம், இராஜத் துவேஷம்.

Seizure - பறிமுதல், கைப்பற்றல், பிடுங்கிக்கொள்ளுதல், கொள்ளை யிடுதல்.

Self acquired - சுயார்ஜிதமான, தாம் தேடிய, சொந்தமாகத் திரட் டிய.

Self applause - தற்புகழ்ச்சி, தம்மையே புகழ்தல், தற்பெருமை.

Self confidence - நெஞ்சழுத்தம், மனஉரம், தன்னம்பிக்கை, சுய நம்பிக்கை.

Self consciousness-தன்னுணர்வு, தன்னையறிதல், தன்னெஞ்சறிதல்.

Self control - தன்னடக்கம், தானடங்கல், வைராக்கியம் பிடித் தல், தன்னையடக்கியாளல்.

Self defence - தற்காப்பு, தன்னைக் காப்பாற்றிக்கொளல், எதிர்ப்பைத் தடுத்தல்.

Self educated - தாமே படித்த, உபாத்தியாயர்மூலம் கல்வி பெறாத, ஓதாது உணர்ந்த.

Self esteem - சுயமதிப்பு, தன் மதிப்பு, சுயமரியாதை.

Self government - சுயஆட்சி, சுயராஜ்யம், மக்களாட்சி.

Self opinionated - தற்புகழ்ச்சி யான, தன் சாமர்த்தியத்தைத் தானே வியக்கிற, தன்னை அதி மேதாவியாக எண்ணுகிற.

Self possession-சித்த சுவாதீனம், கலங்காச் சித்தம், நிதான புத்தி.

Self reliance - சுயநம்பிக்கை, மன உறுதி, பிறர் உதவி கோராமை.
Self respect - சுயமரியாதை, சுய மதிப்பு, தன்மதிப்பு, தன்மானம்.
Self sacrifice - தன்னல மறுப்பு, சுயநல வெறுப்பு, தம் நலனை விட்டுக் கொடுத்தல்.
Self willed - சுயேச்சையான, மண்டைக் கர்வமான, அகம்பாவ மான.
Senators - சிந்தையாளர்கள், அமைச்சர்கள், பல்கலை அறிஞர் கள், சட்டம் வகுப்போர், மந்திரி சபை அங்கத்தினர்.
Senate house - மந்திராலோசனை சபை, சட்டமியற்றும் சபை, பல் கலைக் கழகம், அத்தாணி மண்டபம், பட்டமளிப்பகம், சிந்தனைமண்டபம்.
Seniority - முதன்மை, மூப்பு, முதிர்வு, தலைமை, வயதிற் பெரிது, காலத்தால் முதியது.
Sensible - புத்திக் கூர்மையான, கருத்துள்ள, விளக்கமான, யூக மான, புத்திசாலித்தனமான, விவேகமுள்ள.
Sentence - வாசகம், சொற்றொடர், வாக்கியம், வசனம், தீர்ப்பு, தண்டனை.
Sentiment - எண்ணம், உணர்ச்சி, நோக்கம், அபிப்பிராயம், இங்கிதம், மதவழி நோக்கு.
Separate-அலாதியான, தனியான, வேறான, விலக்கான, பிரி, தனிப் படுத்து, வெவ்வேறாக்கு.
Serious - அபாயமான, ஆபத்தான, கடுமையான, கடுபிடியான, மிக மோசமான.
Session-கூடும் காலம், பருவகாலம், மந்திராலோசனை சபைக்காலம்.
Settlement - உடன்படிக்கை, முடிவு, தீர்வை, நிலத்திட்டம், குடியேறிய நாடு, நிலத்தீர்வைத் திட்டம், முடிவு கட்டுதல்.
Shame - வெட்கம், நாணம், அவ மானம், அவலம்.
Sharp witted - கூர்மதியுள்ள, நுட்ப புத்தியுள்ள.
Shatter - இடி, தகர், நொறுக்கு, தவிடுபொடி செய், சிதறடி, சின்னா பின்னப்படுத்து.
Sheriff - ஊர்த்தலைவர், நகராண் மைக்காரர், நாட்டாண்மைக்காரர், நீதிநெறிக் கண்காணி, ஷெரிப்.
Short hand - சுருக்கெழுத்து குறிப்பெழுத்து, விரைவெழுத்து.
Short sighted - குறுகிய திருஷ்டி யுள்ள, குறுகின பார்வையுடைய, கிட்டப் பார்வையுடைய.
Showy - பார்வையான, பகட்டான, படாடோபமாள கவைக்குதவாத, வேடதாரியான.
Shrewd-ஆராயுமியல்புடைய, நுண் மதியான, தந்திரமான, விவேக மான, ஆழ்ந்த நோக்குள்ள.
Signature - கையெழுத்து, கைச் சாத்து, கையொப்பம்.
Significant - குறிப்பான, கருத் துள்ள, கவனத்திற்குரிய, ஆழ்ந்த கருத்துடைய.
Silence - மௌனம், அமைதி, வாய் திறவாமை, சந்தடியின்மை, பேசாமை, நாவடக்கம்.
Similarity - உவமை, ஒப்பு, சமத் துவம், சமநிலை, இணை, ஜோடி.
Simple - பேதைமையான, சுலப மான, கடினமில்லாத, இலேசான, கள்ளங் கபடற்ற, படாடோபமில் லாத, எளிய, சாதாரண.
Simultaneous - ஏககால, ஒரு முறையான, ஒரே தடவையில், நிகழ்ந்த, சமகால.
Sincere - உண்மையுள்ள, விஸ்வாச மான, நிஷ்கபடமான, கள்ளமற்ற, களங்கமில்லாத.
Singularity-நூதனம், விசித்திரம், அதிசயம், புதுமை, விநோதம்.

Sitting - விசாரணை, இருக்கை, கூடுதல், நடைபெறுதல், சபை நடந்துகொண்டிருத்தல், நீதி விசாரணை நடப்பு, உட்கார்ந்திருத்தல்.

Slackness - நெகிழ்வு, தாழ்வு, தளர்ச்சி, இளக்கம், தணிவு, சந்து விடுதல், பிடிப்புக் குறைவு.

Slovenly - துப்புக்கெட்ட, சோம்பலான, அவலட்சணமான, பார்வைக் கேடான, மந்தகதியான.

Sober-தெளிந்த, அமைவான, வெறியற்ற, குடிவெறி தெளிந்த, நிதானமான.

Social gathering - சர்வஜனக் கூட்டம், விருந்துக் கூட்டம், பொது விருந்து, ஜாதி மதபேதமற்ற விருந்தினர் குழு.

Society - சங்கம், சபை, குழு, நிலையம், அமைப்பு, மக்கள் பகுதி.

Solicitation - பிரார்த்தனை, வருந்திக் கேட்டல், வேண்டுதல், கவலை காட்டல்.

Solid foundation - அசையா அஸ்திவாரம், உறுதியான அடிப்படை, கெட்டிக் கடைக்கால்.

Some how - எப்படியோ, எவ்வண்ணமோ, எவ்விதமோ, எவ்வகையேனும், எப்படியாகிலும், எம்மாதிரியாவது, எவ்வழியாகிலும், எவ்விதத்திலாவது.

Sonorous voice - பெருந்தொனியானகுரல், பெருங்குரல், காளவாய்.

Sorrowful - துக்கமான, கிலேசமான, மனவருத்தமான, வேதனையான, மனமிடிந்த.

Sovereign - இறைவன், அரசன், சக்கரவர்த்தி, இராஜா, கோமகன், மகிபன், பவுன்.

Speaker - பேசுவோன், பேச்சாளி, பாராளுமன்றக் கீழ்சபைத் தலைவர், பிரசங்கி, உபந்நியாசி.

Specimen - மாதிரி, விதம், அடையாளப் பொருள், மச்சம், இனம்.

Spectacular - வேடிக்கையான, கோலாகலமான, குதூகலமான, அலங்காரமான, பார்வையான, கண் காட்சியான.

Spectator-பார்வையாளன், காண்போன், நோக்குடையோன், சாட்சி பூதன்.

Speculation - வர்த்தகச் சூதாட்டம், வாணிபம், பண்டமாற்றத் துணிச்சல், பணப் பேராசை வியாபாரம்.

Spirited speech - வேகமான பேச்சு, காரசாரமான சொற்போக்கு, உணர்ச்சி வேகம் பொருந்திய பேச்சு, ஆவேசமான பிரசங்கம், விறுவிறுப்பான பேச்சு.

Splender - பிரசாரம், தேசு, ஒளி, துலக்கம், காந்தி, சிறப்பு, அலங்காரம்.

Spokesman - தூதுகோஷ்டித் தலைவன், முன்னின்றுபேசுவோன், பிரதிநிதி, முதல்வன்.

Spur of the moment - நினைத்த மாத்திரம், உடனே, அந்த க்ஷணத்திலே, சங்குதடையின்றி, அங்ஙனே.

Stability - உறுதிப்பாடு, நிலைத்தல், அசைவற்ற நிலை.

Standard - அளவு, பரிமாணம், படித்தரம், உயர்வு தாழ்வு, கொடி.

State aided - சர்க்கார் உதவி பெற்ற, மான்யம் பெறுகிற, அரசியல் ஆதரவுபெற்ற.

Statement - வாக்குமூலம் யாதாஸ்து, சங்கதித் தொகுப்பு, விஷயக்குறிப்பு.

Statistics - புள்ளி விபரம், கணக்குத் தொகுப்பு, பலவகைத்திரட்டு.

Statute - முறைமை, கட்டுப்பாடு, அரசியல் சட்டம், அமுலிலுள்ள சட்டம்

Strong points - பலமான ஆதாரங்கள், அழுத்தமான புள்ளிகள், அநுகூலமான குறிகள்.

Student - மாணுக்கன், கற்போன், பயில்வோன், வித்தியார்த்தி.

Style - மொழிநடை, பாஷைப் போக்கு, நாகரீகப்போக்கு, எழுத் தாணி, வேலிவழி, வேலிக்கவை, உடையழகு, நூலழகு, ஒய்யாரம்.

Subject - விஷயம், காரியம், பொருள், பதார்த்தம், எழுவாய், ஆளப்படுவோர், பிரஜை, குடி.

Subordination-அடக்கம், பணிவு, கீழ்ப்படிதல், அடங்குதல், மிஞ் சாமை.

Subscribe - கையொப்பமிடு, கை யெழுத்துச் செய், சந்தாக் கொடு, உதவிபுரி, இயன்றதைச் செய்.

Subtle argument - தந்திரமான விவாதம், நுணுக்கவாதம், கரவான விவாதம்.

Successful - அனுகூலமான, நிறை வேறக்கூடிய, காரியசித்தியான, வெற்றிகரமான.

Succumb - அடங்கு, இணங்கு, இறத்தல், வீழ்தல், பலியாதல்.

Sufficient - போதுமான, திருப்தி யான, வேண்டுமளவு, நிறைவான, குறைவற்ற.

Superficial - மேலெழுந்தவாரி யான, அழுந்தாத, ஆழ்ந்து நோக் காத, மேற்போக்கான.

Super-Human - மனுஷ சக்திக்கு மீறிய, தெய்வத் தன்மையான, அமானுஷீக.

Super - in - Cumbent - மேலே வைக்கப்பட்டிருக்கிற, மேல் பளு வான, மேற்படிந்துள்ள, தலைச் சுமையான.

Superintend - நடத்து, மேற் பார்வையிடு, பராமரி, கண்காணி, தணிக்கைசெய்.

Superiority - உயர்வு, மேன்மை, சிலாக்கியம், விழுப்பம், மேலானது.

Supernatural - இயற்கையற்ற, இயற்கையைக் கடந்த, இயல்புக்கு அதிகமான, பூதச்செயலான.

Superstitious - மூடபக்தியான, மூடநம்பிக்கையான, குருட்டு நம் பிக்கையுள்ள.

Superstructure - மேற்கட்டிடம், மேல் வீடு, மேற்கூரை, மேல் வாரம்.

Supervision-கண்காணிப்பு, காரிய விசாரணை, தணிக்கை, மேற் பார்வை, கவனிப்பு.

Supplication - விண்ணப்பம், வேண்டுகோள், பிரார்த்தனை, இரத் தல், யாசித்தல்.

Support - ஆதாரம், கொழுகொம்பு, தாங்கு, பற்று, பாதுகாப்பு, அர வணைப்பு.

Suppression - அடக்கம், ஒடுக்கம், அழுத்தி வைத்தல், தலைதூக்காது செய்தல், பதுக்கல், ஒளித்தல்.

Surmountable - மேற்கொள்ளக் கூடிய, நிர்வகிக்க முடிந்த, வெல் லக்கூடிய, தாங்கக்கூடிய, கையா ளக்கூடிய, கடக்க முடிந்த.

Surroundings - அக்கம் பக்கம், சுற்றுப்புறம், சூழ்ந்துள்ளவை, சார்ந்து நிற்பவை, சூழ்நிலை.

Susceptibility-உணர்ச்சி, நினைவு, மனத்தோற்றம், மனநிலை, மன இளக்கம், மனதை உறுத்தல்.

Sustain - ஆதரி, பொறு, பராமரி, நிலையாக நில்.

Sweeping remark - ஒழுங்கற்ற வார்த்தை, தகாதன சொல்லல், தூக்கியெறிந்த பேச்சு, தாட்சண்ய மற்ற வார்த்தை, யோசனையற்ற பேச்சு.

Sycophant - முகஸ்துதிக்காரன், நயவஞ்சகன், மோசடிக்காரன், படு போக்கிரி, கூழுக்குப்பாடி.

Symbol - குறிப்பு, அடையாளம், அறிகுறி, ஒலிக்குறிப்பு, புறச் சான்று, வெளிக்குறி.

Sympathy - அனுதாபம், கழிவிரக் கம், தயை, இரங்கல், கண்ணோட் டம், பச்சாததாபம்.

Syndicate - சிந்தனைக் கழகம், சிந் தனையாளர் குழு, பல்கலைக் கழக உறுப்பினர், சிந்தனைக் குழு.

Synonyms - பிரதிப்பதம், ஏகார்த் தம், ஒரே பொருள் தரக்கூடிய பதங்கள், பல மொழிகள்.

Synopsis - குறிப்பு, பொழிப்பு, அடக்கம், கோவை, திரட்டு, இரத் தினச் சுருக்கம்.

System - ஒழுங்கு, முறை, கிரமம், சரீர இயல்பு, மதம், கோட்பாடு.

Tabling - மேசைமீதிருத்தல், ஆலோசனைக்குக் கொணர்தல், முற் கூட்டி சபைக்கு அறிவித்தல், பிர ரேபணை செய்தல்.

Tabular statement - அட்ட வணைக் குறிப்பு, வரிசைக்கிரமமான யாதாஸ்து, தலைப்புடைய பட்டி யல்.

Tactful - சாமர்த்தியமான, சமயோ சித புத்தியுள்ள, யூகமான, சூழ்ச்சி யுள்ள, சாதிக்கவல்ல.

Talented - சமர்த்துள்ள, நிபுணத் துவம் வாய்ந்த, கைதேர்ந்த, சமத் காரமான, தேர்ச்சிபெற்ற, ஞான முடைய.

Talkative - வாயாடியான, அதிகப் பேச்சுக்கார, அலப்புகிற, பேச் சைக் கொட்டுகிற, வம்பளக்கிற.

Tall order - பெரிய கட்டளை, பணச்செலவான ஏவல், கடின சாத் தியமான ஏவுதல்.

Tangible - உருப்படியான, பரிசிக் கத்தக்க, உருவான, கண் மெய் களாற் கண்டறியக் கூடிய.

Target - சுடுமிடம், குண்டுக் குறி, இலக்கு, தாக்குமிடம், குறிக்கோள்.

Tarnish - கறைப்படுத்து, களங்க மாக்கு, கெடு, பாழ்படுத்து, களிம்பு, கச்சுப்போதல்.

Taste - உருசி, சுவை, இரசம், உவப்பு, இஷ்டம், அறுசுவை.

Taunt -இகழ், நிந்தி, வெட்டெனச் சொல், சுடச்சொல், இடித்துரை.

Taxation - வரி விதித்தல், ஆயம், சுங்கம், வரித்தண்டல்.

Teaching - கற்பித்தல், போதித் தல், போதனை, பாடஞ் சொல்லு தல், மூதுமொழி, உபாத்திமை.

Technical - கலா சம்பந்தமான, சங்கேதமான, சாஸ்திரீய, தொழிற் கல்வி சம்பந்தமான.

Tellers - தணிக்கை செய்வோர், கணக்கிடுவோர், இலக்கமிடுவோர், தட்டிப் பார்ப்போர், கணக்கறிவிப் போர்.

Temperament - தன்மை, குணம், இயல்பு, மனப்பான்மை, மனநிலை.

Tempestuous - கொந்தளிப்பான, புயல் போன்ற, சூறுவளியான, காற்றும் மழையும் கலந்தடிக்கிற, சண்டமாருதமான.

Temporary - தற்காலிக, காயமில் லாத, நிரந்தரமற்ற, நிலையில்லாத.

Temptation - சோதனை, மயக்கு, ஏய்ப்பு, தூண்டுதல், மதிமோசம், ஆசையால் மோசத்திற்குள்ளாதல்.

Tenant - குடியிருப்போன், குடிக் கூலிக்காரன், வாரக்காரன், இறை செலுத்துவோன், மேல்வாரக் காரன், குடித்தனக்காரன்.

Tentative measures - பரீட் சார்த்தத் திட்டங்கள், தற்காலிக ஏற்பாடுகள், பரிசோதனைத் திட்டங் கள்.

Term - தவணை, பெயர், காலவரை நிபந்தனை, சொல், மொழி, உத்தி யோகக் காலம்.

Terminate-முடி, தொலே, அகற்று, முடிவுகட்டு, ஒழி.
Territory - பிரதேசம், எல்லே, இராஜ்ஜியம், பூமிப்பரப்பு, நாடு.
Terseness - சுருங்கச் சொல்லல் அல்லது எழுதுதல், செம்பாக நடை, அளவோடு பேசுதல்.
Testimonial- நற்சாட்சிப் பத்திரம், சிபார்சுக் கடிதம், அத்தாட்சி, மதிப்புரை, சிறப்புரை, யோக்கியதா பத்திரம்.
Text - பாட புத்தகம், வாசகம், மூல வாக்கியம், மூலம்.
Thank-நன்றி செலுத்துதல், வணக்கம் செய், உபசாரம் கூறு, முகமனுரை, வாழ்த்துக் கூறு, வந்தனம் புரி.
Theatre - நடனசாலே, நாடகசாலே, கூத்துக் கொட்டகை, அலங்கார அரங்கு.
Theme - விஷயப்போக்கு, பீடிகை, காரியம், வசனப்போக்கு, கருத்து வழி.
Theological - வேதசாஸ்திரத்திற் கடுத்த, ஞான சாதனமான, வேதாந்தமான, பரலோகத்திற் குரிய.
Theoretic - புத்தக அறிவுள்ள, அநுபவப் படிப்பில்லாத, புத்தகப் புழுவான.
There about - அவ்விடங்களில், அவ்விடத்தே, கிட்டத்தட்ட, அவ்வளவு, அத்துணே.
There after - அதன்பின், அந்தப்படி, அதன் பிரகாரம், அதற்கப்பால்.
There at - ஆங்கு, ஆண்டு, அவ்விடத்தே, அதில், அதனூடு.
There by - அதனுல், அதைக் கொண்டு, அதன் மூலம், அக்காரணத்தால், அவ்வழியே.
There fore ஆகையால், ஆதலால், ஆனபடியினலே, ஆகலின், ஆகவே, அங்ஙனமாதலின், அக்காரணத்தால்.
There from - அதனின்று, அதனுல், அவ்வழியே, அங்கிருந்து.
There in - அவ்விடத்தில், அக்காரியத்தில், அதில், அதனுள், ஆண்டு, அங்கு, அதனூடு.
There of - அதைப்பற்றி, அதைக் குறித்து, அதனுடைய.
There on - அதன்பேரில், அதன் மீது, அதற்கப்புறம், அப்பால், அதன் பிறகு.
Thesis - கட்டுரை, கோட்பாடு, ஆராய்ச்சி, நூலாய்வு.
Thoughts - நினைவுகள், கருவிலுள்ளவை, கருத்துக்கள், சிந்தனைகள், மனோபாவங்கள்.
Thread - நூல், இழை, கோவை, தொடர்பு, தொடர்ச்சி, சரடு.
Threat - அச்சுறுத்தல், அடிப்பேனெனல், பயங்காட்டல், முடுக்கல்.
Threshold - தலேவாயில், பிரவேசம், முன்வாசல், நடை, ரேழி.
Throne - சிம்மாசனம், ராஜபீடம், தவிசு, அரியணே.
Thumb rule - கைவிரலளவு, வாலாயப் பழக்கம், வாய்க்கணக்கு, எட்டிலெழுதாத வழக்கம், தோராயம், கண் கை நிதானம்.
Thunder bolt - இடியேறு, இடி முழக்கம், வச்சிராயுதம்,மின்னலும் இடியும், மின்னனேய தாக்கல்.
Thunder struck - இடி வீழ்ந்தது போல், திடும்பிரவேசத் தாக்கல், பிரமை தட்டுதல், தூக்கிவாரிப் போட்டதுபோல் திக்பிரமை காண்டல்.
Thwart - குறுக்கிடு, குறுக்கே மறியல் செய், இடையூறுசெய்.
Timely - சமயத்திற் கடுத்த, காலத்திற்குரிய, சமய சஞ்சீவியான, ஆபத்து வேளேக்கான, காலத்தாற் செய்த.

Time serving - சமயோஜித நடத்தையுடைய, வேளைக் கொரு விதமாக நடக்கிற, ஆளுக்கு ஒரு விதமாக நடக்கிற, இச்சகச் செயலுடைய, காலத்திற் கேற்ற கோலம் கொள்கிற.

Tipsy - வெறிகொண்ட, குடிவெறி உள்ள, போதை கொண்ட, தலை சுற்றுகிற, லாகிரி கொண்ட, உன் மத்தமான, கிறுகிறுப்புடைய.

Tiresome - அலுப்பான, இளைப்புடைய, களைப்புத் தட்டிய, ஆயாசமான.

Title page - முன்பக்கம், முகப்புக் காகிதம், தலைப்பக்கம், பாயிரம், நூன்முகம்.

Toast-வந்தனம் செலுத்தல், வணக்கத்துடன் பானமருந்தல், வாழ்த்துக்கூறல்,உடல் நலன் விரும்புதல், வாட்டிய ரொட்டித்துண்டு.

Tomb - பாசறை, கல்லறை, சமாதி, சவக்குழி.

Tone-குரல், நாதம், ஒலி,நற்சாயம், நல்ல நிறமாக்கல், உச்சக்குரல்.

Tongue tied-நாவளமற்ற, நாவசையாதிருத்தல், வாய்ப்பூட்டிடப் பெற்ற.

Touching words - உணர்ச்சி ததும்பும் வார்த்தைகள், உருக்கமான சொற்கள், இதயத்திலிருந்து வரும் சொற்கள், அன்பு கலந்த மொழிகள்.

Tournament -பந்தய விளையாட்டு, மற்போர், சிலம்ப விளையாட்டு, ராணுவ பராக்கிரம விழா, பந்தய விழா, குதிரைப்போர்.

Town hall - நகர மாளிகை, நகரப் பொது மண்டபம், பொது ஆஸ்தானம்.

Tradition - பாரம் பரியம், சம்பிரதாயம், கர்ன பரம்பரை, ஐதீகம், வழி வழி.

Traffic-நடமாட்டம், போக்குவரவு, வியாபாரம், ஜன நடமாட்டம், வண்டிகளோட்டம்

Tragedy - துன்ப நாடகம், பிரலாபம், பிராணச்சேதம், துக்கமுடிவு.

Training ground - கோதா பயலுமிடம், தயார் செய்யுமிடம், பயிற்சி கொடுக்குமிடம்.

Traiter - வஞ்சகன், மாபாதகன், காதகன், இராஜத்துரோகி, நம்பிக் கைத்துரோகி, இரண்டகம் இழைப் போன்.

Transfer - மாற்றுதல், இடம் பெயர்த்தல், வேறொருவர்பேருக்கு மாற்றுதல், விக்கிரய சாசனம் எழுதிக் கொடுத்தல், அப்புறப்படுத்தல்.

Transition - மாறுதல், பெயர்ச்சி, வேற்று உருக்கொளல், செல்லுதல், நிலைமை மாற்றம், புடைபெயர்தல்.

Translation - மொழி பெயர்ப்பு, இடப் பெயர்ச்சி, ஒரு பாஷையை வேறு மொழிப்படுத்தல்,மாற்றுதல்.

Transparent - தெளிவான, துல்லியமான, வெளிப் படையான, உள்ளும் புறமு மொத்த,

Treacherous - இரண்டக மான, கபடமுள்ள, நம்பிக்கைத்துரோகமான, சதியான, கரவான, விஸ்வாச காதகமான.

Treason - இராஜத்துரோகம், இராஜத்துவேஷம், இராஜ நிந்தை.

Treasury - பொக்கிஷம், கஜானு, சேமிப்பிடம், கருவூலம், பொருட்சாலை, தனநிலயம்.

Treatment - சிகிச்சை, நடத்துதல், நடத்துமுறை, பாகுபடுத்தல்.

Tremendous success - பெருவாரியான வெற்றி, பெருமிதமான ஜெயம், பிரமாண்ட வெற்றி.

Tribute - இறை, வரி, கப்பம், சிறப்பித்துக்கூறல், புகழ்மாலை.

Trifling - அற்ப, சிறிய, சொற்ப, கேவலமான, எளிய, அவமதிப்பான.

Triumph - வெற்றி, எக்களிப்பு, முறியடித்தல், ஜெயம்.

Triumvitrate-மூவேந்தர் சங்கம், முக்கூட்டுச்சங்கம், மூவர் கூட்டுறவு.

Troops - படைகள், சேனைகள், சைனியங்கள், அணிவகுப்புகள்.

Trust worthy - நம்பகமான, நம்பிக்கைக்குரிய,நம்பத்தகுந்த, நம்பிக்கைக்குப் பாத்திரமான.

Truthful - உண்மையான, நம்பிக்கையான, மெய்யான, உண்மையைக் கடைப்பிடித்த, சத்தியமான, வாய்மையான.

Turbulent - கொந்தளிப்பான, குழப்பமான, கலக்கமான, ஆரவார மிகுந்த, கட்டுக்கடங்காத.

Turn coat - பச்சோந்தியன், கட்சி மாறுவோன், சமயோஜிதப் பேர் வழி, ஒரு நிலையற்றவன், ஊர்ஜித மில்லாதவன்.

Twisting facts - விஷயங்களைத் திரித்தல், புனைந்து கூறுதல், இல்லாததை உள்ளதுபோலக் கூறுதல்.

Tyrannical - கொடிய, கொடுங் கோன்மையான, பழியஞ்சாத.

Ugly - ஆபாசமான, விகாரமான, அவலட்சணமான, குரூபமான, பார்க்கச் சகியாத.

Ulterior-வெளிக்காட்டாத, வெளித் தோற்றத்திற்ககப் படாத, மனதிலேயே ஊன்றிப்பதித்த, கருவிலுள்ள.

Ultimatum-முடிவான நிபந்தனை, தீர்மானம், கண்டிப்பான உத்தரவு, அவ்டிமேட்டம்.

Ultra - அளவுகடந்த, மிகுதியான, சக்தி மிகுந்த, எல்லைகடந்த, தீட்சண்யமான.

Umpire - மத்தியஸ்தன், நடுவன், வழக்குத் தீர்ப்போன்.

Unabashed-கூச்சமற்ற, சங்கோசமற்ற, நாணமில்லாத,

Unacceptable - ஏற்கக்கூடாத, செல்லாத, அங்கீகரிக்கப்படாத, ஒப்பத்தகாத.

Unaccountable - முகாந்தரம் காட்டமுடியாத, கணக்கில் வராத, காரணங் காட்டமுடியாத, உத்தர வாதமற்ற.

Unacknowledged - ஒத்துக் கொள்ளாத,பெற்றுக்கொண்டதைத் தெரிவிக்காத, வந்தனம் செலுத்தப் படாத, ஏற்றுக்கொள்ளப்படாத.

Unaffected - தெளிந்த, கள்ளங் கபடற்ற, கர்வமற்ற, ஆடம்பரமற்ற தாக்கப்படாத, நிலைமாற்றமில்லாத.

Unanimous vote - ஏகமனதான தேர்வு, ஒருமுகமான வாக்குரிமை, ஏகோபித்த தேர்வு, ஒரு மனத் தேர்தல்.

Unarmed - நிராயுதமான, படை உதவியற்ற, வெறுங்கையான.

Unauthentic - அத்தாட்சியற்ற, உண்மையல்லாத, ருசுக்காட்ட முடியாத, உத்தரவாதமற்ற.

Unavoidable - தவிர்க்கமுடியாத, விலக்கமுடியாத, வந்தே தீருகிற, வழியில் நில்லாத.

Unbearable - சகிக்கமுடியாத, பொறுக்கமுடியாத, வேதனை மிகுந்த, தாங்கமுடியாத, நிர்வகிக் கக் கூடாத.

Unbiased - பாரபட்சமற்ற, கபடற்ற, பற்றற்ற, நிர்த்தாட்சண்ய மான.

Uncalled for - அழைக்கப்படாத, விரும்பி அழைக்காத, வேண்டப் படாத, தேவையில்லாத,அநாவசிய மான.

Uncharitable - ஈகையற்ற, தர்ம சிந்தையற்ற, இரக்கமில்லாத, மன ஈரமில்லாத.

Unclaimed - சொந்தம் பாராட் டாத, அநாமதேய, உரிமை காட் டாத, பாத்தியமில்லாத.

Uncomfortable - ஆறுதலற்ற, அமைதியற்ற, சௌகர்யக் குறைவான, நிம்மதியற்ற.

Unconditional - நிபந்தனையற்ற, ஒருமுகமான, இழுப்புப் பறிப்பற்ற.

Unconscious - பிரக்ஞையற்ற, உணர்வில்லாத, தன்னிலையற்ற, உணர்ச்சி பிறழ்ந்த.

Undaunted - திடமுள்ள, வைராக்கியமுள்ள, அஞ்சாத, வீரமுள்ள, கலங்காத.

Undergraduate - பட்டம்பெறாத வித்தியார்த்தி, பட்டமளிக்கப் படாத உயர்கலை மாணவன்.

Undertake-ஏற்றுக்கொள், முயற்சி செய், தலையிடு, மேற்போட்டுக் கொள், ஒப்புக்கொள், செய்யத் துணி, சவமெடு.

Undeserving - அருகமற்ற, தகுதியற்ற, உதவிக்கு யோக்கியதை இல்லாத.

Undisputed facts - சந்தேகத்திற் கிடங்கொடா விஷயங்கள், வாதுக் கிடங்கொடாக் காரியங்கள்.

Understanding - அறிவு, தெளிவு, உணர்வு, யூகம், மதி, புத்திக்கு எட்டுதல், நிபந்தனை.

Unfaithful - நம்பிக்கைக்கேடான, விஸ்வாசமில்லாத, சோரமான, மோசக்கருத்தான.

Unfinished goods - கருவடையடையாத பண்டங்கள், அரைகுறை வேலைப்பாடான சாமான்கள், வேலை முடிவடையாப் பண்டங்கள்.

Unforeseen - எதிர்பாராத, முற்கூட்டி நினையாத, திடும்பிரவேசமான.

Unfortunate-துர்அதிர்ஷ்டமான, துர்ப்பாக்கியமான, இரங்கத்தக்க.

Unfounded - ஆதாரமற்ற, உறுதியற்ற, நிலையற்ற, உண்மையல்லாத.

Unfriendly - நேசமற்ற, சத்துருவான, வாஞ்சையில்லாத, விரோதபாவமான.

Ungenerous - உதாரமற்ற, ஈகையற்ற, உலோபமான, பெருந்தன்மையில்லாத, இரக்க சித்தமற்ற.

Ungovernable anger-அடக்க முடியாதசினம், அடங்காச்சீற்றம், கடுங்கோபம், தன்னைமீறிய சினம்.

Unhappy - சந்தோஷமற்ற, துயரமான, துக்கமான, சஞ்சலமான.

Unhealthy - சுகவீனமான, நோயுள்ள, தேகநிலை குன்றிய, பிணிகொண்ட.

Uniform courtesy - ஒரே ரீதியான மரியாதை, அன்றும் இன்றும் என்றுமுள்ள மரியாதை, ஒரே படித்தரமான வணக்கம்.

Unimposing - ஏமாற்றாத, பளிச்சென்று காட்டாத, துலக்கமில்லாத, தோற்றம் கம்மிய.

Uninteresting - முக்கியமற்ற, உருசியற்ற, கவர்ச்சியில்லாத, விருப்பமில்லாத, குறிக்கத்தகாத.

Uninvited - அழைக்கப்படாத, விரும்பப்படாத, கூப்பிடப்படாத.

Uninterrupted - இடையறாத, ஓயாத, தங்குதடையற்ற, பாதிக்கப்படாத, சரளமான.

Universal - சர்வ வியாபகமான, எங்கும் நிறைந்த, உலகாச்சாரமான, பரிபூரணமான.

University - சர்வகலா சங்கம், பல்கலைக்கழகம், பல்கலைமன்றம், நுண்ணியர் சங்கம்.

Unjustifiable - நியாயமெனப் படாத, அநீதமான, சரியெனக் கொள்ளப்படாத.

Unknown - அறியாத, அறிவுக் கெட்டாத, மறைந்துகிடக்கிற, புலனாகாத, பார்க்கமுடியாத, பரிச்சயமற்ற.

Unlawful - சட்ட விரோதமான, அநியாயமான, அக்கிரமமான, நீதிக் கேடான.

Unlimited-அளவில்லாத, மட்டில் லாத, எல்லையற்ற, கரையில்லாத.

Unlucky - துர்அதிர்ஷ்டமான, பாக்கியமற்ற, துர்ப்பாக்கியமான.

Unmask - மாயந்தீர், வெளியாக்கு, வேஷம்குலை, உண்மைச் சொரூ பத்தைக் காட்டச்செய்.

Unmatched - ஒப்பில்லாத, இணை யற்ற, ஈடில்லாத, ஒன்றுக் கொன்று பொருந்தாத.

Unopposed-எதிர்க்கப்படாத, எதி ரில்லாத, போட்டியற்ற.

Unostentatious - வீம்பற்ற, ஜம்ப மில்லாத, விளம்பரம் வேண்டாத.

Unparalleled - ஒப்பற்ற, இணை யற்ற, முன்பின் நிகழாத, தனக்குத் தானே இணையான.

Unpardonable - மன்னிக்கப் படாத, பொறுக்கப்படாத, மன் னிக்கமுடியாத, தண்டிக்கத்தகுந்த.

Unsolicited - வருந்திக்கேளாத, வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் படாத, வலிந்து கொடுத்த, வலிய உதவிய.

Unsuccessful - கைகூடாத, சித்தி யாகாத, வெற்றி காணாத, தோல்வி பெற்ற, அபசயமான.

Unwelcome guests - அழையா விருந்தினர்கள், வேண்டாவிருந்து.

Unwelcome news - துர்ச்செய்தி கள், துக்கச் செய்திகள், வேண் டாத சமாச்சாரங்கள்.

Unwise - புத்தியீனமுள்ள, யோசனையற்ற, மதியற்ற, ஞான சூன்யமான, ஆழ்ந்து நோக்காத.

Unworthy -தகுதியற்ற, அபாத்திர மான, பொறுமானமற்ற, ஏற்ற மில்லாத.

Unwritten law - வரையப்படாத சட்டம், ஏட்டிலில்லா நிபந்தனை, வெறும் வழக்கிலுள்ள ஏற்பாடு.

Uplift - உயர்த்து, தூக்கு, முன் னேற்றம், உதவிபுரிதல், உயரிய நிலை, தூக்கிவிடுதல், கைகொடுத்தல்.

Uprightness - நேர்மை, சத்திய நெறி, சன்மார்க்க வழி, மெய் விடாமை, செந்நெறி.

Uproar - கூக்குரல், இரைச்சல், சந்தடி, கலகம், சண்டைசச்சரவு.

Upshot-விளைவு, முடிவு, தீர்மானம், பயன், முளை, கிளைத்தெழுதல்.

Urgency - அவசரம், அகத்தியம், துரிதம், நெருக்கடி, வேகம், ஆத் திரம்.

Usage - நடப்பு, வழக்கம், பழக்கம், அப்பியாசம், வாடிக்கை, உப யோகம், நுழைத்தல், மாழூல்.

Utilitarian - பிரயோசனமான, பலன் தரக்கூடிய, அவசியத்திற் குரிய, இருந்து தீரவேண்டிய.

Utterence-வாய்ச்சொல், பேச்சு, மொழிதல், கண்ணியமான மொழி.

Vacancy-காலிஸ்தானம், சூன்யம், வெற்றிடம், சந்து.

Vagary - தடுமாற்றம், சுழலும் சிந்தை, புத்தியோட்டம்.

Vague - வீணான, குறியற்ற, ஏக தேசமான, நிச்சயமற்ற, முற்றுப் பெறாத.

Vain glorious - தற்பெருமை யுள்ள, அசம்பாவமான, வீண் பெருமையான, வீம்பான, இடம்ப மான.

Valedictory address - அறி வுரை, புத்தி புகட்டும் பேச்சு, அறிவு கொளுத்தும் பேருரை.

Valient-வீரமான, பராக்கிரமமான, தீரமான, சுத்த வீரமுள்ள.

Valid reason - ஏற்கக்கூடிய முகாந்தரம், உறுதியான காரணம், ஒப்பத்தகுந்த முகாந்தரம்.

Valuation - மதிப்பிடல், விலை மதித்தல், உயர்வு நோக்கல்.
Vanity - அகங்காரம், மமதை, கர்வம், வீண் பெருமை.
Vanguish - தோற்கடித்தல், பின்னிடச் செய்தல், ஜெயித்தல்.
Variation - வித்தியாசம், பேதம், வேறுபாடு, திரிபு, விகாரம், மாற்றம், ஏற்றத் தாழ்ச்சி.
Vast opportunities - ஏராளமான சந்தர்ப்பங்கள், எண்ணிறந்த வாய்ப்புக்கள், கணக்கற்ற சமயங்கள்.
Vehemence - பிரசண்டம், கொடுமை, வேகம், கடுங்கோபம், மூர்க்கம்.
Veiled criticism - மறைமுகமான தாக்குதல், மறைந்து எதிர்த்தல், மூடிய சிந்தனை, இலைமறை தாக்கு,
Venerable - போற்றத்தக்க, வணங்கற்குரிய, வணக்கம் செலுத்தக்கூடிய, முதுமையான.
Vengeance - பழிவாங்குதல், வஞ்சம் தீர்த்தல்.
Venture - துணிகரம், முயற்சி, வருவது வரட்டுமெனத் துணிதல், ஆரம்பித்தல், உள் நுழைந்து பார்த்தல்.
Veracity - உண்மை, சத்தியம், நம்பிக்கை, தூய்மை, மெய்மை.
Verbal alteration - மொழி மாற்றம், சொல் மாற்றம், வார்த்தைத் திருத்தம்.
Verbatim - ஒவ்வொரு மொழியாய், பேசியபடியே, மாற்றமின்றி, வாய்ச் சொல்லாகவே.
Verbose - படாடோபமான, வார்த்தைநிறைந்த, சொற்சாலமான.
Verification - தணிக்கை, ருசுப்படுத்தல், ஒத்திடல், கண்டறிதல், ஆய்தல்.
Vernaculars - நாட்டுமொழிகள், தாய்மொழிகள், வளர்நாமொழிகள்.
Verse - பாட்டு, செய்யுள், கவி, சுலோகம், கவிதை.
Vexatiously - தொல்லை கொடுக்கிற, கிலேசமுண்டாக்கத்தக்க, ஏமாற்றம் தருகிற.
Vice chancellor - உபஅத்தியட்சகர், பல்கலைக்கழக உபதலைவர், துணைவேந்தர், உபசான்றலர்.
Victory - ஜெயம், வெற்றி.
Vigilant - ஜாக்கிரதையான, விழிப்பான, உறக்கமில்லாத.
Vigorous speech - வீரமான பேச்சு, ஆண்மையுள்ள பேச்சு, ஆணித்தரமான சொற்பொழிவு.
Visible - புலனாகிற, தெரிகிற, காணக்கூடிய, பார்வையிற்படுகிற, திருஷ்டி, தென்படுதல், கட்புலனாகிற.
Visitors gallery - பார்வையாளர் இருப்பிடம், சவனிப்போரிருக்கை, படித்தளம்.
Vocation - தொழில், வேலை, பிழைக்கும் வழி, ஒழிந்தவேளைத் தொழில்.
Voice - குரல், தொனி, சுதந்தரம், உரிமை வாக்கு, சாரீரம், பேச்சுரிமை.
Void - காலியிடம், பிளவு, பிரிவு, பூர்த்தியாகாத இடம்.
Voluntary contributions - கேளாது கொடுத்தல், தாமே கொடுக்கும் நன்கொடை, வேண்டாது கொடுக்கப்படும் பொருளுதவி, வலிந்து கொடுக்கும் பொருள்.
Vote of confidence - நம்பிக்கைத் தீர்மானம், திருப்தியை வெளியிடும் தீர்மானம்.
Vote of no confidence - நம்பிக்கையில்லாத் தீர்மானம், அதிருப்தியை வெளியிடும் தீர்மானம், ஒழித்துக்கட்டும் தீர்மானம்,

Voracious reader - ஓயாப்படிப் பாளி, அல்லும்பகலும் படிப்பவன், புத்தகப் புழு.

Vouch safe - அநுக்கிரகி, அருள் செய், கடாட்சி, கிருபைபுரி.

Vulgarism-கொச்சை, கீழ்நடை, இழிவான நடத்தை, இடக்கான வார்த்தைப்பாடு, கேவலம்.

Wager - பந்தயம், ஒட்டு, சபதம், பந்தயப் பொருள்.

Wages - கூலி, சம்பளம், நிவே தனம், தட்சணை.

Wakefulness - விழிப்பு, தூங் காமை, சர்வஜாக்கிரதை, சாக்கிரம்.

Wander - அலை, திரி, உழலு, அலைந்துதிரி, ஊர்சுற்று, வழி தவறுதல், குறியின்றி அலைதல்.

Want - தேவை, விருப்பம்,வறுமை, குறைச்சல், வயிற்றுக்கில்லாக் கொடுமை.

Wantonness - வேண்டுமென்று செய்தல், குறும்புத்தனம், பிடி வாதம், அழும்பு, அடவாதம்.

Warden - கண்காணிப்பவன், பரா மரிப்பவன், காவலன்.

Warily - சாவதானமாய், விழிப் புடன், ஏமாறுது.

Warm reception-வருந்தியழைத் தல், விருப்போடு கூடிய அழைப்பு, அன்பான வரவேற்பு.

Warning - எச்சரிக்கை, பயமுறுத் தல், அச்சுறுத்தல், முன்னெச் சரிக்கை செய்தல்.

Warrant - உத்தரவிடு, கட்டளை, அதிகாரப்பத்திரம், மறியல் கட் டளை, பிடியுத்தரவு, கைதுக் கட்டளை.

Waste - வீண் செலவு, கழிவு, கேடு, பாழாக்கல், வெட்டவெளி யான பூமி, பாழ்நிலம்.

Watchful - விழிப்புள்ள, உஷா ரான, கடமையில் திருஷ்டியுள்ள, சாவதானமான, கவனமுள்ள.

Watch word-எச்சரிக்கைச்சொல், பரிபாஷை, குறிக்கோளான வார்த்தை, கவனத்தில் கொள்ளத் தகுந்த மொழி.

Water proof - நீர் சுவராத, நனை யாத, நீர்கொள்ளாத.

Wavering - அலைகிற, அசைகிற, நிலையற்ற,உறுதியற்ற,ஊசலாடுகிற.

Waxing eloquence - உயரிய சொற்போக்கு, மேலெழும் சொற் பெருக்குப் பேச்சு, உயரிய பேச்சுத் தோரணை.

Weapon - ஆயுதம், போர்க்கருவி, படை.

Wedding - விவாகம், கலியாணம், மணம், திருமணம், மன்றல்.

Weekly - வார வெளியீடு, வாராந் திர.

Weighty remarks - விசேஷ மான குறிப்புரைகள், ஆழ்ந்த கருத்துரைகள், ஆணித்தரமான கருத்துக்கள்.

Welcome - வரவேற்பு, உபசாரம், முன்னழைப்பு, உபசரி.

Well being - நல்வாழ்வு, சுக வாழ்வு, வாழ்க்கை நலன், நற்கதி.

Well disposed - நல்ல அபிப் பிராயமான, அன்பு கொண்டுள்ள, நல்விருப்பான.

Well known - நன்குணர்ந்த, நன்ருகத் தெரிந்த, யாவரும் அறிந்த, நாடறிந்த, பிரபலமான.

Whimsical-கிறுக்கான, நிலையற்ற, மனப்பிடியற்ற, கருத்து ஒன்று படாத.

Whining - சிணுங்குதல், குழை தல், குரைத்தல்.

Wholesome - சுகமுள்ள, சௌக் கியமான, தேகத்திற்கொத்த, ஆரோக்கியத்துக்கடுத்த.

Wilfulness - இச்சை, சுதந்தரம், தான்றோன்றித்தனம், தலைக் கொழுப்பு, மண்டைக்கர்வம்.

Will - சித்தம், மனம், கருத்து, தீர்மானம், முடிவு, மரணசாசனம்.

Wind fall - நற்சம்பவம், யோகம், எதிர்பாராத அதிர்ஷ்டம்.

Written speech - எழுதியபேச்சு, எழுதி வாசிக்கும் சொற்பெருக்கு, படிக்கும் பேச்சு.

Wisdom - ஞானம், மூதறிவு, அறிவு, உணர்வு, விவேகம், புத்தி நுட்பம், சான்றாண்மை

Wise acre - மூடஞானி, மட்டி, மடையன், பாசாங்குக்காரன், அறிவிலி, ஞான சூன்யன்.

Withdraw-பின்னிடு, பின்வாங்கு, பின்னிழு, ரத்துசெய், தள்ளுபடி செய், வாபஸ்பெறு, மீளப்பெறு.

Withhold - இறுகப்பிடி, கொடாமல் வைத்திரு, பிடித்தம் செய், நிறுத்திவை.

Witness - சாட்சி, சான்று, சாட்சிக்காரன், பார்த்தல்.

Witty - சாதுர்யமான, நகைச்சுவையான, உபாயங்கற்ற, தமாஷான.

Workmanship - கைவேலை, கைவினை, கைத்திறன், வேலைத்திறமை, அபூர்வவேலை.

Worry - தொந்தரை, கஷ்டம், தொல்லை, சள்ளை.

Worship - வணக்கம், வழிபாடு, பூசித்தல், போற்று, பக்திசெய்.

Worthless - உதவாத, ஆகாத, தகாத, தாழ்வான, ஒன்றுக்கும் உபயோகப்படாத.

Wrath - கடுங்கோபம், உக்கிரம், குரோதம், சீற்றம்.

Wreath-மாலை, தோரணம், தொங்கல், பூக்கொடி, தொடையல்.

Wrong - தீங்கு, குற்றம், குறை, பிழை, தவறு, பிசகு, தீமையிழைத்தல்.

Xray-மின்சார ஊடுருவிக்கிரணம், மறைவு விலக்குக் கிரணம், அகதிருஷ்டி சக்தி.

Yacht - சிறு கப்பல், உல்லாசக் கப்பல்.

Yarn - நூல், நூலிழை, வாயாடுதல், கதைகட்டல், வம்பளத்தல், கரைதல்.

Yearly - வருடாந்திர, வருடாவருடம், வருடந்தோறும், ஆண்டுதோறும்.

Yearning - இரக்கம், பரிதாபம், ஏக்கம், இரங்குதல், ஆவல், உருக்கம், மனஞ்செல்லுதல்.

Yeild - இணங்கு, கீழ்ப்படு, விட்டுக்கொடு, விளைவு, விளைச்சல்.

Youngster - சிறுவன், வாலிபன், குமரன்.

Zeal - உற்சாகம், ஆவல், வைராக்கியம், பற்று.

Zealous - பக்திவைராக்கியமுள்ள, பேராவலுடைய, மிக உற்சாகமான, வெகு உறுதியான.

Zealous worker - வைராக்கியமான தொண்டன், பக்திபூண்ட பணியாளன்.

Zone - வரை, வட்டம், எல்லை, பாகுபாடு.

பிரதிப்பதங்களும் எதிரிடைச் சொற்களும்

Synanym - அர்த்தம், பொருள், பிரதிப்பதம், பிரதிமொழி.

Antonym - எதிரிடைச் சொல், எதிர்மொழி, நேர்மாறான சொல், வக்கரச் சொல்.

Ancient - பழமையான, பழைய, புராதன, வயதான, பூர்வீக.

New - புதிதான, நூதன, புதிய, புத்தம் புதிய, நவமான.

Proper - சரியான, ஒழுங்கான, முறையான, நியாயமான, நேர்மையான.

Improper - தப்பான, பிசகான, முறையற்ற, நேர்மையற்ற, நியாய மற்ற.

Moral-சன்மார்க்கமான, நீதியுள்ள, யோக்கியமான, படிப்பினை, நெறியுள்ள, கற்புடைய, ஆசாரம்.

Immoral-துன்மார்க்கமான, நீதியற்ற, யோக்கியமற்ற, நெறி தவறிய, கற்பழிந்த, வழி பிசகிய, துர்நடத்தையான, துராசாரம்.

Mortal - சாவுக்குரிய, அழிவுள்ள, அநித்தியமான, முடிவுடைய, இறத்தலோடு கூடிய, காலபாசத் திற்பட்ட.

Immortal - அழியாமை, சாவா வரம், நாசமின்மை, என்றுமுள்ள, நிரந்தரமான, நித்திய்மான, புகழுடம்பு பெற்ற, செத்தும் சாகாத.

Nominal - பேருக்கு மாத்திரம், ஏதோ ஒரு மாதிரியான, ஏகதேசமான, ஒரோ வழி.

Virtual-உண்மையான, சரியான, நேருக்கு நேரான.

Obedient - கீழ்ப்படிதலுள்ள, வணக்கமான, தாழ்மையான, பணிவான, சொற்படி நடக்கிற.

Disobedient - கீழ்ப்படியாத, வணக்கமில்லாத, பணிவற்ற, தாழ்மையற்ற, சொற்பேச்சைத் தட்டி நடக்கிற.

Odious - அருவருப்பான, துர்க்கந்தமான, மணமற்ற, ஒவ்வாத, படுமோசமான.

Agreeable-திருப்தியுள்ள, மணமான, ஒத்துக்கொள்ளும்படியான, ஒப்பத்தகுந்த, ஏற்கையான, குணமான.

Order - ஒழுங்காக, கிரமம், தாக்கீது, உத்தரவு, கட்டளை, வரிசை, ஒழுங்குப்பாடு வகுப்பு, சட்டம்.

Disorder-ஒழுங்கீனம், கலக்கம், குழப்பம், ஒழுங்குகுலைத் தவறு, முறைகேடு, தவறு.

Patient - பொறுமையுள்ள, சகிப்புடைய, சிகிச்சைக்குரியோன், நிதானமான, சாந்தமான, பிணியாளி

Impatient- துடுக்கான, வெடுக்கான, பொறுமையற்ற, சகிப்பு இழந்த, நிதானமற்ற, சாந்தமில்லாத.

Please - சந்தோஷப்படுத்து, உவப்பி, களிப்பி, விருப்பப்படுத்து, தயை பிறப்பி.

Displease - அருவருக்கச் செய், வேம்பாக்கு, மனமிடியச் செய், கசப்பி, கைக்கச்செய், களிப்பைப் போக்கு, இஷ்டத்தைப் போக்கடி.

Popular - புகழான, கீர்த்தியான, நேசத்திற்குரிய, பொதுவான, மக்களுக்கேற்ற, சர்வஜன சம்மதமான.

Unpopular - கீர்த்தி பெருத, ஊரோத்துக்கொள்ளாத, புகழ்ச்சி பெருத, அருவருக்கத்தக்க, இஷ்டமுண்டாக்காத, மக்களுக்கொவ்வாத.

Praise-புகழு, புகழ்படுத்து, மெச்சு, ஏற்று, உயர்த்திப் பேசு, புகழுரை கூறு.

Blame - இகழ், பழி, குற்றஞ்சாட்டு, தூற்று, தவறிழை, பழி சுமத்து, இடித்துரை.

Previous - முந்திய, முற்கூட்டிய, முன்னதான, முன் நிகழ்ந்த, முன் சம்பவித்த, முன்னுடி நடந்த.

Subsequent-வரப்போகிற, பின்னுன, பின்நடக்கிற, பின்சம்பவிக்கிற.

Prosperity - சுபிட்சம், செல்வம், பெருமை, வாழ்வு, சொத்து, ஐவேஜி, கைப்பொருள்.

Adversity - விபத்தான, தாழ்வான, பஞ்சமான, வறிய, தாழ்வு, லோபம்.

Profit - இலாபம், நலம், நன்மை, பொருளோடு பொருள் சேர்தல், மிச்சம், அடைவு, உபரி.

Loss - நஷ்டம், குறைவு, தாழ்வு திரவியக்கேடு, பொருள் சேதம்.

Regular - சரியான, ஒழுங்கான, நியதியான, கிரமமான, சரிவர.

Irregular-ஒழுங்கற்ற சரியற்ற, நியதியற்ற, முறையற்ற.

Remember - நினைவுகொள், நினைப்பூட்டு, ஞாபகத்தில் வை, நினைவிலிருத்து, கருவில்தரி, சிந்தனையில் வை, மறவாதிரு.

Forget - மறந்துவிடு, நினைவிழத்தல், மறத்தல், ஞாபகமிழத்தல், பராமுகமாயிருத்தல்.

Savage - காட்டுமிராண்டி, அநாகரிகன், காட்டான், மூர்க்கன்.

Civilised - நாகரிகமான, சீர்திருத்தமான, நகரத்திற்குரிய, திருத்தமான, நடையுடையிற் சிறந்த, கௌரவமான.

Shallow - ஆழமில்லாத, மேலெழுந்த, சிற்றாழமான, அழுந்தாத, தட்டையான.

Deep - ஆழமான, பள்ளமான, சிறந்த, யோசனையுள்ள, அழுத்தமான, கனத்த.

Straight-நேரான, நேர்முறையான, நீதியான,கோணலற்ற, ஒழுங்கான.

Crooked - வளைவான, கோணலான, நேர்மையற்ற, மோசடியான, ஒழுங்கற்ற.

Sincere - உண்மையான, சத்தியமான, உள்ளும்புறமும் ஒத்த, மனத்தூய்மையான, மனமாசற்ற.

Insincere-உண்மையற்ற, சத்தியந் தவறிய, மனமாசுடைய, தூய்மையற்ற, பொய்யான, போலியான.

Temporary - சொற்ப காலத்திற்குரிய, நிலையற்ற, காயமில்லாத, தற்காலிக.

Permanent - காயமான, நிலையான, அசைவற்ற, நிரந்தரமான, உறுதியான.

True - சத்தியமான, நிஜமான, நிச்சயமான, உண்மையான, வாய்மையான, மெய்யான, தூய்மையான, பரிசுத்த.

Untrue - பொய்யான, கற்பிதமான, வாய்மையற்ற, அசத்தியமான, நிசமில்லாத.

Ugly - குரூபமான, ஆபாசமான, அவலட்சணமான, அங்கப்பழுதுடைய, பார்க்கச் சகியாத.

Beautiful - அழகான, சீரான, பார்வையான, லாவண்யமான, ரூபமான, சுலட்சணமான.

Latter - பிந்தியது, பிற்பட்ட, பின்வருவது, பிற்கூறப்படுவது.

Former - முந்தியது, முற்பட்ட, முற்கூறிய, முன்னால் குறிப்பிட்ட, முன்னது.

Earlier - முந்திய, சீக்கிரமான, முன்னிகழ்ச்சியான, முந்திக்கொண்ட, பண்டைய, பழங்கால, நேரத்தோடே.

Later - பிந்திய, காலதாமதமான, காலந்தவறிய, பிற்கால, பின்னிட்ட, பின் நிகழ்ச்சியான.

Trust - நம்பிக்கை, நம்பு, பொது நம்பிக்கை, பொதுப்பணம், பொது ஸ்தாபனம், வைப்புப் பொருள், சேமநிதி.

Distrust-அவநம்பிக்கை, சந்தேகம், சமுசயப்படு, நம்பிக்கையின்மை.

Right - சரியான, ஒழுங்கான, நேர்மையான, நீதியான.

Wrong - தப்பான, சரியற்ற, பிசகான, பழி, நேர்மையில்லாத, தவருன, கெடுதலான.

Understand - அறிந்துகொள், புரிந்துகொள், தெரிந்துகொள், விளங்குதல், விளக்கமாதல், தெளிதல், மனதில் வாங்கிக்கொள்ளல்.

Misunderstand - தப்பாயறி, பிசகாயுணர், வேருக நினைத்தல், ஒன்றை மற்ருென்ருகக்கொள்ளல், தவறுதலாக நினைத்தல்.

Visible - காணக்கூடிய, பார்க்கக் கூடிய, புலனுன, புலப்படத்தக்க, நோக்கக்கூடிய, திருஷ்டியான.

Invisible-காணமுடியாத, அரூபமான, உருவற்ற, புலனுகாத, புலப்படாத, கண்ணுக்குத் தெரியாத.

Virtue - நற்குணம், சன்மார்க்கம், உயர்குணம், பரிசுத்தம், கற்பு, குணமிகுதி.

Vice - தீயகுணம், பொல்லாங்கு, துர்க்குணம், தீயவொழுக்கம், குணக்கேடு.

Vulgar - தீமையான, கொச்சையான, இழிந்த, கீழ்த்தரமான, ஆபாசமான, கடைப்பட்ட, கடையான, இடைவெட்டான, இடக்கான, வசையான.

Refined - சீர்மையான, சுத்தி செய்த, புடமிட்ட, அரித்தெடுத்த, உயர்தர, மெருகிட்ட, அழகான, மேலான, சீரிய, நல்லிய.

Wise - அறிவுள்ள, ஞானமுள்ள, விவேகமான, புத்திசாலித்தனமான, யூகமான, தீட்சண்ய புத்தியுடைய.

Ignorant - அறிவில்லாத, அவிவேக, நீர்மூடமான, ஞான சூன்ய, புத்தியற்ற, மந்தபுத்தியான, மடைமையான, மௌட்டீகமான.

Worthy - பொறுமான, யோக்கியமான, தகுதியான, தக்க, தகைமையுடைய, கண்ணியமான, கனமான, பெருந்தன்மையான.

Unworthy-தகாத, தகுதியற்ற, யோக்கியதையற்ற, கண்ணியமற்ற.

Young-இளமை, வாலிபம், சிறிய, இளமையுள்ள, இளைஞர், இளையோர், இளையதன்மை, இளந்தன்மை, பால்யம்.


Old-முதிய, முதியர், பழமையான, கிழமையான, வயதுவந்த, விருத்தாப்பிய, கிழவன், மூப்பு, மூப்புடையோன், பண்டைய, பழைய முற்காலத்திய.

சிறப்புப் பெயரகராதி

சிறப்புப் பெயரகராதி

பிழை திருத்தம்

13-ம் பக்கம்—கிளாட்ஸ்டன் எனவும், 110-ம் பக்கம்—உவில்யம் ஜென்னிங்ஸ் பிரையான் எனவும் திருத்தி வாசிக்க.



திரு. வி. க.